
S



தாமஸ் பெய்ன்

அரசியல் கட்டுரைகள்

A PEARL PUBLICATION

PT-2

50 nP

அரசியல் கட்டுரைகள்

தாமஸ் பெய்ன்

(Common Sense and other Political Writings:
THOMAS PAINE)

★

மொழிபெயர்ப்பு:
ரா. நாராயணன், பி.ஏ., பி.எல்.

A PEARL PUBLICATION

பெர்ல் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட்,
பம்பாய்-1.

விலை 50 நயே பைசே

முதல் பதிப்பு—1957

பம்பாய்-1, ஒட் ஹௌஸ் ரோட், ரீகல் சினிமாவுக்கு எதிரிலுள்ள வாடர்லு மான்ஷன்ஸ் 12-ஆம் நம்பரிலிருந்து செயல்புரியும் பெர்ல் பப்ளிகேஷன்ஸ் (பிரைவேட்) லிமி டெட்டுக்காக ஸ்ரீ ஜி. எல். மிர்சந்தானியால் வெளியிடப் பட்டது.

அச்சிட்டோர்: திராயல் பிரின்டிங் ஒர்க்ஸ், மவுண்ட் ரோட், சென்னை-2.

அட்டவணை

முன்னுரை

மனிதவர்க்கத்திற்குப் பணிபுரியும் ஆர்வம் கொண்ட பெரியோர்கள் வரிசையைச் சேர்ந்த அபூர்வமான மனிதர் **தாமஸ் பெய்ன்.** தாங்கள் தோன்றிய காலத்தை ஒளிவீசச் செய்யப் பிறந்தவர்களில் அவர் ஒருவர். அவருடைய அரசியல் அல்லது சமூக சம்பந்தமான சிந்தனையை ஆராய்கையில், மனித சமுதாயத்திடம் அன்பு பூண்டவர் என்கிற முறையிலேயே அவரை மதிக்கவேண்டும். வாழ்க்கை முழுதும் கஷ்டத்தைக் கண்டு சகியாத மனப்பாங்கு கொண்டவர் அவர் என்பதைக் காண்கிறோம்; எதிலும் தீர்மான மான போக்குள்ளவராதலால் அவர் அநீதியின் ஆதி காரணங் களை ஆவலுடன் ஆராய்ந்தறியும் மனப்பான்மையுடையவரா யிருந்தார். எதிலும் தீமையே விளையும் எனும் சோக நோக் குடையவரல்லவாதலால் அவர் தம் வாழ்நாளில் இருள்சூழ்ந்து, சங்கடம் நிறைந்திருந்தபோதிலும்கூட சமூகத்தினரிடம் ஓரளவு நம்பிக்கையுடனேயே வாழ்ந்துவந்தார். நல்ல அரசாங்கத்தின் அடிப்படைக் கொள்கைகளை மக்கள் சிறப்பாக அறியும்படிச் செய்தால் மனித வர்க்கத்தின் கஷ்டத்தைக் குறைக்கலாம் என்பது அவருடைய திடமான நம்பிக்கை. ''நாகரிக நாடுகள் என்று சொல்லப்படும் இடங்களில் மக்கள் கூட்டத்தில் பெரும் பகுதி வறுமை மிஞ்சி துர்ப்பாக்கிய நிலையிலிருக்கின்றது'' என்பதைப் பெய்ன் தெளிவாக உணர்ந்தார். ''அருவருக்கத் தக்க இந்த துர்ப்பாக்கிய நிலைக்கு மக்களைத் துன்புறுத்து வதிலேயே நாட்டங்கொண்ட அரசாங்கங்களே காரணம்'' என அவர் குற்றம் சாட்டினர். இதற்கு உதாரணம் கூறும் வகையில் ''தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டால் அதற்கு ஏழைகளைத் தவிர பிறர் இலக்காகாமலிருப்பது ஏன்?'' என்று கேட்டுவிட்டு ''பிற காரணங்களுடன் அரசாங்கங்களின் இந்தத் தீய மனப் பான்மையும் மக்களின் பரிதாப நிலைக்குக் காரணம் என்பது இதிலிருந்து ருசுவாகிறது'' என அவர் விளக்கம் கூறுகிறார்.

அரசாங்கத்தைப் பொறுத்தமட்டில் மனிதவர்க்கத்திடம் உள்ள அநுதாப உணர்ச்சிக்கு முடியாட்சி முரணுனது என அவர் கருதினுர். முடியாட்சி எப்பொழுதும் ஒரு சிலருடைய நலனுக்காகவே செயல்புரியும் என்றும் அவர் நம்பினுர். ''ஒரு நாட்டு மக்களின் உயர்வு அவர்கள் கடைப்பிடிக்கும் மானிட காருண்யக் கொள்கைகளினுல்தான் ஏற்படுகிறது'' என்றும் அவர் கூறினுர்.

இந்தக் கொள்கைகள் நடைமுறையில் எப்படித் துலங்க வேண்டும் என பெய்ன் நம்பி இருந்தார் என்பதை அவருடைய வாழ்க்கையிலிருந்தும், அவர் எழுதிய நூல்களிலிருந்தும் அவர் புரிந்த சேவை முதலியனவற்றிலிருந்தும் ஓரளவு ஆராய்ந்தறிவதே இந்த முன்னுரையின் நோக்கம்.

மனித நலத்தில் அவருக்கிருந்த பற்று பிறப்பிலேயே ஏற்பட்டிருக்கவேண்டும். குறிப்பாக செயல் புரிந்து அந்தச் சிறப்பை அவர் அடையவில்லே என நாம் கருதுவோமானுல், அவருடைய இந்த மனப்பாங்கைப் பக்குவப்படுத்துவதற்கான பல்வேறு அம்சங்களேயும் நாம் கவனித்து அறிந்துகொள்ளத் தவறலாகாது. பதினெட்டாவது நூற்ருண்டில் வாழ்ந்ததனுல் எண்ணிலடங்காத பல நலன்களே அவர் பெற்றிருந்தார் என்பதையும் நாம் எப்பொழுதும் ஞாபகத்தில் இருத்திக்கொள்ளவேண்டும். அவர் வாழ்ந்த சகாப்தத்தின் இலட்சியச் சுற்றுச் சார்புகளே ஆராய்ந்தறிகையில் பெய்ன் விசேஷமாக, விரிவாகப் படித்தவர் அல்ல என்பதை முதலில் கவனிக்கவேண்டும். அவருடைய நண்பர் **ஜெபர்ஸன்** மாதிரி அவர் பண்டிதரல்ல. அவருக்கு இருந்த கல்வி அறிவும் அநுபவ மூலம் பெற்றதே. பதினெட்டாவது நூற்ருண்டின் பிற்பகுதியை தீவிரவாதம், சீர்திருத்தம் முதலியவைகளின் உறைவிடமாகச் செய்த கொள்கைகளேப் புரிந்து கொள்ளுவதற்கு விசேஷக் கல்வி தேவையில்லே.

பெய்ன் எழுதியவற்றைப் படிக்குங்கால் அவற்றில் பெருவாரியானவைகளில் பதினேழு அல்லது பதினெட்டாவது நூற்ருண்டில் வாழ்ந்த சிந்தனேயாளர்களே அவ்வளவாக அவர் குறிப்பிடவில்லே என்பதைக் காண்போம். **மாண்டெஸ்க்யூ** (Montesquieu) போன்ற தத்துவாசிரியர்களேப் பற்றியும் **க்வெஸ்னே** (Quesnay), **டர்காட்** (Turgot) போன்ற இயற்கை அடிப்படையில் அரசாங்கம் அமைக்கத் திட்டமிட்டவர்களேப்

பற்றியும் அபூர்வமாகவே அவர் தமது நூல்களில் குறிப்பிட்டாலும் அவர்களுடைய கருத்துக்கள் இவரை மிகக் குறைந்த அளவே பாதித்திருக்கின்றன என்பதை அறிகிறோம்.

பெய்னின் அரசியல் சிந்தனை வளம்பெற மற்றொரு லட்சியமும் உதவி புரிந்திருக்கிறது. அதை நாம் சற்று கவனிக்க வேண்டும். பெய்னின் தந்தை கிறிஸ்தவ மதத்தில் **குவேக்கர்** வகுப்பைச் சேர்ந்தவர். அந்த வகுப்பாரின் கோட்பாடுகளைச் சில சமயம் ஆதரித்துப் பெய்ன் பேசியிருக்கிறார். ''நண்பர்கள் (குவேக்கர்கள்) சங்கத்தினரின் கோட்பாடுகள் பெய்னின் ஜனநாயக சிந்தனைகளைத் தெளிவுபடுத்தியிருக்கக்கூடும்'' என **மான்க்யூர் கான்வே** (Moncure Conway) அழுத்தமாகக் கூறுகிறார். போர் நிகழ்ந்தபோது, பென்ஸில்வேனியா குவேக்கர்கள் பிரமாதமாக உதவிபுரிவர் என அவர் எதிர்பார்க்கவில்லை. அவர்களுடைய சமாதான ஆர்வத்தையும், அதனால் ஏற்பட்ட பிற்போக்காளர்களிடம் (டோரிகள்) அவர்களுக்குள்ள அநுதாபத்தையும் அவர் தம் **நெருக்கடி** எனும் தலைப்பில் வெளியிட்ட மூன்றாவது பகுதியில் வன்மையாகக் கண்டித்திருக்கிறார். எனினும் யுத்தத்திற்குப் பிறகு குறிப்பாக 1802-இல் அவர் அமெரிக்காவுக்குத் திரும்பிய பின் 'மற்ற சமயச் சார்பினரை விடக் குவேக்கர்கள் அறநெறியுள்ளவர்கள், ஒழுங்காக நடப்பவர்கள்' எனப் பெய்ன் எழுதியிருக்கிறார். அந்த மத வகுப்பினரைச் சேர்ந்த குடும்பத்தில் பிறந்தவன் என்று தன்னைப்பற்றி அவர் குறிப்பிட்டிருக்கிறார். தங்கள் சமூகத்தைச் சேர்ந்த ஏழைகளைக் கவனித்து அவர்களுடைய குழந்தைகளுக்குக் கல்வி வசதியளித்தது பற்றி அவர்களைப் பாராட்டியிருக்கிறார். அவர்களுடைய சங்கத்தைச் சேராத ஒருவரான அவர், அவர்களுடைய சமாதிகளுக்கருகில் தமது சடலத்தைப் புதைக்க முடியுமானால் அவ்வாறு செய்யும்படி தமது விருப்பத்தைத் தமது உயிலில் எழுதியிருக்கிறார். குவேக்கர்களைச் சிறப்பிக்கும் மனித நலத்தில் அவருக்கிருந்த பரந்த நோக்கும், சமத்துவ ஆர்வமும் அவரது சிறு வயதில் பெய்னின் ஜனநாயகத்தில் தோய்ந்த மனோதர்மத்தைக் கவர்ந்திருக்கவேண்டும். அவரைப் பண்படுத்திய தாராளப் போக்குள்ள ஜனநாயக சக்தியை அவருடைய குவேக்கர் கோட்பாடுகள் வளப்படுத்தி யிருக்கவேண்டும். பெய்ன்

பகுத்தறிவுக்கே முக்கியத்துவம் அளிப்பவராகையால் குவேக்கர் மரபினரின் பூடகமான கோட்பாடுகளை ஒப்புக்கொண்டார் என எதிர்பார்க்கமுடியாது. ஆகையால் அவருடைய தாராளப் போக்குள்ள சிந்தனையை பரந்த ஜீவகாருண்யத் தன்மை வாய்ந்ததாக மாற்றும் அளவுக்குத்தான் நண்பர்கள் சங்கத்தாரின் கொள்கைகள் பயன்பட்டிருக்க வேண்டும். பதினெட்டாவது நூற்றுண்டில் இந்த ஜீவகாருண்யப் போக்கே பெரிதும் மக்கள் மனத்தில் இடம் பெற்றிருந்தது.

பெய்னின் ஆழ்ந்த அரசியல் சிந்தனைகளில் தோன்றிய சூழ்நிலைகள் பற்றிய இந்த விமர்சனத்தை ஆரம்பிக்குமுன், அவருடைய இளம்பிராயத்தை இங்கிலாந்தில் கழிக்கையில் நிகழ்ந்த விஷயங்களை நாம் மறந்துவிடலாகாது. அந்தக் கால அநுபவம்தான் அவரை தீவிரமில்லாவிட்டாலும் அரசியலில் தாராளப் போக்கில் சிந்தனை செய்யக் காரணமாயிருந்தது. அவருடைய பெற்றோர்கள் மிகுந்த கஷ்டப்பட்டே அவரைப் பள்ளிக்கு அனுப்ப முடிந்தது. அவருடைய பதின்மூன்றும் வயதில் தமது தந்தைக்குக் கப்பல் கயிறு உற்பத்தியில் உதவி புரிந்தார். அதற்குப் பிந்திய வருடங்களில் தமது நிலையைச் சீர்செய்வதற்கான எவ்வளவோ முயற்சிகள் செய்கையில் வறுமையின் கொடுமையையும், துயரத்தையும் அவர் அநுபவிக்க வேண்டிவந்தது. இருபத்தி ஐந்தாவது வயதில் அவர் உள்நாட்டு வரிவசூல் இலாகா உத்தியோகஸ்தரானுர். மூன்று ஆண்டுகளுக்கப்புறம் அப்பதவியிலிருந்து நீக்கப்பட்டு கென்ஸிங்டன் எனும் ஊரில் உள்ள பள்ளியில் உபாத்தியாயரா யிருந்தார். 1768-இல் மீண்டும் வரி இலாகா உத்தியோகஸ்தராக நியமிக்கப்பட்டார். இந்த உத்தியோகஸ்தர்களுக்குக் குறைந்த சம்பளமே அளிக்கப்படுகிறது என்பதைத் தெளிவாக அறிந்ததன் விளைவாக மற்ற உத்தியோகஸ்தர்கள் தூண்டுதலினுல் அதைக் கண்டித்து அவருடைய முதல் துண்டுப் பிரசுரத்தை எழுதி வெளியிட்டார். அதை அவர் பார்லிமெண்டுக்கு ஒரு வேண்டுகோளாக எழுதினுர். இதன் விளைவாக இவரைத் ''தொல்லை விளைவிப்பவர்'' என அரசாங்கத்தார் கருதி வேலையிலிருந்து நீக்கிவிட்டனர். அதே வருடத்தில் அவர் ''இன்ஸால்வெண்டாக'' நேர்ந்து பலவித கஷ்டங்கள் அவரைப் பீடித்தன. அச்சமயம் லண்டனிலிருந்த **பிராங்க்லின்** (Franklin),

அதிர்ஷ்ட வசமாகப் பெய்னுக்கு உதவிபுரிந்தார். அந்த வருட இறுதிக்குள் பெய்ன் அமெரிக்கா வந்து சேர்ந்தார். அச்சமயம் முப்பத்தி ஏழு வயதான அவர் புதிய வாழ்வு தொடங்கினர்.

II

ஒடுக்கப்பட்டவர்களுக்குப் புகலிடமாக இருந்து வந்திருக்கிற அமெரிக்கா பெய்னையும் பாதுகாத்து அவருக்குப் புகலிடம் அளித்தது. அமெரிக்கா வந்ததும் அவர் எழுதிய அரசியல் கட்டுரைகளையும், பிந்திய வருடங்களில் அவரது எழுத்துக்களின் போக்கையும் கவனித்துப் பார்ப்போமானல் அவருடைய சிந்தனைகளை ஒரு சிறப்பான உணர்ச்சி ஊக்குவித்திருப்பதைக் காணலாம். இந்த உணர்ச்சி அவருடைய ஜீவகாருண்ய மனப்பாங்கை ஒட்டியது. பல ஆண்டுகளுக்குப் பின் அவர் எழுதிய **மனித உரிமைகள்** என்னும் கட்டுரைகளில் இந்த உணர்ச்சிக்கு உருக்கொடுத்திருக்கிறர். இதுபற்றி இப்போது சிறிது கவனிப்பது பொருத்தமாகும். சுதந்திரமும் சுகவாழ்வும் மனிதனின் இயல்பான உரிமைகள். மனிதனிடத்திலும் நாட்டு மக்களிடத்திலும் தோய்ந்திருக்கும் மந்த புத்தியானது அவர்களது சுதந்திரத்தையும் சுகவாழ்வையும் பாழ்படுத்துகிறது. ஆகையால் மனிதன் தனது இயற்கை உரிமைகளை மீண்டும் மீண்டும் வற்புறுத்திக்கொண்டே இருக்க வேண்டும் என்று பெய்ன் அழுத்தமாகக் கூறுகிறர். நாம் ஏன் தூக்க நிலையடைந்து எவ்வளவு அடிமை நிலைக்கு வந்துவிட்டோம் என்பதைக்கூட உணர முடியாத மனப்பான்மைக்கு இடமளிக்க வேண்டும். 'பிரஞ்சுப் புரட்சி பற்றிய சிந்தனைகள்' என **பர்க்** எழுதிய நூலில்கூட ஒரு நல்ல அம்சமிருப்பதைப் பெய்ன் கண்டது விந்தைதான். அதிகார பீடத்தை ஆக்கிரமித்து அத்து மீறிச் செயல் புரியாமல் பாதுகாக்கவேண்டியது எவ்வளவு அவசியம் என்பதைப் பர்க்கின் சித்தாந்தங்கள் நிரூபிக்கின்றன.

அமெரிக்கா வந்தவுடன் நீக்ரோக்களை அடிமைகளாக நடத்துவதுபற்றி பெய்ன் கவனம் செலுத்தியதற்குக் காரணம் அவருடைய **குவேக்கர்** குடும்பச் சூழ்நிலையாயிருக்கலாம். எப்படியும் அவர் அமெரிக்காவுக்கு வந்து முதன் முதலில் எழுதிய கட்டுரை, 1775-இல் ''அமெரிக்காவில் ஆப்பிரிக்க அடிமை முறை'' எனும் தலைப்பில் வெளியானதுதான்.

தங்களுக்கு இயற்கை உரிமைகள் உண்டு எனும் கொள்கையை மனித சமுதாயம் அறியவேண்டும் என்ற சித்தாந்தமே அவர் எழுதிய பெருவாரியான பிரசுரங்களின் அடிப்படையாக இருந்து வந்திருக்கிறது. நீக்ரோக்கள் சம்பந்தமாக அமெரிக்கருக்கு எழுதிய பிரசுரத்தின் அடிப்படை நோக்கமும் அதுதான். இந்தப் பிரச்னையை ஜீவகாருண்ய ஆர்வத்துடன் அவர் அணுகினர் என்பதற்குப் பிரசுரத்தின் கடைசி வாக்கியமாகிய ''நியாயம், ஜீவகாருண்யம் இரண்டும் தூண்டிய கருத்துக்களே இங்கு இடம் பெற்றிருக்கின்றன'' என்பதே சான்று.

பெய்ன் அமெரிக்காவுக்கு வந்த சமயம் குடியேற்றப் பகுதிகள், மிகுந்த அரசியல் அபாயத்திற்குள்ளாயிருந்தன. ஆகையால் இவ்விஷயமாக பரபரப்பூட்டும் முறையில் செயல் புரியவேண்டிய அவசியத்தை அவர் உணர்ந்தார். 1765-இல் ஸ்டாம்புச் சட்டம் இயற்றியதிலிருந்து அமெரிக்காவை அடிமைப்படுத்த இங்கிலாந்து செய்த முயற்சிகள் பற்றி **டோரிகள்** தவிர மற்ற யாவரும் தெளிவாகவே அறிந்திருந்தனர். காலனிகளுக்கும் தாய் நாட்டிற்கும் இடையே பரஸ்பர கோபமும் ஆத்திரமும் வளர்ந்து, 1770-இல் நடந்த பாஸ்டன் படுகொலையில் உச்சநிலை அடைந்தது; அதற்குப் பின் சமீப காலத்தில் பாஸ்டன் துறைமுகத்தில் கப்பலிலிருந்த தேயிலையைக் கடலில் கொட்டியதால் 'பாஸ்டன் தேநீர் விருந்து' என்று கேலியாகவே குறிப்பிடப்பட்ட சம்பவம் நிகழ்ந்தது. இதன் விளைவாக அமெரிக்கா மீது பல 'அநீதிச் சட்டங்கள்' இங்கிலாந்தால் இயற்றப்பட்டன. இந்தச் சட்டங்களில் ஒன்றின் படி பாஸ்டன் துறைமுகம் மூடப்பட்டது. **மஸாசூஸட்ஸ்** சாசனப் படி கிடைத்த சில உரிமைகள் பறிக்கப்பட்டன. பெய்ன் அமெரிக்காவுக்கு வந்து சேர்ந்த ஆண்டின் முற்பகுதியில் இந்தச் சட்டங்கள் இயற்றப்பட்டன. அப்போது விசித்திரமான தீய எண்ணம் எங்கும் பரவியிருந்தது, எங்கு பார்த்தாலும் புரட்சியும் எதிர்ப்பும், அரசாங்கத் துரோகமும் தலைவிரித்தாடின. 1775-இல் மன்னர் வெளியிட்ட பிரகடனத்தில் ''இம்மாதிரி கிளர்ச்சிகளை எப்படியாவது அடக்க எல்லா வகைகளிலும் தங்களாலியன்றளவு முயற்சிக்க வேண்டும்'' என்று குறிப்பிட்டிருந்தது, காலனிகளெங்கும் நிலவிய கொந்தளிப்பை அதிகரிக்கச் செய்தது.

இந்தக் கொந்தளிப்பு உணர்ச்சியால் உந்தப்பட்டு பெய்ன் ''சாமானிய அறிவு'' எனும் தனது கட்டுரையை எழுதினர். இந்தப் பிரசுரம் 1776 ஜனவரியில் வெளியிடப்பட்டது. அடுத்த மாதம் ஒரு புதிய பதிப்பு வெளியாயிற்று. அதிலே கூடுதலாகச் சில பகுதிகளும் அநுபந்தங்களும் சேர்க்கப்பட்டிருந்தன.

தமது **சாமானிய அறிவு** எனும் கட்டுரையில் பல பகுதிகளில் அப்போதுள்ள அரசாங்க அமைப்பினுல் நன்மை உண்டா எனச் சந்தேகித்திருக்கிறுர். இயற்கை விதிகளுக்குக் கட்டுப்பட்ட சமூகமே மனிதனுக்குத் திருப்தியையும் இன்பத்தையும் அளிக்கக் கூடும் எனவும் கருதினர். ''உலகில் மற்ற மக்களுடன் எவ் விதத் தொடர்புமின்றி ஒரு சிலர் தனியான ஓர் இடத்தில் குடி புகுந்தனர் என வைத்துக்கொள்ளுவோம். அப்படிப்பட்டவர்களை உலகில் முதன் முதலில் தோன்றிய மக்களெனக் கருதலாம். இயற்கையான சுதந்திரம் அநுபவிக்கும் இந்த சமயத்தில் ஒரு சமூகத்தை அமைப்பதே அவர்களுடைய முதல் கருத்தா யிருக்கும்.'' இந்த உதாரணத்தை நினைவில் வைத்துக்கொள்ளும் படி பெய்ன் கூறுகிறுர். பின்வரும் பத்திகளில், தேர்ந்தெடுக் கப்பட்ட அரசாங்கத்தின் சிறப்புகளை வர்ணிக்கையிலும் இயற்கையின் திட்டத்தை ஒட்டியே அது துலங்கும் என அவர் கூறுகிறுர். ''செயற்கை முறைகளினுல் அசைக்கமுடியாத ஓர் இயற்கைக் கொள்கையிலிருந்தே ஆட்சி முறை பற்றிய என் கருத்து வடிவம் பெறுகிறது. அதாவது ஒரு விஷயம் எவ்வளவுக் கெவ்வளவு எளிதாயிருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு அதைச் சிதைத்துவிட முடியாது. அப்படியே சிதைக்க முடிந்தாலும் அதை எளிதில் சீர்படுத்திவிடலாம்.''

இயற்கை உரிமைக் கொள்கையைத் தெளிவாக நிலைநாட்டி விட்டு இங்கிலாந்துடன் இன்னம் நீடித்துத் தொடர்பு கொள்ளு வது எவ்வளவு முட்டாள்தனமானது என்பதையும் தெளிவு படுத்துகிறுர்.

'சாமானிய அறிவு' எனும் பிரசுரத்திற்குக் கிடைத்த ஆதரவு மற்றெல்லோரையும்விட பெய்னையே ஆச்சரியத்தில் ஆழ்த்தியது. அன்று நாட்டில் நிலவிய புரட்சி ஆர்வம் அவரை ஆட்கொண்டுவிட்டது. இந்த உணர்ச்சியைத் தெளிவான சக்தி வாய்ந்த நடையில் அவர் வெளியிட்டு விட்டார். பல ஆண்டு

களுக்குப் பின் ''அச்சுத் தொழில் கண்டு பிடிக்கப்பட்ட பிறகு யாரும் கண்டிராத அளவுக்கு வெற்றிகண்டு விட்டது'' என அவர் ''சாமானிய அறிவு''க்குக் கிடைத்த பொதுஜன ஆதரவு பற்றி சற்று மிகைபடுத்திக் கூறினர். அதில் தனக்குள்ள உரிமைகளை எல்லாம் துறந்து, யூனியனிலுள்ள எல்லா ராஜ்யங்களுக்கும் இதைப் பிரசுரிக்கும் உரிமை அளித்தார் என்பதை நாம் அறிவோம். ஆனல் இந்தப் பிரசுரம் ''1,00,000 பிரதிகளுக்குக் குறையாமல் தேவைப்பட்டது'' எனும் அவர் கூற்றுக்கு ஆதாரம் காண்பது கடினம். அப்பொழுதும் பொங்கி வரும் புரட்சிக்கு உத்வேகமளித்து வெற்றிக்கு வழிகாட்டுவதில் ''சாமானிய அறிவு''க்குப் பெரும் பங்குண்டு என்பதில் நான் சந்தேகப்படுவதாக எண்ணலாகாது. சுதந்திரப் பிரகடனம் தயார் செய்ய வேண்டுமென உவகையுடன் பெய்ன் விடுத்த வேண்டுகோள் காண்டினெண்டல் காங்கிரஸ் புகழ் மிக்க அந்தப் பிரகடனத்தைத் தயாரிக்கத் தூண்டியிருக்கவேண்டும். 'சாமானிய அறிவு' பொதுஜன ரஞ்சகமாயிருந்தது எனப் பெய்ன் அழுத்தமாகக் கூறுகிருர். இதுதான் அந்த நூலின் விசேஷச் சிறப்பு என்பதில் சந்தேகமில்லை. மக்கள் உள்ளத்தைப் புரட்சி ஆட்கொண்டதற்குத் தலைசிறந்த சாதனங்களா யிருந்தவைகளில் பெய்னின் இந்தப் பிரசுரமும் ஒன்று. பெய்ன் காலத்தவர்களை இந்தப் பிரசுரம் கவர்ந்தது என்பதற்கு இதற்கு மறுமொழியாகப் பலர் எழுதியவைகளே போதிய சான்ருவன. இம்மறுமொழிகளில் முக்கியமானவை 'கேடோ' (Cato) எனும் புனைப்பெயரின் கீழ் எழுதி ''**பென்ஸில்வேனியா கெஜட்**''டில் தொடர்ச்சியாகப் பிரசுரம் செய்யப்பட்ட கடிதங்களாகும். டாக்டர் **வில்லியம் ஸ்மித்** எனும் ஆங்கில மத குருவினுல் எழுதப்பட்ட இக் கடிதங்கள் மிகச் சிறப்பான நடையில் அமைந்திருந்தன. அமெரிக்காவில் பெருகிவரும் குடியரசு ஆர்வத்தினுல் ஏற்படக்கூடிய விபத்துக்களையும் பூரண சுதந்திரம் கோரும் முட்டாள் தனத்தையும் வெளிப்படுத்த இக் கடிதங்கள் மூலம் முயற்சி செய்யப்பட்டது. ஸ்மித் என்பவரின் வாதங்கள் கோர்வையாக அமைந்திருந்ததை உணர்ந்திருந்த பெய்ன் **பாரெஸ்டரின் கடிதங்கள்** (Forester's Letters) எனும் தலைப்பில் நான்கு பதில் கடிதங்கள் எழுதி ''**பென்ஸில்வேனியா ஜர்னல்**'' எனும் சஞ்சிகை

யில் வெளியிட்டார். இந்தக் கடிதங்களில் அவர் முன்பு கோரிய சுதந்திரத்தை ஆதரித்து எழுதியிருந்தார்.

'சாமானிய அறிவு' க்குத் தொடர்ச்சியாகப் பல பிரசுரங்கள் வெளியிடத் திட்டமிட்டார். ''அமெரிக்க சுதந்திரப் பிரச்னையைத் தொடர்ந்து 'நெருக்கடி' எனும் தலைப்பில் புரட்சி வெற்றி பெறும் வரையில் எழுதிவந்தேன்'' என அவர் எழுதுகிறார். இந்தப் பிரசுரங்கள்தாம் 'அமெரிக்க நெருக்கடி' எனும் தலைப்பில் பின்னர் வெளியிடப்பட்டன. இந்தப் பிரசுரங்கள் பதின்மூன்று வெளிவந்தன. இதில் ஒரு 'விசேஷ' பிரசுரமும், ஓர் 'உபரி'ப் பிரசுரமும் அடங்கியுள்ளன. இவைகள் யாவும் ''சாமானிய அறிவு'' எனக் கையெழுத்திட்டு வெளியிடப்பட்டன. பெய்னின் எழுத்துக்களின் விசேஷச் சிறப்பான பட்டவர்த்தனமாகத் தம் கருத்துக்களை வெளியிடுவதை இவைகளில் காணலாம். மக்கள் மனத்தைக் கவரவேண்டுமெனும் ஆர்வம் பெய்னுக்கு இல்லை எனக் கூறுவதற்கில்லை. ஆகையால் சரித்திரத்தை உருவகப்படுத்தும் சிற்பிபோல் அவர் பேசியதில் ஆச்சரியமில்லை. புரட்சியில் மிகக் கவலைதரும் சந்தர்ப்பம் ஒன்றைப்பற்றி பின்பு மிகுந்த சிறப்புற்று விளங்கிய ஒரு வரியை எழுதினர். இந்த வரியை நினைத்து பின்னர் அவரே பெருமிதம் கொண்டார். ''மனிதனின் ஆத்மாவைச் சோதிக்கும் காலம் இது'' என்பது தான் அந்தப் புகழ்பெற்ற வாக்கியம். நியூயார்க்குக்கு அருகாமையில் அமெரிக்கப் படை பன்முறை தோல்வியுற்றது. அந்தப் படை நியூஜெர்ஸி வழியாகப் பின்வாங்கிய சந்தர்ப்பம் அது. பூரண சுதந்திர இயக்கம் தோல்வியுற்றுவிடுமோ எனப் பலர் ஐயமுற்றனர். எதையும் எதிர்க்கும் துணிவுடன் பெய்ன் ''நரகம் மாதிரியே கொடுங்கோன்மையை எளிதில் வீழ்த்திவிட முடியாது'' என எழுதினர். ''ஆனல் போராட்டம் எவ்வளவுக்கெவ்வளவு கடுமையாயிருக்கிறதோ அவ்வாறே வெற்றியும் புகழ் ஓங்கியதா யிருக்கும்'' எனவும் எழுதினர். ஜெனரல் கிரீனின் கீழ் போரில் தான் அடைந்த அநுபவத்தை தத்ரூபமாக அவர் எழுதினர். இரக்கமின்றி டோரிகளை அவர் தாக்கினர்.

மக்களைக் கோழைத்தனம் ஆட்கொண்டுவிட்டால் அமெரிக்காவில் எவ்வளவு கஷ்டம் ஏற்படும், நாசம் விளையும் என்பதைப் பெய்ன் தனது முதல் பிரசுரத்தின் இறுதியில் விவரிக்கிறார்.

''இந்தக் காட்சியைக் கண்டு கண்ணீர் வடியுங்கள். இப்படி நிகழாது என நம்பும் அதமன் ஒருவன் இருப்பானுகில் அவன் செத்தொழிந்தால் யாரும் ஒரு சொட்டுக் கண்ணீர் சிந்த மாட்டார்கள்.''

போரில் நிகழ்ந்த நெருக்கடிகளில் சிலவற்றைப் பற்றி அவருடைய புகழ் பெற்ற பிரசுரத் தொடரில் எவ்வாறு எழுதினுர் என்பதைச் சுருக்கமாகக் கவனிக்கலாம். பின்னர் வெளிவந்த பிரசுரங்களில் இங்கிலாந்தைத் திருப்தி செய்து சமரசத்திற்கு இயங்குவதனுல் ஏற்படக்கூடிய தீமைகளைப்பற்றி பெய்ன் திரும்பத் திரும்ப அமெரிக்கர்களுக்கு எச்சரிக்கை செய்தார். பணிந்து போகிறவர்களுக்கும், ஆயுதத்தைத் துறப்பவர்களுக்கும் கருணை காட்டப்படும் என தளபதி ஹோ (Howe) 1776-இல் இரண்டு முறை பிரகடனம் செய்தார். இம்மாதிரி மனமயக்கமளிக்கும் பிரகடனத்தினுல் ஏற்படக்கூடிய ஆபத்தைப் பெய்ன் உணர்ந்து அவரது **நெருக்கடி** இரண்டாவது பிரசுரத்தை ''ஹோ'' பிரபுவுக்கும், நியூயார்க் டோரிகளுக்கும் எனக் குறிப்பாகச் சொல்லி வெளியிட்டார். ''நெருக்கடி'' நான்காவது பிரசுரத்தை 1777 ஜூனில் **பிராண்டி வொயின்** (Brandy Wine) சண்டை முடிந்ததும் எழுதினுர். அமெரிக்கப் படையின் இத்தோல்வி பிலடல்பியாவில் பீதியை விளைவித்தது. அநேகர் அந்நகரம் தங்கள் கைவிட்டுப் போய்விடும் என அஞ்சினர். இந்தத் தோல்வியின் உண்மையான விளைவைப் பெய்ன் உணரவில்லை என்று கூறுவதற்கில்லை. மோசமான நிலையைக்கூட திருப்திகரமானது என்று காட்டுவதன் மூலம் தனது நாட்டு மக்களை உற்சாகப்படுத்த முடியும் என்பதை அவர் அநுபவ மூலம் அறிந்திருந்தார். ''நமது பலம் இன்னும் செலவழியாமலிருக்கிறது. நாம் அடைந்த இந்தத் தோல்வியினுல் ஏதோ நன்மையடைந்து விட்டதாக ஹோ கருதவில்லை'' என அவர் அழுத்தமாகக் கூறினுர். ''ஒரு நோய் அபாய நிலைமையடைவது அது அகன்றுவிடுவதற்கறிகுறி. அபாயமும் விடுவிப்பும் ஒரேமாதிரி முன்னேறுகின்றன. கடைசியில் எது சுறுசுறுப்பாயிருக்கிறதோ அது வெற்றியடைகிறது'' என்று நம்பிக்கை மிக்க பெய்ன் கூறினுர்.

1783-ஆம் ஆண்டு ஏப்ரலில் போர் முடிந்ததும் உற்சாக மேலீட்டால் பெய்ன் மனமும் உள்ளமும் விரிவடைந்தன. அச்

சமயம் 'நெருக்கடி'யின் கடைசிப் பிரசுரத்தை வெளியிட்டார். பிரசுரங்களை எழுதி வெளியிடுவதில் அவர் கண்ட வெற்றி அவரைத் தலைகனக்கச் செய்தது. ''மக்களின் ஆத்மாக்களுக்கு ஏற்பட்ட சோதனைக் காலம்'' இன்னும் முடிவடையவில்லை. தற்காலிகமாக உற்சாகம் பொங்கிய அக்காலத்தில்கூட பெய்ன் இந்த உண்மையை மறந்திருக்க முடியாது. ''உலகம் கண்டிராத மாபெரும் பூரணமான புரட்சி இது'' என்பது ஓரளவு உண்மையாயிருப்பினும் கவலைப் பட வேண்டிய காலம் நீங்கிவிட வில்லை. அவரது பிரசுர இறுதியில் ''அமெரிக்காவின் நலனே என்னை ஆசிரியராக் கியது'' என அவர் கூறியதில் ஓரளவு உண்மை இருக் கிறது. அந்தப் பிரசுரத்தில் பெரும் பகுதியில் நிலவிய தலைகால் தெரியாத உற்சாகத்துடன் எவ்விதத் தயக்கமு மின்றி நாட்டிற்குத் தாம் புரிந்த சேவைகளைப் பற்றியும் 'இலக் கியத்தின்' சிறப்பை ஓரளவு கூட்டியிருப்பதாகவும் குறிப் பிட்டிருக்கிறார். பின்னர் அவர் பலதரப்பட்ட வாழ்க்கை நடத்தியதை ஞாபகத்தில் வைத்துப் பார்த்தால் பின்வரும் பகுதியை அவர் எவ்வளவு தீர்க்கதரிசனத்துடன் எழுதியிருக் கிறார் என்பதை அறியலாம். பின்னர் பல விவாதங்கள் தோன்றியதற்கும், பிறநாடுகளில் அவர் பட்ட கஷ்டத்திற்கும் சூசகம்போல் அமைந்திருக்கிறது இப்பகுதி:

''யுத்தக் காட்சிகள் மறைகையில் ஒவ்வொருவனும் தனது இல்லத்தையும் சுகவாழ்வையும் நாடிச் செல்லுகையில் நான் இந்தப் பிரச்னையிலிருந்து விடைபெற்றுச் செல்லுகிறேன். இந்தப் பிரச்னையை மிகுந்த சிரத்தையுடன் ஆரம்பத்திலிருந்து இறுதிவரை, அதன் சகல கட்டங்களிலும் கவனித்து வந்திருக் கின்றேன். இனி எந்நாட்டில் வாழ்ந்தாலும் நான் கொண்ட பங்கு, புரிந்த செயல்களைப்பற்றி நியாயமாகப் பெருமைப் படுவேன். மனித குலத்திற்கு ஓரளவு சேவை செய்யும் சக்தியை எனக்கு அளித்ததற்காக இயற்கைக்கும் ஆண்டவனுக்கும் நன்றி செலுத்துகிறேன்.''

'நெருக்கடி' பிரசுரங்களில் பொதிந்துள்ள கருத்துக்களை மேலோட்டமாகக் கவனித்ததில் புரட்சிக் காலத்தில் பெய்ன் மனத்தில் படிப்படியாக இடம் பெற்ற ஒரு கருத்தை நாம்

கவனிக்கவில்லை.—ராஜ்யங்களுக்குள் கூடுதலான ஒற்றுமை இருக்கவேண்டிய அவசியம் பற்றியதுதான் அக்கருத்து.

காலனிகள் அங்கீகாரத்திற்கு சமஷ்டி ஷரத்துக்கள் 1777-இல் அனுப்பப்பட்டனவென்றும், ஆனல் அவைகள் 1781 வரை அங்கீகரிக்கப்படவில்லை என்பதும் ஞாபகமிருக்கலாம். இந்த ஷரத்துக்களின்படி தேசப் பொதுக்காரியங்களை நிர்வகிக்க மத்திய அரசாங்கத்திற்கு குறைந்த அளவு அதிகாரமே அளிக்கப்பட்டது. மற்ற அதிகாரங்கள் யாவும் ராஜ்யங்களிடையே இருந்தன. மாகாணங்களின் அமைப்பு சம்பந்தமாக ''சாமானிய அறிவு'' கட்டுரையில் தாமஸ் பெய்ன் சில யோசனைகள் கூறியிருந்தார். சமஷ்டி ஷரத்துக்கள் ஓரளவு இந்த யோசனைகளை ஒட்டியேயிருந்தன. ஆனல் அதே பிரசுரத்தில் ''நமது பலம் நமது கண்டத்தின் அளவிலே ஒழிய மாகாண ரீதியில் அல்ல'' என பெய்ன் குறிப்பிட்டிருக்கிறார். எனினும் மாகாண அமைப்புக்கான பெய்னின் எளிய திட்டமும், சமஷ்டி ஷரத்துக்களும் பலம் வாய்ந்த சமஷ்டி அரசாங்கம் அரசியல் ஆதிக்கம் செலுத்துவதைத் தவிர்க்கும் முறையிலேயே அமைந்திருந்தன. இவைகள் அப்போது மனிதனின் இயற்கை உரிமைகளை சாத்தியமான அளவுக்குப் பாதுகாக்கப் போதுமானவை.

ஆனல், பல ஆண்டுகளுக்குப் பின் 'மனித உரிமைகள்' எனும் பிரசுரத்தில் தானும், பிற்போக்காளர்கள் என அழைக்கப்படும் பிற அமெரிக்க அரசியல்வாதிகளும் சமஷ்டி சட்டத்தில் கண்ட குறைகளைப் பெய்ன் விவரித்தார்.

ராஜ்ய அரசியலமைப்புக்கள் ராஜ்ய அரசாங்கங்களுக்கு அளித்த அதிகாரங்கள் அதிகமானவை எனக் காணப்பட்டது. சமஷ்டிச் சட்டப்படி சமஷ்டி அரசாங்கத்திற்கு அளிக்கப்பட்ட அதிகாரங்களோ குறைவானவை. இந்தக் குறைபாடு கொள்கையில் காணப்படவில்லை; அதிகாரப் பாகுபாட்டிலேயே காணப்பட்டது.

அவர் எந்தக் கட்சியையும் சார்ந்தவரல்லராயினும், 1780-ஆம் ஆண்டிலேயே பெய்ன் ராஜ்ய அதிகார உரிமைகளுக்கெதிராக சமஷ்டிக் கட்சியையே ஆதரித்தார். அந்த ஆண்டில் தான் அவர் **பொது நலம்** எனும் பிரசுரத்தை வெளியிட்டார். மேற்குப்புறத்தில் காலியாயிருந்த பகுதிக்கு வர்ஜீனியா உரிமை

கொண்டாடியது. இந்தப் பிரசுரத்தில் ஐக்கிய அமெரிக்காவின் உரிமைக்குச் சாதகமாகப் பெய்ன் எழுதினர். மேரிலாண்டின் எல்லைகளை அந்த ராஜ்ய சாசனம் நிர்ணயித்ததனுல் மேற்கத்திப் பகுதி நிலப்பரப்பில் அது உரிமை கொண்டாடுவதற்கில்லை. இந்த நிலப்பரப்பில் தனக்கு உரிமை இல்லை, சமஷ்டி ஆட்சிக்குத்தான் உரிமை உண்டு என வர்ஜீனியா ஒப்புக் கொண்டாலொழிய, சமஷ்டி ஷரத்துக்களைத் தான் அங்கீகாரம் செய்ய முடியாது என மேரிலாண்டு கூறிவிட்டது. **பொது நலனில்** வர்ஜீனியா உரிமை கொண்டாடும் அசல் சாசனத்தையும் இதர தஸ்தாவேஜுகளையும் பெய்ன் விஸ்தாரயாக ஆராய்ந்து, வர்ஜீனியாவின் கோரிக்கை அநியாய்மானது என்று கண்டித் தெழுதினர். மேலும் "ஆண்டவன் நம் எல்லோரையும் ஒன்றுபடுத்தி அமெரிக்காவின் சுதந்திரம் சித்திபெறச் செய்திருப்பதனுல் இந்தக் காலி நிலங்கள் நியாயமாகவே சமஷ்டி அரசாங்கத்தைச் சேரவேண்டும்" எனவும் அவர் எழுதினர். புது நாட்டின் அபிவிருத்திக்கு இந்த மேற்கத்தி நாடுகள் அத்தியாவசியம் என்பதை 'சாமானிய அறிவில்' கூறியதைவிட இங்கே தெளிவாகக் கூறுகிருர்.

ஐக்கிய நாடுகள் இன்று ஆதிபத்தியம் பெற்றுவிட்டதனுல் காலி நிலம் இந்த ராஜ்யங்களின் கூட்டு உடைமை. ஆனுல் அந்த நிலத்தில் இனி குடியேறப்போகிறவர்களுக்கு அதில் நம்முடன் சம உரிமை உண்டு. அங்கே புது ராஜ்யங்கள் அமைக்கப்பட்டு தற்போதுள்ள நிலப்பரப்புடன் சேர்ந்துகொண்டால் ஏற்கனவே நம் அநுபவத்திலுள்ள இடங்களில் அவர்களும் கூட்டுரிமையுள்ளவர்களாவார்கள்.

அமெரிக்காவின் எதிர்கால அபிவிருத்தி சமஷ்டி ஷரத்துக்களில் குறிப்பிட்டிருப்பதைவிடப் பலம் வாய்ந்த சட்டசபையின் பொறுப்பிலிருக்கவேண்டும் எனப் பெய்ன் கருதினர்.

பலம் வாய்ந்த சமஷ்டி அரசாங்கத்தின் அவசியத்தை உணர்ந்து 1880-ஆம் ஆண்டுவாக்கில் பெய்ன் அதில் கவனம் செலுத்தினர். 'நெருக்கடி'யின் கடைசி இதழில் அவர் கூறினர்: "எப்படி தனிப்பட்டவர்கள் ஓரளவு விட்டுக்கொடுத்தால் சமூகம் தழைக்குமோ அதேமாதிரி ராஜ்யங்கள் தியாகம் செய்தால்தான் சமஷ்டி நிலைக்கும். ஐக்கிய நாடுகளில் நமது பிரஜா உரிமை

தான் நமது தேசியச் சிறப்பு''. 'அமெரிக்கா மக்களுக்கு' என 1783-ஆம் ஆண்டு இறுதியில் அவர் 'உபரியான நெருக்கடி' என ஒரு பிரசுரம் எழுதினர். அதன் இறுதியில், ''ஒன்றுபட்டுச் செயல்புரிவதன் மூலம்தான் நமது வியாபார சுதந்திரத்தை பிற நாட்டினர் பறிக்காமல் பாதுகாக்க முடியும். அமெரிக்காவின் வர்த்தகம் சீர்குலேயாமலிருக்கும்'' என்று எழுதியிருக்கிறுர். நாட்டின் பலமும் சிறப்பும் ஒற்றுமையில்தானிருக்கிறது என்கிற பெய்னின் நம்பிக்கையின் பொருளாதார விளைவுகள் யாவை என்பதை அவர் 1782-இலிருந்து 1783-க்குள் **பிராவிடன்ஸ் கெஜட்** (Providance Gezette) எனும் சஞ்சிகையில் **ரோடி** தீவிற்கு எழுதிய ஆறு கடிதங்களில் காணலாம். சமஷ்டி ஷரத்துக்களின்படி பதின்மூன்று ராஜ்யங்களும் ஏகோபித்து ஆதரித்தால்தான் காங் கிரஸ் ஒரு சட்டத்தை இயற்றமுடியும். இறக்குமதியான சரக்கு களுக்கு ஐந்து சதம் வரி கொடுக்கவேண்டும் என்று காங்கிரஸ் பிரேரித்த சட்டத்தை ரோடி தீவு அங்கீகரிக்க மறுத்தது. அவ ருக்கு இயல்பாயுள்ள அஞ்சாமையுடனும் நம்பிக்கையுடனும் இந்தக் கடிதங்கள் மூலம் மசோதாவை ரோடி தீவு ஒப்புக்கொள் ளச்செய்வதில் முனேந்தார். காங்கிரஸ் 'சில மனிதர் கூட்ட மல்ல', 'ராஜ்யங்களின் கூட்டம்' என அவர் விளக்கம் தருவது படிப்பதற்கு ருசிகரமாயிருக்கிறது. ''அந்த ராஜ்யங்கள் இவ்வாறு கூடி மிக எளிதில் செலுத்தக்கூடிய முறையில் இறக்கு மதிச் சரக்குகளுக்கு ஐந்து சத வரி விதித்திருக்கின்றன. இவை களில் பன்னிரண்டு ராஜ்யங்கள் அந்த சட்டத்தை ஏற்றுக் கொண்டுவிட்டன. ரோடி தீவு மாத்திரம் முரண்செய்கிறது'' என எழுதினர். பெய்னேப் பொறுத்தமட்டில் விஷயத்தை இதை விடத் தெளிவாக விளக்க முடியாது. அவைகளின் நலனே உத்தே சித்தே பதின்மூன்று ராஜ்யங்களும் ஒன்றுபட்டுச் செயல்புரிய வேண்டும். இயற்கை உரிமைகளே ஒட்டியே பலம் பொருந்திய மத்திய ஆட்சி வேண்டுமென பெய்ன் கோரினுரா என்பதை இப்பொழுது கூறமுடியாது. ஆனல் எதையும் அநுபவசாத் தியமா என்று பார்க்கும் அவரது மனப்பாங்கு, ராஜ்யங்கள் ஒன்றுபடுவது எல்லாவற்றிலும் முக்கியமானது என்று கண்டது. அமெரிக்க அரசியலில் ஏற்பட்ட அநுபவத்திலிருந்து எதிர் காலத்தில் ஏற்படக்கூடிய எல்லா சிக்கல்களேயும் சமாளிப்பதற்கு

சமஷ்டி அமைப்பு ஏற்றதல்ல என்பதைப் பெய்ன் உணர்ந்தார். ரோடி தீவு, நாட்டை இக்கட்டான நிலைக்குக் கொண்டுவிட்டது என்பதைப் பெய்ன் இக்கடிதங்களில் மேலும் தெளிவாக விளக்கிக் கூறுகிறார். இந்த விளக்கத்தின் மூலம் பிரஜைக்கும் ராஜ்யத்திற்கும் முதலில் உள்ள உறவையும் பின்னர் பிரஜைக்கும் அமெரிக்காவுக்கும் உள்ள உறவையும் நிர்ணயிக்கிறார்.

அமெரிக்காவிலுள்ள ஒவ்வொருவருக்கும் இருவகையான பிரஜா உரிமை உண்டு. அவன் வசிக்கும் ராஜ்யத்தின் பிரஜை, அமெரிக்காவின் பிரஜை. உண்மையாகவும் நேர்மையாகவும் அமெரிக்காவின் பிரஜை எனும் கடமையை நிறைவேற்றுவிடில் அவன் ராஜ்யப் பிரஜா உரிமையைத் துறந்தவனாகிறான். ராஜ்யத்தில் அவனுடைய அந்தஸ்தினால் அவனது அண்டையினர் பாதுகாப்பு கிடைக்கிறது. தேசீய அந்தஸ்தினால் உலகப் பாதுகாப்பு கிட்டுகிறது.

1775-ஆம் ஆண்டிலிருந்து அவர் ஐரோப்பாவுக்குப் புறப்பட்ட 1787-ஆம் ஆண்டு வரை பெய்ன் அமெரிக்க அரசியலில் பங்குகொண்டதுபற்றி ஓரளவுதான் நாம் ஆராய்ந்திருக்கிறோம். கவனிக்க விட்டுப்போனதை இப்போது ஆராயலாம். ''தற்காப்புப் போர் பற்றிய சிந்தனைகளிலும்'' ''குவேக்கர்களுக்குக் கடிதம்'' என்பதிலும் குவேக்கர்களின் அமைதி ஆர்வத்தைக் கண்டிக்கிறார். அவர்களுடைய இந்தப் போக்கினால் யுத்தத்தை நன்கு நடத்த முடியவில்லை என அவர் கருதினார். பல கட்டுரைகளில் அவர் 1776-ஆம் ஆண்டில் ஏற்பட்ட பென்ஸில்வேனியா அரசியல் அமைப்பை ஆதரித்து எழுதியது சரித்திர முக்கியத்துவம் வாய்ந்தது. காலனி அரசியலில் நேரடியாகப் பெய்ன் பங்குகொண்டதனால் 1777-ஆம் ஆண்டில் அவரைக் காங்கிரஸ் அயல்நாட்டு விவகாரக் கமிட்டியின் செயலாளராகத் தேர்ந்தெடுத்தது. சமயோசிதமாக நடந்துகொள்ளுதல் என்பது எப்போதுமே பெய்னின் தனிச்சிறப்பல்ல. ஆகையால் இவருக்கும் பிரான்ஸில் அமெரிக்க கமிஷனராயிருந்த **ஸைலாஸ் டீனுக்கும்** (Silas Dean) பெருத்த தகராறு மூண்டது. பிரஞ்சு அரசாங்கத்துடன் உள்ள தொடர்பால் சொந்த லாபம் அடைந்ததாக அவர் மீது பெய்ன் குற்றம் சாட்டினார். மோசடியாக டீன் பண நஷ்டம் விளைவித்ததாக நம்பியதனால் தான், அதனால் காங்கிரஸ் நஷ்டமடையாமல்

காப்பாற்ற வேண்டும் எனும் கபடற்ற நோக்குடன்தான் பெய்ன் குற்றம் சாட்டினர். ஆனல் அளவுக்குமீறிய உற்சாகத்தால், அயல்நாட்டு விவகாரக் காரியதரிசி என்கிற முறையில் அவரிடமிருந்த ரகசிய தஸ்தாவேஜிகளிலிருந்து தகவல்களை வெளியிட்டுவிட்டார். 1778-ஆம் ஆண்டிலிருந்து 1779-ஆம் ஆண்டு வரை **பென்ஸில்வேனியா பாக்கெட்** எனும் சஞ்சிகையில் பல கடிதங்கள் எழுதி டீனின் குற்றங்களை அம்பலப்படுத்தினர். இதன் விளைவாக அவர் வேலையிலிருந்து நீக்கப்பட்டது பெய்ன் மனத்தைச் சாகும் வரையில் வாட்டிவந்தது.

புரட்சி காலத்தில் பெய்னின் அரசியல் நடவடிக்கைகள் நாட்டின் பொருளாதாரப் பிரச்னைகளையும் கவர்ந்தன. 1779-ஆம் ஆண்டு இறுதியில் பெய்ன் பென்ஸில்வேனியா சட்டசபைக் குமாஸ்தாவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்தப் பதவியை அவர் வகிக்கையில் 1780-ஆம் ஆண்டில் வாஷிங்டன் எழுதிய கடிதத்தைச் சட்டசபைக்குப் படித்துக் காட்டினர். படையினர் பொறுமை இழக்கும்படிச் செய்த சந்தர்ப்பச் சேர்க்கைகளை வாஷிங்டன் இக் கடிதத்தில் வன்மையாகக் கண்டித்திருந்தார். ''படையின் ஒவ்வொரு பகுதியிலும் கலகம், ராஜாங்கத் துரோகம் இரண்டின் கவலைக்கிடமான சின்னங்கள் தென்படுகின்றன'' என வாஷிங்டன் கூறியிருந்தார். 1780 ஆம் ஆண்டில் வெளியான 'நெருக்கடி' ஒன்பதாவது இதழில் வாஷிங்டன் தத்ரூபமாக விவரித்த நிலையை நாட்டு மக்களுக்கு எடுத்துக் காட்டினர். அப்படிக் காட்டுகையில் ''பிலடல்பியாவிலுள்ள வர்த்தகர்கள், வியாபாரிகள், முக்கியமான பிரஜைகள் எல்லோரும் ஒன்றுகூடி ராஜ்யப் புது நாணயத்தைத் தங்கம் அல்லது வெள்ளிபோல் மதிப்பதாக முடிவு செய்துள்ளனர்'' எனக் குறிப்பிட்டார். பெய்ன், தானே 500 டாலர் அளித்ததுடன், அது வரையில் தன்னுடைய அரசியல் எதிரியாயிருந்த **ராபர்ட் மாரிஸுடன்** (Robert Morris) ஒன்று சேர்ந்து வட அமெரிக்க பாங்கை ஸ்தாபிக்க உதவினர். இந்த பாங்க் அமைத்ததன் பிரத்தியேக நோக்கம், புரட்சிக்குப் பண உதவி செய்வதுதான். 1886-ஆம் ஆண்டில் யுத்தம் முடிந்த பின் உலோக நாயணத்திற்குப் பதில் காகிதச் செலாவணியை ஆதரித்தவர்கள் இந்த பாங்க் அமைக்க அளித்திருந்த அநுமதியை ரத்து செய்யவேண்டும் என கோரினர்.

அந்த ஆண்டிலே அமெரிக்காவை விட்டுப் போகுமுன் பெய்ன் வெளியிட்ட கடைசிப் பிரசுரம் வெளியாயிற்று. அதற்கு **அரசாங்கம் பற்றிய விளக்கம்; பாங்க் விவகாரங்கள்; காகித நாணயம்** எனும் தலைப்பளித்தார். பாங்க் அமைந்ததிலிருந்து காகித நாணயம் பற்றி பெய்னின் கருத்து மாறுபடவில்லை. காகித நாணயம் என்பது ''ஒரு குமிழி போன்றது; அதைச் சொத்து என்று கருத முடியாது. ஏனெனில் தனது அதிகாரம் ஓராண்டில் முடிவடையும் ஒரு சபை விரலசைப்பதனுல் காகிதத்திற்கு தங்கத்திற்குள்ள மதிப்பையும் நீண்ட காலத்திற்கு உதவும் தன்மையையும் அளித்துவிட முடியாது'' என எழுதினுர். இதிலிருந்து பெய்ன் பணக்காரர்களுடன் வெளிப்படையாகச் சேர்ந்துவிட்டார் என்பது தெளிவு. அவரது பொருளாதாரக் கொள்கை பற்றி பொதுஜன அபிப்பிராயம் அவருக்கு எதிரிடையாகக் கிளர்ந்து எழுந்தது. பாமர மக்களை அவர் கைவிட்டு விட்டார் என்று கூறும் அளவுக்குச் சிலர் அவரை எதிர்த்தனர். ஹாமில்டன் மாதிரியே அவரும் தங்க அல்லது வெள்ளி நாணய அடிப்படையில் பணச் செலாவணி மூலம் தான் நாடு பூராவும் வளர்ச்சியுற்று சுபிட்சமடையும் என்பதைத் தெளிவாய் உணர்ந்தார். இது பாமர மக்கள் நலனைப் பறிகொடுப்பதெனில் அன்றும் இன்றும் பெய்னின் எதிரிகளாயிருப்பவர்கள் தங்கள் கட்சியே பிரமாதமானது என்று பெருமையடித்துக்கொள்ளலாம்.

III

புரட்சி முடிந்ததுமே அமெரிக்காவில் தன் வேலை முற்றுப் பெற்றதெனப் பெய்ன் நம்பினுர். 'நெருக்கடி' எனும் தொடரில் கடைசி பிரசுரத்தில் அவர் இறுதியாக எழுதியதில் ''நான் இனி எந்த நாட்டில் வாழ்ந்தாலும்'' என அவர் குறிப்பிட்டது ஞாபகமிருக்கும். ஹென்றி டி. தோரோ (Henry D. Thoreau) **வால்டனில்** (Walden) தனது அநுபவம் வாழ்க்கையில் ஒரே ஒரு சோதனை எனவும் ''இன்னும் அநேக வாழ்க்கைகள் வாழவேண்டியிருக்கிறது'' எனவும் குறிப்பிட்டது போல பெய்னும் சுதந்திர இயக்கத்தில் புதிய அநுபவம் பெறப் பிற நாடுகளை நாடினுர் எனக் கூறலாம்.

இந்தப் புதிய அநுபவத்தை அவர் எதிர்பார்த்தது வீண் போகவில்லை. அமெரிக்காவில் அவர் முதல் தடவை சுற்றியலைந்ததை ஆராய்ந்தால் மனித சமுதாயத்திற்குச் சேவை செய்யும் அவரது ஆற்றல் எப்படி விரிவடைந்துகொண்டே போயிற்று என்பதைக் காண்போம். புரட்சி முடிவடைய ஓராண்டிற்கு முன் அவர் எழுதிய 'அப்பே ரெய்னுலுக்குக் கடிதம்' (Letter to the Abbe Raynal) எனும் பிரசுரத்தைப் படித்தால் அப்பொழுதே சகோதரத்துவமும் ஒத்துழைப்பும் நிலவும் ஓர் உலகத்தைப்பற்றி அவர் கனவு காணத் தொடங்கி விட்டார் என்பது விளங்கும். அமெரிக்கப் புரட்சி பற்றி இந்த **அப்பே** எழுதிய வரலாற்றில் காணப்பட்ட தவறுகளை பெய்ன் திருத்த முயன்றதிலிருந்து வர்த்தகம், விஞ்ஞானம் இவ்விரண்டினுல் பிணைக்கப்பட்ட இனிய உலகைப்பற்றியே அவர் கனவு கண்டார் என்பது விளங்குகிறது. ''தனிப்பட்டவனின் தேவைகளே சமூகத்தைத் தோற்றுவிக்கக் காரணமாயிருந்தன. இன்று அது நாட்டு மக்களின் தேவைகளாகப் பெருகிவிட்டதனுல் தனது அண்டையிலிருந்தவனிடமிருந்து வாங்கியதை அவன் இனி அந்நிய நாட்டிலிருந்து எதிர்பார்க்க வேண்டியிருக்கிறது. விஞ்ஞானம் எந்தத் தேசத்தையும் சார்ந்ததல்ல. அது எல்லோருக்கும் நலன் விளைவிக்க வேண்டியது. ஆகையால் அது திறந்திருக்கும் ஆலயத்தைப் போன்றது. எல்லோரும் வந்து கூடலாம்'' என்று பெய்ன் கூறுகிறுர்.

புரட்சிக்குப் பிறகு அவருக்குக் கிடைத்த ஓய்வைப் பல புது விஷயங்களைக் கண்டுபிடிப்பதில் பயன்படுத்தினுர். ஆனுல் பிரான்ஸுக்கும் இங்கிலாந்துக்கும் இருந்த அரசியல் தகராறுகளில் அவர் கவனம் செலுத்தினுர் என்பதே நாம் கவனிக்கவேண்டிய முக்கிய விஷயம். பிரஞ்சுப் புரட்சி தொடங்கிய பிறகு, **பிரஞ்சுப் புரட்சி பற்றிய சிந்தனைகள்** எனும் நூலை **பர்க்** வெளியிட்டார். பெய்ன் இதற்கு முன்பு **பர்க்**குடன் நேசபாவமாகவே இருந்தார். ஆனுல் பிரஞ்சுப் புரட்சியைத் தாக்கியும், பிரிட்டிஷ் முடியாட்சியை ஆதரித்தும் **பர்க்** எழுதியது பெய்னின் ஆத்திரத்தைக் கிளப்பி விட்டது. இதன் விளைவுதான் **மனித உரிமைகள்** எனும் நூலை இரண்டு பகுதிகளாக 1791-1792-இல் பெய்ன் வெளியிட்டது, **பர்க்குக்குச்** சிறப்பாக ஒரே புத்தகத்தில் பதிலளித்ததனுல்

பெய்னின் அரசியல், சமூக சிந்தனைச் சிறப்பு வெளியாயிற்று. இவருடைய வேறெந்த நூலிலும் இவருடைய உயர்வு இவ்வளவு தெளிவாகப் பிரகாசித்ததில்லை. **மனித உரிமைகள்** குறிப்பாக இங்கிலாந்துக்கும் பிரான்ஸுக்கும் இருந்த அரசியல் பிரச்னைகளையும் உறவையும் பற்றியே விவாதிக்கிறது. **மனித உரிமை**களின் முதல் பாகம் வாஷிங்டனுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கிறது. 'பிறருக்கு வழிகாட்டும் தன்மையுள்ள உங்களது நற்குண நற்பண்பினால் ஸ்தாபிக்கப்பட்ட சுதந்திரக் கொள்கையை ஆதரித்து எழுதப்பட்ட இச் சிறு பிரசுரத்தைத் தங்களுக்குச் சமர்ப்பிக்கிறேன்' என்று அதில் அவர் கூறியிருக்கிறார். அமெரிக்கப் புரட்சி மூலம் சம்பிரதாயங்களும் மூடப் பழக்கங்களைப் பின்பற்றுவதும் ஒழிந்து உலகத்தின் அரசியல் சீர்திருத்தத்திற்கு அடிகோலப்பட்டது என்பது பெய்னின் கருத்து.

அவர் **சாமானிய அறிவு** எழுதிய பிறகு இதுபற்றி ஓரளவு படித்தும் வெகுவாகச் சிந்தித்தும் இருக்கிறார் என்று நாம் அனுமானிக்கலாம். மனிதன் பிற மனிதர்களினால் கஷ்டத்திற்குள்ளாகாத காலம் ஒன்று உண்டெனில் அது உலகம் தோன்றிய காலத்தில்தான் என பெய்ன் கூறுகிறார். இவ்வாறாக நாம் 'மனிதன் தோன்றிய வரலாற்றிற்கு' வருகிறோம். ''மனிதன் ஆண்டவன் கையினால் படைக்கப்பட்டான்''. ''ஆகையால் மனிதர்களெல்லோரும் சமத்துவத்துடனேயே தோன்றினார்கள், சம உரிமைகளுடன் பிறந்தார்கள்'' எனப் பெய்ன் வற்புறுத்துகிறார். ''மனிதனுக்கு இயல்பாக உள்ளவைகளை மனிதன் பறிக்கமுடியாது, மனிதனின் இயல்பான கண்ணியத்தை எதுவும் அழிக்க முடியாது. இயற்கைப் பிரபுவுக்கு முன் செயற்கைப் பிரபு குன்றிக் குறுகிக் காட்சியளிப்பான்.''

'மனித உரிமை'களில் பெய்ன் ஒரு சமுதாய உடன்பாடு வகுத்திருக்கிறார். அதிலே இயற்கை உரிமைக் கொள்கையைப் பொருத்த முயற்சித்திருக்கிறார். இதைப் படித்தால் பெய்ன் தனது அமெரிக்க அநுபவத்தைப் பெரிதும் பயன்படுத்தியிருக்கிறார் என்பது தெரிகிறது.

அமெரிக்கப் புரட்சியினால் ஏற்பட்ட சிறப்பான நன்மைகளில் ஒன்று, அரசாங்க அமைப்புக் கொள்கைகளை யாரும் அறியும்படிச் செய்ததும், அரசாங்கங்கள் செலுத்திவந்த

ஆதிக்கத்தை அம்பலப்படுத்தியதும்தான். அதுவரை நடந்த புரட்சிகளெல்லாம் அரண்மனைக்குள் நடந்திருக்கின்றன. தேச மக்களிடையே நடக்கவில்லை. புரட்சியில் பங்கு கொண்டவர்கள் அரசதாசர்கள். அவர்கள் எவ்வளவு சீர்திருத்த ஆர்வம் கொண்டவர்களாயினும், தங்களது மோசடித் தொழிலை மூடி மறைத்து வைத்தே வந்திருக்கின்றனர்.

அரசாங்கம் என்றால் மர்மங்கள் நிறைந்தது, அந்த மர்மங்களைத் தாங்களேதான் புரிந்துகொள்ள முடியும் என்று அவர்கள் பிரசாரம் செய்துவந்திருக்கின்றனர். மக்கள் எதைத் தெரிந்துகொண்டால் அவர்களுக்கு நல்லதோ, அதை மறைத்து வந்திருக்கின்றனர். **சமூகக் கொள்கை அடிப்படையில் செயல் புரியும் தேசீயக் கூட்டுறவுதான் அரசாங்கம், வேறல்ல** எனும் உண்மைதான் அவர்கள் மறைத்துவைத்தது.

இங்கு பெய்ன் ''தேசீயக் கூட்டுறவு'' என்று சொல்லுவதை நாம் புரிந்துகொள்ளவேண்டுமானால், 'இயற்கை உரிமைகள்', 'சிவில் உரிமைகள்' என்று அவர் கூறும் பதங்களின் பொருளை அறிந்து கொள்ளவேண்டும். ''மனிதன் உயிர் வாழ்வதனாலேயே அவனுக்குள்ள உரிமைகள் இயற்கை உரிமைகள். இந்த ரகத்தைச் சேர்ந்தவைதாம் அறிவாற்றல் உரிமைகள், சிந்தனை உரிமைகள், தனது சௌகரியத்திற்கும் சந்தோஷத்திற்கும் தனிப்பட்டவன் பிறர் உரிமைகளைப் பாதிக்காமல் செயல் புரியும் உரிமைகள்.'' 'சிவில் உரிமைகள்' என்பது சமூகத்தில் ஓர் உறுப்பினன் என்கிற முறையில் அவனுக்குக் கிடைத்தவை. சந்தேகமின்றி மனிதனுக்குச் சில இயற்கை உரிமைகள் உண்டு. ஆனால் அவைகளைப் பயனுள்ள வகையில் கையாள அவன் அநேக சந்தர்ப்பங்களில் அசக்தனாயிருக்கிறான். ஆகையால் அவன் பிறமனிதர்களுடன் கூடி தினசரி வாழ்க்கை சாத்தியமாவதற்கு வகை செய்து கொள்ளுகிறான். ஒவ்வொரு சிவில் உரிமையும் இயற்கை உரிமையின் விளைவாகவே கிடைக்கிறது என்பது பெய்னின் கருத்து. தன்னைப் பாதுகாத்துக்கொள்ளவும், தனது பத்திரத்திற்கு வகை செய்துகொள்ளவும் இயல்பாகவே மனிதனுக்கு உரிமை உண்டு; ஆனால் தனக்குள்ளதைத் தனித்து நின்று அவன் பெறமுடியாது.

இந்த சங்கடத்தின் விளைவாகவே சமுதாய உடன்பாடு ஏற்பட்டது. எல்லோரும் ஒன்றுபட்டு உழைப்பதனால் வாழ்க்கை

நடத்துவது சாத்தியமாகிறது. ஆனல் சமுதாய உடன்பாடு தனிப்பட்டவர்களின் இயற்கை உரிமைகளைப் பாதிக்கலாகாது எனப் பெய்ன் நம்பினர். ஏனெனில், ''சமூகத்தின் மாபெரும் விதிகளும் இயற்கை விதிகளே.''

''தேசியக் கூட்டுறவினல் கிடைக்கக்கூடிய இன்பத்தை எந்த நாட்டிற்கும் மறுத்தலாகாது'' என்பது பெய்னின் கருத்து. ''அரசாங்கம் கலைக்கப்பட்டதும் சமூகம் செயல் புரியத் தொடங்குகிறது. பொதுவான கூட்டுறவு ஏற்பட்டு அதன் விளைவாகப் பொதுவான அக்கறை பொதுவான பாதுகாப்புக்கு உத்தரவாதமளிக்கிறது.'' பிரதிநிதித்துவ ஆட்சி மூலம் இயல்பாகக் கிடைக்கக்கூடிய நலன்களைத் தனது மக்களுக்கு அளிக்க இங்கிலாந்து மறுத்தது என்பது உண்மை. எனினும் முடியாட்சியின் புகழை பர்க் பிரமாதமாகப் பாடுகிறர். கலால் அதிகாரியாயிருக்கையில் அரசாங்க அதிகாரிகளுக்கும் பெய்னுக்கும் சச்சரவு ஏற்பட்டதிலிருந்து அவருக்கு இங்கிலாந்து மீது வெறுப்பு ஏற்பட்டது. அமெரிக்க எதிர்ப்பு, கலகமாகவும், கலகம் யுத்தமாகவும் மாறிய பிறகு இங்கிலாந்து மீதுள்ள இந்த வெறுப்பு பெருகிற்று. தான் அமெரிக்காவிலிருக்கையில் எதிர்த்து வந்த அதே முடியாட்சியைப் பர்க் கேவலமான முறையில் ஆதரிப்பதைப் பார்த்ததும் தாய்நாட்டின் மீது பெய்னுக்கிருந்த வெறுப்பு ஆங்கில துவேஷ வெறியாக மாறிவிட்டது.

தனது சொந்த அநுபவத்திலிருந்தோ அல்லது லபாயத்தும், பிறரும் கூறிய தகவல்களிலிருந்தோ பெய்ன் எழுதிய புரட்சி வரலாற்றில் தீர்மானமாகப் புரட்சியின் ஆரம்பத்தில் தான் கண்ட உண்மையைக் கூறத் துணிந்துவிட்டார். அமெரிக்கப் புரட்சி மாதிரியே பிரஞ்சுப் புரட்சியும் இயற்கை ஒழுங்கைச் சீர்திருத்துவதாகும் என நம்பியே பிரஞ்சுப் புரட்சியின் வளர்ச்சி வரலாற்றை அவர் எழுதுகிறர். தேசீய அசெம்பிளியின் கண்ணியத்தையும், அடக்கமாகப் புரட்சி நடந்த விதத்தையும் அவர் குறிப்பிட்டிருக்கிறர். பாசிபடிந்த பழைய தஸ்தாவேஜுகளைக் கொண்டே பர்க் தனது உளுத்துப்போன வாதங்களைப் புரிகிறர். ஆனல் பெய்ன் பிரஞ்சு தேசீய சபையில் உரிமைப் பிரகடனத்தைப் பிரேரிக்கையில் லபாயத் கூறிய ஜீவன் நிறைந்த சொற்களை ஆதாரமாகக் கூறுகிறர்.

ஒவ்வொரு பிரஜையின் உள்ளத்திலும் இயற்கையன்னை பொறித்திருக்கும் கருத்துக்களை மனப்பூர்வமாக ஒப்புக்கொண்டதும் அவைகளுக்கு ஏற்படும் புதிய சக்தியைப் பாருங்கள். ஒரு நாட்டு மக்கள் சுதந்திரத்தில் பற்றுக்கொள்ளவேண்டுமெனில் சுதந்திரத்தை அந்நாட்டினர் அறிந்தால் போதும். சுதந்திரமடைய வேண்டுமானுல் அதற்கான மன உறுதி இருந்தால் போதும்.

''மனிதனின், பிரஜைகளின் உரிமைப் பிரகடனத்தை'' சபையில் லபாயத் பிரேரித்தார். பெய்ன் அதை அப்படியே அச்சிட்டு விரிவாக விமர்சனமும் செய்தார். ''மக்கள் பிரதிநிதிகளால் இயற்றப்பட்ட பிரகடனம்—ஒரு குட்டி அரசியலமைப்பு இந்நாட்டில் இருக்கிறது. இங்கிலாந்திலோ இந்தக் குடியரசின் மகத்தான தஸ்தாவேஜிக்கு இணையான எதுவும் கிடையாது. இந்தப் பிரகடனம் மக்களிடமிருந்துதான் தோன்றிற்று; மக்கள் யாவருக்கும் நலன் பயக்கும் முறையில் தயார் செய்யப்பட்டது. இந்தப் பிரகடனத்தில் ''மனிதர்களின், பிரஜைகளின் புனிதமான உரிமைகளை'' அசெம்பிளி ஒப்புக்கொள்ளுகிறது. ''மனிதர்கள் சுதந்திரத்துடன் பிறக்கிறுர்கள்; சுதந்திரமாக நீடித்து வாழ்கிறுர்கள். உரிமைகள் யாவருக்கும் சமமாக உண்டு'' எனவும், ''இயற்கையாகவும் வரையறுக்கப்படாததுமான மனித உரிமைகளை பேணிப் பாதுகாப்பதே அரசியல் ஸ்தாபனங்களின் நோக்கம்'' எனவும் பிரகடனம் வலியுறுத்துகிறது.

''மனித உரிமைகள்'' முதல் பகுதியில் அமெரிக்கச் சுதந்திரம் பெய்னின் சிந்தனையிலிருந்தாலும், அவருடைய வாதங்களில் அது நேரிடையாக இடம் பெறவில்லை. ஆனுல் அதன் இரண்டாம் பகுதியில் பர்க்கின் வாதத்தை எதிர்ப்பதற்கு அவ்வளவாக அவசியம் ஏற்படவில்லை; பிரிட்டிஷ் முடியாட்சிக் கொள்கைகளை மாய்க்கவேண்டிய அவசியம் இருந்தது. ஆதிகால ஜனநாயக அறிவுத் தெளிவுக்கு உதாரணமாக அமெரிக்காவைக் காட்டி பெய்ன் வாதம் புரிந்தார். இயற்கை யன்னை மட்டற்ற கருணையினுல் அமெரிக்காவையே ஜனநாயகம் வளர்வதற்கேற்ற இடமாகச் சமைத்தாள். விளக்கம் பெறுவதற்கு மனிதன் இயற்கையை நாடவேண்டும் என்பதைச் செயற்கையில் நம்பிக்கை உள்ள உலகத்திற்கு அமெரிக்கா நிரூபணம் செய்து

விட்டது. அமெரிக்காவை ஆதிகால எளிய ஜனநாயகத்திற்கு உதாரணமாகப் பெய்ன் காட்டுகிருர். மக்கள் தாங்களாகவே ஒன்றுகூடி நிர்வாகம் செய்யும் இந்த முறைதான் உண்மையான அரசாங்கத்தின் அடிப்படை என அவர் கருதுகிருர். ஆனுல், அமெரிக்கா பிரம்மாண்டமான நிலப்பரப்பாகையால் பிரதி நிதித்துவத்தின் துணையில்லையேல் அந்த எளிய ஜனநாயகம் செய லற்றுக்கிடக்கும். ஜனநாயகத்தின் மேல் பிரதிநிதித்துவத்தைப் பொருத்துவதனுல் எல்லா நிலப்பரப்பு, ஜனக்கூட்டம், பல்வேறு அக்கறைகள் யாவற்றையும் பிணைத்து ஒன்றுபடுத்தக்கூடிய அரசாங்கம் ஏற்படுகிறது. இந்தப் பிணைப்பின் மூலம் ''உரிமைப் பிரகடனம்'' ''சுதந்திரப் பிரகடனம்'' இவ்விரண்டிற்குமுள்ள ஒருமைப்பாட்டைப் பெய்ன் காண்கின்ருர்.

மனித உரிமைகள் முடியாட்சியை ஒழிப்பதில் மட்டும் கருத் துக்கொண்டதல்ல. பிரதிநிதித்துவ ஆட்சி மூலம் மக்கள் யாவருக் கும் நீதியும் இன்ப வாழ்க்கையும், கிட்டுவதற்கு வகை செய்யும் நோக்கம் கொண்டது. பெய்னின் இந்த நூல் பற்றிய இந்தச் சுருக்கமான ஆராய்ச்சியில் பாக்கியுள்ள இரண்டு விஷயங்களைப் பற்றி மட்டும் லேசாகக் குறிப்பிடலாம். இதன் இரண்டாவது பகுதியில் இங்கிலாந்து, பிரான்ஸ், அமெரிக்கா ஆகிய நாடுகளுக் குள் நேச உடன்பாடு ஏற்படக்கூடுமா என்பதுபற்றிப் பல பக்கங்கள் எழுதியிருக்கிருர். இந்த உடன்பாடு விரிவடைந்து எல்லா நாடுகளுக்குள் பரந்த ஒற்றுமை ஏற்படக்கூடும் என்பதை அப்பே ரெய்னுலுக்கு எழுதிய கடிதத்தில் சூசகமாகக் குறிப்பிட் டிருக்கிருர். இந்த நூல் முடிவடையும் தருவாயில் பெய்னின் சிந்தனையில் ஜீவகாருண்யப் போக்கும், அநுபவசாத்தியச் சாய லும் தென்படுவது குறிப்பிடத்தக்கது. ''மனித உரிமைகள்'' இரண்டு பகுதிகளிலும், எப்படி எண்ணற்ற வகைகளில் ஆங்கில நாட்டு மக்கள் மோசமான முறையில் ஆளப்பட்டு வந்திருக்கின் றனர், எப்படி எளியோரை வாட்டி பணக்காரர்களும் விசேஷ உரிமை உள்ளவர்களும் கொழுத்து வந்திருக்கின்றனர் என்பதை யும் எடுத்துக்காட்டி யிருக்கின்ருர். இந்த அநீதியை எப்படி அகற்ற முடியும் என்று கேட்கிருர் பெய்ன். முடியாட்சியையும் ஒழித்து இங்கிலாந்தின் நிதி நிலைமையையும் சீர்செய்தால் தான் முடியும் என அவரே பதில் கூறுகிருர். பிரபுத்துவ அடிப்படையில்

ஆட்சி நடத்துவதற்காகச் செலவிட்ட பணத்தைக் கொண்டு ஏழைகளுக்கும் உரிமையற்றோருக்கும் உதவிபுரியலாம் எனக் கூறுகிறார். ஜீவகாருண்ய ஆர்வத்துடன் இந்த நூலை முடிக்கையில் ''மிக மிக நுட்பமான நாணயத்துடன்தான் பொதுப் பணத்தைக் கையாளவேண்டும். அப்பணம் பணக்காரர் கொடுத்தது மட்டுமல்ல, ஏழைகளும், உழைப்பாளிகளும் கஷ்டப்பட்டுச் சம்பாதித்த பணத்தின் பகுதி. வறுமையிலும் துயரத்திலும் உழலுபவர்கள்கூடப் பணம் கொடுத்திருக்கின்றனர். தெருவில் போகிற பிச்சைக்காரன், நலிந்து தெருவில் மடிந்தவர்கள்கூடத் தங்கள் பங்கைச் செலுத்தி யிருக்கின்றனர்.'' ஏழைகளுக்குப் பண உதவி செய்வது அவர்கள் வாழ்க்கையை எளிதாகவும் இனிதாகவும் ஆக்குவது முதலியவற்றிற்கான வியக்தமான யோசனைகள்கூட அவர் கூறியிருக்கிறார். அந்த யோசனைகளில் சிலவற்றை இங்கு குறிப்பிடுவோம்.

எளியோர், வர்த்தகத்தில் சளைத்தவர்கள், மற்றும் அறுபது வயதானவர்கள் (இவர்கள் எழுபதாயிரம் பேர் இருக்கலாம்) ஒவ்வொருவருக்கும் வருடம் இருபது பவுன் வீதம் ஆயுள் பூராவும் 'பென்ஷன்' கொடுப்பது.

ஐம்பதாயிரம் குழந்தைகள் பிறப்பிற்கு ஒவ்வொன்றுக்கு இருபது ஷில்லிங் நன்கொடை.

இருபதாயிரம் திருமணங்களில் ஒவ்வொன்றுக்கும் இருபது ஷில்லிங் நன்கொடை.

லண்டன், வெஸ்ட் மினிஸ்டர் நகரங்களில் அகஸ்மாத்தாக ஏழ்மை நிலை அடைந்தவர்களுக்கு எப்போதும் வேலை அளிப்பது.

''மனித உரிமைகள்'' இரு பிரசுரங்களையும் ஏராளமாக மக்கள் படித்தனர். ஆங்கில சுதந்திர இயக்கத்தை வளர்க்கும் சங்கங்களைச் சேர்ந்தவர்களிடம் இந்தப் பிரசுரங்களுக்கு மிகுந்த கிராக்கி இருந்தது. ஆனல் அரசாங்கத்தார் அவர் மீது ராஜத்துரோகக் குற்றம் சாட்டி அவரை விசாரிப்பதற்கான தேதியும் குறித்தனர். அது எவ்வாறுயினும் பெய்ன் உடனே பிரான்ஸுக்குத் தப்பி ஓடினர். ஆனல் கோடைகாலத்தில் தன்மீது வழக்குத் தொடுத்தவர்களை வன்மையாகத் தாக்கி எழுதினர். இந்தத் துண்டுப் பிரசுரத்தின் தலைப்பு ''சமீபத்தில் வெளியான பிரகடனத்தைப் பற்றிப் பேசியவர்களுக்கு எழுதப்

பட்ட கடிதம்'' என்பதுதான். இந்தப் பிரசுரம் தான் ஆங்கில முடியாட்சியைத் தாக்கி எழுதிய கடைசிக் கடிதம். அதுவும் தான் எச்சமயமும் கைது செய்யப்படலாம் எனும் அபாயத்தை எதிர்நோக்கி இருக்கையில் எழுதப்பட்டது. ''மனித உரிமைகளில்'' ராஜத்துரோகத்தின் வித்தைக் காணலாம் எனில் இந்தக் கடிதம் ராஜத்துரோகமேயாகும். ''**பர்க்கின்** தாறுமாறான கற்பனைகள், திரித்துக் கூறப்பட்ட தகவல்கள்'' பற்றிக் கடைசியாகத் தாக்கி எழுதினர். இதை எழுதிவிட்டு பத்திரிகை சுதந்திரத்தை வற்புறுத்தியும் எழுதினர்.

பத்திரிகைகளுக்கு **பர்க்** புகழ்ந்த மாதிரி அரசாங்கத்தைப் புகழ மட்டும் சுதந்திரமிருக்குமானல் சில அரச தாசர்கள் ''புகழ்மிக்க அரசியலமைப்பு'' எனக் கூறுகிறார்களே அதைத் தாக்கிவைத்து எழுதமட்டும் உரிமை இருக்குமானல், அதன் தவறுகள், துஷ்பிரயோசனங்கள்பற்றி ஆராய சுதந்திரமில்லையானல், அரசியலமைப்பு உண்மையில் இருக்கிறதா இல்லையா என்றுகூடக் கூற முடியாதெனில் அந்த சுதந்திரம் ஸ்பெய்ன், துருக்கி, ரஷ்யாவிலிருக்கும் சுதந்திரம் போன்றது தான்.

இந்தக் கடிதத்தின் முக்கியமான அம்சம் பெய்ன் கூறும் ஒரு யோசனைதான். ஒரு தேசீய மாநாடு கூட்டி அதில் நாட்டு மக்களின் கருத்துக்களை ஒழுங்காகக் கேட்டறிந்துகொள்ள வேண்டும் என்பதுதான் அந்த யோசனை. ஆனல் ஆங்கில அரசாங்கம் அதை ஏற்கவில்லை.

முடியாட்சி பற்றி பெய்னின் கருத்துக்கள் பற்றிய ஆராய்ச்சியை முடிக்கு முன் மக்கள் மனத்தில் சம்பிரதாயம் எப்படி இடம் பெற்றிருக்கிறது என்பதை அவர் உணரவில்லை என்பதைக் குறிப்பிடவேண்டும். இந்த விஷயத்தில் அவர் இயற்கை உரிமை ஆதரவாளர்கள் பொதுவாகச் செய்த தவறையேதான் செய்தார். நியாயமான அரசியல் கொள்கைகளை மக்கள் மட்டும் உணர்ந்துகொண்டார்களானல் அவர்கள் அடக்கியாளும் ஆட்சி முறைகளை உதறித் தள்ளிவிடுவர் என அவரும் நினைத்தார். கற்பனை உலகத்தை எதிர்பார்த்துப் பொறுமையாகக் காத்திருக்கும் சில பதினெட்டாம் நூற்றாண்டு கனவு காண்பவர்கள் போலல்லாமல் பெய்ன் எதற்கும் உடனடியான பலனை விரும்பி

ஞர். ''மனித உரிமைகள்'' இரண்டாம் பாகத்தை **லபாயத்**திற்குச் சமர்ப்பணம் செய்கையில் ''நீங்கள் பதினான்கு அல்லது பதினைந்து வருடங்களில் கைகூடலாம் என நினைப்பதை நான் அதை விடக் குறைந்த காலத்தில் நிறைவேறலாம் எனக் கருதக் கூடும்'' எனப் பெய்ன் வெற்றிப் பெருமிதத்துடன் கூறுகிறார்.

IV

1787-இல் பெய்ன் பிரான்ஸுக்குப் போனதும் 1793-இல் அவர் லக்ஸம்பர் சிறையில் அடைபட்டிருந்ததற்கும் இடையிலுள்ள ஆண்டுகள் அவருக்கு உற்சாகமும் இன்பமும் நிறைந்தவை. இந்தக் காலத்தில் அவர் பன்முறை இங்கிலாந்துக்கும் பிரான்ஸுக்கும் சென்றுகொண்டிருந்தார். பிரான்ஸில் 1789 வரை அமெரிக்கத் தூதராயிருந்த **ஜெபர்ஸனுடன்** பேச அவருக்கு நிரம்ப சந்தர்ப்பம் இருந்தது. சீக்கிரத்தில் பிரஞ்சுப் புரட்சியின் ஆரம்ப கால சம்பவங்களை அவர் நேரில் கண்டார். அவர் லபாயத்துடன் அந்நியோன்யமாகப் பழகும் வாய்ப்புக் கிட்டியது. இந்த லபாயத்துதான் ''**பாஸ்டைல்**'' என்னும் பிரசித்தி பெற்ற சிறைக்கூடத்தின் சாவியைப் பெய்னுக்குக் கொடுத்து, அதை அவர் வாஷிங்டனுக்குப் பரிசாக அளித்தார். ''உரிமைப் பிரகடனம்'' தயார் செய்யப் பெய்ன் உதவிபுரிந்தார் என்று கூடக் கூறப்படுகிறது. சரித்திரம் உருப்பெறும் சந்தர்ப்பங்களில் பிரசன்னமாயிருக்க ஆவலுள்ள பெய்னுக்கு பிரஞ்சுப் புரட்சியில் சிறிதளவு பங்குகொள்ளச் சந்தர்ப்பம் கிடைத்தது. 1791-ஆம் ஆண்டு ஜூன் மாதம் லூயி மன்னன் தப்பியோட முயற்சித்தபோது பெய்ன் ''ஒரு குடியரசு அறிக்கை'' எழுதினார். இதில் அரசன் முடி துறந்ததைக் கண்டித்து மக்களை நீடித்துக் கிளர்ச்சி செய்யத் தூண்டியும் எழுதியிருந்தார். ''மனித உரிமைகள்'' இரண்டாம் பாகம் அடுத்த ஆண்டு பிரசுரிக்கப்பட விருந்தது. அதை எதிர்பார்த்திருக்கையில் அவர் தனது வழக்கமான முடியாட்சி எதிர்ப்புக் கருத்துக்களை அதில் சேர்த்தார். அதில் ''முன்னூறு லட்சம் பிராங்குகளை முட்டாள்தனமான ஆடம்பரத்தில் ஒரு மன்னனை வைத்திருக்க வீண் செலவு செய்வது... ..'' என எழுதியிருந்தார். பெய்னும், **டகாடலெட்டும்** பாரிஸிலுள்ள கட்டடங்களிலெல்லாம் இந்த

அறிக்கையை ஒட்டியதாகவும், அசெம்பிளி கூடும் கட்டடத் தலை வாயிலில் ஒரு பிரதியை ஆணி அறைந்து பதித்ததாகவும் கூறப் படுகிறது.

புரட்சியில் பெய்ன் பங்குகொண்ட இரண்டாம் பகுதி 1792-இல் தொடங்குகிறது. அதாவது, அவர் இங்கிலாந்திலிருந்து தப்பிச்சென்ற சமயம். இந்தப் பகுதி பெய்னுக்கு சங்கடம் மிக்க காலம். இந்த ஆண்டு தொடக்கத்தில் அசெம்பிளி அவருக்கு பிரஜா உரிமைப்பேறு அளித்தது. பின்னர் அவர் கன்வென்ஷனுக்குப் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்தக் கௌரவத்திற்கு நன்றி அளித்து அவர் நிகழ்த்திய சொற் பொழிவு அவருடைய நூல்கள் யாவும் அடங்கிய தொகுப்பில் இருக்கிறது. இந்தக் கௌரவங்களை நன்றியுடன் ஏற்றுக்கொள்ளு வதாகக் கூறிவிட்டு ஒரு புரட்சி (அமெரிக்கப் புரட்சி)யைத் தொடங்கி முடிவுறும் மட்டும் அதில் தான் பங்குகொண்டது பற்றி சகப்பிரஜைகளுக்கு ஞாபகப்படுத்தினர். ஆனல் சீக்கி ரத்தில் பிரஞ்சு அரசியல் சிக்கலில் அவர் மாட்டிக்கொண்டார். பிரஞ்சு மொழியில் அவருக்கு குறைவான ஞானமிருந்ததனுலும், அதையும்விட பிரஞ்சுக்காரரர் மனத்தைப் புரிந்துகொள்ள முடியாததனுலும் புரட்சியின் உட்கருத்தை அவரால் நன்கு புரிந்துகொள்ள முடியவில்லை. அவர் பெரிதும் **கிராண்டிஸ்டு** (Girondist) எனும் கட்சியுடனே தொடர்பு கொண்டார். இவரை இந்தக் கட்சியினர் தங்களது கையாளாகப் பயன்படுத் தியதாகப் பெய்னின் வாழ்க்கை வரலாற்றை எழுதியவர்கள் நம்புகின்றனர். அவர் ஆதரித்த பிற்போக்கான காரியங்களில் ஒன்று அரசர் உயிரை வாங்கவேண்டாம் என வற்புறுத்தியது தான். **ராபஸ்பியரும்** (Robespierre), **ஜேகோபின்களும்** (Jacobin) அதிகாரத்திற்கு வந்ததும் பெய்ன் அவர்களுக்கு வேண்டாதவ ராகிவிட்டார். இப்பொழுது அவர் அவ்வளவாக அடிக்கடி அசெம்பிளி கூட்டங்களுக்குச் செல்லுவதில்லை. 1793-ஆம் ஆண்டு இறுதிக்குள் அவர் சிறையிலடைக்கப்பட்டார். இந்தக் காலத்தில் பெரும் பகுதி அவர் கடுமையாக நோய்வாய்ப் பட்டிருந்தார். கடைசியாகப் பிரான்ஸுக்கு வந்த அமெரிக்கா வின் புதிய தூதர் **ஜேம்ஸ் மன்ரோ** பல ராஜதந்திர சூழ்ச்சிகள் செய்து அவர் விடுதலையடையும்படிச் செய்தார். இழந்த

ஆரோக்கியத்தைத் திரும்பப் பெற அவர் மன்ரோவின் இல்லத்தில் பதினெட்டு மாதங்கள் தங்கினார். 1795-இல் அச்சமயம் அரசியலமைப்பை ஏற்பதுபற்றிப் பிரஞ்சு தேசீய கன்வென்ஷன் யோசித்து வருகையில் பெய்ன் அதில் தனது ஸ்தானத்தை வகிக்க முயற்சித்தார். வோட்டுரிமைக்கு சொத்துரிமை யோக்கிய தாம்சம் வேண்டும் எனும் பகுதியை பெய்ன் ஏற்கவில்லை. கன்வென்ஷனில் தனக்கு பதிலாக யாராவது வாசிப்பதற்காக அவர் ஒரு பிரசங்கம் தயாரித்தார். இதை அங்கத்தினர்களிடையே விநியோகம் செய்ததாகத் தெரிகிறது. இந்தப் பிரசங்கம் 'அரசாங்கத்தின் முதல் தத்துவங்கள் பற்றிய விளக்கம்' எனும் தலைப்புடன் 1795-இல் பாரிஸில் பிரசுரம் செய்யப்பட்டது. இந்தப் பிரசங்கம் முழுதும் இப்பிரசுரத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது. இதில் பெய்னின் சிறப்பான அரசியல் சிந்தனைகள் யாவும் இடம் பெற்றுள்ளன. 'மனித உரிமைகளில்' அரசாங்கத்தைப்பற்றி அவரது சிறப்பான கருத்துக்கள் சுருக்கித் தரப்பட்டிருப்பதுடன் சம உரிமைக் கொள்கையைப்பற்றி வற்புறுத்திக் கூறுகிறார். ''பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதற்கான வோட்டுரிமையே பிற உரிமைகளைப் பாதுகாக்கின்றது'' என அவர் எழுதுகிறார்.

மன்ரோ வீட்டில் அவர் வசித்த காலம் துயரம் மிகுந்ததாக இருந்திருக்கவேண்டும். ஒருபுறம் உடல் கோளாறினால் தொந்தரவு; பிரான்ஸில் குடியரசு போதிய அளவு சீராக நடைபெறவில்லை என்கிற மனவருத்தமும் சேர்ந்து அவரது துயரத்தை வளர்த்தது. அமெரிக்காவிலும் எல்லாம் ஒழுங்காக நடந்துவிடவில்லை.

லக்ஸம்பர் சிறையில் தாம் வாடியதை பெய்ன் நினைத்துப் பார்த்ததும் முதலில் ஏமாற்றமும், பின்னர் உண்மையறிந்து மனக்கசப்பும் ஏற்பட்டது. இதெல்லாம் பிரான்ஸில் உள்ள அரசியல் வெறியர்களால் ஏற்படவில்லை. அமெரிக்காவில் இவரைக் கைவிட்ட ஒரு மனிதன்—ஜார்ஜ் வாஷிங்டனால் ஏற்பட்டது. அவரை ஆதரிப்பதற்காக 'நெருக்கடி' ஒன்பதாவது இதழை பெய்ன் எழுதினார். அச்சமயம் அவரைப்பற்றி அளவு கடந்து புகழுரையை வாரிக்கொட்டி அச்சிட்டார். 1796-இல் 'ஜார்ஜ் வாஷிங்டனுக்குக் கடிதம்' எழுதினார். இதை விருப்பு

வெறுப்பின்றி அமெரிக்கர் படிப்பது சற்று கடினம்தான். எனினும் உண்மையைத் தீர ஆராய்ந்து பார்த்தால் ஜனாதிபதி என்கிற முறையில் வாஷிங்டன், பெய்னின் சிறைவாசத்தை விசாரித்தறிந்து கொள்ளவில்லை என்றுதான் கூறவேண்டும். இங்கிதம் தெரியாது எழுதியது எனத்தான் கூறவேண்டும். எனினும் வாஷிங்டனுக்கு எழுதிய கடிதத்தில் முதன் முதலில் கூறியபடி, சமஷ்டி அரசியல் அமைப்பில் சில விஷயங்கள் அவருக்குப் பிடிக்காவிட்டாலும் ராஜ்யங்கள் ஒன்றுபட்டு சமஷ்டி அரசாங்கம் அமைக்கவேண்டும் என அவர் ஆதியிலே யிருந்து வற்புறுத்தி வந்திருக்கிறார் என்பதை நாம் அறிவோம். ஆகையால் உண்மையில் அவரைச் சமஷ்டி எதிர்ப்பாளர் எனக் கருதலாகாது. வாஷிங்டனும் அவரும் எதிரும் புதிருமாக இருந்தனர் என்றும் கூற முடியாது. ''அமெரிக்கப் புரட்சியில் நான் கொண்ட பங்கு யாவரும் அறிந்ததே'' என அவர் அழுத்தமாகக் கூறுகிறார். வெளிநாடுகளிலும் அவர் இடைவிடாது அமெரிக்காவை நினைத்துக்கொண்டே எழுதினார் என்பதும் வெளிப்படை. அவர் அமெரிக்காவைக் கைவிட்டதே யில்லை. பெய்னின் நலிவுக்கு அரசியல் வாதி வாஷிங்டனே காரணம். வாஷிங்டனைக் கடிதத்தில் கண்டித்திருந்தது சொந்த வெறுப்பினால் எழுதப் பட்டதுபோல் தொனித்தது. ''ஜனாதிபதி பீடத்திற்கு உயர்த்தப்பட்டு எல்லாவற்றையும் நீங்களே சாதித்துவிட்டதுபோல் பாவித்து உங்களுடைய நன்றிகெட்ட தன்மையைக் காட்டிக் கொண்டுவிட்டீர்கள்'' என எழுதியுள்ளார். ''எனது சிறைவாசத்தைப் பற்றிக் கேட்டதும் அதுபற்றி விசாரித்திருக்க வேண்டியது அமெரிக்க நிர்வாகத்தினர் கடமை'' எனவும் அவர் எழுதியிருக்கிறார்.

V

பதினெட்டாம் நூற்றாண்டு இறுதியில் இங்கிலாந்து பிரான்ஸ் நாடுகளின் அரசியல் அபிவிருத்திக்குத் தான் ஒன்றும் செய்ய இயலாது என்பதை பெய்ன் அறிந்து கொண்டுவிட்டார் என அநுமானம் செய்வது நியாயமே. அவர் மீண்டும் அமெரிக்காவைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கினார். ஜனாதிபதி பதவிக்கு ஜெபர்ஸன் குடியரசுக் கட்சி அபேட்சகராயிருக்கையில் தன்னை அரசாங்கக்

கப்பல் மூலம் அமெரிக்கா திரும்ப அநுமதியளிக்க வேண்டும் என அவருக்கு எழுதினர். தான் தேர்ந்தெடுக்கப்பட்டதும் ஒரு சுமுகமான கடிதத்தின் மூலம் 'மேரிலாண்டு' எனும் யுத்தக் கப்பலில் பெய்ன் திரும்பலாம் என **ஜெபர்ஸன்** எழுதினர். மேலும் ஜனுதிபதி : ''பழங்காலத்தில் கொண்ட புகழ்பெற்ற கருத்துக்களை மக்கள் மீண்டும் தாங்குவதை நீங்கள் பார்க்கக்கூடும். இந்த நிலை ஏற்பட இடைவிடாது உழைத்த பெருமை உங்களைச் சார்வதுடன், இன்று உயிர் வாழ்பவர்கள் யாரையும்விடப் பயனுள்ள முறையில் நீங்கள் பணிபுரிந்திருக்கிறீர்கள். இதனுல் உங்கள் புகழ் ஓங்கி நிற்கும். நீங்கள் நீண்ட காலம் வாழ்ந்து உங்கள் பணியின் பயனை மக்களின் நன்றியின் மூலம் பெறவேண்டும் என்பதே என் பிரார்த்தனை''. என்று அக்கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார். 1801-ஆம் ஆண்டு பிற்பகுதியில் தேர்தலில் வெற்றி பெற்றது பற்றி ஜெபர்ஸனைப் பாராட்டினுர். ஆனுல் 'மேரிலாண்டு' கப்பலில் திரும்பிச் செல்ல மறுத்துவிட்டார். அடுத்த ஆண்டு செப்டம்பரில் பெய்ன் பால்டிமூர் வந்து சேர்ந்தார். 'அறிவு சகாப்த'த்தில் (Age of Reason) (1794-96) அநுஷ்டான பூர்வமான மதத்தைத் தாக்கி எழுதியதனுலும் வாஷிங்டனை அவதூறு செய்து எழுதிய கடிதத்தினுலும் அவர் திரும்பியதும் மக்கள் அவரைப் பெரிதும் வெறுத்தனர், அவமதித்தனர். சிலகாலம் **ஜெபர்ஸன்**கூடத் தன்னை அலட்சியம் செய்ததாக பெய்ன் நினைத்தார். ஆனுல் அவரிடம் தனது நட்பையும், பாராட்டுதலையும் தெரிவித்து **ஜெபர்ஸன்** உறுதி கூறினுர். ஜெபர்ஸன் தவிர **ராபர்ட் புல்டன்**, ஓவியர் **ஜான் வெஸ்லி ஜார்விஸ்** போன்றவர்கள் அவருடைய ஆப்த நண்பர்களாயினர். ஐந்து மாத காலத்திற்கு பெய்ன் இந்த ஓவிய நண்பர் வீட்டிலேயே தங்கினுர்.

ஜெபர்ஸனின் நிர்வாகத்தின்போது பெய்ன் எழுதிய குறிப்பிடத்தக்க அரசியல் கட்டுரைகள் அவர் வெளியிட்ட எட்டு பகிரங்கக் கடிதங்கள்தான். அவைகளை 1802, 1803, 1805-இல் எழுதினுர். ''ஐக்கிய நாடுகளின் பிரஜைகளுக்கு'' என்பதே அவைகளின் தலைப்பு. கோர்வை இல்லாமலும், சீராக அமையாமலும் இந்தக் கடிதங்கள் இருப்பினும் எதிர்க்கட்சியைச் சமாளிப்பதில் **ஜெபர்ஸனு**க்கு உதவிபுரியவே அவை எழுதப்பட்டவை

என்பது தெளிவு. சமஷ்டிவாதி எனில் எல்லா ராஜ்யங்களும் ஒற்றுமையாக யாவற்றையும் சமமாக பாவித்து நடத்தும் அரசாங்கம் அமைத்துப் பொதுநலனைப் பாதுகாப்பவன் எனில் நான் ஒரு சமஷ்டிவாதிதான் என அவர் இன்னமும் வாதாடினர். **சமஷ்டிவாதம்** எனும் பெயரை மோசடியாகப் பூண்டு விளங்கிய தலைவர்கள்பற்றி அவர் மிகுதியாக எழுதினர். அமெரிக்காவிலும் பயங்கர ஆட்சி நடந்தது—''வாஷிங்டன் ஆட்சியின் பிற்பகுதியும் **ஆடம்ஸின்** நிர்வாக காலமும்'' எனப் பெய்ன் கூறுகிறர். ஜெபர்ஸன் மறு தேர்தலில் வெற்றிபெற்ற தற்கு இக்கடிதங்கள் உதவிபுரிந்தன என்பதில் சந்தேகமில்லை.

பிற கட்டுரைகளும் கடிதங்களும் அநேகம் எழுதி பெய்ன் குடியரசுக் கட்சியை ஆதரித்தார். ''சமஷ்டிவாதிகள் தங்கள் கொள்கைகளை வெளியிடும்படி அறைகூவல்'' என்பது இக்கடிதங்களில் ஒன்று. ''குடியரசுவாதிகளின் கொள்கைகள் யாவரும் அறிந்தவை, மறுக்கமுடியாதவை'' என இந்தக் கடிதத்தில் அழுத்தமாகக் கூறுகிருர். அதாவது, ''ஆதிபத்தியம் பரந்த மக்கள் குலத்திடமிருக்கிறது. அவர்கள் தேர்ந்தெடுக்கும் பிரதிநிதிகள் அந்த ஆதிபத்தியத்தின் பிரதிநிதிகள்; ஆனல் சமஷ்டிவாதிகள், கொள்கையற்றவர்கள்; உளறிக் கொட்டுபவர்கள் . . . . அல்லது வெளியிட்டுக் கூற முடியாதபடி அவர்கள் கொள்கைகள் மோசமானவை''. ''சமஷ்டிக் கும்பலின் முரண்பாடுகள், முன் சொன்னதைப் பின் மறுப்பது, பொய்கள்—இவைகளை எண்ணமுடியாது''; ''முடியுமானல் சமஷ்டிவாதிகள் அவர்களது கொள்கைகளை வெளியிடட்டும்.''

பயங்கர ஆட்சி பற்றி பெய்ன் எழுதியதை என்னவென்று சொல்லுவது. லக்ஸம்பர் சிறைவாசத்திற்குப்பின், வாஷிங்டன் அவரைக் கைவிட்டபின் பெய்ன் புதிய மனிதராகிவிட்டார். ஆகையால் பயங்கர ஆட்சிபற்றி அளவுகடந்து மிகைபடுத்தி விட்டார். சுதந்திரத்தின் இனிய சூழ்நிலையில் வாழ்ந்து பழக்கப் பட்டவராயினும் அவர் மிகமிக அவலமான முறையில் இறந்தார். 'சாமானிய அறிவு' எழுதுகையில், தான் எந்த அரசியல் கட்சியையும் சேர்ந்தவனல்ல என அடித்துக் கூறினர். மற்றொரு இடத்தில் தன்னை 'ஓர் உலகப் பிரஜை'யாக வர்ணித்திருக்கிருர். ஆனல் அவருடைய முதுமைப் பிராயத்தில் வருந்தத்தக்க அளவு

கட்சி ஆர்வமுள்ளவராகிவிட்டார். இச்சமயம் தனது என்று சொல்லக்கூடிய நாடில்லாதவராகப் போய்விட்டார். ஜெபர்ஸனின் ஆப்த சிநேகம்கூட மக்கள் அவர்பால் அன்பு செலுத்தும்படி செய்யவில்லை. மனம் கசந்து ஏமாற்றமடைந்து அவர் மரணமடைந்தார்.

ஆனுல் இது தாமஸ் பெய்னைப்பற்றிய நமது முடிவான மதிப்பீடா யிருத்தலாகாது. மேதைகளுக்கு இயல்பாயுள்ள மனித இனக் குறைபாடுகள் இருந்தாலும், அவர்கள் பிறந்த காலத்தை மங்கா ஒளிவீசச் செய்த ஜீவகாருண்யம் மிக்க அபூர் வப் பிறவிகளில் ஒருவர் தாமஸ் பெய்ன் என்பதை நிரூபித் திருப்பதாக நம்புகிறேம். ''அரசியல் சுதந்திரத்தின் தேவதூதர், அமெரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ் முதலிய நாடுகளின் பாமர மக்களின் சார்பாகப் பேசும் பெரியோன்'' என அவரை ஞாபகத் தில் வையுங்கள்.

நெல்ஸன் எப். ஆட்கின்ஸ்

தாமஸ் பெய்ன்

வாழ்க்கை வரலாறு

பஞ்சு மெத்தையில் படுத்தவாறு உலகம் உய்வதற்கான உயரிய கொள்கைகளை வகுத்தவர்கள் அநேகர். அக் கொள்கைகளை வாழ்க்கைக்குப் பயன்படுத்தினால் எள்ளத்தனை நன்மையும் ஏற்படாது. ஆனால் சிக்கல்கள் நிறையலாம். ஆசிரியர் தாமஸ் பெய்ன் இந்தக் கூட்டத்தைச் சேர்ந்தவரல்ல; வாழ்க்கையில் மிகுந்த கஷ்டங்களை அநுபவித்தவர்; அரசியல் கொடுங் கோன்மையினால் அல்லலுற்ற மக்களின் துன்பங்களை நேரில் பார்த்து மனம் நொந்தவர். மக்கள் கஷ்டம் நீங்கிச் சுதந்திரச் சுகவாழ்வு வாழ்வதற்கு வழி என்ன என்பதை ஆராய்ந்து தனது அநுபவத்திலிருந்தே அவைகளுக்கு முடிவு கண்டவர். அம் முடிவுகளே இந் நூலில் அடங்கிய கட்டுரைகள் மூலம் வெளியிடப்பட்டுள்ளன.

இக் கட்டுரைகளில் பொதிந்து கிடக்கும் ஆழ்ந்த கருத்துக்களைப் படிக்கு முன் அவருடைய வாழ்க்கை வரலாற்றை அறிந்து கொண்டோமானால் அவர்தம் உரைகளின் பொருளை நன்கு புரிந்துகொண்டு மனத்தில் பதியவைத்துக்கொள்ளச் சுலபமாயிருக்கும்.

பெய்ன் 18-ஆம் நூற்றாண்டில் பிறந்து 19-ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் மறைந்தார்; அமெரிக்கப் புரட்சியின் வெற்றிக்கு உடனிருந்து உழைத்தார்; சுதந்திரத்திற்குப் பின் நிலையான, அமைதியான சுதந்திர ஜனநாயக ஆட்சி அமெரிக்காவில் அமைய உதவிபுரிந்தார்; பிரஞ்சுப் புரட்சியிலும் பங்கு கொண்டு பணியாற்றினார். இவ்வளவு அநுபவங்களின் விளைவாக அவர் மனத்தில் உதித்த கருத்துக்கள் தீவிரவாதமும் புரட்சிகரப் போக்கும் மேலோங்கியிருக்கும் இந்நாட்களிலேயும் மிகத் தீவிரமானவை என்று கருதக்கூடியதாய் அமைந்திருப்பதிலிருந்து ஆசிரியர் பெய்னின் அறிவுத்திறனையும், தீர்க்க தரிசனத்தையும் நன்கு புரிந்துகொள்ளலாம்.

இனி அவரது வாழ்க்கையைக் கவனிப்போம்.

1737 ஜனவரி இருபத்தொன்பதாம் தேதியன்று இங்கிலாந்தில் **நார்போக்** பகுதியில் **தெட்போர்டு** என்னுமிடத்தில் **தாமஸ்**

பெய்ன் பிறந்தார். அவருடைய ஆரம்பக் கல்வி தெட்போர்டு இலக்கணப் பள்ளியில் நடந்தது.

1750-இலிருந்து 1774 வரை அவருடைய தந்தை தனது கப்பல், பாய்மரக் கயிறு தயாரிப்பு வேலையில் அவரை ஈடுபடுத்திவந்தார். ஒரு தனிப்பட்டவர் கப்பலில் சில காலம் மாலுமியாக வேலை செய்தார்; சிறிது காலம் பள்ளி உபாத்தியாயராகப் பணியாற்றினர்; அரசாங்கக் கலால் இலாகாவில் வரி வசூலிப்பவராயிருந்து, பின்னர் நீக்கப்பட்டு, மீண்டும் பதவி பெற்றுர்; சம்பள உயர்வு கோரி கிளர்ச்சி செய்ததற்காக மீண்டும் பதவியிலிருந்து நீக்கப்பட்டார்.

1759-இல் பெய்னுக்குத் திருமணம் நடந்தது.

1760-இல் மனைவி காலமானுர்.

1771-இல் மீண்டும் திருமணம் செய்துகொண்டார்.

1774-இல் இரண்டாவது மனைவியிடமிருந்து பிரிந்தார்.

கடன்கள் அதிகமாகி அவைகளைத் திருப்பித்தர முடியாததனுல் இன்ஸால்வெண்ட் ஆனுர்; **பெஞ்சமின் பிராங்க்லின்** எனும் அமெரிக்கப் பெரியாரைச் சந்தித்து அவரிடமிருந்து அவர் மருமகன் **ரிச்சர்டு பேக்குக்கு** சிபார்சுக் கடிதம் பெற்று, இங்கிலாந்திலிருந்து அமெரிக்கா சென்றுர்.

1775 மார்ச் எட்டாம் தேதி ''அமெரிக்காவில் ஆப்ரிக்கர் அடிமை'' எனும் நூலை வெளியிட்டார்; நீக்ரோக்களை அமெரிக்கர் அடிமைகளாக நடத்தியதைக் கண்டித்து இதில் எழுதியிருந்தார். இதன் விளைவாக **பெஞ்சமின் ரஷ்** போன்றோரின் நட்பு அவருக்குக் கிடைத்தது.

1775 அக்டோபர் பதினெட்டில் **பென்ஸில்வேனியா ஜர்னல்** எனும் சஞ்சிகையில் அமெரிக்கக் காலனிகளின் சுதந்திரத்தை ஆதரித்து எழுதினுர். இக்கட்டுரையின் தலைப்பு ''சீரிய சிந்தனை''. இது தவிர பிற பத்திரிகைகளுக்கும் எழுதிவந்தார். 18 மாத காலம் **பென்ஸில்வேனியா மாகஸின்** எனும் பத்திரிகையின் ஆசிரியராயிருந்தார்.

1776 ஜனவரி பத்தாம் தேதி ''காமன் ஸென்ஸ்'' (சாமானிய அறிவு) எனும் துண்டுப் பிரசுரம் வெளியாயிற்று. (இந்தத் தொகுப்பில் வந்துள்ள முதல் கட்டுரை).

நாட்டுப் படையில் ஜெனரல் **கிரீனுக்கு** மெய்க்காப்பாள ராகப் பணிபுரிந்தார்.

1776-ஆம் ஆண்டு டிசம்பர் பத்தொன்பதாம் தேதியன்று **அமெரிக்க நெருக்கடி** எனும் தலைப்பில் முதல் பிரசுரம் வெளி யாயிற்று (இதில் 1-ம், 13-ம் இந்தத் தொகுப்பில் சேர்க்கப்பட் டுள்ளன). இந்தத் தொடரில் ''அளவுக்கு மிஞ்சிய நெருக்கடி'' எனும் பிரசுரம் 1783 டிசம்பர் ஒன்பதாம் தேதியன்று பிரசுர மாயிற்று.

1777-79-இல் அமெரிக்க காங்கிரஸின் (சட்டசபை) அயல் நாட்டு விவகாரக் கமிட்டியின் காரியதரிசியாகப் பதவி வகித்தார்.

சைலாஸ் டீன் (Silas Deane) என்பவருடன் நடந்த விவா தத்தில் பெய்ன் ரகசியமாயிருந்த விஷயங்களை வெளியிட்டதால் பதவியிலிருந்து விலக்கப்பட்டார்.

1779-80-இல் பென்ஸில்வேனியா அசெம்பிளியின் நிர்வாகப் பகுதியில் குமாஸ்தாவாகப் பதவி வகித்தார்.

1780-இல் பென்ஸில்வேனியா பல்கலைக் கழகத்தினர் இவருக்கு எம். ஏ. பட்டம் வழங்கினர்.

இதே ஆண்டில் வட அமெரிக்க பாங்க் அமைக்க உதவி புரிந்தார்.

இவ்வாண்டு டிசம்பர் முப்பதில் **பொது நலம் (Public Good)** எனும் தலைப்பில் துண்டுப்பிரசுரம் வெளியிட்டார்; அமெரிக்க ஐக்கிய ராஜ்யத்தின் ஒரு பகுதியை வர்ஜீனியா மாகாணம் கோரியதை ஆட்சேபித்து இதில் எழுதியிருந்தார்.

1781-இல் அமெரிக்காவிற்கு பிரஞ்சு உதவி கோருவதற்காக கர்னல் **ஜான் லாரன்ஸு**டன் பிரான்ஸுக்குச் சென்றார்.

1782-83 டிசம்பரிலிருந்து பிப்ரவரி வரை **பிராவிடன்ஸ் கெஜட்** எனும் சஞ்சிகையில் ஆறு கடிதங்கள் எழுதினார். இறக்குமதி செய்யப்பட்ட சரக்குகளுக்கு ஐந்து சதம் வரி விதித்து காங்கிரஸ் நிறைவேற்றிய சட்டத்தை **ரோடி தீவு** மக்கள் அங் கீகரிக்குமாறு இக் கடிதங்கள் மூலம் வேண்டிக்கொண்டார்.

1786-இல் **அரசாங்கம் பற்றி விளக்க உரைகள், பாங்க் விவகாரங்கள், காகித நாணயம்** முதலியவை பிரசுர மாயின. 1780-இல் பெய்னின் உதவியால் நிறுவப்பட்ட

பாங்கை ஆதரித்தும், காகித நாணயங்கள் வெளியிடுவதை எதிர்த்தும் இப்பிரசுரங்கள் எழுதப்பட்டன.

1787-இல் ஒரே வளைவுள்ள இரும்புப்பாலம் அமைப்பதற்கு ஆதரவு தேட பிரான்ஸ் சென்றார். பிரான்ஸில் **ஜெபர்ஸ னுடன்** அதிகம் பழகலானார். ஆகஸ்ட் முப்பதாம் தேதி இங்கிலாந்திற்குச் சென்று தனது அன்னையைத் தரிசித்தார். **பிராஸ்பெக்ட்ஸ் ஆன் தி ரூபிகன்** (Prospects on the Rubicon) எனும் நூலை வெளியிட்டார். ஜெபர்ஸனுடன் கடிதப் போக்குவரத்து நடத்தினார் இக்காலத்தில்.

1789 செப்டம்பரிலிருந்து 1790 மார்ச் வரை பாரீஸ் வாசம். இங்கே, ''மனித, பிரஜா உரிமைகள் பிரகடன''த்தைத் தயாரித்தார்.

1791 பிப்ரவரியில் **மனித உரிமைகள்** (Rights of Man) முதல் பாகம் வெளியாயிற்று. (இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளது.) இதன் பிரஞ்சு மொழிபெயர்ப்பு மே மாதம் பிரசுரமாயிற்று. ஜூலை முதல் தேதி பெய்னும், அகில்லே டெகாடலே (Achille Duchatelet)யும் பிரஞ்சு சட்டசபைக் கதவின் மீது ''முடியாட்சி ஒழிக'' எனும் ஒரு குடியரசு அறிக்கையை ஒட்டினர். ''குடியரசு சமுதாயம்'' எனும் சபை அமைத்தார். **குடியரசுவாதி** எனும் பத்திரிகையைத் தொடங்கினார். ஆகஸ்ட் மாதத்தில் ''எங்கும் சமாதானமும் சுதந்திரமும் நிலவுக'' எனும் பிரசுரம் வெளியிட்டார்.

1792 பிப்ரவரி மாதத்தில் இங்கிலாந்தில் **மனித உரிமைகள்** (Rights of Man) இரண்டாம் பாகம் பிரசுரமாயிற்று. (இந்தத் தொகுப்பில் இக்கட்டுரை சேர்க்கப்பட்டிருக்கிறது.) இந்தப் பிரசுரத்தின் விளைவாக ஜூன் மாதம் எட்டாம் தேதி ராஜத் துரோகக் குற்றம் சாட்டப்பட்டு டிசம்பர் மாதம் விசாரணைக்குத் தேதி குறிப்பிடப்பட்டது.

''சமீபத்தில் பிரகடனம் வெளியிட்டோருக்கு அனுப்பப்பட்ட கடிதம்'' எனும் தலைப்பில் பிரிட்டிஷ் பொது மக்களை உடனடியாகக் குடியரசு அமைக்கும்படி வேண்டினார். செப்டம்பர் பன்னிரண்டாம் தேதியன்று ''சுதந்திர நண்பர்கள்'' சங்கத்தில் புரட்சிகரமான பிரசங்கம் செய்துவிட்டு பிரான்ஸுக்குத் தப்பியோடினார். செப்டம்பர் பத்தொன்பதாம் தேதி பாரிஸ் வந்

தடைந்தார். பாரிஸ் வந்ததும் அரசியலமைப்புக் கன்வென் ஷனில் அங்கம் வகித்தார்.

மனித உரிமைகள், பிரிட்டிஷ் பொதுமக்களுக்கு வேண்டுகோள்'' எனும் இரு பிரசுரங்களின் விளைவாக பிரிட்ட னெங்கும் பெய்னின் கொடும்பாவி எரிக்கப்பட்டது. டிசம்பர் பதினெட்டாம் தேதி பிரிட்டிஷ் அரசாங்கம் அவரை நாடு கடத்தி உத்தரவு பிறப்பித்தது.

1793-இல் பிரான்ஸின் அரசியலமைப்பைத் தயாரிப்பதற்கு நியமிக்கப்பட்ட ஒன்பது பேர் அடங்கிய கமிட்டியில் பெய்ன் இடம் பெற்ருர். ஆனுல் இந்தக் கமிட்டி தயாரித்த நகல் திட்டம் அங்கீகரிக்கப்படவில்லே.

பிரஞ்சு மன்னர் 16-வது லூயியைத் தூக்கிலிடலாகாது எனப் பெய்ன் வாதித்ததனுல் புரட்சிவாதிகளடங்கிய ஜேகபின் களின் எதிர்ப்புக்குள்ளானுர்.

டிசம்பரில் கைது செய்யப்பட்டு 1794 நவம்பர் வரையில் லக்ஸம்பர் சிறையில் இருந்தார். இவர் ஓர் ஆங்கிலேயர் எனக் கூறி தண்டிக்கப்பட்டார்.

1794-ல் பாரிஸ், லண்டன், நியூயார்க் மூன்று நகரங்களி லும் **அறிவு சகாப்தம்** (Age of Reason) எனும் புத்தகம் பிரசுரமாயிற்று. பிரான்ஸில் அமெரிக்க தூதராயிருந்த ஜேம்ஸ் மன்ருேவின் முயற்சியினுல் நவம்பர் மாதத்தில் விடுதலே பெற்ருர். பெய்ன் ஓர் அமெரிக்கப் பிரஜை எனும் காரணத்தினுல்தான் விடுதலே செய்யப்பட்டார். பதினெட்டு மாத காலம் சிறை வாசத்தில் நலிந்த உடல் சீர்படுவதற்காக ஒன்றரை வருடம் மன்ருேவின் இல்லத்தில் ஓய்வுபெற்ருர்.

1795-இல் மீண்டும் பிரஞ்சு கன்வென்ஷனில் சேர்த்துக் கொள்ளப்பட்டார். ''அரசாங்க அமைப்பு அடிப்படைக் கொள்கைகள் பற்றி விளக்க உரை'' (Dissertation on first principles of Government) எனும் நூலே வெளியிட்டார். (இது இத்தொகுப்பில் கடைசிக் கட்டுரை.)

1796-இல் **அறிவு சகாப்தம்** (Age of Reason) இரண்டாம் பாகத்தை வெளியிட்டார். **ஆங்கில நீதி முறையின் நலிவும் தாழ்ச்சியும், வாஷிங்டனுக்குக் கடிதம்** இரண்டும் வெளியிடப் பட்டன. (ஆதியில் பெய்ன் வாஷிங்டனேப் புகழ்ந்தார்.

ஆனால் பிரஞ்சு சிறைவாசத்தின்பொழுது தன்னை விடுதலை செய்ய அவர் முயற்சி செய்யவில்லை என மனம் கசந்து அவருக்குப் பெய்ன் கடிதம் எழுதினார்.)

1797-இல் **விவசாயிகளுக்கு நியாயம், பரோபகாரிகளுக்கு உபதேசம்** எனும் இரு நூல்கள் வெளியிடப்பட்டன.

1802-இல் ஜெபர்ஸன் (பின்னர் அமெரிக்க ஜனாதிபதியாக வந்தவர்) உதவிபுரிவதாய் வாக்களித்ததற்கிணங்க பெய்ன் அமெரிக்கா திரும்பினார். ''சமஷ்டிவாதிகள்'' எனும் கட்சியினரைத் தாக்கி **ஐக்கிய அமெரிக்க நாட்டுப் பிரஜைகளுக்குக் கடிதம்** எனும் தலைப்பில் கடிதங்கள் எழுதினார்.

1809 ஜூன் எட்டாம் தேதி பெய்ன் மரணமடைந்து நியூயார்க் நியூராஷேவில் அடக்கம் செய்யப்பட்டார்.

சாமானிய அறிவு

ஆசிரியரின் அறிமுகம்

பின்வரும் பக்கங்களில் காணும் கருத்துக்கள், யாவரும் ஏற்றுக்கொள்ளும்படி அவ்வளவாக தற்காலத் தோரணைக்கு ஒவ்வாததாயிருக்கலாம். ஒரு விஷயத்தைத் தவறு என்று நீண்டகாலம் நினைக்காமலிருந்துவிட்டால் அது சரியென்று மேல்பூச்சுக்குத் தோன்ற ஆரம்பித்துவிடுகிறது. இதிலிருந்து பழக்கத்தை ஆரவாரத்துடன் ஆதரிக்கத் தொடங்கிவிடுகின்றனர். ஆனால் ஆரவாரம் அடங்கியதும் காலக்கிரமத்தில் அறிவு தெளிந்து பெரும்பாலானவர்களைச் சரியான வழிக்குத் திருப்பி விடுகிறது.

அதிகாரத்தை நீண்ட காலத்திற்கு விடாப்பிடியாக வகித்து வருவதே அதிகாரம் செலுத்துவோர் உரிமையை ஆட்சேபிப்பதற்குக் காரணமாகிறது. அதிகாரத்திற்குட்பட்டு அல்லலுறுபவர்கள் அதிகாரத்தின் மூலத்தை ஆராயத் தொடங்குகின்றனர். ஆங்கில நாட்டரசர் **தனது சொந்த அதிகாரத்தைக்** கொண்டு பார்லிமெண்ட் **அதன் அதிகாரங்களை** உபயோகிப்பதற்கு ஆதரவளிப்பதாலும், அரசரும் பார்லிமெண்டும் ஒன்றுசேர்ந்து செயல்புரிவதன் விளைவாக இந்நாட்டு (அமெரிக்கா) மக்கள் மிகுந்த கஷ்டத்திற்குள்ளாவதாலும், இவ்விருவரின் அதிகார மோசடிபற்றியும், யாருடைய ஆதரவுமின்றி தாங்களே அதிகாரத்தை மேற்கொண்டதுபற்றியும் ஆராய அவர்களுக்கு நிராட்சேபனையான உரிமை உண்டு.

பின்வரும் பக்கங்களில் நம்முடைய சொந்த விருப்பு வெறுப்புக்களுக்கு இடமளிக்கவில்லை. தனிப்பட்டவர்களைப் புகழ்வதோ இகழ்வதோ இந்தப் பிரசுரத்தின் நோக்கமல்ல. அறிவாளிகளுக்கும் தகுதி மிக்கவர்களுக்கும் இந்தப் பிரசுரத்தின் ஆதரவு தேவையில்லை; தவறான கருத்துள்ளவர்கள், அன்பு மனப்பான்மையற்றவர்கள் சக்தியற்று தாங்களாகவே மறைந்துவிடுவார்கள். அவர்கள் மனத்தை மாற்ற விசேஷ முயற்சி தேவையில்லை.

அமெரிக்காவின் நலனே பெரிதும் உலக நலனுகும். குறிப்பிட்ட ஒரு பகுதியின் நலனின்மை, உலகத்தார் நலனைப் பாதிக்கும் சந்தர்ப்பங்கள் பலவற்றை ஏற்படுத்தி அவைகளின் விளைவாக உலக அபிமானமுள்ளவர்களின் கொள்கைகள் பாதிக்கப்பட்டு அவர்களுடைய ஆசாபாசங்கள் சிதைவுறலாம். வாட்போர் புரிந்து தீயிட்டுக் கொளுத்தி ஒரு நாட்டை அழிப்பதும், உலக மக்களின் இயற்கை உரிமைகளை எதிர்த்துப் போர் தொடுப்பதும், மனித உரிமைகளைப் பாதுகாப்போர்களை உலகத்தை விட்டு ஒழிக்க முற்படுவதும் கண்டு ஒவ்வொரு மனிதனையும் கலங்கச் செய்யும் உள்ள நெகிழ்ச்சிப் பான்மையை இயற்கை அன்னை ஒவ்வொருவருக்கும் ஈந்திருக்கிருள். இதில் கட்சி வித்தியாசத்திற்கு இடமே கிடையாது. இவ்வாறு உலக நலனில் உள்ளம் ஒன்றியவர்களில் ஒருவரான

— **ஆசிரியர்.**

சாமானிய அறிவு

அமெரிக்க மக்களுக்காக எழுதப்பட்டது

[ஆட்சி முறை பொதுவாகத் தோன்றிய விதமும், அதன் அமைப்பும், குறிப்பாக ஆங்கில அரசியல் அமைப்புப் பற்றி சுருக்கமான பொருள் செறிந்த விமர்சனமும்.]

சமூகத்திற்கும் ஆட்சிக்கும் உள்ள மாறுபாட்டை அறியாமல், சில எழுத்தாளர்கள் குழப்பமடைந்திருக்கின்றனர். இவ்விரண்டிற்கும் வித்தியாசமே இல்லை போல் எழுதிவந்திருக்கின்றனர். இவ்விரண்டும் ஒன்றுக்கொன்று மாறுபட்டது என்பது மட்டுமல்ல, அவைகளின் தோற்றுவாயிலும் வித்தியாசம் இருக்கிறது. நமது தேவைகளின் விளைவாக சமூகம் தோன்றிற்று. நமது தீய குணங்களின் விளைவாக அரசாங்கம் ஏற்பட்டது; நமது ஆசாபாசங்களை ஒன்றுபடுத்துவதன் மூலம் சமூகம் நமது இன்ப வாழ்க்கைக்கு நேரடியாக உதவிபுரிகின்றது. ஆனல் நமது தீய குணங்களைத் தடை செய்வதன் மூலம் அரசாங்கம்

நமக்கு உதவி புரிகின்றது. சமூகம் அதன் உறுப்பினர்களின் கூட்டுறவிற்கு ஆதரவளிக்கின்றது. ஆனல் அரசாங்கம் மாறுபாடுகளைப் பெருக்குகின்றது. சமூகம் நமது போஷகர்; அரசாங்கம் நம்மைத் தண்டிக்கும் ஸ்தாபனம்.

ஒவ்வொரு ராஜ்யத்திலும் சமூகம் ஒரு வரப்பிரசாதம். ஆனல் சிறந்த ராஜ்யத்திலும் அரசாங்கம் தவிர்க்க முடியாத தீமை. மோசமான ராஜ்யத்தில் அது சகிக்க வொண்ணுத தீமை. **ஆட்சியே இல்லாத** நாட்டில் நாம் எதிர்பார்க்கக் கூடிய தீமைகளுக்கு **ஆட்சியுள்ள** இடத்தில் நாம் உட்பட நேரிட்டால், அது நாமே தருவித்துக்கொண்ட தீமை யென்ற எண்ணத்தினல் நாம் அதிகப்படியான சங்கடத்திற்குள்ளா கிறோம். ஆட்சி முறையும், உடை மாதிரி நமது தூய நிலையி லிருந்து வழுவியதற்குச் சின்னமாகும். தேவ உலகின் உள் அறைகளின் சிதைவுகளிலிருந்து அரண்மனைகள் நிர்மாணிக்கப் பட்டவை. நமது மனச் சாட்சியினல் ஏற்படும் உணர்வை ஓரளவு தெளிவாக அறிந்து அதற்குட்பட்டு நடந்தோமானல், மனிதனுக்கு சட்ட மியற்றுபவர்களின் உதவி அவசிய மிராது. இந்தத் தோரணையில் மனிதன் நடந்துகொள்ளாத தனல் அவன் தனது சொத்தில் ஒரு பகுதியைத் துறந்து அதன் மூலம் எஞ்சியுள்ள தன் சொத்துக்குப் பாதுகாப்புத் தேடிக்கொள்ளுகிருன். இப்படி அவன் துறப்பதற்குக் காரணம் இரு தீமைகளில் குறைந்த கேடு விளைவிப்பதையே நாடும் அவ னுடைய விவேகம்தான். ஆகையினல் பாதுகாப்பு ஆர்வமே அரசாங்கம் அமைவதற்கு உண்மையான காரணமாகையால் குறைந்த செலவில் அதிக நலன் விளைவிக்கும் முறை மூலமே அந்தப் பாதுகாப்பை அவன் அடைவதே விரும்பத்தக்கது.

ஆட்சியின் அமைப்பையும், அதன் இறுதி நோக்கத்தையும் பற்றித் தெளிவாக அறிந்துகொள்ளுவதற்காக ஓர் உதாரணத்தை எடுத்துக்கொள்ளுவோம். உலகில் பிற மக்களுடன் எவ்விதத் தொடர்புமின்றி ஒரு சிலர் தனியான ஓர் இடத்தில் குடி புகுகின்றனர் என வைத்துக்கொள்ளுவோம். அவர்கள் உலகில் முதன் முதலில் தோன்றிய மக்களாவார்கள். இயற்கையான சுதந்திரம் அநுபவிக்கும் இந்தச் சமயத்தில் ஒரு சமூகத்தை அமைப்பதே அவர்களுடைய முதல் கருத்தாக இருக்கும். ஆயிரக்

கணக்கான காரணங்களால் உந்தப்பட்டு அவர்களுக்கு இந்த சமூக உணர்வு ஏற்படலாம். ஒரு தனி மனிதன் தனது சுய சக்தியைக் கொண்டு தனது தேவைகளை யெல்லாம் பூர்த்தி செய்துகொண்டு விட முடியாது. மனிதர் கூட்டுறவின்றி தன்னந் தனியே வாழ்வதற்கான மனோ வலிமையும் அவனுக்கு இருக்காது. இந்த நிலையின் விளைவாகப் பிறர் உதவியை அவன் நாடவேண்டி வந்து விடுகிறது. அவ்வாறே பிறரும் அவன் உதவியை நாடுகின்றனர்.

நான்கு அல்லது ஐந்து பேர் ஒன்றுபட்டால்தான் வனாந் தரத்தில் ஒரு குடிசை அமைத்துக்கொள்ள இயலும். ஆனால் தனிப்பட்ட ஒருவன் தன் வாழ்நாள் முழுதும் எவ்வளவு கஷ்டப் பட்டு உழைத்தாலும் எதையும் சாதிக்க முடியாமல் போகலாம். அவன் ஒரு மரத்தை வெட்டலாம்; ஆனால் அதை அப்புறப்படுத்த முடியாது. அப்படியே அதை அகற்றினாலும் அதை உயர்த்தி நிறுத்த முடியாது. இடையில் அவன் பசியினால் பீடிக்கப்பட்டு, உழைக்கும் ஆர்வத்தை இழந்து விடக்கூடும். அவனுடைய ஒவ்வொரு தேவையும் ஒவ்வொரு திக்கில் அவனை இழுத்துச் செல்லலாம். இந்த நிலையில் அவனுக்கு நோயோ அல்லது பிற கஷ்டங்களோ ஏற்பட்டால் அவனுடைய உயிருக்கே ஆபத்து விளைந்து விடலாம். நோயினாலும், பிற கஷ்டங்களாலும் மனிதனுடைய உயிர் போய்விடும் என்று சொல்ல இயலாவிட்டாலும், இதில் ஏதாவது ஒன்றினால் அவன் சாகாவிட்டாலும் செத்தவனுக்குச் சமானமான நிலையை அடைந்து விடுவான்.

ஆகையால் தேவை அல்லது அவசியம் எனும் ஆகர்ஷண சக்தியின் விளைவாகப் புதிதாய்க் குடியேறிய மக்கள் ஒன்று சேர்ந்து சமூகத்தை அமைக்கின்றனர். இந்த சமூகத்தில் ஒருவருக்கொருவர் நியாயமாக நடந்துகொள்ளும் வரையில் சட்டம் அல்லது ஆட்சிக்கு அவசியமில்லாமல் போய்விடுகின்றது. ஆனால் மோட்ச உலகு தவிர தீமைக்குட்படாதது வேறொன்று மில்லையாகையால், குடியேற்ற சம்பந்தமான சங்கடங்களைச் சமாளிப்பதற்காக ஒன்றுபட்ட ஆதிக் குடிமக்கள், சங்கடம் தீர்ந்ததும் தங்கள் கடமைகளை மறந்து, பரஸ்பர அன்பு நிலையிலிருந்தும் தளர்ந்து விடுகின்றனர். இந்தக்

கடமை யுணர்ச்சி தளர்ந்ததன் விளைவாக அறநெறி குன்றிய இடத்தில் ஏதாவது ஒருவகை ஆட்சி அமைப்பதன் அவசியம் ஏற்படுகிறது.

இம் மக்களுக்கு நல்ல நிழல்தரும் மரத்தடியே அரசாங்க மாளிகையாகும். அதனடியில் மக்கள் யாவரும் கூடிப் பொது விஷயங்களை விவாதிப்பர். அவர்கள் இயற்றும் முதல் சட்டங்கள் அநேகமாகத் தீர்மானங்கள் அல்லது விதிகள் போல் அமையலாம். அவைகளுக்குக் கீழ்ப்படியாவிட்டால் பொதுஜன நிந்தனைக்காளாக வேண்டி வருமே என மக்கள் அவைகளுக்கு உட்படலாம். இந்த முதல் மக்கள் மன்றத்தில் இயல்பாகவே ஒவ்வொருவருக்கும் ஒரு ஸ்தானம் உண்டு.

ஆனால் குடிமக்களின் எண்ணிக்கை பெருகப் பெருக பொது ஸ்தாபனங்களின் எண்ணிக்கையும் பெருகும். ஆதியில் பொது ஸ்தாபனங்களின் எண்ணிக்கையும் குறைவாயிருந்து மக்களும் குறைவாயிருந்து ஒருவருக்கொருவர் அருகிலும் இருந்தமையால் எல்லோரும் அடிக்கடி கூடுவதுபோல், சமூகம் வளர்ந்து, மக்கள் பலர் தூரத்தில் வாழ்ந்து வரத் தொடங்கியதும் அவ்வளவு சுலபமாக எல்லோரும் கூடிப் பேச முடியாமல் போய்விடுகிறது. இதனால் பலபேர் சேர்ந்து தங்களில் ஒரு சிலரிடம் சட்டமியற்றும் பொறுப்பை ஒப்படைப்பது நல்லது என்று தோன்றுகிறது. மேலும் எல்லா மக்களின் அக்கறையும், பொறுக்கப்பட்ட ஒரு சிலரின் அக்கறையும் ஒன்றே என்ற எண்ணத்தில், எல்லோரும் கூடினால் எவ்வாறு பணியாற்றுவரோ, அவ்வாறே அவர்களுடைய பிரதிநிதிகளும் பணியாற்றலாம் எனும் நம்பிக்கையினால் ஒரு சிலருக்கு சட்டமியற்ற பிரதிநிதித்துவம் அளிக்கப்படுவதன் சௌகரியம் புலனாகும். குடிகளின் எண்ணிக்கை மேலும் பெருகினால் பிரதிநிதிகளின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டிய அவசியம் ஏற்படும். குடியேறிய நாட்டின் ஒவ்வொரு பகுதியின் நலனும் நன்கு கவனிக்கப்பட வேண்டும் எனும் நோக்கத்தினால் நாட்டைப் பல பகுதிகளாகப் பிரித்து, ஒவ்வொரு பகுதிக்கும் அதற்கேற்ப பிரதிநிதிகள் அனுப்பவேண்டியது அவசியம் எனக் கருதப்படும். **தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள், தேர்ந்தெடுத்தவர்களின்** நலன்களுக்குப் புறம்பாக நடக்காமலிருப்பதற்காகத் தேர்தல்கள்

அடிக்கடி நடப்பதற்கு ஏற்பாடு செய்வது புத்திசாலித்தனம் எனக் கருதப்படும். பிரதிநிதிகள் அடிக்கடி வோட்டர்களுடன் கலந்து பேசவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுவதனுல், அவர்கள் தங்களது சொந்த நலனுக்காக வேலே செய்யாமல் மக்களின் விசுவாசத்தைப் பெறும் முறையில் பணியாற்றுவர் என எதிர் பார்க்கலாம். இப்படிப் பிரதிநிதிகளும் வோட்டர்களும் அடிக்கடி கலந்து பேசுவதனுல் அவர்களுக்கும் சமூகத்திற்கும் பொது வான அக்கறை ஏற்பட்டு பரஸ்பரம் உதவிபுரிவர். இம்மாதிரி உறவில்தான் ஆட்சியின் பலமும் ஆளப்படுவோரின் இன்ப வாழ்க்கையும் அடங்கியிருக்கின்றன.

இதுதான் ஆட்சி முறை தோன்றிய விதமும் அதன் வளர்ச்சியும். அறவழியில் உலகத்தை ஆள முடியாததனுல் ஆட்சிக்கு அவசியம் ஏற்பட்டது. சுதந்திரமும் பாதுகாப்பும் பெறவே ஆட்சி அமைந்தது. அவைகளே அடைவதே அதன் நோக்கம். வெளிப்பகட்டைக் கண்டு நமது கண்கள் எவ்வளவு தான் மயங்கினுலும், விளம்பர ஒலிகள் நமது செவிகளே எவ் வளவு ஏமாற்றினுலும், விருப்பு வெறுப்புக்கள் எவ்வளவு தான் நமது அறிவை மங்கச் செய்தாலும், சுயநலம் எவ்வளவு தான் நமது நல்லுணர்வை மாய்த்தாலும், இயற்கையின் இனிய குரலும் அறிவும் இம்மாதிரி ஆட்சி அமைந்தது நியாயம் என வலியுறுத்தும்.

செயற்கை முறைகளினுல் அசைக்க முடியாத ஓர் இயற் கைக் கொள்கையிலிருந்தே ஆட்சி முறை பற்றிய என் கருத்து வடிவம் பெறுகிறது. அதாவது, ஒரு விஷயம் எவ்வளவுக் கெவ்வளவு எளிதாயிருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு அதைச் சிதைத்துவிட முடியாது; அப்படியே சிதைக்க முடிந்தாலும் அதை எளிதில் சீர்படுத்திவிடலாம். இந்தக் கொள்கையை மனத்திற்கொண்டேதான் உயர்வாகக் கருதப்படும் ஆங்கில நாட்டு அரசியலமைப்பு பற்றிச் சில கருத்துக்களே வெளியிட முன் வருகிறேன். அந்த அமைப்பு தோன்றியது அடிமைத்தன மெனும் இருள் சூழ்ந்திருந்த காலம். அந்தக் காலத்திற்கு அந்த அமைப்பு உன்னதமானது என்று கூறலாம். உலகமெலாம் கொடுங்கோன்மைக்குட்பட்டிருந்த காலத்தில் அந்தக் கடுமை எங்கே ஓரளவு குறைந்திருக்கிறதோ அதை வெகுவாகப்

புகழ்வது இயல்புதான். ஆனால் அது குறைபாடுகள் நிறைந்தது, அதனால் பல அரசியல் கொந்தளிப்புகள் ஏற்படலாம், அது எதற்காக அமைக்கப்பட்டதோ அந்த லட்சியம் ஈடேற இயலாது என்பதை எளிதில் நிரூபித்து விடலாம்.

யதேச்சாதிகார ஆட்சி மனித இயல்புக்கு இழுக்குத் தேடுவதாயிருந்தாலும் அதனால் ஒரு நன்மை உண்டு. அந்த ஆட்சி மிக்க எளிய முறையில் அமைந்துள்ளது. அதன் கீழ் மக்கள் கஷ்டப்பட்டால் அவர்களுடைய கஷ்டத்தின் மூலகாரணம் என்ன என்பதை அவர்கள் அறிவார்கள். கஷ்டத்திற்குப் பரிகாரம் என்ன என்பதையும் அவர்கள் அறிவார்கள். கஷ்டத்திற்கு என்னனென்ன காரணங்கள் உள்ளனவோ, அவைகளை நீக்க என்னென்ன முறைகளைக் கைக்கொள்ள வேண்டுமோ என்று திகைப்புற மாட்டார்கள். ஆனால் இங்கிலாந்தின் அரசியலமைப்பு சிக்கல் நிறைந்தது; அதன் கீழ் மக்கள் நீண்ட காலம் கஷ்டப்பட்டாலும் கஷ்டத்திற்குக் காரணமாயிருப்பது அரசியலமைப்பின் எந்தப் பகுதி என்பதை அறிந்துகொள்ள முடியாமல் கஷ்டப்படுவார்கள். கஷ்டத்தைத் தவிர்க்கவும் ஒவ்வொருவர் ஒவ்வொரு வழியைக் காண்பிப்பர். ஒவ்வோர் அரசியல் வைத்தியனும் தனக்குத் தோன்றும் மாற்றையே எடுத்துக் கூறுவான்.

நீண்ட கால விருப்பு வெறுப்புக்களையும், நாம் வசிக்குமிடங்களுக்கியல்பான குறைபாடுகளையும் களைந்தெறிவது கஷ்டம் என்பதை நான் அறிவேன். ஆனால் ஆங்கில நாட்டு அரசியலமைப்பின் பல பகுதிகளை முனைந்து ஆராய்வோமானால், அது பழங்காலத்திய இருவகைக் கொடுங்கோலாட்சியின் தன்மைகளும் சில குடியரசு அம்சங்களும் கலந்தது என்பதை அறிவோம்.

1. மன்னர் மூலம் மன்னர் கொடுங்கோலாட்சியின் சின்னங்கள்.

2. பிரபுக்கள் மூலம் பிரபுக்கள் கொடுங்கோன்மையின் சின்னங்கள்.

3. மக்கள் சபைப் பிரதிநிதிகளிடமுள்ள புதிய குடியரசு லட்சணங்கள்—மக்கள் சபைப் பிரதிநிதிகளின் நன்னடத்தையே இங்கிலாந்தின் சுதந்தரத்துக்கு ஆதாரமாகும்.

மன்னரும் பிரபுக்களும் வம்ச பரம்பரையில் வருவதால் அவர்கள் மக்கள் ஆதரவை நம்பியிருக்க வேண்டியதில்லை. ஆகையினால் **சட்ட பூர்வமாகப் பார்த்தால்** முதல் இரு இனத்தாரும் நாட்டின் சுதந்திரத்திற்கு எவ்விதப் பணியும் ஆற்றுவதில்லை.

இங்கிலாந்தின் அரசியலமைப்பு முப்பகுதி கொண்டது. ஒவ்வொரு பகுதியும், பிற பகுதிகள் கட்டுமீறிச் செல்லாமல் தடை செய்து வருகிறது எனக் கூறுவது கேலிக்கூத்தாகும். அந்தக் கூற்றுக்கு ஒன்றும் அர்த்தமில்லை; அல்லது ஒன்றிற்கொன்று முற்றிலும் முரணானது.

மக்கள் சபையினர் மன்னரை அடக்க முடியும் என்று கூறினால் இரு விஷயங்களை உண்மையெனக் கொள்ளவேண்டும்.

(1) பிறர் மேற்பார்வையின்றி மன்னரைத் தனித்தியங்க விடலாகாது; அல்லது யதேச்சாதிகார ஆசையே மன்னரைப் பீடித்திருக்கும் இயற்கையான நோய்.

(2) மன்னரை மேற்பார்க்க மக்கள் சபையினர் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர் என்றால், அவர்கள் மன்னரைவிட புத்திசாலிகள்; அல்லது மன்னரைவிட அவர்கள் மக்கள் நம்பிக்கைக்கு அதிகப்படியாகப் பாத்திரமானவர்கள்.

மன்னர் செலவை நிராகரிப்பதன் மூலம் அவரைக் கட்டுப்படுத்தும் அதிகாரத்தை மக்கள் சபைக்களித்த அதே அரசியலமைப்பு, மக்கள் சபையின் மசோதாக்களை நிராகரிக்கும் அதிகாரத்தையும் மன்னருக்கு அளித்ததன் மூலம் மக்கள் பிரதிநிதிகளைக் கட்டுப்படுத்தும் வசதியை மன்னருக்கு அளிக்கிறது. இதிலிருந்து மன்னரைக் கட்டுப்படுத்த நியமிக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகளான புத்திசாலிகளைவிட மன்னர் அதிபுத்திசாலி என்றாகிறது! என்ன கேலிக்கூத்து, பாருங்கள்!

மன்னர் ஆட்சி அமைப்பில் மிகவும் நகைப்புக்கிடமான மற்றுமோர் அம்சம் இருக்கிறது. மன்னருக்கு எவ்விதத் தகவல்களும் எட்டாமல் அவர் ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கிறார். ஆனால் மிகுந்த பகுத்தறிவுடன் ஆலோசிக்கவேண்டிய விஷயங்களில் தீர்ப்புக் கூறும் அதிகாரம் அவருக்கு அளிக்கப்பட்டிருக்கிறது! மன்னருடைய அந்தஸ்தின் விளைவாக உலகத்துடன் நெருங்கி உறவாடும் சந்தர்ப்பம் அவருக்கு இல்லை. ஆனால் மன்னருடைய

7172

வேலை, உலகத்தை நன்கறிந்து பணிபுரிவதேயாகும்! ஆகையினுல் மூன்று பகுதிகளும் இயற்கைக்கு மாருன முறையில் ஒன்றுக்கொன்று மாறுபட்டுப் பணிபுரிய வேண்டியிருப்பதனுல் மன்னர் ஆட்சி என்பதே அர்த்தமற்ற கேவலமான ஏற்பாடாகி விடுகிறது.

ஆங்கில அரசியலமைப்புக்குச் சில எழுத்தாளர்கள் பின்வரும் வகையில் வியாக்கியானம் செய்கின்றனர். மன்னர் ஒரு புறம், மக்கள் மற்ருெரு புறம். பிரபுக்கள் சபை மன்னரை ஆதரிக்க வேண்டும். மக்கள் சபை மக்களுக்கு ஆதரவாயிருக்க வேண்டும். இந்த ஏற்பாடு மாறுபட்ட கருத்துள்ள குடும்பத்தை ஒத்திருக்கிறது. இந்த முறைக்கு வக்கணையாக வியாக்கியானம் கூறலாமானுலும், இதை ஆழ்ந்து ஆராய்ந்து பார்த்தால் இது அர்த்தமற்ற, விபரீதப் பொருள்படக்கூடிய ஏற்பாடென்பது புலப்படும். நல்ல பொருள்படக்கூடிய பதங்களை, புரிந்துகொள்ள முடியாத, விவரிக்க இயலாத ஒரு நிலைக்குப் பொருத்திப் பார்த்தால் அந்தப் பதப் பிரயோகங்கள் காதுக்கினிமையாயிருக்கலாமேயொழிய அறிவுக்கு ஒத்திருக்காது. இந்த வியாக்கியானம் மற்ருெரு சந்தேகத்தையும் கிளப்புகிறது. **மன்னரிடம் ஒப்படைத்தால் அபாயம், அப்படியே ஒப்படைத்தாலும் அதைக் கட்டுப்படுத்த வேண்டும் என மக்கள் கருதிய அதிகாரம் மன்னருக்கு எப்படிக் கிடைத்தது?** இந்த அதிகாரத்தை புத்திசாலிகளான மக்கள் மன்னருக்குப் பரிசாக அளித்திருக்க முடியாது. கட்டுப்படுத்த வேண்டிய அதிகாரம் கடவுளால் அளிக்கப்பட்டிருக்கவும் முடியாது. ஆனுல் அரசியலமைப்பின்படி இம்மாதிரி அதிகாரம் மன்னருக்கு இருப்பதாகக் கருதப்படுகிறது.

அரசியலமைப்பின் இந்த விதி எதற்காக ஏற்பட்டதோ அதைச் சாதிக்க சக்தியற்றது; நோக்கம் ஈடேறுவதற்காக ஏற்பட்ட சாதனம் சக்தியற்றது. ஆகையினுல் எல்லாம் ஒரே கேலிக்கூத்து! அதிக கனமுள்ளது குறைவான கனமுள்ளதைத் தாங்கிக்கொள்ளுமாகையாலும், ஒரு யந்திரத்தின் எல்லாச் சக்கரங்களையும் ஒரு சக்தி ஓட்டுகிறதனுலும், அரசியலமைப்பில் எந்த அதிகாரம் அதிக முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை அறிந்துகொள்ளவேண்டும். ஏனெனில் அந்த அதிகாரத்தின் பலத்தினுல்தான் ஆட்சி நடக்கிறது. மற்ற பகுதி

களோ அல்லது அவற்றில் சிலவோ ஓட்டத்தைத் தடை செய்ய லாம் அல்லது வேகத்தைக் குறைக்கலாம். ஆனால் ஓட்டத்தை நிறுத்த முடியாத வரையில் அந்தப் பகுதிகள் சக்தியற்றவை. இறுதியில் பிரதான இயக்க சக்தி தன்னிஷ்டப்படி இயங்கும். அந்த இயக்கத்தின் வேகம் குறைந்தாலும் அதனால் ஏற்படக் கூடிய நஷ்டம் காலத்தால் நீக்கப்பெறும்.

ஆங்கில அரசியலமைப்பில் மன்னர் ஆட்சியே பிரதான பாகம் வகிக்கிறது என்பதைக் குறிப்பிடத் தேவையில்லை. பிறருக்குப் பதவிகளும் உபகாரச் சம்பளங்களும் அளிப்பதிலிருந்துதான் முடியாட்சிக்கு இவ்வளவு முக்கியத்துவம் ஏற்பட்டது என்பதும் எளிதில் விளங்கும். ஆகையால் முடியாட்சி யதேச்சாதிகாரமாய் மாறாமலிருப்பதற்காக, நாம் புத்திசாலித்தனமாக மன்னரை உள்ளே தள்ளிப் பூட்டியிருந்தாலும் அசட்டுத்தனமாக பூட்டின் சாவியை அவரிடமே ஒப்படைத்துவிட்டோம்!

மன்னர், பிரபுக்கள், மக்கள் பிரதிநிதிகள் மூலம் ஆட்சி நடத்துவது பற்றி ஆங்கிலேயர் பெருமைப்படுவதற்குக் காரணம், அவர்கள் அறிவுணர்வு என்று கூற முடியாது; தங்கள் நாட்டு ஆட்சி முறை என்கிற அபிமானத்தினால்தான் அவ்வாறு அவர்கள் பெருமை கொள்ளுகின்றனர். பிற நாடுகளைவிட இங்கிலாந்தில் தனி நபர்கள் நிர்ப்பயமாயிருக்கின்றனர் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் மன்னர் இட்டதே சட்டம் என்கிற நிலை பிரான்ஸைப்போல் இங்கும் நிலவுகிறது. ஆனால் ஒரு மாறுபாடு: மன்னருடைய கட்டளைகள் நேரடியாக அவருடைய திருவாக்கிலிருந்து வெளிவராமல் பார்லிமெண்ட் இயற்றிய சட்டம் என்று மதிப்பாக மக்களுக்கு வழங்கப்படுகிறது. இங்கிலாந்தில் முதலாவது சார்லஸ் மன்னன் தலையை மக்கள் வாங்கியதன் விளைவாக, மன்னர்கள் முன்னைவிட புத்திசாதுர்யமுள்ளவர்களா யிருக்கின்றனரே தவிர, அதிக நீதிவான்களா யிருந்து விடவில்லை.

ஆகையினால் தேசீய சுயமதிப்பு, ஆட்சியிலுள்ள அபிமானம் இரண்டையும் ஒதுக்கிவிட்டுப் பார்த்தால், இங்கிலாந்தில் மக்கள் ஆட்சி துருக்கியைப்போல் கொடுங்கோன்மையாக இல்லாததற்குக் காரணம், மக்களுடைய சுபாவமேயொழிய ஆட்சி முறை அமைப்பல்ல என்கிற அப்பட்டமான உண்மையை அறியலாம்.

ஆங்கில ஆட்சி முறையில் சட்ட பூர்வமான கோளாறுகள் என்ன என்பதை இப்போது ஆராய்வது நிரம்ப அவசியமாகும். ஏனெனில் நம் மனதை விருப்பு வெறுப்பு ஆட்கொண்டிருக்கும் வரையில் பிறருக்கு நாம் நீதி வழங்க இயலாதவர்களாயிருக்கிறோம். அவ்வாறே நமக்கு நல்லது எது என்று அறிந்து நடக்கவும் முடியாதவர்களாயிருக்கிறோம். விபசாரியிடம் உறவாடும் ஒருவன் தனது மனைவியை எப்படிக் கொண்டாடவோ மதிப்பிடவோ முடியாதோ, அவ்வாறே மோசமான அரசியலமைப்புக்குட்பட்டவர்களும் நல்ல அரசியல் முறைகளை மதிப்பிட முடியாது.

முடியாட்சியும் பரம்பரை வாரிசு முறையும்

மனிதன் தோன்றிய காலத்தில் எல்லோரும் சமமாகவே இருந்ததனால் அந்த சமநிலை பிந்திய சம்பவங்களால்தான் மாய்ந்திருக்கவேண்டும். குரூரம், பேராசை என்கிற பகட்டான காரணம் கூறுமலே பணக்காரன், ஏழை என்கிற ஏற்றத்தாழ்விற்கு முகாந்தரம் கூறலாம். பணத்தின் விளைவாகக் குரூரம் தோன்றியதாகச் சொல்லலாமேயொழிய, குரூரத்தின் மூலம் பணம் திரட்டியதாகக் கூறமுடியாது. பேராசை ஒருவனை ஏழ்மை நிலைக்கு வராமல் தடுக்கலாமே ஒழிய, அது பணம் திரட்டுவதற்கான துணிவை அளிக்காது.

மன்னர், மக்கள் என்கிற பாகுபாட்டிற்கு இயற்கையாகவோ மத அடிப்படையிலோ தக்க காரணம் கூறமுடியாது. ஆண் பெண் வித்தியாசம் இயற்கையாக ஏற்பட்ட பாகுபாடு. நன்மை, தீமை ஆண்டவன் ஏற்படுத்திய பாகுபாடு. ஆனால் மனித குலத்தில் ஓர் இனம் எப்படி மற்றெல்லோரையும்விட உயர்நிலைக்கு வந்து தனி சிருஷ்டிமாதிரி துலங்க நேர்ந்தது என்பதும், இந்தத் தனி இனத்தினால் மானிடருக்கு சுகமா அல்லது கேடா என்பதும் ஆராய்ச்சிக்குரிய விஷயங்கள்.

சமய நூல்களை ஆராய்ந்து பார்த்தால் உலகம் தோன்றிய ஆதிகாலத்தில் அரசாங்கங்களே கிடையாது என்பதை அறிவோம். அதனால் போர்களும் நிகழவில்லை என்பதை அறியலாம். மன்னர்களின் அகம்பாவமே மக்களைக் குழப்பத்திற்குள்

ளாக்கி வந்திருக்கிறது. சென்ற நூற்றுண்டில் ஹாலந்தில் மன்னர் ஆட்சி இல்லாததனுல், ஐரோப்பாவிலுள்ள முடியாட்சி நிலவும் நாடுகளைவிட அந்நாடு அதிக அமைதியை அநுபவித்தது. பழங்கால வரலாற்றைப் பார்த்தாலும் இதே உண்மையைக் காண்கிரும். முதன் முதலில் குடும்பத் தலைவன்கீழ் வாழ்ந்த அமைதியான கிராம வாழ்க்கையில் கண்ட இன்பம் யூதர்கால மன்னர் ஆட்சியின்கீழ் மாய்ந்துவிட்டது.

மன்னர் ஆட்சி முதன் முதலில் கிறிஸ்தவரல்லாதார்களிடையேதான் தோன்றிற்று. அவர்களிடமிருந்து இஸ்ரேல் வாசிகள் இம்முறையை மேற்கொண்டனர். இந்த முறை விக்கிரக ஆராதனை போன்ற எண்ணத்தைப் பெருக்குவதற்குச் சைத்தான் கண்டுபிடித்த சிறந்த வழி எனக் கூறலாம். கிறிஸ்தவரல்லாதார் தங்களது மடிந்த மன்னர்களைத் தெய்வம்போல் வழிபட்டனர். ஆனுல் கிறிஸ்தவர்கள் இதைவிட ஒருபடி முன்னேறிவிட்டனர். அவர்கள் உயிர்வாழ் மன்னர்களையே வழிபட்டு வருகின்றனர்! மண்ணில் நெளியும் புழுவுக்கு ''மேன்மை தங்கிய'' எனும் பட்டத்தைச் சூட்டுவது எவ்வளவு பாபமாகும்! இவ்வளவு ஆடம்பரமான புழு கடைசியில் மண்ணோடு மண்ணுக மடியத் தானே போகிறது!

ஒரு மனிதனைப் பிற மனிதர்களுக்கு மேம்பட்டவனென உயர்த்துவது இயல்பாயுள்ள சம உரிமைக்கு மாறுனது மட்டுமல்ல, அதற்கு கிறிஸ்தவ சமய நூல்களிலிருந்து ஆதாரமும் காணமுடியாது. **கிடியான், சாமுவேல்** எனும் ஞானிகளின் வியாக்கியானப்படி மன்னர் ஆட்சிக்கு ஆண்டவனின் ஆதரவு கிடையவே கிடையாது. மத நூல்களில் காணப்படும் முடியாட்சி எதிர்ப்பு வாசகங்களை மன்னர் ஆட்சி ஆதரவாளர்கள் மழுப்பி விட்டிருக்கின்றனர். ஆனுல் இதுவரையில் அரசாங்கம் அமைக்காத நாடுகள் அந்த எதிர்ப்பு வாசகங்களைச் சிந்தித்துப் பார்க்கவேண்டும். ''சீஸர் மன்னனுக்குரியதை அவனுக்கு அளி'' எனும் சூத்திரத்தை நீதிஸ்தலங்கள் மதக்கோட்பாடு போல் பிரகடனம் செய்கின்றன*. ஆனுல் இதைக் கொண்டு முடியாட்சியை ஆதரிக்க முடியாது. ஏனெனில் அச்சமயம்

* அரசாங்கத்திற்குத் தனிப்பட்டவர்கள் உட்பட்டே நடக்கவேண்டும் என்பதற்கு இந்த வேதவாக்கை ஆதாரமாகக் கூறுவதுண்டு.

யூதர்களுக்கு அரசன் கிடையாது, அவர்களே ரோமாபுரியினரின் அடிமைகளாயிருந்தனர்.

மனித சிருஷ்டிபற்றி **மோஸஸ்** எழுதியுள்ள வரலாற்றின்படி இவ்வாறு 3,000 ஆண்டுகள் கழிந்தன. அப்புறம் யூதர்கள் தங்களை ஆள ஓர் அரசன் வேண்டும் என்று கேட்டனர். அது வரையில் நெருக்கடியான காலங்களில் ஆண்டவனே தோன்றிய தருணங்கள் தவிர, மற்றக் காலங்களில் அவர்களது ஆட்சி ஒரு வகைக் குடியரசாகவே இருந்தது. அவர்களை ஒரு நீதிபதியும் சமூகத்திலுள்ள முதியோரும் ஆண்டுவந்தனர். அவர்களிடையே மன்னர் கிடையாது என்பது மட்டுமல்ல, அவ்வாறு ஒருவன் இருக்கக்கூடும் என நினைப்பதே பாபம் எனக் கருதப்பட்டது. மன்னர்களை தெய்வம்போல் வழிபடுவதை ஒருவன் சிந்தித்துப் பார்த்தால், தனக்குள்ள மரியாதையில் கண்ணும் கருத்துமா யுள்ள **கடவுள்** தெய்வ வழிபாட்டுக்குச் சமமாக மன்னர்கள் பூஜிக்கப்படுவதை விரும்பமாட்டார் என்பதுபற்றி ஆச்சரிய மடைய மாட்டான்.

மத நூல்களில் யூதர்கள் செய்த பாபங்களில் ஒன்ருக முடியாட்சி மதிக்கப்பட்டிருக்கிறது. இதற்காக அவர்களுக்குச் சாபமும் விதிக்கப்பட்டிருக்கிறது என்பதுபற்றிய வரலாற்றைக் கவனிப்பது அவசியமாகும்.

இஸ்ரேல் மக்களை **மிடியானியர்** வாட்டி வதைத்து வந்ததனுல் **கிடியான்** என்பவன் சிறு படையுடன் சென்று அவர்களைத் தாக்கி ஞன். ஆண்டவன் அருளால் அவனுக்கு வெற்றியும் கிட்டியது. இந்த வெற்றியினுல் பேரானந்தம் கொண்ட யூதர்கள் அது **கிடியானின்** வீரத்தினுல் கிடைத்தது என்று நம்பி அவனை மன்ன ஞக்க விரும்பினர். ''எங்களை நீங்களும், உங்கள் மகனும், மகனுக்கு மகனும் ஆண்டு வாருங்கள்'' என்று கேட்டுக்கொண் டனர். அவன் மட்டுமல்ல, அவனது வமிச பரம்பரையே ஆள வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுவது அவனது ஆசையைத் தூண்டுவதாயிருந்தது. ஆனுல் அகத்தூய்மை வாய்ந்த **கிடியான்** ''நான் உங்களை ஆட்சிபுரியமாட்டேன்; என் மகனும் ஆட்சிபுரிய மாட்டான்; **ஆனுல் ஆண்டவன் உங்கள் மீது அரசு செலுத்துவார்**'' என்ருன். கருத்தை இதைவிடத் தெளிவாக வெளியிட முடியாது. மக்கள் அளித்த மரியாதையை **கிடியான்** மறுக்கவில்லையாயினும்

தனக்கு முடிசூட்ட அவர்களுக்கு உரிமையே இல்லை என்று அடித்துக் கூறினான். அவர்கள் காணிக்கைக்கு அவன் நன்றி செலுத்தவில்லை. ஆனால் தீர்க்கதரிசியின் தோரணையில் அவர்கள் ஆண்டவனுக்குத் துரோகம் செய்தவர்கள் என்று குற்றம் சாட்டினான்.

இந்த சம்பவம் நிகழ்ந்த நூற்றுமுப்பது ஆண்டுகளுக்குப் பின்பு அவர்கள் மீண்டும் அதே தவறைச் செய்தனர். கிறிஸ்தவரல்லாதாரின் விக்கிரக ஆராதனையை ஒத்த பழக்கங்களை யூதர்கள் மேற்கொண்டதற்கு முகாந்தரமே கூற இயலாது. ஆனால் அந்தப் பழக்கம் அவர்களைப் பற்றிக்கொண்டதென்னவோ உண்மை.

சாமுவேலின் இரு குமாரர்களுக்கு சில அரசியல் பொறுப்புகள் அளிக்கப்பட்டன. அவைகளை அவர்கள் சரிவர நிறைவேற்றவில்லை. இந்தக் குறைபாட்டைப்பற்றி மக்கள் சாமுவேலிடம் முறையிட்டனர். ''ஐயன்மீர்! நீங்களும் முதுமைப் பருவமடைந்துவிட்டீர்கள். உங்கள் குமாரர்கள் உங்களைப்போல் நல்வழியில் நடப்பவர்களாக இல்லை. மற்ற நாடுகளில் உள்ள மாதிரி எங்கள் குறைகளையும், குணங்களையும் அறிந்து அதற்கேற்றபடி எங்களை ஆள எங்களுக்கு ஓர் அரசரை அளிப்பீராக'' என்று கூறி ஆரவாரம் செய்தனர். அவர்களின் இந்த முறையீடு அவர்களுடைய தீய நோக்கத்தையே காட்டுகிறது என்பதை நாம் ஒப்புக்கொள்ளவேண்டும். ஏனெனில் அவர்கள் பிற நாட்டினர்போல் வாழ வேண்டுமென விரும்பினர்; அதாவது, கிறிஸ்தவரல்லாதார்போல. ஆனால் கிறிஸ்தவரல்லாதாருக்கு மாறுபட்டிருந்ததுதான் அவர்களுக்கு இதுவரை புகழளித்து வந்தது. ''எங்கள் குற்றம் குறைகளை அறிந்து ஆளும் அரசனை அளி'' என்றுதான் அவர்கள் சாமுவேலை வேண்டினர். உடனே சாமுவேல் ஆண்டவனைப் பிரார்த்தித்தான். ஆண்டவனும் சாமுவேலிடம், ''மக்கள் முறையிடுவதற்குச் செவிசாய். ஏனெனில் அவர்கள் உன்னை உதறித்தள்ளவில்லை. ஆனால் அவர்கள் என்னைக் கைவிட்டனர். **நான் அவர்களை ஆளலாகாது** என்பதே அவர்கள் கருத்து. அவர்களை எகிப்து நாட்டிலிருந்து கொண்டு வந்த நாட்களிலிருந்து இன்றுவரை அவர்கள் செய்த வேலைகளிலிருந்து அவர்கள் என்னை மறந்து பிற தெய்வங்களை வழிபட்டு வருகின்றனர் என்பதை அறிந்துகொள்ளலாம். அவ்வாறேதான்

அவர்கள் உன்னிடமும் நடந்துகொள்ளுகின்றனர். ஆகையால் அவர்கள் கூறுவதைக் கேள். ஆனால் அவர்களை ஆளப்போகிற அரசன் எப்படிப்பட்டவனாயிருப்பான் என்பதை மட்டும் தெளிவாகத் தெரிவித்துவிடு. இஸ்ரேல் ஆவலுடன் விரும்பும் மன்னர் ஆட்சி பிறநாடுகளில் பொதுவாக எப்படி நடக்கிறது என்பதைத் தெள்ளத்தெளிய எடுத்துக் கூறு. அந்த ஆட்சிகாலத்திற்குப் பிறகு பல நூற்றாண்டுகள் கடந்துவிட்டாலும், தற்போதைய பழக்க வழக்கங்களில் மாறுபாடுகள் இருந்தாலும் மன்னர் ஆட்சி முறையின் தன்மையில் மாறுதல் ஏற்படவில்லை'' என்று அருளினார்.

ஆண்டவன் அருளிய இம்மொழிகளையெல்லாம் மன்னர் ஆட்சி வேண்டிய மக்களிடம் சாமுவேல் அப்படியே திரும்பக் கூறினான்: ''உங்களை ஆளப்போகிற அரசனின் செயல் முறையை எடுத்துச் சொல்லுகிறேன் கேளுங்கள். மன்னன் உங்கள் மக்களை தனது ரதம் ஓட்டிகளாகவும், குதிரை வீரர்களாகவும் நியமிப்பான். சிலரை ரதத்திற்கு முன் ஓடுவதற்கு அமர்த்துவான். (இந்த முறை தற்கால நியமனங்களுக்கு ஒத்ததாகவே இருக்கிறது.) மற்றும் சிலரை ஆயிரம் படையினருக்கு தலைவர்களாகவும், ஐம்பது படையினருக்குத் தலைவர்களாகவும் நியமிப்பான்; சிலரை ஆயுதம் செய்யப் பணிப்பான்; சிலரை ரதம் கட்டும்படி கட்டளையிடுவான். உங்கள் பெண்டிரை ரொட்டி சுடவும் மற்றும் சமைக்கவும் பயன்படுத்திக்கொள்ளுவான். (இந்த விசாரணை மூலம் அரசர்களின் போகவாழ்க்கையையும் அவர்கள் கொடுங்கோன்மையையும் புரிந்துகொள்ளலாம்.) அவன் உங்கள் வயல்களையும், சிறந்த பழத்தோட்டங்களையும் எடுத்துக்கொண்டு அவைகளைத் தன் பணியாட்களுக்குக் கொடுப்பான். உங்கள் தானியங்களிலும் பழங்களிலும் பத்திலொரு பங்கை எடுத்துக் கொண்டு தனது உத்தியோகஸ்தர்களுக்கும் வேலைக்காரர்களுக்கும் பகிர்ந்து கொடுப்பான். (இதிலிருந்து லஞ்சம், ஊழல், பாரபட்சம் எல்லாம் அரசர்களின் மீளாத்தீமைகள் என்பதைப் புரிந்துகொள்ளலாம்.) உங்களுடைய ஆண், பெண் வேலையாட்களிலும் பத்தில் ஒரு பங்கு பேர்களை எடுத்துக்கொள்ளுவதுடன் உங்களில் சிறந்த இளைஞர்களையும், கழுதைகளையும் எடுத்துக் கொண்டு தன் வேலைகளைச் செய்ய அமர்த்திக்கொள்ளுவான்.

உங்களுடைய ஆடுகளிலும் பத்திலொரு பங்கு எடுத்து தனது வேலைக்குப் பயன்படுத்துவான். நீங்களெல்லாம் அரசனின் பணியாட்களா யிருப்பீர்கள். நீங்கள் தேர்ந்தெடுத்த அரசனின் அவலத் தன்மையைக் குறித்து அழுது புலம்புவீர்கள். **அன்று ஆண்டவன் உங்களது முறையீட்டிற்குச் செவிசாய்க்கமாட்டான்.''** இதுதான் முடியாட்சி நீடிப்பதற்கு முகாந்தரம். அரசர்களில் சிலர் நல்லவர்களா யிருந்திருக்கின்றனர் என்பது முடியாட்சியைப் புனிதப்படுத்தாது என்பது மட்டுமல்ல, அது பாபத்தில் தோன்றியது எனும் இழுக்கையும் அழித்துவிடாது. ''**டேவிட்** எனும் மன்னன் புகழப்பட்டிருப்பது அவன் மன்னனயிருந்தான் என்பதனலல்ல ; அவன் ஆண்டவன் அருள்படி நடந்த சிறந்த மனிதன் என்பதனல்தான்.''

சாமுவேல் இவ்வளவு கூறியும் மக்கள் அவன் வார்த்தைகளை மதிக்கவில்லை. அவர்கள் சொன்னர்கள்: ''எங்களை ஆள அரசன் வேண்டும். ஏனெனில் அப்பொழுதுதான் பிறநாடுகள் மாதிரி நாமுமிருப்போம். நமது மன்னன் நமது குற்றங் குறைகளை அறிவான். நமக்கு முன்சென்று நமது சார்பில் போர் புரிவான்''. சாமுவேல் அவர்களுடன் எவ்வளவோ வாதாடிப் பார்த்தான். ஆனல் அவர்கள் அவன் சொல்லுவதைக் கேட்பதாயில்லை. அவர்கள் தீயவழியிலே செல்லுவதென ஒரே பிடியாயிருந்ததை அறிந்து ''நான் ஆண்டவனிடம் முறையிடுவேன்; அவர் இடியும் புயலும் விளைவிப்பார். (அது சமயம் கோதுமை அறுவடை காலமானதால் மழை பெய்விப்பது அவர்களைத் தண்டிப்பதாகும்.) அப்பொழுதுதான் மன்னர் ஆட்சி வேண்டும் என நீங்கள் கோரியது எவ்வளவு கொடியது என்பதை நீங்கள் உணருவீர்கள்''. இவ்வாறு சாமுவேல் மனம் நொந்து முறையிட்டான். ஆண்டவனும் இடி முழக்கி மழை பொழிந்தார். மக்களும் ஆண்டவனையும், சாமுவேலையும் நினைத்து அச்சமுற்றனர். மக்கள் யாவரும் சாமுவேலிடம், ''உங்களது ஏவலாட்களாகிய எங்கள் சார்பாக ஆண்டவனிடம் வேண்டுங்கள். எங்களை மரணத்திற்குள்ளாக்காமல் காக்கும்படி செய்யுங்கள். எங்களுடைய பாபங்களோடு **மன்னன் வேண்டும்** எனக் கோரிய பாபமும் சேர்ந்துவிட்டது'' என்றனர். வேத நூல்களில் இந்தப் பகுதிகள் நேரடியாக, நமது கடமை என்ன என்பதைத்

தெளிவாக உரைக்கின்றன. இதற்கு விபரீதப் பொருள் கூற இடமே இல்லை. ஒன்று ஆண்டவன் முடியாட்சியை விரும்ப வில்லை என்பது உண்மையா யிருக்கவேண்டும்; அல்லது வேத நூல்கள் பொய்யா யிருக்கவேண்டும். போப்பாண்டவர் ஆதிக் கத்திற்குட்பட்ட நாடுகளில் வேத நூல்கள் மக்கள் பார்வைக்கு வராமல் தடுத்திருப்பதற்கு மன்னர்களும், பூசாரிகளும் சேர்ந்து செய்த தந்திரமே காரணமா யிருக்க வேண்டும். ஏனெனில் எந்த நாட்டிலும் முடியாட்சியை அரசியலில் போப் ஆட்சி முறை நிலவுவதற்கு உதாரணமாகக் கூறலாம்.

முடியாட்சித் தீமை போதாதென்று பரம்பரை வாரிசு முறையும் சேர்ந்துகொண்டது. முடியாட்சி நம்மை அவமதித் துத் தாழ்மைப்படுத்துகிறது; பரம்பரை வாரிசு முறை நமது பிந்திய சந்ததிகளை அவமதித்து தண்டிக்கிறது. ஆதியில் மனிதர் யாவரும் சமமாயிருந்ததால், ஒருவருக்குத் தனது குடும்பத்தாரே என்றென்றும் ஆளும்படி வகை செய்யும் உரிமை கிடையாது. சுற்றியுள்ளவர்கள் மரியாதைக்கும், மதிப் பிற்கும் ஒரு மன்னன் உரியவனுக இருந்தாலும் அவனுடைய பட்டத்தை வாரிசு பாத்தியத்தில் பெற்ற அவன் சந்ததியார் மதிப்பிற்குரியவர்களில்லாமற் போய்விடலாம். மன்னர் ஆட்சி யில் வாரிசு பாத்தியம் தகாதது என்பதற்கு அசைக்க முடியாத அத்தாட்சி, இயற்கை அன்னை அதை ஆதரிக்கவில்லை என்பது தான். இல்லாவிட்டால் சிங்கம் ஆளவேண்டிய இடத்தில் கழுதையை அமர்த்தி மன்னர் ஆட்சியை இகழ்ச்சிக்குரியதாக செய்திருக்கமாட்டாள்.

இரண்டாவதாக, ஒரு மனிதன் தனக்கு அளிக்கப்பட்ட மரியாதைகளைத் தவிர பிற விருதுகளுக்குரியவனல்ல என்பத னுல் இந்த மரியாதைகளை அளிப்பவர்கள் பின் சந்ததியினரின் உரிமைகளைத் தத்தம் செய்ய உரிமை யற்றவர்கள். அவர்கள் வேண்டுமானுல் "உங்களை எங்கள் தலைவராகத் தேர்ந்தெடுக் கிறேம்" என்று கூறலாமே யொழிய, "உங்கள் குழந்தைகளும், அவர்களுடைய குழந்தைகளும் என்றென்றும் எங்களை ஆளு வார்களாக" என அவர்கள் கூறுவார்களானுல் தங்கள் குழந்தைகளுக்கு தாங்களே தீங்கிழைத்தவர்களாவார் கள். இந்த அறிவற்ற, அநீதியான, இயற்கைக்கு மாறுன

உடன்பாட்டினுல் அடுத்துவரும் ஆட்சியில் மக்கள் ஓர் அயோக்கியன் அல்லது முட்டாளின் ஆளுகைக்கு உட்பட நேரிடும். பல அறிவாளிகள் பரம்பரை வாரிசு பாத்தியதையை இழிவாகவே தங்கள் அந்தரங்கத்தில் கருதி வந்திருக்கின்றனர். ஆனால் இம்மாதிரி தீமைகள் ஒரு தடவை நிலைத்துவிட்டால் அப்புறம் அதை அழிக்கவே முடியாது. அநேகர் அச்சத்தினுலும், மற்றும் பலர் மூட நம்பிக்கையினுலும் அந்த முறைக்கு உட்படுகின்றனர். மக்களில் சக்தி வாய்ந்தவர்கள் முடியாட்சியை ஆதரிப்பதன் மூலம் மன்னனுடன் சேர்ந்து அவனுடைய கொள்ளையில் பங்கு பெறுகின்றனர்.

தற்போதுள்ள அரசர்களின் மூதாதையர்கள் கௌரவமாக அந்தப் பதவி பெற்றனர் என வைத்துக்கொண்டே மேற்குறிப்பிட்டவைகள் கூறப்பட்டன. ஆனால் புராதனம் எனும் திரையை அகற்றிவிட்டு, இவர்களில் முதற் தோன்றியவர் யார் என்று பார்த்தால் அவன் முரடர்களின் முதல்வனுயிருக்கலாம்; அவனுடைய காட்டுமிராண்டித்தனச் செயல்களினுல் கொள்ளையர்களின் தலைவன் எனும் பதவியைப் பெற்றிருக்கலாம்; அவன் தன் அதிகாரத்தையும் துராகிருதச் செயல்களையும் பெருக்கிக் கொண்டதனுல் நிராதரவான சாதுக்கள் தங்களைக் காத்துக் கொள்ளுவதற்காக அவனுக்கு அவ்வப்போது கப்பம் கட்டி வந்திருக்கலாம். ஆனால் முதல் அரசனைத் தேர்ந்தெடுத்தவர்கள் அவனுடைய சந்ததியாருக்குப் பரம்பரைப் பாத்தியமளிக்க விரும்பியிருக்க மாட்டார்கள். ஏனெனில் தங்களுக்கு அரசுரிமை பாத்தியமில்லாமல் மாய்த்துக்கொள்ளுவது அவர்கள் கொண்டிருந்த தட்டுத் தடங்கலில்லாத சுதந்திர வாழ்விற்கு முற்றிலும் மாறுனதாகும். ஆகையால் முடியாட்சியின் ஆரம்பகாலத்தில் பரம்பரை வாரிசுரிமையை உரிமையாகக் கோரிப் பெற்றிருக்க முடியாது. யதேச்சையாகவே ஏற்பட்டிருக்க வேண்டும். பழங்கால வரலாறுகள் பெரிதும் கட்டுக்கதைகளா யிருந்ததனுல் முடியாட்சி தோன்றிச் சில தலைமுறைகளுக்கப்பால் மூடப் பழக்க வழக்கங்களை அடிப்படையாகக் கொண்ட ஒரு கதையைக் கற்பனை செய்து பரம்பரை வாரிசுரிமையை ஏமாந்தவர்களாயிருந்த மக்கள் நம்பும்படிச் செய்திருக்கலாம். ஒரு தலைவர் இறந்து புதுத் தலைவர் வருவதற்கிடையில் நேரிடும் கலவரங்களின் விளைவாக

பரம்பரை வாரிசுரிமையைச் சிறந்த ஏற்பாடு எனச் சிலர் மேற்கொள்ளத் தூண்டியது. ஏனெனில், முரடர்களிடையே ஒழுங்கான தேர்தல் நடப்பது அசாத்தியம். இதனுல்தான் ஆதியில் சௌகரியத்திற்காகத் தோன்றிய ஏற்பாடு இன்று உரிமையெனக் கோரப்படுகிறது.

இங்கிலாந்தை முதல் வில்லியம் கைப்பற்றிய பிறகு அங்கு சில நல்லரசர்கள் ஆட்சி புரிந்திருக்கின்றனர். ஆனுல் பெரும்பாலும் தீய அரசர்கள் ஆட்சியின்கீழ் அந்நாட்டு மக்கள் அவதிப்பட்டு வந்திருக்கின்றனர். ஆனுல் அறிவுள்ள எவனும் **முதல் வில்லியம்** மன்னனின் வாரிசுகள் கௌரவமான முறையில் பட்டம் பெற்ருர்கள் எனக் கூறமாட்டான். இந்த வில்லியம் ஒரு பிரஞ்சுக்காரன்; விபசாரிக்குப் பிறந்தவன்; ஆயுதம் தாங்கிய கொள்ளைக்கூட்டத்தினர் உதவி கொண்டு அந்நாட்டு மக்களின் சம்மதமின்றி அரசுரிமை பெற்றவன். இப்படி அரசுரிமை பெற்றவன் வடிகட்டிய அயோக்கியன். இவனிடம் தெய்வாம்சம் எதுவுமில்லை. ஆகையால் அரசுரிமையில் பரம்பரை வாரிசுரிமை முட்டாள்தனமான ஏற்பாடு என்பதை எடுத்துக்காட்டுவது வீண் வேலை. இந்த முறையைப் போற்றும் அதமர்கள் இருந்தால் அவர்கள் தாராளமாக சிங்கத்தையும் கழுதையையும் ஒரே நிறையில் வைத்துப் பூஜிக்கட்டும். அவர்களுடைய பணிவை நான் பின்பற்றவும் மாட்டேன்; அவர்களுடைய பக்தியைச் சிதைக்கவும் மாட்டேன்.

ஆனுல், மன்னர்கள் ஆதியில் எப்படித் தோன்றினர் என அவர்களைக் கேட்பேன். இந்தக் கேள்விக்கு மூவகைப் பதில் கூறலாம்: (1) சீட்டுக் குலுக்கிப் போட்டு, (2) தேர்தல் மூலம், அல்லது (3) பலாத்காரமாகக் கைப்பற்றி அரசுரிமை பெற்றிருக்கலாம். சீட்டுக் குலுக்கியதன் விளைவாக முதன் முதலில் அரசன் தோன்றியிருந்தால் அடுத்த அரசனும் அம்மாதிரியே பதவி பெறவேண்டுமே யொழிய, பரம்பரை பாத்தியதை மூலமல்ல என்பது தெளிவு. **ஸால்** என்பவன் சீட்டுப் போட்டதன் மூலம் அரசனுனன். ஆனுல் அவனுக்குப் பின் வந்தவர்கள் பரம்பரை பாத்தியதையினுல் வரவில்லை. அந்த அரசன் பட்டத்திற்கு வந்த வரலாற்றிலிருந்து பின் வரவேண்டியவர்கள் பரம்

பரை பாத்தியதை மூலம் பதவி பெறவேண்டும் என்று அவர்கள் எண்ணியதாகக் கூடத் தெரியவில்லை.

ஒரு நாட்டின் முதல் மன்னன் தேர்ந்தெடுக்கப்பட வேண்டுமென்றிருந்தால் அவனுக்குப் பின் வரவேண்டியவர்களும் அதே முறைப்படி தான் வரவேண்டும் என்பதும் தெளிவு. முதல் மன்னனை மட்டுமல்ல, அவனுடைய பரம்பரை வாரிசுகளையும் ஆதியில் தேர்தல் உரிமையுள்ளவர்கள் தேர்ந்தெடுத்தனர் என்பதற்கு கிறிஸ்தவ வேதப்படி முதல் மனிதன் **ஆதாம்*** செய்த பாபத்திற்காக பின்னால் தோன்றிய மக்கள் யாவரும் தங்களது சுயேச்சையை இழந்தனர் என்பதைத் தவிர வேறு எந்த நிகழ்ச்சியையும் சமானமாகக் கூற முடியாது. இந்த உவமையிலிருந்து பரம்பரை வாரிசு முறைக்கு எவ்விதப் பெருமையும் இல்லை. **ஆதாம்** செய்த பாபத்திற்குப்*பின் தோன்றிய மனிதர்களெல்லாம் பாபிகள் எனக் கருதப்பட்டதுபோல முதல் தேர்தலில் வாக்காளர்கள் யாவரும் முடியாட்சிக்கு இணங்கியதும் பரம்பரை வாரிசுரிமைக்கு இணங்கியதாகக் கருதப்பட்டனர். இதன் மூலம் ஆதாமின் பின் தோன்றியவர்கள் சைத்தானுக்கும், முடியாட்சிக்கும் இணங்கியவர்கள், அந்த முறைக்கும் அடிமைகளானார்கள். ஆதாமினால் மக்கள் தூயநிலையை இழந்தனர்; முடியாட்சியினால் மக்கள் தங்களுக்கு இயல்பாயுள்ள அதிகாரத்தை இழந்தனர். இந்த இரண்டு சம்பவங்களாலும் நமது பழைய அந்தஸ்தையும் உரிமையையும் அடைய முடியாமல் தடை செய்யப்பட்டு விட்டோம். இதிலிருந்து ஆதாம் செய்த ஆதிபாபமும், பரம்பரை முடியாட்சி உரிமையும் ஒன்றென்றாகிறது. இது எவ்வளவு மானங்கெட்ட அந்தஸ்து! எவ்வளவு இழிவான பூர்வீகம்! தர்க்கவாதத்தில் பெயர்பெற்றவர்கள் கூட இவ்வளவு பொருத்தமான உபமானத்தைக் கண்டுபிடித்திருக்க முடியாது.

மன்னர் பீடத்தைக் கைப்பற்றியதை யாரும் ஒழுங்கானதென ஆதரிக்க மாட்டார்கள். முதல் வில்லியம் பிரிட்டிஷ் ஆட்சியைப் பலாத்காரமாகக் கைப்பற்றினான் என்பதை யாரும்

* ஆதாம் எனும் முதல் ஆணும் ஈவா எனும் முதல் பெண்ணும் ஈடன் தோட்டத்தில் வளர்ந்த கனியை உண்ணலாகாது எனும் வேதவாக்கை மீறியதனால் பாபம் செய்தனர் என்பது கிறிஸ்தவ சமய வரலாறு.

மறுக்கமாட்டார்கள். ஆங்கில முடியாட்சி தோன்றிய முறையை ஆராய்ந்து பார்த்தால் அதனுடைய அவலட்சணம் தெளிவாகத் தெரியும் என்பதுதான் கலப்பற்ற உண்மை.

பரம்பரை வாரிசு உரிமை கேலிக்கூத்தானது என்பதை விட அதனல் ஏற்படக்கூடிய தீமையே பெரிதும் மானிட வர்க்கத்தின் கவனத்திற்குரியது. பரம்பரை வாரிசுரிமை மூலம் அரச பீடத்திற்கு வருபவர்களெல்லாம் ஞானிகள் குலத்திலுதித்தவர்கள் என்பதற்கு உத்தரவாதமிருந்தால் அது தெய்வ அருள் பெற்றிருக்கும். ஆனல் இந்த ஏற்பாட்டின் மூலம் அறிவிலிகள், கொடியவர்கள், தகாதவர்கள் யாவரும் தாராளமாகப் பட்டத்திற்கு வர இடமிருப்பதனல் கொடுங்கோன்மை தலைதூக்க இடமிருக்கிறது. தாங்களே ஆளப்பிறந்தவர்கள், பிறரெல்லாம் பணிவதற்காக உதித்தவர்கள் என எண்ணுபவர்களுக்கு சீக்கிரத்தில் ஒருவித அகம்பாவமும் மமதையும் தலைக்கேறி விடுகிறது. மனிதக் கூட்டத்திலிருந்து இவர்கள் பட்டத்திற்கு வந்தவர்களாகையினல் பதவியின் முக்கியத்துவத்தினல் இவர்கள் அறிவு கோணலாகிவிடுகிறது. இவர்களைச் சுற்றியுள்ள கூட்டத்திற்கும், வெளியே உள்ள உலகிற்கும் மிகுந்த வித்தியாசம் இருப்பதனல் வெளி உலகின் நலன்களை இவர்கள் அறிந்து கொள்ள முடிவதில்லை. ஆகையினல் அரச பீடமேறும் இவர்கள் அநேகமாக நாட்டிலுள்ளவர்களில் அறியாமை மிகுந்தவர்களாகவும், ஆளத் தகுதியற்றவர்களாகவு மிருக்கின்றனர்.

முடியாட்சியின் மற்றொரு தீமை அந்தப் பதவிக்கு வருபவன் மைனராயிருப்பதனல் ஏற்படுகிறது. மைனர் நீங்கும் வரையில் மன்னனுக்கான அதிகாரம் வகிப்பவன் மன்னனின் சார்பாகச் செயல்புரிவதாகச் சொல்லிக்கொண்டு தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்பைத் துஷ்பிரயோகம் செய்வதற்குச் சந்தர்ப்பமும் தூண்டுதலும் ஏற்படுகிறது. ஓர் அரசன் முதுமைப் பருவமடைந்து உடலும் அறிவும் நலிவுற்றுப்போனல் சுயமாகச் செயல்புரிய சக்தியற்றவனகிவிடுகிறன். இந்த இரு சந்தர்ப்பங்களிலும் யோக்கியப் பொறுப்பற்ற துஷ்டர்கள் மன்னனின் இளமையினலோ முதுமையினலோ ஏற்படும் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக்கொள்ளுவதனல் பொதுமக்கள் பெரிதும் வதைக்கப்படுகின்றனர்.

பரம்பரை வாரிசுரிமைக்குச் சாதகமாகக் கூறப்படும் நம்பத் தகுந்தது போன்ற காரணங்களில் ஒன்று, இந்த ஏற்பாடு உள் நாட்டுச் சண்டை ஏற்படாமல் காப்பாற்றுகிறது என்பதுதான். இந்தக் கூற்று உண்மையானல் இது மிகுந்த கவனத்திற்குரியது தான். இது மனித வர்க்கத்தின் மீது சுமத்தப்பட்ட பொய் களில் மிகவும் கலப்பற்றது. இங்கிலாந்து நாட்டின் வரலாறே இதற்கு எதிரான சான்ருக விளங்குகிறது. இந்தத் துயருற்ற நாட்டில் முப்பது மன்னர்களும், இரு மைனர்களும் முதலாவது வில்லியம் காலத்திலிருந்து ஆட்சி புரிந்திருக்கின்றனர். இந்தக் காலத்தில் 1688-ஆம் ஆண்டு புரட்சியுள்பட எட்டு உள்நாட்டுச் சண்டைகளும் பத்தொன்பது எதிர்ப்புக் கிளர்ச்சிகளும் நிகழ்ந் திருக்கின்றன. ஆகையால் வம்ச பரம்பரை முடியாட்சி அமைதியைப் பாதுகாப்பதற்குப் பதிலாக அமைதியின் அஸ்தி வாரமாயிருக்க வேண்டியவைகளையே தகர்ப்பதற்குக் காரணமா யிருந்திருக்கின்றது.

அரசுரிமைக்கும் வாரிசுரிமைக்குமாக **யார்க்** வம்சத்தாருக் கும் **லங்காஸ்டர்** குடும்பத்தாருக்கும் நிகழ்ந்த போராட்டத்தின் விளைவாய் அநேக ஆண்டுகள் வரை இங்கிலாந்து நாடு ரத்தக் களறியாயிருந்தது*. **ஹென்றி** அரசனுக்கும் **எட்வர்டு** மன்ன னுக்கும் எதிரும் புதிருமாக பன்னிரண்டு சண்டைகளும், பல சில்லறைச் சண்டைகளும் முற்றுகைகளும் நடைபெற்றன. இரண்டு தடவை ஒருவன் மற்றவனிடம் கைதியாக இருந்தான். யுத்தத்தின் போக்கும், தேசமக்கள் மனப்பாங்கும் நிலையானதல்ல வாகையாலும், சொந்தப் பிணக்குகளே சண்டைக்குக் காரணமா யிருப்பதனாலும், ஒரு சமயம் ஹென்றி சிறைக்கூடத்திலிருந்து அரண்மனைக்கு மேளவாத்தியத்துடன் ஊர்வலமாக அழைத்துச் செல்லப்பட்டான்; எட்வர்டு அரண்மனையிலிருந்து அந்நிய நாட்டுக்கு ஓடித் தஞ்சமடையவேண்டி யிருந்தது. மனக்

*இவ்விரு குடும்பத்தாருக்குள் ஆங்கில அரச பீடத்திற்காக நடந்த சண்டைக்கு 'வார்ஸ் ஆப் தி ரோஸஸ்' (Wars of the Roses) என்று பெயர். யார்க் குடும்பத்தின் சின்னம் வெள்ளை ரோஜாவும் லங்காஸ்டர் குடும்பத்தின் சின்னம் சிவப்பு ரோஜாவுமானதால் அப் போர்களுக்கு இப்பெயர் சூட்டப் பட்டது. ஆருவது ஹென்றி 1422 இலிருந்து 1461 வரையிலும், நான்காவது எட்வர்டு 1461 இலிருந்து 1483 வரையிலும் ஆட்சிபுரிந்தனர். இந்த ரோஜா வம்சப் போராட்டம் இவ்விரு மன்னர்களுக்குள் நடந்தது.

கொதிப்பு நிலையாயிருக்கக் கூடியதல்லவாதலால் ஹென்றி அரச பீடத்திலிருந்து விரட்டப்பட்டு எட்வர்டு மீண்டும் பட்டத்திற் களைக்கப்பட்டான். பார்லிமெண்ட் எப்பொழுதும் வலியவனையே ஆதரித்து வந்தது.

இந்தப் போராட்டம் ஆருவது ஹென்றி ஆட்சியில் தொடங்கி ஏழாவது ஹென்றி காலத்தில் முற்றிலும் ஓயவில்லை. பிந்திய அரசன் காலத்தில் சண்டையிட்ட குடும்பங்கள் ஒன்று பட்டன. இந்த ரோஜாச் சண்டைகள் அறுபத்தேழு ஆண்டுகளுக்கு நிகழ்ந்தது. அதாவது 1422 இலிருந்து 1489 வரை.

சுருங்கக் கூறினல், முடியாட்சியினுலும் வம்சபரம்பரை வாரிசு பாத்தியத்தினுலும் இங்கொரு நாடு அங்கொரு நாடாக மட்டுமல்ல, உலகமெங்கும் ரத்த வெள்ளமாகவும் சாம்பர்க் குவியல்களாகவும் காட்சியளித்தன. இந்த ஆட்சி முறை ஆண்டவன் அருள் பெருதது மட்டுமல்ல, அது உள்ள இடத்தில் ரத்தம் சிந்தியே தீரும்.

ஓர் அரசனுக்கு என்ன வேலை இருக்கிறது என்று ஆராய்ந்தோமானுல் சில நாடுகளில் அவர்களுக்கு எவ்வித வேலையுமில்லை என்பதைக் காண்போம். தங்களுக்கும் சந்தோஷமின்றி நாட்டு மக்களுக்கும் நன்மையின்றி சோம்பித்திரிகிருர்கள் முடிமன்னர்கள் என்பதை அறிவோம். அவர்கள் உலக அரங்கை விட்டு மறைந்ததும் அவர்களுடைய வாரிசுகளும் இதே சோம்பேறிகளாக வளைய வருகிருர்கள். மன்னர்கள் யதேச்சாதிகாரிகளாயுள்ள நாடுகளில் சிவில் நிர்வாகமும் ராணுவ ஆதிக்கமும் அவர்கள் கையிலிருக்கின்றன. தங்களுக்கு அரசன் வேண்டும் என்று இஸ்ரேல் மக்கள் கோரியபொழுது ''எங்கள் குணதோஷங்களை மதிப்பிட்டு, எங்கள் முன்சென்று எங்களுக்காகப் போர்புரிய''வே அரசன் வேண்டும் என வேண்டினர். ஆனுல் மன்னன் நீதிபதியாகவோ, தளபதியாகவோ பொறுப்பு வகிக்காத இங்கிலாந்து மாதிரி நாடுகளில் அவனுக்கு என்ன வேலை இருக்கிறது என்பதை அறிய முடியாமல் திகைத்துப்போவோம்.

எந்த ஆட்சி கிட்டத்தட்ட குடியரசு மாதிரி இயங்குகிறதோ அந்த நாட்டில் அரசனுக்கு வேலை குறைவாகவே இருக்கும். இங்கிலாந்தின் ஆட்சிக்குச் சரியான பெயர் காண்பது சற்று கடினம்தான். ஸர் **வில்லியம் மெரிடித்** எனும் அரசியல் நூலா

சிரியரும், கடற் படை மந்திரியாயிருந்தவரும் அதைக் குடியரசு என்கிறார். ஆனால் இப்போதுள்ள நிலையில் அது குடியரசுப் பெயருக்கு அருகதையற்றது. ஏனெனில் எல்லாப் பதவிகளும் மன்னர் பொறுப்பிலிருப்பதால் அவன் அதை ஒழுங்காக விநியோகிக்காத தீயபோக்கினால் அரசியலமைப்பில் குடியரசு அம்சமுள்ள மக்கள் சபை (பார்லிமெண்ட்) யின் அதிகாரம் விழுங்கப்பட்டு நல்ல அம்சங்கள் மங்கி மறைந்து போய்விட்டன. ஆகையால் இங்கிலாந்தின் ஆட்சி பிரான்ஸ் அல்லது ஸ்பெயின் மாதிரி முற்றிலும் முடியாட்சி தான். பெயர்களின் பொருள்களைப் புரிந்துகொள்ளாமல் மக்கள், ஒருவருக்கொருவர் பகைமை பூண்டு விடுகிறார்கள். ஆங்கில அரசியலமைப்பில் குடியரசு அம்சங்களைப் பற்றி அந் நாட்டு மக்கள் பெருமைகொள்ளுகின்றனரே யன்றி முடியாட்சி அம்சங்களைப்பற்றி யல்ல. அதாவது தங்களுக்குள்ளிருந்து பார்லிமெண்டிற்குப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் உரிமை பற்றியே பெருமை பாராட்டுகின்றனர். ஆகையால் குடியரசு நற்பண்புகள் பயனற்றுப் போனதனால் அடிமைத்தனம் நிலவு கிறது. ஆங்கில அரசியலமைப்பு ஏன் நோய்வாய்ப்பட்டது போலிருக்கின்றது? ஏனெனில், அரசப் பகுதி குடியரசுப் பகுதிக்கு விஷம் வைத்துவிட்டது; மக்கள் சபையை முடியரசு ஆட்கொண்டு விட்டது.

போர் தொடுப்பதும் பதவிகள் அளிப்பதும் தவிர, இங்கிலாந்தில் மன்னருக்கு வேறு வேலையில்லை. இதற்குப் பொருள் என்னவெனில் நாட்டு மக்களை ஓட்டாண்டிகளாக அடித்து அவர்களை அடக்கி ஆளுவது என்பதுதான். வருடத்திற்கு 800,000 பவுன் பெற்று வருபவனுக்கு வெகு லட்சணமான வேலை தான் இது! இதற்காக அவனை வேறு வணங்கி வழிபடுகின்றனர்! முடிதாங்கிய முரடர் கூட்டங்களைவிட சமூகத்தில் ஒரு நாணயஸ்தன் இருந்தால் அவனே ஆண்டவன் கண்ணில் மேம்பட்டவன்.

அமெரிக்காவின் தற்கால நிலவரம் பற்றிச் சில சிந்தனைகள்

பின்வரும் பக்கங்களில் நான் சில உண்மைகளேயும், மேற்பூச்சில்லாத தெளிவான வாதங்களேயும், சாமானிய அறிவுக் கொத்தவைகளேயுமே எடுத்துக் கூறப்போகிறேன். இதைக் கூறுவதற்கு முன் வாசகர்களுக்கு ஒரே ஒரு வேண்டுகோள். அவர்கள் எதையும் வெறுப்புடனே அல்லது முன்கூட்டியே முடிவு செய்து விட்டோ ஆராயலாகாது; தன் உணர்ச்சிகளும் அறிவும் போகும் வழியில் முடிவு செய்யவேண்டும்; மனிதப் பண்பைக் கைவிடாமல் தற்காலத்தை மட்டுமின்றி எதிர்காலத்தையும் நினைத்து, தங்களது கருத்துக்களைத் தாராளமாக வெளியிட வேண்டும்.

இங்கிலாந்துக்கும் அமெரிக்காவுக்கும் போராட்டத்தைப் பற்றிப் பல நூல்கள் எழுதப்பட்டு விட்டன. சமூகத்தில் பல்வேறு அந்தஸ்திலிருப்பவர்களும் இந்த விவாதத்தில் கலந்து கொண்டிருக்கின்றனர். பங்கு கொண்டவர்களின் நோக்கமோ திட்டமோ வெவ்வேருக இருக்கலாம். ஆனல் விவாதம் எவ்வித பயனுமளிக்கவில்லே. இப்போது சர்ச்சை முடிவடைந்து விட்டது. கடைசியாக ஆயுத உதவி கொண்டே பிரச்னேக்கு முடிவு காணவேண்டும் என சவால் விடப்பட்டது. இதை இந்தக் கண்டம் ஏற்றுக்கொண்டு விட்டது.

அவரது திட்டங்கள் தற்காலிக பயனளிக்கக்கூடியவை என மக்கள் சபையில் குறை கூறப்பட்டபொழுது காலஞ்சென்ற **பெல்ஹாம்*** ''அவை என் ஆயுள் காலம் மட்டும் நீடிக்கும்'' என பதில் கூறினராம். அழிவுக்கு வழி காட்டும் ஆண்மை யற்ற இம்மாதிரி கருத்துக்கள் தற்போதுள்ள நிலேயில் குடியேற்ற நாட்டு மக்களின் மனத்தில் இடம் பெறுமானல் பின்வரும் சந்ததிகள் தங்களுடைய மூதாதையரை வெறுப்புடன் தான் மதிப்பார்கள்.

இதைவிட உன்னதமான இயக்கத்தை உலகம் கண்டிருக்க முடியாது. இது ஒரு நகரம், கவுண்டி, மாகாணம், அல்லது

---

* இப் பெயர் கொண்ட இருவரில் எவரை ஆசிரியர் குறிப்பிடுகின்ருர் என்று தெரியவில்லே. இருவரும் ஆங்கில ஆட்சியில் மந்திரிகளாயிருந்தவர்கள் தான்.

ஒரு ராஜ்யத்தைப் பொறுத்ததல்ல; ஒரு கண்டத்தை அதாவது உலகத்தில் மனிதர் வசிக்கத்தக்க பகுதியில் அரைக்கால் பங்கு நிலப் பரப்பின் நல்வாழ்வைப் பொறுத்தது. இது ஒரு நாள், அல்லது ஓர் ஆண்டு, அல்லது ஒரு சகாப்தத்தை மட்டும் பாதிக்கும் பிரச்னையல்ல. இந்த விவாதத்தின் முடிவினுல் பின் சந்ததியாரின் நல்வாழ்வே பாதிக்கப்படலாம். தற்போதைய விவாதம் உலகமுள்ள அளவும் மனித சமுதாயத்தின் நலனைப் பாதிக்கலாம். இந்தக் கண்டத்தின் ஒற்றுமை, நம்பிக்கை, தன்மானம் யாவற்றையும் காப்பதற்கு வித்தூன்ற வேண்டிய காலம் இதுதான். ஒரு குண்டூசி நுனியால் இளம் மரக்கிளையில் பொறிக்கப்பட்ட பெயர் மரம் வளர வளரப் பெரிதாவது மாதிரி, இப்பொழுது சிறு இழுக்கு ஏற்பட்டாலும் எதிர்காலத்தில் அது பெருங்கேடாக விளையும்.

வாதத்திலிருந்து போருக்குத் தாவுவதன் மூலம் அரசியலில் ஒரு புதிய சகாப்தம் உதயமாகி விட்டது. புதிய முறையில் சிந்தனை திரும்பத் தொடங்கி விட்டது. ஏப்ரல் பத்தொன்பதாம் தேதி, அதாவது சண்டை தொடங்குவதற்கு (1775-ஆம் ஆண்டு) முன் வகுத்த திட்டங்கள், யோசனைகள் அவைகளெல்லாம் பழைய வருடப் பஞ்சாங்கம் மாதிரி, அவைகள் சென்ற ஆண்டுக்குப் பொருந்தலாமே யொழிய இப்போது காலங் கடந்தவை, பயனற்றவை. அப்பொழுது இருதரத்தாரும் சமர்ப்பித்த வாதங்கள் ஒரே முடிவையே ஆதரித்தன. பிரிட்டனுடன் ஒன்றுபட வேண்டும் என்பதே அந்த முடிவு. அவர்களுக்குள் வித்தியாசத்திற்குக் காரணமாயிருந்த விஷயம் அந்த ஒற்றுமையை எந்த முறையில் அடைவது என்பது பற்றித்தான். ஒரு சாரார் பலாத்காரத்தால் அடையலாம் என்றனர்; மற்ருெரு சாரார் நட்பு முறையால் முடியும் என்றனர். ஆனுல் இதுவரையில் நிகழ்ந்தவைகளைப் பார்த்தால் பலாத்கார வழி தோற்றுவிட்டது, நட்பு வழி செல்வாக்கிழந்து பின்தங்கி விட்டது.

சமரசத்தினுல் ஏற்படக்கூடிய நன்மைகளைப் பற்றி மிகுதியாகப் பேசப்பட்டு விட்டது. அது ஓர் ஆசைக் கனவு மாதிரி, நம்மைப் பழைய நிலையிலேயே விட்டு விட்டு மறைந்துவிட்டது.

ஆகையால் இனி இங்கிலாந்துடன் ஒன்றுபட்டு அந்நாட்டை நம்பியிருப்பதனுல் இந்தக் குடியேற்ற நாடுகளுக்கு ஏற்பட்ட, இனியும் ஏற்படக்கூடிய தீமைகளைப்பற்றி ஆராயவேண்டியது நியாயமாகும். அந்தத் தொடர்பையும், அந்நாட்டின் உதவியை எதிர்நோக்கி யிருப்பதையும் இயற்கை, சாமானிய அறிவு எனும் அடிப்படைகளில் ஆராய, நாம் பிரிந்தால் எதை நம்பி வாழ முடியும், நீடித்து இணைந்து இருந்தால் பிரிட்டனிட மிருந்து என்ன எதிர்பார்க்கலாம் என்பனவற்றை ஆராய வேண்டும்.

பிரிட்டனுடன் சேர்ந்திருந்ததனுல் அமெரிக்கா தழைத் தோங்கியிருக்கிறது. எதிர்காலத்தில் இனிய வாழ்க்கை நடத்த அந்தத் தொடர்பு நீடிக்கவேண்டும் என்று சிலர் கூறுகின்றதை நான் கேட்டிருக்கிறேன். மேலும், இந்த இனிய விளைவு என் றென்றும் அவ்வாறே இருக்கும் எனவும் அவர்கள் சாதிக்கின் றனர். இதைவிட அபத்தமான வாதம் இருக்க முடியாது. இதைவிட, குழந்தை, பாலினுல் வளர்ந்ததனுல் அதற்கு மாமிச உணவு அளிக்கலாகாது எனவும் நமது முதல் இருபது வருட வாழ்க்கையே அடுத்த இருபது ஆண்டு வாழ்க்கைக்கு முன் மாதிரி யாயிருக்க வேண்டு மெனவும் சாதிக்கலாம். ஆனுல் இந்த வாதம் உண்மைக்குப் புறம்பானது. அமெரிக்காவில் எந்த ஐரோப்பிய நாடும் கால் வைக்காமலிருந்தால் இப்பொழுது போலவே செழிப்பாயிருக்கும் என்பது மட்டுமல்ல, இன்னும் மிகுதியான வளம் பெற்றிருக்கும் என்று பறைசாற்ற நான் தயாராயிருக்கிறேன். பிரிட்டன் எந்த வர்த்தகத்தினுல் பொருள் குவித்திருக்கிறதோ அந்த வர்த்தகப் பொருள்கள் மக்கள் வாழ்க்கைக்கு ஜீவாதாரமானவை. ஐரோப்பிய நாட் டினர் உண்பதைக் கைவிடாதிருக்கும் வரையில் அந்தப் பொருள்களுக்கு அந் நாடுகளில் கிராக்கி இருந்துகொண்டு தானிருக்கும்.

பிரிட்டன் நம்மைப் பாதுகாத்து வந்திருக்கிறதே என்று சிலர் கூறுகின்றனர். நம்மை பிரிட்டன் ஆக்கிரமித்துக்கொண்டு விட்டது என்பது உண்மை. இந்தக் கண்டத்தை நமது செல விலும், அதன் செலவிலும் அது பாதுகாத்து வந்திருக்கிறது என்பதையும் ஏற்றுக்கொள்ளலாம். வியாபாரப் பெருக்கத்துக்

காகவும் ஆதிக்கம் செலுத்தவும் நமது நாட்டைப் பாதுகாத்தது போல் அது துருக்கியையும் பாதுகாத்திருக்கும்.

பழங்கால விருப்பு வெறுப்புக்களும், மூடப் பழக்கங்களுக்கு நாம் காணிக்கை செலுத்தி வந்ததும் இதுவரை நம்மைத் தவறுகளுக்கு ஆளாக்கிவிட்டது மிகுந்த பரிதாபம். இங்கிலாந்து நமக்கு பாதுகாப்பளித்து வந்ததாக நாம் பெருமை யடித்துக் கொள்ளுகிறோம். ஆனால் அந்தப் பாதுகாப்பு அதன் **நலன்களை** வளர்க்கவே ஒழிய நம் மீது ஏற்பட்ட **பாசத்தி**னால் அல்ல என்பதை நாம் நினைத்துப் பார்ப்பதில்லை; **நமது நலனுக்காக** நமது **விரோதிகளிட**மிருந்து பிரிட்டன் நம்மைப் பாதுகாக்கவில்லை. **தனது** நலனுக்காக **தனது விரோதிகளிட**மிருந்து பாதுகாத்தது. அந் நாட்டின் விரோதிகளுக்கு நம் மீது **எவ்விதத்திலும்** பகைமை இல்லை. ஆனால் நாம் பிரிட்டனுடன் சேர்ந்திருக்கும் வரையில் அந் நாட்டின் பகைவர்கள் நம் மீது பகைமை பூண்டு தானிருப்பார்கள். பிரிட்டன் நமது கண்டத்தின் மீதுள்ள ஆதிக்க ஆசையைத் துறந்தாலோ, அல்லது பிரிட்டனுடன் உள்ள உறவை நாம் அறுத்துக்கொண்டாலோ, பிரிட்டன், பிரான்ஸ், ஸ்பெயின் தேசங்களுடன் போர் தொடுத்தாலும் அந் நாடுகளுடன் நாம் நேசமாக வாழலாம். 1756-இலிருந்து 1776-வரை பிரஷ்யாவின் இரண்டாவது **பிரடரிக்** மன்னன், ஆஸ்டிரியா, ருஷ்யா, பிரான்ஸ் நாடுகளுடன் நடத்திய போரால் ஹானோவர் மாகாணம் பட்ட கஷ்டத்தைப் பார்த்தாவது பிரிட்டிஷ் தொடர்பு போன்ற உறவுகளின் அபாயத்தை நாம் அறிந்து கொள்ளவேண்டும்.

குடியேற்ற நாடுகள் ஒன்றுக்கொன்று தாய்நாடான (பிரிட்டன்) மூலமாகத்தான் தொடர்பு கொள்ளக்கூடும் என்று பார்லிமெண்டில் வலியுறுத்திக் கூறப்பட்டது. அதாவது **பென்ஸில்வேனியா**வும், **ஜெர்ஸி**யும், மற்ற பகுதிகளும் இங்கிலாந்து மூலம் சக குடியேற்ற நாடுகள் எனும் உறவு பெறவேண்டும். பரஸ்பர உறவை ஸ்தாபித்துக்கொள்ள இவ்வாறு சுற்றிவளைக்க வேண்டியிருக்கிறது! ஆனால் இது பகைமை ஏற்படக் குறுக்கு வழி என நான் கருதுகிறேன். **அமெரிக்கர்** என்கிற முறையில் பிரான்ஸும், ஸ்பெயினும் நமது விரோதிகளல்ல; விரோதிகளாக இருக்கவும் மாட்டார்கள். ஆனால், **பிரிட்டனின் குடிமக்கள்** என்பதனால் அவர்கள் நமது பகைவர்களாவார்கள்.

ஆனால், பிரிட்டன் நமது தாய் நாடல்லவா என்கின்றனர் சிலர். அவ்வாருனல், அதன் நடத்தைக்கு நாம் வெட்கித் தலை குனிய வேண்டும். விலங்குகள்கூட தங்கள் குட்டிகளை விழுங்குவ தில்லை. காட்டுமிராண்டிகள் தங்கள் குடும்பத்தாருடன் போர் தொடுப்பதில்லை. ஆகையால், இந்தக் கூற்று உண்மையானால், அதனால் பிரிட்டனுக்கு இழுக்குத்தான். இந்தக் கூற்று உண்மையல்ல அல்லது ஒரு சிறிதளவு உண்மை. அரசரும் அவரை அண்டிப் பிழைப்பவர்களும் ''பெற்ற நாடு, தாய் நாடு'' எனும் பதங்களை ரோமன் கத்தோலிக்கப் பாதிரிமார்கள் உபயோகிக்கும் முறையில் உபயோகித்து வருகின்றனர். போப்பாண்டவரையும், அவரது பரிவாரங்களையும் அந்த மதத்தினர் ''தந்தை'' என்றழைப்பதைப்போல் எதையும் நம்பும் மக்களுடைய விசுவாசத்தைப் பெறுவதற்காக முடி யரசுப் பற்றுள்ளவர்கள் பிரிட்டனுக்குத் ''தாய் நாடு'' என்று பெயர் சூட்டியிருக்கின்றனர். அமெரிக்காவின் தாய் நாடு ஐரோப்பாவே யொழிய, இங்கிலாந்தல்ல. **ஐரோப்பாவின் எல்லாப் பகுதிகளிலிருந்தும்** அரசியல் அல்லது மத சுதந் திரத்தை விரும்பி இங்கு வந்தவர்களுக்குப் புது உலகமாகிய நம் நாடு அபயமளித்து வந்திருக்கிறது. அவர்களெல்லாம் தாயின் அன்புமிக்க அரவணைப்பிலிருந்து இங்கு ஓடிவரவில்லை. கொடிய அரக்கனிடமிருந்து தப்பி ஓடிவந்தனர். எந்தக் கொடுங்கோன்மைக்குப் பயந்து ஆதியில் மக்கள் பிரிட்டனி லிருந்து ஓடிவந்தனரோ, அம் மக்களுடைய சந்ததிகளை இன்றைய ஆங்கில ஆட்சியினரும் தொடர்ந்து துன்புறுத்தி வருகின்றனர் என்பது உண்மை.

இங்கிலாந்தின் விஸ்தீரணம் முன்னூற்று அறுபது மைல் நிலப்பரப்புதான். ஆனால் உலகத்தில் மிகப் பரந்த இந் நாட்டில் நம் குறுகிய வித்தியாசங்களையெல்லாம் மறந்து தாராள நோக்குடன் எல்லோருடனும் நேசமாகவே பழகுகிறோம். ஒவ்வொரு ஐரோப்பியக் கிறிஸ்துவனையும் நமது சகோதரனாக பாவிக்கிறோம். இந்தச் சகோதர உணர்ச்சிபற்றி நாம் பெரு மிதம் கொள்ளுகிறோம்.

நாம் உலகத்தாருடன் பழகப் பழக எப்படிப் படிப்படியாக நமது பிராந்திய விருப்பு வெறுப்புக்களைக் கைவிட்டு வருகிறோம்

என்பதை நினைத்துப் பார்த்தால் மகிழ்ச்சி ஏற்படுகிறது. இங்கிலாந்தில் ஒரு கிராமத்தில் பிறந்தவன் இயல்பாகவே மற்ற கிராமவாசிகளுடன் தான் பழகுவான்; ஏனெனில், அவர்களை ஒரே விதமான அக்கறை பிணைக்கிறது. மற்ற கிராமத்தார்களை அவன் ''அண்டை வீட்டினர்'' எனக் கருதுகிறான். தனது கிராமத்தை விட்டுச் சில மைல்கள் அப்பால் சென்றுவிட்டால் தெரு, சந்து என்கிற குறுகிய எண்ணங்களை மறந்து அங்கே சந்திப்பவர்களைத் தனது நகரத்தான் என்று அழைக்கிறான். தனது கவுண்டியைத் தாண்டி வெளியே சென்றால் தனது நாட்டைச் சேர்ந்தவன் என அழைக்கிறான். நாட்டைவிட்டு வெளியே சென்று பிரான்ஸ் அல்லது ஐரோப்பாவின் பிற பகுதிகளில் தனது நாட்டினனைச் சந்தித்தால் அவனை ''இங்கிலீஷ்காரன்'' என மதித்துப் பழகுகிறான். இதே ரீதியில் பார்த்தால் அமெரிக்காவில் சந்திக்கும் எல்லா ஐரோப்பியர்களும் ''ஒரே தேசத்தவர்கள்'' ஆகிறார்கள். ஏனெனில் இங்கிலாந்து, ஹாலந்து, ஸ்வீடன் போன்ற நாடுகள் ஐரோப்பாவைப் பொறுத்தமட்டில் ஒரு நாட்டில் தெரு, கிராமம், நகரம் போன்ற பாகுபாடுகளுக் கொப்பானவையாகவே தோன்றும். ஒரு கண்டத்தை எடுத்துக்கொண்டால் இந்த வித்தியாசங்கள் மிகமிக அற்பமாகவே தோன்றும். இந்த மாகாணமான பென்ஸில்வேனியா மக்களில் மூன்றிலொருவர்கூட ஆங்கிலேயர்களின் சந்ததிகளல்லர். ஆகையால் இங்கிலாந்தைத் 'தந்தை' அல்லது 'தாய்' நாடு என அழைப்பது பொய், சுயநலங் கொண்டது, குறுகிய மனப்பான்மையின் விளைவு, பரந்த மனப்பான்மைக்கு மாறானது என்று நான் மறுதலித்துக் கூறுகிறேன்.

நாம் யாவரும் ஆங்கிலேயரின் சந்ததிகள் என்றே வைத்துக் கொள்ளுவோம். அதனால் என்ன ஏற்படுகிறது? இன்று பிரிட்டன் நமக்கு நேரிடையான விரோதியாகவே வந்துவிட்டதனால் அதற்கும் நமக்கும் முன்பிருந்த உறவு எல்லாம் அற்றுவிட்டது. அந் நாட்டுடன் ஒன்றுபட வேண்டியது நம் கடமை என்று கூறுவது வெறும் கேலிக்கூத்தாகும். இப்போதுள்ள ஆங்கில அரசனின் மூதாதையான அந் நாட்டை வெற்றி கொண்ட முதலாவது வில்லியம் ஒரு பிரஞ்சுக்காரன். இங்கிலாந்தி

லுள்ள பிரபுக்களில் பாதிக்கு மேற்பட்டவர்கள் பிரஞ்சு வழித் தோன்றியவர்களே. இங்கிலாந்தும் நாமும் ஒன்றுபட்டிருக்க வேண்டும் எனும் வாதப்படி பார்த்தால் இன்று பிரிட்டனைப் பிரான்ஸ் ஆளவேண்டும்.

பிரிட்டனும், குடியேற்ற நாடுகளும் ஒன்றுபட்டால் ஏற்படக் கூடிய பலத்தைப்பற்றியும், அந்தப் பலத்துடன் உலகத்தையே எதிர்த்து நிற்கலாம் என்பதைப்பற்றியும் பிரமாதமாகப் பேசப் படுகிறது. இது நிரூபிக்க முடியாத அநுமானம். யுத்தம் எப்படி முடியும் என்பதுபற்றித் திட்டமாகக் கூறமுடியாது. இந்தக் கூற்று அர்த்தமற்றது. ஆசியா, ஆப்பிரிக்கா, ஐரோப்பா முதலிய இடங்களில் பிரிட்டனை ஆதரித்துப் போர் புரிவதற்காக இந்தக் கண்டம் தனது மக்களின் உயிர்களைத் தியாகம் செய்யத்தயாராயில்லை.

மேலும், நாம் எதற்காக உலகத்தை எதிர்த்து நிற்க வேண்டும்? நமது நோக்கம் வர்த்தகம்; அதை நன்கு கவனித்து வந்தால் அமைதியும், ஐரோப்பாவின் நேசமும் நமக்குக் கிடைக்கும். ஏனெனில், அமெரிக்காவில் சுதந்தரமான துறைமுக வசதி இருப்பது ஐரோப்பா முழுமைக்கும் நல்லது. அமெரிக்காவின் வியாபாரமும், அதனிடம் தங்கமோ, வெள்ளியோ இல்லை என்பதும், அதை ஆக்கிரமிப்பு நோக்க முள்ளவர்களிடமிருந்து பாதுகாக்கும்.

பிரிட்டனுடன் ஒன்றுபட்டிருப்பதனால் இந்த நாட்டிற்கு எள்ளளவு நன்மையுண்டா என்று அமெரிக்க-பிரிட்டன் இணைப்பு வாதிகள் நிரூபித்துக் காட்டட்டும் என அவர்களை நான் அறைகூவி அழைக்கின்றேன்! மீண்டும் அந்தச் சவாலை விடுகின் றேன், இந்த உறவினால் ஒரு நன்மைகூட நமக்குக் கிடையா தென்று. நமது தானியங்கள் ஐரோப்பாவில் எந்தச் சந்தையிலும் வியாபாரமாகும். நமக்குத் தேவையான சரக்குகளை நாம் பணம் கொடுத்துத்தான் வாங்கவேண்டும். அவைகளை எங்கு வேண்டுமானாலும் வாங்குவோம்.

ஆனால், பிரிட்டனுடைய தொடர்பினால் நமக்கு ஏற்படும் சங்கடங்களும், பிரதிகூலங்களும் எண்ணிலடங்கா. நாம் மனித வர்க்கத்துக்கும் நமக்கும் ஆற்றவேண்டிய கடமையே இந்தத் தொடர்பை அறுத்துக்கொள்ளத் தூண்டுகிறது. பிரிட்டனுக்

குட்பட்டோ, அதன் உதவியை நம்பியோ இருந்தோமானுல் நமது இந்தக் கண்டம் ஐரோப்பிய யுத்தங்களிலும் சச்சரவு களிலும் சிக்கிக்கொண்டு தவிக்க நேரிடும். இதனுல் நமது நட்பை விரும்பும் நாடுகளேயும் நமது கோபத்திற்கோ, மனக்குறைக்கோ பாத்திரமாகாத நாடுகளேயும் எதிர்த்து நிற்கவேண்டி வரும். ஐரோப்பாவே நமது சரக்குகள் விற்பனேக்கான சந்தையாயிருப் பதனுல் அதில் எந்தப் பகுதியுடனும் தனி உறவு கொள்ளலாகாது. ஐரோப்பிய கட்சிப் பிரதிகட்சிகளில் ஈடுபடாமலிருப்பதுதான் அமெரிக்காவின் உண்மையான நலனேப் பாதுகாக்கும். ஆனுல் பிரிட்டிஷ் அரசியலில் ஒரு பகுதியாக நாம் தொங்கிக்கொண் டிருந்தோமானுல் ஐரோப்பிய அரசியல் சிக்கலில் மாட்டிக் கொள்ளாமல் தப்பமுடியாது.

ஐரோப்பாவில் அநேக அரசாங்கங்கள் நெருங்கி அமைந் திருக்கும் முறையில் அங்கு அமைதி நீடித்திருக்காது. இங்கிலாந் துக்கும், வேறெந்த அந்நிய அரசுக்கும் போர் மூளுமானுல் **பிரிட்டனுடன் நாம் கொண்டுள்ள தொடர்பினுல்** நமது வியாபாரம் நசித்துப்போய்விடும். அடுத்த போர் முந்தியதைப்போலவே தான் நடக்கும் என்று கூறுவதற்கில்லே, அப்படி பிந்திய யுத்தம் மாறுபட்டிருக்குமானுல் இன்று பிரிட்டனுடன் சமரசமா யிருக்கவேண்டுமென வாதாடுபவர்கள் அப்பொழுது பிரிந்து போகவேண்டும் என வற்புறுத்துவார்கள். ஏனெனில், போர் புரிவதைவிட நடுநிலேமை வகிப்பது சிறந்த பாதுகாப் பாகும். இயற்கையும், நியாயமும் நாம் பிரிந்து நிற்பதற்கே ஆதாரமா யிருக்கின்றன. இதுவரையில் கொல்லப்பட்ட வர்கள் ரத்தமும் இயற்கையின் அழுகுரலும் ''பிரிந்துபோக இதுவே தருணம்'' என நம்மைக் கூவியழைக்கின்றன. இங்கி லாந்தையும், அமெரிக்காவையும் ஆண்டவன் வெகு தூரத்தில் அமைத்திருப்பதே, ஒரு நாட்டை மற்ருெரு நாடு அடக்கியாள வேண்டும் என்பது ஆண்டவனின் சித்தமல்ல என்பதற்கு இயற்கையான, மறுக்க முடியாத அத்தாட்சி. இந்தக் கண்டம் கண்டுபிடிக்கப்பட்ட காலமும், பிரிந்திருக்க வேண்டும் எனும் வாதத்தை வலியுறுத்துகிறது; இந்தக் கண்டத்தில் எம் மாதிரி மக்கள் குடியேறினர் என்பது பிரிவினே வாதத்தை மேலும் நன்கு உறுதிப்படுத்துகிறது. அமெரிக்காவைக் கண்டு

பிடிப்பதற்கு முன்பே கிறிஸ்துவ மதச் சீர்திருத்த இயக்கம் தோன்றியதைப் பார்த்தால் மத வெறிக் குட்பட்டவர்களுக்குக் கருணையுடன் கடவுள் புகலிடம் காட்டியதாக எண்ண இடமிருக்கிறது. ஏனெனில், தாய் நாட்டில் மத வெறிக் குட்பட்டவர்களுக்கு வீடும் கிடையாது; நண்பர்கள் பாது காப்பும் இல்லை.

இந் நாட்டின் மீது ஆதிக்கம் செலுத்தும் பிரிட்டிஷ் ஆட்சி என்றாவது ஒரு நாள் ஒழிந்தே தீரவேண்டும். ''தற் போதைய அரசியலமைப்பு'' எனப்படும் ஆட்சி முறை தற்காலிகமானதுதான் என்று எண்ணுவதனால், அறிவாற்றல் உள்ள யாரும் மகிழ்ச்சியுற முடியாது. இந்த ஆட்சி முறை நீடித் திருக்கப்போவதில்லை என்று எண்ணுவதனால், பெற்றோர் என்கிற முறையில் நமது சந்ததிகளுக்கு வாரிசு முறையில் விட்டுப் போக விரும்புவதை உத்தரவாதம் செய்யமுடியாது என்பது மகிழ்ச்சிக்குரிய விஷயமல்ல. அடுத்த தலைமுறைக்கு நிச்சயமாக நாம் எதையும் விட்டுப்போக முடியாததனால் அவர்களின் நலனுக்காக நாம் உழைக்கவேண்டி யிருக்கிறது என்பது தெளிவு. இப்படிச் செய்யாவிட்டால் அவர்களை மிகக் கேவலமாக நடத்துகிறோம் என்றுதான் அர்த்தம். நமது கடமையை நேர்மையாக நிர்ணயம் செய்துகொள்ளுவதற்காக இன்னும் சில ஆண்டுகளில் நாம் அடையப்போகும் நிலைமை இப்போதே இருப்பதாகக் கருதி நம் கடமையை நிறைவேற்ற வேண்டும். இப்படிப் பார்த்தால் இன்று நமது அச்சங்களும், விருப்பு வெறுப்புக்களும் மறைத்துக்கொண்டிருக்கும் திரை நீங்கி எதிர்காலம் தெளிவாகத் தெரியும். நமது உயர்வான எதிர் காலத்தை அச்சமும், விருப்பு வெறுப்பும் திரையிட்டு மறைத்து வைத்திருக்கிறது.

பிறரைப் புண்படுத்துவதைத் தவிர்க்கவே நான் விரும்பி னாலும் இரு நாடுகளும் சமரசமாக வாழவேண்டும் எனும் கொள்கையை ஆதரிப்பவர்கள் மூவகைப்பட்டவர்கள் என்று நான் நம்புகிறேன். சுயநலமிகள்—இவர்கள் நம்பத்தகுந்தவர்க ளல்லர்; தேர்ந்த ஞானமற்றவர்கள்—இவர்கள் எதையும் புரிந்துகொள்ள **இயலாதவர்கள்;** விருப்பு வெறுப்புள்ளவர்கள்— இவர்கள் எதையும் **புரிந்துகொள்ள விரும்பமாட்டார்கள்.** சில

மித நோக்கமுள்ளவர்கள் ஐரோப்பாவை அளவுக்கு மீறி மேன்மையுற்றது என்று கருதுவார்கள். கடைசியாகக் கூறப் பட்ட மித நோக்குள்ளவர்கள் தங்களுடைய தவறான போக்கினால் மற்ற மூவகையினரைவிட இந்தக் கண்டத்திற்கு மிகுதியான கேடுகள் விளைவிக்கக் காரணமாயிருப்பார்கள்.

துயரமிக்க சம்பவங்களைப் பார்க்காமல் வெகு தூரத்தில் வசிப்பவர்கள் அதிர்ஷ்டசாலிகள். தீமை இருப்பதுபற்றிப் போதிய அளவு அவர்களுக்கு யாரும் உணர்த்துவதில்லை. ஆகையினால் அமெரிக்கச் சொத்து சுதந்திரங்களுக்கு ஏற்படக்கூடிய அபாயங்களை அவர்கள் உணருவதில்லை. சில காலத்திற்கு நாம் பாஸ்டன் நகரில் வசிப்பதாகக் கற்பனை செய்துகொண்டு பார்ப்போம். பல தீமைகளுக்குள்ளான அந்த நகரம் நமக்கு ஓரளவு புத்தி புகட்டும்; நம் நம்பிக்கையை இழந்து விட்ட ஓர் ஆட்சியுடன் உள்ள உறவை உதறித்தள்ள விரும்புவோம். அந்த துரதிருஷ்டம் பிடித்த **பாஸ்டன்*** மக்கள் சில காலத்திற்கு முன் குபேரர்களாக இருந்து சுகவாசம் செய்தனர். இன்று அவர்கள் பட்டினி கிடந்து பிச்சை யெடுத்துண்ணும் நிலைமைக்கு வந்து விட்டனர். அந் நகரத்தில் நீடித்திருந்தால் நண்பர்கள் அவர்கள் வீடுகளைத் தீயிட்டுக் கொளுத்துவர். வெளியேறினால் போர் வீரர்கள் அவர்களைக் கொள்ளையிடுவர். இந்த இருதலைக் கொள்ளி நிலையிலிருந்தனர் பாஸ்டன் வாசிகள். இந்த நிலைமையில் விடுதலை பெற வழி யில்லாத கைதிகள் போல் அவர்கள் வாழவேண்டியிருந்தது. அவர்களுக்கு நிவாரணமளிக்க முற்படுபவர்கள் இரு ராணுவங்களின் கோபத் திற்கும் உள்ளாவார்கள்.

எந்த நிலையிலும் ஆத்திரமடையாமல் நிதானமாயிருப்பவர்கள் பிரிட்டனின் தவறுகளை அலட்சிய புத்தியுடன் கருதி ''இதற்கெல்லாம் பிணங்கிக்கொள்ளலாமா? பிரிட்டனுடன் நேசமாயிருப்போம், வாருங்கள்'' என அழைக்கக்கூடும். ஆனால்

---

* தங்களுக்குப் பிரதிநிதித்துவமில்லாத ஆட்சியை எதிர்த்து பாஸ்டன் நகர வாசிகள் சிலர் இங்கிலாந்திலிருந்து கப்பலில் வந்த தேயிலையைக் கடலில் எறிந் தனர். இதன் விளைவாக பிரிட்டிஷ் ஆட்சியினர் நிறைவேற்றிய பல சட்டங்கள் மூலம் அந் நகர் மக்களின் உரிமைகளில் பலவற்றைப் பறித்ததனால் அவர்கள் பலவகைகளில் துன்புற்றனர்.

மனித வர்க்கத்தின் உணர்ச்சிகளேயும், உத்வேகத்தையும் ஆராய்ந்து, இயற்கை என்னும் உறைகல்லில் இந்த சமரசக் கொள்கையைத் தேய்த்துப் பார்த்து, தங்களுடைய நாட்டைத் தீயிட்டுக் கொளுத்தி, வாளால் மக்களே மடியவைத்த தாய் நாட்டிற்கு அன்புடன், மரியாதையுடன், நம்பிக்கையுடன் பணிபுரிய முடியுமா என என்னிடம் கூறுங்கள். இவ்வாறு பார்க்க முடியாதென்றால், நீங்கள் உங்களேயே ஏமாற்றிக்கொள்ள விரும்பி முடிவு காணத் தாமதித்து உங்களுடைய பின்சந்ததியாருக்கு நாசத்தை விளேவிக்க விரும்புகிறீர்களா? அன்புகொள்ள முடியாத, மதிப்பளிக்கத் தகாத பிரிட்டனுடன் எதிர்காலத்தில் நீங்கள் கொள்ளும் தொடர்பு வேண்டா வெறுப்புடனும், இயற்கைக்கு மாறாகவும் ஏற்பட்ட தொடர்பாகவே இருக்கும். தற்கால நலத்துக்காக ஏற்பட்ட அந்தத் தொடர்பு கொஞ்ச காலத்தில் நலிவுற்று நிலேமை முந்தியிருந்ததைவிட மோசமாகப் போய்விடும். ஆனால் அவர்கள் செய்யும் தீமைகளே மறந்து விடலாம், அல்லது பொறுத்துக் கொள்ளலாம் என நீங்கள் கருதுவீர்களானால் ''உங்கள் வீடு தீயிட்டுக் கொளுத்தப்பட்டதா?'', ''உங்கள் கண் முன் உங்கள் சொத்து அழிக்கப்பட்டதா?'', ''உங்கள் மனேவியும், குழந்தைகளும் படுக்கப் பாயின்றி, உண்ண ரொட்டித் துண்டின்றி நிர்க்கதியாக விடப்பட்டிருக்கின்றனரா?'', ''அவர்கள் கையால் உங்கள் பெற்றோர், அல்லது குழந்தை கொல்லப்பட்டிருக்கின்றனரா?'', ''அவர்கள் மடிந்த பிறகு நீங்கள் நிராதரவாக விடப்பட்டிருக்கின்றீர்களா?'' என்று கேட்கின்றேன். இம்மாதிரித் தீமைகளுக்கு நீங்கள் உட்படவில்லேயென்றால், கஷ்டப்பட்டவர்கள்போல் பதில் கூற உங்களுக்கு உரிமையில்லே. ஆனால், இம்மாதிரி தீச்செயல்களுக்குட்பட்டும் நீங்கள் கொலேயாளிகளுடன் கைகுலுக்க விரும்பினால் நீங்கள் கணவன், தந்தை, நண்பன், காதலன் எனும் உறவுகொள்ள உரிமையற்றவர்கள். வாழ்க்கையில் உங்கள் நிலே, அல்லது அந்தஸ்து யாதாயிருப்பினும் நீங்கள் கோழையுள்ளம் படைத்தவர்கள்; பிறருக்குத் தாளம் போடும் குணம் படைத்தவர்கள்.

நான் இவ்வாறு கூறுவது மிகைபடுத்திக் கூறுவதோ, அல்லது பிறருக்கு ஆத்திரமூட்டுவதோ ஆகாது. மனிதப்பண்புகளே

யும், ஆசாபாசங்களையும் நமக்கு இயற்கை அளித்திருக்கிறது. அவைகளில்லை யென்றால் நமது சமூகக் கடமைகளை நிறைவேற்றவோ, அவைகளின் பயனைப்பெறவோ அருகதையற்றவர்களாவோம். ஆகையினால் இந்த நற்பண்புகளின் பெயரால் நியாயத்தை எடுத்துக்காட்டவே இவ்வாறு உங்கள் உணர்ச்சிகளைத் தூண்டும் முறையில் எழுதுகிறேன். மக்களிடையே பழிவாங்கும் எண்ணத்தைத் தூண்டுவதற்காக நான் என் கோபத்தையும், அதிர்ச்சியையும் காட்ட விரும்பவில்லை. நாசம் விளைவிக்கக் கூடிய, ஆண்மையற்ற சோம்பலை உதறித்தள்ளி திட்டமான நடவடிக்கை எடுக்கத் தூண்டவே நான் இவ்வாறு வாதாடுகிறேன்.. தாமதத்தினாலும், கோழைத்தனத்தினாலும் தானே வீழ்ச்சியுற்றாலொழிய அமெரிக்காவை வெல்ல பிரிட்டனுக்கோ, ஐரோப்பாவுக்கோ சக்தியில்லை. இந்த ஆண்டு பனிக்காலத்தைச் சரிவரப் பயன்படுத்தினால் ஒரு யுகத்தில் பெறத்தக்க நன்மையை நாம் பெறலாம். ஆனால், பயன்படுத்தத் தவறினால், அல்லது அலட்சியமாயிருந்தால் இந்தக் கண்டமே துர்ப்பாக்கிய நிலையடையும். கிடைத்தற்கரிய பயனுள்ள இந்தச் சந்தர்ப்பத்தை கைநழுவ விட்டவர் யாராயினும், எங்கிருப்பினும் அவனுக்கு எந்தத் தண்டனை விதித்தாலும் போதாது.

இந்தக் கண்டம் இனி ஓர் அயல்நாட்டு ஆட்சிக்கு உட்பட்டிருக்கும் என்று எண்ணுவது அறிவுக்கும், பிரபஞ்ச நீதிக்கும், பழைய சரித்திரச் சான்றுக்கும் ஒவ்வாதது. பிரிட்டனிலேயே நம்பிக்கை தளராதவர்கள் கூட இது சாத்தியம் என்று நம்பவில்லை. பிரிவினையைத் தவிர இந்தக் கண்டத்திற்கு ஓராண்டுக்காவது பாதுகாப்பளிக்கக்கூடிய ஒரு திட்டத்தை எல்லையற்ற அறிவு படைத்தவனால் கூட அமைக்க முடியாது. சமரசம் என்பது அறிவுக்கொவ்வாத கனவேயாகும். பிரிட்டனின் அமெரிக்கப் பிணைப்பை இயற்கையே கைவிட்டு விட்டது. அதை இனி செயற்கையினால் ஈடுசெய்ய முடியாது. ஏனெனில், ஆங்கிலக் கவி **மில்டன்** அறிவுத் தெளிவுடன் கூறுகிறமாதிரி ''தீராப் பகைமை வேரூன்றிய இடத்தில் சமரசம் தோன்றி வளர முடியாது.''

சமாதானத்திற்காக அமைதியாகச் செய்த முயற்சிகள் பயனற்றுப் போய்விட்டன. நமது வேண்டுகோள்கள் யாவும்

அகம்பாவம் நிறைந்த வெறுப்புடன் மறுக்கப்பட்டு விட்டன. மன்னர்களுடைய மமதையும், விடாப்பிடித் தன்மையும் மீண்டும் மீண்டும் நாம் முறையிட்டுக்கொள்ளுவதால் உரம் பெற்றுவிட்டன என்பதை நமக்குத் தெளிவுபடுத்தி விட்டன. மக்களின் பணிவான வேண்டுகோள்கள் மன்னர்களை மேன்மேலும் யதேச்சாதிகாரிகளாகச் செய்துவிட்டன. உதாரணமாக டென்மார்க்கையும், ஸ்வீடனேயும் பாருங்கள். ஆகையால் அடி உதவுவது போல் வேறு எதுவும் உதவாதாகையினுல் எவ்விதத்தாயினும் நாம் பிரிட்டனிடமிருந்து முடிவாகப் பிரிந்து விடுவோமாக. பிரிட்டன் தாய்—நாம் குழந்தைகள் என்னும் அர்த்தமற்ற பேச்சால் நம் சந்ததிகள் சமர்புரிந்து சாகவேண்டாம்.

பிரிட்டன் இனி துராகிருதமாக நடந்துகொள்ளாது என்று நினைப்பது பகற்கனவாகும். ஸ்டாம்புச் சட்டத்தை* அவர்கள் ரத்து செய்தபோது அவ்வாறு தான் நினைத்தோம். ஆனல் ஒன்றிரண்டு ஆண்டுகளிலேயே ஏமாந்து போனோம். இதைக் காணும்போது ஒரு முறை தோற்றுப்போன நாடுகள் மீண்டும் கிளர்ந்து எழாதோ எனக்கூட ஐயமேற்படும்.

அரசாட்சி முறையில் இந்தக்கண்டத்திற்கு நியாயம் வழங்க பிரிட்டனுல் ஒருபோதும் முடியாது. நமது நிலையை அறியாதவர்கள், நமது நாட்டிலிருந்து தூரத்திலிருப்பவர்கள் சுலபமாக நமக்கு நீதியளிக்க முடியாது. ஏனெனில், அவர்கள் கவனித்து முடிவு செய்யவேண்டிய விஷயங்கள் மிக முக்கியமானதும் சிக்கல்கள் நிறைந்ததாகவும் இருக்கும். அவர்கள் நம்மை ஆதிக்கத்துள் வைத்துக்கொள்ள முடியாது என்றுல் நம்மை ஆளவும் முடியாது. ஒரு குறையைத் தெரிவிக்க அல்லது ஒரு மனுவைச் சமர்ப்பிக்க மூன்று அல்லது நான்கு ஆயிரம் மைல் ஓடி, அதற்கு அவர்கள் பதில் கூற நான்கு அல்லது ஐந்து மாதங்கள் காத்திருந்து, அப்படியே பதில் கிடைத்தாலும் அதற்கு விளக்கம் கோரி ஐந்து அல்லது ஆறு மாதம் தவம்

* 1765-ஆம் ஆண்டில் பிரிட்டிஷ் பார்லிமெண்ட் ஒரு ஸ்டாம்புச் சட்டம் நிறைவேற்றியது. அதன்படி செய்தித்தாள்கள், துண்டுப் பிரசுரங்கள், சட்ட பூர்வமான தஸ்தாவேஜுகள் முதலியவைகளுக்கு ரெவின்யூ ஸ்டாம்பு ஒட்டப்படவேண்டும். இதைக்கண்டு அமெரிக்கர் ஆத்திரமடைந்ததனுல் இந்தச் சட்டம் அடுத்த வருடம் ரத்து செய்யப்பட்டது.

கிடந்து—இவ்வாறு சில வருடங்கள் மன்ருடினுல்—இது என்ன முட்டாள்தனமாகவும் சிறுபிள்ளைத்தனமாகவும் இருக்கிறதே என்று நமக்கே சலித்துப் போய்விடும். இதெல்லாம் நியாயம் என்று நினைத்த காலம் ஒன்று உண்டு. அதே மாதிரி இந்த கேலிக்கூத்து நிற்பதற்கும் சரியான காலம் வந்து விட்டது.

தங்களைத் தாங்களே காப்பாற்றிக்கொள்ள இயலாத சிறு தீவுகளை மற்ற ராஜாங்கங்கள் ஏற்றுப் பரிபாலிக்க வேண்டியது நியாயம். ஆனுல் ஒரு பெரிய கண்டத்தை ஒருதீவு என்றென்றும் ஆளவேண்டும் என்பது முட்டாள்தனமானது. சுற்றிவரும் கிரகங்கள் மத்திய கிரகத்தை விடப் பெரிதாக இருப்பதற்கு உதாரணமே காணமுடியாது. இங்கிலாந்துக்கும் அமெரிக்காவுக்கும் உள்ள உறவு இயற்கைக்கு மாருனது. இங்கிலாந்து ஐரோப்பாவைச் சார்ந்தது. அமெரிக்கா அமெரிக்காவைச் சார்ந்தது. இதை யாரும் எளிதில் புரிந்துகொள்ளலாம்.

நான் பிரிவையும் சுதந்திரத்தையும் ஆதரிக்கிறேன் என்ருல் அதற்கு அகம்பாவமோ, கட்சி அபிமானமோ, பிரிட்டனிடம் வெறுப்போ காரணமல்ல. சுதந்திரமும் பிரிவும் இந்தக் கண்டத்தினுடைய நன்மைக்கே என்பதில் எனக்குத் தெளிவாக, தீர்மானமாக, மனச் சாட்சிக்கொப்பான நம்பிக்கை இருக்கிறது. இதற்குக் குறைவான எந்த நிலையும் தற்காலிகமானது; அதனுல் நீடித்த நலன் எதுவும் கிட்டாது. சுதந்திரமில்லாது விடுவது நமது சந்ததியார்களைப் போர் புரிய விட்டு விடுவதற்கு ஒப்பாகும். சற்றும் நிதானிக்காமல் உடனடியாக நாம் பிரிவினைக்கு ஏற்பாடு செய்தால் இந் நாட்டை உலகோர் பார்த்துப் போற்றிப் புகழும் நிலைக்குக் கொண்டுவந்து விடலாம்.

சமரசத்திற்குத் தயாராயிருப்பதாக பிரிட்டனிடமிருந்து எவ்வித சூசகமும் தென்படாததால் நாம் ஏற்றுக்கொள்ளத் தக்க எந்த நிபந்தனைக்கும் அவர்கள் இணங்கமாட்டார்கள். நாம் ஏற்கனவே சிந்திய ரத்தம், இழந்த சொத்து இவைகளுக்கு ஈடாக அவர்கள் எதையும் அளிக்கமாட்டார்கள்.

நாம் கோரும் லட்சியத்திற்கும், அதற்காக நாம் செய்யப் போகும் தியாகத்திற்கும் ஓரளவு ஈடு இருக்கவேண்டும். பல கோடி பணம் நாம் செலவு செய்ததற்குக் கேவலம்

நார்த் பிரபு* வையோ அல்லது அவருடைய வெறுக்கத்தக்க சகாக்களையும் சேர்த்தோ பதவிகளிலிருந்து நீக்குவது போதிய பிரதிப் பிரயோசனமாகாது. நாம் கோரியபடி சட்டங்கள் ரத்து செய்யப் பட்டிருந்தால் அதனால் ஏற்படும் வர்த்தகத் தடையை நாம் பொறுத்துக்கொள்ளலாம். கேவலம் ஒரு மந்திரி சபையை எதிர்ப்பதற்காக நமது நாடே போர்க்கோலம் பூண்டு, ஒவ்வொரு பிரஜையும் சிப்பாயாக மாறுவது அளவுக்கு மீறிய சங்கடங்களை மேற்கொள்ளுவதாகும். சட்ட ரத்து மட்டும் நமது கோரிக்கையானால், அதற்காக நாம் அளவுக்கு மீறிய தியாகம் செய்துவிட்டோம். பங்கர் குன்று எனும் இடத்தில் நாம் பிரிட்டிஷாருடன் போரிட்டுத் தோல்வியுற்றோம். கேவலம் ஒரு சட்டத்தை எதிர்த்து அவ்வளவு நஷ்டமடைந்தது நிலத்திற்கு அகாத விலை கொடுத்து வாங்குவதை விடக் கொடியதாகும். இன்றைக்கில்லாவிட்டாலும் நாளைக்கோ, அப்புறமோ இந்த நாடு சுதந்திரம் பெற்றே தீரும் என்பது என் நம்பிக்கை. சமீபத்தில் இந் நாடு அடைந்துள்ள முன்னேற்றத்திலிருந்து சுதந்திரம் பெறும் நன்னாள் வெகு தூரத்தில் இல்லை; காலக்கிரமத்தில் காரியம் கைகூடவிருக்க போர் ஆரம்பத்தில் இது அவசியம்தானா என்று சர்ச்சை செய்து வீண்பொழுது போக்கி யிருக்கவேண்டியதில்லை. இப்படி விவாதம் செய்து கொண்டிருப்பது காலாவதியாகப் போகும் குத்தகைக்காரனுடைய ஆக்கிரமிப்பைத் தடுக்க சொத்தையே செலவு செய்து சட்ட மன்றத்தில் வாதாடுவதற் கொப்பாகும். 1775 ஏப்ரல் பத்தொன்பதாம் தேதிக்கு (லெக்ஸிங்டன் படுகொலைக்கு) முன் சமரசத்தில் என்னைப் போல் நம்பிக்கை யாரும் வைத்திருக்க முடியாது. அன்றைய படுகொலையைப் பற்றி நான் அறிந்ததிலிருந்து கல் நெஞ்சுக்கார மூன்றும் ஜார்ஜ் ஆட்சியை ஏற்க மறுத்தேன். மக்களின் தந்தை என்று பட்டம் சூட்டிக்கொண்டு மக்கள் படுகொலையைப் பற்றிக் கேட்டும் நிம்மதியாகத் தூங்கிய அந்தப் படுபாவியை நான் மனமார வெறுக்கிறேன்.

---

*அமெரிக்கப் புரட்சி நிகழ்ந்த காலத்தில் பிரிட்டனில் பிரதம மந்திரியாக **நார்த் பிரபு** பதவி வகித்தார். அரசனின் கையாளாயிருந்த இவரைப் பதவியிலிருந்து நீக்கிவிட்டால், பிரிட்டிஷ் ஆட்சியினர் குடியேற்ற நாட்டு மக்களுக்கு இழைத்த கொடுமைகள் குறையலாம் என சில அமெரிக்கர் நம்பினர்.

இப்பொழுது எல்லாம் சமரசமாகப் போய்விட்டது என்று வைத்துக்கொண்டாலும் அதன் விளைவு என்ன? இந்தக் கண்டத்தின் நாசம் தான் என்று நான் நிச்சயமாகக் கூறுவேன். அதற்குப் பல காரணங்கள் கூறலாம்.

1. ஆட்சி புரியும் அதிகாரம் இன்னமும் அரசனின் கையில் தானிருக்கிறது. இந்தக் கண்டத்தின் சட்டங்களில் எதையும் அவன் அங்கீகரிக்காமல் நிராகரித்துவிடலாம். சுதந்திரத்தின் தீராப் பகைவன் என்றும், தீர்க்க முடியாத யதேச்சாதிகார தாகம் கொண்டவன் என்றும் அவன் நிதர்சனமாகக் காட்டி விட்டதனால் இந்த நாட்டைப் பார்த்து, ''என் இஷ்டத்திற்கு மாறாக நீங்கள் எந்தச் சட்டமும் இயற்றலாகாது'' என்று கூற அவன் எள்ளளவும் யோக்கியதையற்றவன். ''தற்போதைய அரசியலமைப்பு'' எனப்படும் ஏற்பாட்டின்படி அரசன் அநுமதி யளித்தால்தான் சட்டமியற்ற முடியும் என்பதை அறியாத முட்டாள் யாராவது இந் நாட்டிலிருக்கின்றனா? ஏற்கனவே நிகழ்ந்தவைகளைப் பார்த்துவிட்டு, தனது நலனுக்கு ஏற்றது என்று அரசன் நினைப்பதைத் தவிர, வேறு சட்டங்கள் இயற்ற அவன் அநுமதிக்கமாட்டான் என்பதை உணர முடியாத அறிவிலிகள் யாரேனும் இந் நாட்டில் இருக்கின்றனரா? இங்கிலாந்தில் இயற்றப்படும் சட்டங்களுக்கு உட்படுவதைவிட எவ்விதச் சட்டமுமே இயற்றாமல் நம்மை வன்மையாக அடிமைப் படுத்தலாம். இப்போதுள்ள தகராறுகள் நேர்செய்யப்பட்டதும் அரசனுக்குள்ள எல்லா அதிகாரங்களையும் கொண்டு இந்த நாடு மிகத் தாழ்ந்த, பணிவான நிலையில் இறுக்கி வைக்கப்படும் என்பதில் சந்தேகம் உண்டா? முன்னேறுவதற்குப் பதிலாக நாம் பின்னேக்கிச் செல்லுவோம், அல்லது சதா சச்சரவு செய்துகொண்டோ அல்லது அசட்டுத்தனமாக மன்னருக்கு மனுச் செய்துகொண்டோ இருப்போம். அரசன் விரும்புவதை விட இன்று நாம் மேலான நிலையில் இருக்கிறோம். இனி அவன் நம்மைத் தாழ்த்தவே முனையமாட்டானா? சுருங்கக் கூறின், நமது சுபிட்சத்தைக் கண்டு பொறாமைப்படும் ஓர் அரசு நம்மை ஆளத் தகுதியுள்ளதா? இதற்கு 'இல்லை' என பதில் கூறுபவனே சுதந்திரவாதி. சுதந்திரம் என்றால் என்ன? நமது சட்டத்தை நாம் இயற்றினாலும் சரி, அரசன் இயற்றினாலும்

சரி—இந்த நாட்டின் பரம வைரியான அரசன், ''நான் விரும்புவதற்கு மாறான சட்டம் இருக்கலாகாது'' என்று கூறும் உரிமை அவனுக்கு இருக்கலாகாது.

இங்கிலாந்திலும் பார்லிமெண்ட் இயற்றும் சட்டத்தை நிராகரிக்க மன்னனுக்கு அதிகாரம் உண்டு என நீங்கள் கூறலாம்; அவனுடைய அநுமதியின்றி மக்கள் அங்கே சட்டம் இயற்ற இயலாது. நியாயம் என்கிற முறையில் பார்த்தாலும், ஒழுங்கு எது என்கிற அடிப்படையில் பார்த்தாலும், இருபத்தோரு வயது இளைஞன் (இந்த வயதில் பலர் பட்டத்திற்கு வந்திருக்கின்றனர்) அவனைவிட வயதான, புத்திசாலித்தனம் மிகுந்தவர்களைப் பார்த்து, ''உங்களுடைய சட்டம் செய்யும் உரிமையை மறுக்கிறேன்'' என்று கூறலாம் என்பது மிகுந்த கேலிக்கூத்தா யிருக்கிறது. ஆனால் அரசனின் தகுதியின்மையை வெட்டவெளிச்சமாக்க எப்பொழுதுமே நான் தயாராயிருந்தாலும் இப்போது இம்மாதிரியான பதிலளிக்க நான் விரும்பவில்லை. மன்னனின் வாசஸ்தலம் இங்கிலாந்தே, அமெரிக்காவல்ல என்பதனால் நிலைமை முற்றிலும் மாறிவிடுகிறது. அரசனின் மறுதலிக்கும் உரிமை இங்கிலாந்திலிருப்பதைவிட நம் நாட்டில் பிரயோகித்தால் பன்மடங்கு அதிகக் கொடுமை விளைவித்து நாசத்திற்கு வழிகாட்டும். ஏனெனில், இங்கிலாந்தைப் பலம் வாய்ந்த கோட்டையாக்குவதற்கான எந்த மசோதாவையும் அவன் நிராகரிக்கத் துணியமாட்டான். ஆனால் அதே மசோதாவை அமெரிக்காவில் நிறைவேற்ற அவன் அநுமதிக்க மாட்டான்.

பிரிட்டிஷ் அரசியலில் அமெரிக்கா இரண்டாம்பட்சமான இடமே வகிக்கிறது. தனது நலனுக்குத் தேவையான அளவுக்குத்தான் பிரிட்டன் இந்த நாட்டின் நலனைப்பற்றிச் சிந்திக்கிறது. ஆகையால் தனது சொந்த நலனை உத்தேசித்து நமது நாட்டு வளர்ச்சியைத் தடை செய்ய வேண்டியிருக்கிறது. அதனுடைய அபிவிருத்திக்கு அநுகூலமாயில்லாத அல்லது தடை செய்யக் கூடிய எதையும் அது எதிர்க்கவே விரும்பும். ஏற்கனவே நிகழ்ந்தவைகளை எண்ணிப் பார்த்தால் இம்மாதிரி இரண்டும் கெட்ட ஆட்சியினால் நாம் வெகு சீக்கிரத்தில் மோசமான நிலையடைவோம். கேவலம் ஒரு பெயரை மாற்றுவதால் பகை

வர்கள் நண்பர்களாக மாறிவிட மாட்டார்கள். பிரிட்டனுடன் சமரசம் என்பது அபாயகரமான கொள்கை என்பதைக் காட்டுவதற்காக, **மீண்டும் நம் அபிமானத்தைப் பெறுவதற்காக நாம் விரும்பாத சட்டங்களை ரத்து செய்வது சிறந்த தந்திரமாயிருக்கலாம் என்றும், நிர்ப்பந்தத்தினாலும், பலாத்காரத்தினாலும் உடனடியாகச் சாதிக்க முடியாததைத் தந்திரத்தினாலும் சூழ்ச்சியினாலும் நாளடைவில் சாதித்துக்கொள்ளலாம் என்பதே அரசனின் நோக்கமாயிருக்கும் என நான் துணிந்து கூறுவேன்.** சமரசத்திலிருந்து நாசம் விளையும் என்றே கூறலாம்.

2. மிகச் சிறந்த சலுகைகள் கிடைக்கும் என நாம் எதிர்பார்த்தாலும் அவைகள் தற்கால சாந்தியாகவோ, அல்லது மைனர் சொத்தை வயது வரும்வரை கார்டியன் நிர்வகிப்பது போலவோ அமையலாமாகையால் இடைக்கால நிலை நீடித்த நன்மையளிக்காமல் அதிருப்திகரமாயிருக்கும். நித்தியக் கண்டமாயுள்ள ஆட்சியும், தினசரிக் குழப்பமும், கொந்தளிப்பும் நிகழும் நாட்டில் யாரும் குடியேறமாட்டார்கள் என்பதுடன், தற்சமயம் தங்கள் தங்கள் சொத்துக்களை விற்றுவிட்டு வெளியேறி விடவும் கூடும்.

சுதந்திரமான ஆட்சிதான் இந்தக் கண்டத்தின் அமைதியைக் காத்து உள்நாட்டுச் சண்டைகள் நிகழாமல் தவிர்க்கும் என்பதுதான் சமரசத்திற்கு எதிராகக் கூறக்கூடிய அழுத்தமான வாதம். பிரிட்டனுடன் இப்பொழுது சமரசம் ஏற்படுத்திக் கொள்ளுவதென்பது எனக்குத் திகிலூட்டுகிறது. ஏனெனில், ஒரு புறம் சமரசம் ஏற்பட்டவுடன் மற்றொரு பக்கத்தில் கிளர்ச்சி அல்லது எதிர்ப்பு அமளி ஏற்படலாம். அப்படி ஏற்பட்டால் பிரிட்டனின் கொடுஞ் செயல்களால் ஏற்படக் கூடியதைவிடப் பயங்கரமான விளைவுகள் ஏற்படலாம்.

பிரிட்டிஷ் மூர்க்கத்தனத்தினல் ஆயிரக்கணக்கானவர்கள் அழிந்துவிட்டனர்; இன்னும் பல்லாயிரம் பேருக்கு அதே கதி கிட்டலாம். கஷ்டப்படாத நம்மைவிட அவர்கள் உணர்ச்சி வேறு மாதிரியாயிருக்கும். அவர்களுக்கு இன்றுள்ள உடைமையெல்லாம் சுதந்திரம் ஒன்றுதான். முன்பு அவர்கள் அநுபவித்த நலன்களையெல்லாம் சுதந்திரப் பணியில் தியாகம் செய்து விட்டனர். இனிமேல் அவர்கள் இழப்பதற்கு ஒன்று

மில்லையாகையால் கைகட்டிப் பிழைப்பதை அவர்கள் வெறுக்கின்றனர். மேலும் பிரிட்டிஷ் ஆட்சியிடம் காலனி மக்களுக்குள்ள ஆத்திரம், பருவத்தை மீறின இளைஞனின் நிலைக் கொப்பாகும். அவர்கள் பிரிட்டனை லட்சியம் செய்யமாட்டார்கள். அமைதியைக் காக்க முடியாத ஆட்சி ஆட்சியேயல்ல. அம்மாதிரி ஆட்சிக்கு நாம் எதற்காக வரி கொடுக்கவேண்டும்? பிரிட்டிஷ் ஆட்சி எட்டளவில் இருந்தால், சமரசத்திற்குப் பின் உள்நாட்டுச் சண்டை நேர்ந்தால் அதை அடக்கப் பிரிட்டனால் என்ன செய்யமுடியும்? யோசனை செய்யாமல் பேசும் பலர் சுதந்திரம் கிட்டுவதைப் பற்றித் தாங்கள் அச்சமுறுவதாகக் கூறுகின்றனர். ஏனெனில், சுதந்திரம் வந்தால் உள்நாட்டுக் குழப்பம் ஏற்படும் என்பது அவர்கள் எண்ணம். நம் மனத்தில் முதன் முதலில் தோன்றும் எண்ணம் சரியாக அமைவது துர்லபம். இந்த விஷயத்திலும் இதுவே உண்மையாகப் போய்விட்டது. சுதந்திரத்தைவிட சரியாக அமையாத உடன்பாட்டினால்தான் பன்மடங்கு அதிகமான அபாயங்கள் நேரிடலாம். பிறர் கஷ்டத்தை என் கஷ்டமாகப் பாவிக்கின்றவன் நான். என்னை ஒருவன் நிற்க இடமின்றி விரட்டி என் சொத்தை அழித்து என்னை நிலை தடுமாறச் செய்தானானால் தீமையை அநுபவித்து உளம் கொதித்த நான் சமரசத்தை விரும்ப முடியாது. அதற்கு நான் கட்டுப்பட்டதாகவும் கருத முடியாது.

ஒழுங்கான ஆட்சிக்கு உட்பட்டு ஒழுங்கில் பற்றுள்ளவர்களாகவே காலனி மக்கள் நடந்துகொண்டு வந்திருக்கின்றனர். இதைக் குறித்து சாமானிய புத்தியுள்ள எவனும் நிம்மதியாக இருக்கலாம்; மகிழ்ச்சியுமடையலாம். சுதந்திரம் வந்தால் ஒரு காலனி மற்றொரு காலனியை ஆட்கொள்ள விரும்பும் என அச்சம் கொள்ளுவது சிறுபிள்ளைத்தனமானது; நகைத்தற்குரியது.

வித்தியாசங்களே இல்லாத இடத்தில் உயர்வு தாழ்வு இருக்க முடியாது. பூரண சமத்துவம் நிலவுகையில் பிறரை ஆட்கொள்ளும் ஆசைக்கு இடமில்லை. ஐரோப்பியக் குடியரசுகள் அமைதியாகவே வாழ்கின்றன. ஹாலந்திலும், ஸ்விட்ஜர்லாந்திலும் உள்நாட்டுச் சண்டையோ அயல்தேசப் போரோ

இல்லை. முடியாட்சிகளில் நீடித்த அமைதி இருப்பதில்லை என்பது உண்மை. முடியாட்சியே உள்நாட்டு முரடர்களுக்கு வம்பு விளைவிப்பதற்குத் தூண்டுகோலாகும். இயற்கைக் கொத்த கொள்கை அடிப்படையில் குடியரசு அமைவதனுல் சமரசமாகத் தீரும் விவகாரங்கள் மமதையும் அகம்பாவமும் பிடித்த முடியாட்சியினர் கையில் சண்டையாக மாறுகின்றன.

சுதந்திரத்தைக் கண்டு உண்மையிலேயே அச்சமுற வேண்டுமானுல் அதற்கு ஒரே காரணம் சுதந்திர ஆட்சிக்கான திட்டம் இதுவரை வகுக்கப்படாததுதான். எப்படித் திட்டமிட்டால் அமைதியாக வாழலாம் என்பதற்கு வகையறியாமல் மக்கள் இருக்கின்றனர். ஆகையால் அதற்கு வழிகாட்டும் முறையில் சில குறிப்புகளை அளிக்கிறேன். என் யோசனைகளை ஆராய்வதன் மூலம், அதைவிடச் சிறந்த வழியைத் தெரிந்து கொள்ளலாம் என்ற நோக்குடன் இவைகளை வெளியிடுகிறேன் எனத் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். தனிப்பட்டவர்களின் சிதறுண்ட கருத்துக்களை நன்ருக திரட்ட முடியுமானுல் அவைகளைக் கொண்டு அறிவாளிகள், திறமைசாலிகள் உருவான பயனுள்ள திட்டங்களை வகுக்கலாம்.

ஒரு தலைவர் மட்டும் கொண்ட சட்டசபை ஆண்டுக்கொரு முறை கூடட்டும். எல்லாப் பகுதிகளுக்கும் சமப் பிரதிநிதித்துவம் இருக்கவேண்டும். அவர்கள் உள்நாட்டு விஷயங்களையே ஆலோசிப்பார்கள். அவர்களுடைய முடிவுகள் மத்தியப் பொது ஸ்தாபனமான காண்டினென்டல் காங்கிரஸின் சம்மதத்திற் குட்பட்டிருக்கவேண்டும்.

ஒவ்வொரு காலனியையும் ஆறு, எட்டு அல்லது பத்து சௌகரியமான ஜில்லாக்களாகப் பிரிக்கவேண்டும். ஒவ்வொரு ஜில்லாவும் குறிப்பிட்ட எண்ணிக்கை பிரதிநிதிகளை காங்கிரசுக்கு அனுப்பவேண்டும். ஒவ்வொரு காலனிக்கும் குறைந்தது முப்பது பிரதிநிதிகளாவது இருக்கவேண்டும். காங்கிரசின் மொத்தப் பிரதிநிதிகள் குறைந்தபட்சம் முன்னூற்றுத்தொண்ணூருவது இருக்கவேண்டும். பின்வரும் முறைப்படி ஒவ்வொரு காங்கிரசும் கூடி ஒரு தலைவரைத் தேர்ந்தெடுக்கவேண்டும். பிரதிநிதிகள் கூடியவுடன் சீட்டுக் குலுக்கிப் பதின்மூன்று காலனிகளில் ஒன்றைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அப்படித் தேர்ந்

தெடுக்கப்பட்ட காலனியின் பிரதிநிதிகளிலிருந்து காங்கிரஸ் அங்கத்தினர்கள் வோட்டுச் சீட்டு மூலம் ஒருவரைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கவேண்டும். அடுத்த காங்கிரஸில், முந்திய வருடம் தலைவர் தேர்ந்தெடுக்கப்பட்ட காலனி நீங்கலாக மற்ற காலனிகளிலிருந்து சீட்டுப்போட்டு ஒரு காலனியைத் தேர்ந்தெடுத்து அவர்களிலிருந்து தலைவர் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இவ்வாறாக தலைவரைத் தேர்ந்தெடுக்கும் உரிமையை பதின்மூன்று காலனிகளுக்கும் முறையே வழங்கவேண்டும். திருப்தியளிக்கக்கூடிய, நீதியான முறையில் சட்டங்கள் இயற்றுவதற்காக எந்தச் சட்டமும் காங்கிரசில் ஐந்தில் மூன்று பங்கு பிரதிநிதிகளின் அங்கீகாரம் பெற்றிருக்கவேண்டும். இம்மாதிரி நீதியாக அமைந்த அரசாங்கத்தின் பிளவுக்கு அடிகோலுபவன் * லூஸிபருடன் சேரத்தக்கவனே.

இந்த ஏற்பாட்டை யார் முதலில் தொடங்குவது, எப்படித் தொடங்குவது என்பது தர்ம சங்கடமானதனாலும், ஆளுபவர்களுக்கும் ஆளப்படுபவர்களுக்கும் இடையிலுள்ளவர்கள் இதைத் தொடங்குவதே திருப்திகரமானதனாலும் பின்வரும் முறைப்படி ஒரு காண்டினன்டல் காங்கிரஸ் கூட்டுவதே சிறந்தது.

காலனிக்கு இருவராக இருபத்தாறு காங்கிரஸ் பிரதிநிதிகள் கொண்ட ஒரு கமிட்டி நியமிக்கவேண்டும். ஒவ்வொரு ராஜ்ய அசெம்பிளி அல்லது கன்வென்ஷனிலிருந்து இரு பிரதிநிதிகளும், மக்கள் பிரதிநிதிகள் ஐவரும் ஒவ்வொரு மாகாணத் தலைநகரில் மாகாணத்தின் சார்பாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். இந்தக் காரியத்திற்காக மாகாணத்தின் பல பாகங்களிலிருந்தும் வாக்குரிமை யுள்ளவர்கள் கூடித் தேர்தல் நடத்த வேண்டும். சௌகரியம் என்று கருதப்படுமானால் மாகாணத்தில் ஜனத்தொகை மிகுந்த இரண்டு அல்லது மூன்று இடங்களில் இந்தத் தேர்தல்களை நடத்தலாம். இப்படிக் கூட்டப்பட்ட மகாநாட்டில் அறிவும் அதிகாரமும் உள்ளவர்கள் ஒன்றுகூடிச் செயல் புரிவதுதான் இதில் தனிச் சிறப்பு. காங்கிரஸ் அல்லது அசெம்பிளிகள் அல்லது கன்வென்ஷன்கள் இவ்வாறு தேசீய

* கிறிஸ்துவ வேதத்தில் சைத்தான் என்று குறிப்பிடப்படுபவனின் பெயரே லூஸிபராகும்.

விஷயங்களை ஆலோசிப்பதில் அநுபவம் பெற்ருல், இதில் அங்கம் வகிப்பவர்கள் திறமைமிக்க, பயன் அளிக்கத்தக்க ஆலோசகர்களாக அமைவார்கள். இவர்கள் யாவரும் மக்கள் ஆதரவு பெற்றுச் செயல்புரிவார்களாகையால் இவர்கள் செய்யும் முடிவுகள் சட்டபூர்வமான அதிகாரமுள்ளவைகளாயிருக்கும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட அங்கத்தினர்கள் கூடியதும் எல்லா காலனிகளுக்குமான ஒரு சாசனத்தைத் தயார் செய்யவேண்டும். இது இங்கிலாந்தில் மக்கள் சுதந்திரத்தின் அடிப்படையான **மாக்ஞ கார்ட்டா** எனும் சாசனத்தை 1215-ஆம் ஆண்டில் ஆங்கிலப் பிரபுக்கள் **ஜான்** எனும் அரசனிடமிருந்து வலியப் பெற்ற சாசனம்போல் நாம் தயாரிக்கும் சாசனம் அமைய வேண்டும். அந்த சாசனத்தில் காங்கிரஸ் அல்லது மாகாண சபைகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய அங்கத்தினர்களின் எண்ணிக்கை, அவர்களைத் தேர்வு செய்யும் முறை, முதல் கூட்டம் கூட்டவேண்டிய தேதி, அவைகளின் அதிகார வரம்பு எல்லாம் திட்டம் செய்யப்பட வேண்டும். எல்லா காலனிகளுக்குமான காண்டினன்டல் காங்கிரஸின் பலம்தான் நமக்கு ஆதாரமே யொழிய மாகாண சபைகளல்ல என்பதை மறந்துவிடலாகாது. இந்த சாசனத்தில் சொத்துரிமை, மனச் சாட்சிப்படி மத வழிபாடுகள் செய்யும் உரிமை, இன்னும் சாசனத்திற்கு வேண்டிய பிற அம்சங்களும் அடங்கியிருக்க வேண்டும். இந்த சாசனத் தயாரிப்பு முடிந்தவுடன் மகாநாடு கலைந்து விடவேண்டும். சாசனத்தின் ஷரத்துக்களை யொட்டித் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களே தற்போதைக்கு சட்டமியற்றும் உரிமையும் இந் நாட்டை ஆளும் உரிமையும் பெற்றவர்களாவார்கள். அவர்கள் நிம்மதியாகவும், இன்பகரமாகவும் வாழ ஆண்டவன் அருள்புரிவானுக!

இம்மாதிரிப் பணிகள் ஆற்றும் உரிமை பெறப்போகிறவர்களுக்கு ஆட்சியைப் பற்றி **டிராகொனெட்டி*** எனும் அரசியல் விவேகியின் அறிவுரைகளை இங்கு சமர்ப்பிக்கின்றேன். அவர்

* டிராகொனெட்டி ஓர் இத்தாலிய அறிஞர். 1738-இல் பிறந்து 1818-இல் மறைந்தார். அரசியல் சாஸ்திரம் பற்றிப் பல நூல்களை இவர் எழுதியுள்ளார்.

கூறியுள்ளதாவது: ‘‘அரசியல்வாதியின் வேலை என்னவெனில், சுக வாழ்க்கைக்கும் சுதந்திரத்திற்கும் அடிகோலுவதாகும். நாட்டிற்குக் குறைவான செலவில் தனிப்பட்டோருக்கு மிகுதியான சந்தோஷத்தை அளிக்கவல்ல ஆட்சி முறையை வகுக்க வல்லவன் என்றென்றும் மக்களின் நன்றிக்குப் பாத்திரமாயிருப்பான்.’’ இவ்வாறு **டிராகொனெட்டி** தமது ‘நற்குணங்களும் அதன் வெகுமதியும்’ எனும் நூலில் குறிப்பிட்டிருக்கிறார்.

ஆனால் அமெரிக்காவின் அரசன் எங்கிருக்கிறான் எனச் சிலர் கேட்கின்றனர். நண்பரே! அவர் விண்ணிலே இருக்கின்றார் என நான் கூறுவேன். **அவர்** பிரிட்டனில் வசிக்கும் விலங்கையொத்த மன்னன் எனும் பெயர் பூண்டவன் மாதிரி மனித வர்க்கத்தை வதைக்கமாட்டார். நாம் உலக மரியாதைகள் அற்றவர்கள் எனப் பிறர் நினைக்காதபடி இந்த சாசனத்தைப் பிரகடனம் செய்ய ஒரு நன்னாள் குறிப்பிடுவோம். அது ஆண்டவன் அருளியது என்று கூறிப் பிரசாரம் செய்வோம். அந்த சாசனத்தின் மீது ஒரு மகுடத்தைச் சூட்டுவோம். இதிலிருந்து நாம் முடியாட்சியை ஆதரிப்பதாயிருந்தால் அமெரிக்காவில் **சட்டம்தான் அரசன்** என்பதை உலகம் அறிந்துகொள்ளட்டும். யதேச்சாதிகார ஆட்சியில் மன்னனே சட்டமாயிருப்பது போல் சுதந்திர நாடுகளில் சட்டம்தான் மன்னனாயிருக்க வேண்டும். அது தவிர வேறு அரசன் இருத்தலாகாது. இதே பழக்கம் நீடித்திருந்து தீய விளைவுகள் ஏற்படாமலிருக்க, சட்டத்திற்கு முடிசூட்டி முடிந்தவுடன் அந்த முடியைச் சிதைத்து மக்களுக்குப் பங்கிட்டுக் கொடுக்க வேண்டும். ஏனெனில் சட்டமியற்றுவது மக்களின் உரிமை.

நமக்குத் தேவையான ஆட்சியை அமைப்பது நமது பிறப்புரிமை. மனித வாழ்வு நிலையற்றது என்பதை ஒருவன் ஆழ்ந்து சிந்தனை செய்து பார்த்தால், நமக்கு சந்தர்ப்பமும் சக்தியுமிருக்கையில் நிதானித்து, தீர்மானமாக நமக்குத்தேவையான அரசியலமைப்பை வகுத்துக்கொள்ளுவது சிறந்ததேயொழிய, இந்த முக்கியமான பணியைக் காலப்போக்குக்கு விட்டுவிடுவது நன்மையல்ல. இப்பொழுதே நாம் அரசியலமைப்பு வகுக்கவில்லை யென்றால், எவனாவது ஒரு சூழ்ச்சிக்

காரன் தோன்றி மக்கள் அதிருப்தியைக் கிளறிவிட்டு, முரடர்களையும், துஷ்டர்களையும் சேர்த்துக்கொண்டு, தானே ஆட்சி பீடத்தைக் கைப்பற்றி, நாட்டு மக்களின் உரிமைகளை வெள்ளம் அடித்துக்கொண்டு போவதுபோல் பாழாக்கிவிட முடியும். அமெரிக்க ஆட்சி மீண்டும் பிரிட்டனின் கைக்குப் போய்ச் சேருமானால் அதனால் ஏற்படக்கூடிய தடுமாற்றமான நிலையை, எப்படியாவது ஆட்சிக்கு வர ஆசைப்படும் பேராசைக்காரன் பயன்படுத்திக்கொள்ளத் தூண்டும். இந்த நிலை ஏற்பட்டால் பிரிட்டன் நமக்கு என்ன பரிகாரமளிக்க முடியும்? இந்த நிலை பற்றிய செய்தி பிரிட்டனுக்கு எட்டுமுன் குழப்பம் நாட்டை விழுங்கி விட்டிருக்கலாம். பிரிட்டனைக் கைப்பற்றிய முதலாவது வில்லியத்தின் கொடுங்கோன்மையின் கீழ் அந் நாட்டு மக்கள் தவித்த மாதிரி நாம் தவிக்க வேண்டியதுதான். இன்று சுதந்திரத்தை எதிர்ப்பவர்கள் தாங்கள் என்ன செய்கின்றனர் என்பதை அறியாதவர்கள். ஆட்சிபீடத்தைக் காலியாக வைத்திருப்பதன் மூலம் நீடித்த கொடுங்கோன்மை உள்ளே புக, கதவைத் திறந்துவைத்தவர்களாவீர்கள். இந்நாட்டிலுள்ள இந்தியர்களையும், நீக்ரோக்களையும் நம்மை அழித்துவிடும்படித் தூண்டிய நரகவாசிகளான நாசகாரக் கும்பலைப் பூண்டோடு அழிப்பது பெருத்த புண்ணியம் எனக் கருதுபவர்கள் இந் நாட்டில் பல்லாயிரக்கணக்கில் இருக்கின்றனர். இந்தக் கொடுமை இரண்டு வகையில் குற்றமிழைக்கிறது. நம்மைக் காட்டுமிராண்டித் தனமாக நடத்தியது ஒரு குற்றம். இந்தியர்களையும் நீக்ரோக்களையும் தூண்டியதன் மூலம் அவர்களுக்குத் துரோகம் செய்தது மற்றோர் குற்றம்.

யாரிடம் நம்பிக்கை வைக்கலாகாது, அன்பு பாராட்டுதல் கூடாது என நம் அறிவு வற்புறுத்துகிறதோ அவர்களை—ஆயிரமாயிரம் வகைகளில் நம்மைத் துன்புறுத்தியவர்களை—நாம் வெறுக்கவேண்டியிருக்க அவர்களுடன் நட்புரிமை பாராட்ட வேண்டும் என்று கூறுவது பைத்தியக்காரத்தனம் மட்டுமல்ல, முட்டாள்தனமுமாகும். நம்மிடையேயுள்ள சொற்ப பாசமும் நாளுக்கு நாள் தேய்ந்துவருகிறது. உறவு குறையக் குறைய நம்மிடையே அன்பு பெருகும் என்று நம்புவதற்கு இடமேது? முன்னைவிடப் பன்மடங்கு அதிகமாக முரண்படுவதற்கு இட

மேற்பட்டு வருகையில் அவர்களுடன் எப்படி உடன்பட்டு வாழ முடியும்?

ஒருமைப்பாட்டைப்பற்றியும், சமாதானத்தைப் பற்றியும் ஓயாமல் பேசுபவர்களை நான் கேட்கிறேன், 'கடந்த காலத்தைத் திருப்பிக்கொண்டுவர முடியுமா' என்று. விபசாரம் போனவளிடம் அவள் இழந்த கற்பைக் காணமுடியுமா? அவ்வாறே பிரிட்டனையும், அமெரிக்காவையும் திரும்ப இணைக்க முடியாது. நம்மைப் பிணைத்திருந்த கடைசிச் சரடு அறுந்து விட்டது. ஆங்கில மக்கள் நம்மீது குற்றம் சாட்டி மன்னரிடம் முறையிடுகின்றனர். நமக்கு ஏற்பட்ட தீங்குகளுக்கு இயற்கை இனி ஈடுசெய்ய முடியாது. அப்படி ஈடுசெய்ய முடியுமானல் அது இயற்கை ஆகாது. காதலியின் கற்பையழித்தவனைக் காதலன் மன்னித்தாலும் மன்னிக்கலாம்; பிரிட்டன் புரிந்த கொலைகளை இந்நாடு மன்னிக்க முடியாது. அழிக்க முடியாத இந்தக் கருத்துக்களை நல்ல காரியத்திற்காகவே ஆண்டவன் நம்முள் புகுத்தியிருக்கிருன். அந்த எண்ணங்கள் நமது உள்ளத்தில் அமைந்த ஆண்டவன் உருவுக்குப் பாதுகாப்பாளர்கள். இந்த எண்ணங்கள்தான் நாம் மிருகங்கள் அல்ல என்று நிரூபிக்கின்றன. நாட்டுப் பாசத்தை நாம் மறந்தோமானல் ஆட்சிக்கும் மக்களுக்கும் உள்ள சமுதாய ஒப்பந்தம் மறைவதுடன் நீதி என்பதே உலகத்தில் அற்றுப்போய்விடும். நமக்குத் தீங்கு ஏற்படுகையில் ஆத்திரமடைந்து நீதியை நாம் நாடாவிட்டால் திருடனும் கொலைகாரனும் தண்டனை பெறுமல் தப்பிவிடுவார்கள்.

மனித வர்க்கத்தை நேசித்து மதிப்பவர்களே! கொடுங்கோன்மையை மட்டுமல்ல, கொடுங்கோலனையும் எதிர்ப்போர்களே! பழைய உலகம் பூராவும் கொடுமைக்குள்ளாகித் தவிக்கிறது. சுதந்திரம் உலகெங்கும் விரட்டியடிக்கப்படுகிறது. ஆசியாவும், ஆப்பிரிக்காவும் அதை நாடு கடத்தி விட்டன. ஐரோப்பா சுதந்திரத்தை அறியாத அந்நியன் மாதிரி நோக்குகிறது. இங்கிலாந்து அதற்கு வெளியேற்ற உத்தரவு பிறப்பித்துவிட்டது. அந்த அகதியை வரவேற்கத் தயாராயிருங்கள்! சீக்கிரத்தில் மனித வர்க்கத்திற்குப் புகலிடம் தயார் செய்யுங்கள்.

அமெரிக்காவின் தற்காலத் தகுதியும் கதம்பமான சில சிந்தனைகளும்

என்றாவது ஒரு நாள் பிரிட்டனும் அமெரிக்காவும் பிரிந்தே யாகவேண்டும் எனும் கருத்தை ஆதரிக்காதவர்களில் ஒருவரைக்கூட இரு நாடுகளிலும் நான் சந்தித்ததே இல்லை. சுதந்திரத்திற்கு இந் நாடு தகுதி பெறவேண்டும், பக்குவம் அடையவேண்டும் என்று கூறுவது பகுத்தறிவுக்கு லட்சண மல்ல.

எல்லோரும் சுதந்திரத்திற்கான பக்குவமடையவேண்டும் என்பதில் ஒற்றுமை காட்டுகின்றனர். அந்தத் தருணம் எப்போது வரும் என்பதில்தான் அபிப்பிராயபேதமடைகின்றனர். ஆகை யால் நிலையைப் பரிசீலனை செய்து அந்தத் **தருணம்** எப்போது வரும் என்பதைப் பார்ப்போம். ஆனால் இதற்கு நீண்ட ஆராய்ச்சியே தேவையில்லை. ஏனெனில், சுதந்திரத்திற்கான பக்குவம் அடைந்தே விட்டோம். இது உண்மை என்பதை ஒன்றுபட்ட சூழ்நிலை நிரூபித்துக்காட்டுகிறது.

நமது பலம் நமது எண்ணிக்கையில் அல்ல; நாம் காட்டும் ஒற்றுமையில்தான் அமைந்திருக்கிறது. ஆனாலும் நமது தற் போதைய ஜனத்தொகை உலகத்தின் சக்தியையே எதிர்த்து நிற்கப் போதுமானது. உலகத்திலுள்ள எல்லா ராஜ்யங்களையும் விட இந்நாட்டில் ஆயுதம் தாங்கிய, கட்டுப்பாடு நிறைந்த வீரர்கள் அதிகமாயிருக்கின்றனர். இப்போது நமக்குள்ள பலம் எப்படி யிருக்கிறதென்றால், எந்தக் காலனியும் தனித்து நின்று தன்னைக் காத்துக்கொள்ள முடியாது. ஆனால் எல்லா காலனிகளும் ஒன்றுபட்டு நின்றால் எந்த நிலையையும் சமாளித்து விடலாம். இதைவிட அதிக பலம் இருந்தாலும், குறைவாக இருந்தாலும் கேடே விளையக்கூடும். நமக்குத் தரைப்படை போதிய அளவு இருக்கிறது. கடற் படையைப் பொறுத்த மட்டில் நம் நாடு பிரிட்டனின் ஆதிக்கத்தில் இருக்கும் வரை யில் நம்மைக் கடற் படை அமைக்க அந் நாடு அநுமதிக்காது. ஆகையினால் இதே நிலை நீடிக்குமானால், இன்னும் நூறு ஆண்டு களுக்கப்புறம்கூட நாம் கடற் படை அமைக்க முடியாது. பார்க்கப்போனால் கப்பல் கட்டும் வசதி போகப் போகக்

குறைந்துகொண்டே வரும். ஏனெனில், நமது காடுகளிலுள்ள மரங்களெல்லாம் அழிந்து வருகின்றன. எஞ்சி நிற்கும் மரங்கள் தூரத்திலிருப்பதுடன் அவைகளை நாம் விலைக்கு வாங்கிக் கொண்டுவர முடியாது.

இந்த நாட்டின் ஜனத்தொகை அதிகரித்தால் இப்போதுள்ள நிலையில் அவர்கள் சொல்லொணுத் துன்பங்களை அநுபவிக்க நேரிடும். நமக்கு அதிகத் துறைமுகங்கள் இருந்தால் அவைகளைப் பாதுகாக்க அதிகச் செலவாவதுடன் அதனுல் நஷ்டமும் மிகுதியாயிருக்கும். நமது தற்போதைய ஜனத்தொகையும் அவர்கள் வாழ்க்கைக்கான வசதிகளும் சமமாயிருப்பதனுல் யாரும் வேலையில்லாமல் சோம்பிக் கிடக்கவேண்டாம். நமது வர்த்தகம் குறைந்தால் அதைச் சரிக்கட்ட படைபலத்தைப் பெருக்கலாம். அதிலிருந்து படையினரின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக வர்த்தகம் பெருகும்.

தற்சமயம் நமக்குக் கடன் தொல்லை இல்லை. அப்படியாகக் கடன் வாங்க நேரிட்டாலும் அது நற்குண நற்செயல்களுக்குப் புகழ்மிக்க சான்ருகும். நமது சந்ததியாருக்கு நிலையான அரசாங்கத்தை அமைத்துக் கொடுத்துவிட்டுப் போனோமானுல், சுதந்திரச் சிறப்புள்ள அரசியலமைப்பாக அது அமையுமானுல், அதற்காக நாம் எவ்வளவு கஷ்டப்பட்டாலும் அது மிகையாகாது. ஆனுல் சில தீய சட்டங்களை ரத்து செய்வதற்காகவும், கேவலம் ஒரு மந்திரிசபையை முறியடிக்கவும் லட்சக்கணக்கில் செலவு செய்வது நமக்கு மிகவும் தகாத காரியமாவதுடன், நமது சந்ததிகளை இழிவுபடுத்துவதுமாகும். ஏனெனில், இந்த நமது செயலினுல் அவர்கள் மிகுந்த கஷ்டப்பட்டு உழைக்கவேண்டியதுடன், அவர்களுக்கு எவ்வித நலனுமளிக்காத கடனையும் அவர்கள் சுமக்கவேண்டி வரும். இம்மாதிரி எண்ணத்திற்கு இடமளிப்பதே மானக்கேடானது; அது குறுகிய உள்ளம் படைத்த அல்லது சுயநலத்திற்காக சுதந்திரத்தையும் விற்கத் தயாராயிருக்கும் அரசியல்வாதியின் செயலுமாகும்.

நாம் நினைத்த காரியம் கைகூடிவிட்டால் கடன்படுவதைப் பற்றி நாம் கவலைகொள்ள வேண்டியதில்லை. கடன் இல்லாமல் எந்த நாடும் இருத்தலாகாது. தேசீயக் கடன் என்பது

நாட்டின் நற்சாட்சிப் பத்திரம். வட்டியில்லாக் கடன் பற்றிக் கவலைப்பட வேண்டாம். பிரிட்டனின் கடன் சுமை பதினைன்கு கோடி பவுனுக்கு மேற்பட்டிருக்கிறது. இதற்கு நாற்பது லட்சம் பவுனுக்குமேல் அந் நாடு ஆண்டுதோறும் வட்டி கட்டுகிறது. இந்தக் கடனுக்கு ஈடாக அதற்குப் பெரியதோர் கடற் படை இருக்கிறது. அமெரிக்காவுக்குக் கடனுமில்லை, கடற் படையுமில்லை. ஆனல் பிரிட்டனுக்குள்ள கடனில் அமெரிக்காவுக்கு இருபதில் ஒரு பங்கு இருந்தாலும் பிரிட்டனவ்வளவு பெரிய கடற் படை அமைத்திருக்கலாம். இங்கிலீஷ் கடற் படையின் தற்போதைய பெறுமானம் முப்பத்தைந்து லட்சம் பவுன்கூட இருக்காது.

கப்பல் கட்டுவதற்கான செலவு

ஒவ்வொரு வகைக் கப்பல் அமைப்பது அதற்கு வேண்டிய பாய்மரம், சீலைத்துணி, நங்கூரம் முதலியன கட்டுவதற்கான கல்கள், படகோட்டிகள், தச்சன் முதலியோருக்கு எட்டு மாதங்களுக்கு வேண்டிய உணவுப்பொருள்கள் யாவும்—இவைகளுக்கு ஆகக் கூடிய செலவு என்ன என்பதைப் பிரிட்டனின் படைக் காரியதரிசி **பர்ச்செட்** (1698—1742) வருமாறு கணக்கிட்டிருக்கிறார்:

		பவுன்
100	பீரங்கிகள் பொருத்தப் பட்ட ஒரு கப்பலுக்கு ஆகும் செலவு	35,553
90	,,	29,886
80	,,	23,638
70	,,	17,785
60	,,	14,197
50	,,	10,606
40	,,	7,558
30	,,	5,846
20	,,	3,710

இதிலிருந்து பிரிட்டிஷ் கடற் படைப் புகழ் உச்ச நிலையி

லிருந்த காலமாகிய 1757-இல் பிரிட்டிஷ் கடற்படை அமைப்பதற்கான செலவைக் கண்டுபிடிக்கலாம்:

கப்பல்களின் எண்ணிக்கை	ஒவ்வொன்றிலும் பொருத்தப்பட்ட பீரங்கிகளின் எண்ணிக்கை	ஒவ்வொரு கப்பலுக்கும் ஆன செலவு பவுன்	மொத்த செலவு—இனவாரியாக பவுன்
6	100	35,553	213,318
12	90	29,886	358,632
12	80	23,638	283,656
43	70	17,785	764,755
35	60	14,197	496,895
40	50	10,606	424,240
45	40	7,558	340,110
58	20	3,710	215.180
85	வெடிகுண்டுகள் தீயணைக்கும் வசதி முதலியன உள்ளது	2,000	170,000
	மொத்தச் செலவு		3,266,786
	பீரங்கிகள் உபரி		233,214
		மொத்தம்	3,500,000

கப்பல் கட்டுவதற்கு ஏற்றதாக, அதை அமைப்பதற்கான வசதிகள் உள்நாட்டிலேயே உள்ளதாக அமெரிக்காவைப் போல் வேறெந்த நாடும் அமையவில்லை. தார், தேக்கு, இரும்பு, கயிறு முதலியவைகளுக்கான வசதிகள் நம் நாட்டிலேயே இயல்பாக அமைந்திருக்கின்றன. நாம் எதற்கும் வெளிநாட்டின் உதவியை நாடவேண்டியதில்லை. ஆனுல் தங்கள் கப்பல்களை ஸ்பானிஷ் அல்லது போர்ச்சுகீஸியர்களுக்கு வாடகைக்கு விட்டு ஏராளமாக லாபம் சம்பாதிக்கும் டச்சுக்காரர்கள் தாங்கள் பயன்படுத்தும் பல சாமான்களைப் பிற நாடுகளி

லிருந்து இறக்குமதி செய்கின்றனர். கடற் படை அமைப்பதை நாம் வர்த்தகமாகக் கருதவேண்டும். ஏனெனில் அதற்கான சரக்குகள் நம் நாட்டில் கிடைக்கக்கூடியவை. இதில் போட்ட பணம் சிறந்த முதலீடாகும். கடற் படை கட்டி முடிந்ததும் பார்த்தால் அதற்கான செலவை விடக் கப்பல்கள் அதிகப் பெறுமானமுடையனவாக இருக்கும். இதன் மூலம் வர்த்தகம் பெருகும்; நாட்டுக்குப் போதிய பாதுகாப்பும் அமையும். ஆகையால் கப்பல் கட்டுவோம். தேவையில்லை என்று தோன்றினுல், அவைகளை உடனே விற்று விடலாம். இதன் மூலம் நமது நோட்டுகளுக்குப் பதிலாகத் தங்கமும், வெள்ளியுமாகச் சேர்த்துவைக்கலாம்.

கடற் படையை நடத்துவதற்கு ஆட்கள் நியமிப்பதில் பொதுவாக நிர்வாகிகள் தவறு செய்கின்றனர். கப்பல் சிப்பந்திகளில் கால்பங்கு பேர் மாலுமிகளாயிருக்கவேண்டும் என்கிற அவசியமில்லை. 1756-1763-இல் பிரஞ்சுக்காரருக்கும் இந்தியருக்கும் நடந்த போரில் மிகக் கடுமையான சமயத்தில் கூட **காப்டன் டெத்** என்பவர் கப்பல் தளத்தில் இருநூறுக்கு மேற்பட்டவர்கள் உள்ள இடத்தில் இருபது மாலுமிகளைக் கொண்டே சமாளித்தார். திறமை வாய்ந்த, சுமுகமாகப் பழகக்கூடிய சுபாவமுள்ள சிலர் சுறுசுறுப்பு மிக்க தரைப் படையினரைக் கப்பல் வேலைக்குப் பழக்கிவிட முடியும். ஆகையினுல் நமது தேக்குக் காடுகள் அழியாமலிருக்கையில், நமது மீன்கள் செலவாகாமல் தேங்கி இருக்கையில், நமது மாலுமிகளும் மற்றக் கப்பல் பணியாளர்களும் வேலையில்லாமலிருக்கையில் கடற் படை விஷயங்களை ஒழுங்கு செய்துகொள்ளுவதே சாலச்சிறந்ததாகும். எழுபது அல்லது எண்பது பீரங்கிகளுடைய போர்க்கலங்கள் நியூ இங்கிலாந்தில் நாற்பது ஆண்டுகளுக்குமுன் கட்டமுடியுமானுல், இப்பொழுது ஏன் அதே காரியத்தைச் செய்ய முடியாது? கப்பல் கட்டுவது அமெரிக்காவின் புகழ்மிக்க தொழிலாகும். காலக்கிரமத்தில் இத்தொழிலில் அமெரிக்காவே முதலிடம் பெற முடியும். கிழக்கத்திய சாம்ராஜ்யங்களெல்லாம் கடல் பாங்கற்றவையாகையினுல் அவைகள் அமெரிக்காவுடன் போட்டியிட இயலாது. ஆப்பிரிக்கா இன்றும் காட்டுமிராண்டி நிலையிலேயே இருக்கிறது. அந்தக் கண்டம் மாதிரி ஐரோப்பாவில்

எந்த நாட்டிற்கும் அவ்வளவு விரிவான கடற் பரப்பும் இல்லை, தளப்பொருள் வசதியுமில்லை. இயற்கை ஒரு வசதியை அளித்தால் மற்றொரு வசதியை அளிப்பதில்லை. அமெரிக்காவிற்கு மட்டும்தான் இரு வகை வசதிகளையும் இயற்கை, மட்டின்றி அளித்திருக்கிறது. ருஷ்ய சாம்ராஜ்யம் பெரிதும் கடல் கரைக்கு அப்பாலே அமைந்திருக்கிறது. அதனுடைய எல்லையற்ற வனாந்தரங்களும், தார், இரும்பு, கப்பல், கயிறு முதலியவைகளும் வெறும் வர்த்தகப் பொருள்களே.

நமது பாதுகாப்புக்காகவாவது கடற் படை அவசியமல்லவா? அறுபது ஆண்டுகளுக்கு முன்னிருந்ததுபோல் சாமானிய மக்களல்ல நாம் இப்பொழுது. அந்தக் காலத்தில் நமது சாமான்களைத் தெருக்களிலோ வயல்களிலோ போட்டுவிட்டு, நமது கதவுகளையும் ஜன்னல்களையும் தாளிட்டுப் பூட்டாமல் நிம்மதியாகத் தூங்கலாம். நிலைமை இப்போது முற்றிலும் மாறிவிட்டது. நமது சொத்து அதிகரித்திருக்கிறதற்கேற்ப நமது பாதுகாப்பு முறைகளும் சீர்பெறவேண்டும். ஒரு சாமானிய கடற் கொள்ளைக்காரன் ஓர் ஆண்டிற்கு முன்பு **டெலாவேர்** நதி மூலம் வந்து அவன் கேட்ட பணம் கொடுக்காவிட்டால் **பிலடல்பியா** நகரையே நாசமாக்கி இருக்கக்கூடும். இதே கதி பிறநகர்களுக்கும் நிகழ்ந்திருக்கக்கூடும். துணிச்சல் மிக்க எவனும் பதினான்கு அல்லது பதினாறு துப்பாக்கியுள்ள சிறு கடல் தளத்தில் வந்து நமது கண்டத்தையே கொள்ளையடித்து ஐந்து லட்சம் டாலர் பணத்தைத் தட்டிக்கொண்டு போயிருக்கலாம். மேற்கூறிய விஷயங்களை நாம் நன்கு யோசித்துப் பார்த்தால் கடற் படைப் பாதுகாப்பின் அவசியத்தை உணருவோம்.

பிரிட்டனுடன் சமரசம் செய்துகொண்டு விட்டால் அந் நாடு நம்மைப் பாதுகாக்கும் எனச் சிலர் கூறலாம். நம்மைப் பாதுகாப்பதற்காக நமது துறைமுகங்களில் பிரிட்டன் கப்பல்களை நிறுத்திவைக்கும் என்று கூறும்படியாக அவர்கள் அவ்வளவு அறிவிலிகளா? நம்மை அடிமைப்படுத்தவே முயற்சி செய்து வந்த ஓர் ஆட்சி நம்மைப் பாதுகாப்பதற்குச் சிறிதும் தகுதியற்றது என்று சாமானிய அறிவுள்ளவர்களும் உணர்ந்து கொள்ளலாம். நேசமாயிருப்பது போல் பாவனை செய்து கொண்டு நம்மை வெல்லலாம்; தீரமாக நீடித்து

எதிர்த்த பிறகு நாமும் அடிமை நிலைக்குப் பணியும்படி ஏமாற்றப்படலாம். நமது துறைமுகங்களில் பிரிட்டிஷ் கப்பல்கள் தங்க முடியாதெனில் அது நம்மை எப்படிப் பாதுகாக்க முடியும் என்று நான் கேட்கிறேன். மூன்று அல்லது நான்கு ஆயிரம் மைல்களுக்கப்பால் உள்ள கடற் படை நம்மை எப்படிப் பாதுகாக்க முடியும்? திடீரென அபாயம் ஏற்படும் சமயங்களில் அந்தக் கடற் படையால் எவ்விதப் பாதுகாப்பும் அளிக்க முடியாது. ஆகையினால் நம்மை நாமே ஏன் பாதுகாத்துக் கொள்ள ஏற்பாடு செய்யலாகாது? எதற்காகப் பிறர் உதவியை நாடவேண்டும்?

ஆங்கிலேய யுத்தக் கப்பல்களின் நீண்ட பட்டியலைப் பார்த்தால் பிரமாதமாகத்தான் இருக்கிறது. ஆனால் அவைகளில் பத்தில் ஒரு பங்கு கூட சமயத்திற்குப் பயன்படாது. அவைகளில் பல இல்லவே இல்லை. அவைகளில் ஒரு பலகை எஞ்சியிருந்தால் அதை முழுக் கப்பலாக மதித்து ஜாபிதாவில் சேர்த்து விடுகின்றனர். அந்த ஜாபிதாவில் ஐந்தில் ஒரு பங்கு பயன் படத்தக்கதாயிருந்தாலும் அவைகளை ஏதாவது ஓர் இடத்திற்கு ஒரே சமயத்தில் அனுப்ப இயலாமலிருக்கும். கிழக்கு, மேற்கு இந்தியத் தீவுகள், மத்திய தரைக்கடல், ஆப்பிரிக்கா எங்கும் தனது ஆதிக்கமிருப்பதாக பிரிட்டன் கூறுகிறது. ஆகையினால் இந்த நாடுகள் அதன் கப்பற் படையின் உதவியை நாடுகின்றன. விருப்பு வெறுப்பினாலும், போதிய அளவு சிந்தித்துப் பார்க்காததனாலும் ஆங்கிலக் கடற் படையைப் பிரமாதமாக மதிக்கின்றோம்; நமக்குத் தேவையிருக்கும்போது அந்தப் படை முழுதும் நமது உதவிக்கு விரைந்து வரும் என மதிக்கின்றோம். இதிலிருந்து அவ்வளவு பெரிய கடற் படை நமது பாதுகாப்பிற்கு அவசியமெனவும் கருதுகிறோம். இவ்வளவு பெரிய கடற் படையை உடனடியாக அமைக்க முடியாதாகையால் கடற் படை அமைக்க முனைவதே அவசியமில்லை என பிரிட்டனிலுள்ள டோரிகள் நமக்கு உபதேசம் செய்கின்றனர். இதைவிட உண்மைக்கு மாறான கூற்று வேறு இருக்க முடியாது. ஏனெனில் பிரிட்டிஷ் கடற் படையில் இருபதில் ஒரு பங்கு அமெரிக்காவுக்கு இருந்தாலும் பிரிட்டனை எளிதில் மிஞ்சிவிட முடியும். நமது ஆதிக்கத்தில் பிறநாடுகள் இல்லையாகையினாலும் அவை

களுக்காக நாம் ஆசைகொள்ளவில்லை என்பதனாலும் நமது கடற் படை நமது கடலோரத்தைக் காப்பதற்கே பயன்படும். நாளடைவில் மூன்று அல்லது நான்கு ஆயிரம் மைல்களுக்கப் பாலிருந்து நம்மைத் தாக்கிவிட்டு, மீண்டும் பழுதுபார்க்கவும் புதிய ஆள் சேர்க்கவும் அதே தூரத்தைக் கடந்துசெல்லவும் வேண்டிய கடற் படையைவிட இரண்டு மடங்கு நம்முடையது சிறப்பாகப் பணியாற்றும். பிரிட்டன் தனது கடற் படையைக் கொண்டு நமது ஐரோப்பிய வர்த்தகத்தைக் கட்டுப்படுத்தலாமானாலும் நாமும் அவ்வாறே அந் நாட்டின் மேற்கிந்திய வர்த்தகத்தைத் தடை செய்யலாம். ஏனெனில் மேற்கிந்திய நாடு நமக்கு அருகாமையிலிருப்பதனால் அதை நம்மிஷ்டப்படி ஆட்டி வைக்க வசதி யுண்டு.

நிரந்தரமாக ஒரு கடற் படை வைத்து நம்மால் சமாளிக்க முடியாதென்றாலும் சமாதான காலத்திற்குப் போதுமான அளவு கடற் படை அமைப்பதற்கான ஏற்பாடுகளாவது செய்ய வேண்டும். இருபது, முப்பது அல்லது ஐம்பது பீரங்கிகள் உள்ள கப்பல்கள் கட்டுவதற்கு வர்த்தகர்களுக்குப் பண உதவி செய்யலாம். ஆயுதங்கள் வைப்பதனால் வர்த்தகப் பொருள்கள் சுமந்து செல்லும் இடம் அவர்களுக்கு எவ்வளவு தூரம் நஷ்டத்தை ஏற்படுத்தும் என்பதை அடிப்படையாக வைத்துக்கொண்டு அதற்கேற்ப உதவி புரியலாம். இம்மாதிரி அமைந்த கப்பல்கள் ஐம்பது அல்லது அறுபது டன் சில பாதுகாப்புக் கப்பல்கள் சதா பணி புரிந்து வந்தால் நமக்குத் தேவையான கடற் படை அமைவதுடன், சமாதான காலத்தில் சண்டைக் கப்பல்கள் தூங்குகின்றன என்று இங்கிலாந்தில் கூறப்படும் புகாருக்கு இடமில்லாமலும் போய்விடும். வர்த்தகத்தையும் பாதுகாப்பையும் ஒரே கடற் படையின் மூலம் செய்வது நல்ல கொள்கை. நமது படை பலமும், வர்த்தகமும் ஒரே முயற்சியின் விளைவாகப் பெருகுமானால் நாம் வெளி நாட்டுப் பகைமை பற்றிப் பயப்பட வேண்டியதில்லை.

நமக்குத் தேவையான பாதுகாப்புச் சாதனங்கள் நம்மிடம் நிரம்ப இருக்கின்றன. தேவைக்கு மீறிய சணல் நம்மிடமிருப்பதனால் நாம் கயிறுக்கு வேறு எந்த நாட்டையும் எதிர்பார்க்க வேண்டியதில்லை. பிறநாட்டு இரும்பைவிட நமது நாட்டு இரும்பு

உயர்வானது; நமது சில்லறை ஆயுதங்கள் பிறநாட்டவற்றுக் குச் சமமானவை. பீரங்கிகளை நமக்குத் தேவையான அளவுக்கு நம்மிஷ்டப்படி தயார் செய்துகொள்ளலாம். வெடியுப்பும், துப்பாக்கி மருந்தும் நாம் தினசரி உற்பத்தி செய்தே வருகிறோம். நமது அறிவும் இடைவிடாது பெருகிக்கொண்டே வருகிறது. மன உறுதி நமக்கு இயல்பாகவே இருக்கிறது. தைரியம் நம்மைக் கைவிட்டு விடவில்லை. இவ்வளவும் இருக்கையில் இனி நமக்கு வேறென்ன வேண்டும்? நாம் தயங்குவது ஏன்? நாசம் விளைவிப்பதைத் தவிர பிரிட்டனிடமிருந்து இனி நாம் வேறு எதையும் எதிர்பார்க்க முடியாது. அமெரிக்க ஆட்சியை மீண்டும் பிரிட்டனிடம் ஒப்படைத்துவிட்டால் இந்த நாடு இனி நாம் வசிப்பதற்கு லாயக்கில்லை; பொறுமை வளர்ந்துகொண்டே இருக்கும். நாட்டைக் கவிழ்க்கும் எதிர்ப்பு எழுந்துகொண்டே இருக்கும். இவைகளை யார் முன்வந்து அடக்குவார்கள்? அயல் நாட்டிற்கு அடிபணியும்படி நம்மைக் கட்டுப்படுத்த யார் உயிருக் குத் துணிந்து முன்வருவார்கள்? சில நிலங்கள் யாருடையது என்பது பற்றி **பென்ஸில்வேனியா**வுக்கும், **கனக்டிகட்டி**ற்கும் வித்தியாசம் தீர்க்கப்படாமலிருப்பதிலிருந்து பிரிட்டிஷ் ஆட்சி யின் கையாலாகாத்தனத்தை நிரூபிப்பதுடன், இம்மாதிரி பிரச்னைகளை நம் நாட்டு அரசாங்கம்தான் தீர்த்துவைக்க முடியும் என்பது நன்கு விளங்குகிறது.

இந்த நற்பணிகளைச் செய்ய இதுவே தக்க தருணம் என நான் கருதுவதற்குக் காரணம், ஜனத்தொகை குறைவாயி ருப்பதும், காலி நிலங்களும் நிரம்ப இருக்கின்றன வென்பதும், அவைகளை அரசன் தன்னைச் சுற்றியுள்ள சோம்பேறிகளுக்குத் தாராளமாக வழங்குவதற்கு முன், நாம் அவைகளைத் தற்போ துள்ள கடன்களைத் தீர்ப்பதற்குப் பயன்படுத்துவதுடன் நமது ஆட்சியைப் பலப்படுத்துவதற்கும் உபயோகிக்கலாம் என்பதும் தான். இப்புவியில் இத்தகைய நல்ல வசதிகள் உள்ள நாடு வேறு கிடையாது.

இந்தக் காலனிகள் அமைந்து கொஞ்ச காலமேயாகி யிருப்பது சுதந்திரத்திற்குச் சாதகமான காரணமே யொழிய விரோதமானதல்ல. நமக்குப் போதிய அளவு ஜனத்தொகை இருக்கிறது. இதற்குமேல் எண்ணிக்கை அதிகமானால்,

அப்பொழுது நமக்குள் இப்போதுள்ள ஒற்றுமை நிலவாது. அதிக ஜனங்கள் உள்ள நாட்டில் படைபலம் குறைவாயிருக்கிறது என்பது நமது சிந்தனைக்குரிய விஷயம். நமது முன்னோர்கள் நம்மைவிட அதிகமான படை பலம் பெற்றிருந்தனர். இதன் காரணத்தை எளிதில் புரிந்துகொள்ளலாம். ஜனத்தொகைப் பெருக்கத்தின் விளைவாக வர்த்தகப் பெருக்கு ஏற்படுவதனுல் மக்கள் பொருளீட்டுவதிலே அதிகக் கவனம் செலுத்துகின்றனர். ஆகையினுல், வேறு எதிலும் அவர்கள் கவனம் செல்லுவதில்லை. வர்த்தகம் தேசாபிமான உணர்ச்சியையும், ராணுவப் பாதுகாப்பு அக்கறையையும் மங்கச் செய்துவிடுகின்றது. ஒரு நாடு தனது ஆரம்ப தசையிலேயே வீரப்பிரதாபங்களில் பெயர்பெற்று விளங்கியிருக்கிறது என்பதைச் சரித்திரவாயிலாகத் தெரிந்துகொள்ளலாம். இங்கிலாந்து வர்த்தகப் பெருக்கத்தின் விளைவாக அதன் உணர்ச்சியை இழந்துவிட்டது. லண்டன் மாநகர், அதன் ஜனத்தொகை பெரியதாயிருந்தாலும் பல அவமதிப்புகளைக் கோழையின் பொறுமையுடன் சகித்துக்கொண்டு வந்திருக்கிறது. மக்கள் நஷ்டமடைய அடைய புதிய திட்டங்களில் துணிவுடன் ஈடுபடத் தயங்குகின்றனர். பணக்காரர்கள் அச்சத்திற்கு அடிமைகள். அவர்கள் அரண்மனை அதிகாரத்திற்கு நாய்போல் நடுங்கிக் கொண்டு பணிந்துபோகின்றனர்.

நாட்டு மக்கள் கூட்டத்திற்கும் சரி, தனிப்பட்டவர்களுக்கும் சரி ஆரம்ப காலமே நற்பழக்கங்கள் ஏற்படுவதற்கு நல்ல பருவம். அரை நூற்றுண்டுக்குப் பிறகு இந்த நாடு பூராவையும் ஒரே அரசுக்குக் கீழ் கொண்டுவருவது மிகக் கடினமாயிருக்கும். ஜனத்தொகை, வர்த்தகம் இரண்டும் பெருகுவதனுல் மக்களிடையே மாறுபட்ட அக்கறை ஏற்பட்டு, அதனுல் குழப்பம் ஏற்படலாம். ஒரு காலனி மற்றொரு காலனி மீது பகைமை கொள்ளலாம். ஒவ்வொன்றும் பலம் வாய்ந்திருப்பின் பிறர் உதவியைத் துச்சமாக மதிக்கலாம். அகம்பாவம் பிடித்தவர்களும், புத்தியற்றவர்களும் வித்தியாசங்களில் பெருமை கொண்டிருக்கையில், அறிவாளிகள் எல்லாக் காலனிகளும் முன்னமேயே ஒன்றுபட்டிருக்கலாகாதா என்று மனவருத்தம் அடைவார்கள். ஆகையால் ஒன்றுபட இதுவே தக்க தருணம்.

இளமையில் ஏற்பட்ட நேசமும், கஷ்டகாலத்தில் ஏற்பட்ட நட்பும்தான் மற்ற சந்தர்ப்பங்களில் தோன்றியதைவிட நிலையாகவும், அசைக்க முடியாததாகவும் இருக்கும். நமது ஒற்றுமையும் இந்த இரு சந்தர்ப்பங்களில் ஏற்பட்டவைதான். நம் தேசம் ஆரம்ப தசையிலுள்ளது; கஷ்டங்களையும் அநுபவித்துவிட்டோம். நமது ஒருமைப்பாடு எல்லா சங்கடங்களையும் மீறி நிலைத்துவிட்டது. மறக்க இயலாத இந்த சகாப்தத்தை எண்ணி நமது பின் சந்ததியார் பெருமையடைவார்கள்.

இப்போது உள்ள நிலையின் தனிச்சிறப்பு என்னவெனில், இம்மாதிரி ஓர் அரசை அமைப்பது சரித்திரத்தில் எப்பொழுதாவது ஒரு சமயம்தான் நிகழும் என்பதுதான். இம்மாதிரி சந்தர்ப்பத்தைப் பல நாடுகள் நழுவவிட்டிருக்கின்றன. இந்தத் தவறினால் அந் நாடுகள் தங்களுக்குத் தேவையான சட்டங்களைத் தாங்களே இயற்றிக்கொள்ளாமல் தங்களை வென்றவர்களிடம் கையேந்தி நிற்கவேண்டிய நிர்ப்பந்தத்தைத் தேடிக்கொண்டுவிட்டன. முதலில் அவர்களுக்கு அரசன் ஏற்பட்டான்; அப்புறம் ஆட்சி முறை அமைந்தது. ஆனால் நியாயமாக முதலில் ஆட்சி முறை சாசனத்தை ஆக்கிவிட்டுப் பின்னரே அதைக் கொண்டு செலுத்துபவர்களை நியமிக்கவேண்டும். பிற நாடுகள் செய்த தவறுகளிலிருந்து நாம் நல்லறிவு பெற வேண்டும். ஆகையினால் இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு சரியான வழியில் அரசாங்கத்தை அமைத்துக்கொள்ள வேண்டும்.

இங்கிலாந்தை முதல் வில்லியம் வென்று கைக்கொண்டதும், கத்தி முனையில் அந் நாட்டு மக்கள் மீது சட்டத்தைச் சுமத்தினான். அமெரிக்காவில் ஆட்சி பீடத்தை சட்டபூர்வமாகவும், அதிகாரத்துடனும் நாம் அமைக்காவிட்டால், அதிர்ஷ்டமுள்ள முரடன் எவனாவது வந்து வில்லியம் ஆங்கிலேயர்களை நடத்திய மாதிரி நம்மையும் ஆட்டிவைக்கலாம். அந்தக் கதி நேர்ந்துவிட்டால், அப்புறம் நமது சுதந்திரம் என்ன ஆகும்? நமது சொத்து எக்கதி அடையும்?

மதத்தைப் பொறுத்த மட்டில் மனச்சாட்சிக்கொப்ப மதப் பற்றுள்ளவர்களைப் பாதுகாக்க வேண்டியது எல்லா அரசாங்கங்களின் தவிர்க்க முடியாத கடமையாகும். மத விஷயங்களில்

ஆட்சிகள் தலையிடவேண்டிய அவசியமே இல்லை. ஒரு மனிதன் ஆத்மார்த்த விஷயத்தில் குறுகிய மனப்பான்மையைக் கைவிட்டால், கொள்கைப்பற்றில் சுயநலத்தைத் துறந்தால், அவன் மத சம்பந்தமான தனது கொள்கைகளுக்கு ஆபத்து வருமோ என அஞ்சவேண்டி வராது. எல்லா மதங்களிலும் உள்ள அதமர்கள் தான் இந்தக் குறுகிய மனப்பாங்கையும், சுய நலத்தையும் கைவிடமாட்டார்கள். அற்ப மனிதர்களிடம் தான் சந்தேகம் குடிகொண்டிருக்கும். இந்த சந்தேக மனப்பான்மையே சமூகங்களின் சாபக்கேடு. மத சம்பந்தமாக எல்லா மதத்தினரிடையேயும் மாறுபட்ட கருத்துக்கள் நிலவுவதுதான் ஆண்டவனின் திருவுள்ளம் என்று நான் மனப்பூர்வமாக நம்புகின்றேன். இம்மாதிரி அபிப்பிராய பேதங்கள் தாராளமாக நிலவினால் நமது கிறிஸ்துவ மத அடிப்படையான அன்பு நிலவ சுலபமான சூழ்நிலை ஏற்படும். நாம் எல்லோரும் ஒரேமாதிரி எண்ணங்களை உடையவர்களாயிருந்தால் நமது மதப்பற்று சீர்படுவதற்குப் பயிற்சி பெற வேண்டிய அவசியம் ஏற்படும். இம்மாதிரி தாராள நோக்குடன் பார்த்தால் நம்மிடையே பல்வேறு மதங்களில் பற்றுள்ளவர்கள் ஒரே குடும்பத்தில் பிறந்த குழந்தைகள் பல பெயர்களுடன் விளங்குவதற் கொப்பாகும்.

நாடு பூராவிற்கும் பொருந்தும்படியான ஒரு சாசனத்தின் அவசியத்தைப்பற்றி முந்திய பக்கங்களில் சில யோசனைகள் கூறியுள்ளேன். அதைப்பற்றி இங்கே மீண்டும் குறிப்பிட அநுமதி கோருகிறேன். ஒரு சாசனம் என்பது நமது கடமையை மனச் சாட்சிப்படி நிறைவேற்றுவதாக ஒப்புக்கொள்ளுவது என்றே கருதவேண்டும். அதாவது நாட்டு மக்கள் யாவரும் தனிப்பட்ட ஒவ்வொருவரின் மத உரிமை, சொந்த சுதந்திரம், சொத்துரிமை முதலியவற்றைப் பாதுகாப்பதாக ஒப்புக்கொள்ளுவது என்று அர்த்தம். கண்டிப்பான உடன்பாடும், நேர்மையான உணர்வும் இருந்தால் நட்புரிமை நீடித்து நிலவும்.

பிரதிநிதிகள் நிரம்ப இருக்க வேண்டும்; பல பகுதிகளுக்கும் சமமான பிரதிநிதித்துவம் வேண்டும் என்றும் நான் குறிப்பிட்டிருக்கிறேன். இதுபோல் நமது கவனத்துக்குரிய அரசியல் விஷயங்கள் வேறு எதுவும் இருக்கமுடியாது. குறைந்த வோட்டுரிமையுள்ளவர்களும், அல்லது குறைவான பிரதிநிதிகளும்

இருந்தால் இரண்டும் அபாயத்திற்கறிகுறிகள். பிரதிநிதிகள் குறைவாயுமிருந்து பிரதிநிதித்துவமும் சமமாயில்லாவிட்டால், அபாயம் மேலும் அதிகமாயிருக்கும். இதற்கு ஓர் உதாரணம் கூறுகின்றேன். **பென்ஸில்வேனியா** சட்டசபை முன் அந்தராஜ்யப் பல்வேறு பகுதியினரின் விண்ணப்பம் பரிசிலனைக்கு வந்த பொழுது, இருபத்தெட்டு அங்கத்தினர்கள் பிரசன்னமாயிருந்தனர். **பக்ஸ்** கவுண்டி பிரதிநிதிகள் எண்மரும் எதிரிடையாக வோட்டுச் செய்தனர். **செஸ்டரி**லிருந்து ஏழு பேரும் எதிரிடையாகவே வோட்டுச் செய்திருந்தால், பூரா மாகாணத்தையும் இரண்டு கவுண்டிகள் ஆளுகின்றன என்கிற நிலை ஏற்பட்டிருக்கும். இந்த அபாயம் நீடித்து நிலவி வந்து தொல்லையளித்துக் கொண்டிருக்கும். அந்த சட்டசபை தனது கடைசிக் கூட்டத்தில் அந்த மாகாணத்தின் பிரதிநிதிகள் யாவர் பேரிலும் ஆதிக்கம் செலுத்துவதற்காகச் செய்த அநீதமான முயற்சியிலிருந்து மக்கள் நல்ல பாடம் கற்றுக் கொள்ளலாம். அதிகாரம் நம் கையைவிட்டுப் போய்விட்டால் அதனல் ஏற்படும் அபாயத்தைத் தவிர்ப்பது கடினம். பிரதிநிதிகள் பின்பற்றவேண்டிய சில தாக்கீதுகள் தயார் செய்யப்பட்டன. புத்திசாலித்தனம், நடைமுறை ஒழுங்கு ஆகிய இரு அடிப்படையிலும் பார்த்தால் இம்மாதிரி கேவலமான யோசனைகளுக்குப் பொறுப்பு வகிப்பது மானக்கேடானது என ஒரு பள்ளிப் பையன்கூட வெட்கித் தலைகுனிவான். இந்த மோசமான யோசனைகளை ஒரு சிலர் சபைக்கு வெளியே கூடித் தயாரித்து, அதை சபைக்குள் கொணர்ந்து **அந்த காலனி பூராவின் சார்பாக** நிறைவேற்றப்பட்டது. என்னமாதிரி கெட்ட எண்ணத்துடன் சில அவசியமான பொதுத் திட்டங்களை இவர்கள் நிறைவேற்றினர்கள் என்பதைக் காலனிப் பொதுமக்கள் அறிந்திருந்தார்களானல் சட்டமியற்றும் பொறுப்பு வகிக்க இந்த சபையினர் சிறிதும் தகுதியற்றவர்கள் என அவர்கள் நிச்சயம் முடிவுகட்டியிருப்பர்.

அவசியமும் அவசரமும் சேர்ந்து சில காரியங்களை நல்லதாகவே தோற்றுவிக்கின்றன. ஆனல் அவைகளையே நீடித்துச் செய்துவந்தால் அவைகளே கொடுமைகளாக மாறும். சந்தர்ப்பவாதமும், நியாயமும் முற்றிலும் மாறுபட்டவைகள். அமெரிக்

காவில் ஏற்பட்ட நெருக்கடிகளைச் சமாளிப்பதற்கு கலந்தாலோசித்தல் அவசியம் என்று தோன்றிற்று. அச்சமயங்களில் பல்வேறு சட்டசபைகளிலிருந்து சிலரைப் பொறுக்கியெடுத்து ஆலோசனை செய்வது நல்லது என்றும், வேறு முறை அவ்வளவு சிறந்ததில்லை என்றும் கருதினோம். அப்படி நாம் பொறுக்கி எடுத்த ஆலோசகர்கள் அறிவாற்றலுடன் தங்கள் பணிகளை நிறைவேற்றியதனால் இந்த நாடு அழிவுக்குள்ளாகாமல் பாது காக்கப்பட்டு வந்திருக்கிறது. ஆனால் நாடு பூராவுக்கும் சட்டமியற்றும் காங்கிரஸ் ஒன்று இல்லாமலிருப்பது உகந்ததன்று. ஆகையினால் ஒழுங்கான ஆட்சி அவசியம் என்று கருதும் நல்லெண்ணமுள்ளவர்கள் யாவரும் பிரதிநிதிகள் தேர்தல் முறையைப்பற்றி புனராலோசனை செய்யவேண்டும் என்பதை ஒப்புக்கொள்ளுவார்கள். மனிதவர்க்கத்தின் இயல்பு, ஆற்றல் முதலியவற்றை ஆராய்ந்தறிந்தவர்களை நான் ஒன்று கேட்கிறேன். ஒரே சபையினர் பிரதிநிதித்துவம் வகிப்பது, தேர்தல் செய்வது இரண்டு பொறுப்புகளையும் வகிப்பது மிகுதியான அதிகாரத்தை ஒரே ஸ்தாபனத்திடம் ஒப்படைப்பதாகாதா என்பதுதான் அக்கேள்வி. நாம் சுபிட்சத்திற்காகத் திட்டமிடுகிறோமாகையால் நற்குணம் என்பது பரம்பரையாக வருவதல்ல என்பதை நினைவிலிருத்திக் கொள்ளவேண்டும்.

அநேகமாக நம் எதிரிகளிடமிருந்தே நற்படிப்பினை கற்றுக் கொள்ளுகிறோம். அவர்களுடைய தவறுகளால் ஆச்சரியப்படத் தக்க முறையில் நாம் அறிவு பெறுகிறோம். 1774-இலிருந்து 1780-வரை **நார்த்** பிரபு மந்திரி சபையில் நிதி மந்திரியாயிருந்த **கார்ன்வால்** என்பவர் நியூயார்க் சபையின் விண்ணப்பத்தைத் துச்சமாக மதித்தார். அதற்கு அவர் கூறிய காரணம், ''அந்த சபை இருபத்தாறு பேர்களே அடங்கியது. அந்தச் சிறிய தொகையினர் சபை பூராவுக்குமாகப் பேசமுடியாது'' என்பது தான். அவரையுமறியாமல் நாணயமாக உண்மையைக் கூறியதற்கு நாம் நன்றி செலுத்துகிறோம்.

முடிவாகச் சில வார்த்தைகள் நான் கூறுகிறேன். அவைகள் சிலருக்கு விசித்திரமாகத் தோன்றலாம். மற்றும் சிலர் அவைகளை ஏற்கத் தயங்கலாம். ஆனால், பகிரங்கமாகவும், தீர்மானமாகவும் நாம் சுதந்திரப் பிரகடனம் செய்தால்

நம்முடைய விவகாரங்கள் துரிதமாகத் தீருவதுபோல் வேறு எந்த முறையாலும் முடியாது என்பதற்குச் சில காரணங்கள் கூறலாம். அவைகளில் சில வருமாறு:

1. இரண்டு நாடுகள் போர் புரிந்து கொண்டிருக்கும் பொழுது சண்டையில் சம்பந்தப்படாத ஒரு நாடு தலையிட்டு சமாதானத்திற்குப் பூர்வாங்க ஏற்பாடுகள் செய்வது வழக்கம். ஆனால், அமெரிக்கா பிரிட்டனுக்குட்பட்ட நாடாயிருக்கும் வரையில் நம்முடன் சுமுகமாயிருக்கும் நாடுகள்கூட மத்தியஸ்தம் செய்ய முன்வராது. ஆகையால் இப்போதுள்ள நிலையில் நாம் நீடித்துச் சச்சரவு செய்துகொண்டே தானிருக்க வேண்டும்.

2. ஸ்பெயினே, பிரான்ஸோ நமக்களிக்கக்கூடிய உதவியை நாம் நமக்கும், பிரிட்டனுக்குமுள்ள உறவைப் பலப்படுத்துவதற்கே உபயோகிப்போமானால் அந் நாடுகள் நமக்கு நீடித்து உதவி செய்யும் என்று எதிர்பார்ப்பது அறிவுடைமையாகாது. ஏனெனில் அம்மாதிரி உதவியினால் அந் நாடுகளுக்குக் கஷ்டமே ஏற்படும்.

3. நாம் பிரிட்டனின் குடிமக்கள் என்று சொல்லிக் கொள்ளுகையில் நம்மைக் கிளர்ச்சிக்காரர்கள் எனத்தான் பிற நாட்டினர் மதிப்பார்கள். குடிமக்களா யிருந்துகொண்டு ஆயுதந்தாங்கி எதிர்ப்பதற்கும் தயாராயிருந்தால் தங்களுடைய அமைதிக்குப் பங்கமேற்படு மென்றே பிறர் கருதுவார்கள். இந்தப் புதிரை நாம் உடனடியாகத் தீர்த்துவிடலாம். ஆனால், பவ்யமான குடிகள் என்று சொல்லிக்கொண்டு அதே சமயத்தில் எதிர்த்துக்கொண்டு மிருக்கலாம் என்பதும் சாமானிய மக்கள் எளிதாகப் புரிந்துகொள்ளக் கூடியதல்ல.

4. பிரிட்டிஷ் ஆட்சியில் நாம் பட்ட கஷ்டங்கள், அவைகளைத் தீர்த்துக்கொள்ள நாம் அநுஷ்டித்த அமைதியான முறைகள் பயனற்றுப்போயின என்பதையும் குறிப்பிட்டு ஒரு யாதாஸ்து தயாரித்து அந்நிய அரசாங்கங்களுக்கு நாம் அனுப்ப வேண்டும்; அதே சமயத்தில் பிரிட்டிஷ் முடியாட்சியில் சந்தோஷமாகவும், சுகமாகவும் வசிப்பது இயலாது என்பதையும், பிரிட்டனுடன் உள்ள எல்லா உறவுகளையும் அறுத்துக் கொள்ளவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டுவிட்டது என்பதையும்,

பிறநாடுகளுடன் அமைதியான வர்த்தக உறவுகொள்ள விரும்புவதையும் உறுதி கூறுவோமானால், பிரிட்டனுக்கு கப்பல் கப்பலாக விண்ணப்பங்கள் அனுப்புவதைவிட அம்மாதிரி யாதாஸ்து, நல்ல விளைவுகளைச் சாதிக்கும்.

பிரிட்டிஷ் குடிமக்கள் என்கிற முறையில் நம்மைப் பிற நாட்டினர் வரவேற்கவும் மாட்டார்கள்; நம் முறையீடுகளுக்குச் செவிசாய்க்கவும் மாட்டார்கள். மற்ற அரசாங்க சம்பிரதாயங்கள் நமக்கு எதிரிடையாயிருக்கின்றன. சுதந்திரம் பெற்று பிறநாடுகளுக்குச் சமதையான அந்தஸ்து பெறும் வரையில் நம்மைப் பிறர் மதிக்கவும் மாட்டார்கள்.

இந்த நடவடிக்கைகள் விசித்திரமாகவும், அநுஷ்டிப்பதற்குச் சங்கடமாகவும் தோன்றலாம். ஆனால், முன்னால் நாம் எடுத்துக்கொண்ட பல நடவடிக்கைகள் போலவே இதுவும் பழக்கப்பட்ட, ஏற்கத்தக்கதாக மாறிவிடும். ஆனால் சுதந்திரப் பிரகடனம் செய்யும் வரையில் இந்த நாடு அருவருப்பான ஒரு காரியத்தை நிச்சயம் செய்யவேண்டுமென்று அறிந்தும், தள்ளிப்போட்டுக் கொண்டே போகும் மனிதனின் நிலையில் தான் இருக்கவேண்டிவரும்.

அநுபந்தம்

இந்தப் பிரசுரத்தின் முதற் பதிப்பு வெளிவந்த தினத்தன்றே அரசனுடைய பிரசங்கம் ***பிலடல்பியா** நகரத்தில் வெளியாயிற்று. முன்கூட்டியே அறியும் சக்தி இருந்தால்கூட நமது பிரசுரத்தையும் மன்னன் பிரசங்கத்தையும் இப்படி ஒரே சமயத்தில் வெளியாகும்படி ஏற்பாடு செய்திருக்க முடியாது. ரத்தம் சிந்தும் மனப்பான்மை ததும்பும் அந்தப் பிரசங்கமானது

---

* 1776-இல் ஜனவரி மாதம் பத்தாம் தேதி பிரசுரமான மன்னர் பிரசங்கச் சுருக்கம்: முடியுமானால் என் குடிமக்களின் ரத்தத்தைச் சிந்துவதைத் தவிர்க்கவே விரும்பினேன். யுத்தத்தின் இயல்பான விளைவுகளையும் தவிர்க்க விரும்பினேன். தங்களுடைய தலைவரின் தேசத் துரோக முறைகளை உணர்ந்து அமெரிக்கப் பிரஜைகள் திருந்துவர் எனவும் எதிர்பார்த்தேன். பிரிட்டிஷ் பிரஜையாயிருப்பது உலகத்திலுள்ள நாகரிக சமூகத்தின் பூரண சுதந்திர மளிக்கும் என்பதை அவர்கள் அறிவார்கள் என நம்பியிருந்தேன். இந்த எதிர்ப்புப் போர் பரவிவருகிறது. அந்தப் போரின் நோக்கம் சுதந்திர

நமது பிரசுரத்தில் விவரிக்கப்பட்டிருக்கும் முறைகளைக் கைக் கொள்ளுவது நியாயம் என்பதை நிரூபிக்கிறது. மக்கள் பழிக் குப் பழி வாங்குவதையே புரிந்துகொள்ளுகிறார்கள். மன்னன் பிரசங்கம் நம்மை அச்சுறுத்துவதற்குப் பதிலாக சுதந்திரக் கொள்கைகளை ஆண்மையுடன் கைக்கொள்ளுவதையே வலி யுறுத்துகிறது.

இழிவு மிக்க கொடுஞ்செயல்களுக்கு எக்காரணங்கொண்டு ஆதரவளித்தாலும்—மரியாதைக்காகவோ, அல்லது சும்மா யிருப்பதே நலம் எனும் உணர்வினாலோ—அதனால் தீமையே விளையும். ஆகையால் இதை உணருபவர்கள் மன்னன் பிர சங்கம் கடைந்தெடுத்த அயோக்கியத்தனம் என்பதை அறிவார்கள். ஆகையால், அந்தப் பிரசங்கத்தையும் அதன் கருத்தையும், காங்கிரஸும், மக்களும் எதிர்த்தேயாக வேண்டும். ஒரு நாட்டின் அமைதி பெரிதும் அந் நாட்டு மக்களின் தூய பண்பாடுகளைப் பொறுத்ததாயிருப்பதனால் சில விஷயங்களில் நமது அமைதிக்கும், பாதுகாப்பிற்கும் பொறுப்பு வகிப்பதில் மாறுதல் ஏற்படும் வகையில் வெளிப்படையாக வெறுப்பைக் காட்டுவதைவிட அதை உள்ளத்தில் வைத்து வெளிக்குக் காட்டாமலிருப்பதே சிறந்தது. இந்தப் பண்பாட்டை மேற்கொண்டதனால்தான் போலும் மன்னன் பிரசங்கத்தை வெளிப்படையாக யாரும் தாக்கவில்லை. மன்னர் பேச்சு, பிரசங்கம் என்ற அடைமொழியைப் பெறத்தக்கதல்ல. அது உண்மையை வேண்டுமென்றே துணிந்து அவமதிப்பதாகும்; பொதுநலத்தை இழிவுபடுத்துவதாகும்; மனிதவர்க்கத்தையே நிந்திப்பதாகும்; கொடுங்கோலர்களின் அகம்பாவத்திற்கு ஆடம்பரமாக நரபலி அளிப்பதற்கு ஒப்பாகும். மனிதவர்க் கத்தை அழிப்பது முடியாட்சியின் உரிமை மட்டுமல்ல, அதன்

ஆட்சியை அமைப்பதுதான் என்பதும் தெளிவாகத் தெரிகிறது. இந்தத் திட்டம் வெற்றிபெற்றால் நாச விளைவுகளே ஏற்படும் என்பதை நான் சொல்லத் தேவையில்லை. இந்தக் கிளர்ச்சியை உடனடியாக ஒடுக்குவது புத்திசாலித்தனம் மட்டுமல்ல, கருணைகொண்ட செயலுமாகும். இதற்காக நான் எனது கடற் படையை விரிவுபடுத்தியுள்ளேன்; தரைப்படையையும் பெருக்கியுள்ளேன். ஆனால் இந்த முறைகளால் என் ராஜ்யத்திற்கு அதிகக் கஷ் டம் ஏற்படாமல் பார்த்துக்கொண்டிருக்கிறேன். தங்களுடைய உதவி திருப்தி கரமான முறையில் கிடைக்கும் என்று அந்நியர்கள் உறுதி கூறியுள்ளனர்.

கோர விளைவுமாகும். இயற்கைக்கு முடியரசு ஒரு புதுமை; ஆகையினுல் முடிமன்னர்கள் இயற்கையை அறியமாட்டார்கள். மன்னர்கள் மக்களின் சிருஷ்டிகளேயாயினும் அவர்கள் மக்களை அறியமாட்டார்கள். தங்களைப் பதவிக்குக் கொண்டுவந்தவர்களுக்கே கடவுள்போல் அவர்கள் விளங்குகின்றனர். மன்னர் பேச்சில் ஒரு நல்ல அம்சம் இருக்கிறது. அதில் நம்மை ஏமாற்றும் நோக்கமில்லை; நாம் விரும்பினுலும் அந்தப் பேச்சினுல் ஏமாறப்போவதுமில்லை. மிருகத்தனமும், கொடுங்கோன்மையும் அந்தப் பேச்சில் தெளிவாகத் தெரிகின்றன. அதில் புரியாதது ஒன்றுமில்லை. நாம் அதைப் படிக்கையிலே ஒவ்வொரு வரியும், வேட்டைக்காகக் காடுகளைச் சுற்றித் திரியும் பண்படாத முரட்டுத்தனமான இந்தியனும், பிரிட்டிஷ் அரசனைப்போல் கொடியவனல்ல என்பதை அறிந்துகொள்ள முடிகிறது.

1776-இல் நிதி இலாகா காப்பாளராயிருந்த **ஸர் ஜான் டால்ரிம்பிள்** ''அமெரிக்கவாசிகளுக்கு, இங்கிலீஷ் மக்கள் வேண்டுகோள்'' என்ற பகட்டான பிரசுர மொன்றை, ரோமன் கத்தோலிக்கப் பாதிரிமார்களுடைய தோரணையில் 1775-இல் எழுதி வெளியிட்டார். மன்னனுடைய ஆடம்பரத்தையும், அதுபற்றிய விவரங்களையும் கண்டு நமது மக்கள் நடுங்கி விடுவர் எனத் தவறுதலாக நினைத்துக்கொண்டு தெரியாத்தனமாய் அதன் உண்மை ஸ்வரூபத்தை விளக்கிவிட்டார். இந்தப் பிரசுரத்தில், ''ஸ்டாம்பு சட்டத்தை ரத்து செய்த நிதி மந்திரியும், பிரதமராகவும் (1765-66) இருந்த **ராக்கிங்ஹாம்** பிரபுவைப் பாராட்டுவதா யிருந்தால் எங்களுக்கு ஆட்சேபணையில்லை. ஆனுல் எந்த அரசனின் தலையசைப்பின் பயனுகவே மந்திரிகள் எதையும் செய்யலாமோ அவனைப் பாராட்டாமலிருப்பது நியாயமாகாது'' என்று டால்ரிம்பிள் அந்தப் பிரசுரத்தில் கூறியிருக்கிருர். இது அப்பட்டமான பிற்போக்கு (டோரி). இது ஒளிவுமறைவில்லா மனித பூஜை. இம்மாதிரிக் கொள்கையை நிம்மதியாகக் கேட்டு அதை நம்பக்கூடியவர் அறிவாளி என்ற பெயருக்குத் தகுதியற்றவர்; மனித வர்க்கத்திலிருந்து வழுக்கி விழுந்தவர். இப்படிப்பட்டவர் மனித கௌரவத்தையே துறந்துவிட்டதுமன்றி, விலங்குகளுக்கும் கீழானவர், புழு மாதிரி உலகத்திலே ஊர்ந்து செல்லும் இழிநிலை அடைந்தவர் என்று கூறிவிடலாம்.

இங்கிலாந்தின் மன்னர் என்ன பேசுகிறார் அல்லது செய்கிறார் என்பதுபற்றி இப்பொழுது நாம் கவலைப்பட வேண்டியதில்லை. அறநெறி, மனிதக் கடமை யாவற்றையும் இழிவான முறையில் அவர் மீறிவிட்டார்; இயற்கை விதிகளையும் அவர் காலடியில் போட்டு மிதித்துவிட்டார்; சட்டம் இடம் கொடுக்கும் அளவில், தொடர்ந்து அவர் மமதையினாலும், கொடுமையினாலும், எல்லோருடைய வெறுப்பையும் சம்பாதித்துக் கொண்டு விட்டார். தன் நலனை உத்தேசித்து தன் காரியங்களைத் தானே கவனித்துக்கொள்ள வேண்டிய அவசியம் இப்பொழுது அமெரிக்காவுக்கு ஏற்பட்டுவிட்டது. அதனிடையே ஜனங்கள் நிரம்ப இருக்கிறார்கள். அது தோன்றி சில காலமே ஆகியிருக்கிறது. மனித வர்க்கத்திற்கும், கிறிஸ்துவ மதத்தினருக்கும் இழிவைத் தேடிவைத்த ஓர் ஆட்சியை ஆதரிப்பதற்காகத் தன் சொத்துக்களைத் தத்தம் செய்வதைவிடத் தனது மக்களின் நலனைத் தானே பாதுகாப்பது அதனுடைய கடமையாகி விட்டது. நாட்டு மக்கள் எம்மதத்தினராயினும், எவ்வகுப்பினராயினும் அவர்களுடைய ஒழுக்கத்தைப் பாதுகாக்கும் பொறுப்புள்ளவர்களே! பொதுஜன சுதந்திரத்தின் தற்போதைய காப்பாளர்களாயுள்ளவர்களே! ஐரோப்பிய ஊழல்களால் பாழடையாமல் உங்கள் தாய் நாட்டைக் காக்க விரும்புவீர்களானால் உங்கள் அந்தரங்கத்தில் பிரிவினையையே விரும்பவேண்டும். ஒழுக்க சம்பந்தமான பிரச்னைகளை மக்கள் அந்தரங்கமாக ஆராய்வதற்கு விட்டு விட்டு இதுபற்றிய எனது இதர கருத்துக்களைப் பின்வரும் முறையில் வெளியிட விரும்புகின்றேன் :

1. பிரிட்டனிடமிருந்து பிரிந்திருப்பது அமெரிக்கர் நலனுக்கு ஏற்றது.

2. சமரசமா? சுதந்திரமா? — எது அநுபவசாத்தியமான திட்டம். இதுபற்றிச் சிற்சில கருத்துக்கள்.

முதல் கருத்துக்கு ஆதரவாக, நான் உசிதமெனக் கருதினால், இந் நாட்டில் திறமை வாய்ந்த, அநுபவமிக்க பெரியோர்களின் அபிப்பிராயங்களைக் கூறலாம். அவர்கள் இதுவரை இது சம்பந்தமான கருத்துக்களை பகிரங்கமாக வெளியிடவில்லை. இந்த அபிப்பிராயத்திற்கு விளக்கமே

தேவையில்லை. அந்நியர் கையை எதிர்பார்த்து நிற்கும் எந்த நாட்டின் வர்த்தகமும் சுருங்கி, கட்டுப்பாட்டுக் குட்பட்டுக் கிடக்கும்; அதன் சட்டமியற்றும் உரிமைகளும் பல்வேறு தடைகளுக்குட்பட்டவை. இம்மாதிரியுள்ள ஒரு நாடு பொருளாதாரச் செழிப்படைய முடியாது. அமெரிக்கா இதுவரை சுபிட்சத்தை அறிந்ததில்லை. இதுவரையில் அது அடைந்துள்ள முன்னேற்றம் உலக சரித்திரத்திலேயே சிறப்பானதாயிருந்தாலும் அதற்கு உரிமையான சட்டமியற்றும் சுதந்திரம் பூர்ணமாயிருந்தால் அடைந்திருக்கக்கூடிய முன்னேற்றத்தை அடையவில்லை. முன்னேற்றப் பாதையில் அது ஆரம்பதசையிலேயே இருக்கிறது. இங்கிலாந்து நினைத்தபடி காரியம் நிறைவேறினால் அதற்கு ஆபத்தை விளைவிக்கும் ஒரு காரியத்தைச் செய்ய இப்பொழுது அந் நாடு பேராசை கொண்டிருக்கிறது. இந்த நாடு எந்தக் காரியத்தைச் செய்யாவிட்டால் நிச்சயம் நாசம் ஏற்படுமோ அதைச் செய்யத் தயங்குகிறது. பிரிட்டனுக்கு அமெரிக்க வியாபாரத்தினால் நலமே யொழிய அதை வெல்லுவதனாலல்ல. பிரான்ஸும், ஸ்பெயினும் உள்ள மாதிரி அமெரிக்காவும், பிரிட்டனும் தனித்த சுதந்திர நாடுகளாயிருந்தால் அந்த வியாபாரம் நீடித்து நன்றாக நடக்கும். ஏனெனில் பல சரக்குகளில் ஒரு நாட்டிற்கு மற்றொரு நாடு வளமான சந்தையா யிருக்கிறது. ஆனால் பிரிட்டிஷ் ஆதிக்கத்திலிருந்து விடுபட்டு இந்த நாடு இயங்கவேண்டும் என்பது தான் நாம் கவனிக்கவேண்டிய முக்கியமான பிரச்னை. அவசியத்தின் நிர்ப்பந்தத்தினால் கண்டுபிடிக்கப்பட்ட உண்மைகள் போல இந்த உண்மையும் நாளடைவில் தெளிவாகவும், உறுதியுடனும் புலப்படும்.

1. ஏனெனில் என்றாவது ஒரு நாள் சுதந்திரம் வந்தே தீரும்.

2. சுதந்திரம் பெறுவதில் தாமதம் ஏற்பட ஏற்பட அதை அடைவது கடினமாகி விடும்.

சிந்திக்காமல் பேசுவதனால் தவறு செய்பவர்களைக் குறித்து நான் என் மனத்திற்குள்ளும், பிறருடன் பேசுகையிலும் நகைத்திருக்கின்றேன். இம்மாதிரி நகைப்புக் கிடமான தவறுகளில் ஒன்று அதிகமான பேர்களால் பேசப்படுவதை நான்

கேட்டிருக்கின்றேன். பிரிட்டனுக்கும் நமக்கு முள்ள இந்தத் தகராறு இப்பொழுது ஏற்படுவதற்குப் பதிலாக ஐம்பது ஆண்டுகளுக்குப் பின் ஏற்பட்டிருக்குமானால் பிரிட்டனின் ஆதிபத்தியத்தைச் சுலபமாக உதறித் தள்ளியிருக்கலாம் என்று சிலர் கூறுகின்றனர். இதற்கு நான் கூறும் பதில் இதுதான்: இப்போது நமக்குள்ள ராணுவ பலம் 1756—1763-க் கிடையில் நடந்த பிரஞ்சு, இந்திய யுத்தத்தில் நாம் பெற்ற அநுபவத்தின் விளைவே. இந்தப் பலம் நாற்பது அல்லது ஐம்பது ஆண்டுகளுக்குப் பிறகு நமக்கு இருக்கவே இருக்காது. ஐம்பது ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு ராணுவ தளகர்த்தனோ, அல்லது அதிகாரியோ இருக்கமாட்டான்; நாமோ அல்லது நம் சந்ததிகளோ பழங்கால இந்தியர்கள் மாதிரி ராணுவ விஷயங்களில் ஞானசூன்யமானவர்களா யிருப்போம். இந்த ஒரு விஷயத்தை ஆழ்ந்து ஆலோசித்துப் பார்த்தால் சுதந்திரத்திற்கு இதுவே தக்க தருணம் என்பது சந்தேகத்திற்கிடமின்றி நிரூபணமாகும். 1756—1763-ஆம் ஆண்டுகளில் நடந்த யுத்தம் முடிந்த சமயம் நமக்கு அநுபவம் இருந்தது. ஆனல் போர் புரிய ஆட்கள் இல்லை. நாற்பது அல்லது ஐம்பது ஆண்டுகள் கடந்தால் நமக்கு அதிக ஆட்கள் கிடைப்பார்கள்; ஆனல் அநுபவம் இருக்காது. ஆகையினுல் சுதந்திரத்திற்குத் தக்க தருணம் இந்த இரண்டு காலத்திற்கும் இடையே போதிய ஆட்களும் அநுபவமும் கிடைக்கக்கூடிய சமயம் தான். இவ்விரண்டும் தற்போது சேர்ந்திருக்கிறது.

நாம் ஆராயும் பிரச்னைக்கு அவ்வளவாகப் பொருத்தமில்லாத கருத்துக்களை எடுத்துரைத்ததற்கு வாசகர்கள் மன்னிப்பார்களாக! இனி நம் வாதத்தைத் தொடங்குவோம்.

பிரிட்டனுடன் எப்படியாவது சமரசம் செய்துகொண்டு அந்த நாடே அமெரிக்காவை ஆளுவது என நாம் நட்புக் கொண்டால் (இப்படிச் செய்வது நமது கட்சியையே கைவிடுவதாகும்) நமக்குள்ள கடனையோ, இன்னும் வாங்கப்போகும் கடனையோ தீர்ப்பதற்கு வகையின்றிப் போய்விடும். 1774-இல் பிரிட்டிஷ் பார்லிமெண்ட் நிறைவேற்றிய ஒரு சட்டத்தின் மூலம் வடக்கெல்லையிலுள்ள சில நிலங்கள் கானடாவுக்குச் சேர்க்கப்பட்டது. அதே பகுதியில் உள்ள நம் வசமுள்ள நிலங்களின் பெறுமானம் நூறு ஏக்கருக்கு ஐந்து பவுன்தான். இந்தக்

கணக்குப்படி அங்குள்ள நிலங்களின் பெறுமானம் பென்ஸில் வேணிய நாணயப்படி இருநூற்றைம்பது லட்சத்திற்கு மேலாகிறது. ஓர் ஏக்கருக்கு ஒரு பென்ஸ் வீதம் அந்த நிலத்தின் தீர்வை மூலம் வருஷம் இருபது லட்சம் பவுன் கிடைக்கும். இந்த நிலங்களை விற்பதன் மூலம் யாருக்கும் எவ்வித கஷ்டமுமின்றிக் கடனைத் தீர்த்துவிடலாம். நிலத்தின் தீர்வையிலிருந்து அரசாங்கத்தின் வருஷாந்தரச் செலவை ஈடு செய்து கொள்ளலாம். இந்தக் கடனைத் தீர்க்க எவ்வளவு காலம் பிடிக்கும் என்பது பற்றிக் கவலைப்பட வேண்டியதில்லை. ஏனெனில், நிலங்களை விற்க விற்கக் கடன் குறைந்துகொண்டு வரும். இந்தக் கடனைத் தீர்க்க அவ்வப்போது உள்ள காங்கிரஸ் பொறுப்பாளியாயிருக்கும்.

சமரசமா, சுதந்திரமா—இரண்டில் எது அநுபவசாத்தியமான வழி என்பது பற்றி இனி ஆராய்ந்து அதுபற்றிய எனது சில கருத்துக்களை வெளியிடுகிறேன்.

இயற்கையைப் பின்பற்றுபவன், என்றும் தன் வாதத்தில் தோற்றதில்லை. இந்த அடிப்படையில் நான் பொதுப்படையாகப் பதில் கூறுகிறேன். **சுதந்திரம் என்பது நம் வசமுள்ள ஒரே வழி, அது எளிய வழியும்கூட. சமரசம் திகைப்பூட்டக் கூடியது; சிக்கல் நிறைந்தது. இது மனம்போன போக்கில் துரோகம் செய்யத் தயங்காத மன்னனின் தலையீட்டைப் பொறுத்தது.** மேலும் முடியாட்சியினர் ஆலோசனை செய்யாமல் தம்மிஷ்டப்படி முடிவு செய்யவும் கூடியது.

சிந்தனை சக்தியுள்ள எம்மனிதனும் அமெரிக்கா உண்மையில் அபாய நிலையிலிருக்கிறது என்பதை அறிவான். சட்டமில்லை, ஆட்சி இல்லை. ஒருவன் தயவுகூர்ந்து இஷ்டப்பட்டு அளிப்பதைக் கொண்டே ஆட்சி நடந்து வருகிறது. அசாதாரண நாட்டுப் பாசத்தால் ஒன்றுபட்டிருக்கிறோம். இந்தப் பாசமும் மாறக்கூடியது. இதை நமது பகைவர்கள் மறைமுகமாகச் சிதைப்பதற்கு முயற்சித்து வருகின்றனர். சட்ட சம்மதமின்றி சட்டமியற்றுதல், திட்டமில்லாத ஞானம், பெயரில்லாத ஓர் அரசியலமைப்பு, எல்லாவற்றையும்விட பிரமிப்பூட்டக்கூடியது சுதந்திர புருஷர்கள் பிறருக்குட்பட்டிருப்பதை ஆதரிப்பது—இதுதான் நம்முடைய தற்கால நிலை. இம்மாதிரி நிலை இதற்கு

முன் எங்கும் இருந்ததில்லை. இனி என்ன நிகழப்போகிறது என்று யார் கூறமுடியும்? தற்போதுள்ள குழப்ப நிலையில் யாருடைய சொத்தும் பறிபோகாது என்று கூறுவதற்கில்லை. மக்களுடைய மனம் ஒரு நிலையில் இல்லை. திட்டமான குறிக்கோள் அவர்களுக்கு இல்லாததால் தங்கள் மனம் போனபடியோ அல்லது யார் எது கூறினாலும் அதன்படியோ நடக்கின்றனர். எது செய்தாலும் குற்றமில்லை, எதுவும் தேசத் துரோகமில்லை. ஆகையினால் ஒவ்வொருவரும் தன் மனம்போனபடி நடக்கலாம் என நினைக்கின்றனர்.

தங்கள் செய்கையினால் நாட்டின் சட்டப்படி தங்கள் தலை போய்விடும் என்றிருந்தால் அமெரிக்க *டோரிகள் ''நாட்டின் நலனுக்கு மாருகத் துணிந்து கூடியிருக்க மாட்டார்கள். போர் அரங்கில் ஆயுதம் தாங்கிய ஆங்கில வீரர்கள் பிடிபடுவதற்கும் ஆயுதந்தாங்கிய சாதாரண அமெரிக்க மக்கள் பிடிபடுவதற்கும் ஒரு வித்தியாசமுண்டு. ஆங்கில வீரர்கள் கைதிகள்; அமெரிக்க வீரர்கள் ராஜத் துரோகிகள். ஆங்கில வீரர்கள் தங்கள் சுதந்திரத்தை இழப்பார்கள்; அமெரிக்கர் தங்கள் உயிரை இழப்பார்கள்.

நாம் எல்லாம் தெரிந்தவர்களாயிருந்தாலும் நமது நடவடிக்கைகள் சிலவற்றில் உறுதியின்மை காண்பதனால் நமக்குள் பிளவுகள் ஏற்படுகின்றன. நமது நாட்டைப் பிணைக்கும் பாசக் கயிறு உறுதியா யில்லாததனால் உடனடியாக அதைப் பலப்படுத்தாவிட்டால் பின்னர் அதைச் சீர்திருத்த முடியாது. அந்த நிலையில் சமரசம் செய்யவோ, சுதந்திரம் பெறவோ இயலாமற் போய்விடும். அரசனும், அவருடைய உதவாக்கரை ஏவலாளர்களும் இந்த நாட்டைப் பிளவுபடுத்தும் பழைய லீலையில் இறங்கியிருக்கின்றனர். நம்மிடையே பச்சைப் புளுகுகளைப் பரப்ப சில அச்சகத்தினர் தயாராயிருக்கின்றனர். சில மாதங்களுக்கு முன் நயவஞ்சகமான ஒரு **கடிதம்**† இரண்டு நியூயார்க் பத்திரிகை

---

* டோரிகள் தற்போதைய நிலை நீடிக்கவேண்டும் என விரும்புபவர்கள். அமெரிக்க டோரிகள் பிரிட்டிஷ் மன்னர் ஆட்சியை ஆதரிப்பவர்கள்.

† 11-12-1775-இல் ''நியூயார்க் கெஜட்'' ''வீக்லி மெர்க்குரி'' எனும் பத்திரிகைகளில் வந்த செய்தியையே ஆசிரியர் குறிப்பிடுகிறார். அதன் சுருக்கம் வருமாறு: அசைக்கமுடியாத ஓர் உடன்பாட்டைப் பிரிட்டனுக்கும், அமெ

களிலும், மற்றும் இரு பத்திரிகைகளிலும் பிரசுரமாயிருந்தன. இதுவே விஷயத்தைப் புரிந்துகொள்ள இயலாத, நாணயமற்ற வர்கள் நம்மிடையே இருக்கின்றனர் என்பதற்குப் போதிய சாட்சியாகும். பலவகைக் கஷ்டங்களைச் சிருஷ்டித்துக்கொண்டு சமரசத்தின் அவசியத்தைப் பற்றிப் பேசுவது எளிது. ஆனால், இந்தப் பணி எவ்வளவு கஷ்டமானது என்பதையோ, இதுபற்றி நாடு பிளவுபட்டால் அதனல் எவ்வளவு அபாயம் ஏற்படும் என்பதையோ சமரசவாதிகள் ஆழ்ந்து சிந்தித்திருக்கிறார்களா? பலதரப்பட்ட மக்கள், அவர்கள் நிலைபற்றியெல்லாம் ஆராய்ந்து முடிவு செய்யவேண்டும் என்பதை அவர்கள் யோசித்துப் பார்த்தனரா? யாவற்றையும் பறிகொடுத்துக் கஷ்டப்படுகிறவர்கள் நிலையில் தாங்கள் இருப்பதாக நினைத்துப் பார்த்து யோசனை செய்தனரா? நாட்டின் பாதுகாப்புக்காக யாவற்றையும் துறந்து போர்புரிய முன்வந்த வீரர்களைப்பற்றி இவர்கள் சிந்தித்தனரா? பிறர் நலனை மறந்து தங்கள் நன்மைக்காகவே இந்த அபத்த வாதத்தை அவர்கள் புரிவார்களானல் இவர்களுக்கு மாறுபட்ட கருத்துடையவர்களும் இருக்கிறார்கள் என்பதை இவர்கள் மறந்துவிட்டனர் என்றே கூறவேண்டும்.

1763-ஆம் ஆண்டு‡ இருந்த நிலையிலேயே இருந்துவிடுவோமே என்று சிலர் கூறுகின்றனர். ஆனால், இந்த நிலைக்கு நம்மைக் கொண்டுவர பிரிட்டனுக்கு சக்தியில்லை. இந்த ஏற்பாட்டை அது பிரேரிக்காது என்றே இவர்களுக்கு நான் பதிலளிப்

ரிக்காவுக்கும் ஏற்படுத்துவதற்கான மசோதா மந்திரி சபையின் ஆலோசனையில் இருந்துவருகிறது. இந்த மசோதாவின் நோக்கம், மன்னன், மற்றப் பிரஜைகள் மாதிரி அமெரிக்கருக்கும் சம சுதந்திரமளிப்பதுதான். அமெரிக்கா பூராவும் பல ஜில்லாக்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு ஜில்லாவும் பார்லிமெண்டுக்கு ஒரு பிரதிநிதி அனுப்பலாம். பிரிட்டனிலுள்ள வியாபார வசதி, சுங்கம் முதலிய வரிகள் மூலம் ஒவ்வொரு ஜில்லாவிலிருந்தும் கிடைக்கும் வருமானத்திற்கேற்ப பிரதிநிதித்துவம் அதிகரிக்கப்படும். இதனல் காலனிக்குக் காலனி போட்டியும், பொறாமையும் ஏற்படுமாகையால் இம்மசோதாவை ஆசிரியர் நயவஞ்சகமானது என்கிறார்.

‡ 1763-ஆம் ஆண்டுதான் ஏழு ஆண்டுகள் நடந்த பிரஞ்சு இந்திய யுத்தத்தின் முடிவு. இதனல் அமெரிக்காவின் பொருள் கரைந்துவிட்டது. இதற்கு இரண்டு ஆண்டுகட்குப் பின்பு பிரிடடன் ஸ்டாம்புச் சட்டத்தை இயற்றி அமெரிக்கரின் அருவருப்பை வளர்த்ததனல், 1763-ஆம் ஆண்டு ஓரளவு சுதந்திரம் அனுபவித்த காலம் எனச் சிலர் கருதினர்.

பேன். இந்த ஏற்பாட்டை பிரிட்டன் விரும்பினாலும் ஒழுங்கற்ற நம்பிக்கைத்துரோக மனப்பாங்குள்ள அந் நாட்டு அரசு உடன் பாட்டின்படி நடக்கும் என நாம் எப்படி எதிர்பார்க்க முடியும் என்று கேட்டால் அது நியாயமான கேள்வியாகும். மற்றொரு பார்லிமெண்டோ அல்லது இந்த ஏற்பாட்டை நிறைவேற்றிய இந்தப் பார்லிமெண்டோ நிர்ப்பந்தமாகப் பறிக்கப்பட்டது, அசட்டுத்தனமாக அளிக்கப்பட்டது என்று கூறி அதை ரத்து செய்துவிடலாம். அப்படி நேர்ந்தால் அதற்கு எங்கே, எப்படிப் பரிகாரம் தேடமுடியும்? பிற தேசங்களுடன் சட்டம் பேசி வழக் காட முடியாது. முடியாட்சிக்குப் பீரங்கிகளே வக்கீல்கள். நம் வழக்கைத் தீர்ப்பது நீதிமன்றங்களல்ல, வாளும் போரும் தான். 1763-ஆம் ஆண்டு நிலையை நாம் அடையவேண்டுமானால் அப்பொழுது நிலவிய சட்டங்களுக்கு உயிரளித்தால் மட்டும் போதாது. நமது நிலையும் பழைய நிலைக்கு மாறவேண்டும். தீயிட்டுக் கொளுத்தி நாசம் செய்யப்பட்ட நமது நகரங்கள் புத்துயிர் பெறவேண்டும்; நமது சொந்த நஷ்டங்கள் ஈடு செய்யப்பட வேண்டும்; பாதுகாப்புக்காக வாங்கப்பட்ட பொதுக் கடன்கள் தீர்க்கப்பட வேண்டும்; இல்லையேல் அந்தப் புகழ்பெற்ற ஆண்டிலிருந்ததைவிட அநேக லட்சம் பவுன்கள் நாம் நஷ்டமடைவோம். இதே கோரிக்கை ஓராண்டுக்கு முன் நிறைவேற்றப்பட்டிருந்தால் அந்த முடிவு இந்நாட்டினர் உள்ளத்தையும், ஆன்மிக உணர்வையும் கொள்ளை கொண் டிருக்கும். இப்பொழுது காலம் ரொம்பவும் கடந்துவிட்டது. நாம் வெகுதூரம் முன் சென்று விட்டோம்; இனிப் பின்வாங்க முடியாது.

பண சம்பந்தமான ஒரு சட்டத்தை ரத்து செய்வதற்காக மட்டும் ஆயுதந்தாங்கி எதிர்ப்பது மனித உணர்ச்சிக்கு அரு வருப்புத் தருவதுடன் தெய்வ நீதிக்கும் ஒவ்வாதது; இந்தச் சட் டத்திற்குக் கீழ்ப்படியச் செய்வதற்காக நம் மீது ஆயுதப் பிரயோ கம் செய்வது இழிவானது; இரு சாராரின் நோக்கத்திற்கும் ஏற்காதது, அதற்காக அவர்கள் கைக்கொள்ளும் முறை; ஏனெனில், விலைமதிப்பற்ற மனித உயிரை அற்ப விஷயங்களுக் காக மாய்ப்பது தகாது. நம்மை அடக்குவதற்காகப் பிரயோ கிக்கப்படும் பலாத்காரம், ராணுவத்தினர் உதவிகொண்டு

நமது சொத்துக்களை அழித்தல், வாளும், தீயும் கொண்டு நம் நாட்டின் மீது படையெடுத்தல்—இந்த அக்கிரமங்களை எதிர்த்து வாளேந்திப் போர்புரிவதுதான் நியாயம். ஆயுதம் கொண்டு நம் உரிமையைப் பாதுகாத்துக்கொள்ளவேண்டிய தருணத்தை, நமக்கெதிராக முதல் துப்பாக்கி வெடித்த நிமிஷத்தை அமெரிக்காவின் சுதந்திர சகாப்தம் தொடங்கிய சுபதினமாகக் கொள்ளலாம். இந்த வாதமே நேர்மையானது. இந்த வாதம் தான்தோன்றித்தனத்திலோ, போராசையினாலோ எழுந்ததல்ல: இது நமது நாட்டுக்கெதிராக எழுந்த பல சம்பவக்கோர்வை களின் விளைவே. இந்த நிலைக்கு நம் நாட்டவர்கள் பொறுப் பாளிகளல்லர்.

நல்லெண்ணத்துடன் காலத்துக்கேற்ற சில யோசனைகள் கூறி இப் பகுதியை முடித்துக்கொள்ளுகிறேன். மூன்று வகைகளில் இனி நாம் சுதந்திரத்தை ஸ்தாபித்துக்கொள்ளலாம். இந்த மூன்றில் ஒரு வழியில்தான் அமெரிக்காவின் கதி நிர்ணயிக்கப் படப்போகிறது. அதாவது காங்கிரஸின் மூலம், சட்டபூர்வமாக எழும் மக்கள் குரல் மூலம், ராணுவ பலம் அல்லது ஜனத்திரள் வலிமையின் மூலம். நமது போர்வீரர்கள் எல்லாம் பிரஜைகள் என்றோ, மக்கள் கூட்டம் அறிவுமிக்க ஒரு குழு என்றோ திட்ட மாகக் கூறமுடியாது. நான் ஏற்கனவே கூறியமாதிரி நற்குணம் பரம்பரைச் சொத்துமல்ல, நிலைத்திருப்பதுமல்ல. காங்கிரஸின் சம்மதத்தின்பேரில் நமக்குச் சுதந்திரம் கிடைத்தால் உலகத்தி லேயே மிகச் சிறப்பு வாய்ந்த, தூய்மைமிக்க அரசியலமைப்பை வகுக்கச் சந்தர்ப்பமும், அதற்கான ஆதரவும் கிடைக்கும். உலகத் தில் புது வாழ்வு தொடங்கும் சக்தி நம்மிடமிருக்கிறது. உலகம் தோன்றிய காலத்திலிருந்து இதுவரை இவ்வளவு அரிய சந்தர்ப்பம் யாருக்கும் வாய்த்ததில்லை. ஒரு புது உலகம் உதயமாகும் நாள் நெருங்கி வருகிறது, ஐரோப்பா பூராவிலு முள்ள ஜனத்தொகையுள்ள ஒரு மனித சமுதாயம் இன்னும் சில மாதங்களில் தங்களுடைய சுதந்திரத்தைப் பெற விருக் கின்றது. அந்த நன்னாளை நினைத்தாலே பிரமிப்பு ஏற்படுகிறது.

ஒரு புது உலகத் தோற்றத்துடன் ஒரு சில மனோவலிமை யற்ற சுயநலமிகளின் நலத்தை ஒப்பிட்டுப் பார்த்தால் அது எவ்வளவு அற்பமாகத் தோன்றுகிறது!

இந்த சுமுகமான, கவர்ச்சிமிக்க காலத்தை அலட்சியம் செய்துவிட்டு, வேறு ஒரு முறையில் இனி சுதந்திரம் பெற நாம் முயற்சிப்போமானல், அதன் தீய விளைவுகளுக்கு ஒன்று நாமே பொறுப்பாளிகள், அல்லது விசாரிக்காமல், சிந்தனை செய்யாமல் குறுகிய நோக்கும், வெறுப்புணர்ச்சியும் கொண்டு இந்தத் திட்டத்தை எதிர்ப்பவர்களைப் பொறுப்பாளிகளாக்க வேண்டும். சுதந்திரத்திற்குச் சாதகமான காரணங்களைப் பகிரங்கமாகக் கூறுவதைவிடத் தனித்தனியே அந்தரங்கமாக ஆலோசனை செய்ய வேண்டும். நாம் சுதந்திரமடையவேண்டுமா, வேண்டாமா என்பதுபற்றி இப்பொழுது நாம் பேசிப் பயனில்லை. அதை உறுதியுடன், நிர்ணயமான, கௌரவமான முறையில் அடைய ஆவல் கொள்ளவேண்டும். இதற்கான இயக்கத்தை இன்னமும் ஆரம்பிக்காமலிருக்கிறோமே என்று துடிக்கவேண்டும். தினம் தினம் நடக்கும் சம்பவங்களெல்லாம் சுதந்திரத்தின் அவசியத்தை வற்புறுத்துகிறது. டோரிகள் போன்ற பிற்போக்காளர்கள் இன்னமும் நம்மிடையே இருப்பார்களாகில் அவர்களே பிறரைவிடச் சுதந்திரம் பெறுவதில் கண்ணும் கருத்துமா யிருக்கவேண்டும். பல கமிட்டிகள் அமைத்ததனுல் அவர்களைப் பொதுஜன ஆத்திரத்திற்குள்ளாகாமல் பாதுகாப்பது சாத்தியமாயிருந்தது. அறிவாளிகளால் ஏற்படும் நீடித்த ஆட்சி தான் அந்தப் பாதுகாப்பை அவர்களுக்கு நிச்சயமாக அளிப்ப தற்கு உத்தரவாதமாகும். அவர்களுக்குப் பிற்போக்கை (டோரி) விட்டு முற்போக்காளர்களாக (விக்குகள்) மாறுவதற்கான நற் பண்பு இல்லாவிட்டாலும் சுதந்திரத்திற்கு ஆசைப்படும் முன் யோசனையாவது இருக்கவேண்டும்.

சுருங்கக்கூறின், சுதந்திரம் ஒன்றுதான் நம்மை ஒன்ருகப் பிணைக்கவல்லது. அப்பொழுதுதான் நமது லட்சியத்தைத் தெளிவாகக் காண்பதுடன் குரூபிகளான நம் எதிரிகளின் திட்டங் களுக்கு நாம் செவிசாய்க்காதிருப்போம். அப்பொழுதுதான் நாம் பிரிட்டனுடன் சமநிலையில் உறவுகொள்ள முடியும். ஏனெனில், ''கிளர்ச்சிக்காரக் குடிமக்கள்'' என அவர்கள் கருதுபவர்களிடம் புகலிடம் கேட்பதைவிட அமெரிக்க ராஜ்யங் களுடன் சமாதான நிபந்தனைகள்பற்றிப் பேசுவது மன்னர் மதிப் புக்குக் குறைவு என அவர்கள் கருதமாட்டார்கள். சுதந்திரக்

கோரிக்கையில் நாம் தாமதிப்பதனுல்தான் பிரிட்டன் இந் நாட்டை வென்றுவிடலாம் என எண்ண இடமளிக்கிறது. நமது குறைபாடுகள்தாம் போர் நீடிப்புக்குக் காரணமாயிருக்கின்றன. நமது வியாபார வசதியிலுள்ள குறைபாடுகளை நீக்கும்படி நாம் முறையிட்டது பயனளிக்காததனுல், நாம் சுதந்திரம் பெற்று நமது குறைகளை நாமே தீர்த்துக்கொள்ளும் வழியைப் பின்பற்றி அப்புறம் வர்த்தகத்தை சுதந்திரமாக்குவோம். அப்பொழுது பிரிட்டனிலுள்ள வர்த்தகர்களும், அறிவாளிகளும் நம் பக்கத்தில் இருப்பர். ஏனெனில், வர்த்தகமில்லாமல் போர்புரிந்து கொண்டிருப்பதைவிட சமாதானத்தையும், வர்த்தக வசதியையும் ஒரே சமயத்தில் அநுபவிப்பது சிறந்ததல்லவா?

இந்தக் காரணங்களுக்காக சுதந்திரம் வேண்டும் என்று சொல்லி நிறுத்திக்கொள்ளுகிறேன். இந்தப் பிரசுரத்தின் முந்திய பதிப்புகளில் நான் வகுத்த கொள்கையை இதுவரையில் யாரும் மறுக்காததனுல் அந்தக் கொள்கை மறுக்க முடியாதது என்றே, அதை ஆதரிப்பவர்கள் எண்ணிக்கை பெரும்பாலாயிருப்பதனுல் அதை மறுத்துப் பயனில்லை என்று கருதுவதாகவோ நிரூபணமாகிறது. ஆகையினுல் ஒருவரையொருவர் சந்தேகத்துடன் பார்ப்பதை நிறுத்திவிட்டு, நாம் ஒவ்வொருவரும் அண்டையிலிருப்பவனிடம் நேசம் பூண்டு, ஒன்றுபட்டு நின்று பழைய மனத்தாங்கல்களையும் பிளவுகளையும் மறந்து விடுவோமாக! **விக், டோரி** என்ற கட்சிப் பாகுபாடு மறையுமாக! **நல்ல பிரஜை, சூதுவாதில்லாத உறுதி மிக்க நண்பன், மனித உரிமைகளை அந்தரங்க அகத்தூய்மையுடன் காப்போன், சுயேச்சையான சுதந்திர அமெரிக்க ராஜ்யங்கள் எனும் வார்த்தைகளைத் தவிர வேறு ஒன்றும் நம் காதில் விழாமலிருக்குமாக !**

அமெரிக்க நெருக்கடி—1

இது மக்களுக்கு மிகவும் சோதனையான காலம். கோடை காலம் பார்த்துப் போருக்குச் செல்லும் வீரனும், சௌகரிய மான காலத்தில் தேசப்பணி புரிபவனும் இந்த நெருக்கடி யான காலத்தில் நாட்டுப் பணிபுரியத் தயங்குவர். ஆனால் **இந்த சமயத்தில்** துணிந்து சேவைபுரிய முன்வருபவன் எல்லோ ருடைய அன்புக்கும் நன்றிக்கும் பாத்திரமானவன். நரகத்தை யும் கொடுங்கோன்மையையும் எளிதில் வெல்ல முடியாது. ஆனால் போராட்டம் எவ்வளவுக் கெவ்வளவு கடுமையாயிருக் கிறதோ அவ்வளவுக் கவ்வளவு வெற்றியும் மகோன்னதமா யிருக்கும் என்று ஆறுதல் கொள்ளலாம். நாம் எளிதாகப் பெற்றதைக் குறைவாக மதிக்கிறோம். அதிக விலையுள்ளதற்கே மதிப்பு அதிகம். தனது சிருஷ்டியில் அடங்கிய ஒவ்வொன்றுக்கும் தக்க மதிப்பை நிர்ணயிப்பதை ஆண்டவன் அறிவார். சுதந்திரம் போன்ற தெய்வீக உடைமைக்கு அதிக மதிப்புக் கொடுக்கா விட்டால் அது வியப்பிற்குரிய விஷயமாகும். தனது கொடுங் கோன்மையை ஸ்தாபிக்க பிரிட்டனிடம் படைபல மிருப்பதனால் **நமக்கு வரி விதிக்க மட்டுமின்றி, எல்லாவிதத்திலும் *நம்மைக் கட்டுப்படுத்த** அதற்கு உரிமை யிருக்கிறது எனப் பறைசாற்று கிறது. இவ்வாறு கட்டுப்பட்டிருப்பது அடிமைத்தனமில்லை யெனில், உலகில் அடிமை வாழ்வே இல்லை என்று தான் கூறவேண்டும்! இவ்வாறு கூறுவதே பாபமாகும்! ஏனெனில், வரம்பில்லாத இவ்வித அதிகாரம் ஆண்டவன் ஒருவனுக்கு மட்டும்தானிருக்க முடியும்.

இந் நாட்டுக்கு சுதந்திரம் உடனே அளிக்கப்பட வேண்டுமா அல்லது தாமதித்து அளிக்கலாமா என்பது பற்றி இப்பொழுது நான் விவாதம் செய்ய விரும்பவில்லை. எட்டு மாதங்களுக்கு

---

* 1766-ஆம் ஆண்டு ஸ்டாம்புச் சட்டம் ரத்து செய்யப்பட்ட பின்னர், ஆங்கிலேய பார்லிமெண்ட் நிறைவேற்றிய பிரகடனச் சட்டத்திலிருந்து ஒரு பகுதியை இங்கே தாமஸ் பெய்ன் குறிப்பிடுகிறார். இச்சட்டத்தின்படி குடியேற்ற நாட்டினர்களையும் எல்லா அமெரிக்கர்களையும், இங்கிலாந்து அரசரின் பிரஜைகள் என்ற முறையில் எல்லாவிதத்திலும் கட்டுப்படுத்த உரிமையுள்ளதென்றும், இதற்காக இயற்றப்பட்ட எல்லாவித சட்டங்களும் மற்ற சட்டங்களைப் போலவே வலிமையுள்ளவை என்றும் கண்டிருக்கிறது.

முன் சுதந்திரம் கிடைத்திருந்தால் சிறப்பாயிருந்திருக்கும் என்பது என்னுடைய அபிப்பிராயம். சென்ற பனிக் காலத்தை நாம் சரிவரப் பயன்படுத்திக்கொள்ளவில்லை. ஆனால் நாம் பிரிட்டனுக்குட்பட்டிருக்கையில் எதையும் செய்திருக்கவும் முடியாது. தவறு நிகழ்ந்திருக்குமேயானால் அதற்கு நாமே தான் பொறுப்பாளிகள். இப்பொழுதும் ஒன்றும் குடிமுழுகிப் போய்விடவில்லை. பிரிட்டிஷ் தளபதி **ஹோ** (ஸர் வில்லியம்) சென்ற ஒரு மாதமாக நம் நாட்டில் நாசம் விளைவித்து வருகிறானே ஒழிய நம்மை முற்றிலும் வென்று விடவில்லை. இதே அக்கிரமம் ஒரு வருஷத்திற்கு முன் நிகழ்ந்திருந்தால், நியூஜெர்ஸி மக்கள் ஆவேசத்துடன் எதிர்த்து உடனடியாக அவனைத் தீர்த்துக்கட்டியிருப்பர். சற்று அவகாசமும் மக்களின் மன உறுதியுமிருந்தால் எதிர்த்து வெற்றி பெறுவது இப்போது அசாத்தியமல்ல.

நான் அவ்வளவாக மூட நம்பிக்கையுள்ளவனல்ல. ஆனால் அறிவாற்றலுள்ளவர்கள் கைக்கொள்ளக்கூடிய கண்யமான முறைகளில் யுத்தம் நேரிடாமல் தவிர்ப்பதற்கு இடைவிடாமல் சிரத்தையுடன் முயற்சித்தவர்களை நிர்க்கதியாய் ராணுவ பலத்திற்கு இறையாக ஆண்டவன் விட்டுவிடமாட்டான் என்றே நான் நம்புகிறேன். ஆண்டவன் பிரபஞ்சத்தைத் தான் ஆளுவதைப் பேய்களிடம் விட்டுவிட்டான் என்று எண்ணும்படி நான் அவ்வளவு நாஸ்திகனுமல்ல. ஆகையினால் பிரிட்டிஷ் மன்னன் எப்படி ஆண்டவன் அருளை எதிர்பார்க்க முடியும்? இதைவிட நினைத்தபடி கொலை புரிபவன், வழிபறிக் கொள்ளைக்காரன், பூட்டுடைத்துத் திருடுபவன் முதலியவர்களுக்குக்கூட ஆண்டவன் கருணை கிட்டும்.

சில சமயம் பீதி மக்களை எப்படி உலுப்புகிறது என்பதை நினைத்தால் ஆச்சரியமாயிருக்கிறது. எல்லா சகாப்தங்களிலும் எல்லா மக்களும் பீதிக்குட்பட்டிருக்கின்றனர். தட்டையான அடித்தளமுள்ள படகுகள் அடங்கிய பிரஞ்சுக் கடற்படை அணுகுகிறது எனப் பதினைந்தாவது நூற்றாண்டில் கேட்டு பிரிட்டிஷ் மக்கள் குளிர் காய்ச்சல் கண்டவர்கள் மாதிரி நடுங்கினர். பிரிட்டிஷ் படை பிரான்ஸில் புகுந்து நாசம் விளைவித்த பிறகு **ஜோன் ஆப் ஆர்க்** எனும் பெண்ணின் தலைமையில் உதிரிப்

படையினர் வீராவேசத்துடன் பிரிட்டிஷாரை அச்சத்தால் உறைந்துபோனவர்கள் மாதிரி ஓட்டமெடுக்கும்படிச் செய்தனர். நமது ஜெர்ஸியில் இம்மாதிரி ஒரு கன்னிப் பெண் தோன்றி தனது நாட்டினர் நாசத்திற்கும் மானபங்கத்திற்கும் உள்ளாகாமல் பாதுகாக்க ஆண்டவன் அருள்புரிந்தால் எவ்வளவு நன்ருயிருக்கும்? எனினும் பீதி ஏற்படுவதனுலும் சில சமயம் தீமையைப் போலவே நற்பயனும் விளைகின்றது. பீதி நீடித்து நிலவுவதில்லை. பீதிக்குட்பட்டோர் மனம் அப்புறம் உறுதியடைகிறது. ஆனல் பீதியின் தனிச்சிறப்பு என்னவெனில் அதுதான் மனிதனின் சிரத்தையையோ, துரோகசிந்தனையையோ மதிப்பிடும் உரைகல்லாகிறது; மக்களிடம் மறைந்து கிடக்கும் இயல்புகளை வெட்ட வெளிச்சமாக்குகிறது. பேய் நடமாடுகிறது என்கிற மனமயக்கம் கொலையாளிகளை விழிப்புறச் செய்வது மாதிரி பீதியும் மறைவில் தேசத்துரோகம் செய்பவர்களையும் எச்சரிக்கிறது. மக்களிடம் மறைந்து கிடக்கும் எண்ணங்களை பீதி அலசி ஆராய்ந்து உலக மக்கள் அறிந்துகொள்ளும்படி அம்பலமாக்குகிறது. பிரிட்டிஷ் தளபதி ஹோ, **டிலாவேர்** நதியில் வந்திறங்கிய நாளை சபிக்கும் அளவிற்குக்கூட சில போலி டோரிகள் மனமாறுதல் பெற்றிருக்கின்றனர்.

†**லீ** கோட்டையிலிருந்து படைகளுடன் நான் பென்ஸில்வேனியாக் கோடிக்குச் சென்றதனல், தூரத்திலுள்ளவர்கள் அறிந்துகொள்ள முடியாத பல தகவல்கள் எனக்குத் தெரியும். நமது நிலை அங்கு மிகவும் நெருக்கடியாயிருந்தது. ஏனெனில் **நார்த்*** நதிக்கும் **ஹாக்கன்ஸாக்**குக்கும் இடையில் நாம் இருந்த இடம் மிகக் குறுகலானது. **ஹோ** நமக்கெதிராகக் கொண்டு செலுத்திய படையில் நாலில் ஒரு பங்குகூட இல்லை நமது வீரர்களின் எண்ணிக்கை. கோட்டைக்குள் நாமிருந்து அதைக் காப்பாற்ற அருகாமையில் நமது படை ஏதும் இல்லை. நம் வசமிருந்த வெடி மருந்து, சில்லறைத் துப்பாக்கிகள், நமது ராணுவ சாமான்களில் பெரும் பகுதி யாவும் அப்புறப்படுத்தப்பட்டு விட்டன. ஏனெனில் **ஹோ** ஜெர்ஸிக்

† இந்தக் கோட்டை ஹட்ஸன் நதியில் ஜெர்ஸி பக்கம் அமைந்திருக்கிறது.
* நார்த் நதி என்பது இப்பொழுது ஹட்ஸன் என அழைக்கப்படும் நதிதான்.

குள் புகுந்துவிட்டால் லீ கோட்டை நமக்குப் பயன்படாது என நாம் அஞ்சினேம். மேலும் அறிவுள்ள எவனும் அவன் ராணுவத்தினனுனலும், அயலானுனலும் இம்மாதிரி சமதரையி லுள்ள கோட்டைகள் தற்காலிகமானவை என்றும், எதைப் பாதுகாப்பதற்காக நாம் கோட்டையை அமைத்தோமோ அதை எதிரிகள் தாக்கும் வரையில்தான் பயன்படும் என்றும் புரிந்துகொள்ளவேண்டும். நவம்பர் இருபதாம் தேதி காலையில் லீ கோட்டையில் நமது நிலே இவ்வாறிருக்கையில் ஏழு மைலுக்கு மேற்கே எதிரி இருநூறு படகுகளில் வந்திறங்கியதாக ஒரு ராணுவ அதிகாரி தகவல் கூறினன். நமது படைக்குத் தலைமை வகித்த மேஜர் ஜெனரல் கிரீன், உடனே வீரர்களைப் போருக்குத் தயாராகும்படி கட்டளையிட்டு விட்டு நதி மூலம் ஆறு மைல் களுக்கப்பால் ஹாக்கன்ஸாக்கிலிருந்த ஜெனரல் வாஷிங்டனுக்கு அவசர அறிவிப்பு அனுப்பினன். எதிரிக்கு மூன்று மைலுக் குள் நாங்கள் இருந்த இடத்திலிருந்து ஆறு மைல் தூரத்தி லிருந்த ஹாக்கன்ஸாக் பாலத்தைக் கைப்பற்றுவதே எங்கள் நோக்கம். ஏனெனில் இந்தப் பாலம் எதிரிக்கும் எங்களுக்கு மிடையே யிருந்தது. ஜெனரல் வாஷிங்டன் முக்கால் மணி நேரத்தில் அங்கு வந்து எங்கள் துருப்புகளுடன் பாலத்தை நோக்கிப் படையெடுத்தான். பாலத்திற்காகப் பலத்த சண்டை நிகழும் என நாங்கள் எதிர்பார்த்தோம். ஆனல் எதிரிகள் பாலத்திற்காகப் போர் புரியவில்லே. ஆகையினல் எங்கள் படையில் பெரும் பகுதியினர் பாலத்தின் மூலமும், மற்றும் சிலர் படகுகள் மூலமும், மேலும் சிலர் பாலத்திற்கும் எங்கள் படகுகளுக்கும் இடையிலுள்ள குன்றின் அருகாமையிலிருந்த ஆலே யோரமாகவும், ஈரந்தாங்கிய தரையைக் கடந்து ஹாக்கன் ஸாக் நகரருகில் நதியைக் கடந்தும் சென்றேம். எங்கள் வண்டிகள் கொள்ளுமட்டும் எதிரிகளின் பொருள் களைக் கொணர்ந்தோம். மற்றவை நஷ்டமாகப் போய் விட்டன. எங்கள் படை ஜெர்ஸி, பென்ஸில்வேனியா படை களின் உதவி பெறும் வரையில் முன்னேறி எதிரிகளைத் தாக்க வேண்டும் என்பதே எங்கள் நோக்கம். நாங்கள் நீவார்க்கில் (Newark) நான்கு நாட்கள் தங்கி அங்குள்ள காவல் நிலேயங்களில் உள்ள படைகளையும் ஜெர்ஸி படையில் ஒரு பகுதியையும்

சேர்த்துக்கொண்டு, எதிரிகள் எங்களை நோக்கி வருகின்றனர் என்பதை அறிந்து எங்கள் படை அவர்களுடையதை விடக் குறைவாயிருந்தாலும் இரு முறை தாக்கினேம். **ஸ்டாடன்** தீவிலுள்ள படையில் ஒரு பகுதியை **ஆம்பாய்** மூலம் எங்களை எதிர்ப்பதற்கு அனுப்பாததனுல் ராணுவ தந்திர முறையில் தளபதி **ஹோ** தவறு செய்து விட்டான் என்றே நான் நினைக்கிறேன். அப்படி அவன் செய்திருந்தானுனல் **பிரன்ஸ்விக்கிலுள்ள** எங்கள் சாமான்களை அவன் கைப்பற்றி நாங்கள் **பென்ஸில்வேனியாவில்** நுழையாமல் எங்களைத் தடுத்திருக்கலாம். ஆனுல் நரகத்தின் சக்திக்கும் வரம்புண்டு என நாம் நம்புவோமானுல் நரக தூதர்களின் செயல்களையும் ஆண்டவன் தன்னிச்சைப்படியே இயக்குகிருர் என நம்பலாம்,

டெலாவேருக்கு நாம் பின்வாங்கிய விவரங்களை நான் குறிப்பிட விரும்பவில்லை. படையினரும், படை அதிகாரிகளும் மிகுந்த துன்பத்திற்காளாக, களைப்புற்று, ஓய்வின்றி, தங்க நிழலின்றி, உண்ண உணவின்றி—இவைகளெல்லாம் பின்வாங்குவதன் தவிர்க்க முடியாத விளைவுகள்—எல்லாக் கஷ்டங்களையும் ஆண்மையுடனும், தீரத்துடனும் பொறுத்துக்கொண்டனர் என்பதை மட்டும் குறிப்பிடுகிறேன். நாடே திரண்டு வந்து எதிரியை விரட்டியடிக்க உதவ வேண்டுமென்பதுதான் அவர்களின் ஒருமித்த ஆசை. போர் புரிவதற்குச் சாதகமான நிலையில் இல்லாமல், சங்கடங்களால் துன்புற்ற சமயங்களில்தான் பிரிட்டனைக் கைப்பற்றி ஆண்ட முதலாவது வில்லியம் சிறப்பாகப் போராடினுன் என்று பிரெஞ்சு அறிஞர் வால்டேர் கூறியுள்ளார். இதேநிலையில்தான் நம் நாட்டில் ஜெனரல் வாஷிங்டனும் இருந்தான். சிலரிடம் காணும் உறுதியை அற்ப விஷயங்கள் அசைத்து விட முடியாது. அப்படியே அசைக்க முடிந்தாலும் அதன் விளைவாக அவர்கள் எஃகு போன்ற உறுதி பெறுவர். பொதுஜன சேவையில் இம்மாதிரி சிறப்புகள் அவரிடம் இருப்பதை நாம் கண்கூடாகப் பார்க்க இயலாவிட்டாலும் ஆண்டவன் அவைகளை அவருக்கு அருளியிருக்கிருர் என்பது உண்மை. இந்தச் சிறப்புகள் அவருக்குள்ள நீடித்த ஆரோக்கியமும், கவலைமிக்க காலங்களில்கூடக் கலங்காமல் செழிப்புற்று விளங்கும் அவருடைய மன உறுதியும்தான்.

நமது தற்போதைய நிலை பற்றிய பலதரப்பட்ட கருத்துக்களில் சிலவற்றைக் கூறி இந்தக் கட்டுரையை முடித்துக்கொண்டு பின்வரும் கேள்விகளைக் கேட்கப்போகிறேன். பகைவன் ஏன் நியூ இங்கிலாந்து மாகாணங்களை விட்டுவிட்டு இந்த மத்திய மாகாணங்களையே போர் அரங்காக அமைத்துக் கொண்டுவிட்டான்? இதற்குச் சுலபமாக பதில் கூறிவிடலாம். நியூ இங்கிலாந்தில் பிரிட்டனிடத்தில் விசுவாசமுள்ள **டோரிக்** கட்சியினர் இல்லை. இந்த மத்திய மாகாணங்களில் அவர்கள் இருக்கின்றனர். இவர்களைத் தாக்கிப் பேசுவதில் நான் இளகிய மனதுடையவனாகவே இருந்து வந்திருக்கின்றேன். அவர்கள் போக்கினால் ஏற்படக்கூடிய அபாயங்களை எடுத்துக் காட்ட ஏராளமான ஆதாரங்கள் காட்டியிருக்கின்றேன். அவர்களுடைய முட்டாள்தனத்திற்கும் அற்பத்தனத்திற்கும் நமது உலகத்தைப் பலிகொடுக்க நான் தயாராயில்லை. நாமோ அல்லது அவர்களோ தங்கள் கருத்துக்களை மாற்றிக்கொள்ள வேண்டிய கட்டம் நெருங்கி விட்டது. இல்லாவிடில் இரண்டில் ஒரு கட்சி மறைந்து போக நேரிடும். **டோரி** (Tory) என்றால் என்ன? ஆண்டவனே! இந்த **டோரி** என்பது யார்? ஆயுதம் தாங்குவதெனில் ஆயிரம் டோரிகளுடன் சேர்ந்திருப்பதைவிட நான் அச்சமின்றி நூறு **விக்கு** (Whig) களுக்கு ஆதரவாக இருப்பேன். ஒவ்வொரு டோரியும் கோழை; அடிமை மனப்பான்மையும், சுயநலத்தினால் ஏற்பட்ட அச்சமும் தான் டோரிக் கட்சியின் அஸ்திவாரம். இந்த மனப்பாங்குள்ளவர்கள் கொடுமை விளைவிக்கலாம்; ஆனால் தீரர்களாயிருக்க முடியாது.

இரு கட்சியினரும் மீளா விடைபெற்றுப் பிரியுமுன் நமக்குள்ள வித்தியாசங்களைப்பற்றி விவாதித்துப் பார்க்கலாம். உங்கள் நடத்தை எதிரியை வருந்தி அழைப்பதா யிருக்கிறது; எனினும் உங்களில் ஆயிரத்தில் ஒருவர்கூட எதிரியுடன் சேரும் துணிவுடையவர்களல்ல. அமெரிக்க இயக்கத்திற்கு நீங்கள் எவ்வளவு தீங்கிழைக்கிறீர்களோ அதேபோல் உங்களைக் கண்டு பிரிட்டிஷ் தளகர்த்தன் **ஹோ** ஏமாந்துபோகிறான். தோளில் துப்பாக்கி ஏந்தி

அவனை ஆதரித்துப் போர்புரிய விரைவீர்கள் என அவன் எதிர்பார்க்கிறான். அவனை நெருங்கி ஆதரிக்காதவரையில் உங்கள் கருத்துக்கள் அவனுக்குப் பயன்படா; அவன் வேண்டுவது வீரர்களே ஒழிய **டோரிகள்** அல்ல.

டோரிகள் மேற்கொண்டிருக்கும் கீழ்த்தரமான கொள்கைகளைக் கொண்டு எவ்வளவு ஆத்திரம் ஏற்படுமோ அவ்வளவு மனக் கொதிப்பை ஒரு காலத்தில் நான் அடைந்திருக்கிறேன். புகழ்பெற்ற **டோரி** ஒருவர் **ஆம்பாய்** என்னுமிடத்தில் ஒரு மதுபானக்கடை வைத்திருந்தார். நான் இதுவரையில் பார்த்திராத அழகுவாய்ந்த குழந்தை ஒன்றை வைத்துக்கொண்டு ஒரு நாள் அவர் நுழைவாயிலில் நின்றுகொண்டிருந்தார். எவ்வளவு தூரம் மனம் விட்டுப் பேசினால் சங்கடம் ஏதும் ஏற்படாதோ அந்த அளவுக்கு அவர் தாராளமாகப் பேசிவிட்டு "என் ஆயுள் காலத்திற்காவது சமாதானம் நிலவட்டும்"* என்று தந்தைக்கு முற்றிலும் ஒவ்வாத முறையில் பேசினார். என்றாவது ஒரு நாள் இந் நாடு பிரிட்டனிலிருந்து பிரிந்தே தீரும் என்று நம்பாதவன் இந்த நாட்டில் இல்லை. பரந்த மனப்பாங்குள்ள தந்தையானால் "தொல்லைகள் விளைவதாயின் அது என் வாழ்நாளிலேயே விளைந்து என் குழந்தைகளாவது சமாதானத்தை அநுபவிக்கட்டும்" என்று கூறியிருப்பான். இந்த ஓர் எண்ணத்தைச் சரியாகப் பயன்படுத்தினால் எல்லோரையும் தத்தம் கடமையைச் செய்யத் தூண்டும்; உலகில் எந்த நாடும் அமெரிக்காவைப் போல் இன்ப வாழ்க்கை நடத்தாது. சச்சரவு மலிந்துள்ள உலகிலிருந்து அமெரிக்கா தூரத்திலிருக்கிறது. பிற நாடுகளுடன் வர்த்தகம் செய்வதைத் தவிர நாம் வேறு எதுவும் செய்யத் தேவையில்லை. மனக் கொதிப்பிற்கும் கொள்கைக்கும் உள்ள மாறுபாட்டை எம்மனிதனும் புரிந்துகொள்ள முடியும். இவ் வுலகை ஆண்டவன்தான் ஆளுகிறார் என்று

---

* பைபிள் என்னும் கிறிஸ்தவ சமயப் புத்தகத்தில் சந்த இஸையா எழுதிய சுவிசேஷத்தில் "நான் உயிருடனிருக்கும் வரையில் சமாதானமும் உண்மையும் உலகில் நிலவும் என்று அவர் மேலும் சொன்னார்," என்று ஓரிடத்தில் கூறப்பட்டுள்ளது. இதே தோரணையில் இங்கே இந்த டோரியும் பேசினார்.

எவ்வளவு நம்பிக்கை கொண்டிருக்கின்றேனோ அம்மாதிரியே அந்நிய ஆதிக்கத்திலிருந்து விடுபட்டாலொழிய அமெரிக்கா இன்ப வாழ்க்கை காணமுடியாது என்றும் உறுதியாக நம்புகிறேன். அந்த நன்னாள் கிட்டும் வரையில் ஓயாமல் போர்கள் நிகழ்ந்துகொண்டேதானிருக்கும். இறுதியில் இந் நாடே வெற்றி பெறும். சுதந்திர ஜோதி ஒரோர் சமயம் சற்று மங்கலாக எரிந்தாலும் அதிலுள்ள நெருப்பு மட்டும் என்றும் அணையாது.

அமெரிக்கா பலாத்காரத்தை முன்னும் விரும்பியதில்லை, இப்பொழுதும் விரும்பவில்லை. ஆனால் பலாத்காரத்தைத் தக்க முறையில் பயன்படுத்த வேண்டும் என்பதே அதன் அவா. விவேகத்தை ஒரே நாளில் அடைந்துவிட முடியாது. ஆகையினால் ஆரம்ப காலத்தில் நாம் தவறு செய்வதில் ஆச்சரியமொன்றுமில்லை. மிதமிஞ்சிய மென்மை உள்ளம் படைத்தவர்களாகையால் நாம் படை திரட்டத் தயாரா யில்லை. தற்காலிகப் படை உதவிகொண்டே பாதுகாப்பு பெற்றுவிடலாம் என நம்பியிருந்தோம். ஒரு கோடைகால அநுபவம் நமக்குப் புத்தி புகட்டிவிட்டது. படை திரட்டிக் கொண்டே யிருக்கையில் எதிரியின் முன்னேற்றத்தை நம்மால் தடை செய்ய முடிந்தது. ஆண்டவன் அருளால் படை மீண்டும் ஒன்று சேருகிறது. தற்காலிகப் படை திடீர் தாக்குதலைச் சமாளிக்கும் பொறுப்பு ஏற்றது. ஆனால் அதனால் நீடித்த போராட்டத்தைச் சமாளிக்க இயலாது. பிரிட்டிஷ் தளபதி **ஹோ** இந் நகரைத் தாக்க முயற்சிக்கலாம். **டெலாவேர்** நதியின் இப்புறத்தில் அவன் தோற்றால் அவன் முயற்சி படு தோல்வி யடைந்துவிடும். அவன் ஜெயித்தால் அதனால் நாம் நசித்துவிட மாட்டோம். அவன் தன் முழுப் பலத்தையும் நமது படையின் ஒரு பகுதிக்கு எதிராகப் பணயம் வைக்கிறான். அவன் ஜெயிப்பான் என வைத்துக்கொண்டாலும் இந் நாட்டின் இரு எல்லைகளிலிருந்தும் மத்திய மாகாணத்தில் சிக்கிக்கொண்டிருக்கும் தங்கள் சகாக்களை விடுவிப்பதற்காக மக்கள் விரைந்தோடி வருவார்கள். அவன் தன் படையுடன் எல்லாத் திசைகளிலும் போக முடியாது. அப்படிச் செல்லுவது அசாத்தியம். **ஹோ** தான் இந் நாட்டு

டோரிகளின் மிகப் பெரிய பகைவன். அவர்களுடைய நாட்டின் மீதே அவன் போர் தொடங்கி விட்டான். இதற்கு ஒரளவு டோரிகளும் பொறுப்பாளிகள். அவர்கள் ஜாக்கிரதையா யிருந்திருந்தால் அவர்களுடைய நாட்டிலிருந்து அந்நியர்கள் வெளியேறி யிருப்பர். ஹோவை நாட்டைவிட்டுத் துரத்திவிட்டால் அடுத்தபடியாக இந்த நாட்டில் **விக், டோரி** எனும் கட்சி வித்தியாசங்கள் தொலைந்து ஒழியவேண்டும் என ஒரு கிறிஸ்தவனுக்குள்ள பக்தியுடன் பிரார்த்திப்பேன். ஆனால் டோரிகள் அவனுக்கு ஆதரவளித்தால், அவன் வரும்பொழுது அவனுக்குத் துணை நின்றால் அடுத்த ஆண்டு நாம் சேகரிக்கும் படை பலத்தின் உதவிகொண்டு இந்த டோரிகளையே நாட்டைவிட்டு அப்புறப்படுத்தி, காங்கிரஸின் ஆதரவு கொண்டு அவர்கள் சொத்துக்களைப் பறிமுதல் செய்து அவைகளை நாட்டுப் பணியில் கஷ்டப்பட்டவர்களுக்கு நிவாரணமளிக்கப் பயன்படுத்த வேண்டும். அடுத்த ஆண்டு ஒரு சண்டையில் நாம் வெற்றிபெற்று விட்டால் நமது லட்சியம் கைகூடிவிடும். நாட்டுக்குத் துரோகம் செய்பவர்களை நாடுகடத்தி விட்டு அவர்களுடைய சொத்துக்களையும் பறிமுதல் செய்தால் அதைக்கொண்டு நாம் இரண்டு ஆண்டுகளுக்குப் போர் நடத்தி நாம் இன்பமாகவும் வாழலாம். இது பழிக்குப்பழி வாங்குவதாகும் என்று சொல்லாதீர்கள். **எல்லோருடைய நலனைக்** காப்பது தவிர வேறு நோக்கமின்றி வெற்றியா தோல்வியா என்பது சந்தேகமாயிருக்கையில் தங்களுடையது என்பதை யெல்லாம் பணயம் வைத்து மிகுந்த கஷ்டத்துக் குள்ளாகியிருக்கும் மக்களின் லேசான மனக்கசப்பே இது என்று வேண்டுமானால் கூறலாம். ஆனால் ஏற்கனவே தீர்மானித்து உறுதியுடனிருப்பவர்களை எதிர்த்துப் போராடுவது மடத்தனம். சொல்லலங்காரம் கேட்பதற்கு இனிமையாயிருக்கலாம்; மனத்துயருடன் பேசும் வார்த்தைகள் பாசத்தைக் கிளப்பி கண்ணீருகுக்கச் செய்யலாம். ஆனால் வெறுப்பிலே ஊறிப்போன உள்ளத்தை யாரும் உருக்கி விடமுடியாது.

இம்மாதிரி மக்களைப் பற்றிப் பேசுவதை விட்டுவிட்டு, கண்ணியமாகவும், உறுதியுடனும் நமக்குத் துணைநின்றவர்களைப் பற்றி ஆழ்ந்த நேசபாவத்துடன் யோசிக்கலாம். ஒரு

சிலரை மட்டுமல்ல எல்லா மக்களையும், ஒரு ராஜ்யம் மட்டுமல்ல எல்லா ராஜ்யங்களையும் வேண்டிக்கொள்ளு கிறேன்—வந்து எங்களுக்கு உதவிபுரியுங்கள்; சுதந்திரத் தேரை இழுப்பதில் எல்லோரும் ஈடுபடுங்கள்; இவ்வளவு மகத்தான லட்சியம் சித்திபெற அற்ப பலம் போதாது; முழு பலத்தையும் அர்ப்பணம் செய்யுங்கள். நற்பண்பும், நம்பிக்கை யும் தவிர மற்றெதையும் மாய்க்கவல்ல இந்தப் பனிக்காலத்தில் பொதுவான அபாயம் நேரிடவிருப்பதை அறிந்து அதை எதிர்த்துப் பின்னுக்குத்தள்ள நகர மக்களும், கிராமவாசிகளும் திரளாக வந்தனர் என நம் பின்சந்ததியாருக்குக் கூறும்படி நடந்துகொள்ளுங்கள். ஏற்கனவே ஆயிரக்கணக்கானவர்கள் மடிந்துவிட்டனரே என மயங்காதீர்கள். பல்லாயிரக்கணக் கில் முன்வாருங்கள். எல்லாவற்றிற்கும் ஆண்டவனிருக் கிருர் என்று அவர்பால் பாரத்தைப் போடாதீர்கள். நீங்கள் புரியும் பணியினுல் உங்கள் நம்பிக்கையை நிரூபியுங்கள். அப்பொழுதுதான் உங்களுக்கு ஆண்டவனும் அருள்புரிவார். நீங்கள் எங்கே வாசம் செய்தாலும் சரி, நீங்கள் எந்தப் பதவியி லிருந்தாலும் சரி, உங்கள் தீமையின் பலனே, நற்பணிக்கான நல்லாசியோ உங்களை வந்தடையும். அருகிலிருப்பவர்களோ தொலைவிலிருப்பவர்களோ, நாம் வசிக்கும் கவுண்டிகளோ, பிறவோ, பணக்காரர்களோ, ஏழைகளோ, கஷ்டத்தையோ, சுகத்தையோ ஒரே மாதிரிதான் அநுபவிப்பர். இப்போது உணர்ச்சி வசப்படாத உள்ளம் இறந்த உள்ளத்திற்கொப்பானது. சிறு துணிவும் எல்லோரையும் காப்பாற்றி இன்புறச் செய்திருகக லாம் என்னும் நிலையில் அதற்குக்கூடத் தயாரா யில்லாதவர் களின் கோழைத்தனத்தைக் கண்டு அவர்களின் குழந்தைகள்கூட சபிப்பர்.

கஷ்ட காலத்திலும் புன்முறுவல் பூக்கக்கூடியவனையும் கஷ்டங்களின் மூலம் பலம்பெறக் கூடியவனையும், சிந்தனைமூலம் துணிவுபெறக் கூடியவனையும் நான் போற்றிப் புகழ்கிறேன். அற்ப மனிதர்கள்தாம் சங்கடங்களைக் கண்டு உள்ளம் சுருங்குவர். ஆனல் உறுதியான உள்ளம் படைத்தவன், மனச்சாட்சியை யொட்டி நடப்பவன் தன் கொள்கைகளை உயிர் போம் வரையில் கடைப்பிடிப்பான். என்னுடைய வாதங்கள்

எனக்கு நேர்மையாகவும், ஒளிபோல் தெளிவாகவும் தெரிகிறது. வேண்டுமென்றே பிறரைத் தாக்கிப் போர்புரிதலை நான் கொலைத்தொழிலெனக் கருதுகிறேன். அம்மாதிரியோரை ஆதரிக்கச் சொல்லி உலகத்திலுள்ள செல்வத்தை யெல்லாம் அளித்தாலும் நான் ஆதரிக்கமாட்டேன். ஆனால் ஒரு திருடன் என் இல்லத்தில் புகுந்து என் சொத்துக்களைத் தீயிட்டுக் கொளுத்தி அழித்தானானல், அல்லது என்னையோ, என்னுட னிருப்பவர்களையோ கொல்லவந்தானானல், அல்லது தனது இஷ்டத்திற்குட்படும்படி என்னை நிர்ப்பந்தம் செய்தானானல் அதை நான் பொறுத்துக்கொண்டிருக்கவேண்டுமா? இம்மாதிரி கொடுமைகள் புரிபவன் அரசனாயிருந்தாலென்ன, சாமானிய மனிதனானாலென்ன, என் தேசத்தானாயிருந்தாலென்ன, பிற நாட்டவனாயிருந்தாலென்ன, தனிப்பட்ட திருடன் கொலை புரிந்தாலென்ன, கூட்டமாக வந்து தீங்கிழைத்தாலென்ன? இவைகளை ஆழ்ந்து ஆலோசித்துப் பார்த்தால் ஒன்றுக்கொன்று வித்தியாசமே காணமுடியாது. கொடியவர்களில் ஒரு வகையி னரைத் தண்டிக்க வேண்டும், மற்றொரு வகையினரை மன்னித்து விடவேண்டும் என்பதற்குப் போதிய காரணங்கள் இல்லை. என்னைக் கிளர்ச்சிக்காரன் என்று அழைக்கட்டும், அதை வரவேற்கிறேன். அதுபற்றிக் கவலைப்படமாட்டேன். ஆனால் குடிகார, முட்டாள்தனமான, பிடிவாத குணமுள்ள, கவைக் குதவாத மிருகத்தனம் வாய்ந்த ஒருவனுக்கு எனது ஆத்மா பணியவேண்டுமென்றால் நரக வேதனை யடைவேன், இறுதி காலத்தில் ''மலைகளே, பாறைகளே, எனக்குப் புகலிடமளி யுங்கள்'' என்று முறையிட்டுக்கொண்டு. அமெரிக்காவில் அவன் கொன்றவர்களின் மனைவி மக்களின் ஆவிகளைக் கண்டு திகில டைந்து ஓடக்கூடிய ஒருவனிடம் கருணைக்குக் கையேந்தி நிற்க வேண்டுமென என்னிடம் யாராவது கூறினால் அதைப்போன்ற கடூரமான யோசனை வேறு இருக்கமுடியாது.

வெறும் சொற்களால் எதையும் மிகைப்படுத்திக் கூற முடியாது என்பதற்கு இந்தப் பிரச்னை உதாரணமாகும். தங்களைக் கவிழ்க்கவிருக்கும் தன்மையை உணராதவர்களும் இருக்கின்றனர். எதிரி வெற்றிபெற்றாலும் கருணை காட்டுவான் எனச் சிலர் ஆறுதல் கொள்ளுகின்றனர். நீதி வழங்க மறுத்த

வர்கள் கருணைகாட்டுவர் என எதிர்பார்ப்பது பைத்தியக்காரத் தனம். இந்த நாட்டை வெல்லவே ஆசைப்படுபவர்கள் கருணை காட்டினால், அதுவும் ஒரு யுத்த தந்திரமாகும். நரியின் தந்திரம் ஓநாயின் பாய்ச்சலைப் போல உயிருக்கு உலைவைக்கக்கூடியது. இவ்விரண்டு அபாயங்களினின்றும் நம்மை நாம் காத்துக் கொள்ளவேண்டும். பிரிட்டிஷ் தளபதி **ஹோ**வின் நோக்கம் பயமுறுத்தலினாலும், வாக்குறுதிகள் மூலமும் மக்களை மயங்க வைத்து கருணை கிடைக்கும் எனும் நம்பிக்கையில் தங்களுடைய ஆயுதங்களைத் துறக்கும்படிச் செய்யலாம் என்பது தான். 1763-இலிருந்து 1775-வரை பிரிட்டிஷ் தளபதியாயிருந்த **கேஜ்** (Gage) என்பவனுக்கு மந்திரி சபை இதே திட்டத்தைத்தான் சிபாரிசு செய்தது. இதைத்தான் **டோரி**கள் தாங்கள் அடையப் போகும் சமாதானம் என்கின்றனர். இந்த சமாதான திட்டத்தை எவ்வளவு அறிவு, இருந்தாலும் புரிந்துகொள்ள முடியாது. இந்த சமாதானத்தின் விளைவாக நாம் இதுவரை நினைத்துப் பார்த்திராத நாசம் சம்பவிக்கும். பென்ஸில்வேனிய மக்களே! இந்த விஷயங்களையெல்லாம் சற்று யோசித்துப் பாருங்கள்; எல்லைப்புறத்திலுள்ள கவுண்டிவாசிகள் தங்கள் ஆயுதங்களைத் துறந்தால், ஆயுதந்தாங்கிய இந்தியர்கள் அவர்களைத் துவம்சம் செய்துவிடுவார்கள். இதைப்பற்றி டோரிகளில் சிலர் கவலைப் படாமலிருக்கலாம். உள்நாட்டுக் கவுண்டிகள் தங்கள் ஆயுதங்களைத் துறந்தால் எல்லைப்புறக் கவுண்டியினர் ஆத்திரம்கொண்டு இவர்களுடைய துரோகத்திற்குத் தக்க தண்டனையளிப்பர். ஏதாவது ஒரு ராஜ்யம் ஆயுதந் துறந்தால் அங்கே பிரிட்டிஷார்களும் **ஹெஸ்ஸியர்களும்*** அடங்கிய **ஹோ**வின் படையினர் அந்த ராஜ்யத்தில் இருந்துகொண்டு பிற ராஜ்யங்களின் கோபத்திற்காளாகாமல் பாதுகாக்கவேண்டி வரும். பரஸ்பர அச்சமே, பரஸ்பர அன்பை வளர்க்கிறது. இந்த உடன்பாட்டிற்கு மாறாக நடந்து கொள்ளும் ராஜ்யத்திற்குக் கஷ்டமே சம்பவிக்கும். காட்டுமிராண்டித்தனமான நாசம் புரியும்படிக் கருணையுடன் **ஹோ** உங்களை அழைக்கின்றார். இதன் உண்மையை அறியாதவர்கள்

---

* குறிப்பு: அமெரிக்கப் புரட்சியின்போது ஆங்கிலேய ராணுவத்தினர் பல ஜெர்மானிய கூலித் துருப்புகளைத் தங்களுக்குத் துணை சேர்த்துக் கொண்டனர். அவர்களுக்கு **ஹெஸ்ஸியர்கள்** என்று பெயர்.

மூடர்களாகவோ அல்லது அயோக்கியர்களாகவோ யிருக்க வேண்டும். நான் கூறுவதெல்லாம் வெறும் கற்பனையல்ல; நியாயத்தை எடுத்துரைக்கிறேன். அதற்குச் செவிசாயுங்கள். குழந்தைகளுக்கு அ, ஆ சொல்லிக்கொடுப்பதுபோல் தெளிவாக உண்மையை எடுத்துரைக்கிறேன். அதைக் கண்கொண்டு பாருங்கள்.

நான் அச்சமடைவதில்லை என்பதற்காக ஆண்டவனுக்கு நன்றி செலுத்துகிறேன். அச்சமுறுவதற்குக் காரணமிருப்பதாகவும் எனக்குத் தெரியவில்லை. நமது நிலையை நான் நன்கறிவேன். அதிலிருந்து விடுபடும் வழியையும் அறிவேன். நமது படை ஒன்றுசேர்ந்திருந்த சமயம் ஹோ நம்முடன் போர் புரியத் துணியவில்லை; அவன் வெள்ளைச் சமவெளியிலிருந்து ஓடி மறைந்திருந்து சமயம் பார்த்து நிராயுதபாணிகளான ஜெர்ஸி மக்களைத் தாக்கிக் கொள்ளையடித்தான் என்பது அவனுக்குப் பெருமையளிக்கக்கூடிய சம்பவமல்ல. ஆனால் நாம் ஒரு சிலரை வைத்துக்கொண்டு நூறு மைல் தூரம் ஒழுங்காகப் பின்வாங்கி நமது வெடிமருந்துகள், போர் அரங்க சாதனங்களில் பெரும் பகுதி யாவற்றையும் எடுத்துக்கொண்டு நான்கு நதிகளைக் கடந்துவந்தோம் என்பது நாம் பெருமைப்பட வேண்டிய விஷயம்தான். நாம் பதைபதைத்துத் திடீரென ஓடிவிட்டோம் என யாரும் கூறமுடியாது. நாட்டினர் நம் உதவிக்கு வருவதற்கேற்ப நாம் நிதானமாக மூன்று வார காலம் பின்னேக்கி வந்தோம். இரண்டு தடவை எதிரியுடன் சமர்புரிய பின்வந்து இருட்டும் வரையில் அங்கிருந்தோம். நமது முகாமில் அச்சத்தின் அறிகுறி தென்படவேயில்லை. துரோக சிந்தனையுமில்லை. சில கோழைகள் நாடெங்கும் பொய்ச் செய்திகள் பரப்பி அச்சுறுத்தி யிருக்காவிட்டால் ஜெர்ஸிகள் எதிரியின் கொடுமைகளுக்குள்ளாகி யிருக்கமாட்டார்கள். மீண்டும் நாம் ஒன்றுசேர்ந்து வருகிறோம், சேர்ந்தும் விட்டோம். நமது புதுப் படைக்கு நாட்டின் இரு கோடிகளிலும் ஆட்கள் சேர்க்கப்பட்டு வருகின்றனர். நன்கு ஆயுதம் தரித்து, நேர்த்தியான உடையணிந்து அறுபதாயிரம் வீரர்களுடன் நமது அடுத்த போரைத் தொடங்கத் தயாராயிருக்கிறோம். இதுதான் நமது நிலை. அதை அறிந்துகொள்ள ஆவலாயிருப்பவர்கள் தெரிந்து

கொள்ளட்டும். விடாமுயற்சியினுலும், நெஞ்சுறுதியினுலும் நாம் மகோன்னத வெற்றியடைவோம் என நம்பலாம். கோழைத்தனத்தினுலும், பணிந்துபோவதனுலும் பல்வேறு தீமைகள் நம்மை வந்தடைவது நிச்சயம்—நாடு நாசத்திற் குள்ளாகும்; மக்கள் மடிந்தொழிவர்; நம் இல்லங்களுக்குப் பாதுகாப்பு இராது; அடிமை வாழ்வகன்று வாழ்வோம் எனும் நம்பிக்கை தோன்ருது; நமது வீடுகள் எதிரிகளின் கைக் கூலிகளான ஹெஸ்ஸியர்கள் (ஜெர்மானியர்) கோட்டைக ளாகவும், விபசார விடுதிகளாகவும் விளங்கும். நமது சந்ததி களின் நலன்களைக் காக்க வல்லமையற்ற தந்தைகள் என நாம் இகழப்படுவோம். இந்தப் பரிதாபக் காட்சியைச் சிந்தித்துப் பார்த்துக் கண்ணீர் சிந்துங்கள். இதையறிந்தும் இது நிகழாது என நினைக்கும் அதமன் யாராவது இருந்தால் அவன் மறைவுக்கு யாரும் மனமிரங்கிக் கண்ணீர்விடமாட்டார்கள்.

1776-ஆம் ஆண்டு டிசம்பர், இருபத்து மூன்ரும்தேதி ஒரு தனிப் பிரசுரமாக வெளியிடப்பட்டது. } **சாமானிய அறிவு**

அமெரிக்க நெருக்கடி—13

[சமாதானத்தைப் பற்றியும் அதனுல் ஏற்படக் கூடிய நன்மைகளைப் பற்றியும் சில சிந்தனைகள்]

மக்களுக்குச் சோதனை விளைவித்து வந்த காலம் முடிந்து விட்டது. உலகிலேயே மகத்தான பூரணமான புரட்சி இனிய முறையில் சிறப்புடன் முடிந்துவிட்டது. மிகுந்த அபாய நிலையிலிருந்து அமைதியான நிலைக்கும், போர் முரசு ஓய்ந்து சமாதானத்தின் அமைதிக்கும் மாறுதலடைவது பற்றி சிந்திப்பது இனிமையாகத்தானிருக்கும். ஆனுல் அந்த மாறு தலின் பூரணப் பொருளைக் கிரகித்துக்கொள்ள மிகுந்த மன அமைதி வேண்டும். அமைதிகூடத் திடீரெனத் தோன்றினுல் அது மக்களைத் திக்குமுக்காடவைத்துவிடும். நீடித்து முரட் டுத்தனமாக அடித்த புயல் கணப்பொழுதில் ஓய்ந்துவிட்டால் அதுபற்றி ஆச்சரியப்படுவோமே ஒழிய இன்பமென அநுப விக்க மாட்டோம். அமைதிபற்றி ஆழ்ந்து சிந்தனை செய்து விட்டுத்தான் அதன் இன்சுவையை அநுபவிப்போம். ஒரு சில சந்தர்ப்பங்களில்தான் திடீர் மாறுதல்களை மனம் ஏற்கிறது. பல நிலைகளை ஒப்பிட்டுப் பார்த்து, சிந்தித்துத்தான் அது இன்பத்தை அநுபவிக்கிறது; இந்த சிந்தனை சில காலத்திற்கு நிகழ்ந்த பின்புதான் புதிய காட்சிகளைக் கண்டு ஆனந்திக்க மனம் தயாராகிறது.

பிரஸ்தாப விஷயத்தில் நமது லட்சியத்தின் மகத்துவம், அதன் முடிவு என்ன ஆகுமோ என்று பற்பல சமயங்களில் நிலையற்ற தன்மை, பல சிக்கல் நிறைந்த கஷ்டங்களை நாம் அநுபவித்ததும், சில சமயம் அபாயத்திற்குள்ளாகாமல் தப்பியதும், இன்று நாம் அடைந்திருக்கும் உன்னத நிலை, எல்லையற்ற எதிர்காலம் நம்மை வரவேற்று நிற்பது இவை யெல்லாம் நாம் சிந்தனை செய்வதற்கான ஆதர்சத்தை அளிக் கின்றன.

உலகத்தை இன்புறச் செய்யும் சக்தி நம்மிடமிருக்கிறது என்பதை அறிவது, இன்புறும் வழியை மானிடவர்க்கத்திற்குக்

காட்டுவது, பிரபஞ்சத்தின் அரங்கில் இதுவரை கண்டிராத புதுமையைக் காட்டுவது, புதியதோர் தலைமுறையை உருவகப் படுத்தும் பொறுப்பை நம்மிடம் ஒப்படைத்திருப்பது இந்தப் பெருமைகள் நம் சிந்தனைக்குரியவை மட்டுமல்ல; இந்தப் பேறு மதிப்பிற்குரியது; நாம் நன்றிசெலுத்தத்தக்கது.

சிந்தனை செய்வதற்கான இந்த இடைவேளையில், புயல் ஓய்ந்து, கொந்தளித்த மனம் அமைதியடைகையில் நாம் கண்ட, அநுபவித்த காட்சிகளைச் சற்றுப் பின்னோக்கிப் பார்த்து அந்த அநுபவத்திலிருந்து இனி நாம் செய்யவேண்டியது யாது என்பதற்கு வழி வகுப்போமாக!

இன்ப வாழ்க்கைக்கு இவ்வளவு உபாயங்கள் எந் நாட்டி லும் இருந்ததில்லை. இந் நாட்டின் நல்வாழ்வின் உதயம், நிஷ்களங்கமான காலைப்பொழுதைப் போல் கஷ்டங்களால் சூழப்படாமலும், எதிர்காலத்தில் தென்பூட்டுவதாகவும் அமைந்தது. அதனுடைய லட்சியம் பரிசுத்தமாயிருந்தது. மக்களின் மனமும் அமைதியும் உறுதியும் கலந்ததாயிருந்தது. லட்சிய சித்திக்கான அதன் நடைமுறை ஒழுங்குகள் இனிய முறையில் வகுக்கப்பட்டிருந்தன. நாட்டின் எல்லா அம்சங் களும் கண்யம் நிறைந்ததாயிருந்தன. எந் நாட்டின் சரித்திரத் தொடக்கமும் இவ்வளவு உத்தமமாயிருந்ததில்லை. புரட்சியின் உயர்ந்த சிறப்புக்கேற்றபடியே அமெரிக்கா பிரிட்டனுடன் செய்துகொண்ட உடன்பாடும் அமைந்திருக்கிறது. ஒரு காலத்தில் உலகத்து நாயகியாக அமைந்த ரோமாபுரியில் அக்காலத்தில் முரடர்கள் கூட்டம்தான் தலைமை தாங்கிற்று. கொள்ளை, கொலை மூலமே அந் நாடு பொருளீட்டிக் குவித்துக் கொண்டது. லட்சோப லட்சம் மக்களைக் கொடுமைப்படுத்திய தன் மூலமே அது சிறப்புற்று விளங்கியது. ஆனால் அமெரிக்கா தனது பூர்வ சரித்திரத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில் தலை குனியவேண்டியதில்லை. எப்படி படிப்படியாகத் தனது சாம் ராஜ்யத்தை அமைத்துக்கொண்டது என்பது பற்றி விவரிக்க வேண்டியதுமில்லை.

தனது கடந்த கால வாழ்வைச் சரியான முறையில் பயன் படுத்திக்கொண்டால் தனது ஆரம்பப் புகழைப் பெருக்கிக் கொள்ளுவதற்கான ஆதர்சம் பெறலாம்; கஷ்ட காலத்திலேயே

அது மேன்மையுடன் விளங்கியதை உலகம் கண்டிருக்கிறது; பணியவேண்டும் என்ற எண்ணமில்லாமல் அது போராடியதும், சங்கடங்கள் கோர்வையாக வந்தபொழுதும் தீரத்துடன் ஆனல் கர்வத்துடன் கஷ்டங்களை அது பொறுத்துக்கொண்டே போராடியதும், புயல் கடுமையாக ஆக அதன் உறுதி பெருகியதும் உலகம் அறிந்த விஷயங்களே. இந்தச் சிறப்புகளைப் பெற அது பெரிதும் தகுதியுடையது. ஏனெனில், அதனுடைய வீரமே அதற்கு நற்பண்புகளைத் தேடித்தந்திருக்கிறது. இனி சுபிட்சத்தினல் அது தலை கனமடையாது. போரில் அது காட்டிய துணிவுமிக்க பண்பு போலவே, சமாதான காலத்திலும் அதன் பண்பு களங்கமின்றி நீடித்திருக்கும் என்பதையும் உலகம் காணப்போகிறது.

அமைதியான இவ்வாழ்க்கை நடத்த நம் நாடு முற்படப் போகிறது. ஏமாற்றத்தால் மனமுடைந்து அது தன் புது வாழ்வைத் தொடங்கப்போவதில்லை. தனது நாட்டில், தனது பசுங்கொடிகளின் இனிய நிழலில், தனது உழைப்பின் நற்பயனை, தன் கடின வாழ்வின் பரிசை அது சுகமாக அநுபவிக்கத் தயாராயிருக்கிறது. இந்த நிலையில் சுதந்திரத்தைப் போல் நாட்டின் நற்புகழும் அவசியமானது என்பதை அது மறக்காமலிருக்குமாக! உலகம் கண்டு பரவசமடையும், பகைவரையும் கரைத்துவிட வல்ல இனிய பண்பு அதற்கு உரித்தானது என்பது உண்மை. இந்த நற்பண்பு அதிகாரத்திற்கும் மேம்பட்ட கண்ணியத்தையும், ஆடம்பரமும் பகட்டும் அளிக்க முடியாத மதிப்பையும் மரியாதையையும் அதற்கு அளிக்கிறது.

புரட்சி வெற்றியடைந்த சகாப்தம் மற்றெல்லாவற்றையும்விட மதிப்பிற் சிறந்தது. இந்தப் புரட்சி உலகத்தோர் மனத்தை விசாலப்படுத்தி, இதற்கு முன் நடந்த புரட்சிகளை விட அதிகமாக மக்களிடையே சுதந்திர உணர்ச்சியையும் பரந்த மனப்பான்மையையும் பரப்பி இருக்கிறது. இந்த மகோன்னத சம்பவத்திற்கு எக்காரணத்தினலும் இழுக்கோ, களங்கமோ நிகழ்ந்தால் அதற்காக நாம் காலமுள்ள மட்டும் துயரப்பட நேரிடும்.

நீடித்த போராட்டத்தின் தீய விளைவு ஒன்று உண்டெனில் அது நுட்பமான மேன்மை மிக்க கருத்துக்களை மற்ற சந்தர்ப்

பங்களில் சிலாகிப்பது போல் சிலாகிக்க முடியாமல் நமது மனத்தைப் பாழ்படுத்திவிடுகிறது. தொடர்ச்சியாகத் துயரச் சம்பவங்கள் நிகழ்ந்துவந்தால் மனத்தின் நுட்பமான பகுதிகளை அவை மழுங்கச் செய்து விடுகின்றன. கஷ்டத்தைப் பார்த்துப் பார்த்து அது பழகிவிடுகிறது. அம்மாதிரியே அற அடிப்படையில் எழும் சமூகத்தின் கடமை யுணர்ச்சி தளர்ந்து, அவசியம் ஏற்படுகையில் கடமையைச் செய்வது என்னும் பழக்கத்தினால் நமது செயலையே குற்றமாக பாவிக்கும் நிலைக்குக் கொண்டு வந்து விடுகிறது. ஒரு தேசம் தனது நற்பண்புகளைச் சரியான முறையில் அமைத்துக்கொண்டால் அந்தப் பண்பை ஆர்வத்துடன் பாதுகாக்கும் ஆற்றலைப் பெறும்.

அமெரிக்காவின் லட்சியம் சித்தி பெற்றதையும், அதனால் அது அடைந்த நற்பலன்களையும் சிந்தித்துப்பார்த்தால், இதற்காக அது பட்டுள்ள கடன் அவ்வளவாக சிந்தனைக்குரியதல்ல. தன்னிஷ்டப்படி அது செயல்புரிந்து இனிய வாழ்க்கை நடத்தும் சக்தி அதனிடமிருக்கிறது. உலகத்தை அதனிஷ்டப்படி பயன்படுத்திக்கொள்ளலாம். அதன் வர்த்தகத்தைத் தனதாக்கிக்கொள்ள, அதன் சட்டங்களை நிலைகுலையச் செய்ய, அதன் சுபிட்சத்தைக் கட்டுப்படுத்த எந்த அயல் தேச வல்லரசுமில்லை. என்றாவது ஒரு நாள் முடிந்தே யாகவேண்டிய போராட்டம் முடிந்துவிட்டது. இதைவிட சுமுகமான காலத்தில் அது முடிந்திருக்க முடியாது. தன்னை ஆட்டிவைக்கும் யஜமான ஸ்தானத்திற்குப் பதிலாக இன்று தனக்கு நேயமான நாடாக பிரிட்டன் அமைந்தது ஒரு லாபம். பிரிட்டனின் முன் மாதிரியான பெருந்தன்மையும் அதன் எல்லையற்ற தாராளப் போக்கும் அதன் எதிரிகள் கூட புகழும்படிச் செய்து விட்டது.

சமாதானம், சுதந்திரம், பரந்த வர்த்தகம் இவைகளாலான நன்மைகள் மட்டின்றிக் கிடைக்கையில் ராஜ்யங்கள் தனித்தனியாகவும், மொத்தமாகவும், தங்கள் கண்ணியத்திற்கு எள்ளளவும் பங்கமேற்படாதவகையில் உள்நாட்டு விவகாரங்களைத் தீர்த்துக்கொள்ள வகை செய்யலாம். நற்குணத்தைப் பாதுகாப்பது எளிது. ஆனால் அதை இழந்துவிட்டால் மீட்க முடியாது. தவறான நோக்கத்தினாலோ, அற்பத்தனத்தினாலோ

நாட்டினரின் நற்பண்புகளுக்கு எவனுவது தீங்கு தேட உதவி புரிவானுனுல், அந்தத் தீங்கை அப்புறம் அவனுல் ஆற்ற முடியாது.

நமது சந்ததியார் அநுபவிக்கத் தக்க நலன்களை விட்டுச் செல்லுவதனுல் அப்பழுக்கற்ற சாசனத்தின் மேன்மைகளெல்லாம் அந்த பாத்தியதைகளுக்கு இருக்கும்படி நாம் பார்த்துக்கொள்ள வேண்டும். இந்த நலன்களை நாம் பெற்று, நம் பின்வருபவர்களுக்கு அதை அளிப்பதற்காக நாம் பட்ட கஷ்டங்கள் அல்லது செய்த செலவு பெரிதல்ல. ஆனுல் நாம் அமைத்த ராஜ்யங்களின் மதிப்பு, நமது இயக்கத்தின் மகத்துவம், நமது தேச மக்களின் நற்பண்புகள் இவைகளை நினைத்துப் பார்த்தால் நாம் பட்ட கஷ்டங்களுக்கு மேம்பட்ட லாபமடைந்திருப்பதை உணர்வோம்.

சிந்தனை மிக்க அறிவு நுட்பம் வாய்ந்த ஒருவனுக்கு முக்கியமெனப்படும் விஷயம் மற்ற சில்லறை நலன்களை விட **ராஜ்யங்கள் ஒன்றுபட்டது**தான். இந்த ஒற்றுமையில்தான் நமது தேசீய நற்பண்பு நிலைத்திருக்க வேண்டும். இந்தப் பண்பே நமது நாட்டில் பாதுகாப்பும் வெளி உலகில் நன்மதிப்பையும் உறுதியாக அளிக்கவல்லது. இதன் மூலம்தான் உலகினேர் நம்மை அறிய முடியும். சமுத்திரங்களிலும், அயல் தேசத் துறைமுகங்களிலும் நமது கப்பல்களுக்குப் பாதுகாப்பளிப்பது நம் நாட்டுக் கொடி. இந்த ஆதரவைக் கொண்டுதான் நாம் மத்திய தரைக் கடலில் நுழைவுச் சீட்டு பெறலாம். நமது நேச உடன்பாடுகளோ, சமாதான உடன்படிக்கைகளோ, வர்த்தக ஏற்பாடுகளோ, அமெரிக்காவின் ஆதிபத்திய உரிமையின் கீழ்தான் ஏற்பட்டவை. வேறு எந்தப் பெயர் கொண்டும் ஐரோப்பாவில் நம்மை யாரும் அறியமாட்டார்கள்.

நமது நாட்டைப் பல்வேறு ராஜ்யங்களாகப் பிரித்தது நமது நன்மைக்காகவே யொழிய, நாட்டுக்கு அப்பால் அவைகளுக்கு எவ்விதப் பொருளும் கிடையாது. ஒவ்வொரு ராஜ்யத்தின் விவகாரங்களும் அந்தந்த ராஜ்யத்தின் பொறுப்பு. ஒரு ராஜ்யம் அதற்கப்பால் ராஜ்யாதிகாரம் செய்யமுடியாது. ராஜ்யங்களில் மிகவும் செல்வம் படைத்தது தனது வருவாய் முழுவதையும் செலவிட்டாலும் அந்நிய ஆக்கிரமிப்பை எதிர்த்து

நிற்கமுடியாது. சுருங்கக் கூறின், ஐக்கிய அமெரிக்க ஆதிபத்தியத்தைத் தவிர வேறு எந்த முறையிலும் ஆதிபத்தியம் நமக்குக் கிடையாது. அப்படி அதிகாரமிருப்பின்; அது நமது நாசத்திற்கு வழிகாட்டும். அதை நடத்த அளவு கடந்த செலவாகும். அதை ஆதரித்து சமாளிப்பதும் கஷ்டம், தனிப்பட்டவர்களோ, தனிப்பட்ட ராஜ்யங்களோ தங்களுக்கு எந்தப் பெயர் வேண்டுமானாலும் சூட்டிக்கொள்ளலாம். ஆனால் வெளி உலகம், அதுவும் நம் பகைவர்கள் வெறும் பெயரைக் கேட்டு நடுங்கிவிடமாட்டார்கள். ஆதிபத்தியம் என்பது தனக்குள்ளிட்ட எல்லாப் பகுதிகளையும் பாதுகாக்கும் சக்தி உள்ளதா யிருக்க வேண்டும். **ஐக்கிய ராஜ்யங்கள்** (அமெரிக்கா) என்கிற முறையில் நமது பெயருக்கேற்ற பெருமை நமக்கு உண்டு. மற்றப்படி எவ்விதப் பெருமையும் நமக்குக் கிட்டாது. நமது யூனியனை நன்கு உறுதிப்படுத்தி ஒருமைப்படுத்தினோமானால் நாம் மிக எளிதில் உன்னத பதவி அடையலாம். அதுதான் சக்திவாய்ந்திருக்க எளிய வழி. இப்போதுள்ள சந்தர்ப்பச் சேர்க்கைகளை வைத்துப் பார்த்தால், அரசாங்க முறையில் நமதே சிறந்தது என்பதை அறிவோம். ஒரு ராஜ்யம் யூனியனுக்குக் கொடுக்கும் பணத்தைக் கொண்டு தனது விவகாரங்களைச் சரிவரத் தீர்த்துக் கொள்ள முடியாது. ஆனால் எல்லா ராஜ்யங்களும் கொடுக்கும் பகுதிகளை ஒன்றுசேர்த்தால் எல்லா ராஜ்யங்களின் நலன்களையும் அதைக் கொண்டு எளிதில் பாதுகாக்கலாம்.

ராஜ்யங்களின் தனி அரசு பாத்தியதையினால் அவஸ்தைப்பட்டதற்கு ஹாலந்து நாட்டை உதாரணமாகக் கூறலாம். அந்நாட்டு மக்கள் சிதறுண்டு இருந்ததனால் பற்பல சூழ்ச்சிகள், நஷ்டங்கள், விபத்துக்கள், பகைமைகள் ஏற்பட்டன. எந்த ஏற்பாட்டைப் பற்றியும் முடிவு செய்வதில் கஷ்டப்பட்டனர். அப்படியே முடிவு செய்தாலும் அதை நிறைவேற்றுவதில் சங்கடப்பட்டனர். அதே நிலையில் நாமும் இருந்தால், அது போன்ற தொல்லைகள் நம்மையும் தொடரும்.

தனிப்பட்டவர்கள் ஓரளவு தியாகம் செய்தால்தான் சமூகம் தழைத்தோங்கும். அதேபோல் ராஜ்யங்கள் ஒவ்வொன்றும் ஓரளவு விட்டுக்கொடுத்தால்தான் சமஷ்டி வலுப்பெற்று விளங்கும். இந்த ரீதியில் பார்த்தால் நாம் கொடுப்பத

ஞல் அதற்கேற்ற லாபம் கிடைக்கும். நாம் கொடுக்கும் முதலுக்கு மீறிய வருஷாந்தர வட்டி கிடைக்கும். நமது சமஷ்டிதான் நமது சுதந்திரத்திற்கும், பாதுகாப்புக்கும் ஆன கற்கோட்டை. அதைப்பற்றிச் சிறிதளவு இழிவாகப் பேசினுலும் என் மனம் கொதிக்கிறது. அமெரிக்க அரசியலமைப்பில் இந்த சமஷ்டி தான் மிகப் புனிதம் வாய்ந்தது. அதைப்பற்றி ஒவ்வொரு வரும் பெருமைப்பட வேண்டும்; பாசம் கொள்ளவேண்டும். ஐக்கிய அமெரிக்காவின் பிரஜா உரிமைதான் நமது தேசீய அந்தஸ்து. குறிப்பிட்ட ராஜ்யத்தின் பிரஜா உரிமை அந்த ராஜ்யத்திற்குச் சிறப்பளிக்கும். ராஜ்ய உரிமையினுல் அந்த ராஜ்ய மக்கள் நம்மை அறிகிருர்கள். ஆனுல் சமஷ்டிப் பிரஜா உரிமையினுல்தான் உலகம் நம்மை அறியும். அமெரிக்கர் என்று நம்மை அழைப்பதுதான் நமக்குப் பெருமை. ராஜ்ய உரிமை என்பது ராஜ்யத்திற்கு ராஜ்யம் மாறக்கூடியது.

மக்களுடைய பாசத்தை வளப்படுத்தி, அவர்களுடைய அக்கறைகளை ஒன்ருக்கி, மக்கள் மனத்தை ஒன்றுபடுத்து வதற்கே நான் முயற்சித்து வந்திருக்கிறேன். புரட்சியின் இந்த அடிப்படை வேலையைச் சிறப்பாகச் செய்வதற்காக எனது ராஜ்யத்திலோ, சமஷ்டி அமைப்பிலோ எவ்வித ஊதிய மளிக்கும் பதவியையும் நாடாமலிருந்து வந்திருக்கிறேன்; எவ்வித கட்சிச் சார்பிலும் இல்லாமல் ஒதுங்கி இருக்கிறேன்; சொந்த விஷயங்களையும் அலட்சியம் செய்து வந்திருக்கிறேன். இதுவரையில் நாம் ஆற்றிவந்திருக்கும் பணியையும் அதன் முக்கியத்துவத்தையும் சிந்தித்துப் பார்த்தோமானுல் சொந்த விருப்பு வெறுப்புகளும், சில்லறைச் சச்சரவுகளும் நமது மன அமைதிக்குப் பங்கம் விளைவிப்பதோடு, நமது தன்மானத்திற்கும் களங்கம் விளைவிக்கும் என்பதை உணர்வோம்.

அமெரிக்காவின் நலனே என்னை ஆசிரியனுக்கிற்று. அந்தச் சமயம் நமது நாடு இருந்த அபாய நிலை, நமது நாட்டை ஒன்றுபடுத்திக் காப்பாற்றக்கூடிய ஒரே வழியான **சுதந்திரப் பிரகடனம்** செய்வதை விட்டுவிட்டு இயற்கைக்கு மாருன சமரசப் பேச்சை எழுப்பியது—இரண்டும் சேர்ந்து என்னை மௌனமா யிருப்பது தகாது என வற்புறுத்தின. ஏழு ஆண்டுகளுக்கு மேலாக நாட்டுக்கு நான் ஏதாவது சேவை செய்திருந்தால்,

அதன் மூலம் மனித சமுதாயத்தின் நலனுக்காக பயன் கருதாது இலக்கியத்தின் சிறப்பை மேம்படுத்தியுள்ளேன். மேதையைத் துஷ்பிரயோசனம் செய்யாமல் பயன்படுத்தலாம் என்பதையும் நிரூபித்துக்காட்டியுள்ளேன்.

நாட்டுப் பாசம் இருந்து அதை லட்சியசித்திக்குப் பயன்படுத்தினல் சுதந்திரம் அநுபவசாத்தியமானது, கிடைக்கக்கூடியது என்றே நான் எண்ணிவந்திருக்கிறேன். பரந்த மனம் படைத்து பழைய சிந்தனு சக்தியையும் பக்குவமாக அடைந்து பலதரப்பட்ட சந்தர்ப்பங்களிலும் சுதந்திர இயக்கத்தினல் மனம் பரவச மடைந்து அதைப் பெற விடாப்பிடியாய் உழைத்து, நற்காலங்களிலும் கஷ்ட காலங்களிலும், வெற்றி கிட்டும் வரையில் தங்கள் கருத்துக்களை எள்ளளவும் மாற்றுமலிருந்த நம் போன்ற மக்களை உலகம் இதுவரை கண்டதே இல்லை.

யுத்தக் காட்சிகள் மறைகின்றன; ஒவ்வொருவரும் குடியும் குடித்தனமுமாய் இன்ப வாழ்க்கை நடத்தத் திட்டமிட்டுக் கொண்டிருக்கின்றனர்; ஆகையால் இச்சமயம் நான் இந்தப் பிரச்னையை விட்டு விடைபெற்றுக்கொள்ளுகிறேன். இந்த லட்சியத்தைச் சிரத்தையுடன் ஆரம்பத்திலிருந்து இறுதிவரை பின்பற்றி வந்திருக்கிறேன். அதன் பல திருப்பங்களிலும் இடைவிடாது பின்பற்றியிருக்கிறேன். இனி நான் எந்த நாட்டில் வசித்தாலும் நான் இதுவரை ஆற்றிவந்த பணியைப் பற்றி உண்மையில் பெருமைகொள்ளுவேன். மனித சமுதாயத்திற்குக் கடுகளவு பயனுவது அளிப்பதற்கான சக்தியை எனக்களித்ததற்காக இயற்கைக்கும், பரம்பொருளுக்கும் நன்றி செலுத்துகிறேன்.

பிலடல்பியா
19—4—1783

சாமானிய அறிவு.

மனித உரிமைகள்

முதல் பாகம்

ஐக்கிய அமெரிக்க நாட்டின் ஜனாதிபதி ஜார்ஜ் வாஷிங்டனுக்கு,

ஐயா,

பிறருக்கு வழிகாட்டும் தன்மையுள்ள உங்களது நற்குண நற்பண்பினால் ஸ்தாபிக்கப்பட்ட சுதந்திரக் கொள்கைகளை ஆதரித்து எழுதப்பட்ட இச் சிறு பிரசுரத்தைத் தங்களுக்குச் சமர்ப்பிக்கிறேன். உங்களுடைய தர்ம சிந்தனையும், பெருந் தன்மையும் விரும்புகிறபடி மனித உரிமைகள் உலகெங்கும் நிலவி, பழைய உலகிலிருந்து புது உலகு தோன்றும் காட்சியை நீங்களே கண்டுகளிக்க வேண்டும் எனப் பிரார்த் திக்கும்,

உங்களுக்கு மிகுந்த கடமைப்பட்ட,

கீழ்ப்படிதலுள்ள

பணிவுமிக்க ஊழியன்,

தாமஸ் பெய்ன்.

[அரசியல் சட்டத்தின் வரம்புகள்]

நுனிப்பட்டவர்களும் நாடுகளும் பரஸ்பரம் மரியாதைக் குறைவாக நடந்துகொள்ளுவதனல் ஆத்திரமூட்டுவதற்கு பிரஞ்சுப் புரட்சியைப் பற்றி ***பர்க்** (Burke) வெளியிட்டுள்ள துண்டுப்பிரசுரம் சிறந்த எடுத்துக்காட்டாகும். இங்கிலாந்தில் நிலவரங்கள் பற்றியோ, ஆங்கிலப் பார்லிமெண்டின் நடவடிக்கை பற்றியோ பிரஞ்சு மக்களோ, பிரஞ்சு தேசீய சபையோ எவ்வித அக்கறையும் காட்டவில்லே. அகாரண மாக **பர்க்** பார்லிமெண்டிலும், பொது மேடைகளிலும் அவர் களைத் தாக்க முன்வந்தது கொள்கையளவிலோ, நற்பண்பு எனும் வகையிலோ பார்த்தால் மன்னிக்க முடியாத குற்ற மாகும். பிரஞ்சு மக்கள் மீதும் அவர்களது தேசீய சபை மீதும் அவர் ஆங்கில அகராதியிலுள்ள வசைச்சொற்கள் யாவற்றையும் கொட்டித் தீர்த்து விட்டார். குரோதம், வெறுப்பு, அறிவு, அறியாமை, இவ்வளவும் சேர்ந்து அவ ருடைய ஆத்திரம் சொற்களாக ரூபமெடுத்து நானூறு பக்கங் களை அடைத்திருக்கிறது. அவருடைய திட்டப்படியும் அவ ருடைய தோரணையிலும் அவர் விரும்பியிருந்தால் பல ஆயிரம் பக்கங்களைக் கூட நிரப்பியிருக்கலாம். நாக்கையும் பேனவையும் உணர்ச்சி உந்துகிறபடி விட்டுவிட்டால் எழுதுபவன் ஓய்ந்துவிடலாமே ஒழிய, எழுத அல்லது பேசப் புகுந்த விஷயம் வளர்ந்துகொண்டேதான் போகும்.

பிரஞ்சு நிலவரத்தைப் பற்றி **பர்க்** போட்ட மதிப் பிலோ, அதுபற்றி அவர் கொண்டிருந்த கருத்துக்களிலோ அவர் ஏமாற்றமடையவில்லை. அவருடைய திட நம்பிக்கை யும், தான் நினைத்ததற்கு மாருகச் சம்பவங்கள் நிகழ்வதனல் ஏற்பட்ட ஆத்திரமும் இதே தோரணையில் நீடித்துச் செல்லுவ தற்கு அவருக்கு உணர்ச்சியூட்டின. பிரான்ஸில் புரட்சி ஏற்படும் என்று **பர்க்** அவர்களை நம்பவைப்பது ஒரு சமயத்

---

* பிரிட்டிஷ் பார்லிமெண்டில் சொல்லின் செல்வராக விளங்கியவர் பர்க். இந்தியாவில் வாரன் ஹேஸ்டிங்ஸ் நடத்திய கொடுங்கோன்மையைக் கண்டித்து பார்லிமெண்டில் ஆற்றிய சொற்பொழிவுகள் மூலம் பிரசித்தி பெற்றவர்.

தில் அசாத்தியமா யிருந்தது. பிரஞ்சுக்காரர்களுக்குப் புரட்சி நிகழ்த்தும் உணர்ச்சியுமில்லை, அதை நீடித்து நடத்துவதற்கான உறுதியுமில்லை என்று அச்சமயம் அவர் கருதினார். இப்பொழுது புரட்சி நிகழ்ந்து விட்டதனால் அதைக் கண்டிப்பதன் மூலம் தப்பித்துக்கொள்ளப் பார்க்கிறார்.

பிரஞ்சு தேசீய சபையைத் திட்டுவதுடன் திருப்தியடையாமல் அவர் டாக்டர் †பிரைஸையும், (Dr. Price) இங்கிலாந்தில் நடைபெற்றுவரும் புரட்சிச் சங்கம்*, அரசியலமைப்புத் தகவல் இரண்டையும் தூற்றுகிறார்.

1688-இல் இங்கிலாந்தில் நிகழ்ந்த புரட்சியின் ஆண்டு விழாவை 4—11—1780-இல் கொண்டாடி டாக்டர் பிரைஸ் உபதேச உரை வழங்கினார். இந்த நல்லுரைபற்றி பர்க் எழுதுகிறார்:

அரசியல் போக்குள்ள இந்த மதபோதகர் புரட்சிக் கொள்கைகளை யொட்டி இங்கிலாந்து மக்கள் மூன்று ஜீவாதார உரிமைகளைப் பெற்றதாகச் சாதிக்கிறார். அவைகளாவன:

1. நமது ஆட்சியாளர்களைத் தேர்ந்தெடுக்கும் உரிமை;
2. தவறுதலாக ஆட்சியாளர்கள் நடந்துகொண்டால் அவர்களை அப்புறப்படுத்துவது;
3. நமக்குத் தேவையான ஆட்சியை அமைத்துக் கொள்ளுவது.

இந்த உரிமைகள் குறிப்பிட்ட ஒருவரிடத்திலோ அல்லது ஏதாவது ஒரு பகுதியிலடங்கியவர்களிடத்தோ இருப்பதாக டாக்டர் பிரைஸ் கூறவில்லை. நாட்டு மக்கள் எல்லோரிடமும் அவை இருப்பதாக அவர் கூறுகிறார். ஆனால் நாட்டு மக்களுக்கு இவ் வுரிமைகள் உண்டு என்பதை பர்க் மறுக்

† டாக்டர் ரிச்சர்டு பிரைஸ் (Price) 1723-1791வரை வாழ்ந்தவர். இவர் கிறிஸ்தவ சீர்திருத்த மார்க்கப் பாதிரியார். 1776-இல் அமெரிக்காவை ஆதரித்துப் பல பிரசுரங்கள் வெளியிட்டார்.

* புரட்சிச் சங்கம் 1688-இல் இங்கிலாந்தில் நிகழ்ந்த புரட்சியைப் பாராட்டியது. சமூக, மத உரிமைகளைப் பாதுகாப்பது இதன் நோக்கம். பிரஞ்சுப் புரட்சியை வரவேற்று இந்தச் சங்கம் பிரஞ்சு தேசீய சபைக்குப் பாராட்டுரை வழங்கியதனால் பர்க் ஆத்திரமடைந்து எழுதுகிறார்.

கிருர். அது மட்டுமல்ல; இந்த உரிமைகள் எங்கும் யாரிடமும் இல்லை என அவர் கூறுகிருர். இதைவிட விசித்திரமானதும் வியப்பிற்குரிய விஷயமும் என்னவெனில், ''ஆங்கில நாட்டு மக்கள் இந்த உரிமையை மறுதலிக்கின்றனர்; இந்த உரிமை உண்டு என்பவர்களைத் தங்கள் உயிரைக் கொடுத்து எதிர்ப்பார்கள்'' என **பர்க்** கூறியுள்ளார்.

மக்கள் ஆயுதந் தாங்கி, தங்கள் உயிர், உடைமை யாவற்றையும் தியாகம் செய்யத் தயாராயிருப்பது உரிமைகளை நிலைநாட்ட அல்ல, தங்களுக்கு எவ்வித உரிமையுமில்லை என்பதை நிரூபிக்கவே என்று **பர்க்** வாதிப்பது ஒரு புதுமை; புதிர் போன்று அமைந்திருக்கும் **பர்க்கின்** மேதைக்கே அது ஏற்றதாகும்.

ஆங்கில நாட்டு மக்களுக்கு அம்மாதிரி உரிமைகள் இல்லை. அவ்வுரிமைகள் நாட்டு மக்களிடமோ, அல்லது ஒரு பகுதியினரிடமோ கூட இல்லை என்பதை நிரூபிக்க **பர்க்** கையாளும் முறை அவர் ஏற்கனவே கூறியதுபோல் அதிசயமாகவும் கொடூரமாகவும்தா னிருக்கிறது. அந்த உரிமைகள் பெற்றிருந்த தலைமுறையினர் இறந்துவிட்டனர், அவர்களுடன் அவர்கள் கைக்கொண்ட உரிமைகளும் செத்தொழிந்துவிட்டன என்பதுதான் அவருடைய வாதம்.

மன்னர் வில்லியம், ராணி மேரி இருவருக்கும் பார்லிமெண்டு நூறு ஆண்டுகளுக்கு முன் சமர்ப்பித்த கீழ்க்காணும் பிரகடனத்தை **பர்க்** தன் கட்சிக்கு ஆதாரமாகக் காட்டுகிருர்:

''மதகுருக்கள், பிரபுக்கள், மக்கள் சபை உறுப்பினர், மக்கள் பெயரால் (அக்காலத்து மக்கள்) தங்களையும், தங்கள் **வாரிசுகளையும், சந்ததிகளையும்** என்றென்றும் கட்டுப்படுத்திப் பணிவுடனும் விசுவாசத்துடனும் கூறுவதாவது : '' அதே ஆட்சியில் மற்றொரு பார்லிமெண்ட் இயற்றிய சட்டத்தின் ஒரு ஷரத்தையும் **பர்க்** தனது வாதத்திற்கு மேற்கோளாகக் காட்டுகிருர். இந்த ஷரத்துப்படி எங்களை (அக்காலத்து மக்களை) யும், எங்கள் வாரிசுகளையும், அவர்களின் பின்சந்ததியார், அவர்களுடைய வாரிசுகள் யாவரையும் என்றென்றும் கட்டுப்படுத்தும்'' என அவர் கூறுகிருர்.

இந்த ஷரத்துக்களை மேற்கோள்களாகக் காட்டியதன் மூலம் **பர்க்** தன் வாதம் நிரூபணமாகிவிட்டதாகக் கருதுவதுடன், இவைகள் மூலம் நாட்டு மக்களின் உரிமையை அவர்கள் என்றென்றும் இழந்துவிட்டதாகவும் வாதிக்கிறார். இந்த ஷரத்துக்களைத் திரும்பத் திரும்பக் கூறுவதுடன் அவர் திருப்தியடையாமல், புரட்சிக்கு முன் இவ்வுரிமைகளை ஆங்கில மக்கள் அநுபவித்திருந்தாலும், அவர்கள் புரட்சிக் காலத்திலேயே அந்த உரிமைகள் தங்கள் சந்ததிகளுக்கில்லை என அவைகளை மனமறிந்து துறந்துவிட்டனர் என்றும் சாதிக்கிறார்.

தனது கொள்கையிலிருந்து அவர் கிரகித்துக்கொண்ட விஷயத்தைப் **பர்க்** தமது ஆங்கில நாட்டு மக்களுக்கு அளிப்பதுடன் நிற்காமல், பிரஞ்சுப் புரட்சிக்கும், பிரஞ்சு தேசீய சபைக்கும் பயன்படுத்துகிறார். அந்த அறிவு மிக்க, பிறரிடம் அறிவுச் சுடர் பிரகாசிக்கச் செய்யத்தக்க பிரஞ்சுப் பிரதிநிதிகளை, ''இல்லாத உரிமையைக் கைப்பற்றியவர்கள்'' என இழிவுபடுத்துகிறார். அவருடைய கொள்கைகளுக்கெதிராக நான் மற்றும் சில கொள்கைகளைச் சமர்ப்பிக்கிறேன்.

1688-ஆம் ஆண்டு பிரிட்டிஷ் பார்லிமெண்ட் தங்களுக்கும், தங்கள் பிரதிநிதிகளுக்கும் உகந்த ஒரு காரியத்தைச் செய்தது. அதை அவர்கள் செய்ய உரிமையுண்டு. செய்ய வேண்டியது அவசியமும் கூட. ஆனால் இந்த உரிமை அவர்களுக்கு **அளிக்கப்பட்டது**. ஆனால் இந்த உரிமையுடன் அவர்களுக்கு அளிக்கப்படாத மற்றொரு உரிமையைத் தாங்களாகவே ஸ்வீகரித்துக்கொண்டனர். காலமுள்ளவரை தங்களது சந்ததியார்களைக் கட்டுப்படுத்துவது அவர்கள் தாங்களாக மேற்கொண்ட உரிமை.

ஆகையால் இவ்விஷயத்தை இரு பகுதிகளாகப் பிரிக்கலாம்: அவர்களுக்கு **அளிக்கப்பட்ட** உரிமை; **தாங்களாக மேற்கொண்ட உரிமை**. முதல் உரிமை அவர்களுக்குண்டு என்பது ஒப்புக்கொள்ளப்படுகிறது. இரண்டாவது பற்றிப் பின்வருமாறு பதிலுரைக்கிறேன்:

பின்சந்ததியார்களைக் காலமுள்ள வரை கட்டுப்படுத்தவோ, என்றென்றும் உலகத்தை யார் எப்படி

ஆளுவது என்று திட்டப்படுத்தவோ ஒரு பார்லிமெண்டிற்கோ, அல்லது மனிதவர்க்கத்தின் ஒரு பகுதியினருக்கோ, அல்லது ஒரு தலைமுறையினருக்கோ உரிமை இருந்ததில்லை; இருக்கவும் முடியாது. ஆகையினால் சட்டமியற்றுபவர்கள் தங்கள் சட்டங்கள், ஷரத்துக்கள், பிரகடனங்கள் மூலம் அவர்களுக்கில்லாத, அவர்கள் நிறைவேற்றக்கூடாத சட்டம் செய்தால் அது செல்லுபடியாகவே ஆகாது.

முந்திய சகாப்தம் அல்லது தலைமுறைக்குள்ள மாதிரியே பின்வருபவர்களுக்கும் தங்களிஷ்டப்படி எல்லா விஷயங்களிலும் செயல்புரியும் சுதந்திரம் இருக்கவேண்டும். ஒருவன் இறந்த பிறகு, பின்சந்ததியினரை ஆளும் தற்பெருமையும், மேதாவித்தனமும் வெறுக்கத்தக்கவை; கொடுங்கோன்மைகளிலேயே மிகவும் கோரமானது.

ஒரு மனிதன் மற்றொரு மனிதனின் உடைமைப் பொருளல்ல. அம்மாதிரி எந்தத் தலைமுறையினருக்கும் தங்களுக்குப் பின் வருபவர்களை உடைமைகள்போல் பாவித்து ஆளும் உரிமையும் கிடையாது. 1688-ஆம் வருடத்திய பார்லிமெண்டோ, அல்லது எந்தக் காலத்திலிருந்த பார்லிமெண்டோ தற்போதுள்ளவர்களை எந்த விதத்திலும் கட்டுப்படுத்தி எதுவும் செய்ய முடியாது, தற்போதுள்ள பார்லிமெண்டும் நூறு அல்லது ஆயிரம் ஆண்டுகளுக்குப் பின் தோன்றப்போகிறவர்களைக் கட்டுப்படுத்த முடியாது என்பதே போல.

சந்தர்ப்பங்களுக்கேற்றவாறு செயல்புரிய ஒவ்வொரு தலைமுறையினருக்கும் தகுதியுண்டு; தகுதி இருக்கவேண்டும். தற்போதிருப்பவர்களைத் திருப்தி செய்யவேண்டுமே யொழிய இறந்தவர்களை யல்ல. ஒரு மனிதன் மறைந்து விட்டால் அவன் அதிகாரமும், தேவைகளும் அவனோடு மடிந்து விடுகின்றன. அவனுக்கு இவ்வுலக விவகாரங்களில் எவ்விதத் தொடர்பும் இல்லையாகையால், மக்களை யார் ஆளுவது, அவர்களது ஆட்சி முறையை எப்படி அமைத்து நிர்வகிப்பது என்று திட்டமிட அவனுக்கு எவ்வித அதிகாரமும் கிடையாது.

எந்த ஆட்சி முறைக்கும் சாதகமாகவோ, பாதகமாகவோ இங்கோ, பிற இடங்களிலோ உள்ள கட்சிகளுக்கு ஆதரவாகவோ, எதிரிடையாகவோ நான் வாதாடவில்லை. ஒரு தேச

மக்கள் என்ன செய்ய விரும்புகின்றனரோ அதைச் செய்ய அவர்களுக்கு உரிமை உண்டு. ஆனால், இதை பர்க் மறுக்கிறார். ஆகையினால், அவர் வாதிக்கும் உரிமை எங்கிருக்கிறது? இன்று வாழ்பவர்களின் உரிமைகளுக்காக நான் வாதாடுகின்றேன். இறந்துபோனவர்கள் எழுதி வைத்துவிட்டுப்போன ஏட்டின் படி தற்போதுள்ளவர்கள் உரிமைகளைத் தானம் செய்வதோ, கட்டுப்படுத்துவதோ, அல்லது ஒப்பந்த மூலம் பறிப்பதையோ தான் நான் எதிர்க்கிறேன். உயிருடனிருப்பவர்களின் உரிமைகள், சுதந்திரம் முதலியவை மீது இறந்துபோனவர் களின் அதிகாரத்தை பர்க் ஆதரிக்கிறார்.

மரணத்தருவாயில் மன்னர்கள் தங்கள் செங்கோல்களைத் தங்களிஷ்டப்படி யாருக்காவது அளித்த காலம் உண்டு. அம் மாதிரி சந்தர்ப்பங்களில் மக்கள் மாக்களாகக் கருதப்பட்டு, வாரிசாக வரும் எந்த மன்னனுக்கோ அடிமைப்பட்டுக் கிடக்க வேண்டி வந்தது. இந்த முறை அடிபட்டுப் போய்விட்டது. இதை யாரும் நினைத்துக்கூடப் பார்க்காதபடி மறைந்துவிட்டது. இந்த முறையின் கொடூரத்தைப் பார்த்தால் இப்படியும் ஒன்று இருந்ததா என மக்கள் வியப்படைவர். ஆனால், பர்க் எழுப்பும் அரசியல் தேவாலயத்தின் அடிப்படையும் இதே போல் மோசமான தன்மை வாய்ந்ததுதான்.

ஒவ்வொரு நாட்டின் சட்டமும் ஏதாவது ஒரு பொதுப் படையான கொள்கையை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். இங்கிலாந்தில் பெற்றோரோ, உபாத்திமார்களோ சர்வாதிகார மிருப்பதாகச் சொல்லிக்கொள்ளும் பார்லி மெண்டோ இருபத்தி ஒன்று வயதுக்கு மேற்பட்ட எந்தத் தனிப் பட்டவர்களின் சுதந்திரத்தையும் கட்டுப்படுத்த முடியாது. ஆகையால், எக்காரணம் பற்றி அல்லது எந்த உரிமையின் கீழ் 1688-ஆம் வருட பார்லிமெண்ட் பின்சந்ததியினரைக் கால முள்ளவரையில் கட்டுப்படுத்தலாம்.

இவ்வுலகைவிட்டு மறைந்தவர்களும், இனி உதிக்கப் போகிறவர்களும் எவ்வளவு தூரம் தொடர்பற்றவர்கள் என்பதை அறவுணர்வுள்ளோர்கூடக் கற்பனை செய்து கூற முடியாது. இவர்களை எவ்விதமான கடமையுணர்ச்சி கட்டுப் படுத்த முடியும்? உலகிலிருந்து மறைந்து விட்டவனுக்கும்,

இனிப் பிறக்கப்போகிறவனுக்கும் எவ்விதத் தொடர்பும் கிடையாது. இவ்விருவரும் ஒருவரையொருவர் சந்திக்கவே முடியாத நிலையில் இருக்கையில் ஒருவர் மற்ருெருவரை என் றென்றும் கட்டுப்படுத்த முடியும் என்று எப்படிக் கூறமுடியும்?

இங்கிலாந்தில் ஒருவனுடைய பையில் உள்ள பணத்தை அவனுடைய அநுமதியின்றி யாரும் எடுக்கமுடியாது என்று கூறப்படுகிறது. அப்படியிருக்கையில் 1688-ஆம் ஆண்டு பார்லிமெண்ட் பின்சந்ததியாரின் சுதந்திரத்தை எப்படிக் கட்டுப்படுத்தவோ, பறிக்கவோ முடியும்? ஒருவனின் செய லாற்றும் உரிமையை என்றென்றும் எப்படிக் கட்டுப்படுத்தி வைக்கமுடியும்? இந்த அதிகாரத்தை 1688-ஆம் ஆண்டு பார்லி மெண்டிற்கு யார் கொடுத்திருக்க முடியும்? இங்கிலாந்தின் சம்பிரதாயப்படி அநுமதி யளிக்கவேண்டியவர்கள் பிறப்பதற்கு முன்பே அவர்களுடைய உரிமைகளைப் பறிப்பதற்கு அவர்கள் எப்படி உடன்பட்டிருக்க முடியும்?

வாசகர்களுக்கு **பர்க்** அளித்துள்ள கருத்துக்கள் அவர்க ளுடைய அறிவையே அவமதிப்பதுபோல் அமைந்திருக்கின்றன. இதைவிட மோசமான வாதத்தைக் காணமுடியாது. நூறு ஆண்டுகளுக்கு முன் வசித்த ஒரு சிலர் ஒரு சட்டமியற்றினர். அதை மாற்றும் அதிகாரம் இப்பொழுதுள்ள யாருக்கும் இல்லை; இனியும் இருக்கமுடியாது. அதை மாற்றவே முடியாது என அவர் வாசகர்களுக்கும், உலகத்தோருக்கும் கூறுகிருர். எவ்வளவு நுட்ப வாதத்தின் மூலமும், மோசமான தர்க்க முறை மூலமும் மக்களை ஆளும் தெய்வீக அதிகார முறையை அப்பாவி மக்கள் மீது சுமத்துகின்றனர்? ஆனுல், **பர்க்** இந்த தெய்வீக அதிகா ரத்தைவிடப் புதியதாக ஒன்றைக் கண்டுபிடித்திருக்கிருர். குறுக்கு வழியில் சென்று பழைய பார்லிமெண்டுக்குச் சாகா வரமளிக்கிருர். அந்தப் பார்லிமெண்ட் இயற்றிய சட்டங்க ளெல்லாம் தெய்வீக அதிகாரம் பெற்றவை எனக் கூறுகிருர். காலமுள்ளமட்டும் அழிக்கமுடியாத அந்த அதிகாரம் மனித சக்திக்கு மேம்பட்டதாகத்தானே இருக்கவேண்டும்!

இந்த ஷரத்துக்களைப் பொதுமக்கள் கவனத்திற்குக் கொண்டு வந்ததன் மூலம் **பர்க்** தனது இயக்கத்திற்குப் பலம் பெறவில்லை; ஆனுல், நாட்டுக்கு நன்மை செய்திருக்கிருர். அதிகாரம் அத்து

மீறிப்போகாமல் தடை செய்வதற்கு எவ்வளவு விழிப்புட னிருக்கவேண்டும் என்கிற அவசியத்தை நமக்கு வற்புறுத்து கிறார்.

இல்லாத அதிகாரத்தை மேற்கொண்டதற்காக இரண் டாவது ஜேம்ஸை* நாடு கடத்தினர். ஆனால், அவன் செய்த தவறுகளையே அவனை அகற்றிய பார்லிமெண்ட் வேறு முறையில் செய்வது சற்று அசாதாரணமாயிருக்கிறது. இதிலிருந்து புரட்சி சமயத்தில் மனித உரிமைகள் என்றால் அதற்குச் சரியான பொருள் என்ன என்பதை யாரும் உணர்ந்துகொள்ளவில்லை என்பது விளங்குகிறது. அந்தப் பார்லிமெண்டிற்கு யாரும் அளிக்காத, அளிக்கவும் முடியாத அதிகாரத்தை அது மேற்கொண்டது. அது பின் சந்ததியாரின் சுதந்திரத்தைப் பறிக்கும் அதிகாரத்தைச் செலுத்தியது. இதே காரியத்தை இரண்டாவது ஜேம்ஸ் செலுத்தியதனால்தான் பார்லிமெண்ட் அவனை அகற்றியது.

மன்னன் செய்ததும் பார்லிமெண்ட் செய்ததும் ஒரே மாதிரியான காரியம்தான். ஆனால், இரண்டிற்கும் ஒரு சிறு வித்தியாசம் இருக்கிறது. இல்லாத அதிகாரத்தை மேற் கொண்ட மன்னன் அப்போது உயிருடனிருந்தவர்களைக் கட்டுப் படுத்த முயன்றான். பார்லிமெண்ட் இனிப் பிறக்கப்போகிற வர்களைக் கட்டுப்படுத்தியது. ஆனால், இரண்டும் செல்லுபடி யாகாதவைகளே!

பின்சந்ததிகளை என்றென்றும் கட்டுப்படுத்தும் அதிகா ரத்தை பார்லிமெண்ட் எங்கிருந்து பெற்றது என்பதை பர்க் எப்படி நிரூபிப்பார்? அதற்கான ஷரத்துக்களை அவர் வெளியிட் டிருக்கிறார். ஆனால் அந்த உரிமை இருந்தது, அது எவ்வாறு நிலைபெற்றிருந்தது என்பதை அவர் ருசுப்படுத்த வேண்டும். அம்மாதிரி உரிமை முன்காலத்தில் இருந்தால், அது இப் பொழுதும் இருக்கவேண்டும். மனிதனுக்கு இயற்கையாக உள்ளவைகளை மனிதன் அழிக்க முடியாது. இறப்பது மனித

*1685-இல் ஆங்கில அரசன் இறந்ததும் இரண்டாவது ஜேம்ஸ் மன்னனானான். மூன்று ஆண்டுகள் மதஸ்தாபனத்தினருடனும், பார்லிமெண்டுடனும் போரா டியதன் விளைவாக 1688-இல் அவன் பதவியிலிருந்து அகற்றப்பட்டான். அப்புறம் அவனது மருமகன் பட்டத்திற்கு வந்தான்.

னுக்கு இயல்பு. மனிதர்கள் பிறந்துகொண்டிருக்கும் வரையில் அவர்கள் இறந்துகொண்டுதானிருப்பார்கள்.

ஆனல், கிறிஸ்தவ வேதத்தில் ஆதி மனிதன் **ஆதாம்** இருந்ததுபோல ஓர் அரசியல் முதல் மனிதனைச் சிருஷ்டித்து இனி வரப்போகும் யாவரும் அவனுக்குக் கட்டுப்பட்டுத்தானிருக்கவேண்டும் என்கிறுர். இது அவருடைய நோக்கமானல் இவருடைய அரசியல் **ஆதாமுக்கு** இம்மாதிரி பின்சந்ததிகளைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் இருந்தது என ருசுப்படுத்த வேண்டும்.

ஒரு நூலை அறுத்துவிடும் நோக்கம் இருந்தாலொழிய, மெல்லிய நூலிழையை இழுக்க முடியாது, இழுக்கவும் கூடாது. **பர்க்**கின் வாதங்களைத் தகர்த்துவிட யாராவது முயற்சிப்பதானல் அந்தக் காரியம் கைகூட அவர் கையாளும் வாத முறைகளையே பின்பற்றினல் போதும். வேண்டுமென்றே அதிகாரங்களை மிகைபடுத்திக் கூறிவிட்டு அப்புறம் அந்த அதிகாரங்கள் உள்ளனவா என்று சந்தேகத்தைக் கிளப்பினல் அந்த அதிகாரங்கள் தானுகவே வீழ்ந்துவிடும்.

ஒரு தலைமுறையில் நிறைவேறிய சட்டங்கள் பிற்காலங்களிலும் நிராட்சேபணையாகச் செலாவணியாவதற்குக் காரணம் பின்னல் வருபவர்கள் அதற்குச் சம்மதிப்பது தான் என்பதை எளிதில் புரிந்துகொள்ளலாம். ரத்துச் செய்யப்படாத சட்டம் அமுலிலிருந்து வருகிறது. இதற்குக் காரணம் அந்தச் சட்டத்தை ரத்துச் செய்ய முடியாது என்பதல்ல, ரத்துச் செய்யப்படவில்லை என்பதுதான். ரத்துச் செய்யப்படாதது மக்கள் சம்மதம் பெற்றது எனக் கொள்ளவேண்டும்.

பர்க் வெளியிட்டுள்ள ஷரத்துக்களில் மேலே கூறப்பட்ட நல்ல அம்சம்கூட இல்லை. அவைகள் சிரஞ்சீவித்துவம் பெற விரும்புவதனல் செல்லுபடியாகாமல் போய்விட்டன. அவைகளுடைய இயல்பே அவைகளுக்குப் பிறர் சம்மதம் அளிக்க முடியாமல் தடுக்கிறது. அவர்களுக்குக் கிடைக்க முடியாத அடிப்படையில் உரிமை கோருவதனல் அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய உரிமையும் கிடைக்கமுடியாமல் செய்துவிடுகிறது. அழிவில்லாத அதிகாரம் என்பது மனித உரிமையல்லவாகையால் அது பார்லிமெண்டின் உரிமையுமாகாது.

இதைவிட 1688-ஆம் வருடத்திய பார்லிமெண்டினர் தங்களுக்கு நீண்ட ஆயுளை அருளியிருக்கலாம்! அது சாத்தியமானால் அவர்கள் என்றென்றும் அரசுபுரிந்துகொண்டிருக்கலாம். ஆகையினால் இந்த சாசுவத உரிமைச் சாசனங்கள் வெறும் உபசார வார்த்தைகள் அடங்கியவை. தங்களைத் தாங்களே பாராட்டிக்கொண்டு, "பார்லிமெண்டே நீ நீடூழி வாழ்க!" என்று கூறினால் அதற்கென்ன பொருள் உண்டோ அவ்வளவுதான் உண்டு இந்த உபசார மொழிகளுக்கு.

உலக நிலை இடைவிடாது மாறிக்கொண்டே வருகிறது. அவ்வாறே மனிதர்களின் கருத்துக்களும் மாறிக்கொண்டே வருகின்றன. அரசாட்சி என்பது உயிர் வாழ்ந்துகொண்டிருப்பவர்களுக்கே யொழிய செத்தவர்களுக்கில்லை யாகையால், உயிருள்ளவர்களுக்குத் தான் அதில் உரிமையுண்டு. ஒரு தலைமுறையில் நியாயமானது, பயனுள்ளது என்று கருதப்படுவது மற்றொரு காலத்தில் தவறாகவும், பயனற்றது என்றும் கருதப்படலாம். இம்மாதிரி சந்தர்ப்பங்களில் யார் முடிவு கூறுவது? இருப்பவர்களா அல்லது இறந்துபோனவர்களா?

இந்த ஷரத்துக்கள் பற்றி **பர்க்** நூறு பக்கங்கள் எழுதியிருக்கிறார். யாரும் அளிக்காமல் தாங்களே மேற்கொண்ட அதிகாரங்கள் மூலம் பின்சந்ததியாரைக் காலமுள்ள மட்டும் கட்டுப்படுத்துவது ஆதாரமற்றது. அதன் தன்மையிலிருந்தே அது செல்லுபடியாகாதது என்றால், அதிலிருந்து **பர்க்** செய்யும் ஏராளமான ஊகங்கள், பிரகடனங்கள் யாவும் செல்லுபடியாகாதவை என்று சொல்லி இவ்விஷயத்தில் என் வாதத்தை நிறுத்திக்கொள்ளுகின்றேன்.

மனிதனின் இயல்பான உரிமைகளும் சமூக உரிமைகளும்

அரசாட்சி பற்றிய வியாக்கியானங்களும் சொல்லடுக்குகளும் நிறைந்த திக்குத் தெரியாத காட்டில் நான் இப்பொழுது **பர்க்கைத்** தொடர்ந்து செல்லவேண்டும். அவருக்குத் தோன்றியவைகளை உண்மைகள் போல் சாதிக்கிறார்; அவர் கூற்றுகளுக்குச் சான்றுகளோ, காரணங்களோ கூறுவதில்லை.

நியாயமான ஒரு முடிவிற்கு வருமுன் எந்த உண்மைகள், கொள்கைகள் மீது அவர் வாதம் செய்கிறார் என்பதை நிரூபிக்கவேண்டும், ஒப்புக்கொள்ளவேண்டும் அல்லது மறுக்கவேண்டும். பிரஞ்சு தேசீய அசெம்பிளி வெளியிட்ட "மனித உரிமைகள் பிரகடன"த்தை **பர்க்** தனக்கு இயல்பாயுள்ள, மட்டு மரியாதையற்ற வார்த்தைகளால் தாக்குகிறார். இந்த "மனித உரிமைப் பட்டியலின்" அடிப்படையில்தான் பிரஞ்சு அரசியலமைப்பு அமைந்திருக்கிறது. இதை "பழுப்பேறிய தாளில் எழுதிய மனித உரிமைச் சாசனம்" என்று இளக்காரம் செய்கிறார் **பர்க்**.

மக்களுக்கு உரிமைகளே இல்லை என **பர்க்** கூற விரும்புகிறாரா? அப்படியானால் எங்கும் உரிமைகளே கிடையாது என்பது அவர் கருத்தா யிருக்கவேண்டும். அப்பொழுது அவருக்கும் எவ்வித உரிமையும் கிடையாது. ஏனெனில், உலகில் மனிதர் தவிர வேறு யார் இருக்கின்றனர்? ஆனால் மனிதனுக்கு உரிமைகள் உண்டு என்று **பர்க்** ஒப்புக்கொள்ளுவாரானால், அந்த உரிமைகள் யாவை, அவைகளை மனிதன் எப்படிப் பெற்றான் என்கிற கேள்விகள் எழும்.

முந்திய பழக்கங்களை ஆதாரமாகக் கொண்டு வாதம் செய்பவர்கள் ஒரு தவறு செய்கின்றனர். அவர்கள் பழமையின் ஆதிக்குச் சென்று பார்ப்பதில்லை. நூறு அல்லது ஆயிரம் ஆண்டுகள் வரை ஆராய்ந்து பார்த்து அன்று நிகழ்ந்தவற்றை இன்றைக்கு ஆதாரமாகக் காட்டுகின்றனர். இது எப்படிப் பின்பற்றக்கூடிய அதிகாரமுள்ள மேற்கோளாகும்?

பழமையை இன்னும் தீவிரமாக ஆராய்ந்து பார்த்தோமானால் இதற்கு மாறுபட்ட கருத்தும் பழக்கமும் நிலவியிருப்பதைக் காண்போம். பழமை பின்பற்றக்கூடியதாயிருந்தால் அதிலிருந்து முன்னுக்குப் பின் முரணான ஆயிரக்கணக்கான மேற்கோள்கள் காட்டலாம். ஆனால் இந்த முரண்பாடுகளை லட்சியம் செய்யாமல் பழமைக்கும் பழைய நிலைக்குச் சென்று பார்த்தால் முதல் மனிதனை ஆண்டவன் சிருஷ்டித்த காலத்திற்கு வருவோம். முதலவன் எப்படி இருந்தான்? மனிதனாகவே இருந்தான். மனிதன் என்பதுதான் அவன் தாங்கிய

ஒரே, உயர்ந்த பட்டம். அதைவிட உயர்ந்த மரியாதை அவனுக்கு அளிக்க முடியாது. ஆனால் பட்டங்களைப் பற்றி பின்னர் ஆராய்வோம்.

இப்பொழுது மனிதன் தோன்றியது பற்றியும் அவன் எப்படி உரிமைகள் பெற்றான் என்பதையும் அறிந்துகொள்ளும் நிலையிலிருக்கிறோம். அன்றிருந்து இன்றுவரை மக்கள் எப்படி ஆளப்பட்டு வருகின்றனர் என்பது பற்றி இப்போது ஆராயவேண்டிய அவசியமில்லை. ஆனால் மனித வரலாற்றிலிருந்து அவன் செய்த தவறுகள், சீர்திருத்தங்கள் மூலம் பயன்பெற வேண்டியதே நம் கடமை. நூறு அல்லது ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் வசித்தவர்கள் அக்காலத்தில் நாம் இன்றிருப்பது போல் நவநாகரிகத்தினராகத்தான் இருந்தார்கள். அவர்களுக்கு முன்னோர்களிருந்தனர்; அம் முன்னோர்களுக்கும் முன்னோர்கள் இருந்தனர். நாமும் காலக்கிரமத்தில் முன்னோர்களாவோம்.

பழமைதான் மனித விவகாரங்களை ஆட்கொண்டு நடத்த வேண்டுமாயின் நாம் நமக்கு முன் வசித்தவர்களை முன்மாதிரியாகக் கொள்ளுவது போல நம்மை நமக்குப் பின் நூறு அல்லது ஆயிரம் ஆண்டுகளுக்கப்பால் தோன்றப் போகிறவர்களும் முன்மாதிரியாகக் கொள்ளலாமல்லவா?

பழமையில் சில பகுதிகள் எல்லாவற்றிற்கும் சான்றாக இருப்பதனால் எந்த உண்மையையும் அது ஸ்தாபித்து விடவில்லை. ஆதிகாலத்தில் மனித உரிமைகள் தெய்வீகமாக ஏற்பட்டவை என்று கருதப்பட்ட காலம் வரை ஒரு மேற்கோளுக்கு எதிராக மற்றொரு மேற்கோள் முட்ட வருவதைத்தான் வரலாற்றில் கண்டிருக்கிறோம். தெய்வீகமாகவே உரிமைகள் ஏற்பட்டன என்னும் கட்டத்தை அடைந்ததும் நம்முடைய ஆராய்ச்சி நின்றுவிடுகிறது. நம்முடைய அறிவுத் திறனும் அமைதியுற்று நிலைபெற்று நின்றுவிடுகிறது.

முதல் மனிதன் தோன்றிய காலத்திற்கு நூறு ஆண்டுகளுக்கப்பால் மனித உரிமைகள் யாவை என்பது பற்றி சர்ச்சை ஏற்பட்டிருந்தால் உரிமையின் தெய்வீகத் தோன்றலையே அவர்கள் குறிப்பிட்டிருப்பர். அதே தோற்றுவாயைத் தான் நாமும் நாடவேண்டும்.

மதத்தில் பல்வேறு வகுப்புகள் உள. அவைகளில் எதன் சார்பிலும் நின்று நான் வாதிக்க விரும்பவில்லை. ஆனால் கிறிஸ்துவின் வம்சாவளி, ஆதாமிலிருந்து ஆரம்பிக்கிறது என்பதை நாம் ஞாபகத்தில் வைக்கவேண்டும். அப்படியானல் மனித உரிமைகளுக்கு ஆதாரத்தை முதல் மனிதன் தோன்றியதிலிருந்து ஏன் ஆராய்ந்து பார்க்கலாகாது? இடையிடையே திடீரெனப் பல்வேறு போலி ஆட்சிகள் தோன்றி மனிதனின் உயர்வை மாய்க்கவே முற்பட்டு வந்திருக்கின்றன என்றுதான் நான் இக் கேள்விக்கு பதிலளிக்கிறேன்.

மனித வர்க்கத்தில் எந்தத் தலைமுறையினருக்காவது உலகம் உள்ள மட்டும் அது எப்படி ஆளப்பட வேண்டும் என்று திட்டமிட உரிமை உண்டென்றால் அந்த உரிமை மனித குலத்தின் முதல் தலைமுறையினருக்கு இருந்திருக்க வேண்டும். அவர்களுக்கே அந்த உரிமை இல்லை என்றால் பிற தலைமுறையினருக்கு அந்த அதிகாரமும் இருந்திருக்க முடியாது. அம்மாதிரி அதிகாரத்தை எந்தத் தலைமுறைக்கும் அளித்திருக்கவும் முடியாது.

மனிதர் யாவருக்கும் சம உரிமை உண்டு எனும் தெளிவு மிக்க தெய்வீகக் கொள்கை இப்பொழுது வாழும் மக்களுக்கு மட்டும் உரியதல்ல; பின்வரும் ஒவ்வொரு சந்ததிக்கும் உரியதாகும். ஏனெனில், ஒவ்வொரு தலைமுறைக்கும் முந்திய தலைமுறையினருக்கு இருந்த எல்லா உரிமைகளும் உண்டு, ஒவ்வொருவனுக்கும் தன் காலத்தில் பிறந்தவர்களுக்குள்ள உரிமைகள் யாவும் உண்டு எனும் விதிக்கொப்ப.

உலகம் தோன்றிய வரலாறுகள், அவை கர்ன பரம்பரை விவரணைகளானாலும் சரி, எழுத்தில் இடம் பெற்றதானாலும் சரி, அவை எவ்வளவோ விஷயங்களில் மாறுபட்டிருந்தாலும் ஒரு விஷயத்தில் ஒருமைப்பாடிருப்பதைக் காண்கிறோம். **மனித வர்க்கத்தின் ஒருமைப்பாட்டைப்பற்றி** மாறுபட்ட கருத்துக்கள் கிடையா. அதாவது ஒரு தலைமுறை அதற்கடுத்தத் தலைமுறையினரை சிருஷ்டிக்கும் முறைக்குப் பதிலாக ஆண்டவனே எல்லாத் தலைமுறை மனிதவர்க்கத்தினர்களையும் நேரடியாக சிருஷ்டி செய்திருந்தால், எப்படி மனிதர்கள் எல்லோரும் ஒரே தரத்தினராக வேற்றுமையின்றிக் காணப்படுவரோ, அதே போலத்தான், மனிதர்கள் எல்லாம் ஒரே தரத்தவர் என்று

கொள்ளவேண்டும். ஆகையினுல் எல்லோரும் சமமாகப் பிறந்தனர், எல்லோருக்கும் சம அளவில் இயற்கை உரிமைகள் உண்டு என்பதுதான் நான் கூறியதன் பொருள். ஆகையினுல், உலகில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையையும் கடவுளின் அருளால் உயிர் பெற்றதாகக் கருதவேண்டும். முதல் மனிதனுக்கு உலகம் எவ்வளவு புதுமையாயிருந்ததோ அதேமாதிரி பின்னர் பிறக்கும் ஒவ்வொருவருக்கும் உலகம் புதுமையாகத் தோன்றும். அதேபோல் இயற்கை உரிமையும், ஆதி மனிதனுக்குள்ளதுபோல் பின்வருபவர்களுக்கும் உண்டு.

சிருஷ்டி பற்றி **மோஸஸ்** என்பவர் கூறியுள்ள வரலாற்றை தெய்வீகத்தன்மை வாய்ந்தது என்று கொண்டாலும், அல்லது வெறும் சரித்திரம் எனக் கருதினுலும் **மனிதனுடைய ஒருமைப் பாட்டையும், சமத்துவத்தையும்** அது முழுதும் ஆதரிக்கிறது. அதன் வாசகத்தைத் தப்பர்த்தம் செய்துகொள்ளுவதற்கு இடமே இல்லே. ''மனிதனே நம்மைப் போலவே சிருஷ்டிப்போம் எனக் கடவுள் கூறினுர். கடவுளின் வடிவத்திலேயே மனிதனே **அவர்** சிருஷ்டித்தார். அவர்களே ஆணுகவும், பெண்ணுகவும் சிருஷ்டித்தார்''. ஆண்பால், பெண்பால் வித்தியாசம் தவிர, வேறு எவ்வித மாறுபாட்டிற்கும் இந்த வாசகத்தில் இடமில்லே. இது தெய்வீக ஆதாரமில்லா விட்டாலும், சரித்திர ஆதாரமாவதுடன் மனித சமத்துவம் என்பது நவீன கொள்கை யல்ல, சரித்திரத்திலேயே மிகப் பழமையானது.

உலகத்தில் தோன்றிய எல்லா மதங்களும் மனிதனேப்பற்றிய மட்டில் எல்லோரும் ஓர் குலம், ஏற்றத்தாழ்வு கிடையாது என்கிற அடிப்படையில் அமைந்திருக்கின்றன என்பது குறிப்பிடத்தக்கது. மனிதன் இவ்வுலகை விட்டு நீங்கியதும் மோட்சத்திலோ, நரகத்திலோ எங்கிருந்தாலும் அவர்களுக்குள் அவர்களுடைய நற்செயல்கள், அல்லது தீச்செயல்கள் தவிர, வேறு மாறுபாடுகள் கிடையா. அரசாங்கங்களின் சட்டங்களும் குற்றங்களுக்காகத் தண்டனே விதிக்கின்றனவே ஒழிய, மனிதனேப் பொறுத்தல்ல.

இது உண்மைகளில் சிறப்பானது. இதைக் கடைப்பிடிப்பது நன்மை பயக்கவல்லது. இந்த அடிப்படையில் மனிதனே மதிப்பிட்டால், அல்லது இந்த ரீதியில் மனிதன்

தன்னைத் தான் மதித்துக்கொள்ளும்படி கற்பிக்கப்பட்டால், அவன் ஆண்டவனுக்கோ, அல்லது தான் பிறந்த மனிதவர்க்கத்துக்கோ செய்யவேண்டிய கடமைகளை நன்கு உணர்ந்தவனாகிறான். மனிதன் தான் தோன்றிய வரலாற்றை மறப்பானானால், அல்லது **தனது பிறப்பையும், தனது குடும்பத்தையும்** மறப்பானானால் அவன் ஒழுங்கு மீறியவனாகிறான்.

ஐரோப்பாவின் எல்லாப் பகுதிகளிலுமுள்ள அரசாங்கங்கள் மனிதனை மனிதனாக மதிக்காமல் அவனுக்கும் அவனைப் படைத்த ஆண்டவனுக்கும் இடையே பல்வேறு தடங்கல்களை விதிப்பது பெருந் தீமைகளில் ஒன்றாகும். இதனால் மனிதன் கடவுளை அணுக முடியாமல் வெகுதூரத்தில் தள்ளப்பட்டவன்போல் ஆகிறான். போகும் வழியெல்லாம் அடைபட்டு ஒவ்வொரு தடையையும் நீக்கக் கட்டணம் கொடுத்துச் செல்லவேண்டிய நிலைமைபோல் ஆகிவிட்டது.

மனிதனுக்கும், அவனைப் படைத்தவனுக்குமிடையே **பர்க்** வகுத்திருக்கிற தடைகளின் பட்டியலை இங்கு தருகிறேன். தன்னை ஒரு தேவதூதர்மாதிரிக் கருதிக்கொண்டு அவர் கூறுகிறார்:

''கடவுளைக் கண்டு நாம் அஞ்சுகிறோம். அச்சத்துடன் அரசர்களை நோக்குகிறோம். பிரியத்துடன் பார்லிமெண்டுகளை மதிக்கிறோம். கடமை யுணர்ச்சியுடன் மாஜிஸ்டிரேட்டுகளை அணுகுகிறோம். மதத்தில் பற்றுகொண்டு மத குருக்களை வணங்குகிறோம். மரியாதையுடன் பிரபுக்களிடம் நடந்துகொள்ளுகிறோம். பெண்மணிகளிடத்தில் நடந்துகொள்ளும் பண்பைப் பற்றி **பர்க்** குறிப்பிடத் தவறிவிட்டார். ***பீட்டரைப்**பற்றியும் அவர் குறிப்பிடவில்லை.

கட்டணம் செலுத்திச் சீட்டு வாங்கி வாயில் வாயிலாக இடையறாது செல்லுவது மனிதனின் கடமையல்ல. அவன் கடமை தெளிவானது; எளியதும்கூட. அது இருவகைப்பட்டது. (1) கடவுளுக்கு மனிதன் செய்யும் கடமை—இதை ஒவ்வொருவரும் உணரவேண்டும். (2) அண்டையிலிருப்போரிடம் அன்பாக நடந்துகொள்ளும் கடமை. பிறர் தன்னை எப்படி பாவிக்க வேண்டும் என ஒருவன் விரும்புகிறானோ அவ்வாறே அவன்

---

* ஏசுநாதரின் சீடர்களில் ஒருவர் **பீட்டர்**. அவர் ஒரு ஞானி (Saint) என அழைக்கப்பட்டார்.

பிறரையும் பாவிக்கவேண்டும். அதிகாரப் பொறுப்பு யாருக்கு அளிக்கப்பட்டிருக்கிறதோ அவர்கள் நன்முறையில் நடந்து கொண்டால் அவர்களை மக்கள் மதிப்பார்கள். இல்லையேல் அவர்களை வெறுப்பார்கள். ஆனால், அதிகாரம் யாராலும் அளிக்கப்படாமல் அதை அநுமதியின்றி ஏற்பவர்களை அறிவாளி உலகம் லட்சியம் செய்யாது.

இதுவரையில் மனிதனின் இயற்கை உரிமைகளைப்பற்றி, அதுவும் ஓரளவே குறிப்பிட்டோம். இனி நாம் மனிதனின் சமூக உரிமைகளைப்பற்றிக் குறிப்பிட்டுவிட்டு அவை எவ்வாறு இயற்கை உரிமைகளிலிருந்து தோன்றின என்பதை விவரிப் போம். முன்பிருந்ததைவிட மோசமானவனாய் மாறுவதற்காக மனிதன் சமூகத்தில் பிரவேசிக்கவில்லை. தனக்கு ஏற்கனவே இருந்த உரிமைகளை உறுதி செய்துகொள்ளவே சமூகத்தில் சேர்ந்தான். அவனுடைய இயற்கை உரிமைகள்தான் அவனுடைய சமூக உரிமைகளின் அஸ்திவாரம். இந்த வித்தியா சத்தை மிகத் தெளிவாகவும், நுணுக்கமாகவும் அறிந்துகொள்ள இயற்கை, சமூக உரிமை முதலியவைகளின் பல்வேறு லட்சணங் களை ஆராய்ந்து அறிந்துகொள்ளவேண்டும்.

சில வார்த்தைகளில் இந்த லட்சணங்களை விளக்கிவிடலாம். மனிதன் இவ்வுலகில் தோன்றியதனாலேயே ஏற்பட்டவைதான் இயற்கை உரிமைகள். இந்த வகையில் அறிவுச் சுதந்திரம், சிந்தனைச் சுதந்திரம், தன் சௌகரியத்தினாலும், சுகவாழ்வி னாலும் பிறருடைய இயற்கை உரிமைகளைப் பாதிக்காத வகையில் வாழ்க்கை நடத்தும் உரிமைகளைக் குறிப்பிடலாம். சமூக உரிமைகள் என்பவை மனிதன் சமூகத்தில் ஓர் உறுப்பினனாக இருப்பதனால் ஏற்பட்டவை.

தனிப்பட்டவனிடம் ஏற்கனவே உள்ள இயற்கை உரிமை யின் அடிப்படையிலேயே ஒவ்வொரு சமூக உரிமையும் தோன்றி யிருக்கிறது. ஆனால், இந்த இயற்கை உரிமையைத் தனித்து நின்று யாரும் அநுபவிக்க முடியாததனால் அது சமூகக் கடமை யாக மாறிவிட்டது. நமது பத்திரத்துக்கும், பாதுகாப்புக்கு மான உரிமைகளே சமூக உரிமைகளாகும்.

இந்தச் சிறு விளக்கத்தின் மூலம் சமூக உறுப்பினனை பின்பும் மனிதன் அநுபவிக்கும் இயற்கை உரிமைகளுக்கும்,

சமூகத்தில் சேர்ந்ததனால் அவன் அதற்கு விட்டுக்கொடுக்க வேண்டிய இயற்கை உரிமைகளுக்கும் உள்ள வித்தியாசத்தை எளிதில் புரிந்துகொள்ளலாம்.

அவன் தன்னிடமே இருத்திக்கொள்ளும் இயற்கை உரிமைகளை அநுபவிக்கும் சக்தி அவனிடமே பூரணமாக இருக்கிறது. மேலே குறிப்பிட்டபடி அறிவுச் சுதந்திரம், சிந்தனைச் சுதந்திரம் முதலியவைகளை இதற்கு உதாரணங்களாகக் கூறலாம். இதிலிருந்து மத உரிமையும் இந்த ரகத்தைச் சேர்ந்ததொன்று என்பதை அறிந்துகொள்ளலாம்.

மனிதன் தன்னிடமே இருத்திக்கொள்ளாத உரிமைகளாவன: இந்த உரிமைகள் தனிப்பட்டவர்களிடம் பூரணமாக இருந்தாலும், அவைகளை அநுபவிக்கும் சக்தி குறைபாடுடையதா யிருக்கிறது. அவன் விரும்பியபடி அவைகளை அநுபவிக்க முடிவதில்லை. இயற்கை உரிமையை ஒட்டி மனிதன் தனது விவகாரங்களைத் தானே தீர்த்துக்கொள்ளலாம். அவனுடைய சிந்தனைச் சுதந்திரத்தைப் பொறுத்தமட்டில் அதை அவன் துறப்பதில்லை. ஆனால் இந்த உரிமை இருந்தென்ன பயன்? தன் விவகாரத்தில் தானே தீர்ப்புக் கூறலாம். ஆனால் அதை நிறைவேற்றிப் பரிகாரம் பெற அவனால் முடியுமா? ஆகையினால் இந்த உரிமையைச் சமூகத்தினிடம் ஒப்படைத்துவிட்டு, தானும் ஓர் உறுப்பினனாயுள்ள சமூகத்தின் உதவியை நாடுகிறான். தன் சக்தியைவிட சமூகத்தின் உதவி மேலானதெனக் கருதுகிறான். ஒவ்வொருவனும் சமூகத்தில் ஓர் உரிமையாளன். சமூகத்தின் முதலீட்டிலிருந்து பங்குபெற அவனுக்கு உரிமை உண்டு.

முன் கூறப்பட்டதிலிருந்து இரண்டு அல்லது மூன்று நிச்சயமான தீர்மானங்களைக் காணலாம்.

1. ஒவ்வொரு சமூக உரிமையும், இயற்கை உரிமையிலிருந்து தோன்றியது; அல்லது இயற்கை உரிமையைப் பரிவர்த்தனை செய்து சமூக உரிமை பெறப்பட்டது.

2. சமூக அதிகாரத்தின் பொருளைக் கூர்ந்து கவனித்தால் மனிதன் தனியாக அநுபவிக்க இயலாத, அவன் நோக்கங்கள் ஈடேற உதவாத இயற்கை உரிமைகளின் குவியல்

என்று கூறலாம். இதே உரிமைகள் ஒன்று சேர்ந்தால் எல்லோருக்கும் நலன் விளைவிக்கும்.

3. இயற்கை உரிமை தனிப்பட்டவனிடம் இருக்கையில் சக்தியற்றிருந்தாலும் அவை ஒன்று திரண்டால் தனிச் சக்தி ஏற்படுகிறது. இந்தச் சக்தியை, தனிப்பட்டவன் பூரணமாக உபயோகிக்கக்கூடிய உரிமையைப் பாதிக்கும் வகையில் பயன் படுத்தலாகாது.

இயற்கையில் தோன்றிய தனி மனிதன் எப்படி சமூகத்தில் சேர்ந்தான் என்றும், அவன் வைத்துக்கொண்டுள்ள உரிமைகள், சமூகத்தினிடம் ஒப்படைத்துள்ள உரிமைகளின் தன்மைகளையும் சுருக்கமாக விவரித்தோம். இந்தக் கொள்கைகளை இனி நாம் அரசாங்கங்களுக்குப் பொருத்திப் பார்ப்போம்.

(அரசாங்கத்தின் இயல்பு)

உலகத்தை ஒரு கண்ணோட்டமாகப் பார்த்தோமானால் சமூகத்திலிருந்து தோன்றிய அரசாங்கங்கள், உடன்பாட்டின் விளைவாக ஏற்பட்ட ஆட்சிகள் இவ்விரண்டிற்கும், பிற வகைகளில் எழுந்த ஆட்சிகளுக்குமுள்ள மாறுபாடுகளை மிக எளிதில் கண்டுகொள்ளலாம். மேலோட்டமாகப் பார்ப்பதனால் தெரிந்துகொள்ளுவதைவிடத் தெளிவாகப் புரிந்துகொள்ள வேண்டுமானால், எந்தெந்த மூலங்களிலிருந்து அரசாங்கங்கள் தோன்றின அல்லது நிறுவப்பட்டன என்பனவற்றை ஆராய வேண்டும்.

இந்த மூலங்களை மூவகையாகப் பிரிக்கலாம். (1) மூட நம்பிக்கை, (2) அதிகாரம், (3) சமூகத்தின் பொதுவான அக்கறைகளும், மனித வர்க்கத்தின் பொதுவான உரிமைகளும்.

மூட நம்பிக்கை அடிப்படையில் ஏற்பட்ட ஆட்சிகள் மதப் பூசாரிகளால் நடத்தப்பட்டவை; அதிகாரத்தினால் ஏற்பட்ட ஆட்சிகள் போர்களில் வெற்றிபெற்றதனால் தோன்றியவை; அறிவுத்தெளிவினால் ஏற்பட்டவை சமூக நலனின் விளைவாக அமைந்த ஆட்சிகள்.

தெய்வத் திருவுள்ளத்தை அறிந்து கூறுவதாகச் சொல்லும் பூசாரிகளின் மூலம் சில தந்திரசாலிகள் ஆண்டவனிடம் தொடர்பு கொண்டிருப்பதாகப் பாசாங்கு செய்து அவர்கள்

செயல்களால் உலகம் மூட நம்பிக்கையின் ஆட்சிக்குட்பட்டிருந்தது. இந்தப் போலி தேவதூதர்கள் செயலுக்கும், ஐரோப்பிய ராஜ குடும்ப மாளிகைகளின் பின்புறமாக நுழைந்து தாங்கள் பிரபுக்களின் நண்பர்கள் எனக் கூறி ஊரை ஏமாற்றுபவர்களுக்கும் எவ்வித வித்தியாசமுமில்லை. "சாமி வந்து" சொல்லியவைகளெல்லாம் சட்டமாக விளங்கின. இந்த மூட நம்பிக்கை நிலவிய வரையில் இதன் அடிப்படையில் தோன்றிய ஆட்சிகளும் நீடித்தன.

இதற்குப் பிறகு நாடு பிடிப்பவர்கள் தோன்றினர். உதாரணமாக பிரிட்டனைக் கைப்பற்றிய வெற்றி வீரன் முதலாவது வில்லியத்தைக் கூறலாம். வாளின் உதவி கொண்டே அதிகார அடிப்படையில் ஏற்பட்ட அரசுகளுக்கு வாள்தான் செங்கோல். இம்மாதிரி நிறுவப்பட்ட அரசாங்கங்கள் வாள் பலம் உள்ளமட்டும் நீடித்தன. எல்லா சக்திகளையும் பயன்படுத்திக்கொள்ளுவதற்காக இவர்கள் பலாத்காரத்துடன் மோசடியையும் சேர்த்துக்கொண்டு "தெய்வீக உரிமை" எனும் போர்வையைத் தங்கள் ஆட்சிக்குப் போர்த்துக் கொண்டனர். இதற்கும், போப்பாண்டவர் கிறிஸ்தவர்களின் ஆன்மீக உலக நலன்கள் யாவற்றிற்கும் தானே தலைவன் என்று பறைசாற்றிக் கூறியதற்கும் எவ்வித வித்தியாசமும் இல்லை. போப்பாண்டவர்களின் இந்த சாகசம் கிறிஸ்துவின் போதனைக்கே மாறானது. அர்ச் பீட்டரின் சாவியும் பொக்கிஷத்தின் சாவியும் ஒன்றுக்கொன்று உதவியாயிருந்தது. இந்தப் புதுமையைக் கண்ட மக்கள் குலம் ஏமாந்து இதைப் பூஜிக்கத் தொடங்கியது.

மனிதனின் இயல்பான கண்ணியத்தை நான் சிந்தித்துப் பார்க்கையில், மனிதப் பண்பின் கௌரவத்தைப் பற்றியும், மனிதனின் இன்பவாழ்க்கையைப் பற்றியும், நினைத்து உருகுகையில் (ஏனெனில் என் உணர்ச்சி மங்குவதை இயற்கை விரும்பவில்லை) மனித வர்க்கத்தைப் பலாத்காரத்தாலும் மோசடியாலும் ஆள முற்படுவதைக் கண்டு நான் ஆத்திரமடைகிறேன். இப்படி ஆளப்படுபவர்கள் அயோக்கியர்களா அல்லது முட்டாள்களா? இந்த மோசடிக்குட்பட்டிருப்பவர்கள் மீது எனக்கு வெறுப்பு ஏற்படுகிறது.

மூட நம்பிக்கை, போர் வெற்றி இவைகள் மூலம் ஏற்படும் ஆட்சிகளை விட்டு சமூகத்திலிருந்து தோன்றும் அரசாங்கங்களைப் பற்றி இனி ஆராய்வோம்.

ஆளுவோருக்கும் ஆளப்படுவோருக்கும் ஏற்பட்ட உடன்பாட்டினுல் அரசாங்கம் ஏற்பட்டது என்று கூறுவதன் மூலம் சுதந்திரக் கொள்கைகளை ஸ்தாபிப்பதில் நாம் முன்னேறி விட்டோம் எனக் கருதப்படுகிறது. இது உண்மையாயிருக்க முடியாது. ஏனெனில் இது காரணத்திற்கு முன் காரியத்திற்கு மதிப்பளிப்பதாகும். அரசாங்கங்கள் தோன்றுமுன் மனிதர்கள் இருந்திருக்க வேண்டுமாகையால் அரசாங்கங்களே இல்லாத காலம் இருந்திருக்க வேண்டும். ஆகையினுல் அந்தக் காலத்தில் உடன்பாடு செய்துகொள்ளுவதற்கு ஆளுவோர்கள் இருந்திருக்க முடியாது.

ஆகையினுல் தனிப்பட்டவர்கள் தங்களுக்குள்ள சொந்த ஆதிபத்திய உரிமையைக்கொண்டு ஒன்றுகூடி ஓர் அரசாங்கம் அமைப்பதாகத் தங்களுக்குள் உடன்பாடு செய்துகொண்டிருக்க வேண்டும். அரசாங்கம் தோன்ற இந்த ஒரே வழிதான் இருந்திருக்க வேண்டும். இந்த முறை மூலம்தான் அரசாங்கங்கள் நீடித்திருக்க உரிமை உண்டு.

அரசாங்கம் என்றால் என்ன, அது எப்படி அமைய வேண்டும் என்பதைத் தெளிவாக அறிந்துகொள்ள அது தோன்றிய ஆதிகாரணத்தை அறிய முற்பட வேண்டும்; இந்த ஆராய்ச்சி மூலம் அரசாங்கங்கள், ஒன்று மக்களிடமிருந்தோ அல்லது மக்கள் இஷ்டமின்றி அவர்கள் மீதோ தோன்றியிருக்க வேண்டும் என்பதை எளிதில் புரிந்துகொள்ளலாம். ஆனுல் பர்க் இதில் எவ்வித வித்தியாசமும் காணவில்லை.

அவர் எதையும் மூலத்திலிருந்து ஆராயவில்லை. ஆகையினுல் அவர் எல்லாவற்றையும் குழப்பி விடுகிறுர். ஆனுல் இங்கிலாந்து, பிரான்ஸ்—இரு நாடுகளின் அரசியலமைப்புகளையும் என்றுவது ஒரு நாள் ஒப்பிட்டு ஆராய உத்தேசித்திருப்பதாக அவர் அறிவிக்கிறுர்.

இவ் விஷயத்தை விவாதத்திற்குரியதாகச் செய்து அவர் சவால் விடுவதால் அதை ஏற்றுக்கொண்டு அவர் அநுஷ்

டித்த முறைப்படியே பதில் கூறப்போகிறேன். மும்முரமான வாதப் பிரதிவாதங்களிலிருந்துதான் உண்மை வெளிப்படுவது சாத்தியமாகிறது. இந்தப் பணியை மனமுவந்து நான் ஏற்றுக்கொள்ளுவதற்குக் காரணம், சமூகங்களிலிருந்து அரசாங்கம் தோன்றுவதுபற்றித் தொடர்ந்து ஆராய்வதற்கு எனக்கு சந்தர்ப்பம் கிடைக்கிறது என்பதுதான்.

ஆனால் 'அரசியலமைப்பு' என்றால் என்ன என்பதை முதலில் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியமாகும். அந்தப் பதத்தை நாம் பயன்படுத்தினால் மட்டும் போதாது. அதன் திட்டமான பொருள் என்ன என்பதையும் நிர்ணயிக்க வேண்டும்.

அரசியலமைப்பு வெறும் பெயர் மட்டுமல்ல, அது ஓர் உண்மை. அது லட்சிய அளவில் நின்று விடவில்லை, அது நிலைத்திருக்கிறது. அதைத் திட்டவட்டமாக உருவகப்படுத்தினாலொழிய அரசியலமைப்பு இருக்கிறதெனக் கூற முடியாது. அரசியலமைப்பு என்பது அரசாங்கம் ஏற்படுவதற்கு முன் தோன்றியது. அரசாங்கம் என்பது அரசியலமைப்பினால் தோற்றுவிக்கப்பட்டது. ஒரு நாட்டின் அரசியலமைப்பு அரசாங்கத்தால் தோற்றுவிக்கப்பட்டதல்ல, அரசாங்கத்தின் உறுப்பினராயுள்ள மக்களால் தோற்றுவிக்கப்பட்டதே யாகும்.

அரசியலமைப்பு எளிதில் குறிப்பிடக்கூடிய ஷரத்துக்கள் கொண்டது; அரசாங்கம் எந்தக் கொள்கைகளின் அடிப்படையில் அமையவேண்டும் எனும் கொள்கைகள் அதில் அடங்கியிருக்கும்; எந்த முறையில் அதை அமைக்க வேண்டும், அதன் அதிகாரங்கள் என்ன, தேர்தல் முறை, பார்லிமெண்டின் ஆயுட் காலம், சட்டசபைகளைப் பார்லிமெண்ட் என அழைக்கலாமா அல்லது அவைகளுக்கு வேறு பெயர் சூட்டவேண்டுமா, அரசாங்கத்தில் நிர்வாகப் பகுதியின் அதிகாரங்கள் என்ன, கடைசியாக சிவில் ஆட்சி அமைப்பதற்கான விதிகள், எந்தக் கொள்கைகள் அதைக் கட்டுப்படுத்தும் அல்லது அது எவ்விதம் செயல் புரியவேண்டும்—எல்லாம் அரசியலமைப்பில் அடங்கியிருக்கும்.

அரசியலமைப்புக்கும் அரசாங்கத்திற்கும் உள்ள உறவு, நிறுவப்பட்ட அரசாங்கத்திற்கும் நீதிஸ்தலத்திற்கும் உள்ள

உறவைப் போன்றது. நீதிமன்றங்கள் சட்டங்கள் இயற்றுவதில்லை; அவைகளால் சட்டங்களை மாற்றவும் முடியாது; இயற்றப்பட்ட சட்டங்களை ஒட்டியே அவை நீதி வழங்கும். அது போலவே அரசாங்கமும் அரசியலமைப்புக்குக் கட்டுப்பட்டது.

பிரபு வர்க்கம் பற்றி

பிரஞ்சு அரசியலமைப்பு ''பட்டங்களே கூடாது'' என விதித்திருக்கிறது. இதன் விளைவாக சில நாடுகளில் 'பிரபுக்கள்' எனப் பெயர் பூண்ட வர்க்கம் இனி இல்லை என்றாகி விட்டது. 'பிரபு' 'மனிதன்' பதவிக்கு உயர்த்தப்பட்டான்.

பட்டங்களெல்லாம் பரிகாசப் பெயர்கள்; ஒவ்வொரு பரிகாசப் பெயரும் பட்டமாகும். இந்தப் பட்டங்கள் இயல்பாகவே தீமையானவையல்ல. மனிதப் பண்பில் அது ஒருவிதத் தற்பெருமை எண்ணத்தைப் புகுத்துவதால் அது குணத்தைப் பாழ்படுத்தி விடுகிறது. இந்தப் பட்டங்கள் உன்னதமான விஷயங்களில் மனிதனை அற்பனாக்குகின்றன. அற்ப விஷயங்களில்கூட பெண்களைப் போல் நடந்துகொள்ளச் செய்கிறது. பட்டம் பெற்றவர்கள் பதக்கம் தொங்குவதற்கான 'பட்டை'யைப் பற்றி பெண்கள் மாதிரி பெருமிதம் அடைகின்றனர். பழங்கால எழுத்தாளர் ஒருவர் (அர்ச் பால்) ''நான் குழந்தையா யிருக்கும்பொழுது குழந்தைகள் போல் சிந்தித்தேன். ஆனால் நான் மனிதனாக வளர்ந்த பிறகு குழந்தைத்தன்மையை உதறித் தள்ளிவிட்டேன்'' எனக் கூறியுள்ளார்.

உண்மையைக் கூறவேண்டுமானால் பிரான்ஸ் அடைந்த உயர் நிலையின் விளைவாகத்தான் பட்டங்கள் ஒழிந்தன. 'கவுண்ட்', 'டியூக்' எனும் குழந்தை உடைகள் பிடிப்பாயிருந்ததனால் பிரஞ்சு மக்கள் — மனிதருக்கான உடை தரிக்கத் தொடங்கிவிட்டனர். இதன் மூலம் பிரான்ஸ் கீழ்நிலைக்கு வரவில்லை; உயர் நிலையே அடைந்து விட்டது. மனிதனை உயர்த்துவதற்காக அது குள்ளர்களை அடக்கி விட்டது. அர்த்தமற்ற, அற்பமான 'டியூக்', 'கவுண்ட்', 'ஏர்ல்' போன்ற பட்டப்

பெயர்கள் யாருக்கும் திருப்தியளிக்கவில்லை. இந்தப் பட்டங்களைப் பெற்றிருந்தவர்கள்கூட இந்த அர்த்தமற்றப் பகட்டுக்களை உதறித் தள்ளிவிட்டனர், குழந்தைப் பருவம் நீங்கியவர்கள் விளையாட்டுச் சாமான்களை விலக்குவது போல.

மனிதனுடைய உண்மையான மனம் தனது வாழ்விடமாகிய சமூகத்தையே நாடி நிற்கிறது. சமூகத் தொடர்புக்குத் தடையாயுள்ளவைகளை அது வெறுக்கிறது. பட்டங்கள் மந்திரவாதியின் கோல் போன்று மனிதனின் ஆதிக்க எல்லையைச் சுருக்கிவிடுகின்றன. பட்டம் பெற்றவன் ஒரு வார்த்தைக்கு அடிமையாயிருந்து பொறாமைப்படத்தக்க மனித வாழ்வைப் பார்த்து ஏங்குகிறான்.

ஆகையினால் பிரான்ஸில் பட்டங்கள் ரத்தானது பற்றி ஆச்சரியப்படுவதற்கு என்ன இருக்கிறது? பட்டங்கள் பிற நாடுகளில் இன்னும் நிலை பெற்றிருப்பதல்லவா ஆச்சரியப்பட வேண்டிய விஷயம். இந்தப் பட்டங்கள் என்ன? அவைகளின் மதிப்பு என்ன? அதற்கு என்ன விலை கொடுக்கலாம்? நாம் 'நீதிபதி' அல்லது 'தளபதி'யைப் பற்றிக் குறிப்பிடுகையில், அந்தப் பதவிகளையும்; அவைகளுக்கேற்ற குண விசேஷத்தையும் மனத்தில் சிந்தித்துப் பார்க்கிறோம்; நீதிபதியின் ஆழ்ந்த அறிவைப் பற்றியும், தளபதியின் தீரத்தைப் பற்றியும் நினைக்கிறோம்.

முதல் மனிதனாகிய ஆதாமின் அகராதியைத் துருவிப் பார்த்தாலும் அதில் 'டியூக்', 'கவுண்ட்' எனும் பெயர்கள் காணப்படவில்லை. அந்தச் சொற்களுக்கு எந்தப் பொருளும் காண முடியவில்லை. அந்த வார்த்தைகளுக்கு வலிமையா, பலஹீனமா, அறிவா, மடத்தனமா, குழந்தையா, மனிதனா, குதிரையா அல்லது அதைச் சவாரி செய்பவனா, என்ன பொருள் என்பது விளங்காப் புதிராகவே இருக்கிறது. எவ்விதப் பொருளும் இல்லாத, விவரிக்க இயலாத ஒன்றுக்கு நாம் எப்படி மதிப்பளிக்க முடியும்? குதிரையும் மனித உருவமும் ஒன்று சேர்ந்த குரூர விலங்குக்கும், தேவர்களுக்கும் தேவகணங்களுக்கும் மனிதனின் கற்பனைத்திறன் உருக்கொடுத்திருக்கிறது. ஆனால் இந்தப் பட்டங்கள் எந்தவிதமான கற்பனைக்கும் எட்டவில்லை.

இது மட்டுமல்ல. நாடு முழுதும் இந்தப் பட்டங்களை மதிக்காதிருக்குமானால் அவைகளின் மதிப்பு மங்கி, பட்டம் பெற்றவர்களை யாரும் லட்சியம் செய்ய மாட்டார்கள். மக்களுடைய அபிப்பிராயம் தான் அவர்களை உயர்த்துவதும் தாழ்த்துவதும். பட்டங்களை ரத்து செய்யவேண்டிய அவசியமே இல்லை. ஏனெனில் சமூகம் அவைகளை அலட்சியம் செய்தால் அவைகள் தாமாகவே விடைபெற்றுச் சென்று விடும். பட்டம் என்றால் ஏதோ மகத்தான கௌரவம் எனும் எண்ணம் ஐரோப்பாவில் ஒவ்வொரு பகுதியிலும் மங்கி வருகிறது. அறிவின் ஆதிக்கம் உயர உயர பட்டங்களின் மதிப்பு விரைவில் மடிந்துவிடும்.

இப்பொழுது மதிப்பு மிக்க பிரபுக்கள் எனக் கருதப்படு பவர்களைவிட அந்த வர்க்கத்தில் கீழ்ப்படியிலுள்ளவர்கள் மிகுதியாக மதிக்கப்பட்ட காலம் இருந்தது. தற்காலப் பிரபுவை விடப் போர்த் திறனைக் காட்டுவதற்காகக் கிறிஸ்தவ நாடுகளெல் லாம் அலைந்தவர்களை உயர்வாக மதித்த காலமும் உண்டு. இந்த அசட்டுத்தனமான எண்ணத்தை மக்கள் கண்டு கேலிச் சிரிப்புச் சிரித்தே அது மறைந்து விட்டது. இம்மாதிரியே பட்டங்களுக்குள்ள மதிப்பும் மறைந்துவிடும்.

சமூகத்தில் மதிப்பும் மரியாதையும் பெற பிரஞ்சு தேசாபி மானிகள் ஒரு புது வழியைச் சீக்கிரத்தில் காணவேண்டும் என்பதை உணர்ந்துவிட்டனர். பழைய வழி மங்கி மடிந்து விட்டது. கானல் நீர் போன்ற பட்டங்களுக்குப் பதிலாக நற்குண நற்பண்பே மதிப்பிற்கு அடிப்படையாகும். அவர்கள் பட்டங் களை அறிவுக் கோயிலுக்குக் காணிக்கையாகத் தீயிட்டுக் கொளுத்த முன்வந்து விட்டனர்.

பிரபுத்துவத்தினால் தீமையொன்றும் விளையாதென்றால் தேசீய சபை செய்தமாதிரி அதைச் சட்ட பூர்வமாக ரத்து செய்யவேண்டிய அவசியமிருக்காது. சபையின் இந்தச் செய்கையிலிருந்து பிரபுத்துவத்தின் தன்மை, லட்சணங்கள் முதலியவற்றை ஆராயவேண்டிய அவசியமேற்படுகிறது.

போர்மூலம் வெற்றிபெற்ற அரசாங்கங்களால் தான் பிரபுத்துவம் ஏற்பட்டது. ராணுவ அடிப்படையில் அமைந்த அரசாங்கங்களுக்கு ராணுவ உதவி செய்வதற்காகவே ஆதியில்

பிரபுக்கள் தோற்றுவிக்கப்பட்டனர். இந்த ஆதிகாரணத்திற்கு உதவி புரிவதற்காக இவர்களுக்குள் வம்ச பரம்பரை வாரிசு உரிமை ஏற்படுத்தப்பட்டு அவர்கள் குடும்பத்தில் மூத்தவன் தவிர பிற குழந்தைகளுக்குத் தந்தை சொத்தில் பாத்தியம் கிடையாது என்று விதி செய்யப்பட்டது. இவ்வாருகவே மூத்த மகனுக்கு மட்டுமே சொத்துரிமை எனும் சட்டம் ஏற்பட்டது.

இந்தச் சட்டத்தின் மூலம் பிரபுத்துவத்தின் இயல்பையும் லட்சணங்களையும் நாம் அறிந்துகொள்ளுகிருேம். இந்தச் சட்டம் இயற்கை, நீதி யாவற்றிற்கும் மாருனது; இது ஒழிந்தால் தான் இயற்கை திருப்தியடையும். குடும்பத்தார் யாவருக்கும் நீதி வழங்கிஞல் பிரபுத்துவம் வீழ்ந்துவிடும். ஆறு குழந்தைகளுள்ள ஒரு குடும்பத்தில் மூத்தவனுக்கு மட்டும் சொத்துரிமை எனும் சட்டத்தின் மூலம் ஐந்துபேர் நிராதரவாக்கப்படுகின்றனர். பிரபுத்துவ உரிமை கொண்டாட ஒரு குழந்தைக்கு மட்டுமே வாய்ப்பளிக்கப்படுகிறது. மற்றக் குழந்தைகள் பிறந்ததும் விழுங்கப்பட்டு விடுகின்றன. நரமாமிச பட்சணிகளுக்கு இரையாக அவைகள் எறியப்படுகின்றன. இந்த விருந்துபசாரத்திற்குப் பெற்ற தந்தையே ஏற்பாடு செய்கிருர்.

மனிதனின் இயற்கைக்கு மாருன தன்மைகள் சமூகத்தை அநேகமாக பாதிப்பதுபோல் இந்தச் சட்டமும் சமூகத்தைப் பாதிக்கிறது. பிரபுத்துவம் தனதல்ல என்று துறந்து கைவிட்ட குழந்தைகள் பொதுவாக சத்திரம் சாவடிகளை நாடி வாழும் அநாதைகளாகிருர்கள். இதற்கான அதிகப்படிச் செலவைப் பொதுமக்கள் பொறுத்துக்கொள்ள வேண்டி யிருக்கிறது. அரசாங்கத்தில் அநாவசியமான பதவிகள் இவர்களுக்காகச் சிருஷ்டிக்கப்பட்டு அதற்கான அதிகப்படிச் செலவையும்கூட பொதுமக்கள் ஏற்கவேண்டியிருக்கிறது.

தாயும், தந்தையும் இந்த இளைய குழந்தைகளைப் பற்றி எம்மாதிரி எண்ணம் கொண்டிருப்பர்? இயற்கை முறைப்படி அவர்கள் இவர்களுடைய குழந்தைகள்; திருமண முறைப்படி இவர்கள் பெற்ருேர்களின் வாரிசுகள்; பிரபுத்துவ முறைப்படி இவர்கள் விபசாரிகளின் குழந்தைகள், அநாதைகள். ஒரு வகையில் இவர்கள் பெற்ருேர்களின் தசையும் ரத்தமுமாவர்; மற்ற வகையில் இவர்களுக்கும் பெற்ருேர்

களுக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. ஆகையினால் பெற்றோர்களையும் குழந்தைகளையும் ஒன்று சேர்த்து, ஒருவருக்கொருவர் உறவு பூண்டு, சமூகத்தின் திலகங்களாகத் திகழச் செய்யவே பிரபுத்துவம் எனும் குரூர விலங்கினத்தைப் பூண்டோடு அழிக்க வேண்டி பிரஞ்சு அரசியலமைப்பு மூத்த மகன் சொத்துரிமைச் சட்டத்தை ரத்து செய்து விட்டது. இங்கே இருக்கிறது அந்த பூதம். திரு. பர்க் விரும்பினால் அதன் கரும சுலோகத்தை எழுதலாம்.

இதுவரை பிரபுத்துவத்தை முக்கியமாக ஒரு கோணத்திலிருந்து ஆராய்ந்தோம். இனி மற்றொரு கோணத்திலிருந்து அதைக் கவனிக்க வேண்டும். ஆனால் அதை முன்புறம் பார்த்தாலும், பின்புறம் பார்த்தாலும், பக்கவாட்டில் பார்த்தாலும், எப்படிப் பார்த்தாலும், குடும்ப முறையில் பார்த்தாலும், பொது நல நோக்கிலிருந்து பார்த்தாலும்அது கொடிய பூதம்தான்.

மற்ற நாடுகளிலிருப்பதைவிடப் பிரான்ஸில் பிரபுத்துவத்திற்கு ஒரு லட்சணம் குறைவாயிருக்கிறது. அங்கே பரம்பரை சட்டசபையினருக்கு வகை செய்யவில்லை. ஆங்கிலப் பிரபுக்கள் சபையை *லபாயத் வர்ணித்துள்ள மாதிரி பிரான்ஸில் ''பிரபுக்கள் அடங்கிய ஸ்தாபனம்'' என்னும் ரீதியில் அமைக்கப்படவில்லை. பிரிட்டன் மாதிரி பிரான்ஸில் பிரபுக்கள் அடங்கிய சட்டசபை அமைக்காததற்குக் காரணத்தை ஆராய்வோம்.

1. ஏற்கனவே கூறியபடி பிரபுத்துவம் குடும்பக் கொடுங்கோன்மையாலும், அநீதியாலும் உயிர்வாழ்கிறது.

2. ஒரு நாட்டுக்குச் சட்டமியற்றும் உரிமை பெறப் பிரபுக்கள் எவ்விதத்திலும் தகுதியற்றவர்கள். சம நீதி

* மார்க்விஸ் லபாயத் (Marquis de Lafayette) ஒரு பிரஞ்சுக்காரர். அமெரிக்கர்கள் அவரை மிகவும் புகழ்ந்து போற்றுகின்றனர். 1777-ஆம் ஆண்டு அவர் அமெரிக்கப் புரட்சியில் பங்கு கொள்ள அந் நாட்டிற்கு வந்தார். குடியேற்ற நாடுகளுக்கு அவர் உயர்ந்த சேவை செய்தார். வாஷிங்டன் அவர்களுடன் நட்பு கொண்டவர். அவருடைய கருத்துக்கள் பல இவரை ஆட்கொண்டன. அவர் பிரான்ஸுக்குத் திரும்பிச் சென்றபின் பிரஞ்சுப் புரட்சியில் பங்கெடுத்துக் கொண்டார். தாமஸ் பெய்னுக்கு அவரிடம் மிகுந்த மதிப்பு. ''மனித உரிமைகளி''ன் இரண்டாம் பாகத்தை அவருக்கு சமர்ப்பணமாக அளித்தார்.

வழங்குவது பற்றிய அவர்கள் கருத்து அடிப்படையிலேயே மாசுபடிந்தது. தங்களுக்கு இளைய சகோதர சகோதரிகள், மற்ற உறவினர்கள் யாவரையும் காலால் மிதிப்பது என்பதி லேயே அவர்கள் வாழ்க்கை தொடங்குகிறது. இது விஷய மாக இந்த அநீதிகள் அவர்களுக்குக் கற்பிக்கப்படுகின்றன. குடும்பத்தின் சொத்தையெல்லாம் தான் எடுத்துக்கொண்டு பிறருக்குத் தானம் கொடுப்பதுபோல் சொற்பத்தை விநி யோகிக்கத் துணிந்தவன் என்ன நீதி உணர்வோடு, மதிப் போடு ஒரு சட்டசபையில் நுழைய முடியும்?

3. பரம்பரை நீதிபதிகள், பரம்பரை ஜூரிகள், பரம் பரைக் கணித நிபுணர்கள், பரம்பரை ஞானி, பரம்பரை சமஸ்தானக் கவி என்பன போன்ற கேலிக்கூத்தைப் போலவே தான் பரம்பரை சட்டசபை உறுப்பினர் எனும் கருத்தும்.

4. யாருக்கும் பொறுப்பு வகிக்காத ஓர் இனத்தவர் யாருடைய நம்பிக்கைக்கும் பாத்திரமற்றவர்கள்.

5. வெற்றியின் விளைவாக ஏற்பட்ட அரசாங்கத்தின ரின் அநாகரிகக் கொள்கையில் இது ஒன்று; மனிதனை மனிதனின் உடைமையாகக் கருதுவதும், அவனை ஆளும் உரிமை யைக் கோருவதும் இழிவானது.

6. பிரபுவர்க்கம் மனித இனத்தையே படுகுழியில் தள்ளவல்லது. ஒரு சிறு கூட்டத்தார் பெரும்பாலான மக்க ளிடமிருந்து பிரிந்து வாழ்ந்து தங்களுக்குள்ளே திருமணம் புரிந்துகொண்டால், அந்தச் சிறு கூட்டம் தாழ்வுற்றுச் சரிந்து விடும் என்பதை யூதர்களிடம் கண்டோம். இயற்கையின் போக்கும் இந்த உண்மையை ஆதரிக்கிறது.

எதற்காக இந்தப் பரம்பரை உரிமை ஏற்பட்டதோ அந்த நோக்கம் நிறைவேறாமல் மனிதனின் உன்னத அம் சங்களையெல்லாம் இந்த முறை பாழ்படுத்தி விடுகிறது. பர்க் பிரபுத்துவத்தைப் பற்றிப் பேசுகிறார்; அது என்ன என்பதை அவரே காட்டட்டும். ஜனநாயக அடிப்படையி லிருந்துதான் உலகம் போற்றும் உத்தமர்கள் தோன்றி யிருக்கின்றனர். ஜனநாயகம் கண்ட அளவு பெரியோர் களைப் பிரபுவர்க்கம் தோற்றுவிக்க முடியவில்லை.

இயற்கையாக மேம்பட்டவன் முன் செயற்கைப் பிரபு ஒடுங்கி நிற்கிறான். பிரபுக்கள் வர்க்கத்தில் தப்பித்தவறி ஒரு மகான் தோன்றிவிட்டால், அவன் அந்த வர்க்கத்தையே வெறுக்கிறான்.

மத சுதந்திரம் பற்றி

சகிப்புத்தன்மையை மட்டுமல்ல, பிறவற்றை வெறுக்கும் வழியையும் பிரஞ்சு அரசியலமைப்பு ரத்து செய்துவிட்டு மனச்சாட்சியின் ஆதிக்கத்தை நிலைநாட்டி விட்டது.

சகிப்புத்தன்மை என்பது வெறுப்பின் எதிர்மறை யல்ல, அதனுடைய போலி. ஆனால் இரண்டும் கொடுமைகளே. ஒன்று மனச்சாட்சி சுதந்திரத்தைப் பறிக்கிறது. மற்றொன்று அதை அளிக்கிறது. ஒன்று தீவட்டியின் உதவியுடன் ஆளும் மதகுருவான போப்பாண்டவர், மற்றொன்று பாப மன்னிப்புக் களை காசுக்கு விற்கும் போப்பாண்டவர். முதலது மதமும் அரசும், பிந்தியது மதமும் வர்த்தகமும்.

ஆனால் சகிப்புத்தன்மையைச் சற்று தெளிவான கோணத்திலிருந்து பார்க்கலாம். மனிதன் தன்னைத்தானே வணங்குபவனல்ல; தன்னைப் படைத்தவனை வணங்குபவன். அவன் கோரும் மனச்சாட்சி சுதந்திரம் தனது சுயநல அபிவிருத்திக்காக அல்ல, தனது ஆண்டவனின் திருப்பணிக் காக. இதில் இருவித வழிபாட்டைக் காணலாம். வழிபடும் மனிதன், வழிபாட்டுக்குரிய அழிவற்ற பரம்பொருள்.

ஆகையால் சகிப்புத்தன்மை என்பது மனிதனுக்கு மனிதனோ, ஓர் ஆலயத்திற்கும் மற்றோர் ஆலயத்திற்குமோ, ஒரே மதத்தில் பல பெயர் பூண்ட சமயப் பிரிவுகளுக்குள்ளோ காட்டப்படும் உறவு முறையல்ல; வழிபடுபவனுக்கும், வழி பாட்டிற்குரியவனுக்கும் உள்ள ஓர் உறவு முறை. மனிதனுக்கு தன் இஷ்டப்படி வழிபடும் உரிமையளிப்பதனால் ஆண்டவன் தனக்குரிய காணிக்கைகளைப் பெற அநுமதிக்கப்பட்டிருக்கிறான் என்கிறது. ஆண்டவனுக்கு அநுமதியளிப்பதெனில் இதில் அகந்தையும், அவமதிப்பும், அதிகார வெறியும் அடங்கியிருக் கின்றன.

"ஒரு யூதர் அல்லது துருக்கியரின் வழிபாட்டை ஆண்ட வன் ஏற்றுக்கொள்ள அநுமதித்தோ அல்லது மறுத்தோ"

பார்லிமெண்டில் ஒரு மசோதா கொணர்ந்தால் எல்லோரும் வெகுண்டுபோய் ஆண்டவனை இவ்வாறு அவமதிப்பதா என்று மனம் குமைந்து போவார்கள். இதைக் கேட்டு சபையினர் அமளி செய்து கூக்குரலிடுவர். சகிப்புத்தன்மையின் உண்மை ஸ்வரூபம் அப்போது வெளிப்பட்டுவிடும். ஒரு மனி தன் தானே இந்தச் சட்டத்தை இயற்றுகிறான் என்பதனால் அவனுடைய அகம் பாவத்தைக் குறைவாக மதிப்பிட முடியாது. ஏனெனில், வழி படுபவனையும், வழிபாட்டுக்குரியதையும் பிரிக்க முடியாது. (மனிதனுக்கு வழிபட அமைதி அளிப்பது ஆண்டவனுக்கு அநுமதியளிப்பதற்கொப்பாகும்).

மடிந்து மண்ணாகப் போகிற நீ யார் பிறரை அநுமதிப் பதற்கு? அரசன், மத குரு, மத ஸ்தாபனம், அரசாங்கம், பார்லி மெண்ட் இவைகளில் எப்பெயர் சூட்டிக்கொண்டாலும் மனித னின் ஆத்மாவுக்கும் ஆண்டவனுக்கும் இடையே குறுக்கிட நீ யார் தூசுக்குச் சமானமானவன்? உன் வேலைகளைப் பார்த்துக் கொண்டு சும்மாக் கிட. நீ நம்புவதை அவன் நம்பாவிட்டால், அவன் நம்புவதை நீ நம்பவில்லை என்றாகிறது. உங்கள் இருவரில் யார் சரி, யார் தவறு என்பதை இவ்வுலகில் யாரும் திட்டம் செய்து தீர்ப்புக் கூற முடியாது.

உலகத்திலே பல மதங்கள் இருக்கின்றன. ஒவ்வொரு மதத்தினரும் தத்தம் மதத்தைப்பற்றித் தீர்ப்புக் கூறுவதா யிருந்தால் உலகத்தில் தவறான மதமே இருக்க முடியாது. ஆனால் ஒவ்வொருவரும் பிற மதங்களைப்பற்றித் தீர்ப்புக் கூறிவிட்டால் சரியான மதமும் இருக்க முடியாது. ஆகை யினால் உலகமெல்லாம் சரியான வழியில் செல்லுகிறது அல்லது உலகமெல்லாம் தப்பான பாதையில் போகிறது என்றாகிவிடும்.

மதங்களின் பல்வேறு பெயர்களை மறந்து மதத்தை மட்டும் நோக்கினால், வணக்கத்திற்குரிய பரம்பொருளை மனித வர்க்கம் நாடிச் செல்லுவது என்று கொள்ளவேண்டும்; **மனிதன் தனது உள்ளத்தின் மகிழ்ச்சியை ஆண்டவனிடம் சமர்ப் பிக்கிறான்;** இந்த உள மகிழ்ச்சியானது உலகத்துக் கனிகள் மாதிரி மாறுபட்டிருந்தாலும் நன்றியுடன் செலுத்தும் யார் காணிக்கையும் ஏற்றுக்கொள்ளப்படும்.

டர்ஹாம், அல்லது விஞ்செஸ்டர் பாதிரியோ அல்லது பிரபுக்களுக்குச் சமய போதனை செய்யும் பெரிய பாதிரியோ தங்களுக்குக் கோதுமைக் கதிர்கள் காணிக்கையாகக் வந்தால், எங்களுக்கு வைக்கோல்தான் வேண்டுமெனக் கூறி, கோதுமைக் கதிர்களை மறுத்துவிட மாட்டார்கள். பன்றியைக் காணிக்கையாகக் கொடுத்தாலும் ஏற்றுக்கொள்ளுவார்கள். ஆனால் இவர்களே சட்டப்படி மத போதனைப் பணிபுரியும் உத்தியோகம் வகித்தால் ஆண்டவனுக்கு மனிதர்கள் இஷ்டப்படி காணிக்கை செலுத்த அநுமதிக்க மாட்டார்கள்.

பர்க் ''சர்ச்சும் ராஜாங்கமும்'' என்றே ஓயாமல் பல்லவி பாடிக்கொண்டிருக்கிறார். அவர் குறிப்பாக எந்த மதாலயத்தையோ அல்லது ராஜாங்கத்தையோ குறிப்பிடவில்லை. அவர் எல்லா ஆலயங்களையும், ராஜாங்கங்களையும் பற்றியே பேசுகிறார். எல்லா நாடுகளிலும் மத ஸ்தாபனமும், அரசாங்கமும் ஒன்றுபட்டுத் துலங்க வேண்டும் என்பதே அவர் குறிக்கோள். பிரான்ஸில் இவருடைய கோட்பாட்டின்படி நடைபெறவில்லை என்றே பிரஞ்சு தேசீய சபையை அவர் தாக்குகிறார். இதுபற்றி சற்று நாம் சிந்தனை செய்து பார்ப்போம்.

எல்லா மதங்களும் இயல்பாகவே நயமாகவும், அன்பும் பரந்த நோக்கும் உள்ளவைகளாகவும், அற அடிப்படையிலும் இயங்குகின்றன. பிறரைத் துன்புறுத்தி, கொடூரப்படுத்தி, தீமை விளைவித்து, துன்மார்க்க வழிகளில் அவர்கள் மதமாற்றம் செய்திருக்க முடியாது. மற்ற எல்லா உலக விஷயங்களைப் போலவே மதங்களுக்கும் ஆரம்பதசை உண்டு. அதிலிருந்து படிப்படியாகப் பிறரிடம் அவர்கள் அறிவுக்கு ஒப்பப் பேசி, வசியப்படுத்தித் தம் வழிக்கு மாற்றி வந்தனர். அப்படியிருக்கையில், அவர்களுடைய பழைய நயமான சுபாவத்தை விட்டு எப்படிப் பிறரைக் கண்டால் எரிந்துவிழும் தன்மை அடைந்திருக்க முடியும்?

பர்க் சிபார்சு செய்யும் ஒருமைப்பாட்டினால்தான் இந்த அசுரத்தனம் வந்திருக்கவேண்டும். சர்ச்சையும், ராஜ்யத்தையும் ஒன்றாகப் பிணைத்து சந்தானவிருத்தி சக்தியில்லாத, அழித்தலிலேயே ஆர்வங்கொண்ட 'சட்டபூர்வமாக ஸ்தாபிக்கப்பட்ட

சர்ச்' எனும் கோவேறு கழுதை போன்ற பிராணியைச் சிருஷ்டித்து விட்டார். இம்மாதிரி விசித்திரப் பிராணி, தான் தோன்றிய காலத்திலேயே தன் பெற்றோர் யார் என்பதை அறியாமல் அவர்களை உதைத்து அழித்துவிடுகிறது.

ஸ்பெயினில் மாறுபட்ட மதக் கருத்துள்ளவர்களைச் சித்திர வதை செய்வது என்பது மதப்பற்றின் விளைவால் எழுந்ததல்ல; சர்ச்சும் அரசாங்கமும் பிணைந்ததனால் ஏற்பட்ட மேற்கூறிய கோவேறு கழுதையின் திருவிளையாடல்: 1400-இலிருந்து 1558-வரையில் லண்டனுக்கருகில் **ஸ்மித்பீல்டில்** புரோடஸ்டண்டுகள் சுட்டெரிக்கப்பட்டதும் இதே விசித்திரச் சேர்க்கையினால் விளைந்ததுதான். இதே கோரப் பிராணியின் மாற்றுருவம்தான் குவேக்கர்களையும், இங்கிலாந்தின் சட்டப்படி அமைக்கப்பட்ட மதத்திற்கு மாறுபட்ட கருத்துள்ளவர்கள் யாவரையும் பிரிட்டிஷ் மக்களால் விளையும் துன்பம் பொறுக்காமல் அமெரிக்காவிற்கு விரட்டிற்று.

மாறுபட்ட கருத்துள்ளவர்களைத் துன்புறுத்துவதென்பது எந்த மதத்தின் லட்சணமுமல்ல. ஆனால் சட்டபூர்வமாக அமைக்கப்பட்ட எல்லா மதங்களுக்கும் இந்தக் குரூரத்தன்மை உண்டு. மதத்திற்குள்ள சட்ட அடிப்படையை நீக்கிவிட்டால், எல்லா மதங்களும் தங்களது சாத்வீகத்தன்மையை மீண்டும் பெற்றுவிடும். அமெரிக்காவில் ஒரு கத்தோலிக்கப் பாதிரியார் சிறந்த பிரஜையாக, நற்குணம் படைத்தவராக, அண்டையிலிருப்பவரிடம் அன்பு பூண்டவரா யிருப்பார். கிறிஸ்தவர்களில் வேறு வகுப்புப் பாதிரியாரும் இந்த சிறப்புகள் உடையவரா யிருப்பார். இந்த சிறப்பு அந்த மத போதகர்களைப் பொறுத்தது மட்டுமல்ல, சர்ச்சுக்கும், சட்டத்திற்கும் சம்பந்தமில்லாமலிருப்பதன் விளைவே.

மதச் சார்பற்று இந்தப் பிரச்னையை நாம் நோக்கினோமானாலும் இந்த சட்ட-மதப் பிணைப்பு பல நாட்டு மக்களை ஓட்டாண்டிகளாக அடித்துவிட்டதை அறிவோம். இந்தப் பிணைப்பு **ஸ்பெயினைப்** பொருளாதார நலிவுக்குள்ளாக்கிவிட்டது. மத சுதந்திரமளித்த சட்டத்தைப் பிரான்ஸில் ரத்து செய்ததனால் பிரான்ஸிலிருந்து பட்டு நூல் தயாரிப்பவர்கள் பிரிட்டனில் தஞ்சம் புகுந்துவிட்டனர். இதே சட்ட - சர்ச் உறவு

இங்கிலாந்திலிருக்கும் நூல் நெசவுக்காரர்களை அமெரிக்காவுக்கும், பிரான்ஸுக்கும் விரட்டிவிட்டது.

சர்ச்-ராஜ்யப் பிணைப்புபற்றிய அரசியலுக்கு மாறான தத்துவத்தைப் பர்க் பிரசாரம் செய்துகொண்டிருக்கட்டும். அதனால் ஓரளவு நன்மை விளையும். பிரஞ்சு தேசீய சபை அவருடைய உபதேசத்திற்குச் செவிசாய்க்கப் போவதில்லை. அவருடைய அசட்டுத்தனத்தினால் பிரான்ஸ் நலம் பெறலாம். அவருடைய போதனையின் தீய விளைவுகளைப் பிரிட்டனில் பார்த்துத்தான் அமெரிக்கா எச்சரிக்கையா யிருந்துவிட்டது. இதன் தீமையை அநுபவித்தே பிரஞ்சு தேசீய சபை இந்தப் பிணைப்பை ரத்து செய்தது. அது மட்டுமல்ல; அமெரிக்காவைப் போல் பிரான்ஸிலும் **மனச்சாட்சிப்படி** யாவரும் நடக்கும் உரிமையையும், எல்லோருக்கும் பிரஜா உரிமையும் ஸ்தாபிக்கப்பெற்றது.

இவ்வாறாக, சூழ்ச்சிகளுக் குட்பட்டதனால் பிற நாடுகளைப் போல் பிரஞ்சு தேசீய சபை வஞ்சம் தீர்க்கும் பிரகடனங்கள் வெளியிடாமல் **மனித உரிமைப்** பட்டியலை வெளியிட்டு அதன் அடிப்படையிலேயே அரசியலமைப்பு நிறுவவேண்டும் என்றும் தீர்மானம் செய்தது. உரிமைப் பட்டியல் விவரம் வருவாறு:

மனித, பிரஜைகள் உரிமைப் பிரகடனம்

[பிரஞ்சு தேசீய சபையால் இயற்றப்பட்டது]

பிரஞ்சு மக்களின் பிரதிநிதிகள் தேசீய சபையினராகக் கூடிச் செய்த முடிவுகள்: அறியாமை, அலட்சிய புத்தி, மனித உரிமை என்றால் வெறுப்புணர்ச்சி—இவைகளே பொது ஜனங்கள் துன்பமடைவதற்கும், அரசாங்கங்களில் ஊழல்கள் மலிந்திருப்பதற்கும் தனிப்பட்ட காரணங்கள் என்பதை அறிந்து—இயற்கையான, விவரிக்க இயலாத, பறிக்க முடியாத இம்மனித உரிமைகளைத் தீர்மானமாகப் பிரகடனம் செய்யவேண்டும் என முடிவு செய்தனர். சமூகத்தினருக்கு இந்தப் பிரகடனம் என்றென்றும் ஞாபகத்திலிருக்கு மாகையால் அவர்கள் இதன்படி எழும் கடமைகளை ஆற்றி உரிமைகளைப் பாதுகாப்பதில் கண்ணும் கருத்துமா யிருக்கவேண்டும்; அரசியல் ஸ்தாபனங்களின் லட்சியத்திற்கேற்ப அரசாங்கங்களின் சட்டமியற்றும்

அல்லது நிர்வாக அதிகாரம் அமைந்திருக்குமாகையால் அவைக ளுக்குச் சிறந்த மதிப்பளிக்கவேண்டும். எதிர்காலப் பிரஜை களின் தேவைகளும், உரிமைகளும் நிராட்சேபனையான எளிய கொள்கை அடிப்படையில் கையாளப்பட்டால் அரசிய லமைப்பு உறுதியடைந்து மக்களின் இன்பமும் பெருகும்.

மேற்கூறப்பட்ட காரணங்களுக்காக, பரம்பொருளின் சந்நிதானத்தில், அவர் ஆசியையும், அருளையும் எதிர்நோக்கி தேசீய சபை கீழ்க்காணும் புனிதமான மனித-பிரஜா உரிமைகளை ஏற்று பிரகடனமும் செய்கிறது:

1. மனிதர்கள் சுதந்திரப் பிறவிகள். அவர்கள் தங்களது உரிமைகளை சமமாகவே அநுபவிக்கப் பிறந்தவர்கள்; அவ்வாறே அநுபவித்து வர வேண்டியவர்கள். பொதுநல அவசியம் எனும் அடிப்படையில் தான் அரசியல் துறையில் பாகுபாடுகள் ஏற்பட முடியும்.
2. அரசியல் கூட்டுறவுகளின் முடிவான நோக்கம், மனிதனின் இயற்கையான, வரையறுக்கப்படாத உரிமைகளைப் பாதுகாப்பதே. சுதந்திரம், சொத்துரிமை, பாதுகாப்பு, ஆக்கிரமிப்பை எதிர்த்து நிற்பது முதலியவைகளே அவ்வுரிமைகள்.
3. நாட்டு மக்களே அந் நாட்டின் ஆதிபத்தியத்தின் உறைவிடம். இந்த ஆதிபத்தியத்தின் மூலம் எழாத எந்த உரிமைக்கும், எந்த மனிதனும் அல்லது மனித கோஷ்டியும் அருகதையற்றவர்கள்.

4. பிறருக்குத் தீங்கு நேரிடாமல் எதையும் செய்யும் சக்தியே அரசியல் சுதந்திரமாகும். மனிதனின் இயற்கை உரிமைகளுக்கு ஒரே ஒருவரம்பு உண்டு. மற்ற மனிதர்கள் தங்கள் உரிமைகளைச் சுதந்திரமாக அநுபவிக்க உதவும் முறையில் ஒவ்வொருவரும் தம் உரிமையை அநுபவீக்கவேண்டும். இந்த வரம்பைச் சட்ட மூலமே நிர்ணயிக்க வேண்டும்.

5. சமூகத்திற்குத் தீங்கு விளைவிக்கக்கூடிய செயல்களையே சட்டம் தடை செய்யவேண்டும்; சட்டத்தினுல் தடை செய்யப் படாததை யாரும் எதிர்த்து நிற்கலாகாது; சட்டப்படி செய்ய வேண்டும் என நிர்ப்பந்தமில்லாத காரியத்தைச் செய்யும்படி யாரும் நிர்ப்பந்திக்கப்படலாகாது.

6. சட்டம் என்பது சமூகத்தின் நோக்கத்தை வெளிப் படுத்தும் சாதனம். நேரிடையாகவோ, பிரதிநிதிகள் மூலமோ சட்டத்திற்கு இணங்கும் உரிமை எல்லாப் பிரஜைகளுக்கும் உண்டு. பாதுகாப்பாயினும், தண்டனையாயினும் அது எல்லோ ருக்கும் ஒரே மாதிரி அமையவேண்டும்; **சட்டத்தின் முன்**

யாவரும் ஒன்றேயாகையால் எல்லாப் பட்டம், பதவி, உத்தியோகம் முதலியவற்றிற்கு அவரவர் தகுதிக்கேற்ப ஆசைப்படும் உரிமை யாவருக்கும் உண்டு; அவர்கள் குணம், திறமை தவிர வேறு எவ்வித யோக்கியதாம்சங்களும் கோரலாகாது.

7. சட்ட மூலமின்றியோ, அல்லது சட்டம் விதித்துள்ள முறைப்படியோயின்றி யார் மீதும் குற்றம் சாட்டலாகாது, கைது செய்யலாகாது, சிறைப்படுத்தலாகாது. யதேச்சாதிகார உத்தரவுகளை யார் கோரினுலும், பிறப்பித்தாலும், நிறைவேற்றினுலும் அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். சட்டப்படி ஆஜர் ஆகவேண்டுமென்ருே, கைது செய்யப்பட வேண்டுமென்ருே உத்தரவு பிறப்பிக்கப்பட்டால் அது சம்பந்தப்பட்டவர் பணியவேண்டும்; தவறினுல் குற்றம் செய்தவராவார்.

8. மிகவும் அவசியமான தண்டனை தவிர, வேறு எதுவும் சட்டம் விதித்தலாகாது. ஒரு குற்றம் நிகழ்வதற்கு முன் இயற்றப்பட்ட சட்டப்படி தவிர, வேறு எவ்விதத்திலும் யாரும் தண்டிக்கப்படலாகாது.

9. தண்டனை விதிக்கப்படும் வரையில் ஒரு மனிதன் நிரபராதி என அநுமானிக்க வேண்டுமாகையால் அவனைக் காவலில் வைக்கவேண்டிய அவசியம் ஏற்பட்டால் அவனைப் பிடிப்பதற்குச் சட்டப்படி தேவையான அளவுக்கு மீறி அவனைத் துன்புறுத்தாமலிருக்க சட்டம் வகை செய்யவேண்டும்.

10. ஒருவனுடைய அபிப்பிராயங்கள், குறிப்பாக மத சம்பந்தமான அபிப்பிராயங்கள் கொண்டதற்காக யாரும் துன்புறுத்தப் படலாகாது. ஆனுல், அந்த அபிப்பிராயம் கொள்ளுவதனுல் சட்டப்படி நிலவவேண்டிய பொதுஜன அமைதிக்குப் பங்கம் ஏற்படலாகாது.

11. சிந்தனைகளையும் கருத்துக்களையும் தங்குதடையின்றி வெளியிடுவது மனிதனின் விலை மதிப்பற்ற உரிமைகளில் ஒன்ருகையால், ஒவ்வொரு பிரஜையும் தாராளமாகப் பேசலாம், எழுதலாம், கருத்துக்களை வெளியிடலாம். ஆனுல் சட்டத்திற்கு மாருக அவன் தன் சுதந்திரத்தைத் தவருன முறையில் பயன்படுத்தலாகாது.

12. மக்கள் பிரஜா உரிமைகளுக்குப் பாதுகாப்பளிக்க ஒரு பொதுவான படை அவசியமாகையால் அந்தப் படை சமூகத்

தின் நலனுக்காகவே அமைக்கப்படுகிறது. இந்தப் படை பலத்தை அதை நடத்துபவர்களின் சுயநலத்திற்காகப் பயன் படுத்தலாகாது.

13. படை நடைமுறைச் செலவுக்கும், அரசாங்க நிர்வாகச் செலவுக்கும் பணம் தேவையாயிருப்பதனுல் அதற்கு எல்லோரும் அவரவர் பங்கைச் செலுத்தவேண்டும். இந்தப் பங்கை மக்களிட மிருந்து அவரவர் சக்திக்கேற்ப வசூல் செய்யவேண்டும்.

14. பொது ஜனங்கள் கொடுக்கவேண்டிய பகுதிப் பணம், அவைகளின் அளவு, செலவு, எப்படி வரி விதிப்பது, எவ் வளவு காலத்துக்கு வசூல் செய்வது முதலியவைகளை நிர் ணயிப்பதில் தனது கருத்தை நேரிடையாகவோ, பிரதிநிதிகள் மூலமோ தெரிவிக்க எல்லா பிரஜைகளுக்கும் உரிமை உண்டு.

15. ஒவ்வொரு சமூகத்திற்கும் தங்களது பிரதிநிதிகள் என்ன சேவை செய்தனர் என்று கேட்கும் உரிமை உண்டு.

16. எந்தெந்த சமூகத்தில் அதிகாரப் பாகுபாடு நிர்ண யம் செய்யப்படவில்லையோ, உரிமைகள் பாதுகாப்புக்கு உத்தர வாதமளிக்கப்பட வில்லையோ அவைகளுக்கு அரசியலமைப்பு தேவையாகிறது.

17. ஒவ்வொருவருக்கும் சொத்துரிமை அவசியமாகை யாலும், இந்த உரிமை புனிதத்தன்மை வாய்ந்ததாகை யாலும், பொதுஜன அவசியம் இருந்தாலொழிய இந்த உரிமையைப் பறிக்கலாகாது. அப்படிப் பறிப்பதானுல், பொது ஜன அவசியம் என்ன என்பதைச் சட்டபூர்வமாக விசாரித் தறிந்து பறிக்கப்பட்ட உரிமைக்கு நஷ்டஈடு அளிப்பதாக முன்கூட்டியே உத்தரவாதமளிக்கப்படவேண்டும்,

உரிமைப் பிரகடனம் பற்றி சில கருத்துக்கள்

முதல் மூன்று ஷரத்துக்கள் உரிமைப் பிரகடனத்தின் சிறப்பு களைப் பொதுப்படையில் விவரிக்கின்றன. பின்வரும் ஷரத் துக்கள் முதல் மூன்றின் விளைவுகள் அல்லது அவைகளின் விளக்கங்கள். நான்கு, ஐந்து, ஆறுவது ஷரத்துக்கள் முதல் மூன்று ஷரத்துக்கள் பொதுப்படையாகக் கூறியதைக் குறிப் பாக வரையறுத்துக் காட்டுகின்றன.

ஏழு, எட்டு, ஒன்பது, பத்து, பதினோராவது ஷரத்துக்கள் ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ள உரிமைகளுக்குச் சட்ட பூர்வ உருவளிப்பதற்கான கொள்கைகளை விவரிக்கின்றன. பத்தாவது ஷரத்தில் (மத அபிப்பிராயத்தைப்பற்றி) குறிப்பிட்டுள்ள உரிமைக்கு அதன் வாசகம் போதிய உத்தரவாத மளிக்கிறதா எனச் சில நல்லோர் பிரான்ஸிலும், பிற நாடுகளிலும் சந்தேகப் படுகின்றனர். மேலும் இந்த ஷரத்து மதத்தின் தெய்வீக மகத்துவத்தை நீக்கி அதைப்பற்றி மனிதர்களிடையே சட்ட மியற்றுவதற்கான சக்தியையும் தளர்த்திவிடுகிறது என்றும் கருதுகின்றனர். இதன் விளைவாக வானத்தை மேகமண்டலம் மறைப்பதனுல் சூரிய வெளிச்சம் மங்கி கண்ணுக்குத் தெரியாமல் போவதுபோல் மத உரிமையும் மங்கி மனிதர் அறிவுக்குப் புலப்படாமல் மதிப்புக் குறைந்து தென்படுகிறது.

பன்னிரண்டாவதிலிருந்து தொடங்கும் மற்ற ஷரத்துக்கள் முந்திய ஷரத்துக்களில் விவரிக்கப்பட்டுள்ள கொள்கைகளி லேயே அடங்கியிருக்கின்றன. ஆனுல் பிரான்ஸ் அச்சமயம் இருந்த பிரத்தியேக நிலையில் தீமைகளை அகற்றி நல்லவைகளை நிலைநாட்ட வேண்டியிருந்ததனுல் பிற நாடுகளில் அவசிய மில்லாவிட்டாலும் இங்கே எல்லா உரிமைகளையும் வியக்த மாகக் குறிப்பிடவேண்டி யிருந்தது.

உரிமைப் பிரகடனம் தேசீய சபையில் விவாதத்திலிருந்த பொழுது சில உறுப்பினர், உரிமைப் பிரகடனத்துடன் கடமைப் பட்டியலையும் வெளியிட்டிருக்கவேண்டும் என்று வாதாடினர். இதிலிருந்து அந்த அங்கத்தினர்கள் தங்கள் சிந்தனு சக்தியை உபயோகித்தனர் என்று விளங்கினுலும், அதை அவர்கள் போதிய அளவு பயன்படுத்தவில்லை என்பதும் தெளிவாயிற்று. உரிமைப் பிரகடனம் என்ருல் அதில் கடமைப் பிரகடனமும் அடங்கியிருக்கிறது. மனிதன் என்கிற முறையில் எதெல்லாம் தனது உரிமையோ அவைகளெல்லாம் பிறரின் உரிமையுமாகும். என் உரிமையை நான் விரும்பி அடைவது போலப் பிறர் உரிமையை நான் உத்தரவாதம் செய்யவும் கடமைப்பட்டவன்.

முதல் மூன்று ஷரத்துக்கள் தனிப்பட்ட, தேசீய சுதந் திரத்தின் அடிப்படை. அவைகளில் அடங்கியுள்ள கொள்கை களின் தூய்மை குறையாமல் பாதுகாக்காத அரசுள்ள

நாடு சுதந்திர நாடாகாது. இதுவரையில் உலகில் பல்வேறு நாடுகளில் இயற்றப்பட்ட சட்டங்கள் யாவற்றையும்விட மனித உரிமைப் பிரகடனத்தினுல் உலகிற்குச் சிறந்த நன்மை ஏற்படும்.

உரிமைப் பிரகடனத்தின் பூர்வ பீடிகையில் ஒரு நாட்டு மக்கள் ஆண்டவன் முன்னிலையில் தாங்கள் அரசாங்கம் அமைக்கும் மகோன்னதக் காட்சியைக் காண்கிருேம். இந்தக் காட்சி புதுமை மிக்கது. ஐரோப்பிய நாடுகளில் நடந்த எந்த நிகழ்ச்சியும் இதற்கு ஈடாகாது. புரட்சி எனும் சொல்லால் இதை விளக்க முடியாது. ஏனெனில், அதற்குப் பொருள் மனிதனின் மறுமலர்ச்சி என்றே கூறவேண்டும்.

ஐரோப்பாவில் உள்ள அரசாங்கங்கள் அநீதியும் கொடுமையும் நிறைந்த நிலைக்களங்களல்லாமல் வேறு என்ன? இங்கிலாந்து அரசாங்கத்தின் யோக்கியதை மட்டும் என்ன ? 'மக்களை மக்கள் விலைகொடுத்து வாங்கும் சந்தை, மக்கள் வதைப்பட்டு ஊழல் மலிந்துள்ள இடம்' என்று அந்த நாட்டைப்பற்றி ஆங்கிலேயர்களே கூறவில்லையா? ஆகையினுல் அவர்கள் பிரஞ்சுப் புரட்சி பற்றி இழிவாகப் பேசுவதில் ஆச்சரியமில்லை.

கலப்பற்ற யதேச்சாதிகாரத்தை மாய்த்ததுடன் புரட்சி நின்றிருக்குமாளுல் **பர்க்கும்** அவர் போன்ற பிறரும் அதைப் பற்றி ஏதும் கூருமலிருந்திருப்பர். புரட்சி அத்துமீறிப் போய் விட்டது என்பதுதான் இப்போது அவர்கள் கூக்குரல். அதாவது, அவர்கள் எதிர்பார்த்ததற்கும் மிஞ்சிப்போய்விட்டது புரட்சி; ஊழலை அம்பலப்படுத்திவிட்டது புரட்சி. ஆகையால் அதன் வசப்பட்டவர்கள் அஞ்சி அலறுகின்றனர். அவர்களுடைய ஆத்திரத்தில் அச்சத்தைக் காண்கிருேம். தாக்கப்பட்ட தீமை தன் வருத்தத்தைப்பற்றி ஒப்பாரி வைக்கிறது.

இம்மாதிரி எதிர்ப்பினுல் பிரஞ்சுப் புரட்சிக்கு இழிவுக்குப் பதில் உயர்வே கிடைத்திருக்கிறது. அதைத் தாக்கத் தாக்க அதன் சிறப்பு சுடர்விட்டுப் பிரகாசிக்கிறது. பிறர் தாக்குவதனுல் அது பயப்படுவதற் கொன்றுமில்லை; உண்மை அதற்கு நிலையான தன்மை அளித்துவிட்டது. காலப்போக்கில் அதற்கு அழியாப் புகழ் நிலைத்துவிடும்.

பாஸ்டைல் சிறைக்கூடத்தைக் கைப்பற்றியதிலிருந்து உரிமைப் பிரகடனம் நிறைவேற்றப்பட்ட வரையில் பிரஞ்சுப் புரட்சியின் வளர்ச்சியை விவரித்துவிட்டேன். இனிக் கட்டுரையை லபாயத்தின் உணர்ச்சி மிக்க வாக்குடன் முடிக்கிறேன். ''சுதந்திர தேவிக்கு எழுப்பிய இந்த மகோன்னத மாளிகை கொடுங்கோலர்களுக்கு எச்சரிக்கையாகவும், துன்புறுத்தப்பட்டோருக்கு வழிகாட்டியாகவும் இருக்கட்டும்''.

பரம்பரை அரசாட்சி

பரம்பரை உரிமைகள், பரம்பரை வாரிசுரிமை, எம் மக்களும் தாங்களாக அரசாங்கம் அமைத்துக்கொள்ள உரிமை இல்லை என்பன பற்றி பர்க் கொட்டிய அபத்தக்களஞ்சியம்—அதற்கு வேறு அடைமொழி தகுதியல்ல—ஒருபுறமிருக்க, அரசாங்கம் என்றால் என்ன என்று அவர் விவரிக்க முன்வந்திருக்கிறார். ''அரசாங்கம் என்பது மனித அறிவினால் தயாரிக்கப்பட்ட ஒரு சாதனம்'' என அவர் கூறுகிறார்.

பர்க்கின் இந்தக் கூற்று உண்மையென வைத்துக்கொண்டாலும் வார்சுரிமையும், வாரிசு பாத்தியதையும் அரசாங்கத்தின் ஒரு பகுதியாக இருக்க முடியாது. ஏனெனில், அறிவைப் பரம்பரை உரிமையாக்க முடியாது. ஓர் அடிமுட்டாளுக்கு என்றென்றும் உட்பட்டு நடக்கவேண்டிய அரசாங்கம் அறிவுக்கு உதாரணமான சிருஷ்டியாக இருக்க முடியாது. ஆகையினால் பர்க்கின் அடிப்படை வாதம் சொத்தையாகி விட்டதனால் அதனால் விளைந்த யாவும் அடிபட்டுப்போகின்றன.

பரம்பரை உரிமைகள் பற்றிய வாதம் பரம்பரை அறிவை ஆதரிக்க முன்வருகிறது. அப்படியானால் யார் மிகவும் அறிவாளி எனும் கேள்வி எழுகிறது. முடியாட்சியில் பட்டத்திற்கு வருபவர் ஒவ்வொருவரும் ஸாலமன் போன்ற ஞானி என அவர் ருசுப்படுத்தவேண்டும். அப்படியில்லையெனில், அறிவில் குறைந்தவன் அரசனாக ஆவதற்கு அருகதை யற்றவன். பர்க்கின் வாதம் எவ்வளவு அபாரமாயிருக்கிறது! மாலுமியின் பரிபாஷையில் கூறுவதெனில், 'பர்க் அடித்தளத்தைக் கூட்டி மெழுகிவைத்துவிட்டார்' என்றுதான் கூறவேண்டும். ஏனெனில், அவருடைய

ஜாபிதாவில் எந்த அரசனின் பெயரும் தெளிவாகத் தெரியவில்லை. பிரபுக்கள் சபையில் யாருமில்லை. யாவரையும் யமதர்மராஜன் மாதிரி வெட்டி வீழ்த்திவிட்டார். இம்மாதிரி அவருக்குப் பதில் கூறுவோம் என்பதை அறிந்து பர்க் முன்ஜாக்கிரதையாயிருந்து விட்டார். ஆகையால் அரசாங்கம் மனிதர்கள் சிருஷ்டித்த சாதனம் என்று மட்டும் கூருமல், அறிவு யாவும் திரண்டு உள்ள இடம் அரசாங்கம் எனவும் கூறுகிருர். தேசமக்கள் யாவரும் முட்டாள்கள் என அவர்களை ஒருபுறம் ஒதுக்கி, அறிவுமிக்க அரசாங்கத்தாரைத் தனியாக மற்ருெருபிரிவாக வைத்துவிட்டார். அப்புறம் ஆடம்பரமாகத் தங்கள் தேவைகளை ''இந்த அறிவுமிக்கோர் தீர்த்துவைக்கும்படிக் கோரும் உரிமை மக்களுக்கு உண்டு'' எனப் பிரகடனம் செய்கிருர்.

இந்தப் பிரகடனம் செய்துவிட்டு மக்களுடைய தேவைகள் என்ன, அவர்களுடைய உரிமைகள் யாவை, என்று விளக்க முன்வருகிருர்.

இந்த முயற்சியில் மிக சாமர்த்தியமாக வெற்றி பெறுகிருர். மக்களுடைய தேவை அறிவு என்று அறிவிக்கிருர். இந்த அறிவிப்பினுல் மக்கள் திருப்தியடையப் போவதில்லை என்பதை அறிந்து, அறிவாளிகளின் ஆட்சியால் ஆளப்பட வேண்டும் எனக் கோரும் உரிமை மக்களுக்குண்டு என்று அறிவிக்கிருர். அறிவு திரண்டுள்ள அரசாங்கத்தை மக்கள் மதிக்கவேண்டும்; அது எல்லா வழிகளிலும், எல்லா முறைகளிலும் செயலாற்றும் திறமை அதற்குண்டு என்பதை மனிதர்கள் மனத்தில் பதிய வைப்பதற்காக கைதேர்ந்த ஜோஸ்யர் மாதிரி அரசாங்கத்தின் அதிகாரத்தைப்பற்றிக் கூறுகிருர்.

அரசாங்கத்தில் மக்களுக்குள்ள உரிமைகள்தான் அவர்கள் பெறக்கூடிய நலன்கள். நலன்களில் பல்வேறு வகைகள் உண்டு. அவைகளில் யாவும் எல்லோருக்கும் சமமாகக் கிடைக்கவேண்டும்; சில சமயம் நன்மைக்கும் தீமைக்குமோ, அல்லது ஒருவகைத் தீமைக்கும், மற்ருெருவகைத் தீமைக்குமோ சமரசமாகப் போகவேண்டிவரும். அரசியல் அறிவு என்பது கணக்குப்போடும் சிறப்பு, கூட்டி, கழித்து, பெருக்கி, வகுத்து—இதெல்லாம் கணித, அல்லது தத்துவார்த்த முறையிலல்ல, ஒழுக்க விளக்கங்களில் கூட்டுதல், கழித்தல் முதலியன.

இந்தப் புரியாத பாண்டித்யத்தைப் பர்க்குக்குச் செவி சாய்ப்போர் புரிந்துகொள்ள முடியாதாகையால் அவருடைய வாசகத்திற்கு வியாக்கியானம் செய்ய நான் முன்வருகிறேன். நல்லோர்களே! மேற்கூறிய வாக்கியத்தின் பொருள் என்னவெனில்,

ஆட்சி எந்தக் கொள்கைப்படியும் நடப்பதில்லை; அது நன்மையைத் தீமையாக்கலாம், அல்லது தீமையை நன்மையாக்கலாம். அது ஆட்சியின் இஷ்டத்தைப் பொறுத்தது. சுருங்கக் கூறின், ஆட்சி என்பது யதேச்சாதிகாரம்.

ஆனால் சில விஷயங்களை பர்க் மறந்துவிட்டார். அறிவு முதன் முதலில் எங்கிருந்து வந்தது என்று அவர் கூறவில்லை; இரண்டாவது எந்த ஆதாரத்தின்கீழ் அது முதன் முதலில் அதிகாரம் செலுத்தத் தொடங்கிற்று என்றும் கூறவில்லை. இந்த விஷயத்தை நமக்கு அவர் அறிமுகம் செய்யும் வகையிலிருந்து அரசாங்கம் அறிவைத் திருடி யிருக்கவேண்டும் அல்லது அறிவு அரசாங்கத்தைக் கைப்பற்றி யிருக்கவேண்டும். சுருங்கக் கூறினால் ஆதாரமின்றி அதிகாரத்தைக் கைப்பற்றுதல் என்றுதான் கூறவேண்டும்.

இதுவரையில் பொதுப்படையாகக் கூறிவந்ததில் அவ்வளவாக விஷயம் விளங்கியிருக்காதாகையால் அதைச் சற்றுத் தெளிவாகவும், கோர்வையாகவும் எடுத்துச் சொல்லவேண்டியது அவசியமாகிறது. ஒரு நாட்டைப் பரம்பரை முடியாட்சி, அல்லது பரம்பரை வாரிசு பாத்தியம் எந்தெந்த முறையில் ஆட்சிபுரியும் என்பதை விவரிக்கவேண்டும்.

1. குறிப்பிட்ட ஒரு குடும்பம் ஆட்சி பீடத்தில் அமரும் உரிமை.
2. குறிப்பிட்ட குடும்பத்தை ஆட்சியில் அமர்த்த ஒரு நாட்டினர் உரிமை.

ஒரு குடும்பம் தன்னிச்சையாக நாட்டு மக்கள் அனுமதியின்றி ஆட்சிப் பொறுப்பை மேற்கொள்ளுவது யதேச்சாதிகாரம் என்பதை எல்லோரும் ஒப்புக்கொள்ளுவர். இதை நிரூபிக்க முற்படுவது மக்களுக்குப் பகுத்தறிவு இல்லை என்று கூறுவதற்கொப்பாகும்.

ஒரு நாட்டினர் ஒரு குடும்பத்தினரைப் பரம்பரை பாத்தியதையுடன் ஆட்சியில் அமர்த்துவதை மேலோட்டமாகப் பார்த்தால் யதேச்சாதிகாரமில்லைபோல் தோன்றும். ஆனால் நிதானித்துச் சிந்தனை செய்து தங்களை மறந்து இந்த ஏற்பாடு தங்களது சந்ததிகளை எப்படிப் பாதிக்கும் என்று பார்ப்பார்களானால், பரம்பரை வாரிசு பாத்தியம் யதேச்சாதிகாரத்திற்கே இட்டுச்செல்லுகிறதென்பதை உணருவார்கள். இதன் விளைவாக பின்சந்ததியார்களின் அநுமதியின்றி ஆட்சி நீடிக்கும். அநுமதியில்லாத ஆட்சி யதேச்சாதிகாரமேதான்.

அரசாங்கத்தின் அதிபதியாக அமர்ந்தவனோ, அவனுடைய வாரிசுகளோ ஒரு நாட்டினரைப் பார்த்து, ''இந்த அதிகாரம் உங்கள் தயவின்றியே நான் வகிக்கிறேன்'' என்று கூறுவானானால் எந்த அதிகாரத்தைக்கொண்டு அவன் மக்களைத் துச்சமாக மதிக்கிறான் என்பதை நாம் கவனிக்கவேண்டியதில்லை. அடிமை வாழ்வுக்குட்பட்டவனுக்குத் தன் உரிமைகளைத் தன் தந்தை தான் விற்றான் என்பது எவ்வித ஆறுதலுமளிக்காது; ஆனால் அது அவனுடைய அடிமைத்தனத்தைப்பற்றி மனக்கொதிப்படையவே காரணமாகும். ஒரு செயலின் துராக்கிருதத் தன்மையைப் பலமடங்கு உறுதிப்படுத்தும் காரியத்தைக் கொண்டு அது சட்ட சம்மதமானது என்று நிரூபித்துவிட முடியாது. ஆகையினால், பரம்பரை வாரிசுரிமை நியாயமானது என்று ஆகாது.

இவ்விஷயமாக அப்பழுக்கில்லாத முடிவுக்கு வரவேண்டுமானால் ஒரு குடும்பத்திற்குப் பரம்பரை அதிகாரங்களை அளிக்கும் தலைமுறையையும், அதற்குப் பின் வரப்போகும் தலைமுறைகளையும் பிரித்துத் தனித்தனியே பார்க்கவேண்டும். மேலும் முதல் தலைமுறையினர் பிந்திய தலைமுறையினரைப்பற்றித் தங்கள் கடமையை எவ்விதம் ஆற்றுகின்றனர் என்பதையும் பார்க்கவேண்டும்.

முதன் முதலில் ஒருவனைத் தேர்ந்தெடுத்து மன்னன் என்றோ, பிற எப்பெயர் சூட்டியோ அவனை அரசாங்கத் தலைவனாக நியமித்தால் அந்தச் செயல், சரியோ, தவறோ அந்தத் தலைமுறையின் சுதந்திரமாகச் செய்த முடிவேயாகும். அப்படித் தேர்ந்தெடுக்கப்பட்டவன் அப்பதவிக்கு நியமிக்கப்பட்டவனே

யொழிய, பரம்பரை பாத்தியதையுடையவனல்லன். அவனை நியமித்த தலைமுறையினர் ஒரு பரம்பரை பாத்தியமுள்ள அரசாங்கத்தின்கீழ் வாழ்பவர்களல்ல; தங்களால் நிறுவப்பட்ட ஆட்சியின்கீழ் வாழ்பவர்களாவர். தலைவனை நியமித்த தலைமுறையினரும், நியமிக்கப்பட்டவனும் சிரஞ்சீவிகளாக வாழ்ந்தாலும், அந்த ஆட்சி பரம்பரை பாத்தியதையுள்ள ஆட்சியல்ல. ஆகையினால், பரம்பரை வாரிசுரிமையென்பது முதன் முதலில் நியமித்தவர்களும், நியமிக்கப்பட்டவனும் இறந்த பிறகே அமுலுக்கு வரும்

முதல் தலைமுறையினரைப்பற்றி பரம்பரை பாத்தியம் எழுவதற்கில்லையாகையால், நாம் முதல் தலைமுறையினர் பிந்திய தலைமுறையினரைப் பொறுத்து எவ்வாறு செயல்புரிகின்றனர் என்பதை ஆராயவேண்டும்.

பரம்பரை பாத்தியதையை ஸ்தாபிக்க முதல் தலைமுறையினருக்கு உரிமையுமில்லை, பாத்தியதையுமில்லை. அவர்கள் **சட்டமி**யற்றுபவர்களாயிருந்து தங்களுக்குப் பிறகு அரசாங்க பாரத்தை ஏற்பது பற்றி **உயில் செய்பவர்களாக** மாறுகின்றனர். இதன் மூலம் ஆட்சி பாத்தியதையைப் பிந்திய சந்ததியினருக்கு விட்டுச் செல்லுவது மட்டுமின்றி பிந்திய சந்ததியார் தலையில் ஒரு புதிய, மாறுபட்ட அம்சங்களுள்ள அரசாங்கத்தையும் சுமத்துகின்றனர்.

முதல் தலைமுறையினர் பரம்பரை ஆட்சியின் கீழ் வாழவில்லை; தங்களிஷ்டப்படி நிறுவப்பட்ட ஆட்சியின் கீழ் வாழ்ந்தனர்; இயற்றுவதற்கு அதிகாரமில்லாத உயிலின்படி அவர்கள் இப்பொழுது தங்களைப்போல் பிந்திய தலைமுறையினர் சுதந்திரமாகத் தங்கள் உரிமைகளைப் பயன்படுத்த முடியாமற் செய்ய முயற்சிக்கின்றனர்.

ஆனால், ஒரு தலைமுறையினர் ஒன்றுசேர்ந்து உயில் இயற்ற முற்பட்டாலும் எந்த நோக்கத்துடன் அவர்கள் செயல்புரிகின்றனரோ அதற்கு எந்தச் சட்டமும், உயில் முறையும் இடம் அளிக்கவில்லை.

சமூகத்தில் மக்கள் உரிமைகள் சிருஷ்டிக்கமுடியாதவை; பராதீனம் செய்ய இயலாதவை; அழிக்க முடியாதவை. ஆனால் அவைகள் பின்வருபவர்களுக்கு உரியவை. இந்த உரிமைகளைப்

பின்சந்ததியினர் அநுபவிக்கக்கூடாது என்று முடிவுகட்ட எந்தத் தலைமுறையினருக்கும் அதிகாரம் கிடையாது. தற்போதுள்ள தலைமுறையோ அல்லது வேறு ஒரு தலைமுறையினரோ அடிமைகளாக வாழ விரும்பினால், அது பிந்திய தலைமுறையினர் சுதந்திரமாக வாழும் உரிமையைப் பாதிக்காது; தீமைகளைச் சட்டபூர்வமாக விட்டுச்செல்ல இடமில்லை. **1688-ஆம் வருடப் புரட்சியில் பிரிட்டிஷ் மக்கள் தங்களுக்குள்ள உரிமைகளைத் தாங்கள் மட்டுமல்ல, பின்சந்ததியார்கூட மனமொப்பித் துறந்தனர்** என **பர்க்** சாதிக்க முயலுகையில் அவர் கூற்று பதில் கூறத்தக்கதல்ல. அவருடைய இரண்டுங்கெட்டான் கொள்கைகளைத் துச்சமாக நாம் மதிக்கலாம்; அவருடைய அறியாமைக்கு அநுதாபம் காட்டலாம்.

முந்திய தலைமுறையினர் உயில் மூலம் விட்டுப்போனதென்றோ அல்லது வேறு எவ்வகையில் பார்த்தாலும் பரம்பரை பாத்தியதை என்பது கேவலமானது. பி-இன் சொத்தை ஏ பறித்து அதை ஸி-க்குத் தானம் செய்ய உரிமை இல்லை; ஆனால் இந்த முறையில்தான் பரம்பரை பாத்தியதை நடைமுறையில் செயல்புரிகிறது.

ஒரு தலைமுறையினர் பிந்திய தலைமுறையினர் யாவருடைய உரிமைகளையும் பறித்து ஒரு மூன்றும் மனிதனிடம் ஒப்படைக்கிறது. அந்தப் பேர்வழி ஜனங்களைப் பார்த்து **பர்க்**கின் பரிபாஷையில் மக்களுக்கு உரிமையே இல்லை, எல்லா உரிமைகளும் தனக்கு உயில் மூலம் கிடைத்து விட்டது, ஆகையால் மக்களை அலட்சியம் செய்து ஆட்சிபுரியப் போவதாகச் சொல்லுகிறான். இம்மாதிரிக் கொள்கைகளிலும் அறியாமையிலுமிருந்து கருணாமூர்த்தியான கடவுள்தான் நம்மைக் காக்கவேண்டும்.

முடிவுரை

ஒன்றுக்கொன்று நேர்மாறான, அறிவும் அறியாமையும் தான் மனித சமுதாயத்தில் பெரும் பகுதியினரை ஆட்கொள்ளு கின்றன. இவ்விரண்டில் ஒன்று ஒரு நாட்டில் விரிவாகத் துலங்கச்செய்ய இயலுமானால் அரசாங்க யந்திரம் சுலபமாக வேலை செய்யும். அறிவு பிரகாசிக்கிறதன் மூலம் வெளி யாகிறது; அறியாமை கட்டளைகளுக்குட்பட்டு நடக்கிறது.

உலகில் இருவகை ஆட்சி நடக்கின்றது. ஒன்று தேர்தல் மூலமும், பிரதிநிதித்துவத்தின் மூலமும் இயங்குகிறது; மற்றொன்று பரம்பரை வாரிசு முறை மூலம் நடக்கிறது. முதலது பொதுவாகக் குடியரசு என அழைக்கப்படுகிறது. இரண்டாவது முடியாட்சி, பிரபுக்கள் ஆட்சி என்ற பெயரில் நடக்கிறது.

இவ்விரண்டு நேர்மாறான, தனித்தனியான ஆட்சிமுறைகள் முறையே நேர்மாறான அறிவு, அறியாமை எனும் அடிப்படைகளில் நடக்கின்றன. அரசாங்கத்தை நிர்வகிக்க அறிவாற்றல்களும் திறமையும் அவசியமானதனாலும், இவ்விரு சிறப்புக்களும் பரம்பரையாகக் கிடைக்கக்கூடியவையல்ல வாதலாலும் பரம்பரை வாரிசை நம்புவதை மனிதனின் அறிவு ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஆகையினால் அறியாமை அடிப் படையில்தான் அது நிலைத்திருக்க முடியும். ஒரு நாடு எவ் வளவுக்கெவ்வளவு அறியாமையில் திளைத்திருக்கிறதோ அவ் வளவுக்கவ்வளவு பரம்பரையாக வரும் ஆட்சி முறை நிலைத் திருக்க முடியும்.

இதற்கு மாறாக, ஒழுங்காக அமைக்கப்பட்ட குடியரசு ஆட்சி மனிதனின் அறிவுக்கு ஒவ்வாத நம்பிக்கையை விரும்புவதில்லை. குடியரசு ஆட்சியின் நியாயம், அதன் ஆரம்பம், நடைமுறை யாவற்றையும் மனிதன் எளிதில் அறிந்து கொள்ளுகிறான். இந்த ஆட்சி முறையை மக்கள் நன்கு அறிந்து கொண்டால் அது மக்களின் நல்லாதரவைப் பெறுமாகை யால் அதன்கீழ் மனிதனின் சக்திகளுக்கு, ஒரு துணிவு ஏற்படுவதுடன், இந்த ஆட்சி முறையின் கீழ் மனிதனின் ஆண்மை மகத்தான முறையில் வளர்கிறது.

இவ்விரு ஆட்சி முறைகளும், ஒன்று அறிவினுலும் மற்றொன்று அறியாமையினுலும் நடைபெறுவதனுல், பல்வேறு அம்சங்கள் கொண்ட கதம்ப ஆட்சி முறைக்கு எது ஆக்கமளிக்கிறது என்பதை இனி ஆராயவேண்டும்.

கதம்ப ஆட்சி முறைக்கு உயிரளிப்பது ஊழல். இந்த ஆட்சி முறையில் தேர்தல் முறையும் பிரநிதித்துவ அம்சமும் குறைவாக இடம் பெற்றிருந்தாலும், பரம்பரை ஆட்சி முறையைவிட இதில் அறிவுக்குச் சற்றுக் கூடுதலான இடமுண்டு. ஆகையினுல் அறிவாளிகளை வசப்படுத்த அவசியம் ஏற்படுகிறது. கதம்ப ஆட்சியில் ஒவ்வொரு பகுதியும் குறைபாடுள்ளது. மாறுபட்ட பகுதிகளை ஒன்றுபடுத்தித் துலங்கச் செய்ய ஊழல் அவசியமாகிறது. பிரான்ஸ் புரட்சியை மேற்கொண்டபிறகு, அவர்களும் ''பிரிட்டிஷ் அரசியலமைப்பை'' ஏற்காததால் பர்க் அந் நாட்டின் மீது வெறுப்புக் கொள்ளுகிருர். இந்த விஷயத்தில் மிகுந்த துயரத்துடன் அவர் எழுதுவதால் பிரிட்டிஷ் அரசியலமைப்பில் மூடி மெழுகவேண்டிய அம்சங்கள் பல இருக்கவேண்டும் என்று நாம் கொள்ளவேண்டியிருக்கிறது.

கதம்பமான ஆட்சியில் பொறுப்பு யாருக்குமில்லை. ஒரு பகுதி மற்றொரு பகுதியைத் தாங்கியிருப்பதனுல் பொறுப்பு என்பது அற்று, ஊழலால் ஆட்சி யந்திரம் ஓடுவதனுல், அதுவும் தண்டனைக்குள்ளாகாமல் தப்பிவிட வகை செய்துகொள்ளுகிறது. **அரசன் தவறு செய்ய முடியாது** என்கிற விதியினுல், அவனுக்கு முட்டாள்கள் பைத்தியக்காரர்கள் முதலியோருக்குள்ள பாதுகாப்புக் கிடைப்பதனுல், அவனிடம் பொறுப்புணர்ச்சியை எதிர்பார்க்கவே முடியாது. பொறுப்பு அரசனிடமிருந்து மந்திரிக்கு மாறுகிறது; மந்திரி பார்லிமெண்டின் பெரும்பான்மை பலம் எனும் பாதுகாப்பில் மறைந்துகொள்ளுகிருன்; பதவிகள், ஒய்வு நிதிகள், மற்றும் ஊழல்களால் மந்திரி பார்லிமெண்டை எப்பொழுதுமே தன் வசப்படுத்தலாம். பெரும்பான்மையினர் மந்திரியைப் பாதுகாப்பதன் மூலம் தங்களையும் பாதுகாத்துக்கொள்ளுகின்றனர். சக்கரம் சுழலுவதுபோல் இம்மாதிரி சூழ்ச்சிகளால் பொறுப்பு என்பது அரசாங்கத்திலும் இல்லாமல், அதன் உட்பிரிவுகளிலும் இல்லாமல் மறைந்துவிடுகிறது.

அரசாங்கத்தின் ஒரு பகுதி தவறு செய்ய முடியாது என்பதனுல் அந்தப் பகுதி ஒன்றுமே செய்யாமல் வேருெரு சக்தியின் யோசனைப்படியோ, கட்டளைப்படியோ இயங்குகிறது என்று ஊகிக்கலாம். கதம்ப ஆட்சியில் மன்னர் என்ருல் மந்திரிசபை எனப் பொருள்; மந்திரிசபை எப்போதும் பார்லிமெண்டில் ஒரு பகுதியே யாகையினுலும், ஒரு பகுதியில் செய்யும் காரியங்களை மற்ருெரு பகுதியின் ஆதரவின் மூலம் நிலைநாட்டிக்கொள்ளுவதனுலும் கதம்ப ஆட்சி என்பது புரியாப் புதிராகவே இருந்து வருகிறது; இதன் விளைவாக நாட்டினர் பகுதிகளை ஒடவைப்பதற்காக ஊழல்கள் மூலம் அரசாங்கத்தின் எல்லாப் பகுதிகளையும் திருப்தி செய்துகொண்டிருக்க வேண்டியிருக்கிறது. கடைசியாக ஆட்சி பல்வேறு குழுக்கள் மூலம் நடக்கவேண்டி வந்துவிடுகிறது. இந்தக் கமிட்டிகளில் இடம் பெறுபவர்கள், யோசனை கூறுபவர்கள், அதன்படி நடப்பவர்கள், ஆதரிப்பவர்கள், எதிரிகளுக்குப் பதில் சொல்லி வாயடக்குபவர்கள், பொறுப்புள்ளவர்கள், பொறுப்பில்லாதவர்கள் யாவரும் ஒரே கூட்டத்தினராயிருந்து பலவித நாடகங்கள் நடிப்பவர்கள்.

இம்மாதிரி காட்சி மாறும் பொம்மலாட்டத்தினுல் தனித்து நின்று சாதிக்க முடியாத காரியங்களைப் பகுதியினர் ஒருவரை யொருவர் ஆதரிப்பதன் மூலம் நிறைவேற்றுகின்றனர். பணம் வசூல் செய்யவேண்டிய சமயத்தில் பகுதிகளுக்குள் உள்ள மாறுபாடுகள் மறைந்து பார்லிமெண்டரி முறையில் அளவு கடந்து பரஸ்பரம் புகழுரைகள் பரிமாறிக்கொள்ளுவார்கள். ஒரு பகுதி மற்ருெரு பகுதியின் அதிசயிக்கத்தக்க அறிவையும், தாராள மனப்பான்மையையும், பற்றற்றுப் பணி புரியும் ஆற்றலையும் வியந்து புகழும். எல்லாப் பகுதியினரும் சேர்ந்து நாட்டு மக்களின் மீது சுமரும் வரிப் பளுவைப் பற்றிக் கண்ணீர் உகுப்பார்கள்.

ஆனுல் சீராக அமைக்கப்பட்ட குடியரசில் இம்மாதிரி ஒருவரை யொருவர் தாஜா செய்வதும், புகழ்வதும், அநுதாபம் காட்டுவதும் நிகழமுடியாது. நாடு பூராவுக்கும் சட்டமியற்றும் அதிகாரமும், நிர்வாக அதிகாரமும் சமமாக இருப்பதனுல் அவைகள் யாவும் ஒரே இடத்திலிருந்து கிடைக்கின்றன. ஜன நாயகம், பிரபுத்துவம், முடியரசன் என்பன போல குடியரசில்

ஒரு பகுதியினர் பிற பகுதியினருக்கு அந்நியர்கள் போன்றவர்களல்ல. குடியரசில் மாறுபட்ட அக்கறைகளால் விளையும் பிரிவினைகளில்லாததனுல் சூழ்ச்சியினுலோ, சமரசத்தினுலோ ஒருவரை யொருவர் திருப்தி செய்யவேண்டிய அவசியமில்லை.

பொது நல திட்டங்கள் இயல்பான சிறப்பினுல் மக்களுக்கு எளிதில் புரிந்து விடுகின்றன. ஆகையினுல் முகஸ்துதிக்கோ, தற்பெருமைக்கோ அதில் இடமில்லை. வரிச் சுமை பற்றிக் கதம்ப ஆட்சிகளில் ஓயாமல் கண்ணீர் விடுவது குடியரசின் நேர்மைக்கும் இயல்புக்கும் மாறுபட்டது. வரி விதிப்பது அவசியமானுல், அதனுல் நன்மையே விளையும்; வரி விதிப்பதற்காக மன்னிப்புக் கேட்கவேண்டுமானுல் அது தகாதது என்பதற்கு வேறென்ன ருசு வேண்டும்? ஆகையினுல் மனிதன் மீது இம்மாதிரி ஆட்சியை ஏன் சுமத்தவேண்டும், அல்லது மனிதன் ஏன் இதைத் தன் மீது சுமத்திக்கொள்ளவேண்டும்?

மனிதர்களை அரசனென்றும், குடிமக்கள் என்றும் பாகுபாடு செய்து பேசுகையில், அரசாங்கத்தை முடியாட்சி, பிரபு ஆட்சி, ஜனநாயகம் எனத் தனியாகவோ அல்லது யாவும் சேர்ந்ததாகவோ குறிப்பிட்டுப் பேசினுல் அறிவுள்ள மனிதன் இந்தப் பதங்களுக்கு எவ்வாறு அர்த்தம் செய்துகொள்ளுவான்? உலகத்தில் பலவகைப்பட்ட மனித சக்தி இருக்குமானுல், ஒவ்வொன்றும் தனித்தனி வகையில் தோற்றுவிக்கப்பட்டிருக்க வேண்டும். மனித வர்க்கம் முழுதும் ஒன்றேயாகையால், அதன் சக்தியும் ஒரே வகையில்தான் தோன்றியிருக்கவேண்டும். அது மனிதனிடமிருந்தே வெளிப்பட்டிருக்கவேண்டும்.

அமெரிக்காவிலும், பிரான்ஸிலும் தோன்றிய புரட்சிகளிலிருந்தும், புரட்சியின் அறிகுறிகள் பிறநாடுகளில் தென்படுவதிலிருந்தும் அரசாங்க முறைகள் பற்றி உலக அபிப்பிராயம் மாறிவருகிறது என்பதையும், புரட்சியின் போக்கு பற்றி அரசியல்வாதிகள் திட்டமாகக் கூறமுடியாது என்பதையும் புரிந்துகொள்ளலாம். காலமும் சந்தர்ப்பங்களும் மாறுவதை மக்கள் மகத்தான மாறுதல்களின் விளைவு என்று கருதுகின்றனர். அறிவின் வலுவினுலும், சிந்தனு சக்தியின் வேகத்தினுலும் புரட்சிகள் ஏற்படுகின்றன. இவைகளை அளவுகோல் கொண்டு அளப்பது போல் திட்டப்படுத்திக் கூறமுடியாது.

நிகழாது எனக் கருதப்பட்ட புரட்சிகள் நிகழுவதனுல் பழைய அரசாங்கங்கள் அதிர்ச்சி யடைந்திருக்கின்றன. ஆகையினுல் மக்கள் புரட்சியை அதிசயக் கண்கொண்டு பார்க்கின்றனர்.

முடியாட்சியிலும், பரம்பரை ஆட்சியிலும் மனிதன் சொல்லொணுக் கஷ்டப்பட்டான்; ஓர் ஆட்சியினர் அவனை வீட்டைவிட்டு அகற்றினர்; மற்ருேர் ஆட்சியினர் அவனை பிரட்டியே அடித்தனர். பகைவர்கள் செயல்களைவிட வரிப் பளுவே அவனை ஓட்டாண்டியாக்கிவிட்டது. இவைகளையெல்லாம் பார்த்தால் இந்த ஆட்சி முறைகள் மோசமானவை என்பது நன்கு விளங்குகிறது. அரசாங்கத்தின் அடிப்படைக் கொள்கைகளிலும், அமைப்பிலும் புரட்சி ஏற்பட்டே ஆகவேண்டும் என்பதையும் உணருகிருேம்.

ஒரு நாட்டினரின் வாழ்க்கை நலன்களை நிர்வகித்து ஒழுங்கு செய்வதைத் தவிர அரசாங்கத்திற்கு வேறு என்ன வேலை இருக்கிறது? ஆட்சி என்பது ஒரு தனி மனிதனின் பொறுப்பல்ல; அப்படி இருக்கவும் முடியாது. பொது மக்கள் ஆதரவில் நடக்கும் ஆட்சி சமூகத்தின் பொறுப்பே யாகும். பலாத்காரத்தினுலோ, சூழ்ச்சியினுலோ அது வாரிசுக் கிரமத்திற்குள்ளாகி விட்டது. இதனுல் அரசாங்கத்தின் ஒழுங்கு முறையை மாற்றமுடியாது. ஆதிபத்தியம் என்பது தேசமக்களின் உரிமையேயொழிய தனி மனிதனின் உடைமையாகாது. தங்கள் நலனுக்கு மாருன எந்த ஆட்சியையும் ஒழித்துவிட்டுத் தங்கள் நன்மைக்கும், விருப்பத்திற்கும், சுக வாழ்க்கைக்கும் ஏற்ற ஆட்சியை அமைத்துக்கொள்ளுவது மக்களின் தவிர்க்க முடியாத உரிமை. மனிதர்களை அரசனென்றும் குடிமக்கள் என்றும் பிரித்துவைக்கும் காட்டுமிராண்டித்தனம் அரச தாசர்களுக்கு ஏற்றதாயிருக்கலாம்; பிரஜைகளுக்கு ஏற்றதே யல்ல. தற்காலத்தில் அரசாங்க அமைப்புக் கொள்கை மூலம் இந்த உளுத்துப்போன பாகுபாடு அடிபட்டுப்போய்விட்டது. ஒவ்வொரு பிரஜையும் நாட்டு மன்னன்; ஆகையினுல் அவன் சட்டத்தைத் தவிர வேறு யாருக்கும் தலைவணங்க முடியாது.

அரசாங்கம் என்ருல் என்ன என மக்கள் சிந்தித்துப் பார்த்தால், அது வகிக்கும் அதிகாரத்தின் அடிப்படை நோக்கம் என்ன என்பதை அறியலாம். இந்த முறையில் பார்த்தால் அமெ

ரிக்காவிலும், பிரான்ஸிலும் அமைக்கப்பட்ட குடியரசு எல்லா மக்களின் நலன்களையும் பாதுகாக்கிறது. அரசாங்கத்தின் எல்லாப் பகுதிகளின் நலன்கள் யாவை என அறியும் ஞானம் இந்தப் பகுதிகளில் சேர்ந்து அமைக்கப்பட்டுள்ள ஆட்சியில் அமைந்திருக்கிறது என்பதை உணரலாம். பழைய ஆட்சிகளின் அமைப்பில் அறிவுக்கோ, இன்ப வாழ்க்கைக்கோ இடமில்லை. தங்கள் மடங்களைத் தவிர வெளி உலகம் அறியாத மடாதி பதிகள் ஆட்சிக்கும் மன்னர் ஆட்சிக்கும் வித்தியாசமே இல்லை.

பதவியிலிருப்பவர்களை மாற்றுவதையோ, அல்லது சந் தர்ப்ப மாறுதல்களையோ முன்னமெல்லாம் புரட்சி என்று கருதினர். எதையாவது எறிந்தால் கீழே விழுவதுபோல் பதவியிலிருந்தவர்கள் வீழ்ந்தனர். இந்த வீழ்ச்சி நிகழ்ந்த சுற் றுப்புறத்தைத் தவிர அதனால் உலகில் விசேஷ மாறுதல் எதுவும் ஏற்படவில்லை. இன்று அமெரிக்க, பிரஞ்சு புரட்சிகளிலிருந்து இயற்கை அமைப்பே மறுமலர்ச்சி பெறுவதைக் காண்கிறோம். சத்தியம், மனிதன் உயிர் வாழ்வது போன்ற எல்லோரும் ஒப்புக் கொள்ளத்தக்க கொள்கைகள் நிலைபெறுவதைக் காண்கிறோம்; இதன் விளைவாகத் தேசம் சுபிட்சமடைந்து அறம் நிறைந்த இன்ப வாழ்வுக்கு இடம் ஏற்பட்டுள்ளதையும் உணருகிறோம்.

பிரஞ்சு உரிமைப் பிரகடனத்தின் முதல் மூன்று ஷரத்துக்கள் மூலம் பேராசை தலைவிரித்தாடி நாட்டில் குழப்பமேற்படு வதற் கொன்றுமில்லை. இந்த உரிமைகள் மூலம் மனிதனின் அறிவும் திறமையும் சிறப்புறுவதுடன், இவைகளைச் சில தனிப் பட்டவர்கள் அல்லது குடும்பத்தினர் நலனைப் பெருக்குவதற்குப் பயன்படுத்தாமல் பொது நலம் வளர்வதற்குப் பயன்படுத்தப் படும். மனிதவர்க்கத்தின் விரோதியும், துயரத்திற்குக் காரணமா யுள்ளதுமான மன்னர் ஆதிபத்தியம் ஒழிக்கப்பட்டு விட்டது. ஆதிபத்தியம் அதன் இயல்பான உறைவிடமான மனிதவர்க்கத்தினிடம் திரும்பச் சேர்ந்துவிட்டது. இதே நிலை ஐரோப்பா வெங்கும் நிலவுமானல் யுத்தங்கள் நிகழக் காரணமே இருக்காது.

பரந்த உள்ளம் படைத்த, கருணைமிக்க பிரஞ்சு மன்னன் நான்காவது ஹென்றி (1589-1610) 1610-ஆம் ஆண்டில் ஐரோப் பாவில் யுத்தம் நிகழாமல் தவிர்க்க ஒரு திட்டம் வகுத்ததாகக்

கூறப்படுகிறது. ஐரோப்பிய காங்கிரஸ் அல்லது சமாதான நோக்குள்ள முடியரசு அமைப்பது; இதற்குப் பல நாடுகள் பிரதிநிதிகளை அனுப்புவது; ஒரு நாட்டிற்கும் மற்றொரு நாட்டிற்கும் சச்சரவு ஏற்பட்டால் இந்தப் பிரதிநிதிகள் மத்தியஸ்தம் செய்யும் நீதிஸ்தலம்போல் பணிபுரிய வேண்டியது. இதுதான் அந்த மன்னன் திட்டத்தின் சாராம்சம். இந்த யோசனை கூறப்பட்ட காலத்தில் இந்தத் திட்டம் நிறைவேறியிருக்குமானால், பிரான்ஸ், பிரிட்டன் இரு நாடுகளிலும் பிரெஞ்சுப் புரட்சியின் ஆரம்பகாலத்தில் இருந்ததை விட வரிப் பளு நூறு லட்சம் பவுன் குறைவாக இருந்திருக்கும்.

இம்மாதிரி நல்ல திட்டமொன்றை ஏன் அமுல் செய்யவில்லை, யுத்தத்தைத் தவிர்ப்பதற்கு மகாநாடு கூட்டுவதற்குப் பதிலாக, பல ஆண்டுகளாக ஒரு பயனுமின்றி நடந்த சண்டையை நிறுத்துவதற்கு ஏன் மகாநாடு கூட்டினர் என்பதற்குக் காரணம் கண்டுபிடிக்க வேண்டுமாயின் அரசாங்கங்களின் அக்கறை என்ன, இதற்கு எதிரிடையாக தேச மக்களின் அக்கறை என்ன என்பதை ஆராயவேண்டியது அவசியமாகிறது.

மக்களுக்கு வரி விதிக்கக் காரணம் யாதா யிருந்தாலும், அதனல் அரசாங்கத்திற்கு வருவாய் கிடைக்கும் சாதனமா யிருக்கிறது. ஒவ்வொரு யுத்தம் முடிந்ததும் சம்பந்தப்பட்ட நாடுகளில் வரி உயர்கிறது. அதன் விளைவாக அரசாங்கங்களின் வருவாய் பெருகுகிறது. இப்பொழுது யுத்தம் தொடங்கும் முறையையும், அதை நிறுத்தும் முறையையும் பார்த்தாலும் அரசாங்கங்களின் அதிகாரமும் அக்கறைகளும் வளருகின்றன. யுத்தத்தின் விளைவாக வரி விதிக்க வியாஜம் ஏற்படுகிறது. பல்வேறு பதவிகளுக்கு ஆட்கள் நியமிக்க சந்தர்ப்பம் கிடைக்கிறது. இந்த அடிப்படையிலிருந்து பார்த்தால் பழைய அரசாங்கங்களுக்கு யுத்தம் புரிவது ஒரு முக்கிய வேலையாக இருந்தது என்பதை உணரலாம். யுத்தங்களை அறவே ஒழிக்க ஏற்பாடு செய்வது நாட்டு மக்களுக்கு எவ்வளவு நல்லதா யிருந்தாலும் அதன் மூலம் அரசாங்கங்களின் லாபகரமான ஒரு தொழிலுக்கு முற்றுப்புள்ளி வைப்பதாகும். அற்ப காரணங்களுக்காக யுத்தம் தொடங்குவதைப் பார்த்தால் அரசாங்கங்கள் யுத்த முறைகளை நிலைநாட்ட எவ்வளவு ஆவலா

யிருக்கின்றன என்பதையும், அவைகளுடைய தீய நோக்கங்களையும் நன்கு புரிந்துகொள்ளலாம்.

குடியரசுகள் ஏன் யுத்தங்களில் மூழ்குவதில்லை? அந்த அரசாங்கங்களில் ஆட்சியினருக்கும் மக்களுக்கும் மாறுபட்ட அக்கறைகளுக்கு இடம் இல்லை. ஹாலந்தில் குடியரசு சீராக அமைக்கப்படாவிட்டாலும், அந் நாட்டினர் உலகெங்கும் வர்த்தகத் தொடர்பு கொண்டிருந்தாலும் கிட்டத்தட்ட ஒரு நூற்றூண்டிற்கு யுத்தமின்றியே வாழ்ந்தனர். பிரான்ஸில் அரசாங்கம் மாறுதலடைந்ததும் அதன் விளைவாக குடியரசின் லட்சியங்களான அமைதியும், உள்நாட்டு சுபிட்சமும் நிலைபெறத் தொடங்கி விட்டன. குடியரசு ஏற்படும் இடங்களில் இதே மாதிரி நலன்களும் பெருகும்.

பழைய முறையில் அமைந்த அரசாங்கங்களின் விளைவாகவே யுத்தம் தொடங்குவதால் நாடுகள் கொள்ளும் பரஸ்பர பகைமை உணர்ச்சி, அந்தந்த அரசாங்கங்கள் யுத்த உணர்ச்சியை மக்களிடையே தூண்டுவதற்காகச் செய்யும் காரியங்களின் விளைவேயாகும். ஒவ்வொரு அரசாங்கமும் மற்ற அரசாங்கங்கள் மீது பொய்மை, சூழ்ச்சி, பேராசை முதலிய தீமைகளுக்குள்ளாயிருப்பதாகக் குற்றம் சாட்டுகின்றது. இப்படிச் செய்வதற்குக் காரணம் இரு கட்சிகளிடையே யுத்த வெறியைக் கிளப்பவேதான். மனிதர்கள் பரஸ்பர விரோதிகளல்ல; பொய்மை நிறைந்த ஆட்சி முறையின் விளைவாகவே விரோத பாவம் வளருகிறது. மன்னர்களின் பேராசையைத் தாக்குவதற்குப் பதிலாக அரசாங்க அமைப்புக் கொள்கையையே தாக்கவேண்டும். தனிப்பட்டவர்களைச் சீர்திருத்துவதற்குப் பதிலாக ஆட்சி முறைகளைச் சீர்திருத்த வேண்டும்.

இன்றுள்ள ஆட்சி முறை, அதன் நடைமுறைக் கொள்கைகள், ஆதியில் அவை தோன்றிய கால உலக நிலைக்கேற்ப அமைந்திருக்கின்றனவா என்பது தற்போது நாம் கவனிக்க வேண்டிய பிரச்னையல்ல. அவைகள் எவ்வளவுக்கெவ்வளவு புராதனமா யிருக்கின்றனவோ, அவ்வளவுக்கவ்வளவு அவை தற்கால நிலைமைக்கேற்றவையல்ல. காலப்போக்கும், சந்தர்ப்ப மாறுதல்களும் மக்களின் பழக்க வழக்கங்களை மாற்றுவதுபோல் பழைய அரசாங்க முறைகளையும் தற்காலத்திற்குப் பய

ணற்றவைகளாகச் செய்து விடுகின்றன. விவசாயம், வர்த்தகம், தொழில்கள், கலைகள் முதலியவற்றின் மூலம்தான் மக்களின் சுபீட்சம் பெருகுகிறது. இவைகள் சீராக வளரவேண்டுமானுல் பழைய முறைகள் மறைந்து புதிய நிர்வாக முறைகள் உதயமாக வேண்டும்.

மனிதவர்க்கம் அறிவிலும், பண்பாட்டிலும் மேம்பட்டிருப்பதிலிருந்து பரம்பரை வாரிசு ஆட்சி முறை நலிவுற்று வருகிறது என்றும், தேசீய ஆதிபத்திய அடிப்படையில் புரட்சிகள் நிகழ்ந்து வருகின்றன என்றும், ஐரோப்பாவில் பிரதிநிதித்துவ ஆட்சி முறை முன்னேறி வருகிறது என்றும் எளிதில் புரிந்து கொள்ளலாம். இந்த நிலையில் கிளர்ச்சி, கொந்தளிப்பு மேலோங்காமல், நயமான முறையில் புரட்சியின் நோக்கங்களை ஈடேற்றிவைப்பதே புத்திசாலித்தனமாகும்.

இன்று நாம் கண்கூடாகப் பார்ப்பதிலிருந்து அரசியல் உலகில் சீர்திருத்தம் செய்வது அநுபவசாத்தியமானதல்ல என்று கூறமுடியாது. இந்தப் புரட்சி சகாப்தத்தில் எதுவும் நடைபெறக்கூடும். அரச தாசர்கள் சூழ்ச்சியினுல் யுத்தங்கள் சாத்தியமாயிருந்தன. இந்த சூழ்ச்சிக்காரர்களே ஒன்றுகூடி யுத்தம் ஏற்படாமல் தவிர்க்க பல நாட்டினரின் மகாநாடொன்றைக் கூட்டலாம். சுதந்திர அரசாங்கங்கள் முன்னேறவும், பல நாட்டினரின் நாகரிக நல்லுறவை வளர்க்கவும் முயற்சி செய்தால், முன்னர் பிரெஞ்சு, அமெரிக்கப் புரட்சியும் கூட்டுறவும் நிகழ்ந்ததுபோல், இந்த முயற்சியும் வெற்றிபெறும்.

மனித உரிமைகள்

(இரண்டாம் பாகம்)

முன்னுரை

யந்திர சக்திகளைப்பற்றி ஆர்க்கிமிடீஸ் எனும் கிரேக்க ஆசிரியர் கூறியது அறிவுக்கும், சுதந்திரத்திற்கும் பொருத்தமாயிருக்கிறது. ''நமக்கு நிற்பதற்குச் சிறிது இடம் மட்டுமிருந்துவிட்டால் உலகத்தையே நாம் உயர்த்தி நிறுத்தக்கூடும்'' என அவர் கூறியுள்ளார். யந்திரக் கலையில் கொள்கையளவிலிருந்ததை அமெரிக்கப் புரட்சி இயக்கம் அரசியல் துறையில் நிரூபித்துக்காட்டிவிட்டது. பழைய உலகத்திலுள்ள அரசாங்கங்கள் நிலைத்துவிட்டதனாலும், பழைய பழக்கங்களில் குரூரத்தன்மை மக்கள் மனத்தை ஆட்கொண்டு ஆட்டிவைத்ததனாலும் ஆசியா, ஆப்பிரிக்கா, ஐரோப்பா கண்டங்களில் மனிதனின் அரசியல் நிலையைச் சீர்திருத்த முடியவில்லை. உலகமெங்கும் சுதந்திரம் விரட்டியடிக்கப்பட்டு வருகிறது; அறிவு கிளர்ந்தெழுதல் எனக் கருதப்பட்டது. அச்சத்திற்கு அடிமைப்பட்ட மனிதனை சிந்தனை செய்யவே அஞ்சும்படிச் செய்துவிட்டது.

உண்மையின் காந்த சக்தி அளவிட முடியாததாயிருந்தாலும் அது கோருவதும், விரும்புவதும் அதை எல்லோரும் எளிதில் அறிந்துகொள்ளும் உரிமை பெறவேண்டுமென்பதுதான். இருளுக்கு மாறுபட்டதுதான் சூரியன் என்று பிறர் விளம்பரம் செய்து நாம் தெரிந்துகொள்ளவேண்டியதில்லை. அம்மாதிரியே அமெரிக்க அரசாங்கம் உலகமறிய அமைந்தவுடன் யதேச்சாதிகாரம் அதிர்ச்சியடைந்தது. மனிதனும் தனது கஷ்டங்களுக்குப் பரிகாரம் காணலாம் என்பதை உணர்ந்தான்.

அமெரிக்கா சுதந்திரமடைந்ததை இங்கிலாந்திலிருந்து பிரிந்தது என்று மட்டும் அர்த்தம் செய்துகொண்டால் அது அவ்வளவு மகத்தான விஷயமல்ல; அதன் விளைவாக அரசாங்க அமைப்புக் கொள்கைகளிலும், நடைமுறைகளிலும் புரட்சி ஏற்பட்டதுதான் அதற்கு மகத்துவத்தை அளித்தது. அமெ

ரிக்கா தனக்காக மட்டும் போராடவில்லை. உலகத்திற்காகவே போராடிற்று; தனக்குக் கிடைக்கக்கூடிய நலன்களை மட்டும் கண்டு அது திருப்தி யடைந்துவிடவில்லை. ஜெர்மானியர் கூலிப் படையினராக வந்து போர் புரிந்தாலும் தாங்கள் தோல்வி யுற்றது நல்லதற்கே என்பதை உணர்ந்திருப்பார்கள். இங்கி லாந்து தனது அரசாங்கத்தின் தீய போக்குகளைக் கண்டித்து அதன் நிர்வாகம் இதில் தோல்வியுற்றதுபற்றி மகிழ்ச்சி யுற்றிருக்கும்.

அரசியல் உலகில் அமெரிக்கா நாட்டில்தான் எல்லாத் துறைகளிலும் சீர்திருத்தம் தொடங்க முடியும் என்பதேபோல, இயற்கை அமைப்பிலும் அமெரிக்காவே முதல் ஸ்தானம் வகித்தது. பலவிதமான சந்தர்ப்பச் சேர்க்கைகளினால் அமெரிக்கா எனும் புதிய நாடு உதயமாவது சாத்தியமாயிற்று என்பது தவிர, அதே காரணத்தினால் அதன் கொள்கைகள் பிரமிப்படையத்தக்க உறுதி பெற்றன என்றும் கூறலாம்.

அமெரிக்க நாட்டைப் புதிதாக வந்து பார்ப்பவர்கள் மனத்தில் அந்த நாடு அளிக்கும் காட்சி மகத்தான கருத்துக்கள் உதயமாக உதவுகிறது. இயற்கை அவர்களுக்கு விசுவரூப தரிசன மளிக்கிறது. அவர்கள் பார்க்கும் பிரம்மாண்டமான விஷ யங்கள் அவர்கள் மனத்தை விரிவுபடுத்துவதுடன் அவர்களையே பெரியவர்களாக ஆக்குகிறது. இந்த நாட்டில் முதன் முதலில் குடியேறியவர்கள் பல்வேறு நாடுகளிலிருந்து வந்தவர்கள்; பல்வேறு தொழில்களை, மதங்களைப் பின்பற்றியவர்கள்; பழைய உலக அரசாங்கங்களின் கொடுமை தாங்காமல் புது உலகில் புகுந்து நண்பர்களாக ஒருவருக்கொருவர் பழகத் தொடங்கினர். அரசாங்கங்களின் சச்சரவுகளாலும், சூழ்ச்சிகளாலும் அமைத்து வளர்க்க முடியாத சமூக அமைப்பை, புதிய உலகில் வனாந்தரமா யிருந்த இடங்களை வளப்படுத்தக் கற்றதன் மூலம் சீராக அமைத்தனர். இந்தச் சூழ்நிலையில் மனிதன் தனக்கேற்ற உயர் நிலையை அடைகிறான். மனித வர்க்கத்தை பகைமைக்கண் கொண்டு பாராமல் தன் உடன்பிறந்தார்கள் போல் பாவிக் கிறான். இந்த உதாரணத்தைக் கண்டு இயற்கையினிடமிருந்து நிரம்ப அறிந்துகொள்ள வேண்டியதிருக்கிறது என்பதைச் செயற்கை வசப்பட்ட உலகம் அறிந்துகொள்ளுகிறது.

முன்னேற்றப் பாதையில் எல்லாத் துறைகளிலும் அமெரிக்கா அடைந்திருக்கும் அபிவிருத்தியைக் கண்டு ஆசியா, ஆப்பிரிக்கா, ஐரோப்பா கண்டங்களிலுள்ள நாடுகள் இந்த முறையைப் பின்பற்றி யிருந்தால், அல்லது தீமையால் ஆதியில் பாழ்படா திருந்திருக்குமானுல் அவைகள் இப்போதிருப்பதைவிட மேலான நிலையடைந்திருக்கும். அவைகளின் கஷ்டத்தையே சகாப்த சகாப்தமாக உலகம் பார்த்துக்கொண்டிருக்கவேண்டி யிருந்தது. இந்த உலகத்தைப்பற்றி ஒன்றுமே அறியாத ஒருவன் அதைப் பார்த்து அதுபற்றித் தனது கருத்துக்களைத் தெரிவிக்கும்படி அனுப்பப்பட்டிருந்தால் பழைய உலகம் மாறும் தசையிலிருக்கிறது, ஆரம்ப நிலையில் ஏற்படும் கஷ்டங்களைச் சமாளிக்க உலகம் முயன்றுகொண்டிருக்கிறது என்றே கருதுவான். பழைய உலகில் மறைந்திருந்த எண்ணற்ற ஏழை மக்கள் இன்னும் தங்களது தேவைகளைத் தீர்த்துக்கொள்ள அவகாசம் பெறவில்லை என்று நினைப்பான். அரசாங்கத்தின் போக்கினுல் அவர்கள் அல்லலுற்றிருக்கின்றனர் என அவன் நினைக்கமாட்டான்.

பழைய உலகிலே கஷ்ட நிலையிலிருப்பவர்களை விட்டுவிட்டு சற்று மேம்பட்ட நிலையிலிருப்பவர்களை நோக்குவோமானுல் பேராசை பிடித்த அரசாங்கம் மூலைமுடுக்குகளிலெல்லாம் புகுந்து தொழிலில் மக்கள் சேமித்து வைத்திருப்பதைக் கொள்ளை கொள்ளுவதைக் காண்போம். வருவாயைப் பெருக்கி, வரி விதிப்பதற்குப் புதுப்புது வழிகள் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன. சுபிட்சத்தை என்று பலியிடலாம் என்பதிலேயே அரசாங்கம் கவனம் செலுத்தி வருகிறது; தனக்குக் காணிக்கை செலுத்தாமல் போக யாரையும் அது விடுவதில்லை.

புரட்சிகள் ஆரம்பமாவது சற்று கடினமேயொழிய ஆரம்பமாகிவிட்டால் அது துரிதமாகவே போகும். புரட்சிகள் தொடங்கிவிட்டதனுல் மற்றும் பல புரட்சிகள் நிகழலாம் என எதிர்பார்ப்பது இயல்பு. பழைய அரசாங்கங்கள் வியப்புறும் வகையில் நிர்வாகச் செலவுகளைப் பெருக்கிக்கொண்டே போகின்றன; அவைகள் பல யுத்தங்களில் ஈடுபட்டிருக்கின்றன; மேலும், பல யுத்தங்களைத் தூண்டி விடுகின்றன; வியாபாரமும், நாகரிகமும் பெருகுவதற்குப் பல தடங்கல்கள் செய்கின்றன; உள்நாட்டில் கொடுங்கோன்மை புரிந்து, இல்லாத அதிகாரங்

களை மேற்கொள்ளுகின்றன; இவைகளெல்லாம் மக்களுடைய பொறுமையைச் சோதிப்பதுடன் உலக மக்களின் சொத்துக்கள் அழிவதற்குக் காரணமாயிருக்கின்றன. இம்மாதிரி நிலையில் புரட்சிகளை எதிர்பார்க்கலாம் என்பதற்குப் பழைய நிகழ்ச்சிகளே போதிய சான்றுகளாகும். புரட்சிகள் பற்றியே எங்கும் பேச்சாயிருக்கிறது; அவைகளை தினசரி நிகழ்ச்சிகளாகவே கருதலாம்.

குறைந்த செலவில் மிகுந்த பயனளிக்கவல்ல அரசாங்க முறைகளை அமைக்க முடியுமானால் அவைகளின் முன்னேற்றத்தைத் தடுப்பது முடிவில் பயனற்றதாகவே போய்விடும். காலத்தைப் போலவே அறிவும் தானாகவே முன்னேறும். அக்கறையை வெறுப்பு எதிர்த்து நிற்குமானால் பிந்தியது வீழ்ச்சியுறும். எங்கும் அமைதி நிலவுவது, நாகரிகமடைவது, வர்த்தகம் செய்வது இவைகளே மனிதனின் ஆசைகளானால் அவைகள் கைகூட அரசாங்க முறைகளில் புரட்சி நிகழ்ந்தேயாகவேண்டும். முடியாட்சி அரசாங்கங்கள் யாவும் ராணுவ அடிப்படையில் அமைந்தவை. போர் புரிவதே அவைகளின் தொழில்; வருவாயைப் பெருக்குவதே அவைகளின் நோக்கம். இம்மாதிரி அரசாங்கங்கள் நீடித்திருக்கும் வரையில் அமைதி என்பது ஒருநாள்கூட நிலவமுடியாது.

முடியாட்சிகளின் வரலாற்றில் எதைக் காண்கிறோம்? மனிதர்கள் கேவலமான நிலையில் வாழ்வதையும், இடையிடையே அற்பகாலத்திற்கு அமைதியாக வாழ்வதையுமே காண்கிறோம். போரினால் சலிப்படைந்து, மக்களை மக்கள் கொலைபுரிவதையும் கண்டு களைப்புற்று சற்று ஓய்வெடுத்துக்கொள்ள மக்கள் விரும்பினர். இதற்குத்தான் அமைதி என்று பெயர். இந்த நிலையிலே தான் மனிதன் வாழவேண்டும் என ஆண்டவன் விரும்பவில்லை. இது தான் முடியாட்சியெனில் அதை யூதர்கள் செய்த பாபங்களில் ஒன்ருகக் கருதிவிடலாமே!

உலகத்தில் முந்தி நிகழ்ந்த புரட்சிகளில் உலக மக்களில் பெரும்பாலோர் அக்கறை கொள்ளவில்லை. அந்தப் புரட்சிகள் எல்லாம் ஆட்சிபுரிந்தவர்களை மாற்றி அமைப்பதிலும் சிற்சில திட்டங்களை மாற்றி அமைப்பதிலுமே கவனம் செலுத்தின. அவைகளால் கொள்கைகள் மாறவில்லை. அவைகள் அவ்வப்போது ஏற்படும் விவகாரங்களே. இப்பொழுது

நிகழும் புரட்சிகளைப் பழையவைகளுக்கு "எதிர்ப் புரட்சி" என்று கூறுவதே பொருத்தமாகும்.

போரில் வெற்றி, கொடுங்கோன்மை முதலியவைகளால் பழங்காலத்தில் இழந்த உரிமைகளை இப்பொழுது மக்கள் திரும்பப் பெற்றுவருகின்றனர். மனித விவகாரம் எனும் வெள்ளத்தில் ஒன்றுக்கொன்று நேர்மாறான ஏற்றமும் தாழ்வும் ஏற்படுவதுபோல் இந்தப் புரட்சிகளிலும் உண்டு. ஆயுத பலத்தின் அடிப்படையில் அமைந்த அரசாங்க முறைகள் மேற்கே இருந்து கிழக்கே பரவியதைவிட துரிதமாக அறநெறி அடிப்படையில், நிலையான அமைதி அடிப்படையில், பறிக்க முடியாத மனிதன் யுக யுகாந்தரமாக அநுபவித்த உரிமை அடிப்படையில் அமைந்த அரசாங்க முறையும் மேற்கிலிருந்து கிழக்கிற்குப் பரவிவருகிறது.

எந்தக் கொள்கை அளவில் புரட்சி தோன்றவேண்டுமோ, அவைகளால் என்ன நற்பயன்கள் விளையுமோ அவைகளை நன்கு உணர்ந்துகொள்ளாமல் புரட்சி தொடங்குவது அபாயமாகும்.

அரசாங்கம் எனும் மர்மம் நிறைந்த மொழியில் ஒரு தேச மக்களின் நிலையை அடக்கி குழப்பத்தை விளைவிக்கிறார்கள். தான் செய்யும் தவறுகளையும், விஷமத்தனங்களையும் தனது பொறுப்பென அரசாங்கம் ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் சுபிட்ச சாயையுள்ள யாவற்றையும் தானே விளைவித்ததாகப் பெருமையடித்துக்கொள்ள அது தவறுவதில்லை. தொழிலில் கிடைக்கும் ஊதியத்தைப்பற்றி தொழிலதிபர்கள் பெருமைப்படுவதை அரசாங்கம் தவிர்த்து மனிதன் ஒரு சமூக உணர்வுள்ளவன் எனும் பெருமையையும் அது அபகரித்துவிடுகிறது.

புரட்சி நிலவும் இந் நாட்களில் அரசாங்கம் நிலவுவதனால் ஏற்படும் விளைவுகளையும், அதனால் ஏற்படாத விளைவுகளையும், நாம் நன்கு ஆராய்ந்து பார்க்கவேண்டும். சமூகம், நாகரிகம் இரண்டையும், அவைகளினால் ஏற்படும் பயன்களையும், அரசாங்கங்களினால் ஏற்படும் விளைவுகளையும் தனித்தனியாக ஆராய்ந்து பார்க்கவேண்டும். இந்த ஆராய்ச்சியைத் தொடங்குவதனால் விளைவுகளின் சரியான காரணங்களைத் தக்கமுறையில் அறிந்து பொதுவாக ஏற்படும் தவறுகளைப்பற்றி அலசி ஆராய்ந்தும் பார்க்கலாம்.

சமூகமும், நாகரிகமும்

மனிதர்களிடையே நிலவும் ஒழுங்கில் பெரும் பகுதிக்கு அரசாங்கம் பொறுப்பாளியல்ல. இந்த ஒழுங்கின் மூலகாரணம் சமூக அமைப்புக் கொள்கைகளும், மனிதனின் இயல்பான அமைப்புமேயாகும். இந்த ஒழுங்கு அரசாங்கம் தோன்று முன்பே நிலவியது. அரசாங்கம் எனும் ஆடம்பரத்தை அகற்றி விட்டாலும் அந்த ஒழுங்கு நிலவும். ஒவ்வொரு மனிதனும் பிற மனிதனை நம்பியிருக்கவேண்டியதன் அவசியத்தினாலும், பரஸ்பர அக்கறை பின்னிக்கொண்டிருப்பதனாலும், ஒரு நாகரிக சமூகத்திலுள்ளவர்கள் ஒருவரையொருவர் அண்டி வாழவேண்டிய அவசியத்தினாலும் அவர்கள் ஒன்றுபட்டு வாழ்ந்து வந்தனர். நிலச்சுவான்கள், குடியானவர்கள், தொழில் மூலம் உற்பத்தி செய்பவர்கள், வர்த்தகர்கள், மற்றும் தொழில் செய்து பிழைப்பவர்கள் யாவரும் பரஸ்பர உதவியினாலும், சமூகத்தின் பொது ஆதரவினாலும் செழிப் படைகின்றனர். பொதுவான அக்கறையே அவர்களது தொழில்களை ஒழுங்குசெய்து அவைகளுக்கான சட்டங்களை இயற்ற உதவிபுரிகின்றன. பழக்கங்களினால் உயிர்பெற்ற சட்டங்களுக்கு அரசாங்க சட்டங்களைவிட மதிப்பு அதிகம். உண்மையில் அரசாங்கம் செய்வதாகக் கூறப்படும் யாவற்றை யும் சமூகமே நிறைவேற்றுகிறது.

மனிதனுக்கு எந்த அளவுக்கு, எம்மாதிரி அரசாங்கம் தேவை என்பதைப் புரிந்துகொள்ள மனிதனின் குணங்களை நாம் அறிந்துகொள்ள வேண்டும். சமூக வாழ்வுக்காகவே அவன் சிருஷ்டிக்கப்பட்டதனால் அதற்கான முறையிலேயே இயற்கை அன்னை அவனை அமைத்திருக்கிருள். அவனுடைய தனிப்பட்ட சக்தியைவிட அவனுடைய தேவைகள் அதிகமா யிருப்பது இயற்கையின் திருவுள்ளம் போலும்! எந்தத் தனி மனிதனும் சமூகத்தின் உதவியின்றித் தன் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள முடியாது. இந்த உண்மையை எல்லோரும் உணர்ந்ததனுல்தான் அவர்கள் யாவரும் சமூகமாக ஒன்றுபட்ட னர், ஈர்ப்பு சக்தி பொருள்களை இழுத்துக்கொள்ளுவதுபோல்.

இயற்கை இதோடு நின்றுவிடவில்லை. பல்வேறு தேவை களைப் பூர்த்தி செய்துகொள்ள வேண்டியதன் மூலம் மனிதர்களை

சமூகமாக ஒன்று கூட்டியதுடன் சமூக பாசங்களையும் அவர்களுக்கு உண்டாக்கியிருக்கிறுள். இந்தப் பாசங்கள் அவர்கள் உயிர்வாழ்வதற்கு அவசியமாக இல்லாவிட்டாலும் அவர்களது இன்ப வாழ்க்கைக்கு மிகவும் அவசியமாகும். இந்த சமூக பாசம் இல்லாத தருணமே கிடையாது. இந்தப் பாசம் அவன் பிறக்கையில் தோன்றி மடிந்தபின்தான் அவனை விட்டு அகலுகிறது.

மனிதனின் அமைப்பு, பலதரப்பட்ட அவனது தேவைகள், பரஸ்பரம் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ளுவதற்கு மனிதர்களிடம் அமைந்துள்ள பல்வேறு திறமைகள், சமூகத்தினிடம் அவனுடைய பாசம், இந்த பாசத்தினுல் அவனுக்குக் கிடைக்கக் கூடிய நன்மைகள் யாவற்றையும் நாம் கவனித்து ஆராய்ந்து பார்த்தோமானுல் அரசாங்கத்தின் பெரும் பகுதி நமக்கு அவசியமில்லாத சுமை என்பதை உணர்வோம்.

சமூகத்தினுலும், நாகரிகத்தினுலும் எளிதில் அளிக்க முடியாத சில வசதிகளை அளிக்கவே அரசாங்கம் தேவைப் படுகிறது. அரசாங்கம் பயனுள்ள வகையில் நமக்கு அளிக்கக் கூடிய உதவிகளை, அரசாங்க உதவியின்றி சமூகமே அளித்திருக்கிறது என்பதற்குப் பல உதாரணங்கள் கூறலாம்.

அமெரிக்க யுத்தம் தொடங்கி இரண்டு ஆண்டு காலத்திற்கு, பல அமெரிக்க ராஜ்யங்களில் அதற்கும் நீண்டகால அளவிற்கு அமைப்பான அரசாங்கங்கள் இல்லவே இல்லை. பழைய அரசாங்கங்கள் கலைக்கப்பட்டுவிட்டன. நாட்டினர் தற்பாது காப்பில் ஈடுபட்டிருந்ததனுல் புதிய ஆட்சி அமைப்பதில் கவனம் செலுத்த முடியவில்லை. ஆனுல் யுத்தம் நீடித்த இந்த இடைக் காலத்தில் ஐரோப்பாவில் எந்த நாட்டிலும் உள்ள ஒழுங்கும் அமைதியும் இங்கேயும் நன்கு பாதுகாக்கப்பட்டன.

மனிதனுக்கு இயல்பாகவே ஒருவிதத் திறமை இருக்கிறது. இது சமூகத்தில் இன்னும் சற்று கூடுதலாகவே காணப்படுகிறது. எந்த நிலைமையையும் சமாளித்துக் கொள்ளக்கூடிய பல்வேறு சக்திகளும், வசதிகளும் இருக்கின்றன. அரசாங்கம் கலைந்த அக்கணமே சமூகம் செயல்புரியத் தொடங்கிவிடுகிறது. பொதுவாக எல்லோரும் ஒன்றுகூடுகின்றனர். பொதுவான அக்கறையின் விளைவாகப் பொதுவான பாதுகாப்பு ஏற்படுகிறது.

அரசாங்கம் கலைந்தால் சமூகமும் சீர்குலைந்து விடுகிறது எனச் சிலர் பசப்புகிறார்கள்; இது உண்மையல்ல. சமூகம் சிதைவதற்குப் பதிலாக இன்னும் சற்று ஒன்றுபட்டு இணைந்து பணி புரியும். அரசாங்கத்திடம் ஒப்படைக்கப்பட்ட சமூகத்தின் பகுதிகள் மீண்டும் அதனிடமே வந்து அது செயல்புரியத் தொடங்குகிறது.

இயற்கை உணர்விலுலோ அல்லது பரஸ்பர நலன் கிடைக்கின்றது என்கிற எண்ணத்திலுலோ மனிதர்கள் சீரான சமூக வாழ்வை நாகரிகமாக நடத்தப் பழகிவிட்டார்களானல் அவர்கள் அநுஷ்டித்துவரும் கொள்கை பலத்திலுலேயே அரசாங்கத்தில் அவர்கள் அவசியமெனக் கருதும் மாறுதல்களை நிறைவேற்றி விடுகின்றனர். சுருங்கக்கூறின் மனிதன் சமூகத்தின் சிருஷ்டியாகையால் அவனை அதைவிட்டுப் பிரிப்பது அசாத்தியம்.

நாகரிக வாழ்க்கைக்கு அரசாங்கம் அற்ப உதவியே புரிகிறது. மனிதனின் சிறந்த அறிவின் விளைவாக அமைந்த அரசாங்கம்கூட பெயரளவில் பிரமாதமாக விளங்குமேயொழிய உண்மையில் அதனுல் விசேஷ பயன் கிடைக்காது. சமூகம், நாகரிகம் இரண்டின் அடிப்படைக் கொள்கைகளும், எல்லோரும் ஒப்புக்கொண்டு பரஸ்பர உதவியினுல் அநுஷ்டித்து வரும் பொதுவான பழக்கமும், மக்கள் நலன், அக்கறை முதலியவைகள் எண்ணற்ற வகைகளில் நாகரிக மக்களை வளப்படுத்துவதும்—மிகச் சீராக அமைந்த அரசாங்கங்கள் செய்வதைவிட இவைகளே தனிப்பட்டவர்கள், மனித வர்க்கம் இரண்டின் பாதுகாப்பிற்கும், சுபிட்சத்திற்கும் சிறப்பான உதவி புரிந்திருக்கின்றன.

நாகரிகம் பரிபூரணமாகத் துலங்குமிடத்தில் அரசாங்கத்திற்கு அவ்வளவாக அவசியமிராது. ஏனெனில் சமூகம் தனது அலுவல்களைத் தானே கவனித்து அரசு புரிகிறது. ஆனல், பழைய அரசாங்கத்தின் நடைமுறைகள் இதற்கு நேர்மாறுனதாயிருப்பதனுல் அவைகளின் செலவு குறைவதற்குப் பதிலாக ஏறிக்கொண்டே போகிறது. நாகரிக வாழ்க்கைக்குச் சில பொதுப்படையான சட்டங்கள் இருந்தாலே போதும். இவைகளே பொதுப்படையாக நன்மை பயப்பதால் இவைகள்

அரசாங்கங்களால் நிர்வகிக்கப்பட்டாலும், படாவிட்டாலும் அதன் பயன் ஒரே மாதிரியே இருக்கும். சமூகத்தை முதலில் ஊக்குவித்த கொள்கைகள் என்ன, சமுகம் அமைந்த பிறகு எந்த நோக்கத்தைக்கொண்டு அதன் உறுப்பினர் பரஸ்பர நேசபாவத்துடன் வாழ்ந்தனர் என்பனவற்றைக் கவனித்தால், அரசாங்கம் அமையும் கட்டத்திற்கு வருவதற்கு முன்பே சமூகத்தின் பணிகள் பரஸ்பர ஒத்துழைப்பினாலேயே நிறைவேறி வந்திருப்பதைக் காண்போம்.

இந்த விஷயங்களைப் பொறுத்தமட்டில் முன்னர் நடந்த படியே நீடித்து நடக்க தன்னையறியாமலேயே மனிதன் பழக்கப்பட்டு விடுகிறான்; சமூகத்தின் சிறப்பான சட்டங்கள் யாவும் இயற்கை விதிகளை ஒட்டியவை. தனிப்பட்டவர்களுக்குள்ளோ, தேசங்களுக்குள்ளோ வர்த்தக சம்பந்தமான சட்டங்கள் பரஸ்பர நல அபிவிருத்தி அடிப்படையில் ஏற்பட்டவைகளே. அவைகளை மக்கள் பின்பற்றிக் கீழ்ப்படிந்து நடப்பதற்குக் காரணம் அரசாங்கத்தின் கட்டளையினால் அல்ல, அதனால் நன்மை விளையும் என்கிற உணர்வினால்தான்.

ஆனால் எத்தனை சந்தர்ப்பங்களில் சமூகத்தின் இயல்பான போக்கு அரசாங்கத் தலையீட்டினால் தடைப்பட்டு, அல்லது நாசமடைந்துவிடுகிறது. அரசாங்கம் சமூகநல அடிப்படையில் இயங்காமல் சுயநலத்தினாலும், ஓரவஞ்சனையினாலும், கொடுங்கோல் தன்மையினாலும் நடைபெறத் தொடங்கியதும் அது தடுக்க வேண்டிய பல தொல்லைகள் தாராளமாகத் தலைகாட்டுகின்றன.

முந்திய நாட்களில் இங்கிலாந்தில் பல்வேறு சமயங்களில் ஏற்பட்ட கலகங்களையும், கொந்தளிப்புகளையும் பார்த்தோமானால் அவைகள் அரசாங்கங்கள் இல்லாததனால் ஏற்படவில்லை, இவைகளைத் தூண்டிவிட்டதே அரசாங்கங்கள்தான் என்பதை உணர்வோம். சமூகத்தை ஒன்றுகூட்டி இணைப்பதற்குப் பதிலாக அவைகள், சமூகத்தைப் பிளவுபடுத்தின. அதனுடைய இயல்பான இணைப்புச் சக்தியை மாய்த்து அதிருப்திகளையும், கலவரங்களையும் கிளப்பிவிட்டன. அரசாங்கம் இல்லாதிருந்தால் இம்மாதிரி குழப்பங்கள் ஏற்பட்டிரா.

வர்த்தக வளர்ச்சிக்காக யதேச்சையாக மக்கள் ஒன்றுகூடுவதனுல, அரசாங்கத்தின் உதவியின்றி சமூக ஒற்றுமை உணர்வினுல் மக்கள் ஒன்றுபட்டால் இயல்பாகவே அவர்கள் ஏகோபித்து நடப்பதைப் பார்க்கிறோம். இதையும் அரசாங்கங்கள் இயங்கும் முறையையும் ஒப்பிட்டுப் பார்த்தால் அவைகள் ஒழுங்கு நிலவுவதற்குக் காரணமாக அமையாமல் ஒழுங்கைக் குலைப்பதில் அவைகள் அக்கறையோடிருப்பதைக் காண்போம். 1780-ஆம் ஆண்டில் நிகழ்ந்த கலகங்கள்* அரசாங்கமே தூண்டிவிட்ட வெறுப்புணர்ச்சியினுல் ஏற்பட்டனவே யொழிய அவைகளுக்கு வேறு காரணமில்லை. ஆனுல், இங்கிலாந்தைப் பொறுத்த மட்டில் வேறு காரணங்களும் இருந்தன.

அதிகப்படியான வரிகளும், அவைகளைத் தராதரமின்றி விதிப்பதும் எவ்வுளவுதான் அவைகளுக்கு சப்பைக்கட்டுக் கட்டினுலும் அவைகளால் தீய விளைவுகள் ஏற்பட்டே தீரும். பெரும்பாலான மக்கள் இந்த வரிக் கொடுமையினுல் ஏழ்மை நிலையடைந்து அதிருப்தியுற்று விடுவதனுலும் அவர்களுக்கு உண்மை நிலை யறிந்துகொள்ள வசதியில்லாததனுலும் அவர்கள் எளிதில் கலகம் செய்யும் மனப்போக்கடைந்து விடுகின்றனர். கலகங்களுக்கு மேலோட்டமான காரணங்கள் யாதாயிருந்தாலும் உண்மையான காரணம் இன்ப வாழ்க்கை நடத்த வகையில்லாததுதான். இதன் மூலம் அரசாங்கத்தில் ஏதோ கோளாறு இருக்கிறது, அதன் மூலம் சமூகப் பாதுகாப்புக்கு வசதியின்றிப் போய்விடுகிறது என்பது தெளிவாகத் தெரிகிறது.

தர்க்க வாதத்தைவிட உண்மையே உயர்வானதனுல் மேற்கூறப்பட்ட வாதங்கள் நியாயம் என்பதை உறுதிப்படுத்த அமெரிக்காவின் உதாரணம் நம் முன் தோன்றுகிறது. உலகிலேயே மக்கள் ஒருமனப்பட்டு வாழத்தக்க சூழ்நிலை இல்லாத நாடு எது என்று கேட்டால் அமெரிக்காவைத்தான் கூறலாம். அங்கே பல நாட்டு மக்கள், பல்வேறு ஆட்சி

*1778-இல் இங்கிலாந்தில் கத்தோலிக்கர்கள் மீதிருந்த சில தடைகள் சட்டமூலம் நீக்கப்பட்டன. 1780-இல் புரோட்டஸ்டண்ட் சங்கத்தின் தலைவரான கார்டன் பிரபு இந்தச் சட்டத்தை ரத்து செய்யக் கோரினுர். இதன் விளைவாகக் கலகங்கள் ஏற்பட்டு பல கத்தோலிக்க மாதாகோவில்களும் நியூகேட் சிறைச்சாலையும் தீக்கிரையாயின.

முறையில் வாழ்ந்து பழக்கப்பட்டவர்கள், பல மொழிகள் பேசுபவர்கள், பல மதக் கோட்பாடுகளைப் பின்பற்றுபவர்கள். இப்பேர்ப்பட்ட மக்கள் ஒன்றுபட்டு வாழ்வது முடியாது என்றே யாவரும் கருதக்கூடும். சமூக நலன், மனித உரிமைகள் இரண்டின் அடிப்படையில் அரசாங்கம் அமைப்பது எனும் எளிய கொள்கையைக் கடைப்பிடித்ததனுல் எல்லா தடங்கல் களும் அகன்று எல்லாப் பகுதிகளும் ஒன்றுசேர்க்கப்பட்டன. அமெரிக்காவில் ஏழைகள் ஒடுக்கப்படுவதில்லை. பணக்காரர் களுக்குத் தனி உரிமை கிடையாது. அங்கே வரிகள் குறைவு. ஏனெனில், அரசாங்கம் நீதியாக நடக்கிறது. அவர்கள் இழி நிலையடையக் காரணங்கள் இல்லாததனுல் அங்கே கலகங்களும் கொந்தளிப்புகளும் நிகழ்வதில்லை.

பர்க்போன்ற தர்க்கவாதிகள் இப்படிப் பலதரப்பட்ட மக்கள் எப்படி ஒன்றுபட்டு வாழமுடியும் என்பதற்குக் காரணம் கண்டு பிடிக்கத் தங்கள் மூளைகளைக் குடைந்துகொள்ளுவார்கள். ஏதாவது மோசடியினுல்தான் இந்த அற்புதம் நிகழ்ந்திருக்கக் கூடும் என்று அவர் அநுமானம் செய்திருப்பார். பலாத்காரத்தின் மூலம், அல்லது ஏதாவது ஒருவகைச் சூழ்ச்சியால் நிகழ்ந்திருக்க வேண்டும் என்றும் எண்ணியிருப்பார். அறியாதவர்களை அடக்கியாள ஏதாவது ஒரு மேதாவியைக் கண்டுபிடிக்க வேண்டும், ஆடம்பர அணிவகுப்புகள் மூலம் பாமர மக்களை மயங்கவைக்க வேண்டும் என்றும் போதித்திருப்பார். எண் ணற்ற ஆராய்ச்சிகளில் மூழ்கியதன் பயனுக இந்த ஒற்றுமைக்கு இயல்பான, எளிதான காரணத்தை விட்டுவிட்டுப் பல்வேறு விசித்திர முடிவுகளுக்கு அவர் வந்திருப்பார்.

அமெரிக்கப் புரட்சி சாதித்த மகத்தான நன்மை யாதெனில் அரசாங்க அமைப்புக் கொள்கைகளைக் கண்டுபிடித்ததும், அர சாங்கங்கள் மக்கள் மீது சுமையாக இருந்ததை அம்பலப் படுத்தியதும்தான். இதுவரையில் நடந்த புரட்சிகள் அரண்மனை களில் நடந்தனவே ஒழிய நாட்டில் நடக்கவில்லை. அந்தப் புரட்சி களில் ஈடுபட்டவர்கள் அரச தாசர்களே. அவர்கள் எவ்வளவு தான் சீர்திருத்த ஆர்வமுள்ளவர்களானுலும் தங்கள் செயலின் மோசடித்தன்மையை சாமர்த்தியமாக மறைத்தே வைத் திருந்தனர்.

இந்தப் புரட்சிகள் யாவற்றிலும் அரசாங்கங்கள் மர்மம் நிறைந்தவை, அவைகளைத் தாங்கள் மட்டுமே புரிந்துகொள்ளக் கூடியவர்கள் என்பதை ஜாக்கிரதையாகப் பாதுகாத்து வந்தனர். மக்கள் அறிந்து பயன்பெறக்கூடிய ஒரு விஷயத்தை ஜனங்களிடமிருந்து மறைத்துவைத்தனர். அதாவது சமூக நலக் கொள்கைகள் அடிப்படையில் இயங்கும் தேசீயக் கூட்டமைப்பே அரசாங்கம் என்பது.

பழைய அரசாங்க முறையும், புதியதும்

பழைய அரசாங்கங்கள் அமைந்த கொள்கைகளையும், சமூகம், நாகரிகம், வர்த்தகம் முதலியவைகள் மூலம் மனித வர்க்கம் எந்த அளவுக்கு முன்னேற முடியும் என்பதையும் ஒப்பிட்டுப் பார்த்தால் ஒன்றுக்கொன்று நேர்மாறுயிருப்பது விளங்கும். பழைய அரசாங்கங்கள் தங்கள் நலனை வளர்த்துக் கொள்ளவே அதிகாரத்தை மேற்கொண்டன. புதிய முறை அரசாங்கங்கள் சமூக நலனை வளர்க்கவே அமைந்துள்ளன. பழைய ஆட்சி போர்மூலம் தழைத்திருந்தது; புதிய ஆட்சி அமைதியை நிலைநாட்டுவதன் மூலம் மக்கள் சுபிட்சத்தை வளர்க்கிறது. பழையது நாட்டு மக்களிடம் வெறுப்புகளை வளர்த்தது; புதியது சமூகம் வளம்பெறுவதன் மூலம் எங்கும் வர்த்தகம் பெருக வகை செய்கிறது. முந்தியது கசக்கிப் பிழிந்து வரி வசூலிப்பதன் மூலம் தனது சுபிட்சத்தை எடை போட்டது; பிந்தியது தான் வசூலிக்கும் குறைந்த வரியின் மூலம் தனது ஆட்சிச் சிறப்பை நிரூபிக்கிறது.

பர்க் "'விக்கு'களில் பழையவர்கள் புதியவர்கள்" எனப் பாகுபாடு செய்து பேசுகிறார். பர்க் குழந்தைகள்போல் பெயர்களிலும், பட்டங்களிலும் மகிழ்ச்சி யடைவாரானால், அவருடைய ஆனந்தத்திற்கு அணைபோட நான் விரும்பவில்லை. இந்த அத்தியாயத்தை அவருக்காக நான் எழுதவில்லை. அப்பே ஸெய்யஸுக்காக* (Abbe Sieyes) நான் எழுதுகிறேன். இவருடன் முடியாட்சிபற்றி விவாதிப்பதாக வாக்களித்

*அப்பே ஸெய்யஸ் 1748-1836-இல் வாழ்ந்தவர். இவர் பிரஞ்சுப் புரட்சியை ஆதரித்தாலும் 'முடியாட்சி நிலைக்கவேண்டும்' எனவும் வற்புறுத்தினார்.

துள்ளேன். பழைய ஆட்சிகளையும், புதியனவற்றையும் ஒப்பிடு கையில் முடியாட்சியைப் பற்றியும் குறிப்பிடவேண்டிவரு வதனால் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொண்டு அது பற்றிய என் கருத்துக்களை வெளியிடுகிறேன். இடையிலே அவசியமானால் பர்க்குக்கும் பதில் கூறுவேன்.

இப்பொழுது புதியது என்று நாம் குறிப்பிடும் ஆட்சி, உண் மையில் புராதனமானது. ஏனெனில், மனிதனின் பிறப்புரிமை கள் எனும் மிகப் புராதனமான கொள்கை அடிப்படையில் அவை அமைந்துள்ளன. இடையிலே கொடுங்கோன்மையும், வாள் பலமும் தலையிட்டு மனித உரிமை பல நூற்றாண்டுகளாகத் தடைப்பட்டு விட்டதனால் அதைப் பழைய ஆட்சி என்றழைப் பதைவிடப் புதியது என்று குறிப்பிடுவதே பொருத்தமாகும்.

இந்த இரு முறைகளுக்கும் உள்ள ஒரு பொதுவான வித்தியாசம் பழைய ஆட்சி முறை எனப்படுவது முற்றிலுமோ, அல்லது ஓரளவோ பரம்பரை வாரிசு முறையுடையது. புதியது பிரதிநிதித்துவம் வாய்ந்தது. இது பரம்பரை முறையை முற்றிலும் எதிர்க்கிறது.

இந்த எதிர்ப்புக்கான காரணங்கள் இரண்டு: 1. அது மானிட வர்க்கத்தின் மீது அவர்கள் விரும்பாமலே சுமத்தப் பட்டுள்ளது. 2. அரசாங்கம் எதற்காக அவசியமெனக் கருதப் படுகிறதோ அந்த நோக்கம் கைகூடச் செய்ய இந்த முறைக்குப் போதிய சக்தி இல்லை.

இவ்விரண்டில் முதலாவதைக் கவனிப்போம். வாரிசு பாத்தியதை ஆட்சி எந்த நியாயத்தின்மீது தோற்று விக்கப்பட்டது என்பதை நிரூபிக்க முடியாது. மானிட வர்க் கத்திற்கு இந்த முறையை ஸ்தாபிக்க எவ்வித உரிமையும் கிடையாது. தனிப்பட்டோர் உரிமை விஷயத்தில் தனது பின் சந்ததியார் மீது அதிகாரம் செலுத்த மனிதனுக்கு உரிமை யில்லை. ஆகையால் மனிதனுக்கோ, மனித கோஷ்டிக்கோ பரம்பரை ஆட்சி அமைக்க உரிமை கிடையாது. நமக்குப் பின் சந்ததியார் தோன்றுவதற்குப் பதிலாக நாமே மீண்டும் உயிர் பெற்று வந்துவிட்டால் நமக்குள்ள உரிமைகளை நாமே பறித்து விட முடியாது. அப்படியானால் பிறர் உரிமைகளை நாம் எந்த ஆதாரத்தின்கீழ் பறித்துவிட முடியும்?

எல்லா பரம்பரை வாரிசு முறை அரசாங்கங்களும் இயல்பாகவே கொடுங்கோன்மை ஆட்சிகளேயாகும். வாரிசுரிமைக்குட்பட்ட முடியோ, அல்லது சிங்காதனமோ, அல்லது எந்த சிங்காரப் பெயர் கொண்டு அழைத்தாலும் அப்பெயர்கொண்ட முடியாட்சியோ—அவர்களுக்கு மனிதர்கள் வாரிசுரிமைச் சொத்துக்கள் என்பதைத் தவிர இந்த ஏற்பாட்டிற்கு வேறெந்த விளக்கமும் கூறமுடியாது. ஓர் அரசாங்கத்தை வாரிசு முறையில் பெறுவதென்பது அதற்குட்பட்ட மக்களை வாரிசுரிமையில் பெறுவதென்றுதான் அர்த்தம். அப்படியானல் மனிதர்கள் வெறும் ஆட்டுமந்தைகளா?

அரசாங்க வேலைகளை நிறைவேற்ற வாரிசுரிமை ஆட்சிக்குப் போதிய சக்தி இல்லை என்கிறதை ஆராய்ந்தால் நாம் அரசாங்க அதிகாரத்தின் சாரம் என்ன என்பதையும், என்ன சந்தர்ப்ப சூழ்நிலைக்கு வாரிசுரிமை அரசாங்கம் உட்பட்டுள்ளது என்பதையும் ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும். அரசாங்கம் என்பது எப்பொழுதும் முதிர்ந்த அறிவின் அழியாச் சின்னமாயிருக்கவேண்டும். தனிப்பட்டவர்கள் உட்படவேண்டிய சங்கடங்களுக்கு மீறியதாக அரசாங்கம் அமைக்கப்படவேண்டும். ஆகையினால் பரம்பரை பாத்தியதை ஆட்சி எல்லா தனிப்பட்டோர் சங்கங்களுக்கும் உட்பட்டதாகையால் அது எல்லா ஆட்சிகளையும்விட மிகவும் ஒழுங்கற்றது, குறைபாடுகள் நிறைந்தது என்பது தெளிவாகிறது.

சமப்படுத்தும் முறை என்று மனித உரிமைகளை வர்ணிப்பதைக் கேட்டிருக்கிறோம். இந்த **சமப்படுத்துதல்** எனும் பதம், பரம்பரை முடியாட்சிக்கே பொருந்தும். மனிதர் மூளையைச் சமப்படுத்துவதற்கு ஏற்றது இந்த பரம்பரை முடியாட்சி முறை. எல்லாவிதக் குணங்கள், குணக்கோளாறுகளுள்ளவர்களும் இந்த அதிகாரம் வகிக்க அநுமதிக்கப்படுகின்றனர். நல்லது கெட்டது, அறியாமை, அறிவு முதலிய நன்மை தீமை யாவும் ஒரே நிலையில் மதிப்பிடப்படுகிறது. ஒருவர் ஸ்தானத்திற்கு மற்றொருவர் வருவது மாதிரியன்றி விலங்குகள்போல மன்னர்கள் ஒருவர் பின் ஒருவராகப் பட்டத்திற்கு வருகின்றனர். இதிலிருந்து அவர்கள் அறிவு, ஒழுக்கம் எப்படிப்பட்டது என்பதை நாம் அறிய முடியாது.

இந்த முறையில் அமைந்த முடியாட்சியின் கீழ் மக்கள் மிக மட்டமான நிலையில் இருப்பது கண்டு நாம் ஏன் ஆச்சரியப்பட வேண்டும்? அந்த ஆட்சிக்கு நிலையான குணச்சிறப்பு கிடையாது. அது இன்று ஒருமாதிரி இருக்கும், நாளைக்கு வேறு ஒருமாதிரி இருக்கும். பட்டத்திற்கு வரும் ஒவ்வொருவரின் மனப்போக்குக் கேற்ப மாறிவரும். அகஸ்மாத்தாக நேரும் சம்பவங்கள், உணர்ச்சிகள் மூலம் நடக்கும் ஆட்சியே முடியாட்சி.

குழந்தைப் பருவத்தின் பல்வேறு நிலையில் இது இயங்குவதைக் காணலாம். நடக்கமுடியாத நிலை, ஒன்றையே நினைத்து வருந்துதல், தாதியின் பராமரிப்பு, தள்ளு வண்டியைப் பிடித்துக்கொண்டு நடப்பது முதலிய எல்லா நிலையிலும் முடியாட்சியின் இயல்புகளைக் காணலாம். இது இயற்கையின் ஒழுங்கையே தலைகீழாக்கி விடுகிறது. அந்த முறையின்கீழ் மனிதர்களைவிடக் குழந்தைகள் சில சந்தர்ப்பங்களில் மேம்பட்டவர்களாக மதிக்கப்படலாம்; அறிவாளிகள், அநுபவமிக்கோரைவிட முதுமைப் பருவத்தில் உளறுபவர்கள் மேலோராகக் கருதப்படலாம். எப்படிப் பார்த்தாலும் பரம்பரை வாரிசு ஆட்சியைவிடக் கேலிக்கூத்தான வேறு ஆட்சி இருக்கமுடியாது எனச் சுருக்கமாகக் கூறிவிடலாம்.

நற்குணமும், நல்லறிவும் பரம்பரை ஆட்சியின் சிறப்புகள் என இயற்கை விதியோ, ஆண்டவன் ஆணையோ இருந்து, அதை மனிதன் புரிந்துகொள்ளும்படி செய்துவிட முடியுமானால் அதை ஆட்சேபிக்காமல் விட்டு விடலாம். ஆனால், பரம்பரை ஆட்சி தனது ஏற்பாடல்ல என்பதுபோல் இயற்கை இயங்குகிறது என்பதையும், சாமானிய மக்களின் அறிவுக்கும் மட்டமான அறிவுள்ளவர்களே எல்லா நாடுகளிலும் அரச பீடத்தில் அமர்ந்திருப்பதையும், ஓர் அரசன் கொடுங்கோலன், மற்றொருவன் மடையன், மூன்றாமவன் பைத்தியக்காரன், மற்றும் சிலர் இந்த இழிநிலை எல்லாம் ஒருங்கே அமைந்தவர்கள் என்பதையும் கண்ணாரக் கண்டுவிட்ட பின் மனிதன் அறிவுள்ளவரையில் இந்த ஆட்சி முறையில் நம்பிக்கை வைக்கமுடியாது.

இந்த வாதத்தை நான் **அப்பே ஸெய்யெஸுக்குக்** கூறவில்லை. ஏனெனில், பரம்பரை முடியாட்சிபற்றி அவர் கருத்தைத்

தெளிவுபடக் கூறிவிட்டதனுல் அவருக்கு மறுமொழி கூறும் சங்கடத்தை அவர் எனக்கு வைக்கவில்லை. அவர் கூறியதாவது: ''பரம்பரை உரிமைபற்றி என் அபிப்பிராயத்தைக் கேட்டால் அவர்களுக்கு நான் தயக்கமின்றி பதில் கூறுவேன். பரம்பரை வாரிசுக்கிரமத்தில் அதிகாரம் அல்லது பதவியை மாற்றுவது கொள்கையளவில் உண்மையான பிரதிநிதித்துவ சட்ட முறைக்கு முற்றிலும் மாருனது. இப்படிப் பார்த்தால் பரம்பரை முறை ஆட்சி, கொள்கைக்கு இழிவுமட்டுமல்ல, சமூகத்தையே அவமதிப்பதாகும்''. ஆனுல், நாம் தேர்தல் அடிப்படையில் நடைபெறும் மன்னர் ஆட்சி வரலாற்றைப் பார்த்தோமானுல் பரம்பரை முறையைவிடத் தேர்தல் முறை மட்டமானதல்ல என்பதற்கு ஒரு சான்றுகூடக் காணமுடியாது.

இவ்விரு முறைகளில் எது கீழ்த்தரமானது என சர்ச்சை செய்தால் இரண்டும் மட்டமானது என்கிற முடிவுக்குத்தான் வரவேண்டும். ஆகையால் இதுபற்றி நாங்கள் இருவரும் ஒரே கருத்துடையவர்களா யிருக்கிரும். இரண்டில் ஒன்றை **அப்பே** மேலெனக் கருதுவது அவருடைய அபிமானத்திற் குரியதையே, தீயது என ஒப்புக்கொள்ளுவதாகும். இம்மாதிரி விஷயத்தில் அவருடைய விவாத முறை ஒப்புக்கொள்ளத் தக்கதல்ல. ஏனெனில், அது ஆண்டவன் மீதே குற்றம் சாட்டுவ தற்கொப்பாகும். அரசாங்கத்தைப் பொறுத்தமட்டில் ஆண்ட வன் இரு தீய முறைகளை வகுத்து அவைகளில் ஒன்றை மனிதன் ஏற்கவேண்டும் என விட்டுவிட்டது போலாகும். இரண்டில் சிறந்தது கொள்கைக்கும் இழிவு, சமூகத்திற்கும் அவமதிப்பு என்பதை **அப்பே**யே ஒப்புக்கொண்டு விட்டார்.

முடியாட்சியினுல் உலகில் நிகழ்ந்துள்ள தீமைகளையும், விஷமங்களையும் சற்று மறந்துவிட்டுப் பார்த்தால் சிவில் ஆட்சியை பரம்பரை பாத்தியதைக்குள்ளாக்கினுல் அதனுல் எத்துணைப் பயனுமில்லை என்பதை உணருவோம். ஒரு பதவி வகிக்க அறிவும் திறமையும் வேண்டும் என்றிருந்தால் அதை நாம் பரம்பரை பாத்தியதைக் குட்படுத்துவோமா? அறிவும், ஆற்றலும் தேவைப்படாத பதவி ஏதாயினும் இருந்தால், அதற்கு அவசியமில்லை, அல்லது அது அற்பமானதா யிருக்கும்.

பரம்பரை பாத்தியம் முடியாட்சிபற்றிய ஒரு கேலிக்கூத்து. அந்தப் பதவியை ஒரு குழந்தையோ, அல்லது மூடனே வகிக்கலாம் என்று செய்ததன் மூலம் அது நகைப்புக்கிடமாக்கப்பட்டு விட்டது. சாதாரண யந்திரத் தொழிலாளியாயிருப்பதற்கு ஓரளவு அறிவும் திறனும் வேண்டும். ஆனால், அரச பதவி வகிக்கவோ மனிதன் எனும் பிராணியின் தோற்றமிருந்தால் போதும்! அதாவது, மூச்சுவிடும் யந்திரம். இம்மாதிரி மூடப் பழக்கம் இன்னும் சில ஆண்டுகளுக்கு நீடிக்கலாம். ஆனால், விழிப்புற்றெழுந்த மனிதனின் அறிவையும், அக்கறையையும் அது எதிர்த்து நிற்க முடியாது.

பர்க்கைப் பொறுத்தமட்டில் முடியாட்சியை அவர் விடாப் பிடியாகப் பிடித்துக்கொண்டிருக்கிறார்; அரசனிடம் ஓய்வு நிதி பெற்றவர் என்கிற முறையில் அல்ல; அரசியல்வாதி என்கிற தோரணையில், மனித வர்க்கத்தை அவர் துரும்பாக மதிக்கிறார். அவ்வாறே மனித சமுதாயமும் அவரை மதிக்கிறது. மக்கள் மந்தைகள் எனவும் அவர்களை மோசடி, கொடும்பாவி, ஆட்ட பாட்டங்கள் மூலம் ஆளவேண்டும் எனவும் விரும்புகிறார். மனிதனுக்குப் பதிலாக ஒரு விக்கிரகத்தை வைத்து, அதை மன்னனாக மதிக்கலாம் என அவர் கருதுகிறார். ஆனால், அமெரிக்காவை அவர் வெகுவாகப் பாராட்டியே இருக்கிறார் என்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். இங்கிலாந்து, மற்றும் ஐரோப்பிய நாட்டு மக்களைவிட அமெரிக்கர் அறிவிற் சிறந்தவர்களென்றும் அவர்களை ஆள ஆடம்பரம் தேவையில்லை என்றும் எனக்குத் தெரிந்தமட்டில் அவர் வாதாடி வந்திருக்கிறார்.

பரம்பரை ஆட்சியையும், பிரதிநிதித்துவ முடியாட்சியையும் அப்பே ஒப்பிட்டு விமர்சித்தது இந்த விவாதத்திற்கு அவசியமில்லை. ஏனெனில், பிரதிநிதித்துவ ஆட்சி இருவகை முடியாட்சியையும் எதிர்க்கிறது. அப்படியே ஒப்பிட்டாலும் எனது முடிவு அப்பேயின் முடிவுக்கு மாறுபட்டே இருக்கும்.

பரம்பரை முடியாட்சியில் பட்டத்திற்குவர விரும்புபவர்களுக்குள் சச்சரவு ஏற்பட்டதனால் எண்ணற்ற உள்நாட்டுச் சண்டைகள் நிகழ்ந்திருக்கின்றன. அவைகள் நீண்டகாலம் நடந்ததுமன்றி அவைகளின் விளைவாக ஏற்பட்ட உயிர்ச்சேதம் கணக்கிலடங்காது. தேர்தலினால் இவ்வளவு விபரீத விளைவுகள்

ஏற்பட்டதில்லை. பிரான்ஸில் நிகழ்ந்த உள்நாட்டுச் சண்டைகள் யாவும் பரம்பரை முறையின் விளைவுகளே. பட்டத்திற்குப் போட்டியிருந்ததனுலோ, அல்லது பரம்பரை முறையில் உள்ள குறைபாடுகளினுலோ—மைனர் அரசனுக்கு கார்டியன் ஏற்படுவது போன்ற—இம்மாதிரி தீய பயன்கள் ஏற்பட்டன.

இங்கிலாந்து நாட்டை எடுத்துக்கொண்டால் அங்கே இம்மாதிரி துரதிர்ஷ்ட சம்பவங்கள் மலிந்திருப்பதைக் காணலாம். **யார்க்** பிரபு வம்சம், **லங்காஸ்டர்** பிரபு வம்சம் இரண்டிற்கும் அரசபீடத்திற்காக நிகழ்ந்த சண்டைகள் நூறு ஆண்டுகள் நீடித்தன. அதற்குப் பிறகு இம்மாதிரி சண்டைகள் ஓயாமல் நடந்துகொண்டே இருந்தன. 1715-இலிருந்து 1745-வரை நடந்த சண்டைகளும் இதே ரகத்தைச் சேர்ந்தவையே. ஸ்பெயின் நாட்டு அரச பதவிக்காக நடந்த சண்டைகளில் ஐரோப்பாவில் பாதி பங்கு சிக்கிக்கொண்டது. ஹாலந்து நாட்டில் நிகழ்ந்த சண்டைகளும் அரச பதவிக்காக நிகழ்ந்தவைகளே. சுதந்திர அரசாங்கம் எனச் சொல்லிக் கொண்டு அதன் தலைவன் பரம்பரை முறையில் பட்டத்திற்கு வருபவன் என்ருல் தேகத்தில் முள் குத்தியதால் புண் ஏற்பட்டு சீழ்வடிதல்போல் அரசியலிலும் கோளாறுகள் ஏற்படும்.

அயல்நாட்டுச் சண்டைகளும் இதே காரணத்திஞல் நிகழ்கின்றன என நான் உதாரணம் காட்டலாம். முடியாட்சியுடன் பரம்பரை பாத்தியதை எனும் தீமையும் சேர்ந்ததனுல் நீடித்த குடும்ப அக்கறை ஏற்பட்டுவிடுகிறது. பிறரை அடக்கி ஆளுவதும், வருவாயைப் பெருக்கிக்கொள்ளுவதும் பரம்பரை முடியாட்சியின் நிலையான ஆசை. பரம்பரை முடியாட்சியைவிட தேர்ந்தெடுத்த முடியாட்சி அமுலிலிருந்த போலந்தில் சண்டைகள் குறைவாகவே நிகழ்ந்தன. போலந்து ஆட்சி ஒன்று மட்டுமே மக்கள் நிலையை தானுகவே ஓரளவாவது சீர்படுத்த முனைந்தது.

பழைய அல்லது பரம்பரை ஆட்சியின் குறைபாடுகளைப் பொதுப்படையாக ஆராய்ந்தோம்; இனி அதைப் புதிய அல்லது பிரதிநிதித்துவ ஆட்சி முறையுடன் ஒப்பிட்டுப் பார்ப்போம்.

பிரதிநிதித்துவ முறை, சமூகம், நாகரிகம் இரண்டையும் அடிப்படையாகக் கொண்டது. இயற்கை, அறிவு, அநுபவம் முதலியவைகளே அதற்கு வழிகாட்டிகள்.

எல்லா நாடுகளிலும், எல்லா சகாப்தங்களிலும் மக்களுக்கேற்பட்ட அநுபவத்திலிருந்து அவர்களுக்கு அறிவை வளர்ப்பதில் இயற்கையைக் கட்டுப்படுத்த முடியாது என்பதை அறிந்துகொண்டிருக்கிறோம். தன் இஷ்டப்படி இயற்கை அன்னை யாவற்றையும் அளிக்கிறாள். எந்த விதிப்படி தன் வரங்களை மக்களுக்குப் பகிர்ந்தளிக்கிறாள் என்பது மனிதனுக்கு மர்மமாகவே இருக்கிறது. அறிவு பரம்பரையாக வருவது என்று கருதுவது எவ்வளவு கேலிக்கூத்துக்கொப்பானதோ அப்படியே தான் மனிதனின் அழகும் பரம்பரையாக வருகிறது என்று கருதுவதும்.

அறிவு அல்லது ஞானத்தின் லட்சணங்கள் யாதாயினும், அது விதையின்றி முளைத்த செடிபோலாகும். செடி முளைத்தால் அதை நீரூற்றி வளர்க்கலாம். அதை நாமாகச் செயற்கை முறையில் சிருஷ்டித்துவிட முடியாது. சமூகத்தில் எக்காரியத்திற்கும் தேவையான ஒருவித நிறைவு அமைந்திருக்கிறது. ஆனால், சமூகத்தின் சில பகுதிகளைப் பொறுத்தமட்டில் அந்த நிறைவு அடிக்கடி இடம் மாறுகிறது. ஒரு பகுதியில் இன்று அது உயருகிறது; நாளைக்கு மற்றோரிடத்தில் எழுகிறது. அது ஒவ்வொரு சமயத்தில் ஒவ்வொரு குடும்பத்தில் இருந்துவிட்டுப் பின்னர் பின்வாங்குகின்றது.

இதுவே இயற்கையின் விதியாயிருப்பதனால் அரசாங்க முறைகளும் இந்த விதியையே பின்பற்றவேண்டும்; தவறினால் அரசாங்கம் அறியாமையில் உழல நேரிடும் என்பதை நாம் பார்த்திருக்கிறோம். ஆகையினால் பரம்பரை முறை மனித அறிவுக்கும், மனித உரிமைகளுக்கும் முரணானது. இது அநீதி மட்டுமல்ல, கேலிக்கூத்துமாகும்.

சுதந்திர இலக்கிய உலகில் மேதைக்கு அளவற்ற சந்தர்ப்பங்கள் இருப்பதனால் உன்னதமான இலக்கிய சிருஷ்டிகள் தோன்றுவதுபோல, பிரதிநிதித்துவ ஆட்சியின்கீழ் பல்வேறு மக்களின் அறிவுமிக்க ஆலோசனைகளின் விளைவாக புத்திசாலித்தனமான சட்டங்கள் இயற்ற வசதியிருக்கிறது. இலக்கிய மேதையையும் விஞ்ஞான அறிவையும் பரம்பரை பாத்தியதை

யாக்கினல் இலக்கியமும் விஞ்ஞானமும் என்ன படுமோசமான, அற்பமான நிலைக்கு வந்துவிடும் என்பதை நான் சிந்தித்துப் பார்க்கையில் எனக்குச் சிரிப்புத்தான் வருகிறது. இதேமாதிரி நகைப்புத்தான் வருகிறது ஆட்சியைப் பரம்பரை பாத்தியதை யாகச்செய்வதுபற்றி நினைத்தாலும். பரம்பரை ஆசிரியர்போல் பரம்பரை ஆட்சியாளரும் பொருத்தமற்றவர்களே. **ஹோமருக்கும், யூக்லிடுக்கும்** பிள்ளைகள் இருந்தனரா என்பது எனக்குத் தெரியாது. ஆனல் அப்படி இருந்து, இவ்விரு பெரியார்களும் தங்கள் சிருஷ்டிகளை முடிக்காது விட்டிருந்தார்களானல் அவைகளை அவர்களுடைய குமாரர்கள் பூர்த்தி செய்திருக்கமுடியாது.

புகழ்பெற்றவர்களின் சந்ததிகள் மிகச் சாமானியமானவர்களாயிருக்கின்றனர் என்பதைவிட வேறு என்ன மேலான ருசு வேண்டும் பரம்பரை வாரிசுரிமையின் மோசமான தன்மையை நிரூபிப்பதற்கு? தந்தையைவிட மகன் நேர்மாருன குணம் படைத்தவனுயில்லை என்பதற்கு ருசு கிடைப்பது துர்லபம். அறிவுத் திறன் ஒருவழியாக ஓடிச்சென்று அதற்குப் பிறகு செல்ல விரும்பாமல் திசைமாறிப் போவதுபோல் இருக்கிறது வாரிசு பாத்தியதையின் போக்கு. பரம்பரை வாரிசுரிமையைப் பின்பற்றிச் செல்ல அறிவு மறுப்பதிலிருந்து இந்தப் பரம்பரை முறை அறிவுக் கொவ்வாத ஏற்பாடாகவல்லவா விளங்குகிறது. இந்த மோசமான ஏற்பாட்டை நீடிப்பதன் மூலம் மனிதன் எப்பொழுதும் தன் இயல்புக்கு மாருகவே நடக்கின்ருன். தேர்தல் முறை அமுலிலிருந்தால் கான்ஸ்டபிள் பதவிக்குக்கூட வோட்டளிக்க விரும்பாதவனை அரசனுகவோ, பிரதம மாஜிஸ்டிரேட்டாகவோ, சட்டமியற்றுபவனுகவோ ஆக்கிவிடலாம் என அவனை ஏற்றுக்கொள்ளுவதாகிறது.

பொதுப்படையாகப் பார்த்தால் புரட்சிகளின் விளைவாக மேதைகளும் திறமைசாலிகளும் தோன்றுகின்றனர். ஆனல் புரட்சிகள் இவர்களைத் தோற்றுவிக்கவில்லை; ஆனல் முன்னுக்குக் கொணர்கிறது. மனிதனிடத்தில் ஏராளமான அறிவும் உணர்வும் பண்பும் உறைந்து கிடக்கின்றன. அதை ஏதாவது ஒன்று செயல்புரியத் தூண்டிவிடாவிட்டால் அது பிரகாசிக்காமல் அந்த மனிதனுடன் மங்கி மடிந்துவிடும். சமூகத்திலுள்ளவர்கள் திறன் முழுதும் இயங்குவது சமூகம் வளரப் பயன்படுமாகை

யினுல், புரட்சி மூலம் வெளிவரக்கூடிய அறிவு, ஆற்றல், சிறப்புகளையெல்லாம் ஒழுங்காக மலரச் செய்யக்கூடிய வகையில் அரசாங்கம் அமைக்கப்பட வேண்டும்.

இந்த நலன் பரம்பரை அரசாங்கத்தின் உயிரற்ற சூழ் நிலையில் கிட்டாது. ஏனெனில் பரம்பரை ஆட்சி இந்த மலர்ச்சி யைத் தடுப்பதுமல்லாமல் உறைந்துவிடவும் உழைக்கிறது. அரசாங்கத்தில் அமைந்துள்ள மூடநம்பிக்கையினுல் தேச மக்களின் அறிவுணர்வு கட்டுப்பட்டுக் கிடப்பதனுல் அறிவின் சக்தி குறைந்து குன்றி விடுகிறது.

பரம்பரை வாரிசு ஆட்சி அறிவுக்கும் அறியாமைக்கும் ஒரேமாதிரி வணக்கம் செலுத்தும்படி பணிக்கிறது. இம்மாதிரி முறையற்ற வகையில் பணியும் நிலைக்கு அறிவு வந்துவிட்டால் முதிர்ந்த அறிவுக்கும் கீழான நிலைக்கு மனிதன் வீழ்ந்து விடுகிருன். அப்புறம் அற்ப விஷயங்களில் பெருமை யடையவே அறிவு தகுதியாகி விடுகிறது. அது தனக்குத்தானே துரோகம் செய்யும் நிலைக்குவந்து பகுத்தறியும் உணர்வையும் மாய்த்து விடுகிறது.

பழைய ஆட்சியின்கீழ் மனிதனின் மோசமான நிலையையே நாம் காண முடிந்தாலும் இதற்கு ஒரே ஒரு விதிவிலக்கைக் காண்கிருேம். இதற்கு உதாரணமாக ஏதன்ஸ் நகர ஜன நாயகத்தைக் குறிப்பிடுகிறேன். சரித்திரத்தில் நாம் கண் டிருந்தனவற்றை யெல்லாம்விட இந்த மகத்தான நகர மக்க ளிடம் நாம் குறைகூறுவதற்குள்ளதைவிடப் போற்றிப் புகழக் கூடிய சிறப்புகளே மிகுதியா யிருக்கின்றன.

அரசாங்க அமைப்புக் கொள்கைகள்பற்றி **பர்க்** நன்கு அறியாததனுல் ஜனநாயகத்திற்கும் பிரதிநிதித்துவத்திற்கும் வித்தியாசம் தெரியாமல் குழப்புகிருர். பழைய ஜனநாய கத்தில் பங்கு கொண்டவர்களுக்குப் பிரதிநிதித்துவம் என்பது ஒரு புதுமை. அந்த ஜனநாயகங்களில் ஜனங்கள் கூடித் தாங்களே சட்டமியற்றினர்.

சாதாரண ஜனநாயகம் என்பது பழங்காலத்தவர்களுக்கு மக்கள் கூடும் ஒரு பொதுமண்டபம். இந்த ஜனநாயகங்களில் மக்கள் எண்ணிக்கை பெருகி ராஜ்ய நிலப்பரப்பு விரிவடைந்த தனுல் பழைய பொதுமண்டபக் கூட்டங்கள் பெரிதாகிச்

சமாளிக்க முடியாமல் போய்விட்டன: பிரதிநிதித்துவ முறையை அக்காலத்தவர்கள் அறியாததனால் அவர்கள் ஒன்று முடியாட்சிக்கு மாறினர் அல்லது அப்பொழுதிருந்த ராஜ்ய அமைப்புகளில் ஒன்றிப்போயினர்.

இப்பொழுது நாம் அறிந்துள்ளதுபோல் பிரதிநிதித்துவ முறையை அக்கால மக்கள் அறிந்திருந்தார்களானால் இப்பொழுது நாம் முடியாட்சி அல்லது பிரபுக்கள் ஆட்சி என அழைக்கும் முறைகளை அவர்கள் மேற்கொண்டிருக்கமாட்டார்கள். சமூகம் எண்ணிக்கையில் பெருகி பிரம்மாண்டமாக விரிவடைந்ததன் விளைவாக அதை ஒன்றுசேர்க்க வகையறியாததனாலும், ஆட்டு மந்தையர் மாட்டிடையர் கூட்டங்கள் உலகின் பிற பாகங்களில் தான்தோன்றித்தனமாகத் திரிந்துவந்ததனாலுமே இயற்கைக்கு மாறான ஆட்சி முறைகள் தோன்றச் சந்தர்ப்பம் ஏற்பட்டது.

அரசாங்க அமைப்பு சம்பந்தமாகப் பல தவறான கருத்துக்கள் மண்டிவிட்டதனால் அவைகளைக் களைந்தெறியவேண்டி இவ்வளவு தூரம் எழுத நேரிட்டது. இனி, மற்றுஞ் சிலவற்றைப் பற்றி எழுதத் துணிகின்றேன்.

அரச தாசர்கள், அரண்மனை ஆட்சியினர் ஆகியோர் 'குடியரசுத் தத்துவம்' என்பதைத் தாக்குவதையே தங்கள் தொழிலாகக்கொண்டிருந்தனர். ஆனால் 'குடியரசுத் தத்துவம்' என்பது என்ன என்பதை அவர்கள் விளக்க முயற்சிப்பதே இல்லை. இதை நாம் சற்று ஆராய்வோம்.

ஆட்சி முறைகள் பின்வருபவை: ஜனநாயகம், பிரபுக்கள் ஆட்சி, முடியாட்சி, இப்போது பிரதிநிதித்துவ ஆட்சி என அழைக்கப்படுவது.

குடியரசு எனப்படுவது **குறிப்பிட்ட ஆட்சி** முறை அல்ல. ஓர் அரசாங்கம் எதற்காக நிறுவப்பட வேண்டுமோ, எதற்காக அது நடைபெற வேண்டுமோ அதைத் தெளிவாகக் குறிப்பிடுவதே ''குடியரசு''. ''பொது விவகாரங்கள்'', ''பொது நலன்'' அல்லது ''பொது விஷயம்'' என்பதே அதன் பொருள்.

அரசாங்கத்தின் லட்சணம், அது செய்யவேண்டிய வேலை முதலியவற்றை விளக்கும் நல்ல 'சொல்' இது. இந்த முறையில் பார்த்தால் முடியாட்சிக்கு மாறுபட்ட கொள்கையை இந்தச்

சொல் குறிப்பதை அறியலாம். முடியாட்சி என்பது தனிப்பட்டவனின் தன்னிச்சையாட்சி. இந்த நிர்வாகத்திற்கு சொந்த நலனைத் திருப்தி செய்வது குறிக்கோளேயொழிய பொது நலனல்ல.

பொது நலத்தை வளர்ப்பதையே தனிப்பெரு நோக்காகக் கொள்ளாத எந்த அரசாங்கமும் நல்லாட்சி நடத்துவதாகக் கூறமுடியாது. குடியரசாட்சி என்பது தனிப்பட்டோர், சமூகம், எல்லோருடைய நலனுக்காகவும் நடக்கும் ஆட்சி. அது எந்த குறிப்பிட்ட முறையில் அமைந்திருக்க வேண்டும் என்கிற அவசியமில்லை. ஆனல் அது பெரிதும் பிரதிநிதித்துவ முறையையே தழுவி நடக்கிறது. ஏனெனில் அந்த முறையில்தான் அரசாங்கத்தை மக்கள் ஆதரிக்கும் பலன் கைகூடும்.

அநேக அரசாங்க முறைகள் குடியரசு என பாவனை செய்கின்றன. போலந்து தனது ஆட்சியைக் குடியரசு எனக் கூறிக் கொள்ளுகிறது. ஆனுல் அங்கே தேர்ந்தெடுக்கப்பட்ட மன்னர், பரம்பரைப் பிரபுக்களுடன் ஆட்சி புரிகிறார். ஹாலந்தும் தனது ஆட்சியைக் குடியரசு எனக் கூறிக்கொள்ளுகிறது. ஆனல் பரம்பரை முறைத் தலைவனும், பெரிதும் பிரபுத்துவ முறையும் அங்கே ஆட்சி நடத்துகிறது.

முழுதும் பிரதிநிதித்துவ முறையில் அமைந்த அமெரிக்க ஆட்சிதான் லட்சணத்திலும் காரியத்திலும் இன்று சிறந்து விளங்கும் ஒரே குடியரசு. நாட்டு மக்களின் நலனைக் காத்து வளர்ப்பதே அதன் நோக்கம். ஆகையினுல் நியாயமாக அது தான் குடியரசு. எல்லா பரம்பரை முறைகளையும் உதறித் தள்ளிவிட்டு பிரதிநிதித்துவ முறையில் ஆட்சியை அமைத்துக் கொண்டதனுல் பொதுநலம் ஒன்றே குறிக்கோளாகப் பணிபுரிய அமெரிக்கர் வகை செய்திருக்கின்றனர்.

பரந்த நாடுகளுக்குக் குடியரசு ஏற்ற ஆட்சி முறையல்ல என்று கூறுபவர்கள் அரசாங்கத்தின் பணியையும் அரசாங்க முறையையும் ஒன்றெனக் கருதிக் குழப்பிவிட்டனர். ஆனல் 'பொதுநலம்' என்பது நாட்டின் எல்லாப் பகுதிக்கும் எல்லா மக்களுக்கும் நலன் விளைவிக்கத்தக்கது.

இரண்டாவதாக **ஆட்சி முறை** என்றல் பிரதிநிதித்துவமில்லாத பழைய ஜனநாயக முறையையே அவர்கள் கருத்தில் கொண்டனர். ஆகையினுல் குடியரசு பரந்த இடங்களுக்குப்

பொருந்தாது என்பதல்ல. ஆனால் பழைய ஜனநாயக முறை பிரம்மாண்டமான இடங்களுக்குப் பொருந்தாது என்பதுதான். ஆகையினால் கவனிக்கவேண்டிய பிரச்னை யாதெனில், ''மக்களின் பொது விஷயங்களை நடத்த, அதுவும் பழைய ஜன நாயக முறையில் நடத்த முடியாத அளவுக்கு விஸ்தீரணமும் பெருகி ஜனத்தொகையும் பெருகிய நிலையில் நடத்த எது சிறந்த அரசாங்கம்'' என்பதுதான்.

முடியாட்சி இந்த நோக்கத்தை ஈடேற்ற முடியாது. பிரதிநிதித்துவம் இல்லாத சாதாரண ஜனநாயக முறைக்குக் கூறக்கூடிய ஆட்சேபனைகளை இதற்கும் கூறலாம்.

எவ்வளவு விஸ்தீரணமுள்ள நாட்டிற்கும் ஏற்ற அரசாங் கத்தை அமைப்பதற்கான கொள்கைகளை ஒரு தனிப்பட்டவன் வகுக்கலாம். இப்படி வகுப்பது அறிவுச் சக்தியின் விளைவே. ஆனால் இக்கொள்கைகளை, ஒரு நாட்டு மக்களின் விவசாயம், தொழில், வர்த்தகம் முதலியவைகளை வளப்படுத்துவதற்கான முறையில் கையாளுவதற்குப் பிரத்தியேகமான ஞானம் வேண்டும். இதைச் சமூகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்துதான் பெற முடியும்.

அநுபவத்திற்கொத்த இந்த அறிவு பூராவையும் தனி மனிதனிடம் எதிர்பார்க்க முடியாது. ஆகையினால் இதற்கு முடியாட்சி பயன்படாது. ஏனெனில், பிரதிநிதித்துவமில்லாத ஜனநாயகம் எப்படி ஜனப்பெருக்கம் ஏற்பட்ட நிலையில் பயன் படாதோ, அவ்வாறே அறிவுத்திறன் குறைவாயிருப்பதனால் முடியாட்சியும் பயன்படாது. ஜனநாயகத்தைச் சந்தர்ப்பம் தவறிப் பயன்படுத்தினால் குழப்பம் ஏற்படும். அறியாமையி னாலும், திறமையின்மையினாலும் முடியாட்சியினால் குழப்பம் விளையும். ஆகையால் ஜனநாயகத்திற்குப் பதில் முடியாட்சியை நிலைநாட்டுவதில் பயனில்லை. இரண்டினாலும் தொந்தரவுகள் விளையும்.

அதுவும் முடியாட்சி பரம்பரை முறைக்குட்பட்டுவிட்டால் சொல்லவே வேண்டாம். ஞானம் பெறுவதற்கு முடியாட்சியைப் போல் தடையாயிருப்பது வேறு எந்த முறையுமில்லை. பண்பட்ட ஜனநாயக உணர்வுள்ளவர்கள் தாங்களாகவே குழந்தைகள் அல்லது மூடர்கள் ஆட்சிக்கு உட்பட இசைந்திருக்க முடியாது;

முடியாட்சி விலங்கியல்பு கொண்டது; அறிவுக்கும் மனிதனுக்கும் இழுக்குத் தேடவல்லது.

பிரபுத்துவ ஆட்சி முறை, முடியாட்சியின் தீய இயல்புகள் யாவும் உள்ளவை. ஆனால் ஒரு வித்தியாசம். பிரபுக்கள் எண்ணிக்கையில் அதிகமிருப்பவர்களாகையால், அவர்களின் திறமை பிரகாசிக்க அதிக சந்தர்ப்பம் உண்டு. ஆனால் இவர்களும் திறமைகளை நியாயமான வழிகளில் பயன்படுத்துவர் என்பதற்கு உத்தரவாதம் கிடையாது.

பிரதிநிதித்துவ அம்சமில்லாத எளிய ஜனநாயக முறையைப் பற்றிச் சிந்தித்துப் பார்த்தால், பெரிய அளவில் அரசாங்கம் அமைக்க அது உதவக்கூடும் என்று கூறலாம். அதை விரிவுபடுத்த இயலாததற்குக் காரணம் அந்தக் கொள்கையின் தன்மையல்ல; அந்த முறையைச் சௌகரியமாகப் பயன்படுத்த முடியாது என்பதுதான். முடியாட்சியையும் பிரபுத்துவ முறையையும் விரிவாகப் பயன்படுத்த முடியாததற்குக் காரணம் அதன் நாயகர்களின் திறமையின்மை. ஊழல் நிறைந்த முடியாட்சியையும் பிரபுத்துவ முறையையும் ஒதுக்கித் தள்ளிவிட்டு ஜனநாயகத்தையே ஆட்சி அடிப்படையாக வைத்துக்கொண்டால், பிரதிநிதித்துவ முறையே சிறந்தது என்பது தெளிவாகிறது. ஏனெனில், இதன் மூலம் சாமானிய ஜனநாயக முறை அறிவின்மையால் ஏற்படும் குறைபாட்டையும், முடியாட்சி, பிரபுத்துவ ஆட்சி இரண்டினாலும் திறமைக்குறைவு ஏற்படுவதையும் நிவர்த்தி செய்துவிடலாம்.

சாதாரண ஜனநாயகம் என்பது பிறர் உதவியின்றி சமூகமே நேரடியாக ஆட்சிபுரிவதாகும். ஜனநாயக அடிப்படைமேல் பிரதிநிதித்துவ முறையை அமர்த்திவிட்டால், அதன் மூலம் எல்லா நிலப்பரப்பையும், எல்லாவிதமான அக்கறைகளையும் ஒரு குடைக்கீழ்க் கொண்டுவந்துவிடலாம். பரம்பரை இலக்கியகர்த்தாக்களைவிட சுதந்திர இலக்கிய ஆசிரியர்கள் சிறந்த இலக்கியங்களைச் சிருஷ்டிக்கக்கூடும் என்பதுபோல் இப் புதிய ஜனநாயக முறையில் பரம்பரை முறையைவிட அதிக நலன் பெறலாம்.

இந்த முறைப்படிதான் அமெரிக்க அரசாங்கம் அமைக்கப்பட்டிருக்கிறது. இங்கே ஜனநாயகத்தில் பிரதிநிதித்துவ முறை பொருத்தப்பட்டிருக்கிறது. கொள்கையின் சிறப்புக்கேற்ற

முறையில் ஆட்சி முறையும் அமைந்திருக்கிறது. சிறிய அளவில் ஏதென்ஸ் நகர் இருந்த மாதிரி பெரிய அளவில் அமெரிக்கா திகழும். ஏதென்ஸ் பழங்கால உலகில் ஓர் அதிசயம். அமெரிக்கா தற்கால உலகினர் போற்றும் முன்மாதிரியாக உருவாகி வருகிறது. இது எளிதில் புரிந்துகொள்ளக்கூடிய ஆட்சி முறை, சிறப்பாகப் பின்பற்றக்கூடியது, ஒரே மூச்சில் சாதாரண ஜனநாயகத்தின் அசௌகரியத்தையும் முடியாட்சியினுல் ஏற்படும் அறியாமை, பாதுகாப்பின்மை யாவற்றையும் தவிர்க்கிறது.

இவ்வளவு பிரம்மாண்டமான நிலப்பரப்பில், இவ்வளவு மேலான அக்கறைகளையும் பிரதிநிதித்துவ முறை அமுல் மூலம் திருப்தி செய்யக்கூடிய ஆட்சி முறையையும் பற்றிக் கற்பனைகூடச் செய்துபார்க்க முடியாது.

பிரான்ஸ் புகழ் பெற்ற நாடுதான்; பிறர் போற்றும் நாடு தான். ஆனல் இந்த மகத்தான முறையில் அது ஒரு சிறு புள்ளி போன்றே இருக்கிறது. இந்த முறை எந்த சந்தர்ப்பத்திற்கும் இணங்கி வருகிறது. சிறிய இடங்களில்கூட இம்முறை சாமானிய ஜனநாயகத்தைவிடச் சிறந்தது. ஏதென்ஸ் பிரதிநிதித்துவ முறையை ஏற்று நடந்திருந்தால், அது அநுஷ்டித்துவந்த ஜன நாயக முறையை மீறிய பயனடைந்திருக்கும்.

அரசாங்கம் எனப்படுவது, அல்லது அரசாங்கம் என நாம் கருதுவது சமூகத்தின் பல பகுதிகள் ஒன்றுபடும் மையமான பொது இடமே தவிர வேறன்று. சமூகத்தின் பல்வேறு அக்கறைகளைத் திருப்தி செய்ய பிரதிநிதித்துவ முறைபோல் பிறவற்ருல் இயலாது. சமூகத்தின் பகுதிகள் முழுவதற்கும் பணிபுரிவதற்கான ஞானத்தைப் பிரதிநிதித்துவ முறை ஒன்ருகத் திரட்டுகிறது. அது அரசாங்கத்தை முதிர்ந்த அறிவுள்ள நிலையில் வைத்திருக்கிறது. ஏற்கனவே கூறியுள்ளபடி அது ஆரம்ப நிலையிலுமில்லை, முதுமைப் பருவத்திலுமில்லை. அது அறியாமை நிலையிலுமில்லை, அறிவுத் தடுமாற்ற நிலையிலுமில்லை. அது தொட்டிலில் தூங்கும் குழந்தைப் பருவத்திலுமில்லை, தடியின் உதவி கொண்டு தள்ளாடி நடக்கும் முதுமை நிலையிலுமில்லை. இம் முறையின் கீழ் அறிவும் அதிகாரமும் பிரிந்து நிற்கமுடியாது. தனிப்பட்டவர்களுக்கு ஏற்படக்கூடிய விபத்துக்களை மீறியது. உண்மையில் அரசாங்கங்கள் இவ்வாறுதான் இருக்கவேண்டும். இந்த

இயல்பினுல் பிரதிநிதித்துவ முறை முடியாட்சி எனப் படுவதைவிட எவ்வளவோ உயர்ந்தது.

ஒரு தேசம் அல்லது மக்கள் கூட்டம் என்பதற்கு மனித உடலைச் சின்னமாக வைத்தல் பொருந்தாது. ஒரு முழு வட்டத் திற்குள் அடைக்கப்பட்ட ஒரு மனித உருவம் என்று வேண்டு மாஞல் சொல்லலாம். பிரதிநிதிகள்தான் இவ்வட்டத்தின் மையக் கோடுகள். மையத்தில் தான் பிரதிநிதிகள் கூடி இந்த மக்கள் கூட்டம் என்னும் சமூகம் இயங்க ஆரம்பிக்கிறது. பிரதிநிதித்துவத்தையும் முடியாட்சியுடன் பொருத்திப் பேசுவது தான்தோன்றி ஆட்சியாகும். பிரதிநிதித்துவம் என்ருலே மக்கள் கூட்டத்தின் பிரதிநிதித்துவமுள்ள மன்னன் என்று கூறலாம். ஆட்சிப் பொறுப்பை மற்ற தனி நபருடன் பகிர்ந்துகொள்ளுவ தென்பது பிரதிநிதித்துவ முறையை இழிவுபடுத்துவதாகும்.

அவரது பார்லிமெண்டு சொற்பொழிவுகளிலும், பிரசுரங் களிலும் வார்த்தைகளைக் கொண்டு **பர்க்** இரண்டு மூன்று முறை அகடவிகடம் செய்திருக்கிருர். அந்த சொற்கோவை களுக்கு எவ்விதப் பொருளும் காணமுடியாது. அரசாங்கத்தைப் பற்றிக் குறிப்பிடுகையில் அவர் கூறுகிருர்: ''அரசாங்கம் முடி யாட்சியை அடிப்படையாகக் கொண்டு குடியரசு மூலம் அதன் தவறுகளைத் திருத்தலாம்''. அறிவை அசட்டுத்தனத்தால் திருத்துவதைவிட, அசட்டுத்தனத்தை அறிவு மூலம் திருத்துவது சிறந்தது என்று பொருள்பட அவர் கூறுவாராஞல், அவருடன் வாதாடுவதைவிட, அசட்டுத்தனத்தை அறவே ஒழித்துவிடுவது நல்லதல்லவா என நான் கூறுவேன்.

ஆனல் முடியாட்சி என **பர்க்** அழைக்கும் அது என்ன? இதை அவர் விளக்கிக் கூறுவாரா? பிரதிநிதித்துவம் என்ருல் என்ன என்பதை யாவரும் புரிந்துகொள்ளுவார்கள். அதில் பலவகை அறிவும் திறனும் அடங்கியிருக்கவேண்டும். ஆஞல் இதே சிறப்புகள் முடியாட்சியில் இருக்கும் என்பதற்கு என்ன உத்தரவாதம்? மன்னன் குழந்தையாயிருந்தால் அவனிடம் அறிவை எப்படி எதிர்பார்க்க முடியும்? அக் குழந்தைக்கு ஆட்சி யைப்பற்றி என்ன தெரியும்? அப்பொழுது யார் அரசன், முடியாட்சி எங்கிருக்கிறது? குழந்தைக்குப் பதில் 'கார்டியன்' ஆட்சிபுரிவதாஞல் அது கேலிக்கூத்தாகவே முடியும்.

மைனர் மன்னனின் கார்டியன் ஆட்சி குடியரசின் கேலிக் கூத்தான சின்னமாகும். முடியாட்சியை இதைவிடச் சிறப்பாக வர்ணிப்பது பொருந்தாது. கற்பனை எப்படி எப்படியெல்லாம் சித்தரிக்க முடியுமோ அவ்வளவு லட்சணங்களுடன் அமைந்தது. அரசாங்கத்திற்கு வேண்டிய ஸ்திரத்தன்மை அதற்குக் கிடையாது. ஒரு மன்னன் போய் வேறு மன்னன் பட்டத்திற்கு வரும்போது புரட்சி நடக்கும்; மைனருக்குப் பதில் ரீஜண்ட் ஆட்சி புரிகையில் எதிர்ப் புரட்சி நிகழும். முடியாட்சி முழுதும் அரச கோஷ்டியினரிடையே உள்ள ஓயாத கோஷ்டிப் பூசல்கள் மயம். இதற்கு **பர்க்**கே சிறந்த உதாரணம்.

அரசாங்கத்திற்கேற்றபடி முடியாட்சியை அமைக்க வேண்டுமானல், ஒரு மன்னருக்குப் பின் பட்டத்திற்கு வருபவன் குழந்தையாயிருத்தலாகாது. அவன் உடனே வயது வந்த மனிதனுகத் தோன்றவேண்டும், அதுவும் **சாலமன்** போன்ற அறிவாளியா யிருக்கவேண்டும். சிறுபிள்ளைகள் மனிதர்களாகும் வரையில் அரசாங்கக் காரியங்கள் தடைப்பட்டு மக்கள் காத்திருக்க வேண்டுமென்பது அர்த்தமற்ற பிதற்றல்.

விஷயங்களைப் புரிந்துகொள்ளும் சக்தி எனக்குக் குறைவாயிருக்கிறதோ, கூடுதலாயிருக்கிறதோ, எனக்கு நான் என்கிற அகங்காரம் அதிகமோ, குறைவோ அதைப் பொருட்படுத்த வேண்டாம். ஆனல் முடியாட்சி எனப்படுவது அசட்டுத்தனமான, வெறுக்கத்தக்க ஏற்பாடு என்பதில் சந்தேகமே இல்லை என்றே எனக்குத் தோன்றுகிறது. அதன் லட்சணத்தைப் புரிந்துகொள்ள ஓர் உவமை கூறுகிறேன். திரைக்குப் பின் ஏதோ இருக்கிறது, அதுபற்றி வெளியே உள்ளவர்கள் பிரமாதப்படுத்துகிருர்கள். திரையை விலக்கினல் ஏதோ அதிசயம் நிகழும் என எதிர்பார்க்கின்றனர். அகஸ்மாத்தாகத் திரை விலகி உள்ளே இருப்பதைப் பார்ப்பார்களானல் மக்கள் விழுந்து விழுந்து சிரிப்பர்.

பிரதிநிதித்துவ ஆட்சியில் இம்மாதிரி எதுவும் நிகழாது. தேச மக்கள் மாதிரியே ஆட்சியின் அமைப்பிலும் உணர்விலும் ஒருவித உறுதி இருக்கிறது; அது உலக அரங்கிலே ஒழுங்காக, கம்பீரமாகக் காட்சியளிக்கிறது. அதன் சிறப்புகளோ, குறைபாடுகளோ யாதாயிருப்பினும், அவைகள் பார்ப்போர்

யாவருக்கும் புலனாகும். அது மோசடியாலோ, மர்ம வித்தையாலோ நீடித்திருக்கவில்லை. அது அர்த்தமற்ற பேச்சிலோ, தர்க்கவாதப் புரட்டிலோ ஈடுபடுவதில்லை. அதனுடைய பரிபாஷை உள்ளத்திற்குள்ளம் தொட்டு அதன் பொருளை மக்கள் உணருகிறார்கள், புரிந்துகொள்ளுகிறார்கள்.

முடியாட்சியின் மூடத்தனத்தை நாம் புரிந்துகொள்ளவில்லை என்றால் அறிவுக்கு நாம் வசப்பட மறுக்கிறோம், நமது பகுத்தறிவு சக்தியைப் பாழ்படுத்துகிறோம் என்றுதான் அர்த்தம். இயற்கை தன் லீலைகளை எல்லாம் விதிப்படி நிகழ்த்துகிறது. ஆனால் முடியாட்சி எனும் முறை இயற்கையை எதிர்க்கிறது. மனித சக்திகள் யாவற்றையும் தலைகீழாகச் செய்துவிடுகிறது. அது முதியோர்களைக் குழந்தைகள் ஆளவும், அறிவாளிகளை மூடர்கள் ஆளவும் இடமளிக்கிறது. இதற்கு மாறாகப் பிரதிநிதித்துவ முறை இயற்கை விதிகளை யொட்டியே இயங்குவதுடன் எல்லா வகையிலும் மனிதனின் அறிவை மதிக்கிறது. உதாரணமாக அமெரிக்காவைப் பார்ப்போம்.

அமெரிக்க சமஷ்டி ஆட்சியில் ஜனாதிபதிக்கு மற்ற காங்கிரஸ் பிரதிநிதிகளை விட அதிகமான அதிகாரம் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆகையினால் முப்பத்தைந்து வயதுக்குக் கீழுள்ளவர்கள் ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட முடியாது. இந்த வயதுக்குள் மனிதனின் மதிப்பிடும் சக்தி முதிர்ச்சியடைகிறது. அவனது இந்தப் பிராயத்திற்குள் பலபேர்களையும், பல விஷயங்களையும் அறிந்து விடுகின்றான். நாடும் அவனை அறிந்துகொண்டு விடுகிறது.

மனிதன் திறமைசாலியாகப் பிறப்பது என்பது சீட்டுக் குலுக்கிப் போட்டு அதில் பரிசு கிடைப்பதைப் போன்றது. ஒரு மன்னன் இறந்த பிறகு பட்டத்திற்கு வருபவனுக்குத் திறமை எனும் அதிர்ஷ்டப் பரிசு கிடைக்குமென்று திட்டமாகக் கூற முடியாது. எனினும், முடியாட்சி முறைப்படி பதினெட்டு வயது வந்தவுடன் மன்னனாக வருபவன் ஓர் அரசாங்கத்தின், நாட்டு மக்களின் தலைவனாகின்றான்.

இது அறிவுச்சிறப்பைக் காட்டக்கூடிய செயலா? ஒரு தேச மக்களின் தீரத்திற்கும் கௌரவத்திற்கும் ஏற்ற செயலா? ஒரு சிறு பையனை நாட்டு மக்களின் தந்தை என்றழைப்பது எப்படி

ஒழுங்காகும்? மற்றப் பகுதியினரைப் பொறுத்தமட்டில் இருபத்தொரு ஆண்டு அடையும் வரையில் மைனராக இருக்கவேண்டும். இந்த வயதடையும் வரையில் அவன் ஓர் ஏகரா பூமியைக்கூட நிர்வகிக்க யோக்கியதையற்றவன், ஓர் ஆட்டுமந்தை அல்லது பன்றிகளைக்கூட அவனிடம் ஒப்படைக்க மாட்டார்கள். ஆனால் ஆச்சரியத்திலும் ஆச்சரியம்! பதினெட்டு வயதில் ஒரு நாட்டு மக்களை நிர்வகிக்கும் பொறுப்பு அளிக்கப்படுகிறது!

முடியரசு என்பது நீர்மேல் குமிழி, பணம் பறிப்பதற்கு அரண்மனைச் சூழ்ச்சியே இந்த ஏற்பாடு என்பது எவ்வகையில் பார்த்தாலும் தெளிவாகத் தெரிகிறது. இந்த முடியாட்சி எனும் தகிடுதத்தத்திற்குச் செலவாகும் பணத்தை அறிவுடைமை நிறைந்த பிரதிநிதித்துவ ஆட்சியின்கீழ் அனுமதிக்க முடியாது. அரசாங்கம் என்றாலே செலவு செய்யும் ஸ்தாபனம் என்று கொள்ளலாகாது. பிரதிநிதித்துவ முறையில் அமைந்த, இங்கிலாந்தைப்போல் பத்து மடங்கு அதிக விஸ்தீரணமுள்ள நாட்டை ஆளும் அமெரிக்க சமஷ்டி அரசாங்கத்தின் செலவு 600,000 டாலர் அல்லது 130,000 பவுன்தான்.

ஐரோப்பாவில் எந்த அரசனுடைய குணத்தையும் ஜெனரல் வாஷிங்டன் குணத்தோடு எந்த அறிவுத் தெளிவுள்ளவனும் ஒப்பிடமாட்டான் என நான் கருதுகிறேன். எனினும் இங்கிலாந்திலும், பிரான்ஸிலும் அரசாங்கத் தலைவன் ஒருவனுடைய செலவு மட்டும் அமெரிக்க சமஷ்டி அரசாங்கத்தின் செலவைவிட எட்டு மடங்கு கூடுதலாகிறது. இதற்குத் தக்க காரணம் கண்டு பிடிப்பது துர்லபம். பிரான்ஸ் அல்லது இங்கிலாந்தின் பொது மக்களைவிட அமெரிக்கப் பொது மக்களும், அதிலும் ஏழைகள் சுலபமாக வரி செலுத்தும் சக்தி யுள்ளவர்களாயிருக்கின்றனர். பிரதிநிதித்துவ ஆட்சி, மக்களிடையே அரசாங்கத்தைப்பற்றி அறிவைப் பரப்புவதால் அவர்களிடம் அறியாமை அகன்றுவிடுகிறது. அவர்களை அடக்கியாளவும் முடியாது. அரண்மனை தர்பார் சூழ்ச்சி பாமர மக்களிடையே செல்லாது. இங்கே மர்மத்திற்கு இடமில்லை யாகையால் சூழ்ச்சிக்கு நுழைவிடம்கூடக் கிடையாது. பிரதிநிதிகளுக்குத் தெரிந்த அளவு அரசாங்க நடைமுறை ஞானம் பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்படாதவர்களிடையேயும் காணலாம். எல்லாம்

தெரிந்ததுபோல் பாசாங்கு செய்தல் அங்கு செலாவணியாகாது. நாட்டு மக்களுக்கு எவ்வித ரகசியமும் கிடையாது. அரண்மனை மர்மங்கள், தனிப்பட்டவர்கள் ரகசியங்கள்போல் குறைபாடு களேயாகும். பிரதிநிதித்துவ ஆட்சியில் எதற்கும் காரணம் காட்டியாக வேண்டும். ஒவ்வொரு மனிதனும் அரசாங்கத்தின் பொறுப்பாளி. ஆகையால் அதன் நடைமுறைபற்றித் தெரிந்து கொள்ள வேண்டியது அவசியம் எனக் கருதுகிறான். அறியாம லிருந்து விட்டால் அது அவன் அக்கறையையும், சொத்தையும் பாதிக்கிறது. அரசாங்கத்திற்கான செலவையும், அதனால் விளை யும் நன்மைகளையும் எடைபோட்டுப் பார்க்கிறான். எல்லா வற்றையும்விட மற்ற அரசாங்கங்களில் தலைவர் சொற்படி நடப் பது எனும் அடிமைத்தனத்தைப் பிரதிநிதித்துவ ஆட்சிக்குட் பட்டவர்கள் பின்பற்றுவதில்லை.

மனிதனின் பகுத்தறிவை மாய்த்து, அரசாங்கம் என்பது அதிசயமிக்க மர்மமான ஏற்பாடு என்று மக்களை நம்பச் செய் வதனால் ஏராளமான வரிப் பணம் வசூல் செய்யப்படுகிறது. இந்த நோக்கம் ஈடேறுவதற்கேற்ற முறையில் முடியாட்சி அமைக்கப் பட்டிருக்கிறது. மதஸ்தாபனங்களில் போப் ஆண்டவரின் நிர் வாக முறையில் ஊழல்கள் மலிந்திருப்பது போல அதே முறையை சமூக ஆட்சியிலும் புகுத்த முயற்சிப்பதுதான் முடியாட்சி, இதன் மூலம் மக்களை உற்சாகப்படுத்தி அவர்கள் வாய்திறவாமல் வரி செலுத்த வகை செய்துவிடுகின்றனர்.

உண்மையைக் கூறுவதானால் சுதந்திர நாட்டு ஆட்சி ஆளைப் பொறுத்ததல்ல; சட்டங்களைப் பொறுத்தது. இந்தச் சட்டங்களை இயற்றப் பிரமாத செலவொன்றும் ஆகாது. இந்தச் சட்டங்களை அமுல் செய்தால் அரசாங்கக் காரியங்கள் யாவும் முடிந்து விடுகின்றன. இது தவிர மற்ற ஆடம்பரங் களெல்லாம் அநாவசியமான அரண்மனைச் சூழ்ச்சிகளே.

அரசியலமைப்புகள்

அரசியலமைப்புகள், அரசாங்கம் என மக்கள் பிரித்துப் பேசுகையில் ஒவ்வொன்றுக்கும் வெவ்வேறு பொருள் இருக்கின்ற தென்பதை உணர்ந்து பேசுகின்றனர் என்பது தெளிவு. இல்லா விட்டால் இந்தப் பதங்களை ஏன் பிரத்தியேகமாக உபயோகிக்

கின்றனர்? அரசியலமைப்பு அரசாங்கத்தின் சிருஷ்டியல்ல. மக்கள் சேர்ந்து அரசாங்கம் நிறுவுவதே அரசியலமைப்பு. அரசியலமைப்பில்லாத அரசாங்கம் உரிமையின்றி அதிகாரம் செலுத்துவதற்கொப்பாகும்.

ஒரு மக்கள் கூட்டத்தின் மீது செலுத்தும் எல்லா அதிகாரத்திற்கும் ஆரம்பம் இருந்திருக்க வேண்டும். அந்த அதிகாரம் பிறர் அளித்ததாகவாவது அல்லது தாமே மேற்கொண்டதாகவாவது இருக்கலாம். இது தவிர வேறு வகையில் தோன்றியிருக்க முடியாது. பிறர் அளித்த அதிகாரமெல்லாம் தர்மகர்த்தா முறையில் நிர்வகிக்கப்பட வேண்டும். தாமே மேற்கொண்ட அதிகாரமெல்லாம் உரிமையில்லாததைக் கைப்பற்றியது போலாகும். காலப்போக்கினுல் இவ்விருவகை அதிகாரத்தின் இயல்பும் தரமும் மாருது.

இந்தப் பிரச்னையை ஆராய்கையில் அமெரிக்காவின் நிலையும் சந்தர்ப்பங்களும் நம் முன் தோன்றுகின்றன. அமெரிக்காவில் ஆட்சி அமைந்தது, உலகம் தோன்றிய ஆதிகாலத்தின் ஆட்சி ஏற்பட்டதற்கொப்பாகும். நம் கண்முன் நிகழ்ந்த சம்பவங்களைக் கவனிப்பதன் மூலம் அரசாங்கம் தோன்றிய வரலாறுபற்றிய ஆராய்ச்சி சுலபமாகி விடுகிறது. இதற்காக புராதனகாலம் எனும் வனந்திரத்தில் சுற்றித் திரியவேண்டியதில்லை; ஹேஷ்யங்களை நம்பித் தடுமாற வேண்டியதுமில்லை. நாம் உலகம் தோன்றிய காலத்தில் வசிப்பவர்கள்போல் அரசாங்கம் அமைக்கப்படுவதைப் பார்க்கிறோம். சதிகாரர்களால் சிதைவுருமல், சம்பிரதாய மூலம் தவறுகள் நேராமல் நாம் உய்த்துணரக் கூடிய உண்மைகள் ஏராளமாக நம் முன் கிடக்கின்றன.

இங்கு அமெரிக்க அரசியலமைப்புகள் தோன்றிய விவரங்களைக் கூறுகிறேன். அவைகளிலிருந்து அரசியலமைப்புக்கும் அரசாங்கத்திற்குமுள்ள மாறுபாடுகள் தெளிவாக விளங்கும்.

ஐக்கிய அமெரிக்க நாடுகள் பதின்மூன்று ராஜ்யங்கள் கொண்டவை என்பதையும், 4-7-1776-இல் சுதந்திரப் பிரகடனத்திற்குப் பிறகு ஒவ்வொரு ராஜ்யமும் பிரத்தியேக அரசாங்கம் அமைத்துக்கொண்டது என்றும் நான் வாசகர்களுக்கு நினைவுபடுத்தவேண்டியதில்லை. பிறர் தூண்டுதலின்றி சுயேச்சையாகவே ஒவ்வொரு ராஜ்யமும் தத்தம் அரசாங்கத்தை அமைத்

துக்கொண்டது. ஆனல் பொதுப்படையான ஒரே கொள்கை அடிப்படையில் அவை யாவும் அமைக்கப்பட்டன. எல்லா ராஜ்யங்களிலும் அரசாங்கம் அமைந்த பிறகு அவை யாவும் ஒன்று கூடிச் சமஷ்டி அரசாங்கம் அமைக்க முன்வந்தன. இந்த சமஷ்டி அரசாங்கம் நாடு பூராவின் நலனுக்கேற்ற விஷயங்களிலும் ராஜ்யங்களுள் பரஸ்பர உறவு, வெளிநாடுகளுடன் உறவு விஷயங்களிலும் அதிகாரம் செலுத்தியது. ராஜ்யங்களில் ஒன்ருகிய பென்ஸில்வேனியாவின் உதாரணத்தை விவரித்து விட்டுப் பின்னர் சமஷ்டி ஆட்சியைப்பற்றிக் குறிப்பிடுகிறேன்.

பென்ஸில்வேனியாவின் நிலப்பரப்பு இங்கிலாந்தளவே இருந்தாலும், அது பன்னிரண்டு கவுண்டிகளாக மட்டுமே பிரிக்கப்பட்டது. ஆங்கில அரசாங்கத்துடன் தகராறு ஏற்படுவதற்கு முன் ஒவ்வொரு கவுண்டியும் ஒரு கமிட்டி அமைத்தது. பிலடல்பியா நகருக்கும் ஒரு கமிட்டி இருந்தது. ராஜ்யம் பூராவிலிருந்தும் செய்திகள் வந்து சேருவதற்கேற்ப மத்தியில் இந்நகர் இருந்ததால் மற்ற கவுண்டி கமிட்டிகளுடன் தொடர்புகொள்ள வசதியாயிருந்தது. அரசாங்கம் அமைக்க முற்படவேண்டிய அவசியம் ஏற்பட்டவுடன், பிலடல்பியா கமிட்டி, எல்லா கவுண்டி கமிட்டிகளின் மகாநாடொன்றைக் கூட்டிற்று. அம் மகாநாடு பிலடல்பியாவிலேயே நடக்க ஏற்பாடாகி 1776 ஜுலை இறுதியில் கூடிற்று.

இந்தக் கமிட்டிகளை மக்களே தேர்ந்தெடுத்தாலும் அரசியலமைப்பு வகுப்பதற்கென்று அவைகள் கூட்டப்படவில்லை, அதை அமைப்பதற்கான அதிகாரமும் அதற்கு அளிக்கப்படவில்லை. உரிமைகள் பற்றிய அமெரிக்கக் கருத்துப்படி இந்த அதிகாரத்தை அது தானே ஏற்றுக்கொள்ள முடியாதாகையால் இவ் விஷயத்தைப்பற்றி அவர்கள் கூடி ஆலோசித்து மேற்கொண்டு நடவடிக்கைகளைத் திட்டம் செய்யலாம். ஆகையால் இம்மகாநாடு நிலைமையைத் தெளிவுபடுத்திவிட்டு கவுண்டி ஒன்றுக்கு ஆறு பிரதிநிதிகள் தேர்ந்தெடுத்தனுப்புமாறு திட்டம் செய்தது. இந்தப் பிரதிநிதிகளுக்கு அரசியலமைப்பு வகுக்கும் அதிகாரம் அளிக்கப்பட வேண்டும் எனவும் முடிவு செய்யப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் பிலடல்பியாவில் கூடவேண்டும் என்றும் திட்டம் செய்யப்பட்டது.

இந்த மகாநாட்டிற்கு (கன்வென்ஷன்) **பெஞ்சமின் பிராங்க்லின்** தான் தலைவர். இங்கு கூடிய மகாநாடு ஆலோசித்து ஓர் அரசியல் அமைப்பை ஏகமனதாக வகுத்தது. இதைப் பிரசுரம் செய்து மக்களின் ஆலோசனைக்கு அனுப்பவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது. மக்களின் சாதகமான அல்லது பாதகமான அபிப்பிராயம் தெரிந்ததும் மகாநாடு குறிப்பிட்ட ஒரு தேதியில் மறுபடி கூடவேண்டும் எனவும் முடிவு செய்யப்பட்டது.

இம் மகாநாடு (கன்வென்ஷன்) குறிப்பிட்ட காலத்தில் மீண்டும் கூடிற்று. அரசியலமைப்பை ஆதரிப்பதே மக்களின் பொதுவான கருத்து என்பதை உணர்ந்து '**மக்களின் அதிகார** முத்திரை பெற்றுக் கையெழுத்திடப்பட்டுப் பிரகடனம் செய்யப்பட்டது. முதலில் தயாரிக்கப்பட்ட அமைப்பு பொது தஸ்தாவேஜாக பத்திரப்படுத்தப்பட்டது.

அரசாங்கத்தில் இடம் பெறும் பிரதிநிதிகள் தேர்தலுக்கும், அரசாங்க வேலை தொடங்கவும் நாள் குறிப்பிட்டுவிட்டுக் கன்வென்ஷன் பிரதிநிதிகள் தத்தம் ஊர்களுக்குச் சென்று தத்தம் தொழில்களில் ஈடுபட்டனர்.

இந்த அரசியலமைப்பில் உரிமைப்பட்டியலும் இடம் பெற்றிருந்தது. அப்புறம் அரசாங்க முறை, அதற்குள்ள அதிகாரம், நீதிஸ்தலங்களின் அதிகாரம், ஜூரிகளின் கடமைகள், தேர்தல்கள் நடக்கவேண்டிய முறை, எவ்வளவு வோட்டுரிமையுள்ளவர்களுக்கு எத்தனைப் பிரதிநிதிகள், ஒவ்வொரு சட்டசபையும் ஒரு வருடம் நடக்கவேண்டும், வரி விதிக்கும் முறை, செலவினங்களுக்குக் கணக்கெழுதும் முறை, பொதுஜன உத்தியோகஸ்தர்கள் நியமனம் முதலிய யாவும் விவரமாகக் கூறப்பட்டிருந்தன.

வரப்போகும் அரசாங்கம் தன்னிஷ்டப்படி அரசியலமைப்பின் ஷரத்துக்களை மாற்றவோ, மீறவோ கூடாது. அந்த அரசாங்கத்திற்கு அரசியலமைப்பே சட்டம். அநுபவத்தின் பயனை மக்கள் அடையாமல் தடுப்பது புத்திசாலித்தனமாகாது என்பதனாலும், தவறுகள் நேருமானால் அவைகளைத் தீர்க்காமல் சேர்த்துவைப்பது நன்மையல்ல என்பதனாலும், நாட்டின் நிலவரத்திற்கேற்ப என்றும் அரசாங்கம் நடக்கவேண்டுமாகையாலும் ஏழு ஆண்டுக்கொரு முறை கன்வென்ஷன் கூடி அவசியமானால் அரசியலமைப்பைத் திருத்தவோ, புதிய ஷரத்துக்களைச்

சேர்க்கவோ, வேண்டாதவற்றை நீக்கவோ செய்யலாம் என்று அரசியலமைப்பே வசதியளித்திருந்தது.

மக்கள் கூடித் திட்டம் செய்து அரசியலமைப்பது; அதனின்று ஒரு அரசாங்கம் ஏற்படுவது; அவ்வரசாங்கத்திற்கு அரசியலமைப்பு உரிமையளித்து அது செயல்படுவதற்குச் சட்டமாகவும் அமைவது; இவையெல்லாம் ஒழுங்கான முறையில் செயல்படுவதை நாம் இங்கே காண்கிறோம். அரசியலமைப்பே ராஜ்யத்தின் அரசியல் வேதநூல். இந்த அமைப்பு விதிகளின் பிரதி ஒன்றை வைத்துக்கொள்ளாத குடும்பத்தைக் காண்பதரிது. அரசாங்கத்தில் பதவி வகிக்கும் ஒவ்வொருவரிடமும் ஒரு பிரதி இருக்கும். ஒரு மசோதாவின் கொள்கைபற்றி விவாதம் நடக்கையில், அல்லது அதிகாரவரம்பு பற்றிச் சர்ச்சை நடக்கையில் அங்கத்தினர்கள் தங்கள் சட்டைப் பையிலிருந்து ஒரு அரசியலமைப்புப் பிரதியை எடுத்து சம்பந்தப்பட்ட அத்தியாயத்திலிருந்து படித்து மேற்கோள் காட்டுவதை சகஜமாகப் பார்க்கலாம்.

ஒரு ராஜ்யத்தில் அரசாங்கம் அமைப்பதற்கான உதாரணம் காட்டிவிட்டேன். இனி சமஷ்டி அரசாங்கம் ஏற்பட்டது சம்பந்தமான நடவடிக்கைகள்பற்றிக் குறிப்பிடுகிறேன்.

1774 செப்டம்பரிலும், 1775 மே மாதத்திலும் நடந்த காங்கிரஸ் பல மாகாணங்கள் அல்லது ராஜ்ய சட்டசபைகளிலிருந்து தூது வந்தவர்களின் கூட்டமேயாகும். எல்லோரும் சேர்ந்து ஒரு பொதுஸ்தாபனத்தில் கட்டுக்கோப்புடன் நடக்க வேண்டும் என்பது தவிர இந்தக் கூட்டத்திற்குப் பிரத்தியேக அதிகாரம் எதுவும் கிடையாது. அமெரிக்க உள்நாட்டு விவகாரங்களில் மாகாண அசெம்பிளிகளுக்கு இந்தக் காங்கிரஸ் சிபார்சுகள் செய்யலாம். இவைகளை மாகாணங்கள் ஏற்கலாம் அல்லது நிராகரிக்கலாம்.

காங்கிரஸின் தீர்மானங்கள் யாரையும் கட்டுப்படுத்தாது. ஆனால் இந்த நிலையில் காங்கிரஸின் முடிவுகளுக்கு, ஐரோப்பாவில் உள்ள எந்த அரசாங்கக் கட்டளைகளுக்கும் செலுத்தப்படாத மதிப்பும், உள்ளன்புமிக்கப் பணிவும் காட்டப்பட்டது. இந்த உதாரணமும், பிரஞ்சு தேசீய அசெம்பிளியின் உதாரணமும் அரசாங்கத்தின் பலம் அதனுள் இல்லை, மாறாக, மக்கள் அதனி

டம் காட்டும் பற்றுதலிலும், அதை ஆதரிப்பதில் மக்கள் காட்டும் அக்கறையிலுமே அமைந்திருக்கிறது என்பதை உணர்த்துகின்றன. மக்களின் இந்தப் பற்றும் பாசமும் நீங்கினால், அரசாங்கம் என்பது குழந்தை அரசு செலுத்துவதற் கொப்பாகிவிடும். இந்த நிலையில் பழைய பிரெஞ்சு அரசாங்கம் மாதிரி மக்களைக் கொஞ்ச காலம் துன்புறுத்தலாமே தவிர, அதன் வீழ்ச்சிக்குத் தானே வழிதேடிக்கொள்ளும் என்பதில் சந்தேகமில்லை.

சுதந்திரப் பிரகடனத்திற்குப் பிறகு பிரதிநிதித்துவ ஆட்சி அமைந்த கொள்கையை ஒட்டி காங்கிரஸின் அதிகாரத்தின் வரம்பைத் திட்டம் செய்ய வேண்டியது அவசியமாயிற்று. அச்சமயம் காங்கிரஸ் சமயோசித புத்தியுடன் நிர்வகித்த அதிகாரத்தைவிடக் கூடுதலா யிருக்கவேண்டுமா, குறைவா யிருக்கவேண்டுமா என்பது பிரச்னையல்ல. அந்தத் திட்டத்தின் நேர்மையைப்பற்றியே முடிவு செய்யவேண்டியிருந்தது.

இதற்காக ஒருவகைக் குறைபாடுள்ள சமஷ்டி அரசியலமைப்பு, **ஆக்ட் ஆப் கான்பெடரேஷன்** (Act of Confederation) பிரரேபிக்கப்பட்டு நீண்டகால விவாதத்திற்குப் பின் 1781-இல் ஒப்புக்கொள்ளப்பட்டது. இது காங்கிரஸால் இயற்றப்பட்டதல்ல. ஏனெனில், ஒரு ஸ்தாபனம் தனக்கே அதிகாரம் அளித்துக் கொள்ளுவது பிரதிநிதித்துவ ஆட்சிக் கொள்கைக்கு முரணானது. சமஷ்டியினிடம் எதிர்பார்க்கப்பட்ட கடமைகளை அது சீராக நிறைவேற்றுவதற்காக அதற்குத் தேவைப்படும் அதிகாரங்களைப் பற்றிக் காங்கிரஸ், உறுப்பு ராஜ்யங்களுக்கு அறிவித்தது. ராஜ்யங்கள் தனித்தனியாக இந்த அதிகாரங்களின் அவசியத்தை ஏற்று அவைகளைக் காங்கிரஸுக்கு அளித்தது.

பென்ஸில்வேனியா, அமெரிக்க சமஷ்டி இரு உதாரணங்களிலும் அரசாங்கத்திற்கும் மக்களுக்கும் உடன்பாடு ஒன்றுமில்லை என்பதைக் குறிப்பிடுவதில் தவறொன்றுமில்லை. ஆனால் மக்கள் தங்களுக்குள்ளேயே உடன்பட்டு அரசாங்கத்தை அமைத்தனர் எனக் கூறுவதே பொருத்தமாகும்.

ஓர் அரசாங்கம் மக்கள் யாவரிடமும் உடன்பாடு செய்து கொண்டது எனக் கூறினால் அரசாங்கம் தான் அமைவதற்கான உரிமை பெறுவதற்கு முன்பே இருந்தது என ஒப்புக்கொள்ளுவதாகும். மக்களுக்கும் அரசாங்கத்திற்கும் ஒப்பந்தம் ஏற்படக்

கூடிய ஒரே சந்தர்ப்பம், மக்கள் அதிகாரிகளைச் சம்பளத்திற்கு அமர்த்தியிருக்கும்போதுதான்.

அரசாங்கம் என்பது தனி மனிதனோ அல்லது ஒரு குழுவோ தங்களது சொந்த லாபத்திற்காக நடத்தும் வர்த்தக மல்ல. அது ஒரு தர்ம நிர்வாகப் பொறுப்பை ஒத்தது. இந்தப் பொறுப்பை யார் அளிக்கின்றனரோ, இதை யார் திரும்பவும் ரத்து செய்ய முடியுமோ அவர்கள் நலனுக்காக நிர்வகிக்கப்பட வேண்டும். அரசாங்கத்திற்கு உரிமைகள் கிடையா; கடமைகள் மட்டுமே உள.

அரசியலமைப்பு ஆதியில் உருவானதற்கு இரண்டு உதாரணங்கள் கொடுத்துவிட்டேன். இவைகள் ஏற்பட்டதற்குப் பின்னர் என்னென்ன சந்தர்ப்பங்களில் அவைகள் மாற்றப் பட்டுள்ளன என்பதை எடுத்துக்காட்டுகிறேன்.

பல்வேறு ராஜ்யங்களுக்கு ராஜ்ய - அரசியலமைப்புகள் அளித்த அதிகாரங்கள் சற்றுக் கூடுதலானவை என்பது அநுபவ மூலம் தெரிந்தது. கான்பெடரேஷன் சட்டப்படி சமஷ்டி அரசாங்கத்திற்கு அளிக்கப்பட்ட அதிகாரங்கள் குறைவு என்பதும் தெரிந்தது. இந்தக் குறைபாடுகள் கொள்கைகளில் அல்ல, அதிகாரப் பாகுபாட்டில்தான்.

சமஷ்டி அரசாங்கத்தின் புதிய அமைப்பு, அதன் அவசியம் பற்றி பத்திரிகைகளில் பல கட்டுரைகளும், தனிப் பிரசுரங்களும் ஏராளமாக வெளிவந்தன. விவாதத்தின் மூலமும், கட்டுரைகள் மூலமும் சிறிது காலம் சர்ச்சை நடந்த பிறகு வர்ஜினியா ராஜ்யம் வர்த்தக சம்பந்தமாகச் சில சங்கடங்கள் அநுபவித்த தன் விளைவாக ஒரு கான்டினண்டல் காங்கிரஸ் கூட்டவேண்டும் என்று அது யோசனை கூறிற்று. இதன் விளைவாக ஐந்து அல்லது ஆறு ராஜ்ய அசெம்பிளிகளிலிருந்து தூது கோஷ்டிகள் 1786-இல் மேரிலாண்டிலுள்ள **அன்னபாலிஸ்** என்னுமிடத்தில் கூடின. சீர்திருத்த விஷயத்தில் துணிந்து முன்னேறத்தக்க அதிகாரம் தனக்கில்லை என்பதை அறிந்த இக்கூட்டம் இந்த சீர்திருத்தத்தின் அவசியத்தைப்பற்றிப் பொதுப்படையாகப் பேசிவிட்டு எல்லா ராஜ்யங்களிலும் மகாநாடு அடுத்த ஆண்டு கூடவேண்டும் எனச் சிபார்சு செய்தது.

1787-ஆம் ஆண்டு மே மாதம் இம் மகாநாடு **பிலடல்பியா**வில் கூடியது. இதற்குத் தலைவராக தளபதி வாஷிங்டன்

தேர்ந்தெடுக்கப்பட்டார். அந்தச் சமயம் அவர் எந்த அரசாங்கத்திலாவது, காங்கிரஸிலாவது பதவி வகிக்கவில்லை. யுத்தம் முடிந்ததும் தனது ராணுவப் பதவியைத் துறந்துவிட்டு அவர் சாமானிய பிரஜையாகவே வாழ்ந்துவந்தார். கன்வென்ஷன் எல்லா விஷயங்களையும் ஆழ்ந்து ஆலோசனை செய்தது. பல வகை விவாதம், ஆராய்ச்சி எல்லாம் நடந்த பிறகு சமஷ்டி அரசாங்கத்தின் பல்வேறு பகுதிகளைப்பற்றி ஒருமைப்பாடடைந்தனர். அடுத்தபடியாக அவர்கள் செய்த முடிவுகளை எப்படி அமுல் நடத்தி நிறைவேற்றுவது என்பதுபற்றி ஆலோசிக்க வேண்டும்.

இதற்காக அவர்கள் அரசதாசக் குழுவினர்போல் டச்சுப் பிரபு, அல்லது ஜெர்மன் எலக்டரின்* உதவியை நாடவில்லை. எல்லாவற்றையும் நாட்டு மக்களின் அரிய ஆலோசனைக்கு விட்டுவிட்டனர்.

முதலில் இந்த அரசியலமைப்பை அச்சிட்டு வெளியிட வேண்டும் எனத் தீர்மானித்தனர். இரண்டாவதாக ஒவ்வொரு ராஜ்யமும் இதற்காகப் பிரத்தியேகக் கன்வென்ஷன் கூட்டி இந்த அமைப்பை ஒன்று அங்கீகரிக்கவேண்டும் அல்லது நிராகரிக்கவேண்டும் என முடிவுசெய்தனர். குறைந்தது ஒன்பது ராஜ்யங்கள் இதை அங்கீகரித்ததும் அந்த ராஜ்யங்கள் தங்களுக்குரிய பிரதிநிதிகளை சமஷ்டி அரசாங்கத்திற்குத் தேர்ந்தெடுக்கவேண்டும். இது முடிந்ததும் பழைய அரசாங்கத்திற்குப் பதிலாகப் புது அரசாங்கம் செயல்புரியத் தொடங்க வேண்டும்.

இதன்படி கன்வென்ஷன்கள் கூட்ட ராஜ்யங்கள் முற்பட்டன. சில ராஜ்யங்கள் அரசியலமைப்பைப் பெருவாரியான வோட்டுகளால் அங்கீகரித்தன. இரண்டு அல்லது மூன்று ராஜ்யங்கள் ஏகமனதாய் ஆதரித்தன. மற்றவைகளில் மாறுபட்ட கருத்துக்களும் பலத்த விவாதங்களும் நடந்தன. பாஸ்டனில் முந்நூறு பேர்கள் கூடிய மஸாசுஸெட்ஸ் கன்வென்ஷனில் அரசியலமைப்புத் தீர்மானத்துக்குப் பெரும்பான்மையினரின் எண்ணிக்கை சிறுபான்மையினரின் எண்ணிக்கையைவிட பத்தொன்பது அல்லது இருபது மட்டுமே அதிகமாக இருந்தது.

*1688-இல் ஹாலந்திலிருந்து **வில்லியம் ஆப் ஆரஞ்சும்,** 1714-இல் ஹனோவரிலிருந்து **முதலாவது ஜார்ஜும்** ஆங்கில நாட்டு அரசர்களாக வந்ததை ஆசிரியர் குறிப்பிடுகிறார்.

ஆனால் பிரதிநிதித்துவ ஆட்சியின் இயல்பின்படி எல்லா விஷயங்களும் பெரும்பான்மை வாக்குகள் கொண்டு அமைதியாக முடிவுசெய்யப்பட்டன.

மஸாசுஸெட்ஸ் கன்வென்ஷனில் விவாதம் முடிந்து வோட்டெடுத்தபின் ஆட்சேபித்த அங்கத்தினர்கள் கூறினர்:

''சில பகுதிகள் பற்றிப் பெரும்பான்மையோர் கருத்துக்களுக்கு எங்கள் அபிப்பிராயம் மாறுபட்டதாயிருந்ததனால் நாங்கள் எதிர்த்து வாதம் புரிந்து வோட்டுச் செய்த போதிலும் அரசியலமைப்பு இருந்தபடியே அதைப் பெரும்பாலோர் ஆதரித்துவிட்டதனால் அதை நாங்கள் ஆதரித்திருந்தால் எவ்வாறு நடந்து கொண்டிருப்போமோ அவ்வாறே அதை நிறைவேற்றி வைக்க நாங்கள் தயாராயிருக்கிறோம்.''

பதின்மூன்று ராஜ்யங்களில் ஒன்பது தங்கள் இணக்கத்தைத் தெரிவித்ததும் பழைய சமஷ்டி ஆட்சி கலைக்கப்பட்டு புதியது தேர்ந்தெடுக்கப்பட்டது. இந்தப் புதிய சமஷ்டிக்கு ஜெனரல் வாஷிங்டனே ஜனாதிபதி. இந்தக் கனவானின் குணத்தையும், இவர் ஆற்றிய நற்பணியையும் பார்த்தால் மன்னர் எனப்படுவோர் வெட்கித் தலைகுனிய வேண்டும் என இந்தச் சந்தர்ப்பத்தில் என்னால் குறிப்பிடாமலிருக்க முடியவில்லை.

மக்கள், நெற்றி வியர்வை நிலத்தில் சொட்ட உழைத்துப் பெற்ற ஊதியத்திலிருந்து எவ்விதத் தகுதியுமின்றி இந்த மன்னர்கள் கணக்கின்றிப் பணம் பெற்று வாழ்கையில், வாஷிங்டன் தன்னால் இயன்றமட்டும் சேவை செய்துவிட்டு, அதற்காக எவ்விதப் பண உதவியும் பெற மறுக்கிறார். தளபதியாயிருக்கையிலும் அவர் பணம் வாங்கிக்கொள்ளவில்லை. ஜனாதிபதியாகவும் ஊதியம் பெறவில்லை.

புதிய சமஷ்டி அரசியலமைப்பு அமுலுக்கு வந்தபிறகு பென்ஸில்வேனியா ராஜ்யம் தனது அரசியலமைப்பில் சில குறைகள் இருப்பதாகக் கருதிற்று. அவைகளைத் திருத்துவதற்காக ஒரு கன்வென்ஷனைக் கூட்டிற்று. 'உத்தேச திருத்தங்கள் பிரசுரம் செய்யப்பட்டன. அவைகளை மக்கள் ஏற்றுக்கொண்டதன்பேரில் அவை நிறைவேற்றப்பட்டன.

இந்த அரசியலமைப்புகளை வகுப்பதிலோ, திருத்துவதிலோ எவ்வித அசௌகரியமும் ஏற்படவில்லை. நடைமுறை

அலுவல்கள் ஏதும் தடைப்படவில்லை. ஆனால் நலன்கள் நிரம்ப ஏற்பட்டன. தவறு நீடிப்பதைவிட அதைத் திருத்துவதே பெரும்பாலோருக்கு நன்மை பயக்கிறது. பொது விஷயங்களை விவாதிக்கலாம் என்பதனாலும், பொது மக்கள் சுயேச்சையாக முடிவு செய்யலாம் என்பதனாலும் அவசரமாக முடிவு செய்தாலொழிய பொதுஜனத் தீர்ப்பு தவறுதலாகப் போகாது.

அரசியலமைப்பை மாற்றுவதற்கான இரு சம்பவங்களிலும் அரசாங்கங்கள் பங்குகொள்ளவில்லை. அரசியலமைப்பு கொள்கை, அதை அமைக்கும் அல்லது மாற்றும் விதம் முதலியவைகள் பற்றிய சர்ச்சையில் கலந்துகொள்ள அரசாங்கத்திற்கு உரிமை இல்லை. அரசாங்க அதிகாரம் வகிப்பவர்களின் நன்மைக்காக அரசியலமைப்புகளோ அல்லது அவைகள் மூலம் ஸ்தாபிதமாகும் அரசாங்கங்களோ ஏற்படவில்லை. இம்மாதிரி விஷயங்களில் முடிவு செய்யும் உரிமை செலவுக்குப் பணம் கொடுப்போருக்கேயொழிய பணம் வாங்கிக்கொள்ளுபவர்களுக்கல்ல.

அரசியலமைப்பு நாட்டு மக்களின் சொத்தே ஒழிய அரசுபுரிபவர்களுடையதல்ல. அமெரிக்காவில் அமுலிலிருக்கும் அரசியலமைப்புகள் யாவும் மக்கள் அதிகாரத்தின் மீது நிறுவப்பட்டவை. பிரான்ஸில் 'மக்கள்' எனும் பதத்திற்குப் பதிலாக 'நாட்டினர்' எனும் பதத்தையே உபயோகிக்கின்றர். ஆனால் இரு நாடுகளிலும் அரசாங்கத்திற்கு முன் அரசியலமைப்பு, ஏற்பட வேண்டுமென்பதும் இரண்டு பதங்களுக்கும் வெவ்வேறு பொருள் உண்டு என்பதும் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

இங்கிலாந்தில் நாட்டு மக்கள் நீங்கலாக மற்றெல்லாவற்றிற்கும் அமைப்பு விதிகள் இருக்கின்றன. ஒவ்வொரு சமூகமோ, சங்கமோ நிறுவப்படுமுன் சில ஷரத்துக்களை ஒப்புக்கொள்ளுகின்றனர். இவைகளே அமைப்பு விதிகளாகும். சமூகமோ, சங்கமோ அப்புறம் அதற்கான உத்தியோகஸ்தர்களை நியமித்தன. அவர்களுடைய அதிகாரங்கள் அமைப்பு விதிகளில் விளக்கப்பட்டிருக்கும். இதன் பிறகு அந்த சமூகத்தின் ஆட்சி தொடங்கும். இந்த உத்தியோகஸ்தர்கள்—அவர்களை என்ன பெயர்கொண்டு அழைத்தாலும் சரி—அரசியல் அமைப்பு விதிகளைக் கூட்டவோ, குறைக்கவோ அதிகாரம் அற்றவர்கள். யார் அமைப்பு விதிகளை ஆக்கினார்களோ அவர்களுக்கே அவற்றைத் திருத்தும் உரிமை உண்டு.

பிரதிநிதித்துவ அரசாங்கமும், சம்பிரதாயத்தைப் பின்பற்றும் அரசாங்கமும்

மனம்போன போக்கில் அதிகாரத்தைப் பிரயோகிக்கும் அடங்காப்பிடாரித்தனத்தைக் கட்டுப்படுத்த இங்கிலாந்தில் அரசியலமைப்பு இல்லாததனுல் அநேக சட்டங்கள் அறிவுக் கொவ்வாதவைகளாகவும், கொடுங்கோல் தன்மை வாய்ந்தவையாகவும் இருப்பதுடன், சட்டங்களின் அமுல் வியக்தமற்றதாகவும், சிக்கல் விளைவிப்பதாகவும் இருக்கின்றன.

இங்கிலாந்தில் ஜெர்மானியன் (முதலாவது ஜார்ஜ்) அரசஞக வந்ததிலிருந்து அந்நாட்டு அரசாங்கம் தனது பூரா கவனத்தையும் அயல் தேச விவகாரங்களிலும், எப்படி வரிகள் விதிக்கலாம் என்பதிலும் செலுத்திவருகிறது. இவைகளுக்கெனவேதான் அந்த அரசாங்கம் இருக்கிறது போலும்! உள்நாட்டு நலன்கள் அலட்சியம் செய்யப்படுகின்றன. ஒழுங்கான சட்டம் என்பது கிடையவே கிடையாது.

இப்பொழுதெல்லாம் எல்லா விஷயங்களையும் ஏதாவது ஒரு முன்மாதிரியைக்கொண்டே முடிவு செய்யவேண்டும். அது சரியாயிருந்தாலும் தவருயிருந்தாலும், பொருத்தமாயிருந்தாலும் இல்லாவிட்டாலும் இந்தப் பழக்கம் பெருவாரியாக இடம் பெற்றுவிட்டதனுல் இது ஏதாவது ஓர் ஆழ்ந்த சூழ்ச்சியின் விளைவோ என்றுகூட எண்ணத்தோன்றுகிறது.

அமெரிக்கப் புரட்சி நிகழ்ந்ததிலிருந்து, அதுவும் பிரஞ்சுப் புரட்சிக்குப் பின் இந்த முன்மாதிரி அமுல்பற்றி ஆங்கிலேய அரசாங்கம் தீர்மானமாகப் பிரசாரம் செய்துவருகிறது. இந்த முன்மாதிரிகள் எந்த நேர்மையான கொள்கைகள் அல்லது கருத்துக்கள் அடிப்படையிலும் எழவில்லை. அவை எவ்வளவுக்கெவ்வளவு புராதன காலத்தில் நிகழ்ந்தனவோ அவ்வளவுக்கவ்வளவு அவை சந்தேகப்படத்தக்கனவே.

இந்த முன்மாதிரிகளால் இவற்றைச் சம்பிரதாயங்கள் என்றும் கொள்ளலாம்—மதகுருக்கள் பழைய சின்னங்களை தெய்வாம்சம் பொருந்தியவை என்றழைப்பதுபோல் பழையவைகளில் ஒருவித மூடபக்தி காட்டுவதனுல் உலக மக்களில் பெருவாரியானவர்கள் ஏமாந்துவிடுகின்றனர். மக்களிடம் ஒரு

சிறிதளவு சிந்தனேச் சுடர்விட்டாலும் அபாயம் என்று கருதும் அளவுக்கு அரசாங்கங்கள் வந்துவிட்டன. அவைகள் மக்களே மெதுவாக சம்பிரதாயம் எனும் பாசறைக்கு இட்டுச்சென்று அவர்களுடைய அறிவுத்திறனே மழுங்கச்செய்து அவர்களது கவனத்தைப் புரட்சியிலிருந்து திருப்புகின்றன.

அவர்கள் எதிர்பார்ப்பதைவிடத் துரிதமாக மக்கள் ஞானம் பெற்று வருவதை அவர்கள் உணருகிருர்கள. சம்பிரதாயங்களே அவர்கள் பின்பற்றுவதே அவர்கள் அச்சமடைந்து விட்டனர் என்பதற்கறிகுறி. பழங்காலப் போப் ஆட்சி ஊழல்போல் இது அரசியலில் போப் ஆட்சி. இவர்கள் காலம் மலேயேறி விட்டது; விரைவில் மறைந்தும் விடும். ஓர் புராதனத்தின் சின்னங்களும் காலங்கடந்த சம்பிரதாயங்களும், மத குருவும் முடியரசனும் ஒன்ருகச் செத்து மடிவர்.

சம்பிரதாயம் சிறந்த கொள்கையடிப்படையில் எழுந்ததா என்பதைப் பாராமல் அதைப் பின்பற்றி நடக்கும் அரசாங்கம் தீயவற்றிலும் தீய ஆட்சி முறையாகும். அநேக சந்தர்ப்பங்களில் சம்பிரதாயம் எச்சரிக்கைகளாக அமையலாமே ஒழிய, பின்பற்றத்தக்கவை யல்ல. இவைகளேப் பின்பற்றுவதற்குப் பதிலாக வெறுத்துத் தள்ள வேண்டும். இதற்குப் பதிலாக சம்பிரதாயங்களே அப்படியே எடுத்துக்கொண்டு அவைதான் அரசியலமைப்புகள் என்றும், சட்டம் என்றும் தலேயில் வைத்துக் கூத்தாடுகிருர்கள்.

முன்மாதிரி என்பது மக்களே அறியாமையில் ஆழ்த்தி வைக்கும் முறையா யிருக்கவேண்டும் அல்லது அரசாங்கங்கள் நீடிக்க நீடிக்க அதன் அறிவு மழுங்கிவிடுகிறது, அவைகள் முன் மாதிரிகள் எனும் பொய்க்கால்கள் கொண்டுதான் நடக்க வேண்டும் என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும்.

அவர்களுக்கு முன்னிருந்தவர்களே விட அறிவாளிகள் எனக் கருதப்பட வேண்டியவர்கள், அறிவை இழந்தவர்களின் பேய் உருவங்களாக நடமாட எப்படித் தயாராயிருக்க முடியும்? பழமை எவ்வளவு விசித்திரமாக மதிக்கப்படுகிறது? சில காரணங்களுக்காக முன்மாதிரிகளே அறியாமை இருள் சூழ்ந்த காலம் என்கின்றனர். மற்றும் சில சந்தர்ப்பங்களில் அதுவே உலகத்தின் ஜோதி என்றும் பிரகடனம் செய்கின்றனர்.

முன்மாதிரிக் கொள்கையைப் பின்பற்றுவதாயிருந்தால் இப்பொழுதுள்ள அகாத அரசாங்கச் செலவு நீடிக்கவேண்டிய தில்லை. ஒரு வேலையுமில்லாதவர்களுக்கு ஏராளமாக எதற்குச் சம்பளம் கொடுக்கவேண்டும்? இனி நடக்கவேண்டிய யாவும் முன்கூட்டியே திட்டமிடப்பட்டிருந்தால், சட்டமியற்றுதல் நின்று விடலாம். முன்மாதிரிகளை அகராதி மாதிரி அமைத்து எவற்றையும் பைசல் செய்து விடலாம். ஒன்று அரசாங்கம் கிழப் பருவமடைந்து அதற்கு காயகல்ப சிகிச்சை செய்ய வேண்டும் அல்லது அது தன்னிடத்துள்ள அறிவுத்திறன் முழுவதையும் பயன்படுத்த வேண்டிய முழு சந்தர்ப்பம் வந்துவிட்டது.

ஐரோப்பா வெங்கும், குறிப்பாக இங்கிலாந்திலும் நாட்டு மக்கள் ஒருபுறமும், அரசாங்கம் அதற்கு நேர் எதிர்ப்புறமும் நோக்கி நிற்கும் காட்சியைப் பார்க்கிறோம். அதாவது, நாட்டு மக்கள் முன்னேற விரும்புகின்றனர்; அரசாங்கம் பின்செல்ல ஆசைப்படுகிறது. அரசாங்கங்கள் பழையனவற்றைப் பின்பற்றியும், மக்கள் முன்னேற்றத்தை நாடியும் செல்லுவதென்றால், கடைசியில் இருதரத்தாரும் பிரிந்து செல்லவேண்டிய தருணம் வந்தே தீரும். இந்தப் பிரிவினையை விரைவில் அமைதியாக முடிவு செய்தால் இருதரத்தாருக்கும் நலம்பிறக்கும்.

அரசியலமைப்புகள், அரசாங்கங்கள் இரண்டும் தனித் தனியானவை என்பதைப் பொதுப்படையாக விளக்கியாயிற்று. இனி அரசியலமைப்பின் பல்வேறு பகுதிகள் பற்றி ஆராய்வோம்.

அரசியல் அமைப்பு முழுதும் பற்றி உள்ளதை விட, அதன் பகுதிகள் பற்றி அபிப்பிராயபேதம் மிகுதியாயிருக்கின்றது. அரசாங்க நடைமுறையை ஒழுங்குசெய்ய அரசியலமைப்புகள் அவசியம் என்பதை அரசதாசர்கள் தவிர மற்றவர்கள் யாவரும் ஒப்புக்கொள்ளுவர். அதன் பகுதிகள் பற்றி அபிப்பிராயபேதம் பெருகுகிறது. ஆனால் நன்கு புரியும்படி விளக்கிக் கூறினால் அபிப்பிராயபேதம் குறையும். முதலாவதாக, அரசியலமைப்பு வகுத்துக்கொள்ள ஒவ்வொரு நாட்டினருக்கும் உரிமை உண்டு.

நன்கு ஆய்ந்தோய்ந்து இந்த உரிமையை உபயோகிக்கின்றனரா என்பது வேறு விஷயம். மக்களுக்குள்ள பகுத்தறிவுக்கேற்ப உரிமையைப் பயன்படுத்துவர். இவ்வாறே நீடித்து தங்கள் அறிவைப் பயன்படுத்தி வந்தார்களானால் போகப்போக

தவறுகள் நிகழ்வது குறைந்துவிடும். இந்த உரிமை ஒரு நாட்டு மக்களுக்குக் கிடைத்துவிட்டால் அதைத் தங்களுக்குத் தீங்கு நேரிடும் வகையில் பயன்படுத்துவர் என அஞ்சவேண்டியதில்லை. தவறு செய்வதில் ஒரு நாட்டுக்கு என்ன நன்மை இருக்கிறது?

அமெரிக்காவின் எல்லா அரசியலமைப்புகளும் பொதுப் படையான ஒரு கொள்கை அடிப்படையில் நிறுவப்பட்டிருந் தாலும் அவைகளின் பல்வேறு பகுதிகளிலோ அல்லது அரசாங் கத்திற்கு அவைகள் அளிக்கும் அதிகார அளவிலோ ஒன்று பட்டதாயில்லை. சில சிக்கல் நிறைந்தனவாகவும், மற்றும் சில அவ்வளவு சிக்கல்கள் இல்லாதனவாகவும் அமைந்துள்ளன.

அரசியலமைப்புத் திட்டம் செய்வதில் எதற்காக அரசாங்கம் வேண்டும் என்பதை முதன் முதலில் கவனிக்கவேண்டியது அவசியம். இரண்டாவதாக இந்த நோக்கம் குறைந்த செலவில் நிறைவேறச் சிறந்த முறை என்ன?

அரசாங்கம் என்பது ஒரு தேசீயக் கூட்டுறவுதான். இந்தக் கூட்டுறவின் நோக்கம், தனிப்பட்டவர்கள் மக்கள் கூட்டத்தினர் யாவர் நலத்தையும் வளர்ப்பதுதான். ஒவ்வொரு மனிதனும் தனது தொழிலை நடத்தி உழைப்பின் பலனையும், சொத்தில் கிடைக்கும் லாபத்தையும் அடையவே விரும்புகிறான். இதை அமைதியாகவும் குறைந்த செலவிலும் நடத்த விரும்புகிறான். இந்த ஆசைகள் நிறைவேறிவிட்டால் எந்த லட்சியங்களுக்காக அரசாங்கங்கள் அமையவேண்டும் என விரும்புகின்றோமோ அவைகள் கைகூடிவிடுகின்றன.

அரசாங்கத்தை மூன்று விதமான அம்சங்களில் ஆராய்வது வழக்கமா யிருந்துவருகிறது. சட்டமியற்றுதல், நிர்வகித்தல், நீதி வழங்குதல். பல்வேறு பதங்களை உபயோகிப்பது எனும் பழக்கத்திற்கு நாம் அடிமையாகாமலிருந்தால் அரசாங்கத்தி னிடம் உள்ள அதிகாரத்தை இரு கூறுகளாகவே பிரிப்போம். அதாவது சட்டமியற்றுவது, அதை அமுல் செய்வது அல்லது நிர்வகிப்பது. சிவில் ஆட்சியின் எல்லா அம்சங்களும் இவ்விரு பகுதிகளில் அடங்கிவிடும்.

சட்டங்களை நிறைவேற்றுவதென்பதில் நீதி வழங்கும் அதி காரம் என்பது நாட்டின் நிர்வாகத்திலேயே அடங்கிவிடுகிறது. நிர்வாகம்தான் சட்டங்களை அமுல் செய்கிறது. அதனிடம்தான்

பாதிக்கப்பட்டவர்கள் முறையிட்டுக்கொள்ளுகின்றனர். இது தவிர, சட்ட நிர்வாகம் பற்றி வேறு தெளிவான உணர்வும் இல்லை. இங்கிலாந்திலும, அமெரிக்கா, பிரான்ஸ் போன்ற நாடுகளிலும் இந்த அதிகாரம் மாஜிஸ்டிரேட்டிடம் தொடங்கி, மேலுள்ள எல்லா நீதிஸ்தலங்களுக்கும் பரவி நிற்கிறது.

முடியரசனை நிர்வாக அதிகாரி என அழைப்பது எப்படிப் பொருந்தும் என்பதை அரசதாசர்களே விளக்கிக் கூறட்டும். மன்னன் எனும் பெயரால் அரசாங்கக் காரியங்கள் நடைபெறுகின்றன. அந்தக் காரியங்கள் வேறு என்ன பெயர் சூட்டினாலும் சூட்டாமலே விட்டாலும் நடைபெறும்.

இதனால் சட்டங்களின் மதிப்பு குறையாது, கூடவும் கூடாது. சட்டங்களின் அடிப்படைக் கொள்கைகளின் நேர்மை அல்லது அவைகளை ஆதரிப்பதில் நாட்டு மக்கள் கொள்ளும் அக்கறை முதலியவைகளைப் பொறுத்தே அவைகளுக்கு ஆதரவு கிடைக்கின்றது. இவ்விரண்டும் தவிர சட்டங்களுக்கு வேறு வகை ஆதாரம் தேவைப்படுமானால் அரசாங்க அமைப்பில் ஏதோ குறைபாடு இருக்கிறது என்பதை அறிந்துகொள்ள வேண்டும். அமுல் செய்வதில் சங்கடம் ஏற்படக்கூடிய சட்டங்கள் நல்லவைகளாயிருக்க முடியாது.

சட்டமியற்றும் அதிகாரத்தை ஒழுங்குசெய்வதில் பல நாடுகளில் பல்வேறு முறைகள் கையாளப்பட்டிருக்கின்றன. அமெரிக்காவில் இரண்டு சட்டமியற்றும் சபைகள் இருக்கின்றன. பிரான்ஸில் ஒரு சபைதான் இருக்கிறது. ஆனால் இரு நாடுகளிலும் சட்ட சபைகள் பிரதிநிதித்துவ அடிப்படையிலேயே அமைந்திருக்கின்றன. யதேச்சாதிகாரத்திற்கு மக்கள் குலம் நீண்டகாலமாக உட்பட்டிருந்ததனால் அரசாங்க முறைகள், அதன் அமைப்புக் கொள்கைகள்பற்றி சோதனை செய்துபார்க்க சந்தர்ப்பங்கள் கிட்டவில்லை. இந்தச் சோதனைகள் மூலம் சிறந்த அரசாங்கத்தின் லட்சணங்களை அறிந்திருக்கலாம். **அரசாங்கம் என்னமோ இருக்கிறது. ஆனால் அதன் லட்சணங்களை இப்பொழுதுதான் கொஞ்சம் கொஞ்சமாக அறிந்துவருகிறோம்.** அரசாங்கம்பற்றிய பல அம்சங்களை அறிந்துகொள்ள இன்னும் அநுபவம் போதவில்லை.

இரண்டு சட்டசபைகள் வேண்டாம் என்பதற்கான காரணங்கள் : (1) இரண்டு சட்டசபைகளில் எதுபற்றியும், எந்தச் சபை

யிலும் முடிவுக்கு வரமுடியாது. விவாதத்திலுள்ள விஷயம் ஒரு சபையில் சர்ச்சையிலிருக்கையில், மற்ருெரு சபையில் புதுக் கருத்துக்கள் வெளியிடப்படலாம். எனவே வோட்டு மூலம் முடிவு செய்துவிட முடியாது.

(2) ஒவ்வொரு சபையிலும் தனித்தனியே வோட்டெடுத்தால் சிறுபான்மையினர் பெரும்பாலோரைக் கட்டுப்படுத்தும் நிலை ஏற்படும். இதனுல் பல முரண்பாடுகள் ஏற்படலாம்.

(3) இரு சட்டசபைகளும் தம்மிஷ்டமாக ஒன்றை மற்ருென்று கட்டுப்படுத்துவது முரண்பாடு நிறைந்தது. ஏனெனில், பிரதிநிதித்துவ முறையின் நேர்மையான கொள்கைப்பிரகாரம் ஒரு சபை மற்றதைவிடப் புத்திசாலித்தனம் மிக்கது அல்லது சிறந்தது என நிரூபிக்க முடியாது. கட்டுப்படுத்துவதென்பது நல்லதிலுமிருக்கலாம், தீயதிலுமிருக்கலாம். நாம் ஒரு சபைக்கு அதிகாரத்தை அளிக்கலாம்; ஆனுல் அறிவை அளிக்கமுடியாது. அளித்த அதிகாரத்தை அவர்கள் ஒழுங்காகப் பிரயோசனப் படுத்துவர் என்பதற்கு உத்தரவாதம் இல்லை. ஆகையால் எவ்வளவு எச்சரிக்கையுடன் இரு சட்ட சபைகள் வேண்டுமென்று அமைக்கப்பட்டதோ அந்த அளவுக்கு இந்த ஏற்பாட்டில் அபாயமும் இருக்கிறது.

ஒரே சட்ட சபை மட்டும் இருப்பதற்கு ஆட்சேபம் அது அவசரப்பட்டு முடிவு செய்துவிடும் என்பதுதான். ஆனுல் ஒரு விஷயத்தை நாம் மறந்துவிடலாகாது. சட்டமியற்றும் அதிகாரம், அதை இயற்றுவதற்கான கொள்கைகள் யாவும் அரசியலமைப்பில் திட்டம் செய்திருக்கையில் சட்டமியற்றுபவர்கள் உற்சாகத்தைக் கட்டுப்படுத்த வேறு தடை எதற்கு? இதற்கு ஓர் உதாரணம்:

இங்கிலாந்தில் முதலாவது ஜார்ஜ் ஆட்சியின் தொடக்கத்தில் சட்டசபைகளின் ஆயுளை நீடித்து ஒரு சட்டம் வந்தது. இம் மாதிரி மசோதா ஒன்று அமெரிக்க சட்டசபைகளில் கொண்டு வரப்படுமானுல் அரசியலமைப்பு விதிப்படி இதற்கு மேல் போகலாகாது என்கிற தடை இருக்கிறது.

ஒரே சட்டசபை அவசரமாக முடிவு செய்வதை அகற்றவோ, அல்லது இரு சட்டசபைகள் இருப்பதனுல் ஏற்படக்கூடிய முரண்பாடுகள், அசம்பாவிதங்கள் முதலிய

வற்றையும் நீக்க வேண்டுமானால் கீழ்வரும் ஏற்பாடுகள் சிறப்பான பயனளிக்கலாம்:

1. பிரதிநிதித்துவமுள்ள ஒரு சபை.
2. பிரதிநிதித்துவத்தை இரண்டு அல்லது மூன்று பகுதிகளாகப் பிரிப்பது.
3. ஒவ்வொரு மசோதாவின் ஒவ்வொரு பகுதியையும் ஒன்றன் பின் ஒன்றாக விவாதிப்பது. ஆனால் எந்தப் பகுதியின் மீதும் வோட்டெடுக்கலாகாது இதன் பிறகு எல்லாப் பகுதிகளும் ஒன்றாகச் சேர்ந்து பொதுவாக விவாதிக்கப்பட்டு வோட்டெடுப்பது.

இந்த சீர்திருத்தத்தோடு பிரதிநிதித்துவ முறை அவ்வப்போது புதுப்பித்து வருவதற்கான யோசனை கூறப்படுகிறது. அதாவது, பிரதிநிதிகளை மூன்று கூறாகப் பிரித்து, ஒவ்வொரு பகுதிக்கும் வருட இறுதியில் தேர்தல் நடத்துவது; மூன்று வருடத்திற் கொருமுறை எல்லாப் பகுதிகளுக்கும் பொதுத் தேர்தல் நடத்துவது.

ஓர் அரசியலமைப்பின் பல்வேறு பகுதிகளை எந்த வகையில் அமைத்தாலும் ஒரே ஒரு பொதுவான கொள்கையின் மூலம் தான் அந்த அமைப்பு சுதந்திர அடிப்படையில் தோன்றியதா அல்லது அடிமை வாழ்வின்மேல் ஏற்பட்டதா என்பதை அறிந்து கொள்ளலாம். ''**ஒரு நாட்டு மக்கள் பரம்பரை ஆட்சிக்குட்பட்டவர்களானல் அவர்கள் ஒருவகையில் அடிமைகள்; பிரதிநிதித்துவ அரசாங்கமானல் அது சுதந்திரம் அளிக்கிறது**'' என்பதுதான் அக்கொள்கை.

அமெரிக்காவில் ஜனதிபதி பதவி ஒன்றுக்குத்தான் (இப்பதவிதான் நிர்வாகம் என அழைக்கப்படுகிறது) அந்நியர் அருகதையற்றவர்கள். ஆனல் இங்கிலாந்தில் இந்தப் பதவிக்குத்தான் அந்நியர் அநுமதிக்கப்படுகின்றனர். இங்கிலாந்தில் அந்நியன் பார்லிமெண்ட் அங்கத்தினனக வரமுடியாது; ஆனல் 'அரசன்' எனப்படும் பதவிக்கு வரலாம். அந்நியர்களை ஏதாவது ஒரு பதவியிலிருந்து ஒதுக்கவேண்டுமானல் விஷமம் செய்ய இடமிருக்கும் பதவிகளிலிருந்தும், சுயநலத்தின் மூலமும் பலவித பாசங்கள் மூலமும், நம்பிக்கைத்துரோகம் செய்யக்கூடிய பதவிகளிலிருந்தும்தான் விலக்கவேண்டும்.

அரசியலமைப்பு எனும் மகத்தான ஏற்பாட்டைச் செய்ய ஒரு நாட்டு மக்கள் முற்படும்பொழுதுதான் ''நிர்வாகம்'' எனப் படும் துறையின் தன்மையைப்பற்றி நுட்பமாக ஆராய முன்வரு வார்கள். சட்டமியற்றும் பகுதியும், நீதிபரிபாலனப் பகுதியும் என்ன வேலை செய்கின்றன என்பதை எல்லாரும் நன்கு பார்க்க லாம். ஆனால் ஐரோப்பாவில் ''நிர்வாகம்'' எனப்படுவது பற்றி ஆலோசிக்கையில் அது அவசியமற்றது அல்லது தெரியாத விஷயங்கள் பற்றிய குழப்பம் என்பது தெரிகிறது. நாட்டின் பல பகுதிகளிலிருந்தோ அல்லது வெளி நாடுகளிலிருந்தோ கிடைக்கும் தகவல்களைச் சேகரித்து அவைகளைத் தேர்ந் தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் முன் சமர்ப்பிக்க ஓர் அர சாங்க இலாகா இருந்தால் போதுமானது. ஆனால் இந்த இலாகாவை 'நிர்வாகம்' என அழைப்பது பொருத்தமா யில்லை. சட்டசபைக்குத் தாழ்ந்தது என்பதைத் தவிர, அதற்கு அதிகமான மதிப்பளிப்பது சரியல்ல. ஒரு நாட்டின் முதன் மையான அதிகாரம் சட்டம் இயற்றுதல்; மற்றவைகளெல்லாம் அரசாங்க இலாகாக்கள்.

அரசியலமைப்பின் பல்வேறு பகுதிகளையும் கொள்கைகளை யும் ஒழுங்கு செய்து ஏற்பாடு செய்தபின் அரசியலமைப்பின்கீழ் உள்ள அதிகாரங்களை வகிப்பவர்கள் வாழ்வதற்கு வகை செய்ய வேண்டும்.

எந்த இலாகாவிற்காவது பொறுப்பேற்க நியமிக்கப் படுபவர்கள் அவர்களுடைய செலவிலேயே வேலை செய்ய வேண்டும் என எதிர்பார்க்க எந் நாட்டினருக்கும் உரிமை கிடையாது. அரசாங்கத்தினரில் ஒரு பகுதியினருக்குச் சம்பளம் கொடுத்துவிட்டு, மற்றோர் பகுதியினரைச் சும்மா வேலை செய்யச் சொல்லவும் உரிமை கிடையாது.

அதிகாரம் செலுத்த அனுமதிக்கப்படும் கௌரவமே வேலைக் குகந்த பரிசாகும் என்பதை ஒப்புக்கொண்டாலும் அதே நீதி எல்லோருக்கும் சமமா யிருக்கவேண்டும். ஒரு நாட்டின் சட்ட சபையினர் இலவசமாகத் தொண்டுசெய்ய வேண்டும் என்றால், நிர்வாகப் பொறுப்பை முடியாட்சி வகித்தாலும், வேறு எந்த முறையில் வகித்தாலும் அவர்களும் இலவசமாகவே பணிபுரிய வேண்டும். ஒருவருக்கு ஊதியம் கொடுத்துவிட்டு மற்றொருவர்

இலவசமாக வேலை செய்ய வேண்டுமென்பது முரண்பட்ட கொள்கையாகும்.

அமெரிக்காவில் எல்லா இலாகாவினருக்கும் கௌரவமாக ஊதியம் அளிக்கப்படுகிறது. ஆனால் யாருக்கும் அளவுக்கு மீறிப் பணம் கொடுக்கப்படுவதில்லை. காங்கிரஸ், ராஜ்ய சட்டசபை உறுப்பினருக்குப் போதிய அளவு செலவுக்குப் பணம் கொடுக்கப் படுகிறது. ஆனால் இங்கிலாந்திலோவெனில் அரசாங்கத்தின் ஒரு பகுதியின் செலவுக்குத் தாராளமாகப் பணம் ஒதுக்கப்படுகை யில் மற்றொரு பகுதிக்கு ஒன்றுமே அளிக்கப்படுவதில்லை. இதன் விளைவாக ஒரு பகுதிக்கு லஞ்சம் கொடுப்பதற்கு நிறைய சந்தர்ப்பமும், மற்றொரு பகுதி லஞ்சம் வாங்கிப் பிழைக்க வேண்டிய நிலையும் ஏற்படுகிறது. அமெரிக்காவைப்போல் இங்கிலாந்தில் செலவாகும் பணத்தில் நான்கில் ஒரு பங்கு செலவு செய்தாலும் ஊழலை ஒழித்துவிடலாம்.

அமெரிக்க அரசியலமைப்பில் செய்யப்பட்டுள்ள மற்று மொரு சீர்திருத்தம் அங்கு யாரும் தனிப்பட்டவர்களுக்கு விசுவாசப் பிரமாணம் செய்யவேண்டியதில்லை என்பது. அமெரிக்காவில் நாட்டிற்கு விசுவாசமாயிருப்பதாகப் பிரமாணம் செய்ய வேண்டும். ஒரு தேசம் இருக்க வேண்டிய இடத்தில் ஒரு தனி நபரை அமர்த்துவது ஒழுங்கல்ல. நாட்டு மக்களின் நல்வாழ்வே முதல் நோக்கமாயிருக்க வேண்டும். ஆகையினால் தனிப்பட்டவருக்கு விசுவாசம் தெரிவிப்பதன் மூலம் இந்த நோக்கத்தை மறைத்துவிடலாகாது. பிரான்ஸில் 'நாடு, சட்டம், அரசன்' மூவருக்கும் விசுவாசப் பிரமாணம் செய்வது ஒழுங்கல்ல. பிரமாணம் செய்யவேண்டுமானால், அமெரிக்காவி லுள்ள மாதிரி நாட்டுக்கு மட்டும் விசுவாசம் தெரிவிக்க வேண்டும்.

சட்டம் நல்லதாயிருக்கலாம் அல்லது தீயதாயிருக்கலாம். ஆனால் மக்கள் நல்வாழ்வுக் குகந்ததாயிருந்தாலொழிய அதற்குப் பொருளே இல்லை. ஆகையினால் சட்டம் விசுவாசப் பிரமாணத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது. பிரமாணத்தில் மற்ற அம்சங்களைச் சேர்த்தது அர்த்தமற்றது. ஏனெனில், தனிப் பட்டோருக்கு விசுவாசம் என்பதை ஒழித்துவிட வேண்டும். அவைகள் ஓரளவு பழங்காலக் கொடுங்கோன்மையின் சின்னங்கள்; மற்ற பகுதி அடிமைத்தனத்திற்கு அடையாளம்;

தனது சிருஷ்டிகள் இழிவுபடுத்தப்படுவதைப் பார்ப்பதற்காக ஆண்டவன் பெயரை இழுக்கலாகாது. தேசத்திற்கு அடையாள மாகக் கடவுள் பெயரைப் புகுத்தினல் அது தவறேயாகும். ஏனெனில் தேசம் வியக்தமாகப் பிரமாணத்தில் குறிப்பிடப்பட் டிருப்பதால் அதற்கு மாற்றுப் பெயர் தேவையில்லை.

முதன் முதலில் அரசாங்கம் அமைந்தபொழுது விசுவாசப் பிரமாணத்திற்கு அவசியமிருந்தாலும், அப்புறம் அதை அநுமதிக்கலாகாது. பிரமாணங்களின் உதவி அரசாங்கத்திற்குத் தேவைப்பட்டால் அரசாங்கம் நமது ஆதரவுக்கு உரித்தானதல்ல என அர்த்தம். அப்பேர்ப்பட்ட அரசாங்கத்தை ஆதரிக்கவும் கூடாது. அரசாங்கம் எப்படி இயங்கவேண்டுமோ அப்படி அமைத்தால் அது வெளி உதவியின்றியே நடக்கும்.

இவ்விஷயத்தைப் பற்றி முடிவாக நான் கூறுவது: மக்களின் நீடித்த நிலையான பாதுகாப்புக்கும் சட்டபூர்வமான சுதந்திர வளர்ச்சிக்குமான மகத்தான சீர்திருத்தம் யாதெனில், அவசியம் நேரிடும்பொழுது அவைகளில் மாறுதல்கள் செய்வதற்கான வசதிகளை அரசியலமைப்புகளிலேயே இணைத்திருப்பது என்பதே.

''காலமுள்ளவரையில் பின்சந்ததியார்களைக் கட்டுப் படுத்துவது பின்சந்ததியினர் தங்கள் உரிமைகளை முற்றும் துறப்பது'' என்கிற அடிப்படையில்தான் பர்க்கின் சித்தாந்தம் அமைந்திருக்கிறது. இந்தக் கொள்கை எங்கும் அருவருக்கப் படுவதனுல் அதுபற்றி யாரும் விவாதிப்பதில்லை. இதை அம் பலத்திற்குக் கொண்டுவந்தது தவிர மற்றப்படி இதைப்பற்றி நான் விவாதம் செய்ய விரும்பவில்லை.

அரசாங்கம் என்றால் என்ன என்பதை இப்போது உணரத் தொடங்கிவிட்டனர். இதுவரையில் அரசாங்கம் என்றால் அதிகாரம் செலுத்துவதென்று கருதப்பட்டது. மேலும் அதிகாரம் தங்களிடம் அகப்பட்டுக்கொண்டது எனும் அடிப்படையில் பாத்தியம் கொண்டாடினதனுல் அதுபற்றி எவ்வித ஆராய்ச்சியும் செய்ய முடியவில்லை. சுதந்திரத்தின் விரோதியே அதுபற்றி மதிப்பிட வேண்டியவனுகிவிட்டபடியினுல் சுதந்திரக் கொள்கை களில் அற்ப முன்னேற்றமே காணமுடிந்தது.

அமெரிக்கா, பிரான்ஸ் இரு நாடுகளிலும் அரசிய லமைப்புகளில் அவைகளைப் புனராலோசனை செய்வதற்கான

காலஅளவும், சீர்திருத்த முறைகளும் வகுக்கப்பட்டிருக்கின்றன.

எந்தக் கொள்கைகளும், கருத்துக்களும், அநுஷ்டானங்களும் நாள்பட்டால் ஓரளவு சீர்கெடாது என்று திட்டமாகக் கூறமுடியாது. ஆனால் தீமைகள் குவிந்து சீர்படுத்த முடியாத நிலை ஏற்பட்டு, புரட்சியைத் தூண்டுவதற்குள் அவற்றை அவ்வப்போது அகற்றிவிடுவதே நல்லது.

மனித உரிமைகள் எல்லாத் தலைமுறையினருக்கும் சமமானவை. அவைகளில் யாரும் ஏகபோக பாத்தியம் கொண்டாட முடியாது. பின்பற்றத் தகுந்த எதையும் அதன் சிறப்புக்காகவே யாரும் பின்பற்றுவார்கள். இதன் மூலம்தான் பாதுகாப்பு பெறலாமே ஒழிய, உரிமைகளுக்குப் பலவிதத் தடைகள் விதிப்பதன் மூலமல்ல. ஒருவன் தன் சொத்துக்களைத் தனது வாரிசுகளுக்கு விட்டுச் செல்லுகையில் அதை அவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டும் என நிபந்தனை விதிப்பதில்லை. ஆகையால் அரசியலமைப்புகளுக்கு ஏன் நாம் இம்மாதிரி விதி வகுக்க வேண்டும்?

தற்கால நிலைக்கேற்ப, நாம் வகுக்கும் சிறப்பான அரசியல் ஏற்பாடு சில வருடங்களுக்கப்பால் அவ்வளவு சிறப்புடையதாகத் தோன்ருது. அரசாங்க அமைப்புபற்றி மனிதனுக்கு உதயமாகும் அறிவு, அவனுக்கு அதற்கு முன் உதித்திராது. பழைய ஆட்சிகளின் காட்டுமிராண்டித்தனம் ஒழிந்ததும் மக்களின் பரஸ்பர மதிப்பின் அறச்சிறப்பு ஓங்கும்.

பல்வேறு நாடுகளில் அரசாங்கத் தலைவனுக்குப் பல்வேறு பெயர் சொல்லி அழைக்கின்றனர். இந்தப் பதவி வகிப்பதனால் பிற மனிதர்கள் யாவரும் தங்கள் பகைவர்கள் என எண்ணும்படி இந்தப் பிரத்தியேக மனிதர்கள் காட்டுமிராண்டிகளாக வளர்ந்தவர்கள் அல்ல. அரசியலமைப்புகள் உள்நாட்டு, வெளிநாட்டு நிலவரங்களுக்கு ஏற்ப அமைந்தவைகளாகையினால் உள், புற மாறுதல்களால் நலம் பெறும் வகையில் அவைகள் அமைக்கப்படவேண்டும்.

இப்போது இங்கிலாந்திற்கும் பிரான்ஸிற்கும் சுமுகமான உறவு நிலவிவருவதைப் பார்க்கிறோம். சில காலத்திற்கு முன்பு இருந்ததையும் தற்போதைய நிலையையும் பார்த்தால் இந்த மாறுதலே ஒரு புரட்சி என்று கூறலாம்.

பிரஞ்சு தேசீய சபையை வாழ்த்துக்கூறி இங்கிலாந்தில் பாராட்டு விருந்து நடக்குமென்றே, இரு நாடுகளுக்குள் நேச உறவு ஏற்பட வேண்டும் என்கிற பரஸ்பர ஆவல் ஏற்படும் என்றே யார் எதிர்பார்த்திருப்பர் அல்லது நம்பியிருப்பர்?

இதிலிருந்து அரசாங்கங்களால் மனிதன் பாழடையாவிட்டால் மக்கள் நேசமாகவே இருப்பர், மனிதன் இயல்பாகவே தீயமனப்பாங்குள்ளவன் அல்லன் என்பது தெளிவாகத் தெரியவில்லையா? இரு நாட்டு ஆட்சியினரும் மக்களிடையே பொறாமையையும் குரூரத்தையும் கிளப்பிவிட்டு அதன் விளைவாகத் தங்கள் வரிகளைப் பெருக்கிக்கொண்டனர். இன்று அதற்குப் பதிலாக அறிவும், அக்கறையும், மக்கள்பால் அன்பும் தழைத்தோங்கி வருகின்றன.

அரண்மனைச் சூழ்ச்சிகளை மக்கள் புரிந்துகொள்ளத் தொடங்கிவிட்டனர். அரசாங்கம் என்றால் ஏதோ மர்மம் நிறைந்தது என்பதும், ஆட்சியின் மூலம் மாயாஜாலங்கள் புரிந்து மக்களை மயக்கிவந்ததும் மறைந்து வருகின்றன. இம்மாதிரி ஆட்சிக்குச் செம்மையான அடி விழுந்துவிட்டது. உயிர் கொஞ்ச காலத்திற்கு ஊசலாடலாமே ஒழிய, அது மாய்ந்தொழிவது நிச்சயம்.

மனிதன் எவ்வாறு சீர்திருத்தத்திற்கு உகந்தவனே அம்மாதிரியே அரசாங்கங்களும் சீர்திருத்தங்களை ஏற்கவேண்டும். இதற்குப் பதிலாக அரசாங்க நிர்வாகம் என்பது மனிதவர்க்கத்தில் அறியாமையும், தீமையும் மிக்கவர்களின் ஏகபோக உடைமையாயிருந்து வந்திருக்கிறது. அவைகள் ஏராளமாகக் கடன்பட்டு, மக்கள் மீது அளவுக்கு மீறி வரிகளைச் சுமத்தி அவர்களைத் திணற அடித்து, உலகத்திலே சச்சரவுகளை மலியச் செய்ததைவிட அவைகளின் தீய இயல்புக்கு வேறு என்ன சான்று வேண்டும்?

இம்மாதிரி காட்டுமிராண்டி நிலையிலிருந்து மீண்டுவந்த அரசாங்கத்தை எவ்வளவு தூரம் சீர்திருத்தலாம் என்பதைத் திட்டமாகக் கூறமுடியாது.

நாம் எதிர்பார்க்கக்கூடியது என்னவென்றால், ஐரோப்பா ஒரே குடியரசாக அமைந்து மனிதன் சுதந்திர புருஷனாகத் தலைதூக்கலாம் என்பதுதான்.

அரசாங்க முதல் தத்துவங்கள் பற்றி விளக்க உரை

அரசாங்கத்தைப்பற்றி அறிந்துகொள்ளுவதுபோல் மனிதன் ருசிக்கக்கூடிய விஷயம் வேறு ஏதும் இருக்கமுடியாது. அவன் பணக்காரனுயினும் ஏழையாயினும், அவனது கவலையற்ற வாழ்க்கையும், அதிகமான அளவிற்கு அவனது வளமும் அரசாங்கத்தைப் பொறுத்தது. ஆகையினுல் அரசாங்க சம்பந்தமான கொள்கைகள்பற்றியும், நடைமுறை பற்றியும் அவன் அறிந்து கொள்ளுவது அவனது அக்கறை மட்டுமல்ல, கடமையுமாகும்.

எந்தக் கலையும், விஞ்ஞானமும், அவைகளை முதலில் அற்ப அளவிலே அறிந்திருந்தாலும் அவைகளை ஒவ்வொரு தலைமுறையினரும் ஆராய்ந்து, அறிந்து ஓரளவு பூரண பக்குவ நிலைக்குக் கொணர்ந்திருக்கின்றனர். ஆனுல் ஆட்சிக் கலை யதாஸ்தானத்திலேயே இருக்கிறதேயன்றி முன்னேறவில்லை. அமெரிக்கப் புரட்சி தொடங்கும் வரையில், அரசாங்கக் கொள்கையிலோ, நடைமுறையிலோ எவ்வித முன்னேற்றமும் காணவில்லை. பிரான்ஸ் தவிர பிற ஐரோப்பிய நாடுகளில் அறியாமை நிறைந்த புராதன காலத்தில் அமைந்த ஆட்சி முறைகளே இன்னமும் நிலவிவருகின்றன. அவைகளின் புராதனத் தன்மையே சீரிய கொள்கைபோல் மதிக்கப்பட்டு வருகின்றது. அவைகள் என்ன உரிமை கொண்டு நீடித்திருக்கின்றன, எப்படித் தோன்றின என்பனபற்றிய ஆராய்ச்சிக்குத் தடை விதித்து விடுகின்றனர். இந்த நிலை எவ்வாறு ஏற்பட்டது என்று கேட்டால், அதற்கு எளிதில் பதில் கூறிவிடலாம். பொய்யான ஒரு கொள்கை அடிப்படையில் அவை அமைக்கப்பட்டன. இவ்வாறு அவர்கள் பெற்ற அதிகாரத்தைக் கொண்டு ஆராய்ச்சி மூலம் உண்மையை அறிந்துகொள்ளுவதைத் தடை செய்கின்றனர்.

ஆட்சிக் கலையை மர்மம் சூழ்ந்ததாகச் செய்து அதன் மூலம் மக்களை அடிமைப்படுத்தி, கொள்ளையடித்து, அடக்கியாள வகை செய்த போதிலும் அதில் மர்மம் ஏதுமில்லை; எளிதாக அதன் நடைமுறைகளைப் புரிந்துகொள்ளவும் முடியும். சரியான சட்டத்தின் ஆராய்ச்சியைத் தொடங்கினுல் மிகச் சாமானிய அறிவுள்ளவன்கூட அதைப் புரிந்துகொள்ளலாம். ஒவ்வொரு கலைக்கும் விஞ்ஞானத்திற்கும் ஆரம்பக் கட்டம் உண்டு. அந்தக் கட்டத்தில் அது பற்றிய ஆராய்ச்சியைத் தொடங்கினுல் எளிதில்

ஆய்வுத் துறையில் முன்னேற்றம் காணலாம். இதே முறையில் அரசாங்க சாஸ்திர ஆராய்ச்சியையும் தொடங்கவேண்டும்.

ஆராய்ச்சியின் தொடக்கத்திலேயே ஆட்சி முறையின் பல்வேறு வகைகளான பிரபுக்கள் ஆட்சி, ஜனநாயகம், பலம் படைத்தோர் ஆட்சி, முடியாட்சி முதலியவற்றைக் கூறிப் பிரச்னையைக் குழப்ப நான் விரும்பவில்லை. ஆகையால் அடிப்படையான பிரிவினைகளைக் குறிப்பிட்டுவிட்டு அவைகளின் உட்பிரிவினைகளையும் ஆராய்வதே சிறந்த முறை என நான் கருதுகிறேன்.

அடிப்படைப் பிரிவினைகள் இரண்டு:

1. தேர்தல், பிரதிநிதித்துவ முறைகள் மூலம் ஆட்சி.
2. பரம்பரை வாரிசு முறை மூலம் ஆட்சி.

பல்வேறு வகைப்பட்ட ஆட்சி முறைகள் ஏராளமாக இருப்பினும் அவைகளை இவ்விரண்டு தலைப்புகளின் கீழ்க் கொண்டு வந்துவிடலாம். ஏனெனில், அவைகள் ஒன்று பிரதிநிதித்துவ முறையில் அமைந்திருக்கவேண்டும் அல்லது பரம்பரை முறைக்குட்பட்டிருக்க வேண்டும். முடியாட்சியும் சட்டமியற்றும் பகுதியும் சேர்ந்த அர்த்தமற்ற கதம்ப ஆட்சிக்கு ஹாலந்தில் முன்னம் இருந்த அல்லது இங்கிலாந்தில் தற்போதுள்ள ஆட்சிகளை உதாரணமாகக் கூறலாம். இந்த ஆட்சி முறையும் மேற்கூறப்பட்ட இரு வகைகளில் அடங்கியதுதான். ஏனெனில், இந்தக் கதம்ப ஆட்சியின் ஒவ்வொரு பிரிவும் மேற்கூறப்பட்ட பிரதிநிதித்துவ அல்லது பரம்பரை ஆட்சி இரண்டில் ஏதாவது ஒன்றிற்குட்பட்டதுதான்.

இந்தக் கட்டத்தில் நமது ஆராய்ச்சியைத் தொடங்கி முதன் முதலில் இந்த இரு அடிப்படைப் பிரிவினைகளின் தன்மையை அறிந்துகொள்ளவேண்டும். இரண்டும் கொள்கையளவில் நியாயமானவைகளானல் இவ்விரண்டில் எதை ஏற்பதென்பது அவரவர் அபிப்பிராயத்தைப் பொறுத்தது. இரண்டில் ஒன்று மற்றதைவிடச் சிறந்தது என்பதை நிரூபிக்க முடியுமானல், அதிலிருந்து சிறந்ததை நாம் ஏற்றுக்கொண்டு விடலாம். ஆனல் இதில் ஒன்று கலப்பற்ற பொய்மை நிறைந்தது, அது நிலைத்திருக்க யோக்கியதையற்றது என்ருல், அப்பொழுது எது வேண்டும் என்பதை எளிதில் நிர்ணயம் செய்துவிடலாம்.

ஏனெனில் ஒன்றில் நல்ல அம்சமே இல்லை என்றால், அதைவிட மற்றது மேலானது என்பது தானாகவே விளங்குகிறது.

இப்போது உலகத்தில் பரவிவரும் புரட்சிகள் யாவும் மேற் கூறப்பட்ட நிலையின் விளைவுகளே. இப்போது போலந்தில் நிகழ்ந்துவரும் போராட்டம் மக்கள் உரிமை அடிப்படையில் உள்ள பிரதிநிதித்துவ முறைக்கும், தாங்களாகவே அதிகாரத் தைக் கைப்பற்றிக்கொண்டுள்ள பரம்பரை ஆட்சி முறைக்கும் உள்ள முரண்பாட்டின் விளைவேதான்.

முடியாட்சி, அரச குடும்ப ஆட்சி, பிரபுக்கள் ஆட்சி எனப் படுபவைகள் மூலம் பரம்பரை முறைக்குப் பூரணமான விளக்கம் காணமுடியாது. அவைகளெல்லாம் பரம்பரை முறையை விளக் கும் அறிகுறிகள். பரம்பரை முறை வீழ்ந்தால் இவைகளும் மறைந்துவிடும். இம்மாதிரிப் பதங்கள் இல்லாமலிருந்தால், அல்லது இவைகளுக்குப் பதிலாக வேறு பதங்களை உபயோகித் தாலும், பரம்பரை முறை நீடித்திருக்குமானாலும் அவைகளின் இயல்பு மாறாது. எப்பெயர் சூட்டி அழைத்தாலும் அந்த முறை இப்போதுள்ளமாதிரியே இயங்கும்.

பரம்பரை முறையை எதிர்த்துப் பிரதிநிதித்துவ முறையை ஆதரிப்பதுதான் தற்காலப் புரட்சிகளின் சிறப்பு. வேறு விதமான மாறுபாடுகள் மூலம் புரட்சிக்கு முழுப்பொருள் காண முடியாது. பொதுவாக என் கருத்தை விளக்கிவிட்டேன். இனி முதலில் பரம்பரை முறையை ஆராயலாம். ஏனெனில் அதுவே காலத்தால் முந்தியது. பிரதிநிதித்துவ முறை நவீன உலகின் சிருஷ்டி. இதுபற்றி என் கருத்து என்ன என்பது பற்றிச் சந்தேகம் ஏற்படாவண்ணம் அதைத் தெளிவாகக் கூறிவிடுகின் றேன். பரம்பரை முறை நிலைத்திருக்க எவ்விதத்திலும் உரிமையோ நியாயமோ இல்லை என்று நான் ஆணித்தரமாக அரசியல் விதிபோல் கூறுகிறேன். க்ஷேத்திர கணித ஆதி கர்த்தாவான **யூக்லிடின்** சூத்திரங்கள் எவ்வாறு உண்மையோ அவ்வாறே இந்த அரசியல் விதியும் உண்மை. ஆகையினால் இந்தப் பரம்பரை உரிமை அமைத்தவனிடமிருந்து அதிகாரத் தைப் பறித்துவிட்டால் அவனுக்கு இயல்பாக இல்லாத அல்லது எந்த சட்டமோ சம்பிரதாயமோ அவனுக்கு அளிக்க முடியாத ஓர் உரிமையைப் பறிப்பதேயாகும்.

பரம்பரை முறையை இதுவரை எதிர்த்தவர்கள் அது அர்த்தமற்றது, அதன் கீழ் நல்லாட்சி நடத்த முடியாது என்பதற்காகவே எதிர்த்தனர். இந்த முறையின்கீழ் பல சந்தர்ப்பங்களில் ஆட்சிப் பொறுப்பு அநுபவமற்ற அல்லது அறிவில்லாத அசட்டுச் சிறுவர்கள் கையில் சிக்கிவிடுகின்றது. இதைவிட அசம்பாவிதமான காட்சியைக் காணவோ, கற்பனை செய்துபார்க்கவோ முடியுமா? இம்மாதிரி சம்பவங்கள் நாட்டிலுள்ள முதியோர், குணவான்கள், திறமை வாய்ந்தவர்களை அவமதிப்பதாகும்.

பரம்பரை முறைபற்றி ஆராயத் தொடங்கியதும் அதை அருவருக்கவே தோன்றுகிறது. இதைப்பற்றி ஓர் எண்ணம் தோன்றியதும் பல்லாயிரம் எண்ணங்கள் தொடருகின்றன. அற்பத்தனம், கையாலாகாமை, சிறுபிள்ளைத்தனம், தடுமாறும் முதுமை, ஒழுக்கம் குன்றியவன் இவ்வாறு பல்வேறு வெறுக்கத்தக்க அல்லது நகைக்கத்தக்க குறைபாடுகள் ஒன்றுகூடி பரம்பரை முறையை நையாண்டி செய்யத் தூண்டுகின்றன. இம்முறையின் கேவலத்தன்மையை வாசகர்கள் சிந்தனைக்கு விட்டுவிட்டு இந்த முறை நிலைத்திருக்க அருகதையற்றது என்கிற பிரச்னையின் முக்கியமான அம்சத்தை விளக்க முற்படுகிறேன்.

ஏதாவது ஒன்று நிலைத்திருக்கலாம் என்பது பற்றி நாம் திருப்தியடைய வேண்டுமானல், அது முதலில் தோன்றத் தகுந்ததா என்பது பற்றி நாம் திருப்தியடைய வேண்டும். அது தோன்றுவதற்கு உரிமையுண்டெனில் அது நீடித்திருக்கவும் உரிமையுண்டு. எந்த உரிமை கொண்டு பரம்பரை முறை தொடங்கிற்று? இந்தக் கேள்வியை மட்டும் ஒருவன் கேட்டால் அதற்குத் திருப்திகரமான பதில் கூறமுடியாது என்பதை உணருவான்.

ஒரு நாட்டை முதலில் ஆளுவதாகவும், பின்னர் அந்தப் பொறுப்பைப் பரம்பரை பாத்தியதைக்குட்படுத்தவும் ஒரு தனி மனிதனுக்கோ, குடும்பத்திற்கோ உள்ள உரிமை பிரான்ஸில் ராபஸ்பியருக்கு* (Robespierre) இருந்த உரிமைதான். அவருக்கு உரிமை இல்லை எனில், வேறு யாருக்கும் அந்த உரிமை இல்லை.

---

*1758—1794-இல் வாழ்ந்த ராபஸ்பியர் பிரான்ஸில் ஒரு வக்கீலின் மகன். சட்டம் படித்தவன். 1789-இல் தேசீய சபைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டான். பிரான்ஸில் ஜேகோபின் கட்சித் தலைவனுயிருந்து பயங்கர ஆட்சிக்குப் பொறுப்பானவன். 1794-இல் புரட்சி நீதி சபை அவனுக்கு மரண தண்டனை அளித்தது.

ஏனெனில் எந்தக் குடும்பத்தாருக்கும் பரம்பரை ஆட்சி தொடங்குவதற்கான உயர்தர உரிமை கிடையாது. **காபெட்டுகள், குவெல்புகள், ராபஸ்பியர்கள், மாரெட்டுகள்*** முதலிய யாவரும் ஒரே ரகத்தைச் சேர்ந்தவர்கள். உரிமையைப் பொறுத்த வரையில், இந்த உரிமை யாருக்கும் பிரத்தியேகமாகக் கிடையாது. ஒரு குடும்பத்தின் பிரத்தியேக உரிமையாக இது தொடங்க முடியாது என்பதை உணர்ந்தாலே சுதந்திரப் பாதையில் ஓரளவு நாம் முன்னேறியதற்கு அறிகுறி. தொடங்கிய பிறகு இந்த முறை காலப்போக்கினால் உரிமையாக நிலைபெற முடியுமா என்பதே நாம் ஆராயவேண்டிய அடுத்த விஷயம்.

இது சாத்தியமெனக் கருதுவதே அசம்பாவிதம். ஏனெனில் கொள்கை இருக்கவேண்டிய இடத்தில் காலத்தை வைப்பது கொள்கையைவிடக் காலமே உயர்ந்தது என மதிப்பதற்கொப்பாகும். ஆகையால் காலம் கொள்கையை உருவாக்க முடியாது; கொள்கை மூலம் காலத்தை வளர்க்கவோ, குறைக்கவோ முடியாது. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்ட தவறு இன்றும் தவறுதான். இன்று நாம் பெறும் உரிமை ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் பெற்ற உரிமைபோன்ற முக்கியத்துவம் வாய்ந்தது.

கொள்கைகளைப் பொறுத்தமட்டில் காலம் என்பது நித்திய யௌவனம் வாய்ந்தது. கொள்கைகளின் தன்மையையோ, தரத்தையோ லட்சணங்களையோ காலம் பாதிக்காது. ஆயிரம் ஆண்டுகளைப்பற்றி நமக்கு என்ன கவலை? நமது ஆயுட் காலம் அந்த ஆயிரம் ஆண்டுகளில் சிறிதளவே யாகும். இவ்வுலகில் ஜனித்தவுடன் ஒரு தீங்கு இருக்கிறது என்பதை நாம் உணர்ந்தோமானால், நம்மைப் பொறுத்தமட்டில் அத்தீங்கு அப்பொழுதுதான் நேர்ந்தது என்பதற்கொப்பாகும். அதை எதிர்ப்பதற்கான உரிமையும் அக்கணமே நமக்கு உண்டு.

---

* காபெட் என்பது ஒரு பிரஞ்சு அரச குடும்பத்தின் பெயர். இந்தக் குடும்பத்தவர்களில் நூற்றுப்பட்டன்னிரண்டு பேர் அந் நாட்டு அரசர்களா யிருந்தனர். பதினைந்தாவது லூயிக்கு லூயி காபெட் என்று பெயர்சூட்டி அவன் மீது புரட்சி நீதிமன்றம் வழக்குத் தொடர்ந்தது. குவெல்புகள், கிபலீன்கள் இரண்டும் இதாலி, ஜெர்மன் நாடுகளில் போட்டிக் கட்சிகள். இவர்கள் போட்டியின் விளைவே பன்னிரண்டிலிருந்து பதினைகாவது நூற்றுண்டுகளில் இரு தேச சரித்திரத்திலும் பெரிதும் இடம் பெற்றுள்ளது. மாரெட் என்பவன் ராபஸ்பியரின் நண்பன்.

பரம்பரை ஆட்சி இயற்கை உரிமையாக எந்தக் குடும்பத்திலும் இடம் பெறமுடியாதாகையாலும், காலப்போக்கினுல் எவ்விதத்திலும் அது எவ்வித ஆக்கமும் பெறமுடியாதாகையினுலும் அந்த ஆட்சியை சட்டம் எனும உதவிகொண்டு இங்கிலாந்தில் ஏற்படுத்தியதுபோல் எந்த மக்கள் கூட்டமும் அதை ஸ்தாபிக்க உரிமை உண்டா என்பதை ஆராயவேண்டும். இதற்கு ''இல்லை'' என்றுதான் நான் பதில் கூறுவேன். இம்மாதிரி அமைந்த சட்டமும், அமைக்கப்பட்ட ஆட்சியும் அச்சமயம் (1) வயது வராதவர்களுக்கும், (2) பின்வரும் சந்ததியாருக்கும் துரோகம் செய்ததாகும்.

இது ஒவ்வொன்றையும் பற்றி இனி எழுதுகிறேன். (1) சட்டம் இயற்றியபொழுது மைனராயிருந்தவர்கள், (2) பின் வரும் சந்ததிகள்.

நாட்டு மக்கள் என்றுல் பிறந்ததிலிருந்து மரணத்தருவாயிலிருக்கும் எல்லா நபர்களின் கூட்டமாகும். இதில் ஒரு பகுதி மைனர்கள்; மற்றொரு பகுதி வயதுவந்தவர்கள். மனிதனின் சராசரி ஆயுள் காலம் நாட்டுக்கு நாடு வெவ்வேருயிருக்கிறது. பொதுவாக மைனர்களே பெருவாரியாயிருப்பர். அதாவது இருபத்தொரு வயதுக்குட்பட்டவர்கள் எண்ணிக்கை அந்த வயதுக்கு மேற்பட்டவர்களின் எண்ணிக்கையைவிட அதிகம்.

நான் வகுக்க விரும்பும் கொள்கை நிர்ணயத்தை இந்த எண்ணிக்கை வித்தியாசம் பாதிக்காது. ஆனுல் இந்த வித்தியாசம் என் கொள்கையின் தர்ம நியாயத்தை வலியுறுத்துகிறது. வயதுவந்தவர்களே பெரும்பான்மையோரா யிருந்தாலும், கொள்கை மாறுபடாது.

வயதானவர்களின் உரிமைகள்போல் மைனர்கள் உரிமைகளும் புனிதம் வாய்ந்தது. இருதரத்தார்களின் வயதில் வித்தியாசமே ஒழிய, அவர்கள் உரிமைகள் ஒரேவகைப்பட்டவைதான். மைனர் வயது வரும் வரையில் அந்த உரிமைகள் பறிக்கப்படாமல் பாதுகாக்கப்பட்டு வரவேண்டும். மைனர்கள் வயது வரும் வரையில் அவர்களுடைய உரிமைகளை வயதானவர்கள் கவனமாகப் பாதுகாத்து வரவேண்டும்.

மைனர் தனது உரிமைகளைத் துறக்கமுடியாது. வயதானவன் மைனரின் உரிமைகளைப் பறிக்கவும் முடியாது.

இதிலிருந்து நாம் தெரிந்துகொள்ள வேண்டியது ஒன்றுண்டு. நாட்டு மக்களில் வயதுவந்தவர்கள் தற்சமயத்திற்குச் சட்டமியற்றும் பொறுப்புள்ளவர்கள்; அவர்கள் மைனர்களைவிட ஓரளவு முன்சென்றவர்கள்; காலக்கிரமத்தில் மைனர்களுடைய உரிமைகளை அவர்களிடம் ஒப்படைக்க வேண்டியவர்கள். ஆகையினுல் பரம்பரை ஆட்சி அமைக்கவோ, பரம்பரை உரிமையுள்ள கவர்னர்களை நியமிக்கவோ வயதுவந்தவர்களுக்கு உரிமை கிடையாது. ஏனெனில் இந்தச் சட்டத்தின் மூலம் நாட்டிலுள்ள மைனர்கள் வயதுவந்ததும் அடையக்கூடிய உரிமைகளைப் பறிப்பதாகும்; மேலும் அவன் மைனராயிருக்கும் போது அநுமதிக்கவோ, ஆட்சேபிக்கவோ முடியாத ஒரு பரம்பரை ஆட்சிக்கு அவனை உட்படுத்துவதாகும்.

இம்மாதிரி சட்டமியற்றுகையில் மைனராயிருந்தவன் சில ஆண்டுகள் முன்னமே பிறந்ததாகவும் இருபத்தோராவது வயது அடைந்துவிட்டதாகவும் வைத்துக்கொள்ளுவோம். அச்சமயம் இதை எதிர்க்கவும், இதன் அநீதியையும் கொடுங்கோல்தன்மையையும் அம்பலப்படுத்தவும் அவனுக்கு உரிமை உண்டு என்பதை யாவரும் ஒப்புக்கொள்ளுவார்கள்.

ஆகையினுல் ஒருவன் மைனராயிருக்கும்பொழுது கையாளக்கூடியதை அவன் வயதுவந்ததும் கைக்கொள்ள முடியாதென்ருல் இந்தச் சட்டம் மைனர்கள் உரிமைகளைப் பறிக்கிறதென்பதில் சந்தேகமில்லை. ஆகையினுல் பிறர் உரிமைகளைப் பறிக்கும் தன்மை வாய்ந்த சட்டத்தை இயற்ற யாருக்கும் உரிமை கிடையாது. பரம்பரை ஆட்சி, பின்சந்ததியினரை எப்படிப் பாதிக்கிறது என்பதை விளக்கி மைனர்கள் விஷயம் மாதிரி ஒரு நாட்டு மக்களுக்கு இந்த முறை அமைப்பதற்கு உரிமையே கிடையாது என்பதை நிரூபிக்கிறேன்.

ஒரு நாட்டு மக்கள் தொடர்ச்சியாக நீடித்து இருந்தாலும் அவர்கள் அடிக்கடி புத்துயிர் பெற்று மாறுதல் அடைந்தே வருகின்றனர். அவர்கள் என்றும் தேக்க நிலையில் இருப்பதில்லை. ஒவ்வொரு நாளும் புதிய பிறப்புகள் ஏற்படுகின்றன; மைனர்கள் மேஜர்களாகிருர்கள்; முதியோர் உலகை விட்டு மறைகிருர்கள். இப்படித் தலைமுறை தலைமுறையாக மக்கள் கூட்டம் மாறிவருவதனுல் இவர்களில் எப்பகுதியினரும்

பிறரைவிட உயர்வான அதிகாரம்பெற்றவர்களல்லர். அப்படியே உயர்வு காணுவதென்றால் உலகத்தில் எந்தக் காலத்தில், நூற்றாண்டின் எந்தக் கட்டத்தில் இந்த உயர்வு தோன்றியதாக நிர்ணயிக்க முடியும்? இம்மாதிரி உயர்வுக்கு என்ன காரணம் கூறமுடியும்? எந்த ருசுவைக்கொண்டு அதை நிரூபிக்கமுடியும்? எந்த அடிப்படையில் அதை நாம் அறிந்துகொள்ள முடியும்?

ஓரளவு சிந்தித்துப் பார்த்தோமானால் நம்மைப்போலவே நம் முன்னோர்களும் உரிமைகளைத் தங்கள் ஆயுள் பரியந்தமே அநுபவித்தனர் என்பதை அறிந்துகொள்ளுவோம். ஆயுளுக்கப்பாற்பட்டும் அநுபவிக்கும் உரிமை அவர்களுக்குமில்லை, நமக்கும் இல்லை. உரிமைகள் என்பது மனிதர் யாரும் யுக யுகாந்தரமாக அநுபவிக்க வேண்டியவை. இதற்கு மாறுபட்ட கருத்து நாம் கொள்ளுவோமானால் நாம் அடிமைகள் அல்லது கொடுங்கோலர்கள் எனும் முறையில்தான் சிந்தனை செய்கிறோம். அடிமைகள் எனும் முறையில் முன்சந்ததியினர் நம்மைக் கட்டுப்படுத்த முடியும் என்றும், கொடுங்கோலர்கள் எனும் முறையில் பின்சந்ததியினரையும் கட்டுப்படுத்தலாம் என நாம் நினைப்பதாகவே கொள்ளவேண்டும்.

'தலைமுறை' எனும் பதத்தை நாம் பயன்படுத்தும் சந்தர்ப்பத்திலிருந்து அந்தப் பதத்திற்கு என்ன பொருள் என்பதை ஆராய முயற்சிப்போம்.

இயல்பாக இந்தப் பதத்தின் பொருள் தெளிவாகத் தெரிகிறது. தந்தை, மகன், பேரன் மூவரும் தனித்தனி தலைமுறையினர். சட்டப்படி அதிகாரம் உள்ள ஒரு தலைமுறையினரை, அதே அதிகாரத்தைப் பின்னர் அடையப்போகிறவர்களுக்கு மாறுபட்ட ஜனக்கூட்டம் என்று பார்த்தால் நாம் கணக்குப் பார்க்கும் காலத்தில் இருபத்தோரு வயதுக்கு மேற்பட்டவர்களெல்லாம் ஒரு தலைமுறையினராவர். இம்மாதிரி ஒரு தலைமுறையினர் பதினொன்கிலிருந்து இருபத்தோரு ஆண்டுகளுக்கு அதிகாரத்திலிருக்கலாம். அதாவது மைனர்களெல்லாம் மேஜராகி அவர்கள் எண்ணிக்கை முந்தியவர்களைவிட அதிகமாகும் வரையில்.

உதாரணமாக, பிரான்ஸில் இப்பொழுதோ அல்லது மற்றெந்தக் காலத்திலோ இருநூற்று நாற்பது லட்சம் மக்கள் இருந்தால், நூற்றிருபது லட்சம் ஆண்களும், நூற்றிருபது லட்சம்

பெண்களும் இருப்பார்கள். நூற்றிருபது லட்சம் ஆண்களில் அறுபது லட்சம் இருபத்தோரு வயதடைந்தவர்களாகவும், அறுபது லட்சம் அந்த வயதுக்குக் குறைந்தவர்களாகவும் இருப்பர். முதல் அறுபது லட்சம் பேர் ஆளும் அதிகாரமுடையவர்கள்.

தினமும் இவ்வாறு மாறுதல் ஏற்பட்டுக்கொண்டே வரும். இன்னும் இருபத்தோரு ஆண்டுகளில் இன்று மைனர்களாயிருப்பவர்களில் உயிர்தரித்திருப்பவர்கள் யாவரும் வயது வந்தவர்களாகி விடுவர். இவர்களுக்கு முந்தியவர்களில் பலர் இறந்துவிட்டிருப்பர். இச்சமயத்தில் உயிர்வாழ்ந்திருப்பவர்களிடம் ஆளும் அதிகாரம் இருக்கும். இவர்கள் இருபத்தோரு ஆண்டுகளுக்கு முன் எவ்வித உரிமைகளும் அற்றவர்களாயிருந்தனர். இவர்களும் முறையே காலக்கிரமத்தில் தந்தையர்களாகவும், பாட்டனார்களாகவும் ஆவர். அடுத்த இருபத்தோரு ஆண்டுகளில் அல்லது அதற்கும் குறைந்த அளவில் மைனர்களாயிருந்தவர்கள் வயதடைந்து ஆட்சி அதிகாரம் பெறுவர். இவ்வாறு தலைமுறை தலைமுறையாக நடந்துவரும்.

இம்மாதிரியே எப்பொழுதும் நடந்துவருமாகையாலும், ஒவ்வொரு தலைமுறையினரும் பிற தலைமுறையினரைப்போல் சம உரிமையுள்ளவர்களாகையாலும் எந்தத் தலைமுறைக்கும் பரம்பரை ஆட்சி அமைக்கும் உரிமை கிடையாது. ஏனெனில், இது பிற தலைமுறையினரைவிட உயர்வான உரிமை பெறத் தகுதியுள்ளது என்பதை ஒப்புக்கொள்ளுவதாகும். அதாவது, தன்னுடைய அதிகாரத்தால் உலகம் இனி எவ்வாறு ஆளப்பட வேண்டும், ஆட்சிப் பொறுப்பை யார் வகிக்கவேண்டும் என்று திட்டம் செய்வதற்கொப்பாகும்.

ஒவ்வொரு தலைமுறையினருக்கும், சகாப்தத்தினருக்கும் முந்தியவர்களைப்போல் சுதந்திரமாகச் செயல்புரியும் உரிமை வேண்டும்; தாங்கள் இறந்த பிறகும் உலகத்தை ஆள ஆசைப்படும் தற்பெருமை மிகவும் கேலிக்கூத்தானது; கொடுங்கோன்மையில் மிகுந்த அகம்பாவத் தன்மைவாய்ந்தது. பின் சந்ததியாரை உடைமையாகக் கருதும் உரிமை யாருக்கும் கிடையாது.

மனித உரிமைகள் அத்தியாயத்தில் முதல் பகுதியில் பரம்பரை ஆட்சிபற்றி எழுதியிருக்கிறேன். அதிலிருந்து சில பகுதிகளை எடுத்துக் கூறிவிட்டு இந்த பாகத்தை முடிக்கின்றேன்.

ஆங்கிலப் பார்லிமெண்டின் வரலாற்றில் இதற்கான உதாரணம் காணலாம். சட்டமியற்றுவோர் அறியாமைக்கும், கொள்கையின்மைக்கும் இதுபோன்ற உதாரணத்தை வேறு எந்த நாட்டு வரலாற்றிலும் காணமுடியாது. அது வருமாறு:

1688-ஆம் வருடப் பார்லிமெண்ட், வில்லியம், மேரி என்று பெயர்கொண்ட தம்பதிகளை ஹாலந்திலிருந்து வரவழைத்து அவர்களை இங்கிலாந்தின் அரசனாகவும் ராணியாகவும் முடிசூட்டினர். இதன் பிறகு இந்த நாட்டின் ஆட்சிப் பொறுப்பை இவர்களுடைய சந்ததிகளுக்குப் பராதீனம் செய்துவிட்டதாகச் சட்டம் இயற்றினர். அதன் வாசகம் வருமாறு: ''மத குருக்கள் பிரபுக்கள் மக்கள் பிரதிநிதிகளாகிய நாங்கள் ஆங்கில மக்களின் பெயரால் **நாங்களும் எங்கள் வாரிசுகளும் பின்சந்ததியினரும்** மன்னர் வில்லியம், ராணி மேரி இருவருக்கும், **அவர்களுடைய வாரிசுகள், பின்சந்ததியினர்** யாவருக்கும் என்றென்றும் கடமைப் பட்டுள்ளோம்.'' **எட்மண்ட் பர்க்** மேற்கோள் காட்டிய மற்றொரு சட்டத்தின் மூலம் அப்பொழுதிருந்த ஆங்கில நாட்டு மக்கள் பெயரால் **அந்த மக்களையும், அவர்களுடைய வாரிசுகள், பின்சந்ததியார்களையும் வில்லியம், மேரி இருவருக்கும் அவர்களுடைய வாரிசுகள் பின் சந்ததியினருக்கும் கட்டுப்படுத்தினர்.**

இப்பேர்ப்பட்ட சட்டமியற்றுபவர்களின் அறியாமையைக் கண்டு நாம் நகைத்தல் மட்டும் போதாது. கொள்கையற்ற அவர்கள் நடத்தையை வன்மையாகக் கண்டிக்கவும் வேண்டும். பிரான்ஸின் 1789-ஆம் ஆண்டு அரசியல் நிர்ணயசபை ஆங்கிலப் பார்லிமெண்ட் செய்த தவறையே செய்தது. அந்த வருட அரசியலமைப்புச் சட்டப்படி **காபெட்** குடும்பத்தாருக்குப் பரம்பரை ஆட்சிபுரியும் உரிமையை அளித்தது.

ஒவ்வொரு நாட்டு மக்களும் அந்தந்தக் காலத்திற் கேற்பத் தங்களிஷ்டப்படி ஆட்சி நடத்த உரிமை உண்டு என்பதை ஒப்புக்கொள்ளவே வேண்டும். ஆனால் பரம்பரை ஆட்சி முறை அந்தத் தலைமுறையினரை மட்டும் ஆட்சி செய்வதில்லை. மற்றொரு தலைமுறையினரை ஆட்சி புரிவதாகும். அவர்கள் யார்மீது ஆட்சி செலுத்த விரும்புகிறார்களோ அவர்கள் இன்னும் பிறக்கவில்லை; அல்லது அச்சமயம் மைனர்களாகையால் அவர்களை ஆளும் உரிமையே எழவில்லை; ஆகையால்

இல்லாத உரிமையை மேற்கொள்ளுவது பின்சந்ததியினரின் உரிமைக்குத் துரோகம் செய்வதாகும்.

இத்துடன் பரம்பரை ஆட்சி முறை பற்றிய என் விவாதத்தை முடித்துக்கொண்டு, இனி இரண்டாவது விஷயமான தேர்தல், பிரதிநிதித்துவம் மூலம் ஆட்சிபுரிதல் அல்லது பரம்பரை ஆட்சிக்கு மாறுபட்ட பிரதிநிதித்துவ ஆட்சிபற்றி ஆராய முனைகிறேன்.

பரம்பரை ஆட்சி நிலைபெற உரிமையில்லையெனில்—இது நிரூபிக்கக்கூடியது—**பிரதிநிதித்துவ ஆட்சி**யை ஏற்றுக்கொள்ளத் தான் வேண்டும்.

தேர்தல் மூலம் பிரதிநிதித்துவ ஆட்சியைப்பற்றி ஆராய்வதில் அது எவ்வகையில், எப்பொழுது, எந்த உரிமை அடிப்படையில் தோன்றிற்று என்பது வெறும் விளையாட்டல்ல. அது தோன்றிய விதத்தை யாரும் எளிதில் அறிந்துகொள்ளலாம். மனிதனிடமிருந்து அது தோன்றிற்று; அவனேதான் அந்த உரிமை தோன்றியதற்கான ருசு. அவன் உயிர்வாழ்வதனாலேயே அவனுக்கு அந்த உரிமை உண்டு. அவனே அதற்கான உரிமைப் பத்திரம்.

பிரதிநிதித்துவ ஆட்சியின் தனிப்பெரும் உண்மையான அடிப்படை எல்லோருக்கும் சம உரிமை என்பதுதான். பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பதில் ஒவ்வொருவருக்கும் ஒரே ஒரு வோட்டுத்தான் உண்டு. பணக்காரர்கள் ஏழைகளை வோட்டளிக்காமல் தடுக்கவோ, தேர்ந்தெடுக்கப்படாமல் செய்யவோ முடியாது. அவ்வாறே ஏழைகள் பணக்காரர்களை ஒதுக்கிவிட முடியாது. இரு சாராரில் இத்தவறை யாரேனும் செய்தால் அது பலாத்காரமாகுமே ஒழிய, உரிமையுடன் செய்யும் செயலாகாது. ஒருவன் பிறனை ஒதுக்கினால் அவ்வாறே அப்பிறனும் இவனை ஒதுக்க முடியும்.

இப்பொழுது பிரபு வர்க்க ஆட்சி என அழைக்கப்படும் முறையே உரிமை அநுபவிப்பதில் ஏற்றத்தாழ்வுக்குக் காரணமாகும். இந்தமாதிரி ஏற்றத்தாழ்வை அமைக்க யாருக்கு உரிமை உண்டு? பணக்காரர்கள் தங்கள் உரிமைகளைத் துறப்பார்களா? மாட்டார்கள். அல்லது ஏழைகள் தங்களைத் தாழ்த்திக்கொள்ளுவார்களா? மாட்டார்கள். ஆகையினால் எந்த அடிப்படையில் ஒரு சாராரின் உரிமைகளைப் பறிக்கமுடியும்? ஒரு சாரார் தங்கள்

உரிமைகளைப் பறிகொடுப்பர் என ஏற்றுக்கொண்டாலும் அவர்கள் பிறர் உரிமைகளைப் பறிக்க அருகதையற்றவர்கள். ஏழைகள் இம்மாதிரி உரிமையைப் பணக்காரர்களுக்கு வழங்க மாட்டார்கள். பணக்காரர்களும் ஏழைகளுக்கு இவ்வுரிமையை அளிக்கமாட்டார்கள். இந்த உரிமை யாருக்காவது இருந்தால் அது யதேச்சாதிகாரமாவதுடன் கொள்ளையடிக்கும் உரிமை யளிப்பதற்கும் ஒப்பாகும்..

ஒரு பிரதிநிதியைத் தேர்ந்தெடுக்க வோட்டளிக்கும் உரிமை தனிப்பட்டோர் உரிமைகளில் ஒன்றாகும். இவ்வுரிமை மிகப் புனிதம் வாய்ந்த உடைமையாகும். பெறுமானமுள்ள சொத்தையோ அல்லது அதனால் ஏற்படும் செல்வாக்கையோ, மற்றொருவனின் சொத்தையோ, உரிமையையோ பறிப்பதற்குப் பயன்படுத்தினால் அது துப்பாக்கியைப் பிரயோகிப்பதற்கொப்பாகுமாகையால், அதை அவனிடமிருந்து பறித்துவிடுவதே நியாயமாகும்.

சமூகத்தில் ஒரு பகுதியினர் சேர்ந்துகொண்டு மற்றொரு பகுதியினர் உரிமையைப் பறிப்பதனால் உரிமை அநுபவிப்பதில் ஏற்றத்தாழ்வு ஏற்படுகிறது. ஓரளவு சொத்துள்ளவர்களே வோட்டளிக்கலாம், தேர்ந்தெடுக்கப்படலாம் என்று அரசியலமைப்பு விதியோ, சட்டமோ இயற்றப்பட்டால் அதனால் அம்மாதிரி சொத்துள்ளவர்கள் ஒன்றுகூடி அதே அளவு சொத்தில்லாதவர்களுக்கு வோட்டுரிமையில்லாமல் செய்ய இடமளிக்கிறது. இதனால் சொத்துள்ளவர்கள் தங்களுக்கென உரிமைகளை வகுத்துக்கொண்டு பிறரை ஒதுக்குவதாகும்.

சம உரிமையை எதிர்ப்பவர்கள் தங்களை மட்டும் எந்த உரிமையிலிருந்தும் ஒதுக்கிவிட ஒப்பமாட்டார்கள் என்பது தெளிவு; இந்த முறையில் மனிதன் தற்பெருமை கொள்ளுவதை மன்னித்துவிடலாமெனினும், பிரபு வர்க்கம் என ஒன்றிருப்பது நகைப்புக்குரிய விஷயம். சுய திருப்தியளிக்கும் இந்தத் தற்பெருமையைப் பிரபுத்துவத்தை எதிர்க்கும் சுயநலமிகள் தூண்டிவிட்டு வளர்க்கிறார்கள். இந்த எதிர்ப்பாளிகள் தங்களுடைய செயலினால் லாபமே ஒழிய, நஷ்டமில்லை என்று கணக்குப் போட்டே செயல் புரிகிறார்கள். சம உரிமையின்கீழ் தங்களுக்கும் சம பங்குண்டு என்றும், இந்த எதிர்ப்பினால் தங்களுக்கு அதிகப்படி உரிமைகள் கிடைக்காவிட்டாலும் உள்ள உரிமைகள் குறை

யாது எனும் தைரியத்தினல் பிரபுத்துவ முறையை எதிர்க்கின்றனர்.

இந்த மனப்பாங்கினல் சம உரிமையில் திருப்தியடையாத ஆயிரக்கணக்கான மக்கள் அதிகப்படி உரிமைக்கு ஆசைப்பட்டு உள்ளதையும் இழந்து, இன்று மிக இழிவான ஏற்றத்தாழ்வுக்கு உட்பட்டிருக்கின்றனர்.

எப்படிப் பார்த்தாலும் வோட்டுரிமை பெற சொத்துடைமையை நிபந்தனையாக வைப்பது ஒவ்வாதது, ஆபத்தானது, அநீதி நிறைந்தது, நகைப்புக்கிடமானது. வோட்டுரிமைக்கு அவசியமான சொத்தின் பெறுமானம் அதிகமாயிருந்தால், அதன் மூலம் பெரும்பாலான மக்கள் இந்த உரிமையின்றி ஒதுக்கப்படுவார்கள்; இவர்கள் எல்லாம் ஒரு பொதுவான நோக்கத்தால் ஒன்றுபட்டு அரசாங்கத்தையும் அதன் ஆதரவாளர்களையும் எதிர்க்க முன்வருவார்கள். இந்த நிலையில் பெரும்பாலோரே சக்தி மிகுந்தவர்களாயிருப்பார்களாகையால் அவர்கள் விரும்பியபொழுது அரசாங்கத்தையும் அதன் ஆதரவாளர்களையும் விரட்டி யடித்துவிட முடியும்.

இந்த அபாயத்தைத் தவிர்ப்பதற்காக குறைந்த அளவு சொத்துடைமையே வோட்டுரிமை பெறத் தகுதியளிக்கும் என விதி செய்தால் அது சொத்தை அற்ப விஷயங்களுடன் போட்டிக்கு விட்டு இழிவுபடுத்துவதாகும். இந்த சொத்தின் பெறுமானத்திற்குச் சமமான விலைமதிப்புள்ள குதிரைக் குட்டியோ, கோவேறுக்கழுதையோ ஒருவனிடமிருந்தால் அவனுக்கு வோட்டுரிமையுண்டென்றும், அது செத்துவிட்டால் அவன் உரிமையை இழந்துவிடுவான் என்றும் இருந்தால் இந்த உரிமை யாருக்கு—மிருகத்திற்கா அல்லது மனிதனுக்கா? தகுதியற்ற முறைகளில் சொத்தைச் சம்பாதிக்கலாம், எவ்விதக் குற்றமும் செய்யாமல் அதை இழந்தும் விடலாம் என்பதைச் சிந்தித்துப் பார்த்தால் சொத்தை வோட்டுரிமைக்கு அடிப்படையாக வைப்பதை நாம் வெறுத்துத் தள்ளுவோம்.

இவ்விஷயத்தில் அருவருக்கத்தக்க அம்சம் என்னவெனில், உரிமை மறுக்கப்பட்டவனுக்கு ஒருவித இழுக்கு கற்பிக்கப்படுகிறது என்பதுதான். சமூகத்தின் ஒரு பகுதியினரை இவ்வாறு அவமதிக்க மற்றப் பகுதியினருக்கு எவ்வித உரிமையும் கிடை

யாது. எவ்வித வெளிப்படைக் காரணமும் இதை நியாயமாக்க முடியாது. பணமிருப்பவர்கள் எல்லாம் சன்மார்க்கர்கள் என்றே அது இல்லாதவர்கள் துன்மார்க்கர்கள் என்றே கூறமுடியாது.

பார்க்கப்போனால் பணமிருப்பது நாணயக்குறைவுக்கு ருசு என்றும், ஏழ்மை நிலை தூயநிலைக்கு மறைமுகச் சான்று என்றும் கூறலாம். குறைவாகவோ, நிரம்பவோ சொத்துள்ளவர்களுக்கு வோட்டுரிமையளிக்க வேண்டுமென்றால் அந்தச் சொத்தை எவ்வகையில் சம்பாதித்தார்கள் என்பதையும் உரிமையளிப்புக்கு ஆதாரயாகக் கொள்ள வேண்டும்.

வோட்டுரிமையைப் பறிப்பதற்கு நியாயமான காரணம் உண்டென்றால், அதைத் தண்டனையாக விதிப்பதுதான். பிறருக்கு வோட்டுரிமையளிக்காமல் ஒதுக்க விரும்புபவர்களுக்கு இந்த உரிமை சில காலத்திற்கு இல்லை என்று விதிப்பது தக்க தண்டனை யாகும். பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுக்கும் உரிமையே அடிப்படை உரிமை. இதன் மூலம் மக்களின் பிற உரிமைகளை பாதுகாக்கலாம்.

ஒரு மனிதனிடமிருந்து இவ்வுரிமையைப் பறிப்பது அவனை அடிமைப்படுத்துவதற்கொப்பாகும். அடிமைத்தனம் என்பது பிறர் முடிவுக்குத் தலைபணிவதுதான். தேர்தலில் வோட்டுப் போடமுடியாதவன் பிறருக்குத் தலைவணங்க வேண்டியவனே யாகின்றான். ஆகையால் குறிப்பிட்ட ஒரு மனிதக் கூட்டத்தின் வோட்டுரிமையைப் பறிப்பது சொத்தைப் பறிப்பதுபோல் குற்றமேயாகும்.

நாம் உரிமைபற்றிப் பேசும்போது அதைக் கடமையுடன் பிணைத்தே பேசவேண்டும். ஒருவனுக்கு உரிமையாயிருப்பது பிறருக்குக் கடமையாகிறது. நான் அநுபவிக்கும் உரிமையைப் பிறர் அநுபவிக்க உத்தரவாதம் செய்வது என் கடமை, அதேமாதிரி அவனும் என் உரிமைக்கு உத்தரவாதம் செய்யக் கடமைப்பட்டிருக்கின்றான். கடமையைச் செய்யத் தவறுபவன் தன் உரிமையை இழக்கின்றான்.

இதை அரசியல் நோக்கிலிருந்து பார்த்தால், ஓர் அரசாங்கத்தின் பலமும், அது நிலைத்திருப்பதும், அதை ஆதரிக்கும் அக்கறையுள்ளவர்களின் எண்ணிக்கையைப் பொறுத்தது என்பது விளங்கும். ஆகையால் சம உரிமை மூலம் மக்கள் கூட்டம் முழுதும் அக்கறைகொள்ளச் செய்வதே சிறந்த

கொள்கை. சிலர் உரிமையைப் பறிப்பதுதான் ஆபத்து. சிலர் வோட்டுரிமை பெருமல் செய்துவிடலாம். பறிப்பதை எதிர்த்துக் கிளர்ந்தெழும் உரிமையைப் பறிக்கமுடியாது. ஒரு மனிதன் எல்லா உரிமைகளேயும் இழந்துவிட்டால் புரட்சி செய்யும் உரிமை பூரணத்துவம் பெற்றுவிடுகிறது.

தங்களுக்கு எவ்வித உரிமைகளும் இல்லே எனவோ, அல்லது உரிமை என்பது குறிப்பிட்ட சிலருக்கே உண்டு எனவோ, அல்லது அரசாங்கம் அமைவது அதற்கு இயற்கையாக உள்ள உரிமை என்றே மக்கள் நம்பும்படிச் செய்துவிட்டால் அவர்கள் மீது இஷ்டப்படி அதிகாரம் செலுத்துவது கடினமல்ல. அவர்களே அறியாமை நிலேயில் வைத்திருந்ததும், மூடப்பழக்கங்களுக்கு உடன்பட்டிருக்க வேண்டும் என்று போதிக்கப்பட்டதும், ஆக இவ்விரண்டுமே அவர்களே அடக்கியாள வசதியளித்தது.

ஆனுல் இந்த அறியாமையும் மூடப்பழக்கமும் நீங்கி விட்டால், தங்களே இதுவரை அடக்கி ஆண்ட கொடுமையை அவர்கள் உணர்ந்துவிட்டால், இயற்கை வளத்தைத் தவிர உழவனும், தொழில் புரிபவனுமே உலகிலுள்ள தனத்தைப் படைத்தவர்கள் என அறிந்துவிட்டால், சமூக உறுப்பினர் என்கிற முறையில் தங்களால் சமூகத்திற்குக் கிடைக்கும் நற்பயனேயும் அறிந்துவிட்டால் அப்புறம் முன்போல் அவர்களே எளிதில் அடக்கியாள முடியாது. மோசடியை மக்கள் தெரிந்து கொண்டுவிட்டால் அப்புறம் அவர்களே மோசம் செய்ய முடியாது. மோசடியைத் தொடருபவர்கள் அவல நிலே யடைந்து அழிக்கப்படுவது நிச்சயம்.

எல்லோருக்கும் ஒரே அளவில் சொத்து இருக்க முடியாது என்பதில் சந்தேகமில்லே. உழைப்பு, உயர்வான அறிவு, நிர்வாகத் திறமை, மிகுந்த சிக்கனம், அதிர்ஷ்டவ்சமான சந்தர்ப்பங்கள் மூலம் சொத்து சேரும். இக்குணங்கள் இல்லே யேல் சொத்து குறைவாகவே இருக்கும். பேராசை, கொடுங் கோன்மை இரண்டின் விளேவாகத்தான் சொத்துரிமையில் ஏற்றத்தாழ்வு ஏற்படவேண்டும் என்கிற அவசியமில்லே. இது தவிர சிலர் பொருளீட்டுவதை வெறுக்காவிடினும், அதை உழைத்துப் பெறுவதற்கோ, அதற்காகக் கையாளவேண்டிய சாதனங்களேக் கையாளவோ விரும்பாததனுல் தங்கள்

தேவைக்கும் சுதந்திர வாழ்வுக்கும் அவசியமான அளவுக்கே அதை அடைய முயற்சிக்கின்றனர். மற்றும் சிலர் சட்டத்திற்குட்படாமல் எப்படியெல்லாம் தனத்தை அடையலாமோ அவ்வகைகளில் அதைச் சேகரித்து பொருளீட்டுவதையே வாழ்க்கைக் குறிக்கோளாகவும் மதமாகவும் கொண்டுள்ளவர்களாயிருக்கின்றனர். சொத்தைப் பொறுத்தமட்டில் அதை நாணயமாகப் பெறவேண்டும்; அதைத் துராகிருதமான வகைகளில் பயன்படுத்தலாகாது. வோட்டுரிமைக்குப் பொருள் படைத்திருக்க வேண்டும் என்று விதிப்பது பொருளைத் துராகிருதமாகப் பயன்படுத்துவதாகும்.

பாங்க் அல்லது வர்த்தக நிலையம்போல் பணத்தையே அடிப்படையாகக் கொண்ட ஸ்தாபனங்களில் அவைகளில் பணம் போடுபவர்களுக்கே நிர்வாகத்தில் பங்குகொள்ள உரிமை உண்டு என்பது ஒப்புக்கொள்ளக்கூடியதே. ஆகையினால் இந்த ஸ்தலங்கள் பணத்தைத் தவிர வேறு உரிமைகளை ஏற்பதில்லை.

ஆனால் பிரதிநிதித்துவ அடிப்படையில் நிறுவப்பட்ட அரசாங்கத்தின் நிலை வேறு. இம்மாதிரி ஆட்சி தேச மக்களில் யாவரையும், சொத்துள்ளவர்களையும் இல்லாதவர்களையும் எல்லாவித யோக்கியதாம்சங்களையும் ஏற்கிறது. ஆகையினால் ஆட்சிக் கொள்கைப்படி எல்லோருக்கும் எல்லாவித உரிமைகளுக்கும் அதில் இடமுண்டு. சொத்துடைமை என்பது இவ்வுரிமைகளில் ஒன்று; அது அத்தியாவசியமான உரிமையல்ல.

சொத்தைவிட மனிதனைப் பாதுகாப்பதே புனிதமான கடமை. மேலும் ஏதாவது வேலை செய்து வாழ்க்கை நடத்த சாதனம் பெற்றுக் குடும்பத்தைக் காப்பாற்றும் சாமர்த்தியம் பெற்றிருப்பதும் ஒருவகை சொத்தேயாகும். அந்த சக்தியே அவனுடைய சொத்தாகும். அதை அவன் உழைத்துப் பெற்றிருப்பதால் உழைப்பின்றிப் பெற்ற வீடுவாசல், நிலபுலன் போல் அதுவும் பாதுகாப்பிற்குரியது.

சொத்து குறைவாயிருப்பினும், கூடுதலாயிருப்பினும் அதைப் பாதுகாக்கச் சிறந்த வழி, இயன்றமட்டில் மக்கள் குறைபாடுகளையும், பலாத்காரச் சூழ்நிலையையும் அகற்றவேண்டியதே என நான் கருதி வந்திருக்கிறேன். சம உரிமை வழங்கிவிட்டால் மக்கள் குறைகூற இடமே ஏற்படாது. உரிமைகள்

பாதுகாக்கப்பட்டால் சொத்தும் பத்திரமாயிருக்கும். ஆனல் சொத்தை வியாஜமாகக் கொண்டு பிரத்தியேக உரிமைகள் அல்லது உரிமைகளில் ஏற்றத்தாழ்வு ஏற்பட்டால் சொத்து வைத்துக்கொள்ளும் உரிமையை அது பலஹீனப்படுத்துவதுடன் அது குழப்பத்திற்கும் கலகத்திற்கும் காரணமாகிவிடுகிறது. சொத்தினல் ஏற்படும் செல்வாக்கின் விளைவாக உரிமைகளுக்குப் பங்கம் ஏற்பட்டால், சொத்துக்கள் பத்திரமாக இருக்கும் என எதிர்பார்க்க முடியாது.

பிரத்தியேக உரிமை பெற சொத்துக்களை வியாஜமாகக் கொள்ளும் அநீதியைத் தவிர, பட்டம் பெற்றவர்களுக்குத் தனி மரியாதை அளிப்பது மற்றுமோர் அசம்பாவிதம். தனது பெயருக்குப் பிறகு நன்கு ஒலிக்கும் ஒரு பட்டத்தைச் சேர்த்துக் கொள்ளுவதும் அதற்குத் தனி மதிப்பளிப்பதும் அசம்பாவிதம் இன்றி வேறென்ன? மக்களின் மனமொத்த ஆதரவினலும் தனி மேதையினலும் சிலர் உலகில் புகழ்பெற்றிருக்கின்றனர். உதாரணமாக, **அரிஸ்டாடில், ஸாக்ரடீஸ், பிளேடோ** முதலியோரைக் கூறலாம். அவர்கள் உண்மையிலேயே பெரியோர்கள், கண்ணியமானவர்கள். ஆனல் பெரியோர்களை அரசாங்கத்தார் சிருஷ்டிக்க ஒரு தொழிற்சாலை ஆரம்பிக்கப் படுமானல், அறிவாளிகளை உற்பத்தி செய்ய முயற்சிப்பதுபோல் அதுவும் அசட்டுத்தனமாகும். அப்படிச் சிருஷ்டிக்கப்பட்ட பிரபுக்கள் யாவரும் போலிகளே.

இப்படித் தயாரிக்கப்பட்ட பொம்மைகள்தான் பிரபுக்கள் என்று பெயர் பெற்றுவிட்டனர். இது சிறுபிள்ளைத்தனமான, அறியாமற் செய்த செயல் என்றல் அதை அவ்வளவு மோசமாகக் கருதாமலிருக்கலாம். ஆடம்பரத்தை நாம் பொருட்படுத்துவதில்லை. ஏனெனில் அது அற்ப விஷயம். அதேமாதிரி பட்டம் தாங்குவதிலுள்ள படாடோபத்தையும் நாம் மன்னித்துவிடலாம். ஆனல் பிரபுக்கள் தோன்றியது ஆடம்பரத்தைவிடக் கேவலமானது. இது கொள்ளையடிப்பதாகும். எந்நாட்டிலும் முதலில் தோன்றிய பிரபுக்கள் பகற்கொள்ளைக்காரர்களே. அதற்குப் பின்வந்தவர்கள் அடிவருடிகள்.

இங்கிலாந்தில் (பிற நாடுகளிலுங்கூட) வாரிசுக்கிரமத்தில் இன்று அநுபவத்திலிருக்கும் பெரிய ஜமீந்தாரிகள் யாவும் இங்கி

லாந்தை வென்ற வில்லியம் அரசன் காலத்தில் சாதுக்களாயிருந்த மக்களிடமிருந்து கொள்ளையடிக்கப்பட்டவைகளே. இவைகளை நாணயமான முறையில் பெற்றிருக்க முடியாது. இவைகளை எவ்வாறு பெற்றிருக்க முடியும் என்று கேட்டால், ''கொள்ளை'' என்பதைத் தவிர வேறு பதில் கூற முடியாது. இவைகளை வர்த்தகம், உற்பத்தி அல்லது வேறு கண்ணியமான முறையில் பெற்றதாகக் கூறமுடியாது.

பின், வேறு எவ்வகையில் இவைகள் பெறப்பட்டன? பிரபுக்களே! உங்கள் முன்னோர்கள் திருடர்கள் என்பதைக் கேட்டு வெட்கித் தலைகுனியுங்கள். அவர்கள் அக்கால **ராபஸ்பியர்**களும் **ஜேகபின்களு**மாவார்கள். அவர்கள் கொள்ளையடித்தபின் அந்த இழிவை மறைப்பதற்காகப் பட்டங்கள் எனும் புனைபெயர் பூண்டனர். கொள்ளைக்காரர்கள் எல்லாம் இம்மாதிரியேதான் தங்கள் குற்றங்களை மறைத்து வந்திருக்கின்றனர். அவர்கள் தங்கள் உண்மைப் பெயர்களுடன் நடமாடுவதில்லை.

நாணயமாகப் பெற்ற சொத்தைச் சம உரிமை மூலமே பாதுகாக்க முடியுமாகையால் இழிவான முறையில் பெற்ற சொத்தைக் காக்க ஏகபோக உரிமைகளை நம்ப வேண்டியிருக்கிறது. ஒருவன் மற்றவனுடைய சொத்தைக் கொள்ளையடித்தால், அடுத்தபடியாக இழந்தவன் தன் சொத்தைத் திரும்பப் பெறும் உரிமையை ஸ்தாபிக்காமல் செய்து விடவே முற்பாடுவான். ஏனெனில் கொள்ளைக்காரன் சட்டமியற்றுபவனாக வந்தால் தன் நிலைமை பத்திரமாயிருக்கும் என நம்புகிறான். ஆங்கில ஆட்சியில் பிரபுக்கள் சபை எனப்படுவது ஆதியில் நான் மேலே குறிப்பிட்ட கொள்ளைகள் புரிந்தவர்களின் கூட்டமே. தாங்கள் திருடிய சொத்துக்களைப் பாதுகாக்கவே பிரபுக்கள் சபை எனும் கூட்டு ஸ்தாபனம் தோன்றியது.

பிரபுக்கள் தோன்றிய அக்கிரமமான வழி ஒருபுறமிருக்க, அதனால் மனிதனின் உடலுக்கும் அறவாழ்வுக்கும் தீமை விளைவதைக் கவனிக்க வேண்டும். அடிமைத்தனம் போலவே இம்முறை மனிதனின் ஆக்கத்திறனைச் சிதைவுறச் செய்கிறது. அடிமை வாழ்வில் அழுந்திய அறிவு யாருமறியாமல் தனது வளரும் தன்மையை இழப்பதுபோல், பிரபுக்கள் வர்க்கத்தின் அசட்டுத்தனத்தினால் அது மரத்துச் செயலற்றுப்போய் மங்கி

விடுகிறது. பட்டங்களிலும் பதக்கங்களிலும் கவனத்தைச் செலுத்தும் மனம் மகத்தான முறையில் செயல்புரியும் என எதிர்பார்க்க முடியாது. பிரபுக்களைச் சுற்றியுள்ள குழந்தைத் தனம் நிறைந்த சூழ்நிலை அவர்களை ஆட்கொண்டு விடுகிறது.

எல்லாக் காலங்களிலும், முக்கியமாகப் புரட்சி நிகழ்ந்து கொண்டிருக்கையில், நற் கருத்துக்களைப் பேணும் பழக்கம் ஏற்படும் வரையில் அடிப்படைக் கொள்கைகளைப் பற்றிச் சிந்தித்து நமது தேசாபிமானத்தை வளப்படுத்திக்கொள்ள வேண்டியது அவசியம். ஒவ்வொன்றையும் அதன் மூலத்தை அறிந்து ஆராய்ச்சி செய்தால்தான் அவைகளைப் புரிந்து கொள்ள முடியும். இதைத் தொடர்ந்து பின்பற்றி வந்தால் தான் அந்தக் கொள்கைகளை நாம் மறக்காதிருக்க முடியும்.

உரிமைகள் எப்படி உதயமாயின என்பதை ஆராய்ந்தால் **உரிமைகள்** ஒரு மனிதனால் மற்றொருவனுக்கோ, அல்லது ஒரு கூட்டத்தினரால் மற்றொரு கூட்டத்தினருக்கோ **தானம்** செய்யப் பட்டதில்லை என்பதை நிதர்சனமாக அறியலாம்; அப்படி தானமாக இருந்தால் முதன் முதலில் யார் இதை அளித்திருக்க முடியும்? எந்தக் கொள்கைப்படி, எந்த அதிகாரத்தின் கீழ் இந்த தானம் செய்யும் அதிகாரத்தை அவன் பெற்றிருக்க முடியும்?

உரிமைப் பிரகடனம் என்பது உரிமைகளைச் சிருஷ்டிப்ப தல்ல; உரிமைகளைத் தானம் செய்வதுமல்ல; எந்தக் கொள்கைப் படி அவைகள் இருந்தனவோ அவைகளின் நிதர்சனமும் கொள்கைகள் யாவன எனும் விவரணமும்; ஏனெனில் ஒவ் வொரு சிவில் உரிமையும் ஓர் இயற்கை உரிமையிலிருந்து தோன்றியதே. இதில் ஒருவர் உரிமையை மற்றவர் காப்பாற்றுவது எனும் பரஸ்பர உத்தரவாதமும் அடங்கி யிருக்கிறது. மனிதன் தோன்றினன், அதிலிருந்து மனித உரிமையும் தோன்றிற்று என்பது தவிர வேறு எவ்வித முகாந் தரமும் காணமுடியாததனுல் மனிதன் உயிர்வாழ்வதனுலேயே அவனுக்கு உரிமை கிடைக்கிறது, ஆகையினுல் அது யாவருக்கும் சமம் என்று ஏற்படுகிறது.

சம உரிமைக் கொள்கை எளிதில் புரிந்துகொள்ளக்கூடியது. ஒவ்வொரு மனிதனும் இதைப் புரிந்துகொள்ள முடியும். தனது உரிமைகளை மனிதன் உணருவதனுல்தான் அவன் தனது கடமை

களையும் உணர முடியும். ஏனெனில், மனிதன் சம உரிமை பெற்றதனுல் ஒவ்வொருவரும் பிறர் உரிமைகளைப் பாதுகாப்பதே தனது உரிமைகளுக்குத் தக்க பாதுகாப்பாகும் என்பதை உணருகிருர்கள். ஆனுல் ஓர் அரசியலமைப்பை வகுப்பதில் சம உரிமைக் கொள்கையை மறந்து, அல்லது அதைச் சுருக்கவோ, மாற்றவோ முயற்சிப்போமானுல் நாம் எல்லையில்லாத் தொல்லைகளில் சிக்கிக்கொள்ளுவோம். பின்னர் பின்வாங்கினுலொழிய அவைகளிலிருந்து விடுபட்டு வெளிவர முடியாது. அப்படியே உரிமைக்கு எல்லை வகுக்க விரும்பினுல் எந்த இடத்தில் வகுத்து நிறுத்துவது? எந்தக் கொள்கை அடிப்படையில் ஒரே நாட்டு மக்களுக்குள் பாகுபாடு காண வேண்டுமென விதிப்பது? அதன்படி யாரை சுதந்திரமுள்ளவர்கள் எனவும் நிர்ணயிப்பது?

சொத்து அடிப்படையில் பாகுபாடு செய்தால் சுதந்திர சம்பந்தமான எந்த நல்விதிகளையும் கைவிட்டவர்களாவோம். ஏனெனில் அது ஜடப்பொருளுக்கு உரிமை அளித்து மனிதனை அப்பொருளுக்குட்பட்டவனுகச் செய்வதாகும். மேலும் சொத்து மக்களுக்குள் சச்சரவை ஏற்படுத்தி அதற்கெதிராகப் போராட்டம் நடத்தத் தூண்டுதலாகவும் அமைவதுடன் அப்படி சச்சரவு செய்வது நியாயம் என வாதாடவும் தூண்டும். சொத்தில்லாதவர்கள் உரிமையைப் பறிக்க சொத்தை ஒரு சாதனமாகப் பயன்படுத்துதல் அதை ஒரு சட்ட விரோதமான காரியத்திற்குப் பயன்படுத்துவதாகும் என்று நான் திட்டமாகக் கூறுவேன். இதற்கும், துப்பாக்கி கொண்டு காரியத்தைச் சாதித்துக் கொள்ளுவதற்கும் எவ்வித வித்தியாசமும் கிடையாது.

இயற்கை நிலையில் எல்லோரும் சம உரிமையுடையவர்களாயிருக்கின்றனர். ஆனுல் அவர்களுடைய சக்தி சமமானதாயில்லை. பலக் குறைவானவர்கள் பலவான்களிடமிருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்ள முடியாது. ஆகையினுல் சமுதாயம் அமைந்ததன் நோக்கம் மனித சக்தியைச் சமமாக்கி அதைச் சம உரிமைப் பாதுகாப்புக்கு உத்தரவாதமளிப்பதாகும். ஒரு நாட்டின் சட்டங்கள் ஒழுங்காக அமைந்தால் இந்த நோக்கம் ஈடேறும்.

தன் சுயபலத்தைவிட சட்டத்தின் பலம் சிறந்ததென்றே மனிதன் அதன் உதவியை நாடுகிருன். ஆகையினுல் அரசாங்கம்

அமைப்பதிலும் அதன் நடைமுறைக்கு அடிப்படையான விதிகள் வகுப்பதிலும் ஒவ்வொருவனுக்கும் சம உரிமை உண்டு. அமெரிக்கா, பிரான்ஸ் போன்ற பரந்த நாடுகளிலும், சமுதாயங்களிலும் இந்தத் தனி நபர் உரிமையை, பிரதிநிதித்துவ மூலமே கையாள முடியும்—அதாவது தேர்தல் மூலம் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்தல். இவ்வாருகவே பிரதிநிதித்துவ அரசாங்கம் தோன்றலாயிற்று.

இதுவரையில் கொள்கைபற்றியே எழுதி வந்தேன். (1) முதலாவதாக, பரம்பரை ஆட்சி நிலைத்திருக்க உரிமை இல்லை. எந்த உரிமை அடிப்படையிலும் அதை அமைக்க முடியாது. இரண்டாவதாக, மனிதனின் சாகாவரம் பெற்ற இயற்கை உரிமைகளிலிருந்தே தேர்தல், பிரதிநிதித்துவ அடிப்படை அரசாங்கம் தோன்றிற்று. ஏனெனில் இயற்கையோடியைந்த வாழ்க்கையில் மனிதனே தனக்குத் தேவையான சட்டமியற்றும் உரிமையுள்ளவன். (2) சிறிய சமூகங்களில் மக்கள் ஒன்றுகூடித் தங்களுக்கான சட்டங்கள் இயற்றுகையில் மனிதனே சட்டமியற்றுபவனுகிருன். (3) பெரிய சபைகளுக்குப் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து அவர்கள் மூலம் சட்டமியற்றப்படுகிறது. இந்த எல்லா முறைகளிலும் உரிமை தோன்றும் மூலம் ஒரே வகைப்பட்டது. முதலாவது முறை அதிகாரம் குறைபாடுள்ளது. இரண்டாவது சிறிய ஜனநாயகங்களில் மட்டுமே கையாளுவது சாத்தியம். மூன்ருவதுதான் மனித ஆட்சி அமைப்பதில் மகத்தானது.

கொள்கைக்கு அடுத்தபடியாக அபிப்பிராயபேதத்திற்குரிய விஷயங்கள் இருக்கின்றன. இவ்விரண்டிற்கும் உள்ள மாறுபாட்டை அறிந்துகொள்ள வேண்டியது அவசியமாகிறது. மனித உரிமை சமமாக இருக்க வேண்டுமா என்பது அபிப்பிராய பேதத்திற்குரிய விஷயமல்ல. சம உரிமை பெறுவது எல்லோருடைய உரிமையுமாகும். ஆகையினுல் இது கொள்கையாகி விடுகிறது. உரிமையை மக்கள் தானமாகப் பெறுவதில்லை; பிறப்புரிமையாக அநுபவிக்கின்றனர். சமூகம் மக்களைப் பாதுகாக்குமே ஒழிய, அது அவர்களுக்கு உரிமைகளைத் தானமாக வழங்காது. அமெரிக்கா, பிரான்ஸ் போன்ற பரந்த சமுதாயங்களில் அரசாங்க சம்பந்தமான தனிப்பட்டோர் உரிமைகளைத்

தேர்தல் பிரதிநிதித்துவ மூலமே கையாளவேண்டும். இதிலிருந்து ஜனங்களே நேரிடையாக சட்டமியற்றும் சாதாரண ஜனநாயக முறை சாத்தியமில்லாத இடங்களில் கொள்கை அடிப்படையில் அமையக்கூடிய அரசாங்கம் பிரதிநிதித்துவ முறையிலேயே அமையவேண்டும்.

அமைப்பு முறை அல்லது அரசாங்கத்தின் பல்வேறு பகுதிகளை எவ்வாறு ஒழுங்கு செய்து அவற்றை அமைக்கவேண்டும் என்பன போன்ற விஷயங்கள் அவரவர்கள் **அபிப்பிராயத்தைப்** பொறுத்தது. எல்லாப் பகுதிகளும் **சம உரிமை** அடிப்படையில் முரணின்றி இயங்கவேண்டியது அவசியம்; இந்தக் கொள்கையினின்று கடுகளவும் பிறழாது செயல் புரிந்தால் பெருந்தவறுகள் நிகழாது. அபிப்பிராயபேதத்திற்குரிய விஷயங்களில் தவறு ஏற்பட்டாலும் அது நீடித்திருக்காது.

சமூக உடன்பாடு, சமூகம் ஒன்றுபட்டு இயங்குவதற்கான கொள்கை போன்ற அபிப்பிராயபேதத்திற்குரிய விஷயங்களில் பெரும்பான்மையினர் முடிவே நிலைத்துவிடுகிறது. சிறுபான்மையினர் அதற்கு இணங்கிவிடுகின்றனர். சம உரிமைக் கொள்கைக்கும் இதற்கும் எவ்வித முரண்பாடுமில்லை. ஏனெனில் முதலாவதாக, ஒவ்வொருவருக்கும் **தத்தம் அபிப்பிராயத்தைத் தெரிவிக்கும் உரிமை உண்டு.** ஆனால் தம் அபிப்பிராயம்தான் **மற்றெல்லோரையும் கட்டுப்படுத்தவேண்டும்** என்று கோர யாருக்கும் உரிமையில்லை. இரண்டாவதாக, ஒவ்வொரு பிரச்னை பற்றியும் தன் கருத்து சாதகமாயிருக்குமா, பாதகமா இருக்குமா என யாரும் முன்கூட்டியே கூற முடியாது. சில விஷயங்களில் ஒருவன் பெரும்பான்மைக் கட்சியில் இருக்கலாம். மற்றும் சில விஷயங்களில் சிறுபான்மைக் கட்சியிலுமிருக்கலாம். அவன் எவ்வாறு ஒரு சந்தர்ப்பத்தில் தன் கருத்துக்குப் பிறர் இணங்கவேண்டும் என எதிர்பார்க்கிறானோ அதுமாதிரி இவனும் சில விஷயங்களில் பிறர் கருத்துக்குப் பணியவே வேண்டும்.

புரட்சி நிகழ்ந்துகொண்டிருக்கையில் பிரான்ஸில் ஏற்பட்ட கலவரங்களுக்குக் காரணம் **சம உரிமைக் கொள்கையல்ல,** அந்தக் கொள்கையை மீறியதன் விளைவே. சம உரிமைக் கொள்கை பெரிதும் சிறுபான்மையினராலேயே மீறப்பட்டிருக்கிறது. இப்படி மீறிய சிறுபான்மையினரில் சொத்துள்ளவர்களும்

இருந்திருக்கின்றனர்; இல்லாதவர்களும் சேர்ந்திருக்கின்றனர். ஆகையால் நமது அநுபவத்திலிருந்து சொத்து நற்குணத்திற் கடையாளமுமல்ல, உரிமை பெறத்தக்க யோக்கியதாம்சமுமல்ல என்பது விளங்குகிறது.

சில சந்தர்ப்பங்களில் சிறுபான்மையினர் நடத்தை நியாய மாகவும், பெரும்பான்மையினர் போக்கு தவருகவுமிருக்கலாம். ஆனுல் இந்த உண்மையை அநுபவ மூலம் அறிய அறிய சிறு பான்மையினர் பெருகிப் பெரும்பான்மையினராகலாம். அபிப் பிராய சுதந்திரம், சம உரிமை இரண்டின் மூலம் அமைதியாக சீர்திருத்தம் நிகழ்ந்துவிடும். ஆகையினுல் கலவரம் செய்ய எவ்வித நியாயமும் கிடையாது. சம உரிமையும் அபிப்பிராய சுதந்திரமும் இருந்துவிட்டால், கலவரம் செய்ய அவசியமே இருக்காது.

புரட்சிக்கும் அதன் விளைவாக ஏற்படும் அரசியலமைப் புக்கும் சம உரிமையே அஸ்திவாரம் என வைத்துக்கொண்டால் அரசாங்கத்தின் பல்வேறு பகுதிகளை எவ்வாறு அமைப்பது என் பது ஏற்கனவே குறிப்பிட்டபடி அபிப்பிராயபேதத்திற்குரியது.

அமைப்பு பற்றிப் பல்வேறு முறைகள் நம் ஆலோசனைக் குகந்ததாயிருக்கலாம். இவைகளில் எது சிறந்தது என்பதுபற்றி முடிவு செய்ய நமக்குப் போதிய அநுபவமில்லாவிட்டாலும், இம்முறைகளில் எது மிகவும் மோசமானது என்பதைத் தெரிந்து கொண்டுவிட்டோம். ஒரு தனிப்பட்டவன் யோசியாமல் அவ சரப்பட்டு முடிவு செய்வதே மோசமானது; சட்டசபை பூராவும் ஒரே ஸ்தாபனத்தில் அமைந்துவிட்டால் அதுவும் தனிப்பட்ட வன் அவசரப்பட்டு முடிவு செய்வதற்கொப்பாகும். விவாதித்து முடிவு செய்யவேண்டிய விஷயங்களில் சட்டமியற்றுபவர்களில் ஒரு பகுதியைத் தனித்து வைத்துக்கொள்ளவேண்டியது அவசிய மாகும்; சீட்டுக் குலுக்கிப் போட்டு பிரதிநிதிகளை இரு கூறு களாகப் பிரித்து வைத்துக்கொள்ளவேண்டும். ஒரு பகுதி மற் ெருன்றின் முடிவை மாற்றவோ, திருத்தவோ வகை செய்ய வேண்டும். எல்லோரும் ஒரேயடியாகக் கூடி உடனடியாக முடிவு செய்வதைவிட இது சிறந்தது.

பிரதிநிதித்துவ அரசாங்கம் ஒரு குறிப்பிட்ட முறைப்படி தான் இருக்கவேண்டும் என்பது அவசியமில்லை. எந்த வகையில் அமைந்தாலும் அவை யாவும் ஒரே கொள்கைப்படியே இயங்கு கின்றன. மக்களுடைய சம உரிமை எனும் ஊற்றிலிருந்தே எல்லாவகைப் பிரதிநிதித்துவ அரசாங்கங்களும் இயங்குகின்றன. பகுதிகளைத் தற்காலத்தோர் அபிப்பிராயம் அல்லது எதிர்கால அநுபவத்திற்கேற்ற முறையில் அமைத்துக்கொள்ளலாம். ஆனுல் இங்கிலாந்தில் பிரபுக்கள் சபை இருக்கிறதே என்ருல்;

அது பிரிட்டிஷ் பிரபு செஸ்டர்பீல்டு விவரித்துள்ளபடி ''தீராத நோயாளிகளின் ஆஸ்பத்திரி'' ஊழலினுல் ஏற்பட்ட அநாவசியக் கழிவுப் பொருள். மக்கள் உரிமை அடிப்படையில் வளரும் சட்டமியற்றும் ஸ்தாபனத்தின் எப்பகுதிக்கும் இந்தப் பிரபுக்கள் சபைக்கும் எவ்வித ஒருமைப்பாடும் கிடையாது. மனிதன் உடலுக்கும் அல்லது தேகத்திலிருந்து அறுத்தெறிய வேண்டிய சதைக்கும் உள்ள தொடர்பே இவ்விரண்டிற்குமுண்டு.

அரசாங்கத்தில் ''நிர்வாகம்'' எனும் பகுதிபற்றி ஆலோசிக்கையில் இந்த வார்த்தையின் பொருளை நாம் முதலில் உணர்ந்துகொள்ளவேண்டும்.

அதிகாரத்தை இரு கூறுகவே பிரிக்க முடியும்: (1) சட்டத்தை இயற்றும் பகுதி; (2) நிர்வகித்து அல்லது அமுல் நடத்தும் பகுதி. முதலாவது, மனித மூளையின் அறிவுத்திறன் என்ன செய்ய வேண்டும் என்பதை விவாதித்து திட்டம் செய்கிறது. 2-வது, மனித அங்கங்கள் தாமாகவே இயந்திரம்போல் இயங்குவது மாதிரி முதலது செய்த முடிவை நிறைவேற்றிவைக்கிறது.

முதலது திட்டம் செய்ததை இரண்டாவது நிறைவேற்றி வைக்காவிட்டால், அது சக்தியற்றதாகிவிடுகிறது. முதலது முடிவு செய்யாமலே இரண்டாவது செயல்புரிந்தால், அது பைத்தியம் பிடித்ததற்கொப்பாகும். ஆரோக்கியமான உடலில், அறிவு திட்டம் செய்கிறபடி உடல் இயங்குவதுபோல் நிர்வாக இலாகா சட்டசபைக்குட்பட்டதே யாகும். ஏனெனில், ஒரே சமயத்தில் இருவகை ஆதிபத்தியம் இருக்க முடியாது—அறிவின் ஆதிபத்தியம், செயல் ஆதிபத்தியம் என்று.

ஒரு காரியத்தைச் செய்வதா வேண்டாமா என விவாதிக்க நிர்வாகத்திற்கு அதிகாரம் அளிக்கப்படவில்லை. அதற்கு யுக்தப்படி நடக்கும் அதிகாரமும் கிடையாது. சட்டம் முடிவு செய்தது தவிர வேறு முறையில் அது செயல்புரிய முடியாது. சட்டப்படியே செயல்புரிய அது கடமைப்பட்டது. ஆகையினுல் நிர்வாகம் என்றுல் நீதி இலாகா உள்பட சட்டத்தை நிறைவேற்றும் எல்லா இலாகாக்களும் அதில் அடங்கியவை.

சட்டங்கள் நிறைவேற்றப்படுவதை மேற்பார்வை பார்க்கவும், அவைகள் ஒழுங்காக நடக்கின்றனவா என அறியவும் ஒருவித அதிகாரம் அவசியம் என மனிதவர்க்கம் நினைக்கிறது. இந்த மேற்பார்வை அதிகாரத்தையும், உத்தியோக ரீதியில் சட்டங்களை நிர்வகிப்பதையும் ஒன்றெனக் கருதிக் குழப்புவதனுல்தான் 'நிர்வாக அதிகாரத்தை'ப் புரிந்துகொள்ளுவதில் தடுமாற்றமடைகிறோம். அமெரிக்காவின் அரசாங்கங்களின் பல்வேறு பகுதிகளில் 'நிர்வாகம்' என்பது சட்ட அமுலை மேற்பார்வை பார்க்கும் அதிகாரிகள்தாம். அவர்களுக்கும் சட்டமியற்றும்

பகுதிக்கும் சட்டங்கள் தவிர வேறு எவ்விதத் தொடர்பும் இல்லை. அவர்களைச் சட்டம் தவிர எவ்வகையிலும் கட்டுப்படுத்த முடியாது.

இந்த மேற்பார்வையாளர்களை எப்படி நியமிப்பது, அவர்கள் அதிகார அமைப்பு, யாவும் அபிப்பிராயபேதத்திற்குட்பட்டவை. சிலர் ஒரு முறையை விரும்பலாம்; மற்றும் சிலர் வேருெரு முறையை ஏற்கலாம். அபிப்பிராயமே பிரதானம், கொள்கையல்ல என்கிற விஷயங்களில் பெரும்பான்மை முடிவே இறுதியானது.

அறிவையும் அநுபவத்தையும் பயன்படுத்தினுல் சில விஷயங்களில் சுலபமாக முடிவு காணலாம். அப்படிப்பட்டவைகளில் ஒன்று தனிப்பட்டவருக்கு அளவுக்கு மீறிய அதிகாரம் அளிக்கலாகாது என்பது. ஏனெனில், தனிப்பட்டவனுக்குத் தன் அதிகாரத்தைத் தவருன வகையில் ஏன் பயன்படுத்தலாகாது என சபலம் தட்டலாம். மேலும் இதனுல் பதவிக்குப் போட்டியும் அதன் விளைவாகக் கொந்தளிப்பும் பெருகலாம். பலபேர் சேர்ந்த குழுவினிடம் நீண்ட காலத்திற்கு அதிகாரத்தை ஒப்படைக்கலாகாது என்பது இரண்டாவதாக நாம் தெரிந்து கொள்ளவேண்டிய விஷயம். அடிக்கடி அதிகார மாறுதலைவிட நீடித்து அதிகாரம் வகிப்பதனுல்தான் அதிகமான ஆபத்து.

சுதந்திரத்தைப் பாதுகாப்பது சம்பந்தமாகச் சில கருத்துக்களைக் கூறிவிட்டு என் கட்டுரையை முடித்துக்கொள்ளுகிறேன். சுதந்திரத்தை நிலைநாட்டுவது மட்டுமல்ல, அதைப் பேணி வளர்ப்பதும் முக்கியமாகும்.

முதலில் யதேச்சாதிகாரத்தை ஒழிப்பதற்காகக் கையாளும் சாதனத்திற்கும், சுதந்திரம் கிடைத்த பிறகு அதைப் பாதுகாப்பதற்காகக் கைக்கொள்ளும் சாதனத்திற்கும் உள்ள வித்தியாசத்தை நாம் புரிந்துகொள்ளவேண்டும்.

ஒழிப்பு வேலையில் பயன்பட்ட சாதனங்கள் அவசியத்தினுல் கைக்கொள்ளப்பட்டவை. அவைகள் பொதுப்படையாகக் கலவரம் செய்தல். எந்த நாட்டிலும் யதேச்சாதிகாரம் நீடித்தால் கலவரம் செய்யாமல் அதைக் கவிழ்க்க முடியாது. மேலும் புரட்சி ஆரம்பத்தில் புரட்சி நடத்துபவர்கள் சந்தர்ப்பங்களுக்கேற்றபடி செயல் புரிவார்களேயொழிய கொள்கைப்படியல்ல. இதே முறை புரட்சி முடிந்த பின்பும் கையாளப்பட்டால் சுதந்திரத்தை நிலைநாட்ட முடியாது. அப்படியே நிலைநாட்டினுலும் அதைச் சீக்கிரம் இழந்துவிடுவோம். புரட்சியில் ஈடுபட்ட ஒவ்வொரு மனிதனும் தனது அபிப்பிராயத்தை ஒரே காலத்தில் மாற்றிக்கொள்ளுவான் என்றும் எதிர்பார்க்க முடியாது.

எந்த உண்மையையும் கொள்கையையும் எல்லோரும் ஒரே காலத்தில் ஒப்புக்கொண்டு நம்பத்தொடங்கினர் என்பதற்கு உதாரணமே கிடையாது. காலமும் அறிவும் கைகூடி ஒரு கொள்கையை நிலைநாட்டவேண்டும். ஒரு கொள்கையை நம்பியவர்கள் அதேகாலத்தில் பிறரும் அதை நம்பவில்லை என்பதற்காக அவர்களைத் துன்புறுத்த உரிமை கிடையாது. புரட்சிகளின் அற அடிப்படை மனிதனுக்கு உணர்வு ஏற்படுத்துவதே ஒழிய அழிப்பதல்ல.

அரசியல் அமைப்பு ஏற்பட்டிருக்கவேண்டியபடி இரண்டு ஆண்டுகளுக்கு முன் அமைந்திருக்குமானால் பிரான்ஸை நாசமாக்கிப் புரட்சியின் சிறப்பையே பாழ்படுத்திவிட்ட பலாத்கார நிகழ்ச்சிகளைத் தவிர்த்திருக்லாம். நாட்டு மக்கள் ஒன்றுபட்டிருப்பார்கள்; ஒவ்வொரு பிரஜையும் தான் எவ்வாறு நடந்துகொண்டால் நல்லது என்பதை உணர்ந்திருப்பான். இதற்கு மாறாக கொள்கையோ, அதிகாரமோ இல்லாத ஒரு புரட்சி ஆட்சி அமைக்கப்பட்டது. நற்பண்பும், குற்றம் செய்யும் மனப்பான்மையும் அகஸ்மாத்தாகக் காணப்படும் இயல்புகளாகப் போய்விட்டன. இன்று தேசாபிமானமாகக் கருதப்பட்டது நாளைக்கு தேசத்துரோகமாக மதிக்கப்பட்டது.

இவைகள் யாவும் அரசியலமைப்பு இல்லாததன் விளைவுகளே. அரசியலமைப்பின் இயல்பும் நோக்கமும் கட்சியின் அதிகாரத்திற்கும் ஆசாபாசங்களுக்கும் வரம்பு கட்டுவதற்கான கொள்கை வகுத்து, எந்தக் கட்சியும் **இந்த அளவுதான் செல்லலாம், இதற்கு மீறிச் செல்லலாகாது** எனத் தடை விதிப்பதுதான். அரசியலமைப்பு இல்லாத சந்தர்ப்பங்களில் மக்கள் கட்சியையே எதிர்நோக்கி நிற்கின்றனர். கொள்கை, கட்சியைக் கட்டுப்படுத்துவதற்குப் பதிலாகக் கட்சி கொள்கையை ஆட்டி வைக்கிறது.

பிறரைத் தண்டிக்கும் ஆவல் எப்பொழுதுமே சுதந்திரத்திற்கு ஆபத்தை விளைவிக்கும். இதன் மூலம் மக்கள் சிறந்த சட்டங்களைக்கூடத் தப்பர்த்தம் செய்து, துஷ்பிரயோசனம் செய்து, அவைகளைத் திரித்துக் கூற முனைகிறார்கள். தனது சுதந்திரம் பத்திரமாக இருக்கவேண்டும் என விரும்புபவன் தனது பகைவனைக்கூடத் துன்புறுத்தாமல் பாதுகாப்பான். ஏனெனில், அவன் இந்தக் கடமையில் தவறினால் பிறர் பின்பு இதே தவறை அவனுக்குச் செய்ய அவன் வழிகாட்டியவனாகிறான்.

பாரிஸ்
ஜூலை, 1795

தாமஸ் பெய்ன்

எமது

இதர வெளியீடுகள்

- ★ இரும்புப் பெட்டி
- ★ என் சரிதை
- ★ சுதந்திரமும் பண்பாடும்
- ★ மணமகள் வருகிருள்
- ★ கடல் முத்து
- ★ பிரபஞ்சமும் டாக்டர் ஐன்ஸ்டினும்
- ★ வீதியில் ஒரு விடுதி
- ★ சந்நியாசியும் சர்வாதிகாரியும்
- ★ இந்தியா என் வீடே
- ★ அழிவற்ற காதல்
- ★ பிலிப்பைன்ஸ் தேசத்து நிலச் சீர்திருத்தங்கள்
- ★ மகத்தான மாறுதல்
- ★ சுதந்திரப் பாலம்
- ★ சமாதானத்தின் புதிய பரிணாமங்கள்
- ★ போரே, நீ போ

வெளியிடுவோர்கள் :

பெர்ல் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிட்., பம்பாய்-1.

பூரண விநியோகஸ்தர்கள் :

இந்தியா புக் ஹௌஸ்

புருஷோத்தம் பில்டிங், 193, மவுண்ட் ரோட், மதராஸ்-2.